# உலக சரித்திரம்

## 1500—1948

**G. C. E. வகுப்புக்குரியது**

ஆக்கியோன்:

**மு. இளையதம்பி, B. A., (Lond.)**

பயிற்றப்பட்ட ஆங்கில முதலாம் தராதரப்பத்திரமுடையவர்

35732

அச்சுப்பதிப்பு:

ஸ்ரீ லங்கா அச்சகம்

234, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# உலக சரித்திரம்

## (1500—1948)

### முதலாம் அத்தியாயம்

### தற்கால ஆரம்பமும் நவீன மாற்றங்களும்

கி. பி. நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் அநாகரிக சாதியினரான லொம்பார்ட்ஸ், சாக்ஸன்ஸ், பூற்ஸ், வாண்டல்ஸ், ஹன்ஸ் என்பவர்களின் படையெடுப்பினால் பழைய ரோம இராச்சியம் நிலைகுலைய மேற்கு ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இரு இராச்சியங்கள் தோன்றின. மேற்கு ஐரோப்பாவுக்கு மிலனும், கிழக்கு ஐரோப்பாவுக்குக் கொன்ஸ்தாந்திநோப்பிளும் மத்திய ஸ்தானங்களாக அமைந்தன. இப்பகுதிகளுக்கு முறையே போப்பாண்டவரும், பெரியமதக்குருவும் தலைமைதாங்கினர். லத்தீன்மொழியும் கிரேக்க பாஷையுமே முறையே அவ்விராச்சியங்களில் வழங்கிவந்தன. அந்தப் பரிசுத்த ரோம இராச்சியங்களிலிருந்த மக்கள் ஆலயங்கள் போதித்த கொள்கைகளை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய மனதில் விசுவாசமே குடிகொண்டிருந்தது. இவ்வுலகவாழ்க்கையின் பின்னால் ஏற்படும் உலகத்தில் நம்பிக்கையுடையவராயும் இவ்வுலகத்தில் அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதே தங்களுடைய முக்கிய கடமையென்றெண்ணினர். அக்கடமைகளைச் செய்து முடிக்கிறதற்காகக் கிறீஸ்து தேவாலயத்தை ஸ்தாபித்திருப்பதாகவும் அதன்மூலம் மக்கள் ஞான அறிவைப் பெறலாமென்றும், பாவத்தினின்று விலகிக்கொள்ளலாமெனவும், மோட்ஷம், நரகம் என்பனவற்றின் வழியைக் காட்டுமெனவும் மக்கள் நம்பிக்கைகொண்டிருந்தனர். தேவா

RangaRakes

Tamilnavarasam.com

லயமோ அதன் தெய்வீகக் கடமைகளைச் செய்து முடிப்பதாகிய முறையில் ஸ்தாபிக்கப்பட்டு, பூமியில் கிறீஸ்துவின் பிரதிநிதியெனக் கருதப்பட்ட போப்பாண்டவரே அதற்குத் தலைமைதாங்கினர். அவருக்குக் கீழுள்ள ஆர்ச்பிசப், பிசப், குரு என்பவர்களும் மக்களின் வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும் தங்கள் கொள்கைகளைப்பரப்பினர். மத்திய காலமனிதனுக்கு இவைகளெல்லாவற்றிலும் சந்தேகமற்ற நம்பிக்கையுண்டானது. தேவாலயத்துக்கு அப்புறமுள்ளவர்களுக்கு இரட்சிப்பில்லையெனவும் அவர்கள் நரகத்துக்கே செல்லவேண்டி நேரிடுமென்ற நம்பிக்கை அவர்களிடமிருந்தமையால் ஆலயங்களின் செல்வாக்கு அதிகரித்தன. ஆனால் மத்திய காலத்திலுள்ள தேவாலயம் மக்களை ஏமாற்றவோ அல்லது அறிவிலிகளாய் வைத்திருக்கவோ விரும்பாது மக்களின் இரட்சிப்புக்காகவே உழைக்கும் நோக்கமுடையதாயிருந்தது. அது போதித்தது எதுவோ அவையெல்லாம் உண்மையென மக்கள் கருதலாயினர். மார்க்க விஷயங்களோ, சாஸ்திரமோ, சரித்திரமோ இவையெல்லாம் தேவாலய மேலதிகாரியின் தீர்மானத்திலே தங்கியிருந்தமையால், மக்களிடம் சுதந்திரமான கொள்கைகள் காணப்படவில்லை. இவ்வுலக வாழ்விற் பார்க்க மறுவுலகவாழ்க்கையே பெரிதென நம்பிய மக்கள் சமய அறிவிலேயே விசுவாசமும் சிரத்தையுங் காட்டினர்.

ஆனால் குருமார் அநாகரிகமாந்தரிடம் கிறீஸ்துமதத்தைப் போதித்து நம்பிக்கையுண்டாக்கினதுமல்லாது, கல்வியையும் பாதுகாத்து, ஏழைகளையும், நோயாளிகளையும் ஆதரித்தனர். சித்திரம், ஓவியம் முதலிய வேலைப்பாடுகளில், ஞானிகளின் உருவம், தேவாலயங்கள், அரசர்கள் இன்னும் சமயத்தோடு சம்பந்தப்பட்டவைகள் வரைந்தும் செதுக்கியுமிருப்பதைக் காணலாம். நாடகங்கள் கூட மார்க்கத்தோடு சேர்ந்தவைகளாகக் காணப்பட்டன. அவைகளின் மூலம் மார்க்கமும் அறிவும்



பாமர சனங்களுக்கு ஊட்டப்பட்டன. ரோம இராச்சியத்துக்குப் பலபாகங்களிலுமிருந்து வந்த அநாகரிக சாதியினரைத் திருத்தும் விஷயத்திலே தேவாலயம் இன்றியமையாத கடமைகளைச் செய்ததெனலாம். ஐரோப்பாவில் பல்வேறு சாதியினரும், வகுப்பினரும் இருந்தபொழுதிலும் ஒரேசமயமும் ஒரே ஆலயமும் மக்களை ஒன்றுசேர்த்தன. காலஞ்செல்லத் தேசீய உணர்ச்சி மெல்லமெல்லவாகத் தலைகாட்டியது. அதனால் மேற்கு ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சியினாலுந்தப்பட்ட சாதியினர் இங்கிலாந்திலும், பிரான்சிலும், ஸ்பானியாவிலுங் காணப்பட்டனர்.

மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரநிலை நிலமானிய முறையிலே தங்கியிருந்தது. ஆஸ்தியுள்ள பிரபுக்களுக்குப்பயிரிடும் மக்கள் உதவியாயிருந்தமையால் அவர்களுக்கு அப்பிரபுக்கள் பாதுகாப்பளித்தனர். கிராமங்களே அதிகமாகக் காணப்படினும் இடையிடையேயுள்ள பட்டணங்களில் வர்த்தகர்களும் கம்மாளர் போன்ற தொழிலாளரும் வசித்தனர். அடிமைகள், விவசாயிகளைவிட, அரசர், பிரபுக்கள், குருமார் என்ற வகுப்பினர் இருந்தனர். நிலமானியமுறை விளங்கிய அக்காலத்தில் மக்கள் தங்கள் தங்கள் நாட்டிலிருப்பதல்லாது மறுநாடுகளுக்குச் செல்வதில்லை. கல்வியுஞ் சமய அறிவளவிலேயிருந்தேயன்றி இயற்கையைப்பற்றிய அல்லது மனுஷ வாழ்க்கையைப்பற்றிய ஆராய்ச்சி நடைபெறவில்லை. நாளடைவில் அந்நிலை மாற்றமடையத் தொடங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பானியா முதலிய புதிய இராச்சியங்கள் தோன்றின. சமய அபிமானங்கொண்ட மேற்கு ஐரோப்பிய மக்கள் பரிசுத்த நகரமாகிய எருசலேமை ஸ்லாமியரின் கையிலிருந்து விடுவிக்கச் சிலுவை யுத்தங்களை நடத்தினர். பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பாக ஸ்லாமிய இராச்சியம் நாகரிகத்திலும் பண்பாட்டிலும், கல்வித்துறையிலும் உன்னத ஸ்தானத்தையடைந்தமையினால் ஐரோப்பாவிலும் பார்க்கச் சிறந்தநிலையிலிருந்ததெனக் கூற

RangaRakes Tamilnavarasam.com

லாம். நாகரிகத்தில் முன்னேறியிருந்த மக்களின் தொடர்பால் ஐரோப்பியர் அதிகபலனை யடைந்தனரெனலாம். வர்த்தகப் பெருக்கமும் கல்விகற்கும் வேட்கையும் அவர்களிடையே காணப்பட்டன. வர்த்தகவிருத்தியேற்பட்டதன் காரணமாக மக்களிடையே பொருள் சம்பாதிக்கும் நோக்கமுண்டானது. இவ்வுலகவாழ்க்கையிலேயே கூடிய விருப்பங்கொண்டனர். பணநிலையும் திருத்தமடைய நிலமானிய முறையுங்குன்றிப்போக மக்களிடையே முன்னதிலும்பார்க்கச் சுதந்திரக் கொள்கைகளுண்டாயின. பிரபுக்களிலே பாமரர் தங்கியிருக்கத் தேவையில்லாமற்போனது. சிறிது சிறிதாக வாழ்க்கையிலும் கொள்கைகளிலு மேற்பட்ட மாற்றங்கள் நிலமானிய காலத்தை ஒழித்துத் தற்கால ஆரம்பத்துக்கு அறிகுறியாயின.

1 கிழக்கு ஐரோப்பாவின் மத்திய ஸ்தானமாகிய கொன்ஸ்தாந்தையின் கோப்பிளை 1453 ல் துருக்கியர் கைப்பற்றினர். அங்குள்ள கிரேக்கபண்டிதர்கள் அங்கிருந்து பெயர்ந்து மேற்குநோக்கிச் செல்வாராயினர். அப்படிப்பெயரும் பொழுது பலகிரேக்க லத்தீன் நூற்சுவடிகளையுங் கொண்டு சென்றனர். அவர்கள் மேற்கேயுள்ள நாடுகளிற் பிரதானமாக இத்தாலி தேசத்து நகரங்களிற் தங்கள் கல்வியைப் பரப்பினர். அவ்விடங்களிலுள்ள பண்டிதர்கள் கிரேக்கபாஷையையும் நூல்களையும் அவாவுடன் பயிலத்தொடங்கினர். பண்டைக் கால அறிஞருடைய நூல்கள் மத்திய காலத்தினருடைய மறுவுலக நம்பிக்கையைப் பற்றிக்கூறாது, இவ்வுலக வாழ்க்கையில் விருப்பத்தையும், உண்மையை ஆராயும் அவாவையும், புதிய உற்சாகத்தையும் உண்டாக்கி விட்டன. அந்நூல்கள் மக்களுக்கு இருளிலிருந்து வெளிச்சத்துக்குச் செல்லும் மார்க்கமாகக் காணப்பட்டது. புதிதாகக் கொண்டுவரப்பட்ட அறிவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, எங்கும் மாணாக்கர்கள் கிரேக்க பண்டிதர்களைச் சூழ்ந்துகொண்டனர். பழைய ஏட்டுச்



சுவடி ஒவ்வொன்றும் ஒருவிசேட சாதனமாக வரவேற்கப்பட்டது. இதுவே கல்வியின் மறுமலர்ச்சியாகும். சீக்கிரத்தில் அது ஐரோப்பா முழுவதும் பரவியது.

1 மேற்கு ஐரோப்பியர் **அரிஸ்ரோட்டில் பிளேட்டோ** முதலிய கிரேக்க அறிஞர்களின் நூல்களை லத்தீன் பாஷையில் ஏற்கனவே படித்திருந்தும் இப்போதான் கிரேக்கபாஷையில் படிக்கத்தக்கதாயிருந்தது. இதைவிடக் கிரேக்க ஓவியம் சிற்பம் முதலியவற்றையும் விரும்பிப்பின்பற்றினர். முன்னொருபோதும் அறிந்திராத ஓவியச்சித்திரங்கள் காணப்பட்டன. மறுமலர்ச்சிகாலத்திற் தோன்றிய கலைஞர்கள் மனுஷசரீரத்தைச் சித்திரித்துக் காட்டும் பொழுது தேகத்தின் இயற்கை அமைப்பு, மயிர், வஸ்திரத்தின் மடிப்புகள் முதலியனவற்றைத் துலக்கமாக விளக்கிக்காட்டினர். அரசரும், போப்பாண்டவரும் தங்களுடைய அரண்மனைகளையும், ஆலயங்களையும், அறைகளையும் சித்திரங்களால் அலங்கரிப்பதற்காகக் கலைஞர்களை வரவழைத்தார்கள். உலகத்திற் கீர்த்தி பெற்ற **மைக்கேல் ஆஞ்சலோ லியனடோ டாவின்ஸி**, றப்பியேல் முதலியோர்கள் இத்தாலியிலும், **தூரர்**, **ஹொல்பெயின்** ஜேர்மனியிலும், **றெம்பிறென்ட் வான்டைக்** ஒல்லாந்திலும், **வெலாஸ்குவே** ஸ்பெயினிலும் அக்காலத்திலேயேயிருந்தனர். ரோமாபுரிக்கும், ஐரோப்பாவிலுள்ள விசேஷநகரங்களுக்கும் செல்லுமொருவர் இவர்களாலாக்கப்பட்ட ஓவிய சித்திரப்படங்களைக் காண முடியும். 2 இக்கலைகளின் வளர்ச்சியோடு இலக்கியமும் புத்துயிர் பெற்றது. **ஒல்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து** தேசத்தவர்கள் கிரேக்க பாஷையை விரும்பிக்கற்றதோடு தங்கள் தாய்ப்பாஷைகளிலும் பலநூல்களை எழுதத் தொடங்கினர். இத்தாலி நாட்டின் புலவர்களும், பிரான்சிலுள்ள **மொன்றெயின்**, **றபேலெயிஸ்**, ஸ்பெயினிலுள்ள **சேவாந்தீஸ்**, உலகெலாம் கீர்த்திபெற்ற ஆங்கிலேய நாடக ஆசிரியரான **ஷேக்ஸ்பியர்** என்போர் கல்வியின் மறுமலர்ச்சியின் பயனுகத்தங்கள் நூல்களை

RangaRakes Tamilnavarasam.com

எழுதி உலகத்துக்கு ஈந்தனர். சங்கீதக்கலையும் வளர்ச்சியுற்றது. தற்கால உலகத்திலுள்ள விஞ்ஞானசாஸ்திரம், புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் ஊக்கம் மறுமலர்ச்சியின் பயனென்றே சொல்லலாம். கிரேக்கருடைய பல விஞ்ஞான சாஸ்திரங்களையும் கலைகளையும் படித்ததினால் புதிய ஆராய்ச்சிகளேற்பட்டன. **கோப்பேணிக்கஸ், கலிலியோ** முதலிய வானசாஸ்திரிகள் பூமி சூரியனைச் சுற்றிவருகின்றதென்ற உண்மையைக் கண்டுபிடித்தனர்.

கல்விகற்கும் கிளர்ச்சிக்கு அச்சியந்திரமும் பெருந்துணை புரிந்தது. மத்தியகாலத்தில் புத்தகங்களெல்லாம் கையினாலெழுதப்பட்டமையால் அவைகள் அருமையாயும் விலைகூடியனவாயுமிருந்தன. 1460ன் பின் புத்தகங்கள் மலிவாகவும் ஏராளமாகவும் பெறக்கூடியதாகவிருந்தன. ஆரம்பத்தில் மரக்கட்டைகளிற் செதுக்கப்பட்ட எழுத்துக்களைக்கொண்டு புத்தகங்கள் அச்சிடப்பட்டன. ஆனால், தனித்தனி எழுத்துக்களை முதல் உபயோகித்தவர் ஜேர்மனியிலுள்ள **கூடன்பேர்க்** என்பவராவர். பின்பு அச்சியந்திரசாலைகள் **இத்தாலி, பிரான்சு, ஒல்லாந்து, இங்கிலாந்து** முதலிய தேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. பல்வகைப்பட்ட புத்தகங்கள் வெளிவந்தன. கிரேக்க நூலாசிரியர்களின் புத்தகங்கள் மலிவாகக் கிடைத்தன. புதிய எண்ணங்களும் கொள்கைகளும் ஐரோப்பா முழுவதும் பரவி மக்களிடையே காணப்பட்ட மனப்பான்மை மாறுதலடைந்தமையினால் வாழ்க்கை முறையிலும் பலமாற்றங்களேற்பட்டன.

இம்மறுமலர்ச்சியின் காரணமாக கல்வியில் மாத்திரம் மாற்றங்களேற்பட்டனவென்று கூறுதல் அதன் ஒரு பகுதியிற் கவனஞ்செலுத்தலாகும். புதிய இராச்சியங்களின் எழுச்சியென்று கூறலும் இன்னொரு பகுதியாகும். சித்திரம் ஓவியம் புத்துயிர்பெற்றனவெனலும் இன்னொருபகுதியாகும். புதுக்கருவிகளைக் கண்டுபிடித்ததும் பூமியின் பலபாகங்களை அறிந்ததும் மற்றொரு



பகுதியெனக் கூறலாம். இவைகளெல்லாம் ஒரேகாலத்தில் ஏற்பட்டனவாயினும் ஒருபொதுவான ஊக்கத்தினாலேயே ஏற்பட்டனவென்பதை யூகிக்க இடமுண்டு. புராதன கிரேக்கர் எழுதிவைத்த நூல்களைப் படித்துப் பூமிசாஸ்திரத்திற் தேர்ந்த சிலஅறிஞர்கள் பூமியின் சுற்றளவைக் கணிக்க முயன்றனர். **கலிலியோ, கொப்பனீக்கஸ், நியூட்டன்** என்பவர்களுடைய புதிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் **கொலம்பஸ், பதலேமியடஸ், வாஸ்கோடகாமா, கபோற்** என்பவர்கள் புதியநாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாயிருந்தன. மறுமலர்ச்சியென்பது பூமியில் ஒரு புதிய சுவர்க்கம் திறக்கப்பட்டதெனலாம். அறிவாளிகளுக்கு கடவுளுடைய இராச்சியம் பூமியிற்றோன்றினதென்றும், பாமரர்களுக்கு வெளியதிகாரிகளின் கட்டுப்பாட்டினின்று மனுஷ அறிவும் கொள்கையும் விடுதலையடைந்து இவ்வுலகவாழ்வில் நாட்டத்தையுண்டுபண்ணினதென்றும் கூறுதல் முறையாகும்.

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையும் பூமியைப் பற்றியவிளக்கம் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்காவின் பூமத்தியரேகை வரையுமுள்ள பகுதியே, மனுஷருக்குத் தெரிந்ததாகவிருந்தது. அந்நூற்றாண்டு முடிவடையுங் காலமளவில் ஆபிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனைவரையும் அறிந்தனர். துருக்கியர் பால்கன்குடாநாட்டைக் கைப்பற்றி 1453ல் கொன்ஸ்தாந்தைன் நோப்பிளையுங் கைப்பற்றினதோடு நில்லாது ஒரு நூற்றாண்டுக்குள்ளே **லெவாந்து, மெசப்பத்தோமியா, சீரியா, பலஸ்தீனு, எகிப்து, அரேபியா** முதலிய நாடுகளையும் தங்களாட்சிக்குட்படுத்தியதன் காரணமாக ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் தரைமார்க்கமாக நடைபெற்றவர்த்தகம் தடைப்பட்டது. அக்காலத்தில் மூன்று பாதைகளிலிருந்தன. இந்தியாவிலும் ஆசியகீழ்த்திசை நாடுகளிலுமிருந்து பார்சியாக்குடாவுக்கூடாக பினீஷியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட வாசனைச்சரக்குகள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டன. 1516ல் சீரியாவைத் துருக்கி

RangaRakes Tamilnavarasam.com

யர் கைப்பற்றினதும் அப்பாதை தடைபட்டது. மத்திய ஆசியாவிலிருந்து கஸ்பியன் கடல், கருங்கடல்மூலம் கொன்ஸ்தாந்தையின் நோப்பிளுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பாதை 1453ன் பின் தடைபட்டது. கீழ்நாடுகளிலுள்ள பொருட்கள் கடல்மார்க்கமாக எகிப்துக்கு அனுப்பப்பட்டு அலெக்சாந்திரியாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட மார்க்கம் மூன்றாவதாகும். இவ்வழிகளால் ஐரோப்பாவையடைந்த பொருட்கள் வெனீஸ் ஜெனோவா முதலிய இடங்களிற் சேர்க்கப்பட்டமையால் அந்நகரங்கள் வர்த்தகக் களங்களாயமைந்தன. துருக்கியரின் ஆதிக்கத்தால் அவ் வர்த்தகம் குன்றிப்போக ஐரோப்பியநாடுகள் இடையூறில்லாத புதுமார்க்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவையேற்பட்டது.

ஸ்பானியரையும், போர்த்துக்கீசரையும், வர்த்தகமும், தனம் சம்பாதிக்கும் நோக்கமும் மாத்திரமே, கடற்பிரயாணஞ்செய்யத் தூண்டினவென நினைக்கிறதற்கிடமில்லை. போத்துக்கீச இளவரசனான கடலோடி ஹென்றியின் (1394—1460) உற்சாகத்தினால் வானசாஸ்திரம் கடற்பிரயாணம் என்பவைகளின் ஆராய்ச்சிகள் வெகுகாலமாக நடைபெற்றுவந்தன. இவர்களுக்கு ஓரளவுக்கு அறிவை ஈட்டவும் வர்த்தகத்தை விருத்திசெய்யவும் எண்ணமிருந்தபொழுதிலும் தங்களுடைய மதத்தைப் பரப்புவதே அவர்களின் பிரதானநோக்கமாயிருந்தது. கிறீஸ்தவர்களையும் வாசனைத்திரவியங்களையுந் தேடியேவந்ததாக வஸ்கோடிகாமாவோடு சென்ற கடலோடி ஒருவன் கூறினான். ஸ்பானியருடைய நோக்கமும் அதேயாம். பூமிதட்டைவடிவமுள்ளதென்ற புராதனமக்களின் நம்பிக்கை நாளடைவில் குறைந்துபோக, பூமிஉருண்டைவடிவமுள்ளதென உறுதியடைந்து ஐரோப்பிய கடலோடிகள் நீண்டகடற்பிரயாணங்கள் செய்யத்தொடங்கினர். கடலோடி ஹென்றி என்ற காரணம் பெயரைப்பெற்ற போத்துக்கீச இளவர



சனின் ஊக்கத்தினால் ஆபிரிக்காவின் மேற்குக்கரை முழுவதையும் போத்துக்கீச கடல்வீரர் பரிசோதித்து முடித்தனர்.

துருவநட்சத்திரங்களின் தூரத்தைக் கணிக்கக்கூடிய "**அஸ்ரேலேப்**" என்ற கருவியும், "**கொம்பாஸ்**" என்னுந்திசையறிகருவியும் கடலோடிகளுக்கு மிகவும் உதவியாயிருந்தன. 1488 ல் ஆபிரிக்காவின் தெற்குமுனைவரை சென்ற **பார்தலோமியஸ்டயஸ்** என்பவன் அவ்விடத்திற்புயல் அமோகமாகக்காணப்பட்டமையால் அம்முனைக்குப் "**புயல் முனை**" யென்னும் பெயரைக் கொடுத்துப் போர்த்துக்கல்லுக்குச் சென்றபொழுது அந்நாட்டு மன்னன் அதற்கு "**நன் நம்பிக்கைமுனை**" யென்ற பெயரையிட்டான். பின்பு 1497ல் வாஸ்கோடிகாமா என்பவன் அம்முனையைத் தாண்டி ஆபிரிக்காவின் கிழக்குப்பகுதிக்குச் சென்று அவ்விடத்திலிருந்து தென்மேற்குப் பருவக்காற்றின் உதவியுடன் இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டையைச் சேர்ந்தான். இனி மற்றும் ஐரோப்பிய கடலோடிகள் செய்த யாத்திரைகளைப் பற்றி அறியவேண்டும். ஜெனோவா நகரத்தைச்சேர்ந்த கிறீஸ்தோபர் கொலம்பஸ் 1492ல் ஸ்பானிய மன்னனாகிய பேர்டினந்தின் உதவியைப்பெற்று மேற்கு நோக்கிப் புறப்பட்டான். அவன் மனஉறுதியோடும் அஞ்சாநெஞ்சத்தோடும் பல இன்னல்களுக்கிடையேதன்னோடு சென்ற கடலோடிகளையும் உற்சாகப்படுத்திக்கொண்டு மூன்று மாசத்தில் மேற்கு இந்தியதீவுகளிலொன்றை அடைந்தான். தான் சென்றடைந்த தேசம் அமெரிக்காக்கண்டமென்பதை அவன் அப்பொழுது அறியவில்லை. பின்பு **யோன்கபோட்** என்ற இத்தாலிய கடலோடி வெனிஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு இங்கிலாந்து தேசத்து அரசனாகிய ஏழாவது ஹென்றியிடம் உதவிபெற்று அமெரிக்காவின் கிழக்குக்கரையிலுள்ள **லபுரடோர்** என்னும் தேசத்தை அடைந்தான். 1500 ல் **கப்ருல்** என்னும் போத்துக்கீசயாத்திரிகன் ஒருவன் தென் அமெரிக்காவி



RangaRakes Tamilnavarasam.com

லுள்ள பிரேஸில் என்ற பகுதியின் கரையை அடைந்தான். இவ்வண்ணமாக மேற்குக்கடல் வழியாக ஆசியாவுக்குச் செல்ல எண்ணிய ஐரோப்பியர் புதிய ஒரு கண்டம் இருப்பதைச் சிறிது சிறிதாக அறிந்தனர். பின்பு, **அமெரிக்கோ வெஸ்புக்கூசி** என்ற இன்னொரு போத்துக்கீச யாத்திரிகனும் பிரேஸிலை அடைந்தான். அவரின் பெயரே அக்கண்டத்துக்குக் கொடுக்கப்பட்டது. 1519ல் மகலன் என்ற ஸ்பானிய கடலோடியொருவன் மகலன் நீரிணைக்கூடாக அமெரிக்காவின் மேற்குப்பாகத்தைச் சேர்ந்து அங்கிருந்து பிலிப்பைபின் தீவுக்குச்சென்றபொழுது அவ்வூர்ச்சனங்கள் அவனைக்கொன்றனர். அவனுடைய கப்பலொன்று நன்னம்பிக்கை முனைவழியாக ஸ்பானியாவை வந்து அடைந்தது. முதன் முதலாக உலகத்தைச் சுற்றிய கப்பல் இதென்றே சொல்லலாம்,

அமெரிக்காவுக்குச் சென்ற ஸ்பானியர் அதன் தென் பாகத்தையும் மத்தியபகுதியையும் பார்த்தபொழுது அங்கேபுராதன நாகரிகம் மிளிர்ந்துகிடந்த மெக்ஸிக்கோ பீரு என்ற இராச்சியங்களையும், அங்கேயுள்ள அஸ்டெக்ஸ், இன்காஸ் என்ற சாதியினரையும் வென்று கைப்பற்றினர். அவ்வாறு செய்த ஸ்பானிய வீரர்கள் கோட்டஸ், பிஸாரோ என்பவர்களாவர். அவ்விடங்களிற் காணப்பட்ட வெள்ளி தங்கம் முதலியவைகளை ஸ்பானியாவுக்கு எடுத்துச்சென்றனர். அதனால் ஸ்பானிய மன்னன் செல்வத்தைப் பெற்றான். ஆங்கிலேயரும் பிரென்சு தேசத்தினரும் திரவியங்களைக் கொண்டு சென்ற ஸ்பானிய கப்பல்களைக் கொள்ளையடித்துப் பெரும் நயத்தைப் பெற்றனர்.

கல்வியின் மறுமலர்ச்சி காரணமாகச் சாஸ்திர அறிவு, இயற்கையைப்பற்றிய அறிவு, இன்னும் பல துறைகளிலுமேற்பட்ட அறிவின் உதவியைக்கொண்டே உலகத்தின் பல்வேறு இடங்களுக்குச் செல்லக்கூடியதாயிருந்தது. அவ்வாறு நடைபெற்ற யாத்திரைகளின்



பயனாக ஐரோப்பியர் புதியவிடங்களுக்குச் சென்றதுமல்லாது, கடலோடும் திறமையையும், யுத்தம் நடத்தும் முறைகளையும் விடாமுயற்சியையும் பழகிக்கொண்டனர். வட அமெரிக்காவின் கிழக்குக்கரையில் ஆங்கிலேயரும் கனடாவில் பிரான்சியரும் குடியேறினர். தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலுமுள்ள ஆதிக் குடிகளோடு ஸ்பானிய மக்கள் கலந்து புதிய இராச்சியங்களை ஸ்தாபித்தனர். அவைகளே பின் லத்தீன் அமெரிக்க குடியேற்ற நாடுகளென அழைக்கப்பட்டன.

### வினாக்கள்

1. பழையகாலத்தில் மக்களுக்குச் சமயக் கல்வியை யார் போதித்தனர்?
2. தேவாலயங்களின் முக்கிய கடமைகள் யாவை?
3. பழைய காலத்திலிருந்த நிலமானிய முறையை ஆராய்க.
4. துருக்கியர் கொன்ஸ்தாந்தினைக் கைப்பற்றியதினாலேற்பட்ட மாற்றங்கள் யாவை?
5. கல்வியின் மறுமலர்ச்சி என்பது எப்போ, என்னகாரணத்தினாலேற்பட்டது?
6. கல்வியின் மறுமலர்ச்சியினாலேற்பட்ட மாற்றங்களை ஆராய்க,
7. கல்வியின் மறுமலர்ச்சி எவ்வெவ் பகுதிகளில் மாற்றங்களை உண்டாக்கின?
8. புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு எது ஊக்கம் அளித்தது? கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகள் யாவை?
9. கல்வியின் மறுமலர்ச்சியினால் மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் யாவை?

RangaRakes Tamilnavarasam.com

# இரண்டாம் அத்தியாயம்

## புரட்டஸ்தாந்துமதச் சீர்திருத்தம்

மத்தியகாலத்தில் கத்தோலிக்க சமயமே ஐரோப்பா முழுவதும் பரவியிருந்தது. போப்பாண்டவரைத் தலைவராகக்கொண்ட ரோம இராச்சியத்துக்குட் புகுந்த அநாகரிகமற்ற அந்நியர் கத்தோலிக்க சமயத்தவர்களின் மத்தியிற் சீவித்ததினால் நாகரிகமடைந்து சிறப்புற்று வாழ்ந்தனர். கல்வியை மக்களுக்குப் பரப்பியவர்களும் கத்தோலிக்க சமயத்தவர்களாவர். சமயயறிவும் கல்வியறிவும் நிரம்பிய கத்தோலிக்கத் திருச்சபை மக்களால் நன்குமதிக்கப்பட்டுத் தலைமையான ஒருபதவியைத் தாங்கியது. எல்லா விஷயங்களிலும் பிரதானமாக மார்க்க விஷயங்களில் போப்பரசரிலும் திருச்சபையிலும் பூரண நம்பிக்கையையும் விசுவாசத்தையும் மக்கள் வைத்திருந்தனர்.

ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டில் ரோமஇராச்சியத்துக்குத் தலைமை தாங்கிய திருச்சபை சிறிது சீர்குலைந்திருந்தது. கத்தோலிக்க குருமார்களும் சந்நியாசிகளும் வாழ்ந்த ஒழுக்கமற்ற வாழ்க்கை மக்களின் நம்பிக்கையைக் குறைத்தது. சமயாபிமானிகள் அதைக் கண்டு நடுக்கமுற்றனர். கல்வியின் மறுமலர்ச்சி காரணமாக மக்கள் விவிலிய நூலைக் கிரேக்க பாஷையில் படித்தனர். இதுவரையும் லத்தீன் மொழியிற் பயின்றவர்கள் இப்போ மூலபாஷையில் மார்க்கத்தைப்பற்றிப் படித்து சுயாதீனமான கொள்கைகளைப் பெற்றனர். இதுவரையும், திருச்சபை போதித்ததைவிட வேறுசமய நூல்களைப் பயிலாதவர்கள் இப்போ விவிலிய வேதத்தைத் தாமாகக்கற்றவுடன் தேவாலயத்துக்குரிய அதிகாரத்தையும் அதனுடைய போதனைகளையும் பற்றி ஆராயத்தொடங்கினர். கிறீஸ்து உலகத்துக்கு கொண்டுவந்த உண்மையை உள்ளவாறு தேவாலயம் போதிக்கிறதா என்ற சந்தேகம் அவர்களுடைய சிந்தையிற் கிளம்பியது. தேவாலயம் காட்டிவந்த தெய்வீக அதிகாரம் உண்மையில் அதற்குரியதா என்று ஆட்சேபித்தனர். ஆனால் திருச்சபை அனுசரித்த சிலமுறைகளைக் கண்டித்துத் திருத்தங்களை விரும்பிநின்றனரேயன்றிச் சமயத்தினின்று விலக அல்லது பிளவுண்டாக்க விரும்பவில்லை. ஒல்லாந்து தேசத்து **இருஸ்மஸ்** என்ற சிறந்த அறிஞன் திருச்சபையின் சீர்கேட்டைக் கண்டித்துப் பலநூல்களை எழுதினான். கிறிஸ்துவும் அவர்களுடைய சீஷர்களும் போதித்தவைகளைப்பற்றி அறியவேண்டில் கிரேக்கபாஷையில் எழுதிய பழையவேதத்தைப் பயில வேண்டுமென்று கூறினார். அவர் எழுதிய சிறந்த நூல் கிரேக்கபாஷையில் லத்தீன் மொழிபெயர்ப்போடு எழுதிய புதிய ஏற்பாடாகும். மக்கள் அதிகம் படிப்பதால் சிறந்தவர்களாகுவர் என்றும், அவர்களுடைய செல்வாக்குத் தேவாலயத்திற் திருத்தங்களேற்படுவதற்குக் காரணமாகுமென்றும் எண்ணியிருந்தார். இவரைவிட மத்தியகாலத்தில் **வைக்கிளிப்** என்னும் ஆங்கிலேயரும் **ஹஸ்** என்ற **பொஹீமியரும்** கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரத்தைக் கண்டித்தனர். அவர்களுடைய முயற்சிகள் நிலைத்த பயனை உண்டாக்கவில்லை.

இவர்கள் எல்லோரிலும்பார்க்கக் கத்தோலிக்க தேவாலயத்தின் நிலைகுன்றுவதற்குக் காரணமாயிருந்தவர் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலுள்ள **மாட்டின் லூதர்** என்ற ஜேர்மனியிலுள்ள சந்நியாசியாவர். இவர் ஒரு வறிய ஜேர்மன் விவசாயியின் மகன். பெற்றார் இவரை ஒரு சட்டநூல் வாதியாக்கவேண்டுமென்று விரும்பியிருக்க அவர் உலக இன்பங்களை நீக்கி ஒரு சந்நியாசிமடத்தைச் சேர்ந்தார். பாவங்களினின்று எவ்வண்ணம் நீங்கலாமென்ற மனவேதனைகொண்டு தேவாலயம் விதித்த முறைகளை முதலில் அனுசரித்தார், விரதங்களும் வழிபாடுகளுஞ் செய்தும் ஆத்மசாந்தியை அவர் பெறவில்லை. **பவுல், ஒகஸ்டியன்** சுவாமிக

RangaRakes Tamilnavarasam.com

ளுடைய போதனைகளைக் கற்கத்தொடங்கினர். அப்போ ஞானமுதயமானது. மனச்சாந்தியும், மன்னிப்பும், வழிபாட்டினாலும் விரதங்களினாலும் பெறுவதொன்றன்று. ஆனால் கிறிஸ்துவில் வைத்திருக்கும் நம்பிக்கை விசுவாசத்தினாலேயே அவைகளைப் பெறலாமென்றறிந்தார். அதுவே விவிலிய நூலின் போதனையென்றும் அவ்வேதமே கடவுளிடம் சேர்வதற்கு வழிகாட்டியென்றும் வற்புறுத்தினர். அவ்விதமான நம்பிக்கை கத்தோலிக்க திருச்சபையின் நிலையையும் ஸ்திதியையும் அழிக்கக்கூடிய தொன்றாகும். இதுவரையும் தேவாலயம், அதன் மூலமே இரட்சிப்பைப் பெறலாமென்று போதித்தது. தேவாலயம் கடவுளுக்கும் மனுஷனுக்கும் இடையிலுள்ள தொடர்பை உண்டாக்குவதற்காகவும், குருமார், மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காகவும், கிறிஸ்து அதை உண்டாக்கினரென்ற பழைய நம்பிக்கை நிலவியது. ஆனால் லூதர் சொன்ன பிரகாரம் கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கையே அவசியம் தேவையென்றால், தேவாலயம் அதனுடைய மதிப்பை இழக்குமென்பது வெளிப்படை.

லூதர் **விற்றன்பேர்க்** கலாசாலையில் சமயாசாரப் பேராசிரியராக அமர்ந்து தனது புதியகொள்கைகளையும் போதித்தார். 1517 ம் ஆண்டு போப்பாண்டவரால் அனுப்பப்பட்ட **ரெட்சல்** என்னுமொருவன் ஜேர்மனி தேசத்தில் லூதர் இருந்த அயலில்வந்து போப்பாண்டவரால் கொடுக்கப்பட்ட பாவமன்னிப்புப் பத்திரங்களை விற்றான். இவன் உரோமாபுரியிலுள்ள பேதுரு ஆலயத்தைப் புதிதாய்க்கட்டுவதற்கு அப்பத்திரங்களை வாங்கிப் பணங்கொடுப்போர்க்கு "**பாவமன்னிப்பு**"க் கிடைக்குமென்று பொய்ப்பிரசாரஞ் செய்தான். இனி அவைகளை வாங்குவோர்களும் அவர்களுடைய சினேகிதர்களும், உரித்தாளர்களும் மோட்சத்துக்கு அல்லது நரகத்துக்கு அனுப்பப்படும்நிலையில் பாவங்களினின்றுமன்னிக்கப்படுவர் என்பதாகக்கூறினன். இப்பிரசாரத்தைக் கேள்வியுற்ற



லூதர் கோபாவேசங்கொண்டு, விற்றன்பேக் ஆலயக்கதவில் "பாவமன்னிப்புக்" கொள்கைக்குமறுப்பான 95நியாயங்களை எழுதி ஒட்டிவிட்டார். முன்பு **வைகிளிப் ஹஸ்** என்பவர்கள் போப்பாண்டவரின் அதிகாரத்தைப் பலமுறை கண்டித்தும், எதிர்த்தும், அவர்கள் சித்தியடையவில்லை. அவர்களுடைய இயக்கமும் நிலைபெறாது அடக்கப்பட்டன. ஆனால் லூதர் காத்திராப்பிரகாரமாக ஆரம்பித்த இயக்கமோ ஐரோப்பிய சமுதாயத்தில் நிலைபெற்றதொன்றாயிற்று. ஆகையால் அதை விளங்குவதற்கு அக்காலத்தில் ஜேர்மனியும் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளுமிருந்த நிலையைப்பற்றி ஆராயவேண்டியதவசியம். சமயத்தோடு சம்பந்தப்பட்ட இயக்கம் சீக்கிரத்தில் ஜேர்மனியின் அரசியல், சமுதாயம் என்பவற்றோடு தொடர்பு பெற்றதாயிற்று. ஜேர்மனிதேசத்தவர்களில் அநேகர் பேரரசனின் ஆளுகையில் அதிருப்தியடைந்தமையினாலும் ஜேர்மன் நாடுகளின் அரசர்கள் லூதருக்குத் தங்களுடைய பாதுகாப்பையளித்து உதவிபுரிந்ததிலும் அவருடைய இயக்கம் அனுகூலமடையத்தக்தாயிருந்தது.

1519 ல் ஸ்பானிய தேசத்து அரசனாகிய **சாள்ஸ்** என்பவன் பரிசுத்த ரோம இராச்சியத்துக்குச் சக்கரவர்த்தியாகத் தெரியப்பட்டான். அந்த இயக்கத்தை அடக்கக்கூடியவன் சாள்ஸ் மன்னன் ஒருவனே. ஆனால் அவன் ஒருபெரிய சாம்ராச்சியத்துக்குத் தலைவனாயிருந்தபடியாலும், தனது பகைகாரனான பிரான்சு தேசத்துடன் இடையறாப்போரைநடத்தியமையாலும் ஜேர்மனியிலுண்டான சமயவிகற்பத்தை யடக்கமுடியாமற்போனது. அவனுடைய இராச்சியம் தனித்தனி நாடுகளாகப் பல நாடுகளிருந்தமையினாலும் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு அரசியல் முறையை யேற்படுத்த வேண்டியதாயும் வித்தியாசமான இராசதந்திரத்தையும் கையாளவும் வேண்டியதாயிருந்தது. ஸ்பெயின்தேசத்தில் **கஸ்டீல்**, **அரஹன்**, **வலென்சியா**, **கற்றலோனியா** என்ற ஒவ்வொரு

RangaRakes

Tamilnavarasam.com

பகுதிகளுக்கும் நெதலாந்திலுள்ள 17 மாகாணங்களுக்கும் வெவ்வேறு அரசியல் முறையும் பாராளுமன்றமும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளைவிட இத்தாலிநாட்டிலும், தென் அமெரிக்காவிலும், சில நாடுகள் இவனுடைய ஆளுகைக்குள்ளிருந்தன. ஆகையால் அந்தப்பரந்த சாம்ராச்சியத்தில் சமாதானமும் ஒழுங்கும் நிலவச்செய்வதோடு, எல்லாவற்றையும் ஒன்றுசேர்ப்பதும் ஒருபெரிய பிரச்சினையாய் அவனுக்குத்தோன்றிற்று. ஆனால் இவன் செய்துமுடித்த பெரும் விஷயங்களுமுண்டு. தான் ஆண்ட அமெரிக்கநாடுகளிற் சிறந்த அரசியல் முறையை ஏற்படுத்தினான். வடஆபிரிக்காவிலுள்ள முகமதியருடைய அதிகாரத்தைக் குறைத்துவைத்தான்; நெதலாந்திலுள்ள 17 மாகாணங்களையும் ஒன்று சேர்க்க முயற்சி செய்தான். ஆனால் ஜேர்மனியில் லூதருடைய இயக்கத்துக்கு அனுதாபங்காட்டாது அந்நாட்டில் சமயசம்பந்தமான நெருக்கடிகளுண்டான பொழுதும் ஜேர்மனியிலுள்ள தேசாபிமானிகள் விருப்பியபடி அந்நாட்டை ஒற்றுமையாயும், ஒழுங்காகவும் அரசியலை நடத்தப் பல நன் முயற்சிகளைச் செய்தான். அவன் லூதருடைய இயக்கம் நாளடைவில் குன்றிப்போகுமென்றும், தேவாலயத்தினால் நியமிக்கப்படும் சபைமூலம் இருபகுதியாரும் இணங்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்தலாமென்றும் எண்ணியிருந்தான்.

லூதருடைய இயக்கத்தின் அனுகூலத்துக்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து முதலில் லூதருடைய அளவுகடந்த விவேகமும் ஒழுக்கமுமேயென்று சொல்லலாம். தன்னைப்பின்பற்றுகிறவர்களை உற்சாகப்படுத்தும் வன்மையும், மனவுறுதியுமுடையவராகக் காணப்பட்டார். ஜேர்மனிதேசத்து மக்களிற் பெரும்பான்மையோர் இவ்வளவு காலமாகக் கத்தோலிக்க தேவாலயத்தின் பொய்ப்பிரசாரத்தினால் மறைந்துகிடந்த பெரும் உண்மையான அறிவை இப்போ தாங்கள் பெற்றுவிட்டதாக நம்பிக்கை கொண்டனர். இந்த



உண்மையை அறிந்துவிட்டால் உலகமெங்கும் அது ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் வருங்காலத்தில் சமயத்திலும் அரசியலிலும், சமுதாயத்திலும் நல்லமாறுதல்களேற்படுமென்றும் உணர்ந்தனர். இதைவிட லூதரின் இயக்கத்துக்கு அரசியல் நிலையும் சாதகமாய் இருந்தது. பெயரளவில் ஜேர்மனி ஒரு இராச்சியமாக விருந்தபோதிலும் அது சுதந்திரமானபல சமஸ்தானங்களைக் கொண்டுள்ள ஒரு சமஷ்டி அரசாங்கமாகையால் ஒருமத்திய அரசாங்கம் தலையிடமுடியாமலிருந்தது. பரிசுத்தரோம இராச்சிய சக்ராதிபதி முக்கிய ஜேர்மன் நாடுகளின் உத்தரவின்றி வரிகள் அறவிடவோ, ஒருசேனையைத்திரட்டவோ சண்டைசெய்யவோ முடியாது. சாள்ஸின் ஏனைய இராச்சியங்களிலும் பார்க்க அவனுடைய அதிகாரம், ஜேர்மன் நாடுகளில் வலிமைகுறைந்ததாய்க் காணப்பட்டது. அவன் பிரான்சு தேசத்தோடு இடையறுப்போரை நடத்தாவிட்டால் ஸ்பானியா, இத்தாலி, நெதலாந்து, அவுஸ்திரியா முதலிய நாடுகளிலிருந்து ஒருபெருஞ்சேனையைத் திரட்டி லூதரின் இயக்கத்தை யடக்கியிருக்கலாம். ஜேர்மன் மக்கள் லூதரின் இயக்கத்தை மார்க்கவிஷயமாக மாத்திரமல்ல அதையொரு தேசிய இயக்கமாகவும் கருதினர். அந்நியர் ஆளுகையை வெறுத்தனர். சாள்ஸ் ஒரு ஸ்பானிய தேசத்தவனென்றும் போப்பாண்டவர் இத்தாலி நாட்டிலுள்ளவரென்றும் அவர்களை வெறுத்தனர். லூதர், ஜேர்மனி ஜேர்மன் மக்களுக்கேயுரியதென வற்புறுத்தியதனால் அநேகர் அவரைப் பின்பற்றினர். முப்பது ஆண்டுகளாக லூதரின் இயக்கம் ஒருவிதமான எதிரிடையுமில்லாது மேலோங்கி வளர்ந்துவந்தது. ஆனால் சாம்ராச்சியத்தின் பாராளுமன்றங்கள் பலமுறையும் அவ்வியக்கத்தைக் கண்டித்ததேயன்றிப் போருக்கெழவில்லை. 1517 ல் லூதர் காட்டியமறுப்பு, போப்பாண்டவரால் அனுப்பப்பட்ட பத்திரங்களுக்கெதிரே ஆரம்பத்திலே தோன்றினும் சீக்கிரத்தில் மற்றும் பெரும் விஷயங்களோடு சம்பந்தப்பட்டுவிட்டது. போப்பாண்டவரின் அதிகாரத்துக்கும், கத்தோலிக்க தேவா



RangaRakes Tamilnavarasam.com

லய ஸ்தாபனத்துக்குமெதிரே ஏற்பட்ட எதிர்ப்புக்குத் தலைவராக லூதரிருப்பதைக் கண்ட பத்தாவது லியோ என்ற போப்பாண்டவர் 1520 ல் கத்தோலிக்க சமயத்துக்கு விரோதியென லூதருக்கெதிரே ஒருகட்டளையை ஆஞ்ஞாபித்தார். அவைகள் ஒன்றும் லூதரின் நிலையைக் குறைக்கவில்லை. 1521 ல் **ஐந்தாம் சாள்ஸ், உவோம்ஸ்** என்ற இடத்தில் நடைபெற்ற சாம்ராச்சிய பாராளுமன்றத்துக்குத் தலைமைதாங்கவந்தார். ஏனையவிஷயங்களோடு லூதரை எவ்வண்ணமாக நடத்தவேண்டுமென்று ஆலோசித்துச் சாம்ராச்சியத்தினின்று அவரைத்துரத்தவேண்டுமென்று தீர்மானஞ் செய்தபொழுது, **சாக்ஸனியின்** அரசன் அவருக்குப் பாதுகாப்பு அளித்தான். மறைவிடத்திற் சிலகாலந்தங்கியிருந்த லூதர் ஜேர்மன் பாஷையில் கிறீஸ்த வேதத்தை மொழிபெயர்த்தார். 1522ல் **நுரம்பேக்கில்** நடந்தபாராளுமன்றம் போப்பாண்டவருக்கெதிரேயுள்ள மனஸ்தாபங்களைப்பற்றி ஒரு அறிக்கையை விடுத்ததேயன்றி லூதருக்கெதிரே ஒரு நடவடிக்கையையுமெடுக்க உத்தேசிக்கவில்லை. லூதரின் இயக்கம் சித்தியடைவதற்கு ஜேர்மனியின் அரசியல்நிலை சாதகமாயிருந்ததென்பதைப்பற்றி முன்பே அறிந்திருக்கிறோம்.

இனிச் சமுதாயத்தின் நிலையைப்பற்றி ஆராயவேண்டும். ஜேர்மனியின் மேற்கு, தென்மேற்கிலுள்ள விவசாயிகளின் மனதில் பலமனஸ்தாபங்கள் குடிகொண்டிருந்தன. நகரங்களிலுள்ள மக்களும் மத்தியவகுப்பினரும் நாட்டின் செழிப்பானநிலையினால் சௌகரியங்களோடு வாழ்ந்தபோதிலும் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். அவர்களின் அடிமைத்தனம் நீங்கவில்லை. நில அதிகாரிகளும் வலோற்காரமான ஊழியத்தை அவர்களைக்கொண்டு செய்வித்தனர். லூதரின் மார்க்கத்தோடு சம்பந்தப்பட்ட இயக்கமும், அவரின் சுதந்திரத்தைப்பற்றிய போதனையும் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருந்த விவசாயிகளின் மனதைத் தூண்டியது. தென்மேற்குப்பாகத்தில் கலகமேற்



பட்டது. 12 கோரிக்கைகளை விடுத்து, அவைகள், வேதத்திற் கூறப்பட்டதற்கிணங்க அளிக்கப்படவேண்டுமென வாதாடினர். அடிமைத்தனம் ஒழியவேண்டுமென்றும் நிலமானிய முறையினாலேற்பட்ட பிழைகள் நீங்கப்படவேண்டுமென்று பிரலாபித்தனர். எங்கும் ஒருகிளர்ச்சி உண்டாகி 1524 ல் உள்நாட்டுக்கலகமாயிற்று. கலகத்தை அடக்கும்பொருட்டு பல அநீதியான செயல்கள் செய்யப்பட்டதைக் கண்ணுற்ற லூதர் திகிலடைந்தார். மார்க்கசம்பந்தமான இயக்கத்தின் வெற்றிக்கு அபாயமேற்படுமென நினைந்த லூதர், விவசாயிகளுக்கு உதவிகொடாததினாலும் பிரபுக்களை அக்கலகத்தை அடக்கச்சொன்னதினாலும் பாமரமக்களின் ஆதரவை அவருடைய இயக்கம் பெறவில்லை. அக்காலந்தொட்டு மத்தியவகுப்பினரின் ஆதரவையே அவர் பெற்றார்.

இதுவரையும் லூதரின் இயக்கத்தை அடக்குவதற்கு ஒருமுயற்சியுஞ் செய்யாத சாம்ராச்சிய அதிகாரிகள் 1526 ல் **ஸ்பீர்** என்ற இடத்தில் ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டி ஜேர்மனியிலுள்ள ஒவ்வொருநாடும், அந்நாட்டில் எவ்வண்ணம் மக்கள் சீவிக்கவேண்டுமென்றும், ஆளுகை நடத்தப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கவேண்டுமென்று சொல்ல, லூதரின் இயக்கத்தை முற்றாக ஆதரித்த சாக்ஸனி, ஹெஸ், என்றநாடுகள் புரட்டஸ்தாந்து ஆலயங்களைத் தம்நாடுகளில் ஸ்தாபித்தனர். 1529 ல் ஸ்பீர் என்ற இடத்தில் பின்பும் கூட்டப்பட்ட பாராளுமன்றம் அதனுடைய முதற்தீர்ப்பை மாற்றி புரட்டஸ்தாந்து நாடுகளில் கத்தோலிக்க வழிபாடு அனுமதிக்கப்படவேண்டுமென்று கற்பித்தது. உடனே சிறுபான்மையோர் சேர்ந்து **“நாங்கள் உங்களுடையதீர்ப்பை மறுக்கிறோம். அதற்கு இணங்கமாட்டோம். உங்களுடைய தீர்மானம் எங்களைக் கட்டுப்படுத்தமாட்டாது”** என்று கூறினர். சக்கராதிபதி, கத்தோலிக்கமார்க்கத்துக்கு உடனே திரும்பிவராதோர்

RangaRakes
Tamilnavarasam.com

தண்டிக்கப்படுவரெனப் பயமுறுத்தியவுடன் புரட்டஸ்தாந்து நாடுகள்யாவும் தங்கள் பொதுநலத்தின் பொருட்டு ஒன்றுசேர்ந்தனர். இவைகளுள் சாக்ஸனி, ஹஸ், பிரேண்டன்பேர்க், என்பன முக்கிய நாடுகளாகும். உவேட்டம்பேர்க்கு, பேடன் என்ற நாடுகளும், புரட்டஸ்தாந்து நாடுகளாயின. சாள்ஸ் 1546 ல் பெருஞ்சேனையைத்திரட்டி யுத்தத்துக்கு ஆயத்தஞ் செய்தான். லூதரும் அவ்வாண்டிலேயே தேகவியோகமானார். ஜேர்மனியின் தென் பாகத்திலுள்ள நாடுகள் சாள்ஸின் சேனையைக் கண்டதும் அவனுடைய எண்ணத்திற் கிணங்கின. ஆனால் முழுப்பொறுப்பையும் சாக்ஸனிக்கு அரசனான பிரடெரிக்கும், ஹஸ்நாட்டதிபதியாகிய பிலிப்புமே தாங்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. 1547 ல் முல்பேக்கு என்ற யுத்தத்தில் இவ்விரு நாடுகளின் இளவரசர்களும் தோற்கடிக்கப்பட்டுக் கைதிசெய்யப்பட்டனர். ஜேர்மனியிலோ அல்லது ஏனைய நாடுகளிலோ சாள்ஸோடு தகுந்த முறையிலெதிர்க்கக்கூடியவர்களில்லை. அப்படியிருந்தும் புரட்டஸ்தாந்து நாடுகள் தங்களுடைய நாடுகளில் கத்தோலிக்க ஆலயங்களை ஸ்தாபிக்க மறுத்தனர். ஆனால் சக்கராதிபதியாகிய சாள்ஸ் தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல்நிலை தடையாயிருந்தது.

அவுஸ்திரிய நாடுகளை ஆண்டுகொண்டிருந்த சக்கராதிபதிக்கும் அவனுடைய தம்பியாகிய பேடினந்துக்குமிடையில் சச்சரவுகளேற்பட்டன. மோகாஸ் என்ற ஒரு பெரிய சண்டையில் ஹங்கேரியைத் துருக்கியர் தோற்கடித்து அதைக்கைப்பற்றினதோடு பொகீமியாவையுந் தாக்கினர். அந்நாடுகளின் அரசன் சண்டையிலிறக்க அவனது மைத்துனனை பேடினந்து அந்நாடுகளை தனக்குரிமையானவையென்று தம்வசப்படுத்தினன். சாள்ஸின் பின் பேடினந்து சக்கராதிபத்தியத்துக்கு உரிமையுடையவனாகையால் சாள்ஸ் தனது மகன் பிலிப்பே பேடினந்தின் பின் ஆளவேண்டுமென்றாலோசனை செய்ய



அதைப்பேடினந்து மறுத்துவிட்டான். இதற்கிடையில் பிரெஞ்சுமன்னனாகிய இரண்டாம் ஹென்றி ஸ்பானிய அவுஸ்திரிய அதிகாரிகளுக்கு எதிரே நடவடிக்கைகள் எடுத்தான். புரட்டஸ்தாந்துத் தலைவர்களுக்குத் தான் உதவி செய்வதாயும் அவ்வுதவிக்குப்பதிலாக அவர்கள் மெற்ஸ், ருல், வேர்டன் என்னும் எல்லைப்புறப்பகுதிகளைக் கொடுக்கவேண்டுமென்றும் பேசிஒற்றுமைபட்டுக்கொண்டான். சாள்ஸ் தேக அசௌக்கியத்தின் காரணமாக முன்போல யூகமாயும் தந்திரமாயும் நடந்துகொள்ள முடியாமையால் 1555ல் சாக்ஸனிக்கு இளவரசனாயிருந்த மோரிஸ் போருக்குக்கிளம்பியவுடன் சாள்ஸ் ஜேர்மனியை விட்டு விலகி இத்தாலிக்கு ஓடிப்போகநேரிட்டது. ஜேர்மனி மோரிஸின் அதிகாரத்துக்குளடங்கியது. ஆனால் 1553 ல் ஒருசிறுச்சண்டையிலவனிறக்க, ஜேர்மனி, தலைவர் ஒருவருமில்லாத நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்தது. பிரான்சே தனக்குத்தோல்வியுண்டாக்கினதெனவுணர்ந்த சாள்ஸ் பிரான்சுக்கெதிரே சண்டைக்குக் கிளம்பினன். அதிலுந்தோற்று, அரசியற்பொறுப்பினாற் களைப்புற்று ஜேர்மனியின் விஷயங்களைத் தீர்க்கும்படி தனது தம்பியாகிய பேடினந்திடம் ஒப்படைத்தான். ஒக்ஸ்பேர்க்கில் கூட்டப்பட்ட அரசசபை (1555 ல்) ஜேர்மனியின் மார்க்கவிஷயத்தைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் செய்தது. 300க்கு மேற்படவுள்ள ஜேர்மன் சமஸ்தானங்கள் ஒவ்வொன்றுக்கும் அந்நாட்டின் மார்க்கத்தைப்பற்றிய பொறுப்பு விடப்பட்டது. புரட்டஸ்தாந்து சமயமும் கத்தோலிக்கசமயமுமே அந்நாடுகளிலங்கீகரிக்கப்பட்டன. ஒருநாட்டிலுள்ள ஒருவர் தான்விரும்பிய சமயத்தினிமித்தம் இன்னொருநாட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். இருசமயங்களில் யாதேனுமொன்றைத் தழுவிய நாட்டினதிகாரி, அரசனாயமைந்ததல்லாது தனது பரம்பரையினருக்கு ஆளும் பொறுப்பைக் கொடுக்கும் உரிமையையும் பெற்றார். ஆகையால் ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கையின் பிரகாரம்

RangaRakes
Tamilnavarasam.com

1552க்கு முன்பு புரட்டஸ்தாந்து சமயத்தைத்தழுவிய நாடுகள் அச்சமயத்தைக் கைக்கொள்ளவும், அவ்வாண்டின்பின் அச்சமயத்துக்குமாறிய நாடுகள் கத்தோலிக்க ஆலயத்தின் பொறுப்பிலும் வரவேண்டியதாயிற்று. ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கையின்படி கல்வினுடைய இயக்கத்துக்கு ஜேர்மனியில் இடமேயில்லை. அதனாலடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கடூரமான மார்க்க சம்பந்தமான யுத்தம் நடைபெறுவதாயிற்று.

லூதர் கத்தோலிக்க தேவாலயத்தின் சீர்கேடுகளைக் கண்டித்து உரோமன் சமய அதிகாரிகளையல்ல, ஆனால் விபிலிய வேதத்தையே, மார்க்கவிஷயங்களில் ஆதாரமாகக் கைக்கொள்ளவேண்டுமென்று கூறினார். சீக்கிரத்தில் அச்சமயக்கிளர்ச்சி அரசியல் சமுதாய விஷயங்களிலும் கிளர்ச்சியை யுண்டுபண்ணின. அதுவுமல்லாமல் அவருடைய கொள்கைகள் அவரைப்போல் கத்தோலிக்க ஆலயத்தின் சீர்கேட்டைக் கண்டித்த மற்றத் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. சுவிங்கிலி என்பவர் சுவிச்சலாந்தில் 1518 ல் தனது கொள்கைகளை வெளியிட்டார். இவர் லூதரைப்போல் திருச்சபையின்குறைகளைக் கண்டித்துப் பின் சமயக் கொள்கைகளைப்பற்றியும், தேவாலய நிர்வாகத்தைப்பற்றியும் வெளிப்படுத்திய பொழுது அதிகவித்தியாசங்கள் காணப்பட்டன. அப்பமும் திராட்சரசமும் கிறீஸ்து நாதரின் தசையும் இரத்தமுமாக மாறுவதென்னும் கொள்கையை லூதர் மறுத்து அவை மாறுதலடையாது அப்படியேயிருக்கின்றனவென்று கூறினார். சுவிங்கிலி இருகொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

லூதரின் தேகவியோகத்திற்கு முன்பாகவே கல்வின் என்பவரால் புரட்டஸ்தாந்து இயக்கமொன்று உண்டாக்கப்பட்டது. 1509 ம் ஆண்டு கல்வின் பிரான்சு தேசத்திற்பிறந்தார். பாரிஸ்மாநகரில் அவர் சிறிது காலம் மார்க்கத்தைப்பற்றிப்பயின்று பின்பு அதை



விட்டு சட்டநூற்கல்விபயின்றார். அவர் புரட்டஸ்தாந்து மதத்தைப்பின்பற்றி பிரான்சுதேசத்தில் அக்காலத்தில் நடைபெற்ற மார்க்கவதைப்பினால் அந்நாட்டை விட்டு ஜெனீவாவுக்குச்சென்றார். மற்றப் புரட்டஸ்தாந்து இயக்கங்களிலும் பார்க்கக் கல்வின் போதித்தமதம் விசேஷமாக மூன்று விஷயங்களில் வித்தியாசப்பட்டது. தேவாலயமும் அரசாங்கமும் வெவ்வேறு ஸ்தாபனங்களாயிருக்கவேண்டுமென்பது ஒன்றாகும். தேவாலயங்களின் மேற்பார்வை, குருமார்களும் குருமாரல்லாதவர்களும் கொண்டுள்ள சபையிலே விடப்படவேண்டுமென்பது அவரின் மற்றொரு கொள்கையாகும். சிறந்த ஒழுக்கமான வாழ்க்கையின் அவசியத்தையும் வற்புறுத்தினார். கல்வினுடைய எண்ணப்படி ஜெனீவாவில் சிறந்த ஒழுக்கமான வாழ்க்கை நடைபெற்றது. கல்வினுடைய சிஷ்யனை யோன் நொக்ஸ் மற்றொரு நாட்டிலுமில்லாதமாதிரி ஜெனீவாவில் கிறீஸ்துவின் போதனைகள் பின்பற்றப்பட்டனவென்றார். கல்வின் எழுதிய "கிறீஸ்து சமய ஆலயங்கள்" என்ற நூலை அடிப்படையாகக்கொண்டே ஜெனீவாவிலும் மற்றும் இடங்களிலும் பிரிஸ்பிற்றீரியன் ஆலயங்கள் கட்டப்பட்டன. கல்வினுடைய கொள்கைகள் ஜேர்மனிதேசத்திற் பரவியவுடன் புரட்டஸ்தாந்து இயக்கத்தில் பிளவு உண்டாகி அது முப்பதாண்டுயுத்தத்துக்குக் காரணமாயிற்று. கல்வின் கிறீஸ்தவேதத்தைப் பிரென்சுப் பாஷையில் மொழிபெயர்த்தார். ஜெனீவாவில் பெருங்கட்டுப்பாடான வாழ்க்கை நடந்ததுமல்லாது ஒவ்வொருவிசேஷதினங்களிலும் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. கத்தோலிக்க தேவாலயத்தைக் கண்டித்த சேவாத்தசு என்ற ஸ்பானிய தேசத்தவன் பாதுகாப்புக்காக ஜெனீவாவுக்குச் சென்றபொழுது அங்கே அதனுடைய கொள்கைகள் கல்வினுடைய கொள்கைகளுக்கு முரண்பாடாயிருந்தமையால் அவன் மரணதண்டனைக்காளானான். கல்வினின் கொள்கைகள் புரட்டஸ்தாந்து மதத்துக்கு ஒரு விளக்கமான, வரம்புடைய சமய அறிவைப் புகட்டியது

RangaRakes Tamilnavarasam.com

மல்லாது 16 ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் புரட்டஸ்தாந்து மதத்திற்கு ஊக்கத்தையுமளித்து கல்வினைப்பின்பற்றியவர்களே பிரான்சுதேசத்தில் புரட்டஸ்தாந்து மதத்திற்கு வெற்றியைக்கொடுத்தனர். அவர்களே நெதலாந்தில் ஒல்லாந்துக் குடியரசைத் தாபிப்பதற்கு காரணமாயினர். அவர்களே இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதம் பரவுவதற்கும் 17 ம் நூற்றாண்டில் பியூரத்தானியரின் இயக்கமும் உண்டாவதற்கும் காரணமாயிருந்தனர்.

பதினாறும்நூற்றாண்டின் முதற்பகுதியிலிருந்த போப்பரசர்கள் இத்தாலியின் அரசியல் விஷயங்களிலும், கல்வியின் மறுமலர்ச்சியிலும் அதிகம் சிரத்தையெடுத்தமையால் தங்களுக்குரிய மார்க்க சம்பந்தமான கடமைகளிற் கவனஞ்செலுத்தவில்லை. ஆனால் புரட்டஸ்தாந்து சமயம் வெகுதீவிரமாகப் பரவியதனால் அவர்கள் அசட்டையாயிருக்க முடியவில்லை. ஜேர்மனியிற் முக்காற்பகுதியும். ஒல்லாந்தும், பிரான்சிற் சிலபகுதியும் இங்கிலாந்தும், டென்மார்க்கும் நோர்வேயும் சுவீடனும் லூதரின் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கின. போலாந்திலும், பொஹீமியாவிலும் சமயக்கிளர்ச்சியுண்டாயின. ஆகையால் அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலுள்ள போப்பரசர்கள் தங்களுடைய சமயத்தைப் பாதுகாக்கும் முயற்சியிலீடுபட்டனர். அவர்கள் அநேகநாடுகளைப் பழையபடி கத்தோலிக்க சமயத்துக்குக் கொண்டுவரத் தக்கதாயிருந்தது. இதுவே சமயப்புரட்சிக்கு எதிர்ப்புரட்சியின் ஆரம்பமாகும். கத்தோலிக்கசமயத்தைப் பின்பும் பரப்புவதற்காக ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்பானியதேசமே இப்புதிய கிளர்ச்சிக்கு இடமாயிற்று. டொன் இனிக்கோ லோபெஸ் டி றிகால்டி என்பவன் ஒரு ஸ்பானிய பிரபு அவன் ஸ்பானிய சேனையிற் சேவை புரிந்து பலசண்டைகளிற் பங்குபற்றி பம்பெலூனு என்ற சண்டையிற் காயமடைந்து அதனால் அங்கக் குறைவுண்டாகி அமைதியான வாழ்க்கையில் ஈடுபட்டான். இவன் உலகவிஷயங்களைத்தவிர்த்து மார்க்க



விஷயங்களிலாவல் கொண்டான். அவன் எருசலேமுக்கு யாத்திரை செய்தான். பின்பு மார்க்கத்தைப் படிக்கும் வண்ணமாகப் பாரிஸ் நகருக்குச் சென்றிருந்தபொழுது அங்கே சில நண்பர்களோடு சேர்ந்து எருசலேமுக்குப் போவதாயும் போப்பாண்டவருக்குச் சேவை செய்வதாயும் வாக்குப்பண்ணிப் புறப்பட்டுச் சென்றான். ஆனாற் துருக்கியரின் ஆதிக்கம் அதிகம் பலமுற்றிருந்தமையால் வெனிஸ் நகருக்கப்பாற் செல்லமுடியாதாயிற்று. அங்கேயே ஒரு சபையை ஸ்தாபிக்க முயன்றான். அக்காலந்தொட்டு அவன் இக்நேசியஸ் லோயலா என்றழைக்கப்பட்டான். போப்பரசர் ஆரம்பத்தில் அச்சபையிற் சந்தேகங்கொண்டிருந்த பொழுதிலும் 1540 வரையில் அதை அங்கீகரித்தார். அச்சபையின் அங்கத்தினர் வறுமை, நேர்மை, தாழ்மை, போப்பாண்டவரில் விசுவாசம் என்பவைகளே தங்கள் வாழ்க்கையின் பிரதான அம்சங்களெனச் சத்தியஞ்செய்து கொண்டனர். இது யேசுசபையென்றும் அதன் அங்கத்தவர்கள் யேசுசபைக்குருமார் என்றுமழைக்கப்பட்டனர். அவர்கள் சில கொள்கைகளைப் பின்பற்றினர். தாம் இன்னாரென்று காட்டுவதற்கு விசேஷ அங்கியை அணிவதில்லையென்றும், கடுமையான சந்நியாச முறையைக் கையாள்வதில்லையென்றும், உலகத்தோடு சேர்ந்து நடந்து தேவாலயத்திற்காகச் சேவைபுரிவதென்றும் சத்தியஞ் செய்துகொண்டனர். செல்வாக்குவாய்ந்த அவர்களின் பாடசாலைகளில் இலவசமானகல்வி பயிற்றப்பட்டபொழுதும் அக்கல்வி அக்காலத்தில் ஐரோப்பாவிற் காணப்பட்ட கல்வியிலும்பார்க்க மிகச்சிறந்ததொன்றாகும். ஆகையால் அடுத்தநூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கத்தோலிக்க நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும் அவர்களுக்கு நன்மதிப்பும் செல்வாக்குமிருந்தன. ஊக்கமும், மனத்திடமும் வாய்ந்த அக்கூட்டத்தினர், போப்பாண்டவரின் கொள்கைக்கிணங்க நடந்துகொண்டமையால், பிரான்சு, ஜேர்



RangaRakes Tamilnavarasam.com

மனி, போலாந்து முதலிய தேசங்களில் புரட்டஸ்தாந்து மதம் பரவுவதற்குத் தடையேற்பட்டது.

இனிச் சமய எதிர்ப்புரட்சியின் அனுகூலத்துக்கு றென்ட் என்ற இடத்தில் நடைபெற்ற மகாநாடும் உதவியாயிருந்தது. ஐந்தாம் சாள்ஸ் புரட்டஸ்தாந்துமத விரோதத்தைத் தீர்ப்பதற்குக் கத்தோலிக்க நாடுகளின் பிரதிநிதிகள் கொண்டுள்ள மகாநாடு தேவையென வுணர்ந்தார். இம் மகாநாடு 1545 ல் றென்டிற் கூட்டப்பெற்று 1563 வரையும் இடையிடையே கூட்டங்களை நடத்திக்கொண்டுவந்தது. லூதரின் கொள்கைகளுக்கும் சமரசமானமுறையிலேற்பாடு அமைப்பதற்கு முயற்சித்தபொழுது அம்மகாநாடுகளுக்குத் தலைமைதாங்கிய போப்பாண்டவரின் பிரதிநிதிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. லத்தீன் மொழியிலுள்ள கிறீஸ்தவேதமும் தேவாலயத்தின் பரம்பரையாக வழங்கிவந்த கொள்கைகளுமே முக்கிய அதிகாரமுடையவையென அவர்கள் வற்புறுத்தினர். ஈற்றில் போப்பாண்டவரின் அதிகாரத்துக்கு அடங்குவதே முறையெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. இம் மகாநாட்டின் பயனுகச் சமயவாதம் ஓரளவில் முடிவுபெற்றதுமல்லாமல் குருமாருடைய வாழ்க்கையிற் காணப்பட்ட சீர்கேடுகள் மறைந்ததுமன்றித் தேவாலய பரிபாலனமும் திருத்தியமைக்கப்பட்டது. தேவாலயத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு மறுப்புக்காட்டிய சமயபேதிகளைத் தண்டிப்பதற்காக அமைக்கப்பட்ட ஸ்தலமும் சமய எதிர்ப்புரட்சிக்கு உதவியளித்தது. 1483 ல் ஸ்பானியாவில் ஸ்தாபிக்கப்பட்ட சமயபேதிகளை விசாரணை செய்யும் ஸ்தலத்தைப் போல் 1542 ல் நான்காம் பவுலாகிய போப்பாண்டவர் ஒன்றை ஸ்தாபித்தார். அது சமயபேதிகளுக்குக் கடுந்தண்டனைகளை விதித்தது. இந்தவிசாரணை ஸ்தலம் பலசமய நூல்களைப் பிரசுரஞ்செய்யாது தடுத்தது. யேசுசபையும், றென்ட் மகாநாடும் சமய எதிர்ப்புரட்சியின் வெற்றிக்குச் சாதகமாயிருந்தன வென்றே



சொல்லலாம். ஆனல் சமயவிசாரணை ஸ்தலம் பெரும் உதவி புரியவில்லை. அது அளவு கடந்த எதிர்ப்பையும் மக்களிடையே வெறுப்பையும் உண்டாக்கியது.

### வினுக்கள்

1. பதினைந்தாம் நூற்றுண்டில் போப்பரசரிலும் திருச்சபையிலும் மக்களுக்கிருந்த நம்பிக்கைகுறைந்து போனதற்குக் காரணங்களென்ன?
2. திருச்சபையின் சீர்கேடுகளைக் கண்டித்தபெரியார்கள் யார்?
3. மாட்டின் லூதரைப்பற்றி நீ அறிந்தவற்றைக்கூறு?
4. மாட்டின்லூதர் திருச்சபையையும், போப்பரசரையும் கண்டித்ததற்கு நியாயமென்ன?
5. மாட்டின்லூதருடைய போதனைகள் ஜேர்மனியில் பரவுவதற்கு எக்காரியங்கள் சாதகமாயிருந்தன?
6. சாள்ஸ் மன்னன் புரட்டஸ்தாந்துமதம் பரவாதவண்ணம் தடைசெய்துகொள்ள ஏன் முடியவில்லை.
7. கல்வின் என்பவன் யார்? மதப்புரட்சி ஏற்படுவதற்கு அவன் எவ்வாறு காரணமாயிருந்தான்?
8. கல்வினுடைய போதனைகளுக்கும் லூதரின் போதனைகளுக்குமிடையில் பேதங்களேற்பட்டதற்குக் காரணம் என்ன?
9. "ஒக்ஸ்பேர்க்" மகாநாட்டில் மார்க்க விவாதங்கள் எவ்வாறு தீர்க்கப்பட்டன?
10. சமய எதிர்ப்புரட்சி எப்போ ஏற்பட்டது? எதிர்ப்புரட்சிக்காரர் செய்த சேவைகள் என்ன?

RangaRakes Tamilnavarasam.com

# மூன்றாம் அத்தியாயம்

## புதிய இராச்சியங்களின் எழுச்சி

மத்தியகாலத்தில் சாதி அபிமானம் ஐரோப்பிய மக்களிடையே காணப்படவில்லை. எல்லோரும் கத்தோலிக்க திருச்சபையென்ற ஸ்தாபனத்தின் அங்கத்தவர்களாகையாலும், ஒரே சமயமாகிய கத்தோலிக்க சமயத்தைத் தழுவி நடந்தமையினாலும் சாதி அபிமானமோ அல்லது தேசீய உணர்ச்சியோ அவர்களிடையே உற்பத்தியாகவில்லை. அக்காலத்திலுள்ள சமுதாயத்தில், பிரபுக்கள், வர்த்தகர், விவசாயிகள் என்ற வகுப்பினர் காணப்பட்டனரேயன்றி, தேசீய உணர்ச்சியினாலுந்தப்பட்ட நாடுகள் தோற்றவில்லை. இப்பொழுது வெவ்வேறு பாஷைகளையும், அரசாங்கங்களையும், சமயங்களையும் கொண்டுள்ள நாடுகள் அக்காலத்திலே தகுந்த அரசர்களினாளுகைக்குட்படாமல், ஒவ்வொன்றும் சிறிய பிரிவுகளாகப் பிளவுபட்டு அவ்விடங்களிலுள்ள பிரபுக்களின் ஆதிக்கத்திலமர்ந்தன. மத்தியகால முடிவிலேயே தேசீய உணர்ச்சி தோன்றிற்று.

மேற்கு ஐரோப்பாவிலுள்ள ரோமராச்சியம் வீழ்ச்சியுற ஒன்றாயிருந்த ஐரோப்பிய நாடுகள் தனித்தனித் தேசங்களாகப் பிரிந்தன. திறமை வாய்ந்த அரசர்கள் சிங்காசனமேறியமையாலும், நிலமானியமுறை யற்றுப் போனதினாலும், வர்த்தக வகுப்பினர் முன்னேற்றமடைந்ததினாலும், விவசாயிகள் கூடிய சுதந்திரத்தைப் பெற்றமையினாலும், வகுப்புப் பிரிவினைகள் குன்றிப் போகத் தேசீய உணர்ச்சி பெற்றநாடுகள் பிரபலமாயின. பின்பு சமயப்புரட்சி ஏற்பட அந்நாடுகளுக்கிடையிலுள்ள வித்தியாசங்களதிகரித்தன. இவ்வகையான தேசீய உணர்ச்சி இங்கிலாந்து, ஸ்பானியா, பிரான்சு முதலிய தேசங்களில் மத்தியகாலப் பிற்பகுதியிற் தோற்றியது. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அவ்வகையான தேசீய உணர்ச்சி இத்தாலியிலும், ஜேர்மனியிலும், உண்டானது. காலஞ் செல்ல, வியாபார விருத்தியினாலும் தேசங்களிடையே மூண்ட யுத்தங்களினாலும் ஒவ்வொரு தேசத்திலும் சாதி அபிமானங் கூடியது.

சாக்ஸன்ஸ் இங்கிலாந்தைத் தம்வசப்படுத்தி, சிறுச்சிறு இராச்சியங்களையமைத்து ஒவ்வொன்றையும் சுதந்திரமானதாக்கினர். பின்பு தேனியரின் படையெடுப்பினாலும் இன்னும் வேறுகாரணங்களாலும் அவ்விராச்சியங்கள் ஒன்று சேர்ந்தன, 1066ல் உவில்லியத்தின் தலைமையின்கீழ் **நோர்மன்ஸ்** இங்கிலாந்துக்குப் படையெடுத்துச்சென்று வெற்றிபெற்றனர். ஆகையால் ஆளுஞ் சாதியினரான நோர்மன்ஸ் என்பவர்களும் ஆளப்பட்ட சாக்ஸன்ஸ் சாதியினருமான இருவகைச் சாதியினரும் கலப்புற்று ஆங்கிலேயச் சாதியினரென்றழைக்கப்பட்டனர். அதிகாரம் படைத்த பிரபுக்களையடக்க ஆங்கிலேய அரசர்களுக்கு வெகுகாலமெடுத்தது. தேசீய சட்டங்கள் வகுத்த **இரண்டாம் ஹென்றியும்**, முதன்முறையாகப் பாராளுமன்றத்தைக் கூட்டிய **முதலாம் எட்வேட்டும்** சிறந்த அரசியலை நடத்தினர். முதலாம் எட்வேட்டின் காலத்தில் இங்கிலாந்து ஏனைய நாடுகளிலும் பார்க்க ஒரு தனிப்பெருமைவாய்ந்த நாடாகத் தோற்றியது. ஆனால் **மூன்றாம் எட்வேட்** பிரான்சுதேசம் தனக்குரிமையானதென்று வெளிப்படுத்தியதினால் இருநாடுகளுக்குமிடையே போர் தொடங்கியது. இதுவே நூறாண்டு யுத்தம். (1338–1453) எனப்படும். இந்த யுத்தத்தின் பிரதான பலாபலன் இங்கிலாந்திலும், பிரான்சிலும் தேசீய உணர்ச்சி அதிகரித்தது என்றே சொல்லலாம். ஆங்கிலேயர் தாங்கள் ஆங்கிலேயரென்றும், பிரான்சியர் தாங்கள் பிரான்சியரென்றும் உணர்ச்சியோடேயே சண்டைசெய்தனர். இவ் யுத்தத்தின்பின் இருநாடுகளும் சாதிஅபிமானமுடைய நாடுகளாக முன்னேற்றத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தன. இனி யுத்தமுறைகளும் மாறுதலடைந்தன. பெரியவில்

RangaRakes
Tamilnavarasam.com

லேந்திய காலாட்படைகள் குதிரைப்படைகளிலும் பார்க்கச் சிறந்தனவாயிருந்தன. துவக்கும் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. பிரபுக்களுடைய அதிகாரம் குன்றியது. அரசரின் ஆதிக்கமும் வலிமையும் பெருகின. இக்காரணங்களால் இங்கிலாந்தும், பிரான்சும் தனிப்பெரும் நாடுகளாக விளங்கின.

ஐரோப்பாவின் ஏனையநாடுகளோடு தொடர்பில்லாமல் ஸ்பானிய தேசம் பிரினீஸ் மலைத்தொடர்பினாற் பிரிக்கப்பட்டு அது புறம்பான நாடாக விளங்கியது. எட்டாம் நூற்றாண்டில் முகமதியர் ஸ்பானியாவைக் கைப்பற்றி அதை ஒரு நாகரிகமான நாடாக்கினர். மத்திய காலத்தில் வடக்கேயுள்ள கிறீஸ்தவ இராச்சியங்கள் சில ஒன்றுசேர்ந்து முஸ்லீங்களோடு இடையறாப்போர் செய்து கி. பி. 1250 வரையில் அவர்களைத் தெற்கே துரத்தினர். சமய ஒற்றுமையைவிட வேறொரு வகையிலும் ஒற்றுமையில்லாத கிறீஸ்த நாடுகள் ஒன்றுசேர ஆரம்பித்தனர். 1469ல் அரசனுக்கு அரசனாயிருந்த பேர்டினாந்துக்கும், காஸ்டைலுக்கு அரசியாயிருந்த இஸபெல்லாவுக்கும் நடைபெற்ற விவாகத்தின் காரணமாக கிறீஸ்த நாடுகளில் முக்கியமான அவ்விரு நாடுகளும் ஒற்றுமைப்பட்டன. தங்களுடைய நாட்டைத் தங்களுக்குரியதாக்கவேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்காகத் தொடங்கிய நீண்ட யுத்தத்தின் இறுதியில் முஸ்லீம் இராச்சியத்திலெஞ்சியிருந்த கிரானடாவும் 1492ல் கைப்பற்றப்பட்டது. ஸ்பானியா ஒரு தனி இராச்சியமாக விளங்கியது. ஐபீரியன் குடாநாட்டில் போர்த்துக்கலைத் தவிர்ந்த ஏனைய பகுதி முழுவதற்கும் பேடினாந்தின் மகனான பிலிப்பு அரசனானான். பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்பானியா ஒரு பெரும் இராச்சியமாக விளங்கியது. விவாக சம்பந்தத்தின் பயனாக நெதலாந்தும் அந்நாட்டு அரசனுக்கு உரிமையாயிற்று. இத்தாலியின் தென்பாகத்திலுள்ள நேப்பிள்ஸ் இராச்சியமும், சிசிலி என்ற தீவும் அவனுடைய ஆளுகைக்குட்பட்டன. பேர்டினாந்தின் பேரனான



ஐந்தாம் சாள்ஸ் சக்கரவர்த்தி தனது தாயின் தந்தையான மாக்ஸ்மிலியனுடைய ஜேர்மனியிலுள்ள குடும்பச் சொத்துக்களையும் பெற்றான். பின்பு அவன் மாக்ஸ்மிலியனின் பின் பரிசுத்த ரோம சக்கரவர்த்தியாக 1579-ல் தெரிவு செய்யப்பட்டான். புதிய உலகமாகிய அமெரிக்காவில் ஸ்பானியாவென்ற நாடுகளுக்கும் அவனே அரசனானான். இவ்வாறு பல தேசங்களையுள்ளடக்கிய பெரிய ஏகாதிபத்தியத்துக்குத் தலைவனானான்.

பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியா அதிக செல்வாக்கும் பெருமையும் சிறப்பும் படைத்த நாடாக விளங்கியது. அமெரிக்க நாடுகளிலிருந்து அது அளவற்ற பொருளைப் பெற்றது. மக்கள் எல்லோரும் கத்தோலிக்க சமயத்தவர்களாகையால் அவர்களிடம் ஒற்றுமை நிலவியது. ஸ்பானியப் போர்வீரர்கள் ஐரோப்பாவிற் திறமை வாய்ந்தவர்களாவர். அவர்களுடைய கடற்படையே அமெரிக்காவைக் கண்டுபிடித்தது. ஆனாற் செல்வமும், சீரும் வல்லமையும் பெற்று விளங்கிய சாள்ஸ் தனது நாடுகள் பல திக்கிலும் சிதறிக்கிடந்தபடியால் அவற்றை ஒன்றுசேர்த்து ஸ்திரப்படுத்த முடியாமற்போனது. அமெரிக்காவிலுள்ள அவனுடைய சிறந்த முறையான அரசாங்கத்தை ஏற்படுத்தாதபடியாற் பல நஷ்டமும் செலவுமுண்டாயின. சமயாபிமானமும் ஆர்வமுங்கொண்ட மக்கள் அங்கீகரிக்கப்பட்ட சமயத்துக்கு மாறாகவுள்ளவர்களைத் தண்டிப்பதற்காக ஸ்தாபித்த ஸ்தலம், சுதந்திரமான கொள்கைகளையடக்கியதோடு ஐரோப்பா முழுவதும் செறிந்த புதிய கொள்கைகளாற் ஸ்பானியா பயன் பெறுவதற்குத் தடையாயிருந்தது. பரந்த இராச்சியத்தின் பல பாகங்களிலும் இடையறா யுத்தங்கள் நடைபெற்றன. பலவற்றாலும் களைப்புற்று, சாள்ஸ் மன்னன் 1555-ல் இராச்சிய பாரத்தினின்று நீங்க அவனது மகன் இரண்டாம் பிலிப்புச் சிங்காசனமேறினான். ஜேர்மனியிலுள்ள (ஹப்ஸ்பேர்க்) குடும்பச் சொத்துக்கள் இவனுக்குக்

RangaRakes Tamilnavarasam.com

கிடைக்கவில்லை. அவை அவ்வமிசத்திலுள்ள போர்டினுந் தரசனுக்குக் கொடுபட்டன. இங்கிலாந்தில் அரசு செலுத்திய எட்டாவது ஹென்றியின் மகளை விவாகஞ் செய்ததால் சிறிது காலம் இவன் இங்கிலாந்துக்கு அரசனானன். 1580-ல் போத்துக்கலைக் கைப்பற்றியதால் அதுவும் அதன் ஆளுகைக்குட்பட்டிருந்த நாடுகளும் இவனுடைய கையிற் சிக்கின. செல்வாக்கும் அதிகாரமும் படைத்த சாள்ஸ், இரண்டாம் பிலிப்பு ஆகிய மன்னர்களைக் கண்டு ஐரோப்பிய வேந்தர் நடுக்கமுற்றனர். பிரான்சே அதிக பயங்கரத்தோடிருந்தது. இவ்வரசர்களுடைய காலத்தில் ஸ்பானியா எழுச்சி பெற்றுப் பெரிய உன்னத நிலையை அடைந்திருந்தது-

சீக்கிரத்தில் ஸ்பானியாவின் நிலை குன்றத் தொடங்கியது. இரண்டாம் பிலிப்பு மன்னன் தனது வல்லமையில் அதிக நம்பிக்கையும் மந்திரிகளிடத்து நம்பிக்கையீனமுங் கொண்டிருந்தபடியால் அவனுந் தனது திட்டங்களொன்றையும் பூர்த்தியாக்க முடியவில்லை. இங்கிலாந்தையும் பிரான்சையும் தனது இராச்சியத்தோடு சேர்க்க எண்ணங்கொண்டும் அதிற் சித்தியடையவில்லை. இங்கிலாந்தில் எலிஸபெத் ராணி தந்திரமாகவும் யூகமாகவும் அரசியலை நடத்தியபடியாலும், பிரான்ஸில் அவனுடைய எதிரியான ஹென்றி திறமையாய் ஆளுகை நடத்தியபடியாலும், அவன் ஒருவிதத்தாலும் வெல்ல முடியவில்லை. கத்தோலிக்க சமயத்தை ஐரோப்பா முழுதும் பரப்பவேண்டுமென்று ஆவல்கொண்ட பிலிப்பு நெதலாந்திலுள்ள மக்கள் கல்வினின் மதத்தைப் பின்பற்றியதைக்கண்டு அவர்களை அடக்குவதற்கு முயன்றான். 1567-ல் ஒரு பெரிய சேனையுடன் அல்வர் பிரபுவை அனுப்பினான். அங்கே காணப்பட்ட எதிர்ப்பைச் சிறிது காலத்துக்குள் அடக்கியவுடன் நெதலாந்து ஒருபோதும் போருக்கெழமாட்டாதென்றெண்ணக்கூடியதாயிற்று ஆனால் 1572-ல் மறுபடியும் “ஒரேன்சு” வமிசத்தைச் சேர்ந்த மௌனி வில்லியம்



என்ற பெயர் வாய்ந்த ஒரு பிரபுவின் தலைமையில் கலகமுண்டானது. 40 வருஷகாலம் அந்தச் சுதந்திரப் போர் நடைபெற்றது. எண்ணிறந்த சேனைத் திரளையும், கடற்படையையும், பெரும் நிதியையும், பிலிப்பு மன்னன் அனுப்பியிருந்தும் நெதலாந்து மக்களைத் தோற்கடிக்க முடியாமையால் ஸ்பானியாவின் வீழ்ச்சிக்கு இவ் யுத்தம் ஒரு காரணமாயிருந்தது. ஸ்பானியா தங்கள் கடற்படையின் உதவியைக் கொண்டாகுதல் நெதலாந்து மக்களைத் தோற்கடிக்க முடியவில்லை. ஈற்றில் போதிய பொருளில்லாமற் போய்விட்டது. உவில்லியம் கடலணைகளைத் திறந்து வெள்ளத்தை உள்ளே வரவிட்டான். நெதலாந்து கடல் மட்டத்துக்குக் கீழேயுள்ள பூமியாகையால் வெள்ளம் பெருகத்தொடங்க எதிரிகள் ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. 1576-ல் நெதலாந்திற் சண்டை செய்த ஸ்பானிய போர்வீரருடைய சம்பளம் நெடுநாளாகக் கொடாதபடியால் அவர்கள் கலகத்தை உண்டுபண்ணினர். அத்தருணத்தில் இதுவரையும் சண்டைசெய்த நெதலாந்திலுள்ள வடக்கு மாகாணங்களும், தெற்கு மாகாணங்களும் ஒற்றுமைப்பட்டு ஸ்பானியரைத் துரத்த முயன்றன. சமய வேறுபாட்டினால் இவர்களிடையேயுண்டான ஐக்கியம் நிலைக்கவில்லை. ஈற்றில் உவில்லியம் ஒரு சதிகாரனாற் கொல்லப்பட்டான். மனத்திடமும், ராசதந்திரமும்; பொறுமையும்; சுயநலங் கருதாத தேசாபிமானமும் ஒருங்கேயமைந்த உவில்லியத்தைப் பெரிய அரசியல் நிபுணனாகக் கருத வேண்டும்.

1588-ல் பிலிப்பு மன்னனால் அனுப்பப்பட்ட “ஆமடா” என்ற கடற்படை ஆங்கிலேயராற் தோற்கடிக்கப்பட்டமையால் ஸ்பானியாவின் பலம் குறைந்தது. எலிசபேத் ராணியும் நெதலாந்து மக்களுக்கு உதவி புரிவதற்காகச் சேனையொன்றை அனுப்பியமையினால் ஸ்பானியர் வெற்றிகரமான சண்டையைச் செய்ய முடியவில்லை. அமெரிக்காவிலிருந்து ஸ்பானியா



RangaRakes
Tamilnavarasam.com

வுக்குத் திரவியங்களைக் கொண்டுசென்ற கப்பல்கள் ஆங்கிலேயராலும், பிரென்சுக்காரராலும் சூறையாடப்பட்டன. விவசாயமும் கைத்தொழிலும் வீழ்ச்சியுற்றன. இங்கிலாந்து, ஒல்லாந்து பிரான்சு ஆகிய மூன்று நாடுகளும் ஸ்பானியாவுக்கெதிரே ஐக்கியம் பூண்டமையால் ஸ்பானியர் வெற்றிபெற முடியாததற்கு அறிகுறியாயிற்று. பின்பு மௌனி உவில்லியத்தினுடைய மகன் மோரிஸ் நெதலாந்துச் சேனைக்குத் தலைமை தாங்கி 1597-ல் ஸ்பானியரைத் தோற்கடித்தான். நீடித்த யுத்தத்தினால் இருபகுதியாரும் களைப்புற்றமையினால் 1609-ல் தற்காலிகமான உடன்படிக்கை எழுதப்பட்டது. அதிலிருந்து சுதந்திரத்தைப் பெற்றனர்.

மத்தியகாலத்தில் இங்கிலாந்தைப்போலப் பிரான்சு தேசத்திலும் நிலம்படைத்த பெரும்பிரபுக்கள் குறுநில மன்னர்போல் அதிகம் செல்வாக்குடன் வாழ்ந்துவந்தனர். அரசனிடம் முழு ஆதிக்கமுமிருக்கவில்லை. சில காலங்களில் அரசனுக்கெதிரே போருக்கும் எழும்பினர். ஆனால் நாளடைவில் பிரான்சிய மன்னர்கள் தமது செல்வாக்கைப் பெருக்கியதனால் குறுநில மன்னரின் அதிகாரம் வீழ்ச்சியுற்றது. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு இடை இடையே படையெடுத்துச்சென்ற ஆங்கிலேயர் அந்நூற்றாண்டின் இறுதியில் துரத்தப்பட்டனர். பின்பு குறுநில மன்னர்களின் பலத்தையுங் குன்றச் செய்து நாடு முழுவதையும் அரசர்கள் ஆளத்தொடங்கியபின் பிரான்சு ஒரு இராச்சியமாக எழுச்சிபெற்றது. 1494ல் எட்டாவது சாள்ஸ் இத்தாலிமீது படையெடுத்தபடியால் அவ்வரசனுக்கும் ஸ்பானியாவுக்குமிடையில் போர் உண்டானது. பதினாறும், பதினேழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய விவாதங்கள் பிரான்சையுந் தாக்கின. கல்வினுடைய கொள்கைகள் பிரான்சு தேசத்தில் பிரதானமாகத் தெற்கு மேற்குப்பகுதிகளில் பரவத்தொடங்கின. அடக்குமுறைச் சட்டங்களின்மூலம் சமயக்கிளர்ச்சி தடைசெய்யப்பட்டும் புரட்டஸ்தாந்து சமயத்தை அனேகர் தழுவினர். அந்நாட்டிற் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவியவர்கள் "ஹியூஜனட்ஸ்" என்றழைக்கப்பட்டனர். நகரங்களிலுள்ள தொழிலாளிகளும், வர்த்தகர்களும், பிரபுக்களும் இம்மதத்திற் சேர்ந்திருந்தார்கள். பலசமயச் சண்டைகள் கிளம்பின. இங்கிலாந்தை ஆண்ட **எலிசபேத் ராணியும்** புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு உதவியளித்தார். அவர்கள் ஜேர்மனி, சுவிச்சலாந்து முதலிய நாடுகளிலிருந்து உதவிபெற்றனர். கத்தோலிக்க சமயத்தவர்கள் ஸ்பானியாவின் உதவியைப் பெற்றனர். 1570ல் எழுதிய சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் எல்லா மக்களுக்கும் அவர்கள் மனநம்பிக்கையின்படி ஒழுகிக்கொள்ளவும், வணக்கஞ்செய்யவும் சுதந்திரமளிக்கப்பட்டது. சர்வகலாசாலைகளிலும், அரசாங்க சேவையிலும் இருமதத்தினருக்கும் சம உரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஆயிரத்து எழுநூற்றுக்கும் ஆயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டுக்குமிடையில் ஒரு நெருக்கடியான காலமேற்பட்டது. பாரிஸ் நகரத்தில் 10000 "ஹியூஜனட்ஸ்" வரையில் கொலைசெய்யப்பட்டனர். இக்காலத்தில் தப்பி ஓடிய நவார் நாட்டு ஹென்றி ஹியூஜனட்ஸின் தலைவனானான். முடிவில் சிங்காசனத்தைக் கைப்பற்றினான். அரசுரிமையை அவன் ஏற்றுக்கொள்வதற்குக் கத்தோலிக்கனாக வரவேண்டியிருந்தும் அவன் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு விடுதலையளித்தான். அதன் பயனாக ஒரு நூற்றாண்டுக்கு அவர்கள் அந்தச் சலுகையை அனுபவித்தனர்.



**வினாக்கள்**

1. மத்தியகாலப் பிற்பகுதியில் எந்தெந்த நாடுகளிற் தேசிய உணர்ச்சி உண்டானது?
2. எந்த நாடுகளில் 19ம் நூற்றாண்டிற் தேசிய உணர்ச்சி உண்டானது?
8. இங்கிலாந்தின் எழுச்சிக்குரிய காரணங்களை ஆராய்க.
4. ஸ்பானியா பெரிய இராச்சியமாகத் தோன்றுவதற்குரிய ஏதுக்கள் யாவை?

RangaRakes Tamilnavarasam.com

5. ஐந்தாம் சாள்ஸ் மன்னனைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக?

6. ஸ்பானியாவின் எழுச்சிக்குரிய காரணங்களையும் அதன் வீழ்ச்சிக்குரிய காரணங்களையும் ஆராய்க.

7. பிரான்சிய மக்களிடையே எப்போ தேசிய உணர்ச்சி உண்டானது? பிரான்சு தேசத்தின் எழுச்சிக்குரிய காரணங்கள் யாவை?

# நாலாம் அத்தியாயம்

## முப்பதாண்டு யுத்தம்

முப்பதாண்டு யுத்தத்தின் காரணங்களை விளங்கிக்கொள்வதற்கு முன் "ஒக்ஸ்பேக்" சமாதான உடன்படிக்கை (1555) யின் அம்சங்களை ஆராய்தல் வேண்டும்.

புரட்டஸ்தாந்து மதப்புரட்சி பல சமய விவாதங்களை ஐரோப்பாவில் உண்டாக்கிவிட்டனவென்று முதலிரு அத்தியாயங்களிலும் படித்திருக்கின்றோம். அவ்விவாதங்களை ஒருவாறு தீர்ப்பதற்கு 1555ல் "ஒக்ஸ்பேக்" என்றவிடத்திற் கூட்டப்பெற்ற பாராளுமன்றம் ஒரு சமாதான ஒழுங்கை ஏற்படுத்தியது. முப்பதாண்டு யுத்தத்தின் காரணங்களை விளங்கிக்கொள்வதற்கு அதன் அம்சங்களை முதலில் ஆராய்வது அவசியமாகும். 300 சமஸ்தானங்களைக் கொண்டுள்ள ஜேர்மனியில் ஒரே சமயத்தை நிலைநாட்ட முடியாமையால் ஒவ்வொரு சமஸ்தானத்துக்கும் அங்குள்ள மக்களின் மார்க்க விஷயங்களின் பொறுப்பு விடப்பட்டது. அடுத்தபடியாக ஜேர்மனியில் இரு சமயங்கள்தான் அங்கீகரிக்கப்பட்டன அவை கத்தோலிக்க சமயமும் லூதரின் மார்க்கமுமாம் இதனால் விளையக்கூடிய அபாயம் அப்பொழுது தோன்றவில்லை. இதன்படி கல்வினின் மதத்தினருக்கு ஜேர்மனியிலிடமேயில்லை. அது ஜேர்மனியின் பலபாகங்களிற் பரவியிருந்ததுமல்லாது லூதரின் மார்க்கத்திலும் பார்க்கக் கூடிய ஆதரவைப் பெற்றிருந்தது.

ஆனால் 1555ம் ஆண்டுக்கும் 1618ம் ஆண்டுக்குமிடையிலுள்ள காலத்தில் ஜேர்மனியின் சமயநிலை மாறுதலடைந்தது. ஆரம்பத்தில் லூதரின் கொள்கைகள் சுலபமாகவும் ஏற்கக்கூடியனவாகவுமிருந்தபோதிலும் அவரின் மரணத்தின்பின் அவரைப் பின்பற்றியவர்கள் தேவையற்ற சமய விவாதங்களையுண்டாக்கி விட்டனர். அச்சமயத்தைத் தழுவிய சமஸ்தானங்கள் சிலவற்றுள்

RangaRakes Tamilnavarasam.com

மார்க்கசம்பந்தமான நிஷ்டூரங்கள் காணப்பட்டன, "ஒக்ஸ்பேக்" சமாதான ஒழுங்கின் பிரகாரம் சமய விஷயங்கள் ஒவ்வொரு சமஸ்தானங்களின் பொறுப்பிலும் விடப்பட்டிருந்தமையால், சிலவற்றுள் கொள்கைகள் சம்பந்தமாகவோ அல்லது வழிபாட்டுமுறை அளவிலேயோ மக்கள் சுயாதீனத்தைப் பெறவில்லை. அப்போதிருந்த நிலைபரத்தின்படி லூதரின் இயக்கத்தில் மாத்திரம் புரட்டஸ்தாந்துமதமே தங்கியிருந்திருந்தால் அம்மதத்தின் நிலை குன்றிப்போகக்கூடும். ஆனால் கல்வினுடைய கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் அதிக ஆர்வமும் விசுவாசமும் கொண்டிருந்ததல்லாது அந்நேரத்தில் அம்மதம் மக்களாலேற்றுக்கொள்ளக் கூடியதாகவுங் காணப்பட்டது. இருசமயத் தலைவர்களினாதரவாளர்களுக்கிடையில் பெரும் பகைமை காணப்பட்டது. ஜேர்மனியிலுள்ள பிரதான நாடுகளாகிய சாக்ஸனியும் பிரான்டன் பேர்க்கும் லூதரின் கொள்கைகளைப் பின்பற்றியிருந்தும் பிரான்டன் பேர்க்குச் சிறிது காலத்துக்குள் கல்வினின் ஆதரவாளர்களோடு சேர்ந்து கல்வினின் மதத்துக்கு, பலற்றினேற்றுக்கு அரசனும், இங்கிலாந்து அரசனான முதலாம் ஜேம்ஸின் மருமகனுமான பிரடெரிக்கு மனமுவந்த ஆதரவை அளித்தான். இனி ஜேர்மனியிலுள்ள அரசியல் நிலைக்குத் தகுந்தவாறே "ஒக்ஸ் பேர்க்" சமாதான உடன்படிக்கையும் எழுதப்பட்டதென்பது கவனிக்கவேண்டியதாகும். அதுவுமல்லாமல் அவ்வுடன்படிக்கையில் வருங்காலத்தில் வரக்கூடிய மாற்றங்களுக்கும் இடங்கொடுக்கவில்லை. அவ்வுடன்படிக்கை ஒரு தேசியமயமானதல்லாது தனித்தனி சமஸ்தானமளவில் ஒழுங்குகளை ஏற்படுத்திய காரணத்தினால் அது ஒரு நிரந்தரமான தீர்ப்பு என்று கருத இடமில்லை.

புரட்டஸ்தாந்து மதத்திற் பிளவுண்டாகி ஆர்வம் குறைந்திருக்கும் நேரத்தில் சமய எதிர்ப்புக்கட்சி கத்தோலிக்க சமயத்துக்குப் புத்துயிரளித்தது. ட்றென்ட்



சபை, லத்தீன் மொழிபெயர்ப்பிலுள்ள வேதத்தையே, மார்க்கவிஷயங்களுக்கு அதிகாரமான நூலென்ற தீர்ப்புக் கத்தோலிக்க சமயத்துக்கு வரம்பைக்கட்டிவிட்டது. யேசுசபையினர் நாட்டின் பலவிடங்களிலும் போதனை செய்து வந்ததுமன்றி ஜேர்மனியிலுள்ள கத்தோலிக்க நாடுகளில் வலோற்காரமான பேருணர்ச்சியையும் புகுத்தி விட்டனர். சமய எதிர்ப்புரட்சிக்கு அதிகமூக்கமளித்தவர் ஜேர்மனியின் இளவரசனான பவேரியா நாட்டு மாக்ஸ்மிலியனாகும். இவனுடைய நாட்டிலிருந்து புரட்டஸ்தாந்து நாட்டினர் துரத்தப்பட்டனர். சமய விஷயத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த நாடுகள் யாவும் திரும்பவும் கத்தோலிக்க திருச்சபையில் விசுவாசம் வைத்திருந்தன. புரட்டஸ்தாந்து மதத்துக்குமாறி உலக வாழ்க்கையிலீடுபட்ட கோலோனின் ஆக்ஸ் பிசப் தனது பதவியினின்று உடனே நீக்கப்பட்டார். கத்தோலிக்க சமயம் இவ்வண்ணமாகப் பயமுறுத்தும் நிலையைக் கையாண்டமையால் 1608ல் லூதரின் மார்க்கத்தினர் சபை, ஐக்கிய சபையை ஸ்தாபித்தனர். பலத்தினேற், ஹெஸ், படேன், உவேட்டன்பேர்க் அதன் அங்கத்தவர்களாய்ச் சேர்ந்தனர். அடுத்த ஆண்டில் இதை எதிர்த்துக் கத்தோலிக்க சபையொன்று ரோம இராச்சிய சக்கரவர்த்தியினனுமதியுடன் பவேரியாவின் அரசனான மாக்ஸ்மிலியனால் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபை புரட்டஸ்தாந்து மதத்தை முற்றாக நசுக்கிவிடவேண்டுமென்று எண்ணங்கொண்டது. ஒரு சமயச்சண்டையேற்படுவதற்குப் பல அறிகுறிகள் தோன்றின. சமய விவாதங்களைவிட இவ்யுத்தத்திற்கு அரசியலோடு சம்பந்தப்பட்ட காரணங்களுமுள. சக்கராதிபத்தியத்திலோர் தகுந்த அரசாங்கத்தை நிறுவுவதற்கு 'ஹபீஸ் பேர்க்' வம்சத்தரசர்கள் செய்த பல முயற்சிகளும் பயனற்றதாய்ப்போயின "ஒக்ஸ் பேர்க்" உடன்படிக்கையே அதற்குச் சான்றாகும். அரசனின் கையில் முழு அதிகாரத்தையும் அடக்கும் நோக்கமக்காலத்திலெல்லாநாடுகளிலுமிருந்த பொழுதும் ஜேர்மனி முழுவதுமவ்வண்

RangaRakes Tamilnavarasam.com

ணம் காணப்படாமைக்கு என்னகாரணமென்றதை ஆராயவேண்டும். "ஹபீஸ் பேர்க்" வம்சத்தைச் சேர்ந்த சக்கராதிபதிகள் திறமைவாய்ந்தவர்களாகக் காணப்படவில்லை. உதாரணமாக 1576ல் சக்கிராதிபத்திய சிம்மாசனமேறிய இரண்டாம் றடோலப் யேசுசபையினரின் சீஷனும், கத்தோலிக்க சமயத்துக்கு ஆதரவாளனாயுமிருந்த பொழுதிலும், மன அசௌக்கியத்தினாலதிகம் சிரத்தையெடுக்க முடியவில்லை. ஹப்ஸ் பேர்க் வம்சத்தவர்களின் இராச்சியம் பரந்திருந்த பொழுதிலும் ஹப்ஸ் பேர்க் வம்சத்துக்குரிமையுள்ள ஸ்பானிய அரசனுடைய உதவியிருந்தபொழுதிலும் ஜேர்மனி, ஹங்கேரி, பொஹீமியாவினுதவியைப் பெறக்கூடியதாக விருந்தபொழுதிலும் சக்கராதிபதி ஜேர்மனியிற் காணப்பட்ட எதிர்ப்பையடக்கிச் சிறந்ததொரு அரசாங்கத்தை அமைக்கமுடியாமற் போயிற்று. இவ்வண்ணமாக ஆரம்பத்தில் அரசியல் சமயசம்பந்தமான விஷயங்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்துக்குக் காரணமாயிருந்ததைக் கவனிக்கலாம். காலஞ்செல்ல இரண்டும் பிரிந்துகொண்டமையால் ஈற்றிலடையவேண்டிய வெற்றி தடைப்பட்டது, இனிக் கத்தோலிக்க நாடுகள் சக்கராதிபதிமீது பெருமைகொண்டுமிருந்தன.

1617ல் பொஹீமியாவுக்கு அரசனாயிருந்த இரண்டாம் பேடினார்ந்தின் கையில் ஹப்ஸ் பேர்க் வம்சத்தவர்களின் இராச்சிய பரிபாலனத் திட்டம் தங்கியிருந்தது. பேர்டினார்ந்து ஆர்வங்கொண்ட கத்தோலிக்கனும் யேசுசபையினரின் போதனைகளைப் பின்பற்றியவனுமாகையால் ஹப்ஸ் பேர்க் இராச்சியங்களில் வசதியென்றால் சாம்ராச்சிய நாடுகளில் புரட்டஸ்தாந்து மதத்தை நசுக்கிவிடவேண்டுமென்று பிடிவாதங்கொண்டிருந்தான். அக்காலத்தில் ஹங்கேரியிற் கல்வினின் மதமும் அவுஸ்திரியாவில் லூதரின் மதமும் பொஹீமியாவில் ஐந்தில்நான்கு பங்கு லூதரின் மதமும் பரவியிருந்தன. 1609ல் பொஹீமிய மக்கள் பெற்றுள்ள அரசசட்ட சாதனத்தின் பிர



காரம் சமயசுயாதீனத்தைப் பெற்றிருந்தனர். அந்தச் சாதனத்தை ஒழிக்கவும் புரட்டஸ்தாந்து மதத்தை அழிக்கவும் எடுத்த முயற்சியே பிறேக் என்ற இடத்தில் நடந்த சம்பவத்துக்கும் ஜேர்மனியில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பத்திற்கும் உடனடியான காரணமாயிருந்தன. பொஹீமியாவிலுள்ளவர்கள் புரட்டஸ்தாந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டபொழுது எதிர்ப்புக்காட்டினர். இச்செய்கை சக்கராதிபதி வாக்குப்பண்ணியதற்கு மாறானதாகும். 1618ல் பொஹீமியாவிலுள்ள புரட்டஸ்தாந்து மதத்தினர் ஆயுதபாணிகளாய் அவுஸ்திரிய சக்கரவர்த்தியை எதிர்க்கத் தீர்மானஞ் செய்தனர். அவர்களிற் சிலர் பிறேக் அரண்மனையிற் புகுந்து சக்கராதிபதியின் பிரதிநிதிகள் சிலரைச் ஜன்னல் வழியாக வெளியே தூக்கியெறிந்தனர். கலகக்காரர் தற்காலியமான அரசாங்கமொன்றை நிறுவ 1619ல் பலற்றினேற் அரசனும், இங்கிலாந்தின் அரசனாகிய முதலாம் யேம்ஸின் மருமகனுமாகிய ஐந்தாம் பிரடெரிக்கை அரசனாகத் தெரிந்தனர். பொஹீமியாவின் அரசை ஏற்றது பிரடெரிக்கின் தவறெனலாம். ஜேர்மனியிலுள்ள மார்க்க விவாதத்தை அது சீர்கெடச் செய்தது. இதனால் புரட்டஸ்தாந்து மதத்தினர் சாம்ராச்சியத்தின் பகைவர்களாகவும் அதிகாரிகளுக்கு மாறான கலகக்காரரெனவும் கருதப்பட்டனர். பொஹீமியாவிலேற்பட்ட புரட்சியின் பலனால் உண்டாகிய முப்பதாண்டு யுத்தத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பொஹீமியா யுத்தம் (1619—1623), தேனியர் யுத்தம் (1625—1629), சுவீடனோடு சம்பந்தப்பட்ட யுத்தம் (1630—1635), பிரான்சிய அவுஸ்திரிய ஸ்பானிய யுத்தம் (1635—1648) என்பனவாம்.

பொஹீமியாவின் அரசையேற்ற பலற்றினேற் அரசனான பிரடெரிக் ஜேர்மனியிற் போதிய ஆதரவைப் பெறவில்லை. டில்லியின் தலைமையில் சாம்ராச்சியப்படை 1620ல் பொஹீமியாவுட் புகுந்து பிரடெரிக்கைத் தோற்கடித்தது. அவன் பொஹீமியாவை இழந்ததோடு தமது



RangaRakes
Tamilnavarasam.com

சொந்த நாடுகளையுமிழக்க நேர்ந்ததினால் ஒல்லாந்துக்கு ஓடிப்போய்த் தமது மாமனாகிய இங்கிலாந்து அரசனின் உதவியைக் கோரினான். ஆனால் இங்கிலாந்திலிருந்து ஓர் உதவியையும் அவன் பெறவில்லை. பொஹீமியாவில் அனேக கொடூரமான செயல்கள் நடைபெற்றன. சக்கரவர்த்தியின் எதிரிகள் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். பரந்த நிலங்கள் பறிமுதலாயின. கடுங்குற்றங்கள் விதிக்கப்பட்டன; அனேகர் நாட்டிலிருந்து துரத்தப்பட்டனர். முப்பதாண்டுகளாக நடைபெற்ற இவ்யுத்தத்தில் அந்நாட்டிலுள்ள நான்கு இலட்ஷம் மக்களில் மூன்று இலட்ஷம் வரையிலிறந்தனர். நாடு கத்தோலிக்க நாடாக மாறியது பல வெற்றிகளைப்பெற்று விளங்கிய அந்தச் சாம்ராச்சியப் படைவீரர் பலற்றினேற்றைக் கைப்பற்றியதினால் ஜேர்மனியின் வடக்கிலுள்ள புரட்டஸ்தாந்து நாடுகளுக்குப் பயங்கரத்தையுண்டுபண்ணின. ஆகையாற் புரட்டஸ்தாந்து நாடுகள் தங்களுடைய சுதந்திரத்தையும், சலாக்கியங்களையும் பாதுகாக்கில் ஒற்றுமையான எதிர்ப்பைக் காட்டவேண்டியது வெளிப்படை.

டென்மார்க்குக்கும், ஜேர்மனிக்குச் சேர்ந்த **ஹொல்ஸ்ரீனுக்கும்,** அரசனே புரட்டஸ்தாந்து சமயத்தவர்களுக்காக உதவிபுரிய முற்பட்டான். மான்ஸ் பீல்ட் என்ற சேனைத்தலைவனையும் பெற்றார்கள். ஆனால் கத்தோலிக்க சேனைத்தலைவனாகிய, ரில்லி என்பவனிற் சிறந்த உவலன்ஸ்ரீன் என்பவனுடைய எதிர்ப்பினால் புரட்டஸ்தாந்து சமயத்தவர்களின் முயற்சிகள் பயன் பெறவில்லை. மான்ஸ் பீல்ட் சண்டையிலிறந்தான். டென்மார்க்கரசன் தோல்வியுற்றான். உவலன்ஸ்ரீன் பெற்ற வெற்றிகளால் சக்கராதிபதிக்கு ஜேர்மனியில் அதிகாரங் கூடியது. **ஷெலெஸ்விக்கும்** ஹொல்ஸ்ரீனும் அவனாற் கைப்பற்றப்பட்டன. கத்தோலிக்க சமயத்தின் வெற்றியும் சாம்ராச்சிய அவாவும் பூர்த்தியாயின. ஆனால் பவேரியாவுக்கு அரசனான மக்ஸ் மிலியன் உவலன்ஸ்ரீன் மீது பொறாமை கொண்டான். 1629ல் சக்கராதிபதி



விடுத்த ஆஞ்ஞையின் பிரகாரம் 1552 தொடக்கம் பொதுமக்களின் கையிலடைந்த கோயிலாதனங்கள் திரும்பவும் ஆலயத்துக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. இதனால் புரட்டஸ்தாந்து சமயத்தவர்கள் அதிகமானவற்றையிழக்க நேர்ந்தது. ஆனால், உவலன்ஸ்ரீன் சக்கராதிபதியின் ஆஞ்ஞைக்கு இரகசியமான எதிர்ப்பைக் காட்டியமையால் கத்தோலிக்க சபையின் புத்திமதியின்படி உவலன்ஸ்ரீன் பதவியினின்று நீக்கப்பட்டான்.

சக்கராதிபதி ஒருபெரிய சேனைத்தலைவனையிழந்தான். அதேசமயத்தில் பெரும் வீரனும் சுவீடனுக்கு அரசனுமான **ஹஸ்டோபஸ்** அடோல்பஸ் சண்டையிலீடுபட்டான். 1611ல் சிம்மாசனமேறிய ஹஸ்டோபஸ் அடோல்பஸ் ஆர்வமும் சமய அபிமானமுமுள்ளவனாகையால் ஜேர்மனியில் உள்ள புரட்டஸ்தாந்து மதத்தினர் படும் அல்லல்களைக் கண்ணுற்று அவர்களுக்கு ஆதரவு அளிக்கத் தீர்மானம் செய்தான். சமய அபிமானத்தை விட வேறுசில காரணங்கள் அவன் ஜேர்மனியில் நடந்த யுத்தத்தில் பங்குபெறத் தூண்டின. சாம்ராச்சியப் போர்வீரர்கள் தன்நாட்டின் எல்லைப்புறத்தில் வெற்றிகரமாய் உலாவுவதைச் சகிக்காது அப்பகுதிகளுக்குத் தன் அதிகாரத்தை நாட்டவேண்டுமென்று எண்ணங்கொண்டான். சுவீடன் அரசுக்குக் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த போலாந்து அரசவமிசத்தினருக்கும் உரிமையுண்டு. ஜேர்மனியில் கத்தோலிக்க சமயம் பெறும் வெற்றி அவ்வரசுரிமையைப் பலப்படுத்திக்கொள்ளும். ஆகையால் மார்க்கம், வர்த்தகம், அரசுரிமைப்பற்று ஆகிய இவைகள் ஜேர்மனியின் விஷயங்களிற் தலையிட சுவீடன் மன்னனைத் தூண்டின. ஆனாலும் ஏனைய காரணங்களிலும் பார்க்கச் சமயப்பற்றே முக்கியமானதாகும். தேசிய உணர்ச்சியும் சமயப்பற்றும் நிரம்பிய சேனைப்படையுடன் புறப்பட்டான். அரசனும் சிறந்த போர்வீரனாவான். அவனுடைய சைனியங்கள் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் சண்டைசெய்

RangaRakes Tamilnavarasam.com

யக்கூடிய பயிற்சியைப் பெற்றிருந்தன. முதல் நடந்த சண்டையில் அவன் ரில்லியைத் தோற்கடித்தான். வியன்னா சரணாகதியடையும் நிலையில் இருந்தது. அடுத்த சண்டையில் ரில்லி காயமடைந்து இறந்தான். பவேரியா அடொல்பஸ் கையில் சிக்கியது. புரட்டஸ்தாந்து சமய வெற்றிக்கு அறிகுறிகள் தோன்றின. சக்கராதிபதி பல சலுகைகள் அளித்து மீண்டும் உவலன்ஸ்ரீனை சேனைக்குத் தலைவனாக்கினான். பின்பு நடந்த சண்டையில் உவலன்ஸ்ரீன் தோற்கடிக்கப்பெற்றான். ஆனால் அடொல்பஸ் நெருக்கடியாய் நடந்த சண்டையில் இறந்தமையால் புரட்டஸ்தாந்து சமயம் பூரண வெற்றியைப் பெறமுடியாமற் போயிற்று. உவலன்ஸ்ரீன் தனது அதிகாரத்தைக் காட்ட ஆரம்பித்தான். சக்கரவர்த்தி கற்பித்தவைகளை அலட்சியம் செய்து பிரான்சோடும் சுவீடனோடும் சிநேகங் கொண்டான். ஜேர்மனிக்குத் தானே அரசனாகலாமென்ற அவாவும் அவன் மனத்தைத் தூண்டியது. சக்கரவர்த்தி சதியாலோசனை செய்து அவனைக் கொலைசெய்வித்தான்.

ஜேர்மனியில் அமைதி நிலவுவதற்கு இன்னும் பதினான்கு வருடங்களுக்குச் சண்டைசெய்ய வேண்டியதாயிற்று. புரட்டஸ்தாந்து சமயத்துக்கு ஆதரவாளரை ஜேர்மனியின் எல்லைப்புறங்களுக்கப்பாலேயே தேட வேண்டியதாயிற்று. பிரான்சு தேசத்து மந்திரியும் கத்தோலிக்க கார்டினலுமான ரிச்சிலியு தான் உதவியளிக்க ஆயத்தமாயிருந்தார். உவலன்ஸ்ரீனின் வீழ்ச்சிக்கும், பணஉதவியினால் அடொல்பஸை வெற்றிபெறச் செய்வதற்கும் அவரே காரணமாயிருந்தார். புரட்டஸ்தாந்து சமயத்தவர்களுக்கும் வேண்டிய பண உதவியையுஞ் செய்து படைத்துணையும் புரிந்து அவர்கள் வெற்றி பெறத்தக்கதாக உதவியளித்தார். 1635ல் பிரான்சு ஸ்பானியாமீது போருக்கெழுந்தது. ரிச்சிலியு தனது யுத்தியினால் ஸ்பானியாவிலே கலகத்தையுண்டு பண்ணிவிட்டான். சமாதானத்தை இரு பகுதியாரும்



விரும்பியிருந்தும், பூரண வெற்றியைப் பெறுவதையே நோக்கமாயிருந்தனர். ஈற்றில் பிரான்சே அவ்வெற்றியைப்பெற்றது. 1642ல் ரிச்சிலியு இறந்தவுடன், அவரைப்போற்றிறமை வாய்ந்த மசாரின் என்பவர் மந்திரியானார். பேடினந்தின்பின் ஆண்ட மூன்றாம் பேடினந்து சமாதானத்தை ஏற்படுத்த விரும்பி 1648ல் **உவெஸ்ற்பேலியா** என்ற உடன்படிக்கை எழுதப்பட்டது. மதபுரட்சிக்காலம் இவ்வுடன்படிக்கையினால் முடிவுபெற்றதெனலாம். ஹஸ்டோபஸ், ரிச்சிலியு, மசாரின் என்பவர்கள் புரட்டஸ்தாந்துமதம் அழியாமற் பாதுகாத்ததல்லாது சமய எதிர்ப்புரட்சி செய்த முயற்சிகளை அவர்களாற் சிதைக்க முடியவில்லை. ஜேர்மனியின் தெற்கும் மேற்கும் கத்தோலிக்க சமயத்தவர்களாயேயிருந்தனர். ஆனால் வடக்கில் புரட்டஸ்தாந்துமதமே நிலைபெற்றது. கல்வினின் மதமும், லூதரின் மதமும் ஒரே சலாக்கியங்களைப் பெற்றன. மக்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டமுறையிற் சுதந்திரங் கிடைக்கவில்லை. ஆனால் நாடே அச்சுதந்திரத்தைப் பெற்றது. அச்சமாதான உடன்படிக்கை மார்க்க சம்பந்தமான சுதந்திரத்தை அளித்தது. ஜேர்மனியில் 343 சமஸ்தானங்கள் காணப்பட்டன. சுவிச்சலாந்தும் ஐக்கிய நெதலாந்தும் சக்கராதிபதியின் ஆதிக்கத்தினின்று விலகி சுதந்திர நாடுகளாயின. மேட்ஸ், ரூல், வேர்டன், அல்சேசு என்பன பிரான்சின் ஆட்சியின் கீழுட்பட்டன.

நீண்டயுத்தத்தினால் ஜேர்மனி பல நட்டங்களையடைந்தது.

### வினாக்கள்

1. "ஒக்ஸ்போர்க்" உடன்படிக்கையின் பிரதான அம்சங்களை ஆராய்க.
2. ஜேர்மனியிலுள்ள சமஸ்தானங்களின் சமயநிலையைப்பற்றி ஆராய்க.
3. புரட்டஸ்தாந்து மதத்துக்குப் பாதுகாப்பளித்த அரசர்கள் யாவர்? அம்மதத்திற் பிளவு உண்டானதற்குக் காரணமென்ன?
4. யேசு சபை செய்த தொண்டுகள் என்ன?

RangaRakes Tamilnavarasam.com

5. முப்பதாண்டு யுத்தத்தின் காரணங்களை விபரித்து எழுதுக?

6. முப்பதாண்டு யுத்தத்திற் பிரான்சு பங்குபற்றியதற்குக் காரணமென்ன?

7. முப்பதாண்டு யுத்தத்தின் பின் ஐரோப்பாவிலிருந்த சமய நிலையைப் பற்றி ஆராய்க

# ஐந்தாம் அத்தியாயம்

## இங்கிலாந்து (1485-1688)

பனைந்தாம் நூற்றாண்டில் அதிகாரமும் செல்வாக்குமுள்ள பிரபுக்களிடையே அடிக்கடி நடந்த உள்நாட்டுக் குளப்பங்களால் இங்கிலாந்து தேசம் கலக்கமுற்ற நிலையிலிருந்தது. இடையறா உள்நாட்டுக் குளப்பங்களாற் களைப்புற்ற மக்கள் நாட்டில் சமாதானம் நிலவுவதற்கு ஒரு திறமை வாய்ந்த அரசன் தேவையென்றும் அவனை ஆதரிப்பதற்கும் சித்தமானார்கள். அரசன் மனத்திடமும் வலிமையுமுடையவனாயிருந்தால் நாட்டில் ஒருவிதமான குறையுமில்லையென்றும், அவன் திறமையற்றவனாயின் ஒழுங்கீனம் காணப்படுமென்றும் எண்ணங்கொண்டிருக்கும் வேளையில், தியூடர் வம்சத்தைச் சேர்ந்த ஏழாவது ஹென்றி சிங்காசனமேறினான். இவ்வரசன் 1485ல் நாட்டில் அமைதியையுண்டாக்கி, முடியாட்சியை வலியுறச் செய்யவேண்டுமென உறுதிகொண்டான். அவ்வாறு நிறைவேற்றுவதற்கு அவன்கையாண்ட முறைகள் மிகவும் சாதுரியமானவையும், சிறந்தனவுமாம். அக்காலத்தில் நடுத்தர வகுப்பென்ற புதிய வகுப்பினர், கம்பளி, சீலை முதலிய பொருட்களைக்கொண்டு வியாபாரஞ் செய்து செல்வமுடையவர்களாகி, மேன்நிலையையடைந்திருந்தனர். ஹென்றி இம்மத்திய வகுப்பினரைக் கொண்ட ஒரு சபையின் உதவியைக் கொண்டு ஆண்டான். நீதிவழங்கும் பொருட்டும் சட்டத்தை மீறும் பிரபுக்களை அடக்கும் பொருட்டும் நீதிஸ்தலங்களையும் அரசசபைகளையும் ஸ்தாபித்து அவைகளுக்கேற்ற உத்தியோகஸ்தர்களையும் நியமித்தான். மக்கள் சட்டத்துக்கடங்கி நடக்கத்தக்கதாகவும் சமாதானத்தை நாட்டில் நிலவச்செய்து வைத்ததுமே அவ்வரசனின் முக்கிய வேலையென்று எண்ணுவது தவறாகும். நாட்டின் பணநிலையைத் திருத்தியமைத்ததும் பிறநாட்டு விஷயங்களைச் சாமர்த்தியத்தோடு நடத்திய முறைகளுமே அரசனு

RangaRakes Tamilnavarasam.com

டைய நிலையை ஸ்திரப்படுத்தின. கலகங்களை உண்டாக்கியவர்கள், இராசதுரோகிகள், முதலியோருடைய நிலங்களை அபகரித்ததினால் அவைகள் முடிக்குரிய நிலங்களாகின. அதனால் ஹென்றி சிங்காசனமேறிய முதலாவது வருடத்திலேயே வருமானம் நூற்றைம்பது வீதம் கூடியது. நீதிஸ்தலங்கள் விதித்த பெருந்தொகையான குற்றப்பணம் நாட்டின் வருமானத்தோடு சேர்க்கப்பட்டது. ஹென்றி சிக்கனமான வாழ்க்கையை நடத்தியமையால் ஏராளமான பணத்தைச் சேகரிக்கக் கூடியதாக விருந்தது. பணவிஷயங்களிற் கவனமெடுத்தமையினால் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்டாமலும் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறாது சட்டங்களை உண்டாக்கியும் அவன் அரசாளத்தக்கதாக விருந்தது. இனி, அரக்கனுக்கு அரசியாயிருந்த கதரீனை தனது மகன் ஆர்தருக்கு விவாகஞ் செய்தும், ஆர்தர் இறந்தபின் அவ்வரசியைத் தனது இரண்டாம் மகனாகிய எட்டாம் ஹென்றிக்கு விவாகஞ் செய்து வைத்தமையினால் இங்கிலாந்துக்கும் ஸ்பானியாவுக்குமிடையில் ஐக்கியத்தையுண்டுபண்ணினான். ஸ்பானியாவோடு பூண்ட நட்பு பிரான்சு தேசத்தோடிருந்த பகைமைக்குத் தடையாயிருந்தது. ஸ்பானியாவின் அதிகாரத்தைக் குறைக்காமல் விட்டதால் எலிசபேத் ராணி காலத்தில் ஸ்பானிய மன்னன் பெரிய ஒரு கடற்படையை இங்கிலாந்தைக் கைப்பற்றுவதற்காக அனுப்பினான். இவ்வாறு சிலர் அபிப்பிராயப்பட்டனர். அது இங்கிலாந்தின் பிழையன்று. ஆனால், ஸ்பானியருடைய வலோர்க்காரத்தையடக்க அயலிலுள்ள பிரான்சு, அக்காலத்திற் பலமற்றதாயிருந்ததே காரணமென்று சொல்லவேண்டும். பிரான்சு ஸ்கொத்லாந்தோடு நட்புக்கொண்டிருந்தமையால் பகைமையாயிருந்த பிரான்சை அவர்களிலிருந்து பிரிப்பதற்காகக் ஹென்றியின் மூத்தமகளாகிய மாக்ரட்டை ஸ்கொத்லாந்து அரசனான நாலாம் யேம்சுக்கு விவாகம் செய்து வைத்தான் (1502) இதனால் இருதேசங்களும் ஒற்றுமைப்படுவதற்கு அத்திவாரமாயிருந்தமையினால் இரு நூற்றாண்டுகளின் பின் இரு தேசங்களும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவரப்பட்டன.



இங்கிலாந்து ஒரு தீவாகையால் அந்நியரின் படையெடுப்பைத் தடுப்பதற்கு ஒரு பலமுள்ள கடற்படை வேண்டுமென எண்ணினான். அமெரிக்காவுக்கும் இன்னும் மற்றும் இடங்களுக்கும் ஆங்கிலேயரின் கப்பல்கள் சென்றன. நெசவுத் தொழிலும், சீலை வியாபாரமும் விருத்தியடைந்தன. பதினாறாம் நூற்றாண்டில் கண்ணாடி கடதாசி செய்யும் தொழிலும் சுரங்கமறுக்கும் தொழிலும் பெருகின.

இவ்வாறு முடியாட்சியைப் பலமுறச் செய்தும் பெருந் தொகையான பணத்தைச் சேகரித்து விட்டும், அயல் நாட்டு அரசகுடும்பங்களின் ஐக்கியத்தை விவாகங்களின் மூலம் பலப்படுத்தியும் விட்டு, ஏழாவது ஹென்றி இறக்க அவனது மகனாகிய எட்டாவது ஹென்றி சிங்காசன மேறினான்.

ஹென்றி அழகும், கல்வியும், மனத்திடமும், சமய பக்தியும் நிரம்பிய சிறந்த மன்னனாக விளங்கினான். அவனில் நற்குணங்களும் தீயகுணங்களும் ஒருங்கே சேர்ந்து காணப்பட்டன. இவனுடைய சாதுரியமும் பின்வரும் விஷயங்களை முன்னறியும் சக்தியும் திறமை வாய்ந்த அரசியல் விற்பன்னர்களைத் தெரிந்தெடுக்க உதவியாயிருந்தன. ஆனால் தன்னுடைய நோக்கம் நிறைவேறியவுடன் அவர்களைப் பதவியினின்று நீக்கவோ அல்லது மரணதண்டனை விதிக்கவோ ஒரு விதமான மனஸ்தாபமுங் காட்டவில்லை. டியூடர் வமிசத்தவர்கள் எல்லோரையும் போலப் பெரும் செல்வாக்கை விரும்பினான். அவனுடைய வசீகரமான புன்முறுவலும் எவரோடும் சகவாசமாய் நடந்துகொள்ளும் குணமும் மக்களுடைய மனத்தைக் கவர்ந்தன. அவன் கொடூரமாகவும், இரக்கமற்ற முறையிலும் ஆண்டபோதிலும் மக்கள் அவனை வெறுத்திலர். அவன் ஒரு ஏகேச்



RangaRakes Tamilnavarasam.com

சாதிகாரியாக ஆண்டு பாராளுமன்றத்தையும் தன்னுடைய எண்ணத்துக்கு இசையத்தக்கதாக நடத்திவந்தான். ஐரோப்பிய விஷயங்களிற் தலையிடாமல் இங்கிலாந்து நன்மதிப்பைப் பெறக்கூடிய நிலையில் வைத்திருந்தான். பிரான்சுதேசம் வெனீசைக் கைப்பற்ற முயன்றபோது போப்பாண்டவர் தமக்குரிய இராச்சியங்களின் பாதுகாப்புக்காக ஸ்பானிய அரசனையும், மக்ஸ்மிலியனையும், ஐக்கியம் பூணச்செய்து பிரான்சை எதிர்க்கும்படி செய்தார். எட்டாம் ஹென்றியையும் அவ்வண்ணம் தூண்ட அவன் அதற்கு இசைந்து பிரான்சின்மீது போருக்கெழுந்தான். இப்போரில் ஹென்றியின் முயற்சிகள் அதிகம் பலனை அளிக்காமையால் அவன் இங்கிலாந்துக்குத் திரும்பினான். பிரான்சோடு யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது ஸ்கொத்லாந்து அரசன் படையெடுத்துத் தெற்கு நோக்கிச் சென்றான், புலோடின் என்ற சண்டையில் ஸ்கொத்லாந்து, அரசனையுமிழந்து தோல்வியுமுற்றது. ஹென்றி முதன்முதல் தெரிந்தெடுத்த மந்திரி ஊல்சி ஆகும். அவன் கத்தோலிக்க திருச்சபையில் கார்டினல் என்ற உயர்ந்த பதவியை வகித்திருந்தான். நடுத்தர வகுப்பில் உதித்த இவன் எட்டாம் ஹென்றியின் காலத்திற் சாமானிய பதவியிலிருந்து உயர்ந்த பதவியைப் பெற்று அரசாங்கத்திலும் ஆலயத்திலும் நன்மதிப்புடன் பதினாறு வருடகாலம் முதன்மையான ஆளாக விளங்கினான். ஊல்சியின் ஐசுவரியம் அளவுகடந்ததாக விருந்தது. அரசனிடம் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தான். அவனுடைய களைப்புறாச் சக்தியும், அவன் எடுத்துக்கொண்ட பெரும் வேலைகளும், அவைகளை அனுகூலத்துடன் செய்துமுடித்த திறமையும் எவரும் எதிர்பார்க்கக் கூடியனவல்ல. அரசன் அவனில் அளவுகடந்த நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருந்தான். அவன் கையாண்ட அரசியல் முறைகள் அரசனுக்கு நன்மை பயக்கத்தக்கனவாயும், அனுகூலமாயுமிருக்கும் வரை அவனுடைய பதவிக்குப் பழுதில்லாமலிருந்தது.



ஆனால் அவன் தன்னுடைய நிலையிலிருந்து விலகவேண்டிய சந்தர்ப்பம் வந்தவுடன் அவனுக்கு ஓர் ஆதரவுமில்லாமற் போனது. பிரபுக்கள் அவனுடைய கர்வத்தையும் இறுமாப்பையும் வெறுத்தனர். மத்திய வகுப்பினரும் அவனை விரும்பவில்லை. அக்காலத்திலிருந்த பல இலக்கிய நூல்களிலும் அவனுடைய குறைகள் விகடமான முறையில் எடுத்துக்காட்டப்பட்டன. போப்பாண்டவரின் அதிகாரத்தை நிலைநாட்டித் தேவாலயத்தின் குறைகளை நிவிர்த்தி செய்ததே அவன் தேவாலயத்துக்குச் செய்த சிறந்த சேவையாகும். அவன் கல்வியில் அதிக விருப்பமுடையவன். பாடசாலைகளையும், கல்லூரிகளையும் ஸ்தாபித்தும், சொந்த நாட்டிலுள்ள பண்டிதர்கள் அறிவாளிகளுக்கு வேண்டிய சன்மானங்களைச் செய்தும் அந்நிய நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களை வரவழைத்தும் அவர்களை ஆங்கிலக் கல்லூரிகளிற் போதனாசிரியர்களாகவும் நியமித்தான்.

சமாதானத்தை நிலைநாட்டும் நோக்கமே அந்நிய நாட்டு விஷயங்களைக் கையாண்ட முறைகளினடிப்படையாகும். இங்கிலாந்து தனித்து நின்ற நிலையினின்று விலகி ஐரோப்பாவின் அரசியற் பகுதியில் முதன்மை பெற்ற நாடாக விளங்கியது. வல்லரசுகளின் "சமநிலை அதிகாரம்" என்ற கொள்கையின் முக்கியத்துவத்தை முதன்முதல் அறிந்த அரசியல் நிபுணன் ஊல்சியேயாவன்.

இங்கிலாந்தின் சமயப்புரட்சி யுண்டாவதற்கு ஏதுவாய் ஒரு பலத்த பிரச்சினை தோன்றியது. சில காலமாக தனது தமயனாகிய ஆர்தரின் மனைவியை மணஞ்செய்தது முறையோ என்பதுபற்றி ஹென்றியின் மனதில் சந்தேகம் உண்டானது. ஆர்தர் இறந்ததின்பின் போப்பாண்டவரின் அனுமதியுடன் இவ்விவாகம் நடந்தேறியது. கதரின் ஹென்றியிலும் பார்க்க ஆறு வயது கூடியவளாயும், வசீகரமில்லாதவளாயும் வயதேற தேக சௌக்கியத்தை யிழந்தவளாயுமிருந்தமையால் இவ்வி

RangaRakes Tamilnavarasam.com

வாகம் தகுந்ததாகக் காணப்படவில்லை. விவாகஞ்செய்து
பதினெட்டு வருஷ காலத்திற்குட் பிறந்த பிள்ளைகளில்
மேரியென்ற பெண்பிள்ளையை விட ஏனைய பிள்ளைகள்
இறந்து விட்டனர். தனக்குப்பின் அரசாள ஓர் ஆண்
மகவு இல்லையே என்று கவலைகொண்ட அரசன்
ஊல்சியோடு ஆலோசிக்கலானான். இதற்கிடையில்
இராச சபையிலிருந்த **அன்னிபோலின்** என்ற மாதிற்
காதல் கொண்டமையால் கதரினாவில் வெறுப்புண்டா
னது. ஆகையால் கதரினாவை விவாகரத்துச் செய்து
விட்டு தான் விரும்பிய மாதை விவாகஞ் செய்ய விரும்
பினான். அரசனுடைய எண்ணத்தை நிறைவேற்று
வதற்கு பல கஷ்டங்களேற்படு மென்றுணர்ந்த ஊல்சி
அவ்வெண்ணத்தை விட்டுவிடும்படி பன்முறை மன்றா
டியும் அவன் அதற்கு விரும்பவில்லை. விவாகரத்துச்
செய்வதற்குப் போப்பாண்டவரின் அனுமதி வேண்டும்.
ஆனால் **கிளெமெஂற்** என்ற போப்பாண்டவர் அக்கா
லத்திற் கதரினாவின் மருமகனாகிய சாள்ஸ் மன்னன்
கையில் மறியற்காரனாக இருந்தமையால் அவரால்
அனுமதியளிக்க முடியவில்லை. ஊல்சியை எப்படியும்
அந்த அனுமதியைப் பெறவேண்டுமென்று ஹென்றி
வற்புறுத்திக் கேட்டுக்கொண்டான். அவ்விஷயத்தை
ஆராயும்பொருட்டு போப்பாண்டவர் ரோமாபுரியிலுள்ள
ஒரு கார்டினலையும் ஊல்சியையும் நியமித்தார். இத்
தாலியிலுள்ள கார்டினல் சிறிது காலம் விசாரணைசெய்து
விட்டு அதைப் பின்போட்டபடியால் அரசன் கோபா
வேசம்கொண்டு ஊல்சியிற் பழி வாங்கினான். அவனு
டைய சொத்துக்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்
கொண்டு அவனையும் இராசத்துரோகி எனக் கைது
செய்தான். மனவருத்தத்தாலும் அளவுகடந்த தொல்லை
களினாலும் ஊல்சி இறந்தான் (1530).

பின்பு ஹென்றி பாராளுமன்றத்தைக் கூட்டி
போப்பரசரின் அனுமதி தனக்கு வேண்டியதில்லை
யெனக்கூறி அவரது அதிகாரத்தை முற்றாகத் தள்ளி



விட்டான். ஆங்கில திருச்சபைக்குத்தானே தலைவனா
னான். கத்தோலிக்க சந்நியாசிகளின் சலாக்கியங்களைக்
குறைப்பதற்குப் பல சட்டங்களை வகுத்து சந்நியாசி
மடங்களையும் சூறையாடினான். அரசாங்க பொக்கி
ஷத்தை அப்பொருளினால் நிரப்பினான். அம்மடங்க
ளுக்குரிய நிலங்களையெல்லாம் தனக்கு ஆதரவாளராயி
ருந்த பிரபுக்களுக்கு வளங்கினான். 1533–ல் சமய சம்
பந்தமான விஷயங்கள் ஆங்கிலத் திருச்சபையிலேயே
தீர்க்கப்பட வேண்டுமென்றும் போப்பாண்டவரின்
விசாரணைக்கு அவ்விஷயங்கள் விடக்கூடாதென்றும்
சட்டம் ஒன்றை வகுத்தான். பின்பு கதரினாவின்
விவாகத்தை ரத்துச் செய்துவிட்டு, **அன்னிபோலினை**
மணஞ் செய்தான். 1533-ல் எலிசபெத் பிறந்தவுடன்
முடியாட்சி உரிமைச் சட்டமொன்றை வகுத்து அதன்
பிரகாரம் கதரினாவின் விவாகம் முறையற்றதென்றும்,
அன்னிபோலினுடைய விவாகமே உண்மையானதும்
முறையானதென்றும் அவளுடைய பிள்ளைகளுக்கே
ஆளுமுரிமையுண்டென்றும் வெளிப்படுத்தினான். பின்பு
ஆங்கிலத் திருச்சபைக்கும் ஆலயத்துக்கும் தலைமை
யுரிமைபற்றிய சட்டம் 1535-ல் உண்டாக்கப்பட்டது.
இதனால் அரசன் திருச்சபையின் தலைவனானான். ஆங்கி
லேய ஆலயத்திற்கும் ரோம ஆலயத்திற்குமுள்ள
தொடர்பு நீக்கப்பட்டது. போப்பாண்டவரும் ஏனைய
கத்தோலிக்க நாட்டரசர்களும் அவனைக் கண்டித்தி
ருந்தும் கத்தோலிக்க திருச்சபையினின்றும் அவன்
நீக்கப்பட்டிருந்தும் ஹென்றி, தன்னுடைய இராச்சி
யத்தில் ஓர் சுயேச்சாதிகாரியாக ஆளத் தீர்மானஞ்
செய்தான். சில காலங்களின் பின்பு 'அன்னிபோ
லின்' இராசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் சிரச்
சேதஞ் செய்யப்பட்டாள். இவளுக்குப்பின் 'ஜேன்
செய்மூர்', என்ற பெண்ணை ஹென்றி மணந்து அவ
ளுக்கு ஓர் ஆண்மகவு பிறந்ததும் அவள் இறக்க
அதன்பின்னும் அரசன் மூன்றுமுறை மணஞ் செய்

RangaRakes Tamilnavarasam.com

தான். ஆனால் பின்பு பிள்ளைகள் ஒன்றும் பிறக்கவில்லை.

இனி ரோமாபுரியின் அதிகாரம் நீங்கியபின் இங்கிலாந்திலேற்பட்ட மதச் சீர்திருத்தங்களைப்பற்றி ஆராய்வோம். கத்தோலிக்க சந்நியாசிகளின் வாழ்க்கை மற்றவர்களாற் கண்டிக்கக்கூடிய நிலையிலிருந்தது. துஷ்ட நடையும், லௌகீக விஷயங்களில் ஈடுபடுதலும், சுயேச்சையும், அளவற்ற பொருள் வேட்கையும், மார்க்க விஷயங்களில் கவனயீனமும் இவைபோன்ற பல குறைகள் நிரம்பிய வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தனர். ஆகையால் அவர்களுடைய வாழ்க்கையிற் சீர்திருத்தங்கள் இன்றியமையாதனவாயிருந்தன. மேலும் ஆலயவழிபாட்டுக் கொள்கைகளிலும் சீர்திருத்தங்கள் தேவைப்பட்டன. ஐரோப்பாவிலேற்பட்ட சமயப்புரட்சிக் கொள்கைகள் இங்கிலாந்திலும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. புதிய ஏற்பாட்டின் போதனையே பின்பற்றவேண்டியதென்று எண்ணினர். சந்நியாசி மடங்களைச் சூறையாடி அழித்துவிட்டதினால் கலகங்கள் ஏற்பட்டன. அவை சீக்கிரத்திலடக்கப்பட்டன.

ஹென்றி போப்பரசரின் அதிகாரத்தை இங்கிலாந்தில் அழிக்க விரும்பினதல்லாது, இங்கிலாந்திற் கத்தோலிக்க சமயத்தை ஒழிக்க ஒருபோதும் விரும்பவில்லை. ஏற்கனவே லூதர் போப்பாண்டவருக்குக் காட்டிய எதிர்ப்பை ஹென்றி கண்டித்திருக்கிறார். தன் நாட்டில் புரட்டஸ்தாந்து மதம் பரவுவது அவருக்கு விருப்பமில்லை. எல்லா மக்களும் ஒரே சமயத்தவர்களாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கொள்கை. ஆனால் ஹென்றிக்கு வயது முதிர்ந்த காலத்தில் சமய வேறுபாடுகளதிகரித்தன.

ஹென்றியின் பின் அவனது மகனான ஆறாவது எட்வேட் ஐந்துவருட காலமாக அரசாண்டான். அவனது இராச்சிய பரிபாலன காலத்தில் புரட்டஸ்தாந்து மதக் கொள்கைகள் தலையெடுத்துப் பரவின. இக்கா



லத்தில் ஒரே விதமான சமய வழிபாடு வற்புறுத்தப்பட்டது. எல்லா ஆலயங்களிலும் உபயோகிக்கத்தக்க, வணக்கத்துக்குரிய ஒரே சமய நூல், வெளியிடப்பட்டது. புரட்டஸ்தாந்து மதக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எட்வேட்டின் பின் கதரீனுவின் மகளாகிய மேரி சிங்காசனமேறி கத்தோலிக்க மதத்தைப்பரப்ப முயற்சி செய்தபொழுதிலும் புரட்டஸ்தாந்து மதமே தலையெடுத்தது. கத்தோலிக்க மதத்தைத் திரும்பவும் இங்கிலாந்தில் நிலைநாட்டி ரோமாபுரியோடு சமாதானஞ் செய்வதே அவளுடைய நோக்கமாகும். அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஸ்பானிய அரசனாகிய பிலிப்பை விவாகஞ் செய்துகொள்ள விரும்பினாள். இங்கிலாந்திலுள்ள மக்களதை விரும்பாதபடியால் பலவிடங்களிலும் கலகங்களேற்பட்டன. கலகத்தை அடக்கியபின் தலைவர்களைக் கொலை செய்வித்தாள். இவ்விவாகத்தினால் ஸ்பானிய ஏகாதிபத்தியத்தில் தாங்களும் ஒரு பகுதியினராக வரநேரிடுமென்றும், அந்நியநாட்டு யுத்தங்களில் இங்கிலாந்தையும் ஸ்பானியா பங்குபற்றச் செய்யுமென்றும், ரோமாபுரியின் தொடர்பை மீண்டும் உண்டாகக்கூடுமென்றும் எண்ணிப் பிரித்தானியப் பிரசைகள் அதிக அதிருப்தி கொண்டிருந்தனர். மக்கள் பழைய வழிபாட்டு முறைகளை அனுசரிக்க விரும்பினாலும் போப்பரசரின் ஆதிக்கத்தை வெறுத்தனர். மேரி 300 புரட்டஸ்தாந்து மதத்தினரை உயிருடன் தூணிற் கட்டித் தீக்கிரையாக்கினாள். இந்நிலையில் மக்களுக்குக் கத்தோலிக்க மதத்தில் வெறுப்புண்டானது. கத்தோலிக்க மதம் அந்நியர் ஆட்சியை நிலைநாட்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். மேரியின் விவாகத்தினால், பிரான்சு தேசத்தோடுள்ள பகைமையினால் அபாயமில்லாதிருந்தும், ஸ்பானியாவின் செல்வாக்கு இங்கிலாந்தில் அதிகரித்தது. அச்சமயத்தில் இங்கிலாந்தில் சமாதான நிலை நிலவுவதற்குப் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமய ஒழுங்கைச் செய்யத்தக்கதாயுமுள்ள

RangaRakes Tamilnavarasam.com

அரசரொருவர் மேரியின் பின் சிங்காசனத்துக்கு வந்தாற்றான் நல்லதென மக்கள் எண்ணினர்.

மேரிராணி நோயினாற் பீடிக்கப்பட்டு இறந்தபின் எலிஸபெத் அரியாசனமேறினாள் (1558). இராச்சியத்துக்கு உரிய உரிமை மேரி ஸ்ருவெர்ட்டிலும் பார்க்க எலிசபெத் ராணிக்குக் குறைவென்றே சொல்லலாம். பிரான்சின் ஆதரவும் மேரிக்கேயிருந்தது. உள்நாட்டிலும் சமய விவாதங்களும், சமுதாய வேறுபாடுகளும் காணப்பட்டன. அந்நிலையில் எல்லாவற்றையும் சீர்படுத்தும் திறமையுள்ள ஒருவரே இராச்சிய பரிபாலனஞ் செய்யமுடியும். ஆனால் எலிசபெத் ராணியோ மனத்தைரியமும், நினைத்ததை முடிக்கும் வன்மையும் அரசியல் விஷயங்களை அறியுமாற்றலும், ஒருங்கே அமைந்த ஒருவராக விளங்கினார். இராச்சியத்தைப் பாதுகாப்பதும், மார்க்க விஷயங்களில் ஒரு ஒழுங்கை நிலைநாட்டுவதும், இங்கிலாந்தைச் சண்டையிலீடுபடாமற் செய்வதும் அந்நியர் பகைமையினின்றும் நாட்டை விலக்குவதுமே அவ்வரசியின் நோக்கங்களாயின. மக்களின் நன்மையைக் கருதி நடந்தமையினால் அவர்களுடைய ஆதரவைப் பெற்றாள்.

ஸ்கொட்லாந்து ராணியான மேரியின் கணவனிறக்கவே அந்நாட்டிலுள்ள புரட்டஸ்தாந்து மக்கள் கத்தோலிக்க மதத்தவளாகிய அவளை நாட்டினின்று கலைத்தனர். அவள் இங்கிலாந்துக்கு ஓடியபோது அங்கே பாதுகாப்பில் வைக்கப்பட்டாள். அங்குள்ள கத்தோலிக்க சமயத்தவர்கள் அவளை ஆதரித்து எலிஸபெத்துக்கெதிரே சதிசெய்யத் தொடங்கினர். ஆகையால் மேரி சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். (1587) எலிஸபெத் மணப்பருவமுற்ற காலத்திலும் விவாகம் செய்யாது தான் ஒரு பிரான்சு இளவரசனை அல்லது ஸ்பானிய இளவரசனை மணக்கப்போவதாகப் பாசாங்கு செய்து வந்தாள். அதனால் அந்நாட்டரசர்கள் சிநேகமாக நடந்து கொண்டனர். ஆனால் அரசியோ தந்திர



மாக விவாகத்தைப் பின்போட்டாள். அவளுடைய கீர்த்தி நாடெங்கும் பரவிற்று. மார்க்க விஷயத்தில் எவர் எம்மார்க்கத்தை அனுஷ்டித்தாலும் அதைப்பராமுகமாகவிட்டு மக்கள் எல்லோரும் சாதி அபிமானமும் கீழ்ப்படிவுமுடையவர்களாக இருப்பது மட்டும் அவளுக்குத் திருப்தியளித்தது. முதலில் போப்பாண்டவரினதிகாரத்தை அறவே ஒழித்தாள். பின்பு ஆலயத்துக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் எல்லா மக்களும் போகவேண்டுமென்றும், சமயக்கொள்கையளவில் அவரவரின் விருப்பத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளலாமெனவும் தீர்மானஞ் செய்தாள். இவ்வண்ணமாக மார்க்கவிஷயத்தைத் தீர்த்துக்கொண்டாள். இது நாட்டில் ஒற்றுமையை உண்டாக்கியது.

கல்வினுடைய போதனையைப் பின்பற்றிய மக்கள் இங்கிலாந்தில் புயூரித்தானியர் என அழைக்கப்பட்டனர். எலிஸபேத் ராணி ஏற்படுத்திய ஆலய ஒழுங்கை அவர்கள் கத்தோலிக்க ஆலயத்துக்கேற்றதென வெண்ணி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐரோப்பாவிலுள்ள ரோமன் கத்தோலிக்க நாடுகளுக்குத் தலைமையாயுள்ள பிலிப் மன்னன் இங்கிலாந்தின் உண்மையான பகைவனாகக் காணப்பட்டான். ஆனால் நெதலாந்தில் நடைபெற்ற சண்டையிலீடுபட்டிருந்தமையால் இங்கிலாந்துக்கெதிரே தன் பலத்தைச் செலுத்தமுடியவில்லை. பிரான்சு தேசத்திலும் அந்நாட்டு மன்னன் புரட்டஸ்தாந்து மக்களை இரக்கமின்றி கொலை செய்வித்து அவர்களை அடக்கும் முயற்சியில் சிரத்தையெடுத்துக்கொண்டிருந்தமையால் இங்கிலாந்துக்கெதிரே அவன் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. ஆனால் இருபது வருடங்களுக்கு நீடித்த பகை இங்கிலாந்துக்கும் ஸ்பானியாவுக்குமிடையில் யுத்தத்தை உண்டாக்கியது. பகையின் காரணமாக ஏற்பட்ட கடற் சண்டையைப்பற்றி ஆராயுமுன் இங்கிலாந்தின் நிலையைப்பற்றி அறிய வேண்டும். எட்டாவது ஹென்றி கடற்படை விஷயத்



RangaRakes
Tamilnavarasam.com

திற் சிரத்தை எடுத்ததுபோல் எலிஸபேத் ராணியும் அவளது மந்திரியுமாகிய உவில்லியம் சீசிலும் கடற்படையின் வலிமையைப் பெருக்கினர். கடற்படையைப் பெருக்குவதற்குச் சில நியாயங்களுமுள. வடமேற்கு வடகிழக்குப் பக்கங்களில், கடற்பாதைகளைக் கண்டுபிடித்து புதிய இடங்களைக் கண்டுபிடிக்கும் ஆவல் முன்பேயிருந்தது. கடல்கடந்து வேற்று நாடுகளுக்குப்போய் வர்த்தகஞ் செய்வதற்காக ஆங்கில வர்த்தகர்கள் வியாபார சமுதாயங்களை உண்டாக்கியிருந்தனர். ஸ்பானிய திரவியக்கப்பல்களைக் கொள்ளையடித்தவர்களில் பிரான்ஸிஸ் டிரேக், கோக்கின்ஸ் முதலிய கடலோடிகள் பேர்வாய்ந்தவர்களாவர். இவ்விதமான முயற்சிகள் இங்கிலாந்தின் கடற்படையின் பலத்தைக் கூட்டின. பொருளாதார நிலையிலும் இங்கிலாந்து நன்னிலை எய்தியிருந்தது. கைத்தொழிலும், வர்த்தகமும் பெருக்கமடைந்தமையினால் நாடு பெரும் செல்வத்தினாற் சிறப்புற்றது.

பிலிப்பு மன்னன் இங்கிலாந்துக்கெதிரே போர் தொடங்கியதற்குப் பல காரணங்களுள. மேரி தனது மரண சாதனத்தில் இங்கிலாந்து இராச்சியத்துக்குத் தனக்குரிய உரிமையைப் பிலிப் மன்னனுக்கே போக வேண்டுமென எழுதிவிட்டாள். ஸ்பானியாவோடு சண்டை செய்துகொண்டிருந்த நெதலாந்து மக்களுக்கு எலிசபெத் உதவி கொடுத்துக்கொண்டிருந்தாள். இங்கிலாந்து ஐரோப்பாவிலுள்ள புரட்டஸ்தாந்து நாடுகளுக்குள் தலைமைவாய்ந்த நாடாகையால், அதை அடக்கவேண்டுமென்றும் பிலிப்பு மன்னனுக்கு விருப்பமிருந்தது. ஸ்பானிய கப்பல்களை ஆங்கிலேயக் கடலோடிகள் சூறையாடினர். அதுவுமல்லாமல் ஆறும் அலெக்சாந்தராகிய போப்பரசர் அமெரிக்காவின் திரவியங்களைப் பங்கீடு செய்யுமுரிமையை ஸ்பானியாவுக்கும் போர்த்துக்கலுக்கும் அளித்தபடியால் ஆங்கிலேயக் கடலோடிகள் கடலிற் கொள்ளையடித்தனர். இவ்விதமான பகைகள் ஏற்பட்டபடியால் பிலிப்பு மன்னன் விறல்மிக்க ஒரு பெரிய கடற்படையை நிறுவினான். "ஆமடா" என்று



சொல்லப்பட்ட அக்கடற்படை 1588-ல் இங்கிலாந்துக்கெதிரே அனுப்பப்பட்டது. அப்படை டிறேக், ரூலி முதலிய ஆங்கிலேய வீரர்களால் தோற்கடிக்கப்பட்டது. "ஆமடா" தோற்கடிக்கப்பட்டதினால் ஸ்பானியாவின் கடற்படையின் பலங்குறைய ஆங்கிலேயருடைய கடலாதிக்கம் கூடியது.

எலிஸபெத், மக்களிற் பெரும்பான்மையோருடைய ஆதரவைப் பெற்றதினாலும், சத்திராதிகள் அவ்விராணியின் திட்டங்களை அறிய முடியாது அறைப்புப்பட்டமையினாலும், சீசில், உவால்சிங்காம் முதலிய சிறந்த இராச தந்திரிகளின் உதவியைப் பெற்றமையினாலும் அவள் இங்கிலாந்தைக் காப்பாற்றித் திறமையுடன் ஆளத்தக்கதாக விருந்தது. அக்காலத்திலேயே இங்கிலாந்தில் சிறந்த கவிஞர்களும், நாடகாசிரியர்களும் தோன்றினர். ஷேக்ஸ்பியர் என்ற புகழ்வாய்ந்த நாடகாசிரியருமிருந்தார். நாடு, நாளுக்குநாள் செல்வமும் சீரும் பெற்றுச் சிறந்த நாடாக விளங்கியது.

இதுவரையில் தியூடர் வமிசமன்னர் காலத்தைப் பற்றியறிந்தோம். இனி அவர்களுக்குப்பின் ஆண்ட ஸ்ரூவெர்ட் வமிச அரசர்கள் காலத்தில் நடைபெற்ற விசேஷ சம்பவங்களைப் பற்றி ஆராய்வோம். 1603-ல் எலிஸபெத் இறக்க ஸ்கொத்லாந்து அரசியான மேரியின் மகன் ஜேம்ஸ் என்பான் இங்கிலாந்துக்கும் ஸ்கொத்லாந்துக்கும் அரசனானான். வசீகரமில்லாத பேச்சும், விரும்பத்தகாத பழக்கங்களும் தற்புகழ்ச்சியுமுடைய யேம்ஸ் மன்னன் பிரசைகளிடமிருந்து வேண்டிய மரியாதையைப் பெறவில்லை. சாதுவான குணமும் நிரம்பிய புத்தகக் கல்வியுமிருந்தபோதிலும் உலக அனுபவமும் புத்தியும் குறைந்தவராய்க் காணப்பட்டார். ஆகையால் பிரான்சு தேசத்து அரசனாகிய நாலாம் ஹென்றி அவனைப் பொருத்தமான முறையில் "கிறீஸ்த இராச்சியங்களின் புத்தியுள்ள மடையன்" எனக் கூறியுள்ளார். சுயநல விருப்பமும் முகஸ்துதியை விரும்பும்

RangaRakes
Tamilnavarasam.com

குணமும், கோழைத்தனமும் அவனிடம் காணப்பட்ட வேறு சில குணங்களாம். யேம்ஸ் சிங்காசனமேறிய காலத்தில் பியூரித்தானியர், ரோமன் கத்தோலிக்கர், **எப்பிஸ் கோப்பேலியன்ஸ்** என்ற மூன்று மதப் பிரிவினர்களிருந்தனர். முதல் வகுப்பினர் புரட்டஸ்தாந்து மார்க்கத்தைச் சேர்ந்தவராயினும் ஏனைய புரட்டஸ்தாந்து மக்களிலும் பார்க்க சமயாசாரக் கட்டுப்பாடுகளை அதிக நுணுக்கமாகத் தழுவி நடந்துகொண்டனர். இவர்கள் அரசன் தங்கள் மதத்தையே விரும்புவாரென்றும் அவருடைய ஆதரவை எதிர் பார்த்தனர். மேரியின் மகனாகையால், ரோமன் கத்தோலிக்கர் தங்களுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்கப்படுமென எண்ணங் கொண்டனர். மூன்றும் பிரிவினர் இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவாலயத்தின் அங்கத்தினரும் அதைப் பின்பற்றியவருமாவர். இவ் வகுப்பினருக்கே யேம்ஸ் ஆதரவளித்தான்.

யேம்ஸ் சிறு பராயந்தொட்டு அரசர்களின் உரிமையைப் பற்றி பெருமைகொண்டு அரசர்களுக்கு ஆளுமுரிமை கடவுளாற் கொடுக்கப்பட்டதென்றும், பிரசைகள் அதைப்பற்றி ஆட்சேபிப்பது தவறெனவும் கருதியிருந்தான். ஆனால் அவனது காலத்திலிருந்த பாராளுமன்றப் பொதுமக்கள், சபையின் அங்கத்தவர்கள் எவ்விதமான சுயேச்சாதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதுவுமல்லாமல் அந்நேரத்தில் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியும் தோன்றிற்று. ஆகையால் அரசன் தனது விருப்பத்தின்படி ஆளமுயற்சி செய்தபொழுது, பாராளுமன்றம் எதிர்ப்புக் காட்டியது. மக்களும் அவனை வெறுத்தனர். அவ்வரசனின்பின் அவனுடைய மகன் முதலாம் சாள்ஸ் சிங்காசனமேறினான். அழகும், வனப்பு வாய்ந்த தோற்றமும், ஒருங்கே அமையப்பெற்ற இவன் நாணமுடையவனாகையால் மக்கள் இவனுடைய தன்மையைப்பற்றி சிறிதேனும் அறியமுடியாமற் போயிற்று. நேர்மையில்லாததினால் வாக்குப் பண்ணிய விஷயங்களை அலட்



சியஞ் செய்வதுண்டு. மக்களின் உணர்ச்சிகள் ஒருவாறாகவிருக்க, தான் இன்னொரு வழியில் பிடிவாதக்காரனாயிருந்தான். ஒரு சிறிதேனும் மற்றவர்களின் விருப்பத்துக்கு இடங்கொடாமையினாலும், அரசியல் விஷயங்களைத் துருவி ஆராயும் வன்மையற்றவனாயிருந்தபடியாலும், பாராளுமன்றத்துக்கும் அரசனுக்குமிடையிலுள்ள எதிர்ப்பும், பகையும் நாளடைவிற் கூடியது. அரசனுடைய அதிகாரமே முக்கியமானது. அவன் பாராளுமன்றத்தின் புத்திமதிகளைக் கேட்கத் தேவையில்லையென்று அவனுடைய தந்தை கற்பித்த வழிகளை அவன் கையாண்டான். சமயபக்தி நிரம்பியவனாய் இங்கிலாந்திலுள்ள தேவாலயத்தில் நெருங்கிய விசுவாசமுடையவனுமாய், இலக்கியம், ஓவியம் முதலிய கலைகளில் விருப்பமுடையவனுமாயிருந்தான். 1625-ல் கூடிய முதற் பாராளுமன்றம் அரசனுக்கெனப் பழமைதொட்டு வழங்கப்பட்ட பணத்தொகையைக் குறைத்துக் கொடுக்கத் தீர்மானஞ் செய்தபொழுது அரசன் அது தனது கௌரவத்துக்கும் நிலைக்குமவமானமென நினைந்து அப்பணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இனி விவாக ஒழுங்கு நிபந்தனையின் பிரகாரம் ரோமன் கத்தோலிக்கரை ஆதரிப்பதாகப் பிரான்சிய அரசனுக்கு வாக்களித்திருந்தான். பொதுவாக மக்கள் எல்லோரிடமும் பெருங்கோபம் உண்டானது, ஸ்பானியாவோடு நடத்திய சண்டையும் வெற்றிகரமாய் நடத்தப்படவில்லை. பணம் தேவைப்பட்டபடியால் அடுத்த ஆண்டில் பாராளுமன்றத்தைக் கூட்டினான். பாராளுமன்றத்தின் அங்கத்தவர்களுக்கும் அரசனுக்குமுள்ள தொடர்பு நாளடைவில் பாதிக்கப்பட்டமையால் மக்களுரிமைபற்றிய விண்ணப்பமொன்றை ஆயத்தஞ்செய்து மன்னனுக்குச் சமர்ப்பித்தார்கள். பாராளுமன்றத்தின் அனுமதியின்றி ஒருவிதமான வரியுமரசன் அறவிடக்கூடாதென்றும், காரணமுமின்றி யொருவரையும் சிறைச்சாலையிலிடக்கூடாதென்றும், மக்களின் விருப்பத்திற்கெதிராகப் போர்வீரரைத் திரட்டமுடியாதென்றும்,

RangaRakes Tamilnavarasam.com

சமாதானம் நிலவுங் காலத்தில் அவசர சட்டமூலம் ஒருவரையும் கைதிசெய்ய முடியாதென்றும், அதிற் குறிப்பிடப்பட்டிருந்தன. அரசன் நெருக்கடியான நிலையில் அதற்குச் சம்மதங் கொடுத்தான். அரசனுடைய மந்திரியாகிய பக்கிங்காம் மீது கோபங்கொண்ட மக்கள் அவனைக் கொலை செய்ததும் சாள்ஸ் தானே தன்னந்தனியனாய்ப் பிரசைகளின் கோபத்தை எதிர்க்க வேண்டியிருந்தது. சாள்ஸ் பாராளுமன்றமில்லாமற் சிலகாலமரசாண்டான். பின்பு கூடிய பாராளுமன்றம், அரசனுடைய எண்ணப்படி நடந்துகொள்ளவில்லை. இவ் வண்ணமேற்பட்ட நெருக்கடியைச் சாதுரியமாக நடத்த அவனுவியலாதபடியால் உள்நாட்டுக் குளப்பம் 1642-ல் உண்டாயிற்று. அரசனுக்கெதிராக எழுந்த கட்சியார் கலகமுண்டாக்கி வெற்றி பெற்றனர். ஸ்கொத்திலாந்திலுள்ள புரட்டஸ்தாந்து மக்களும் துணை புரிந்தனர். அரசனுக்கெதிரே எழுந்த கட்சியினருடைய சேனையின் தலைவர்கள் தீவிரமான போக்கையுடையவர்களானதையால் 1649-ல் அரசனைச் சிரச்சேதஞ் செய்தனர். அடுத்த பதினொரு வருடகாலமாகத் திறமை வாய்ந்தவனும், சேனைத்தலைவனும், பராக்கிரமசாலியுமான ஒலிவர் குறொம்வெல் என்பவன் அரசனுக்குச் சமமான அந்தஸ்துடன் இங்கிலாந்தில் ஆட்சி புரிந்தான். ஆனால் இங்கிலாந்திலும் ஸ்கொத்திலாந்திலும் அயர்லாந்திலும், ஒல்லாந்திலுமுள்ள பிரபுக்கள் இம்மாதிரியான ஆட்சியை வெறுத்தனர்.

1653-ல் அரசாங்கத்தை நடத்தும் திட்டமொன்று குறொம்வெலின் ஆதரவாளரால் வகுக்கப்பட்டு அவனால் அங்கீகரிக்கப்பட்டது. அதில் நாட்டின் பாதுகாப்பு அளிக்கும் பிரபுமீது முக்கிய அதிகாரம் விடப்பட வேண்டுமென்றும், பாராளுமன்றத்தில் 400 அங்கத்தவர்கள் இருக்கவேண்டுமென்றும் நிர்வாக அதிகார உரிமை பாதுகாப்பளிக்கும் பிரபுக்கே உண்டென்றும், சட்டங்களை ஆக்குமுரிமை பாராளுமன்றத்துக்கே யுரிமையானதென்றும் மூன்று வருஷத்துக்கொருமுறை பாராளுமன்றத் தெரிவு நடாத்தப்படவேண்டுமென்றும் நாட்டின் பாதுகாப்பளிக்கும் பிரபு சீவிய காலம்வரைக்கும் அந்தஸ்திலிருக்க வேண்டுமென்றும் குறிக்கப்பட்டிருந்தன. அடிக்கடி அவனின் ஆட்சிக்கெதிரே கலகங்கள் தோன்றினமையாலும், மக்கள் அவனை வெறுத்ததினாலும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பெற்ற திட்டத்திற்கமைந்த நிர்வாகத்தை அறவேயொழித்து தான்ஒரு ஏதேச்சாதிகாரியாக இருந்து ஆட்சிபுரியத் தொடங்கினான். உள்நாட்டு நிர்வாகத்தில் குறைகள் ஏற்பட்ட பொழுதிலும் பிறநாட்டு விஷயங்களில் அவன் கையாண்ட முறைகள் பாராட்டத்தக்கன. ஒல்லாந்து டென்மார்க்கு சுவீடன் முதலிய புரட்டஸ்தாந்து நாடுகளோடு நட்புப் பூண்டான். பிரான்சுக்கும் ஸ்பானியாவுக்குமிடையில் அக்காலத்தில் நடந்துகொண்டிருந்த யுத்தத்தில் பிரான்சுக்குச் சார்பாக யுத்தஞ் செய்து வெற்றி பெற்றான். 1658-ல் குறொம்வெல் நோயினாற் பீடிக்கப்பட்டு இறந்தான். சுயநலம் கருதாது தன் நாட்டுக்குச் செய்த சேவை மெச்சத்தக்கதொன்றாகும்.

பின்பு முதலாம் சாள்ஸின் மூத்த மகனை அரசனாக்க மக்கள் விரும்பினர். 1660ல் இரண்டாம் சாள்ஸ் என்ற பெயருடன் முடிசூட்டப்பட்டான். அவன் எவர்களோடும் சிநேகித முறையில் நடந்துகொள்ளும் சுபாவமுடையவனாயினும் சுயநலமும் இரக்கமின்மையும் நிரம்பிய ஒருவனாகக் காணப்பட்டான். பாராளுமன்றத்தில் விருப்பத்திற்கு மாறாக நடந்துகொள்ள விரும்பவில்லை. பல வருடங்களாக அந்நிய நாடுகளிற் சஞ்சரித்து பல கஷ்டங்களை அனுபவித்திருந்தும், நாட்டுக்குத் தான் செய்யும் கடமைகளிற் சிரத்தை எடுக்காது குதூகலமான இன்ப வாழ்க்கையை விரும்பியிருந்தான். தகுதியற்ற ஆடவரும் பெண்டிரும் நிறைந்த அரண்மனையிற் தன் நேரத்தையும் பணத்தையும் கவலையற்ற முறையிற் செலவழித்தான். அவனிடம் யாதேனும் சமயபக்தியிருந்திருந்தால் அது கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்திருந்ததெனலாம். நாட்டின் நிலையை ஆராய்ந்து பார்த்து மக்



RangaRakes Tamilnavarasam.com

களுக்குரிய உரிமையை அவர்கள் கைவிடமாட்டார்களென வறிந்தான். பாராளுமன்றத்தில் செல்வாக்குடையவரின் சொற்படி நடக்க இணங்கிக்கொண்டான். தனது தந்தைக்கெதிராக நடந்துகொண்ட சிலரைத் தண்டித்துவிட்டு, ஆஸ்திகள் வருமானம், நாட்டின் பாதுகாப்பு, சமயம் முதலியவற்றிலே தன் கவனத்தைச் செலுத்தினான். வர்த்தகத்தினாலேற்பட்ட பொறாமையின் காரணமாக இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்குமிடையில் நடந்த சண்டையில் இங்கிலாந்து சிறப்பான வெற்றியைப்பெற முடியவில்லை.

அரசன் கத்தோலிக்கருக்குச் சில சலுகைகளைக் காட்டியபடியினால் 1673ல் புரட்டஸ்தாந்து மதத்தினரே அரசசேவையிலிருக்கலாமென்ற சட்டத்தைப் பாராளுமன்றமுண்டாக்கியது. சாள்ஸ், லூயி மன்னனோடு இரகசியமான உறவுகொண்டிருந்தமையாலும், அவனிடம் பணவுதவி பெற்றமையாலும் பாராளுமன்றத்தின் எதிர்ப்பு அதிகரித்தது. இக்காலத்தில் பாராளுமன்றத்தில் இருகட்சிகள் ஏற்பட்டன. மன்னன் பக்கத்தைச் சார்ந்த கட்சி 'டோரி'க் கட்சியென்றும், மற்றது 'விக்' கட்சியென்றும் அழைக்கப்பட்டன. ஆனால் பாராளுமன்றத்தையோ அல்லது இங்கிலாந்திலுள்ள திருச்சபையையோ கைவிட ஒரு கட்சியும் விரும்பவில்லை. மூன்று வருஷகாலமாகப் பாராளுமன்றமில்லாது சாள்ஸ் ஆளுகையை நடத்தினான். இவன் 1685ல் இறக்க அவனது தம்பியாகிய இரண்டாம் யேம்ஸ் சிங்காசனமேறினான். இவன் கத்தோலிக்க சமயத்தவனாயும், அச்சமயத்திற் பற்றுடையவனாயிருந்து புரட்டஸ்தாந்து நாடாகிய இங்கிலாந்தை ஆளத்தொடங்கினான். அளவு கடந்த ஊக்கமுடையவனாயினும், இராசதந்திரமும், விஷயங்களைக் கிரகிக்கும் வல்லமையற்றவனாயும், தன்திறமையில் நம்பிக்கை உடையவனாயும். இரக்கம் குறைந்தவனாயும், மன்னிக்கும் தன்மை இல்லாதவனாயும் காணப்பட்டான். சிங்காசனமேறிய காலத்திலேதான், அரசாங்கம் தேவாலயம் என்பவற்றின் நிர்வாகத்தை நாட்டின் பழைய



சட்டத்தின் பிரகாரம் நடத்துவதாக வாக்களித்தான். ஆனால் சீக்கிரத்தில் அதை மறந்து ஏதேச்சாதிகாரி போல் ஆளத்தொடங்கினான். இரண்டாம் சாள்சின் காலத்தில் பாராளுமன்றமுண்டாக்கிய சட்டமொன்றின் பிரகாரம் கத்தோலிக்க சமயத்தவர்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறமுடியாது. ஆனால் யேம்ஸ் அச்சட்டத்திற்கு மாறாகக் கத்தோலிக்கருக்கு அரசாங்கத்திலும், சேனையிலும் உயர்ந்த பதவிகளை அளித்து புரட்டஸ்தாந்து மக்களுக்குக் கோபத்தையுண்டாக்கினான். நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் புரட்டஸ்தாந்து மக்கள் இங்கிலாந்திலிருந்தபடியால் அவர்கள் அரசனை இழந்தாலும் தங்கள் சமயத்தை இழக்க விரும்பினாரல்லர். பாராளுமன்றத்தைக் கூட்டிக் கலகங்கள் ஏற்படாமல் தடுப்பதற்குச் சேனையொன்று எப்பொழுதும் ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டுமென்றும், அதன் செலவுக்கு வேண்டிய பணத்தைப் பாராளுமன்றம் நிச்சயிக்க வேண்டுமென்றும் யேம்ஸ் அதிற் பேசியபொழுது அச்சபையிலுள்ளோர் மிகவும் கோபங் கொண்டனர். அதற்கு அவர்கள் மறுத்தபடியால் அரசன் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பின் 1687 வரையும் இடையிடையே கூட்டியும் அவ்வாண்டின் பின் அச்சபையில்லாமலே ஆண்டான். அதன்பின் அரசனுக்குரிய தனியதிகாரத்தைப் பாவித்துக் கத்தோலிக்கருக்கு அதிக சலுகைகளைக்காட்டி வந்தான். கத்தோலிக்க சமயத்தவர்களுக்கு மாறான சட்டங்களை மதியாமலும் நிறுத்தியும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கத் தொடங்கினான். சர்வகலாசாலைகள் மூலம் கத்தோலிக்க சமயத்தைப் பரப்ப பெரும் முயற்சி செய்தான். இவைகளெல்லாவற்றையும் கண்டு மக்களே அரசனை வெறுத்தனர். பழைய காலத்திலுள்ள அதிகாரம் பெற்ற மேற்கோடுகளை ஸ்தாபித்து அவைகள் மூலம் தனக்கு எதிர்ப்புக் காட்டியவர்களைத் தண்டித்தான். பின்பு சமய சம்பந்தமான குற்றங்களைத் தண்டிப்பதற்காகச் சட்டங்களை நிராகரிக்கும் ஒரு விளம்பரத்தை விடுத்து



RangaRakes Tamilnavarasam.com

அது தேவாலயங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாசிக்க வேண்டுமென்று கற்பித்தான். அதற்கு மறுத்த தேவாலய அதிகாரிகளைச் சிறைச்சாலையிலிட்டான். இவ்வளவு அநீதியான செயல்களைச் சகித்துக்கொண்டு மக்கள் இவ்வரசனின் பின் ஒரு புரட்டஸ்தாந்து சமயத்தவனை அரசனுக்க விரும்பியிருந்தனர். அப்போது யேம்ஸ் அரசனுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தவுடன் இவனின் பின்னும் இவன் மகனும் கத்தோலிக்கனாக வளர்க்கப்பட்டு அரசாள நேரிடுமென நினைத்து யேம்ஸின் மகளையும், மருமகனும் ஒல்லாந்து அரசனுமான உவில்லியத்தை அரசையேற்கும்படி வரவழைத்தனர். அதற்கு உடன்பட்டு அவர்கள் இங்கிலாந்தில் வந்திறங்கியவுடனே யேம்ஸ் பிரான்சு தேசத்துக்கோடிப்போய் லூயி மன்னனின் ஆதரவைப் பெற்றான்.

## வினாக்கள்

1. பிரபுக்களின் அதிகாரத்தை அடக்க ஏழாவது ஹென்றி கையாண்ட முறைகள் யாவை?
2. ஹென்றி இங்கிலாந்தின் பண நிலையை எவ்வாறு திருத்தி வைத்தான்?
3. ஹென்றி அயல் நாடுகளின் ஐக்கியத்தை எவ்வாறு பெற்றான்?
4. ஏதேச்சாதிகாரியாக ஆளுகை நடத்திய ஹென்றி எவ்வாறு மக்களின் நன் மதிப்பைப் பெற்றான்?
5. ஊல்சியின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுரிய காரணங்களை ஆராய்க.
6. எட்டாவது ஹென்றி போப்பரசரின் அதிகாரத்தை நீக்கிவிட்டதற்குக் காரணம் என்ன? அதை எவ்வாறு நீக்கினான்?
7. இங்கிலாந்திலேற்பட்ட சமயப் புரட்சியைப்பற்றி விபரித்துக் கூறு?
8. ஆறுவது எட்வேட் அரசன் காலத்திலும் மேரியின் காலத்திலும் இங்கிலாந்திலுள்ள சமய நிலையை ஆராய்க.
9. எலிஸபெத் ராணி நாட்டிலுள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்து வைத்தார்?
10 இங்கிலாந்துக்கெதிரே பிலிப்பு மன்னன் படையெடுத்ததற்கு நியாயம் என்ன? அப்படையெடுப்பின் முடிவென்ன?



11. தியூட வமிசத்தரசர்களின் பின் யார் சிங்காசனமேறினார்?
12. பாராளுமன்றம் யேம்ஸ் அரசனுக்கு எதிர்ப்புக் காட்டியதற்குக் காரணமென்ன?
13. முதலாம் சாள்ஸ் மன்னனுடைய வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஆராய்க?
14. இரண்டாம் சாள்ஸ் மன்னனுடைய ஆளுகையைப்பற்றி விபரித்துக் கூறு.
15. 1688-ல் ஏற்பட்ட புரட்சிக்கு இரண்டாம் யேம்ஸ் மன்னனே காரணமாயிருந்தான் என்பதை விளக்கிக் கூறு.

RangaRakes Tamilnavarasam.com

# ஆறாம் அத்தியாயம்
## பதினேழாம் நூற்றாண்டில் சில ஐரோப்பிய நாடுகளின் நிலைமை.

பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும், பிரான்சு தேசம் முதன்மைபெற்ற நாடாக விளங்கிற்று. செல்வத்திலும், கல்வியிலும், படைப் பலத்திலும், பல்வகையான கலைகளிலும் மற்றும் நாடுகளிலும் பார்க்க மேம்பாடான நிலையிலிருந்தது. உள்நாட்டுக் குழப்பத்தாற் சிதறிக்கிடந்த நாடு நவார் நாட்டுக் ஹென்றி ஆண்டுகொண்டிருந்த காலத்தில் அமைதியைப் பெற்று வளப்பமுடையதாயும் விளங்கியது. அரசன் நாண்டிஸ் சாதனத்தின் மூலம் ஹியூஜினட்ஸ் சமயத்தவர்களுக்கு மத சுதந்திரத்தையளித்தான். நிர்வாகத்தைச் சீர்திருத்திச் செலவைச் சுருக்கினான். அவன் 1610-ல் இறக்க அவனின்பின் பதின்மூன்றாம் லூயி அரசனானான். இவனது காலத்தில் பெருமரசியல் விற்பன்னரான றிச்சலியூ, மஸாரின் என்பவர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக மந்திரியாகவிருந்து சேவை புரிந்தனர்.

1624 தொடக்கம் பதினெட்டு வருடகாலமாக ஐரோப்பாவின் கீர்த்தியும் செல்வாக்கும் படைத்த ஒருவனாக றிச்சலியு விளங்கினான். அவன் ஒரு பிசப்பாயும் சிறந்த கத்தோலிக்கனுமாயிருந்த பொழுதிலும் ரோமாபுரியில் வெறுக்கப்பட்டவனாகக் காணப்பட்டான். புரட்டஸ்தாந்து சமயம், ஜேர்மனியில், போப்பாண்டவராலும் பரிசுத்த ரோமராச்சிய சக்கரவர்த்தியாலும் அழிக்கப்படும் நேரத்தில் அதனைப் பாதுகாத்து வைத்தவன் றிச்சலியூ ஆவன். அவனுக்கு அரசியலை நடத்தும் முறையில் இரண்டு பிரதான நோக்கங்களிருந்தன. பிரான்சு தேசத்திலே பிரான்சிய அரசனுடைய அதிகாரத்தைப் பலப்படுத்துவது ஒன்றாகும். ஐரோப்பாவில் பிரான்சை முதன்மைபெற்ற நாடாக்கவேண்டுமென்றும், அதை நிறைவேற்றுவதற்கு ஸ்பானியா, அவுஸ்திரியா என்ற நாடுகளோடு நட்புப்பூண்ட நாடுகளைத் தோற்கடிக்க வேண்டுமென்பதே மற்றொன்றாகும். நுட்பமான கல்வித்திறனும், மனத்திடமும், தைரியமும் வாய்க்கப்பெற்ற மந்திரி தனது அரசனுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யலானான்.

மத சுதந்திரத்தைப் பெற்ற ஹியூஜினட்ஸ் அரசனுடைய அதிகாரத்திற் பொறுமைகொண்டு தாங்களிருந்த பகுதிகளைச் சுதந்திரமான சமஸ்தானங்களாக்கும் நோக்கத்துடன் பிரபுக்களுடைய ஆதரவை நாடினர். அதுவுமல்லாமல் பிரான்சு தேசத்துப் பகைவர்களோடும் சிநேகங் கொண்டனர். ஐக்கிய மாகாணங்களைப்போல் ஒரு குடியரசை ஸ்தாபிக்க முயன்றனர். இங்கிலாந்து, ஒல்லாந்து, ஜேர்மனி முதலிய புரட்டஸ்தாந்து நாடுகளிலிருந்து உதவியைத் தேடினர். அவர்கள் உண்டாக்கிய கலகம் றிச்சிலியுவால் உடனே அடக்கப்பட்டு அவர்களுடைய அரசியல், சமய ஸ்தாபனங்கள் இல்லாமற் செய்யப்பட்டன. ஆனால் சமய வழிபாட்டுச் சுதந்திரம் அவர்களுக்குத் திரும்பவுமளிக்கப்பட்டது. இவர்களை அடக்கியபின் பிரபுக்களின் தொல்லைகளை நீக்குவது அவனது கடமையாயிற்று. பிரபுக்கள் மாகாண அதிபதிகளாயிருந்தனர். நிலமானிய முறை நாட்டிலிருக்குமளவும் நாடு முழுவதையும் ஒற்றுமைப்படுத்துவது கஷ்டமாயிருந்தது. பிரான்சிய புரட்சியின் (1789) பின்னே நிலமானியமுறை யற்றுப்போக நாடுமுழுவதும் ஒரே அரசாங்கம் ஏற்படுத்தத்தக்கதாகவிருந்தது. ஆனால் றிச்சிலியு பிரபுக்களுடைய கோட்டைகளையுமரண்மனைகளையும் அழித்துவிட்டுப் பிரபுக்களுக்கிடையே நடந்துகொண்டிருந்த சண்டைகளையும் நிறுத்தினான். 1614ன் பின் பாராளுமன்றம் கூட்டப்படவில்லை. ஆனால் மத்திய அரசாங்கத்திலும் தல ஆட்சியிலும் விசேஷ மாற்றங்களை அவனுண்டாக்கி ஒரு அரசசபையையும் ஸ்தாபித்தான். அவன் நாட்டின் பாதுகாப்புக்காக ஒரு சேனைப்படையையும் கடற்படை

RangaRakes Tamilnavarasam.com

யையும் நிறுவினான். அந்நியநாட்டு வர்த்தகம் அவனுடைய காலத்தில் விருத்தியடைந்தது. பண விஷயத்திலவன் சிக்கனமாய் நடக்கவில்லை. பல கலைகளையும் வளர்த்து வந்தான். அவன் இறந்து (1642) சிறிது காலத்துக்குள் பதின்மூன்றாம் லூயியும் இறந்தான். அவனின்பின் மஸாரின் அவனது அடிச்சுவட்டைப் பின்பற்றியே அரசியல் விஷயங்களை நடத்திவந்தான். இவர்கள் இருவர் காலத்திலும் பிரதிநிதிகள் சபை கூட்டப்படாமல் விடப்பட்டது. அரசன் ஆணைக்குக் கீழ்ப்படிந்து ஒழுகக்கூடிய இராச உத்தியோகத்தர்கள் எல்லா மாகாணங்களிலும் நியமிக்கப்பட்டனர். நாட்டைக் காப்பாற்றக்கூடிய வலிமை மிகுந்த ஒரு அரசன் ஆளுவதைச் சனங்கள் விரும்பினரல்லாது, சுயாட்சி, குடியாட்சி முறைகளை விரும்பினரல்லர்.

பதினாலாம் லூயிக்கு ஐந்துவயதாயிருக்கும் காலத்தில் அவனது தந்தை இறந்துவிட்டான். (1643) மஸாரின் 1661-ல் இறக்கும் வரையும் மந்திரியின் புத்திமதிப்படி நடந்து பின்பு சுயேச்சையான ஆளுகை முறையை லூயி கையாண்டான். லூயி ஒரு பெரிய போர்வீரனுமல்ல, ஓர் இராசதந்திரியுமல்ல. ஆனால் அக்காலத்திலுள்ள அரசனுக்குரிய சிறந்த இலட்சணங்களோடும் மற்றைய அரசர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்கினான். அழகு வாய்ந்த வதனமும், கெம்பீரமான தோற்றமும், அரசனுக்குரிய பல குணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவனாகும். அரசனாகிவிருந்து மந்திரி ஒருவருமில்லாது ஆளுங்காலத்தில் சகல பிரபுக்களும் நிரம்பிய இவனுடைய மாளிகையில் ஆடம்பரமான வாழ்க்கை நடைபெற்றது. ஓவியம், சிற்பம், இலக்கியம் ஆகிய கலைகளை ஆதரித்தான். சிறந்த புலவர்களும் நாடகாசிரியர்களும் இவனது சபையை அலங்கரித்துக் கலைகளை வளர்த்து வந்தனர். ரேஸின், மொலியர், போன்ற கீர்த்திவாய்ந்த நாடகாசிரியர்கள் இவன் காலத்திலேயே இருந்தனர்.



அரசன் பாராளுமன்றத்தைக் கூட்டாமலும், மாகாணங்களிலுள்ள ஸ்தாபனங்களையும், மாநகர சபைகளையும் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தும் சுயேச்சாதிகாரியாக ஆள ஆரம்பித்தான். தன்னால் நியமிக்கப்பட்ட அரசசபை, உபசபைகள் மூலம் அரசாங்க நிர்வாகத்தைத் தன்னிச்சைப்படி நடத்தலானான். இச்சபைகளில் மத்திய வகுப்பினரே அங்கத்தவர்களாயிருந்தனர். டூறின், கொன்ட் முதலிய புகழ்பெற்ற சேனைத்தலைவர்கள் இவனுக்கு உதவியாயிருந்தனர். அரசன் சிங்காசனமேறிய காலத்தில் பிரான்சு தேசம் உன்னத நிலையையடைந்திருந்தது. ஐரோப்பாவிலுள்ள எந்த நாடாவது போட்டியிடமுடியாத நிலைபரத்தில் பிரான்சு தேசமிருந்தது. ஆனால் பணநிலை திருப்திகரமாயிருக்கவில்லை. லூயி அந்நிலையைத் திருத்தி அமைப்பதற்காக 'கொபேட்' என்பவனை நிதி மந்திரியாக நியமித்தான். முதலில் வரிகளை அறவிடும் முறையைச் சீர்ப்படுத்தி வருமானத்தைக் கூட்டினான். கைத்தொழிலை விருத்திசெய்யும் நோக்கத்துடன் இங்கிலாந்து, இத்தாலி, ஒல்லாந்து முதலிய இடங்களிலிருந்து தொழில் விற்பன்னர்களை வரவழைத்தான். கைத்தொழில் விருத்தியேற்பட்டவுடன் பிரான்சுக்கு வரும் அந்நிய நாட்டுப் பொருட்கள்மீது தீர்வைப் பணத்தைக் கூட்டித் தனது நாட்டின் பொருளுற்பத்தியை ஊக்கப்படுத்தினான். அதோடு வர்த்தகமும் நன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டது. புது வீதிகள் அமைக்கப்பட்டன. கால்வாய்கள் வெட்டப்பட்டன. சிறந்த கப்பற்படை நிறுவப்பட்டது. லூயி ஆரம்பத்தில் நீதியை முறைப்படி வழங்கிப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தபோதிலும் காலஞ்செல்ல யுத்தங்களிலீடுபட்டுப் பெருந்தொகையான பணத்தையும் செலவழித்து ஐரோப்பா முழுவதும் பெரும் பகையையுந் தேடிக்கொண்டான்.

நாட்டின் பாதுகாப்புக்காக நாட்டின் எல்லைப்புறங்களை வடகிழக்கிலுள்ள றைன் நதிவரையும், தெற்கி

RangaRakes
Tamilnavarasam.com

ளுள்ள பிரினீஸ் மலைவரையும், தென்கிழக்கிலுள்ள அல்ப்ஸ் மலைவரையும் கைப்பற்றுவதே அவனுடைய பிரதான நோக்கமாயிருந்தது. ஏனைய எல்லைப்புறங்களைப் பிடித்தபொழுதிலும், றைன் மாகாணங்களைக் கைப்பற்றுவதிற் கஷ்டமேற்பட்டது. நெதலாந்து மக்கள் எதிர்ப்புக் காட்டினர். 1665-ல் ஸ்பானிய அரசனாகிய நான்காம் பிலிப்பு இறந்தவுடன் லூயி நெதலாந்தில் ஸ்பானியருக்குள்ள பகுதியை உரிமை பாராட்டிக் கைப்பற்ற எண்ணினான். இதன் காரணமாகத் தொடங்கிய சண்டையில ஸ்பானியா தோற்கடிக்கப்படும் நேரத்தில் இங்கிலாந்து, ஒல்லாந்து, சுவீடன் ஆகியவை ஒருமித்து லூயியை எதிர்த்தன. லூயி சண்டையை விட்டுவிட நேரிட்டது. சில வருடங்களாகச் சமாதானம் நிலவியும் திரும்பவும் ஒல்லாந்தோடு கடும்போர் தொடங்கியது (1672). இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகத்திற் போட்டியேற்பட்டது. குடியரசாட்சியையுடைய ஒல்லாந்துமீது ஏதேச்சாதிகாரியாக ஆண்டுகொண்டிருந்த பிரான்சிய அரசனுக்கு வெறுப்புண்டானது. மார்க்க சம்பந்தமாகவோ அல்லது அரசியல் சம்பந்தமாகவோ பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டோர் ஒல்லாந்தில் பாதுகாப்பைப் பெற்றனர். லூயியினுடைய குணங்கள் கொள்கைகளைக் கண்டித்துப் புத்தகங்களும் ஒல்லாந்தில் வெளியிடப்பட்டன. எல்லாவிதத்திலும் லூயியினுடைய எண்ணங்களுக்கு ஒல்லாந்து தடையாயிருந்தது. லூயி தந்திரமாக இங்கிலாந்தோடும், சுவீடனோடும் நட்புக்கொண்டமையால் 1672–ல் சண்டை தொடங்கியபோது ஒல்லாந்து தனித்து நின்று சண்டைசெய்ய நேர்ந்தது. லூயி பல நகரங்களையும் அரண்களையும் கைப்பற்றி முன்னேறிக்கொண்டு சென்றபொழுது ஒல்லாந்து சரணடைய வேண்டிய நேரத்தில் அந்நாட்டிலொரு புரட்சியேற்பட்டது. அதன் காரணமாக ஒரேஞ்சு வம்சத்தைச் சேர்ந்த உவில்லியம் என்ற இளவரசன் அதிகாரத்தைப் பெற்றுப் போரை நடத்தினான். அவனுடைய தலைமையில் ஒல்லாந்தர் லூயி



அரசனுடைய சேனைகளை வீரத்தோடு எதிர்த்துச் சண்டை செய்தனர். ஒல்லாந்து கடல்மட்டத்துக்குக் கீழுள்ள நாடாகையால் வரம்புகளை உடைத்துக் கடல் நீரை உட்புகச் செய்தான். அவன் தனது தந்திரத்தினால் ஐரோப்பிய நாடுகளோடு நட்புப்பூண்டு பிரான்சை எதிர்க்கச் செய்தான். ஸ்பானியா ஒல்லாந்தோடு சேர்ந்தது. இங்கிலாந்து ஆரம்பத்தில் லூயியோடு சேர்ந்த பொழுதிலும் பிற்பகுதியில் ஒல்லாந்தோடு சேர்ந்தது. ஜேர்மன் சமஸ்தானங்கள் சிலவும் சேர்ந்து பிரான்சை எதிர்த்தன. இவ்வளவு எதிர்ப்பு இருந்தபொழுதிலும் பிரான்சியப்படை மற்ற நாடுகளின் சேனைகளிலும் பார்க்க திறமை வாய்ந்ததாய்க் காணப்பட்டது. 1678-ல் எழுதப்பட்ட 'நிமிக்குவென்' உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்சின் வடக்குக் கிழக்கு எல்லைப்புறங்களிலுள்ள மாகாணங்களின் சில பகுதிகள் லூயி மன்னனுக்குக் கிடைத்தன. மீண்டும் லக்ஸம்பேர்க்கையும் இத்தாலியிலுள்ள கசேல் என்ற இடத்தையும் பெற்றான். ஜேர்மனியர் அவனுடைய செய்கைகளைக்கண்டு கோபங் கொண்டும் ஈற்றில் அவனோடு இணங்கிக்கொண்டனர். இக்காலத்தில் லூயி உச்சமான நிலையை எய்தினன் எனலாம்.

அதன்பின்பு பிரான்சின் அதிகாரம் குன்றத் தொடங்கியது. இவ்வாறு மாறுதலடைய வேண்டிய காரணங்களை ஆராயவேண்டும். லூயியின் ஆளுகையின் பிற்பகுதியில் அரசியல் விஷயங்களில் மாத்திரமல்லாது மார்க்க விஷயங்களிலும் தலைமை வகிக்க ஆரம்பித்தான். பிரான்சிலுள்ள கத்தோலிக்க திருச்சபைக்கும் தேவாலயத்துக்கும் தலைமை வகிக்குமுரிமை தனக்கே உண்டென்று 1682--ல் பிரசித்தி செய்தான். போப்பாண்டவரில் அரசன் தங்கியிருக்கவில்லையென்றும் அரசனை இராச்சியத்தினின்று நீக்கவோ அல்லது பிரசைகளை அரசனுக்குக் கீழ்ப்படியாமல் வலோற்காரஞ் செய்யவோ போப்பாண்டவருக்கு அதிகாரமில்லையென வெளிப்படுத்தினான். அக்காலத்தில் பிரான்சு தேசத்தி



RangaRakes
Tamilnavarasam.com

விருந்த 'ஹியூஜனட்ஸ்' அரசனுக்குக் கீழ்ப்படிவாயும் வர்த்தகம் முதலிய தொழில்களிலீடுபட்டும் வாழ்ந்து வந்தனர். ஆனால் லூயி அவர்கள் நாட்டிலிருப்பது கத்தோலிக்க சமயத்துக்கு மாறானதென்று நினைந்து, அவர்களுடைய சுதந்திரத்தையும் உரிமைகளையும் கவர்ந்துகொள்ள எண்ணங் கொண்டான். ஒரு அற்ப நியாயத்தைக்காட்டி அவர்களுடைய ஆலயங்களை அழித்தான். அவர்களுடைய ஆஸ்திகளும், பிள்ளைகளும் கவரப்பட்டன. வலோற்காரமாகக் கத்தோலிக்க சமயத்துக்கு மாற்றிக்கொள்ள எத்தனித்தான். மார்க்க சுதந்திரம் முற்றாக இல்லாமற் செய்யப்பட்டது. அனேக புரட்டஸ்தாந்து மக்கள் அந்நாட்டைவிட்டு விலகி ஒல்லாந்து, இங்கிலாந்து, சுவிற்செலாந்து ஆகிய நாடுகளுக்கு ஓடினார். இந்நாடுகள் இவர்கள் வரவால் பலனைப் பெற்றன. கைத்தொழிலை அவர்கள் அந்நாடுகளிற் பரப்பினர். ஆயிரக்கணக்கான இவ்வகையான மக்கள் பிரான்சைவிட்டு விலகியமையால் அந்நாட்டின் பலம் குறைந்தது. அதுவுமல்லாமல் இங்கிலாந்தும் ஒல்லாந்தும் ஒன்று சேரவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. இரண்டாம் யேம்ஸின்மீது வெறுப்புற்று இங்கிலாந்து மக்கள் ஒல்லாந்து அரசனாகிய உவில்லியத்தை அரசனாக்கினர் (1688). அதனால் புரட்டஸ்தாந்து நாடுகளுக்கு இங்கிலாந்து முதன்மையான நாடாகியது. இனி ஐரோப்பாவிலுள்ள ஏனைய நாடுகளாகிய டென்மார்க்கு சுவீடன் ஸ்பானியாவும் பிரான்சுக்கெதிரே சண்டை செய்ய உவில்லியத்தோடு சேர்ந்தன. அயர்லாந்து மக்களிலநேகர் இரண்டாம் யேம்சுக்கு உதவியளித்தபடியால் அந்நாடும் சண்டையிற் பங்குபற்றியது. நெதலாந்தில் மாத்திரமல்ல கடலிலும் சண்டைகள் நடைபெற்றன. ஒன்பது வருடகாலமாக நடைபெற்ற அவ்யுத்தம் 1697-ல் முடிவடைந்தது. றிஸ்விக் உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்சு கைப்பற்றிய இடங்களைத் திரும்பவும் கொடுக்கவேண்டி நேர்ந்தது. லூயி ஸ்ருவர்ட் வமிசத்தரசருக்கு உதவி செய்வதில்லையெனவும் உறுதி



பண்ணி உவில்லியத்தை இங்கிலாந்து அரசனாகவும் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தான். இவ்வாறு நடந்தேறிய யுத்தமே **ஆங்கிலேய சிங்காசனப் போர்** எனப்படும்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதில் ஸ்பானியா தேசத்தின் பணநிலை மிகவும் நெருக்கடியான நிலையிலிருந்தது. தேவாலயத்தினதும் பிரபுக்களினதுமான சலாக்கியங்களே அந்நிலைக்குப் பிரதான காரணமாயிருந்தன. வரிகளை விதித்த முறைகள் நாட்டின் கைத்தொழிலைச் சிதைத்துவிட்டன. அரசியலிலோ, மார்க்கத்திலேயோ அல்லது விஞ்ஞான ஆராய்ச்சியிலோ சுதந்திரம் மக்களுக்குக் கிடைக்கவில்லை. அறிவுத் துறையிலும், அரசியற்றுறையிலும் இக்காலத்தில் முன்னேற்றம் தோன்றவில்லை. சாம்ராச்சியப் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்ட ஸ்பானிய அரசர்கள் நாட்டின் பணக்கஷ்டத்தை உண்டுபண்ணி விட்டனர். இக்காலத்தில் இரண்டாம் சாள்ஸ் அரசனாயிருந்தான். இவனுக்குப் பிள்ளைகளில்லாமையால் பெரிய ஸ்பானியா சாம்ராச்சியத்திற்கு யார் அரசனாகக்கூடுமென ஐரோப்பிய அரசர்கள் ஆலோசிக்கலாயினர். இவ்வரசுக்குரிமையுள்ளவர்கள் பதினாலாம் லூயி, லியபோல்ட் சக்கரவர்த்தி, பவேரிய வரசன் என்பவர்களாம். லூயி மன்னனுக்கு அச்சாம்ராச்சியம் சேருமென்றால் அது வல்லரசுகளின் சமநிலை அதிகாரத்துக்கு மாறாகுமெனவுணர்ந்த இங்கிலாந்தரசனான உவில்லியம் ஒரு உபாயமெண்ணினான். அவன் லூயியோடு சேர்ந்து இரண்டு பங்கீட்டு உடன்படிக்கைகள் எழுதிக்கொண்டான். முதலாவது உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்பானிய சாம்ராச்சியத்தின் பெரும்பகுதி பவேரியா இளவரசனுக்குச் சேரவேண்டுமென்றும் எஞ்சிய பாகங்கள் பிரான்சுக்கும் அவுஸ்திரியாவுக்கும் சேரவேண்டுமென்றும் சம்மதம் செய்து கொண்டனர். ஆனால் அவ்விளவரசன் சடுதியாய் இறந்தமையால் இன்னொரு உடன்படிக்கை எழுதவேண்டி நேர்ந்தது. அதன் பிரகாரம் சக்கரவர்த்தியின் இரண்

RangaRakes
Tamilnavarasam.com

டாம் மகனான சாள்ஸ் இளவரசனுக்கு பெரும்பகுதியும் இத்தாலியில் ஸ்பானியாவுக்குள்ள பகுதிகள் பிரான்சுக்குச் சேரவேண்டுமென்பதாக இருவரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் இரண்டாம் சாள்ஸ் மன்னன் இறக்கும்போது எழுதிவிட்ட மரண சாதனத்தின்படி லூயி மன்னனின் பேரனாகிய பிலிப்புக்கு முழு இராச்சியமும் சேரவேண்டியிருந்தது. லூயி பங்கீட்டு உடன்படிக்கைகளை மீறி மரண சாதனத்தை ஏற்றுக்கொண்டமையால் உவில்லியத்துக்கும் கோபமுண்டானது. அதிலும் பெரிதான பிழையொன்றை லூயி செய்ததினால் ஆங்கிலேய மக்களே பெரும் சினங்கொண்டனர். றிஸ்விக் உடன்படிக்கையின்படி லூயி உவில்லியத்தை இங்கிலாந்தின் அரசனாக ஏற்றுக் கொண்டுவிட்டு யேம்சின் மகனை இங்கிலாந்துக்கு அரசனாக்க முயற்சி செய்தான், றிஸ்விக் உடன்படிக்கையை மீறியமை லூயிமீது பெரும் வெறுப்பை உண்டாக்கியது. இனி நெதலாந்தில் ஸ்பானியருக்குள்ள நாடுகளில் தனது சேனைகளைக்கொண்டு சென்றான். அதுவுமல்லால் இங்கிலாந்து அமெரிக்காவில் பெற்றுள்ள வர்த்தகத்துக்குரிய சலுகைகளைக் கைப்பற்ற லூயி முயன்றான். இன்னோரன்ன காரணங்களால் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையில் யுத்தம் தொடங்கியது. 1702-ல் தொடங்கிய இவ்யுத்தம் ஸ்பானிய சிங்காசனப் போர் எனப்படும். இதற்கிடையில் உவில்லியம் இறந்துபோனான். அவனின்பின் சிங்காசனமேறிய அன்னி, ஜோன் சர்ச்சில் என்ற மாள்பரோ பிரபுவை சேனைத்தலைவனாக நியமித்தான். அவன் ஒல்லாந்து மக்களையும் அவுஸ்திரியரையும் துணைக்கொண்டு நடத்திய ஒவ்வொரு சண்டையிலும் வெற்றி பெற்றான். இவன் நடத்திய சண்டைகள் "பிளென்ஹீம்," ரமிலீஸ்; மால்பிளகுவே, ஊடனார்ட் என்பனவாம். இவ்யுத்தம் 1713-ல் முடிவடைந்து 'உற்றெச்ட்' உடன்படிக்கை எழுதப்பட்டது. அதன் பிரகாரம் ஸ்பானியாவுக்கு ஐந்தாம் பிலிப்பு அரசனானான். ஆனால் ஸ்பானியாவும், பிரான்சும், ஒருபொழு



தும் ஒன்றுசேர மாட்டாவெனச் சம்மதங் கொடுபட்டது. நெதலாந்து, மிலன், நேப்பிள்ஸ், சார்டினியா முதலிய நாடுகளை அவுஸ்திரியா பெற்றது. இங்கிலாந்து ஜிப்ரோல்ரரையும், மைனேக்காவையும், பெற்றது. இவைகளைவிட நியூபவுண்ட்லாந்தும், நோவாஸ்கோஷியும் இங்கிலாந்துக்கே கொடுபட்டன.

நெதலாந்திலுள்ள ஐக்கிய மாகாணங்களின் வரலாற்றைப்பற்றி அறிதல்வேண்டும். நெதலாந்து, ஐந்தாம் சாள்சும், அவனுடைய மகனாகிய இரண்டாம் பிலிப்பின் காலத்திலும் இருந்த நிலையைப்பற்றி முன்னொரு அத்தியாயத்திற் படித்திருக்கிறோம். இடையறாப் போரின் ஈற்றில் புரட்டஸ்தாந்து மக்கள் வசித்த உத்தர நெதலாந்தே பூரண அரசியற் சுதந்திரத்தைப் பெற்றது. (1579). பத்து வருஷங்களின் பின்பு டச்சுக்குடியரசு அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. தெற்கேயுள்ள மாகாணங்களும் ஒன்று சேர்ந்தன அதே பின்பு பெல்சியமென்றழைக்கப்பட்டு வருகிறது. ஆனால் 1609-ம் ஆண்டுதான் வட நெதலாந்துச் சுதந்திரம் ஸ்பானியரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. உத்தர நெதலாந்தில் ஏழு மாகாணங்களிருந்தன. ஒவ்வொரு மாகாணமும் சுயாட்சி நடத்தியபோதும் எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு பிரதிநிதிகளைக் கொண்டுள்ள சபையொன்றுண்டு. குடியாட்சியின் தலைவர் ஸ்ராத்ஹோல்டர் என்றழைக்கப்பட்டார். இவர் ஓரேஞ்சு வமிசத்தைச் சேர்ந்தவர். ஒல்லாந்து இம்மாகாணங்களின் ஒன்றினது பெயராகும். அம்மாகாணத்தின் வாசிகளே டச்சுக்காரரென்றழைக்கப்பட்டனர். இப்பெயரே மற்ற மாகாணங்களுக்கும் வழங்கிவந்தது. அவர்களுடைய சமயம் புரட்டஸ்தாந்து சமயமாகும். அடிக்கடி டச்சுக்காரருக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையிற் சண்டைகளேற்பட்ட பொழுதிலும் மக்கள் நாட்டின் வளத்தைப் பெருக்குவதிற் சிரத்தை எடுத்தார்கள். 1602-ல் "டச்சு ஐக்கிய கிழக்கிந்திய சங்கம்" என்ற வியாபார ஸ்தாபனம் நிறுவப்பட்டபின் அவர்களின் வர்த்தகம் விருத்தி

RangaRakes
Tamilnavarasam.com

யடைந்ததோடு, பல நாடுகளும் அவர்கள் கையிற் சிக்கின. டச்சுக் கப்பல்கள் எல்லாத் துறைமுகங்களிலும் காணப்பட்டன. அம்ஸ்ரடாம் அங்குள்ள ஒரு சிறந்த துறைமுகமாகும். அங்குள்ள 'லெய்டன்' சர்வகலா சாலையில் பெரும் அறிவாளிகளும் புலமை வாய்ந்தவர்களுமிருந்தனர். ஓவியம், சித்திரம் சிறந்து விளங்கின. இவர்களுடைய வியாபாரப் பெருக்கத்தைக் கண்ணுற்ற ஆங்கிலேயர்கூடப் பொறாமைப்பட்டனர், அதனால் இருபகுதியாருக்குமிடையில் மூன்றுகடல் யுத்தங்கள் நடைபெற்றன. அவர்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்றனர்.

### வினாக்கள்

1. ரிச்சலியு ஏன் போப்பரசரால் வெறுக்கப்பட்டான்?
2. ரிச்சலியு பிரான்சு தேசத்தில் உண்டாக்கிய விசேஷ மாற்றங்கள் யாவை?
3. மஸாரின் தன் நாட்டுக்குச் செய்த சேவைகள் யாவை?
4. பதினான்காம் லூயி மன்னனின் காலத்தில் பிரான்சுதேசம் அதிகாரம் பெற்றதற்குக் காரணம் என்ன?
5. லூயி மன்னனோடு எதிர்த்துப் போராடிய ஐரோப்பிய நாடுகள் யாவை?
6. லூயி மன்னன் அரசாண்ட காலத்தின் பிற்பகுதியில் அவனுடைய செல்வாக்குக் குன்றியதற்குக் காரணம் யாது?
7. ஸ்பானிய சிங்காசனப் போர் ஏற்பட்டதற்குரிய காரணங்களை ஆராய்க.
8. உத்தர நெதர்லாந்து எப்போ பூரண சுதந்திரத்தைப் பெற்றது? அதன்பின் அந்நாடு இருந்த நிலைமையைப்பற்றி சுருக்கமாகக் கூறு.

# ஏழாவது அத்தியாயம்


## இந்தியாவில் மொகலாயர் ஆட்சி

முகமதியர் பல முறையும் இந்தியாவுக்குப் படையெடுத்துச் சென்றபொழுதிலும் ஒருவராகுதல் அந்நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்ற முடியாமற் போனது. ஆனால் மொகலாய ஆட்சியே இந்தியாவில், பிரதானமாக வட இந்தியா முழுவதும் நிலவியது. மொகலாயர் மங்கோலிய சாதியினரைச் சேர்ந்தவர்கள். சீனரும், துருக்கியரும் அச்சாதியையே சேர்ந்தவராகும். மொகலாயருள் முதலாவதாக இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தவன் தைமூர் என்பவனாகும். தைமூர் ஓர் மூர்க்ககுணமுள்ளவனும், தற்பெருமையுடையவனும் மத்திய ஆசியாவிலுள்ள அநாகரிகமற்ற ஒருவனுமாகக் காணப்பட்டான். ஆனால் ஒரு திறமை வாய்ந்த போர் வீரனுவான். சென்றவிடமெல்லாம் பெரும் அழிவையுண்டாக்கினான். அவன் பார்சியாவையும், ஆப்கானிஸ்தானையுங் கைப்பற்றி சின்ன ஆசியாவுக்குள்ளும் புகுந்தான். அவன் 1398-ல் இந்தியாவுக்குப் படையெடுத்துச் சென்று வெற்றிபெற்ற பொழுதிலும், ஆறு மாதகாலமே அங்கே இருந்து பின் அவ்விடத்திலிருந்து திரும்பினான்.

ஆனால் இந்தியாவுக்குப் படையெடுத்துச் சென்று மொகலாய அதிகாரத்தை அந்நாட்டில் நிலைநாட்டியவன் பாபூர் என்பவனாகும். அவன் தைமூரின் வமிச வழித்தோன்றலாகும். 1525-ல் பாபூர் 12000 வீரரைக் கொண்ட பெருஞ் சேனையுடன் கபூல் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு பாஞ்சாலத்துட் புகுந்து அங்கிருந்து டில்லிமார்க்கமாகச் சென்றான். பணிப்பத்து என்ற இடத்தில் நடந்தேறிய யுத்தத்தில் (1526) அவன் பூரண வெற்றிபெற்றான். அவனுடைய புகழ் எங்கும் பரவியது. வடவிந்தியாவின் பல பாகங்கள் அவன் கையிற் சிக்கின. அடுத்த ஆண்டில் இராச புத்தானை

RangaRakes Tamilnavarasam.com

யையும் தம் வசப்படுத்தினன். பாபூர் ஒரு அரசியல் நிபுணனல்ல. ஆனல் அவன் ஒரு சிறந்த போர்வீரன். அவன் தனது மகன் குமாயனுக்கு ஒரு பெரும் இராச்




சியத்தை விட்டிறந்தான். குமாயன் ஷேஷா என்பவனுடன் பல சண்டைகளை நடத்தி அவைகளிற் தோல்வியுற்று தனது இராச்சியத்தினின்று ஓடித்தப்பினன். (1542) அதன்பின் ஷேஷா என்பவனே வட இந்தியா முழுவதுக்கும் அதிகாரியாக அமர்ந்தான். அவன் தென் பீகாரிலுள்ள ஒரு பிரபு. தன்னுடைய போர்த்திறமையினல் உயர்ந்த நிலையை எய்தினன். அவன் சில விசேஷ மாற்றங்களையுண்டாக்கினன். நிர்வாக முறையைத் திருத்தியமைத்தான். நிலங்கள் எல்லாம் ஒரே அளவை



முறையினல் அளக்கப்பட்டன. நிலங்கள் ஒவ்வொன்றிலும் விளையும் பொருட்களில் மூன்றிலொருபங்கு அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. நிலங்களையுடைய சொந்தக்காரர் அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டியவைகளையும், அவர்களுக்கு நிலங்களிலுள்ள உரிமைகளைப் பற்றியும் எழுதப்பட்ட சாதனங்களிருந்தன. நிலங்களிலிருந்து பெறும் வருமானத்தைவிட காணிகளை அளக்குஞ் செலவும், வரியறவிடுவோனுடைய சம்பளமும் கொடுக்கவேண்டியிருந்தது. நாணயங்களிற் திருத்தங்களேற்படுத்திய பொறுப்பும் அவனுக்கேயுரியது. அவனே வெள்ளி நாணயங்களை உபயோகத்துக்குக் கொண்டுவந்தான். சுங்கவரிகளைக் குறைத்து வர்த்தகத்தை விருத்திசெய்தான். சேர்த்தியான வீதிகளை அமைத்தான். கிராம விதானைமார்களுக்கு அவர்களுடைய கிராமங்களில் சமாதானத்தை நிலவச் செய்யும் பொறுப்பு விடப்பட்டது. நீதி ஒரு விதமான பட்சபாதகமில்லாது வழங்கப்பட்டது. ஷேசா ஒரு பெரிய சேனையை ஆயத்தமாய் வைத்திருந்தான். சில இந்துக்களுக்கும் பொறுப்பான உத்தியோகங்களைக் கொடுத்தான். அவன் ஆட்சிபுரிந்த ஐந்து வருடங்களுள் வட இந்தியா முழுவதையும் கைப்பற்றிச் சிறந்த நிர்வாக முறையையும் நிலை நாட்டினன். அவன் சமயச் சகிப்புத்தன்மை யுடையவனகையால் இந்துக்களுக்கு உதவிசெய்து அவர்களின் ஆதரவைப் பெற்றன். அவனின் பின் அவனுடைய மகன் சிறிதுகாலம் ஆண்டான். குமாயன் திரும்பவும் தனது இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிசெய்தான். 1556-ல் குமாயன் இறந்துபோக அவனுடைய மகனகிய அக்பர் சிங்காசனமேறினன். அப்பொழுது சிறுபிள்ளையாயிருந்தபடியால் அவனுடைய மந்திரிமாரே அரசாங்க விஷயங்களை நடத்தவேண்டியிருந்தது. 1562-ல் அரசாங்கப் பொறுப்பைத் தானே ஏற்று நடத்த ஆரம்பித்தான். அக்பர் அயல் நாடுகளைக் கைப்பற்றித் தனது இராச்சியத்தைப் பெரி



RangaRakes Tamilnavarasam.com

தாக்கினான். இராசபுத்தானம், குஜராத்து முதலிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு வங்காளத்துக்குப் படையெடுத்துச் சென்றான். அதுவும் அவன் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. பின்பு காபுல் என்ற இடத்தைக் கைப்பற்றினான். வடமேற்கு எல்லைப்புறத்துக்குக் காவல் வைக்கவேண்டியிருந்தது. காஷ்மீரத்தின் மேற்கு எல்லை தொட்டு இந்துநதிப்பள்ளத்தாக்குவரையுமுள்ள நாட்டுக்கூடாகவும் கைபர் கணவாய் காபுலோடு தொடுக்கும் வடபகுதிக்கூடாகவும், ஆப்கானிஸ்தானுக்குச் செல்லும் வர்த்தகர்களுடைய பாதைகள் காணப்பட்டன. ஆகையால் அப்பகுதிகளுக்குக் காவல் மிகவும் தேவைப்பட்டது. வடமேற்குப் பகுதியைப் பலப்படுத்தியபின் வட இந்தியாவில் அக்பரின் ஆட்சி நன்னிலையடைந்தது. ஆகையால் தென்னிந்தியாவிற் கவனஞ் செலுத்தினான். அங்கே பிரதானமான மூன்று மாகாணங்களைத் தன் வசப்படுத்தினான்,

அக்பரின் ஆட்சியில் அரசனே மத்தியஸ்தானத்தைப் பெற்றதுமல்லாது நிர்வாக அதிகாரமும் அவனிலேயே தங்கியிருந்தது. அக்பர் தினமும் மூன்று கூட்டங்களைக் கூட்டுவது வழக்கம். ஒன்று நாளாந்தம் நடத்தும் கடமைகளைப்பற்றியது; இன்னொன்று அரசசபையின் கூட்டமாகும்; மற்றது சமயம் அல்லது அரசியல் சம்பந்தமான விஷயங்களைப்பற்றியது. உத்தியோக நியமனம், உத்தியோக உயர்வு, பணச்செலவு, தேசாதிபதிகளனுப்பும் முறைப்பாடுகள் இவைபோன்ற முக்கிய விஷயங்கள் யாவும் அரசன் முன்னிலையிலேயே ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன. வருமானம், பணவிஷயங்களுக்குப் பொறுப்பாக ஒரு மந்திரியையும், போர்த்தொழில் நடத்தும் பொறுப்புக்கு இன்னொரு மந்திரியையும், கைத்தொழிற்சாலை, பண்டகசாலைகளை நடத்தும் பொறுப்புக்கு வேறொரு மந்திரியையும், மார்க்கம், நீதி என்பவைகளோடு தொடர்புடைய விஷயங்களுக்கு ஒரு மந்திரியையும், எல்லாமாக நான்கு மந்திரிகளை அக்பர்



நியமித்திருந்தார். சாம்ராச்சியத்தின் நான்கு தூண்கள் போல் நான்கு மந்திரிகளும் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்குத் துணைபுரிந்துவந்தனர். இவர்களைவிட இன்னும் இரண்டு உத்தியோகஸ்தர்களிருந்தனர். ஒருவர் சக்கராதிபதியின் அந்தரங்கக் காரியதரிசியாயும், மற்றவர் அவருடைய சட்டங்களை ஆராய்ந்து திரும்பவும் அவருடைய அனுமதிக்குச் சமர்ப்பிப்பவராயும் இருந்தனர். அவருடைய காலத்தில் மூன்று வருமான முறைகள் கையாளப்பட்டன. விளைபொருட்களிலொரு பகுதி அரசாங்கத்துக்கு அறவிடப்பட்டது. விளைபொருட்களின் பங்கு காலத்துக்குக்காலம் கூடியுங் குறைந்துமிருந்தபடியால் அப்பங்குக்குப் பதிலாக விவசாயிகள் இறுக்கவேண்டிய பணவிகிதமொன்று நியமிக்கப்பட்டது. தானியங்கள் மலிவாயிருந்தபடியால் அவைகளின் பெறுமதி இன்னதென்று உத்தேசிக்கப்பட்டது.

அக்பருடைய சாம்ராச்சியம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாண நிர்வாகமும் மத்திய அரசாங்க முறைப்படி நடைபெற்றுவந்தது. நாஜீம் என்று சொல்லப்பட்ட உத்தியோகத்தரே மாகாண ஆட்சிக்குத் தலைமைதாங்கினார். அவரின்கீழ் பல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மாகாணங்களில் நடைபெறும் விஷயங்களை பத்திரிகை நிருபர்கள் மூலம் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் மத்திய அரசாங்கமறிந்துகொண்டது. துர்வியாச்சியத்தைத் தடுக்கும் முறையே நீதிவழங்கும் ஸ்தாபனத்திற் கவனிக்கக்கூடிய தொன்றாகும். இந்துக்களின் சமயச் சட்ட ஒழுங்கின் பிரகாரமே இந்துக்களின் நிலங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தீர்க்கப்பட்டன. ஆஸ்திகள், நிலங்களைப்பற்றிய வழக்குகளிலும் பார்க்க, குற்றஞ்செய்தோர்களிற் தொடரப்பட்ட வழக்குகள் அவர் முன்னிலையிற் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்துக்கெதிரே காணப்பட்ட குற்றச்சாட்டுகளும் அவர்முன்னிலையிலேயே தீர்க்கப்பட்டன

RangaRakes Tamilnavarasam.com

அக்பர் சமய பக்தியுடையவர். காலைநேரத்தைத் தியானஞ்செய்வதிற் செலவழித்தார். முஸ்லிங்கள், இந்துக்கள், கிறீஸ்தவர்கள் ஆகிய பல சமயத்தவர்களும் ஆராதனை செய்வதற்காக ஒரு ஆராதனை மண்டபத்தைக் கட்டி அதில் நடைபெறும் சமய விவாதங்களிற் பங்குபெறுவது வழக்கம். இந்து யாத்திரீகர்கள் கொடுத்து வந்த வரியை இல்லாமற்செய்தார். போரில் கைதுசெய்யப்பட்ட போர்வீரர்களை அடிமையாக்கும் வழக்கத்தை அறவே ஒழித்தார். பல சமயத்தினருக்கும் சுயாதீனமளிக்கும் முறையைக் கையாண்டார். தன் விவாகத்தின் தொடர்பினாற் சேர்ந்த இந்துசமயத்தைச் சேர்ந்த உறவினர் உயர்ந்த பட்டங்களைப்பெற்று அரச உறவினராகக் கௌரவிக்கப்பட்டனர். இந்து ஆலயங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்துக்களின் ஆதரவைப் பெற்றமையால் அக்பர் மொகலாய அரசாட்சியை இந்தியாவில் ஸ்திரப்படுத்தினாரெனலாம். அக்பரின் காலத்தில் இந்தியா ஐக்கிய நாடாக அரசியல் ஒற்றுமையிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியது. இங்கிலாந்தில் எலிஸபெத் ராணி ஆண்டுகொண்டிருந்த காலத்திலேயே அக்பர் இந்தியாவில் ஆளுகையை நடத்தினார். 1556-ம் ஆண்டு தொடக்கம் 49 வருடகாலமாக அவர் ஆளுகை நடத்திய காலத்தில் இந்தியா செல்வத்திலும் சிறப்பிலும் முதன்மைபெற்ற நாடாகவிருந்தமையினால் அவருடைய பெயர் இன்றும் மங்கவில்லை.

1605-ல் அக்பர் இறக்க அவனது மகனான ஜெஹாங்கீர் அரசனானான். அவனுடைய தந்தை வெளிநாட்டு விஷயங்களிற் கையாண்ட முறையையே இவனும் பின்பற்றினான். வங்காளத்திலுள்ள ஆப்கானிஸ்தரை அடக்கினான். 1620-ல் நாகர்கோட்டை அல்லது கங்கரா என்ற இடத்தைக் கைப்பற்றினான். சிலவேளைகளில் கொடூரச் செய்கைகளைச் செய்தபோதிலும் பிரபுத்தன்மையும் நீதி வழங்கும் குணமும் இவனிற் காணப்பட்டன. ஆனால்



அடக்கமற்ற வாழ்க்கை மற்றுஞ் சிறந்த குணங்களைப் பழுதாக்கின. மார்க்க விஷயத்தில் தன் தந்தையைப் போல் சமய சகிப்புத்தன்மையைக் காட்டவில்லை. 1627-ல் இவன் இறக்க இவனது மகனான ஷாஜஹான் என்பவன் அரசனானான். பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்காளத்தில் போத்துக்கீசர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்தனர். அவர்களுடைய பிரதான வர்த்தக நிலையமாகிய கல்கத்தாவை இவ்வரசன் கைப்பற்றி அநேக போத்துக்கீசரையும் கைதுசெய்தான். பின் தக்ஷண பூமியிற் கவனஞ்செலுத்தினான். ஆமட் நகரத்தைக் கைப்பற்றி பிஜாப்பூரையும் கொல்கொந்தையையும் தாக்கினான். 1636-ல் பிஜாப்பூர் அரசன் சமாதான உடன்படிக்கை ஒன்றை எழுதவேண்டியதாயிற்று. இவனது நாட்டின் எல்லையே மொகலாய இராச்சியத்தின் எல்லையாக்கப்பட்டது. தக்ஷணத்தில் தனது மகன் அவுரங்கசீப் என்பவனை மகாதேசாதிபதியாக்கிவிட்டு வடக்கிலுள்ள நாடுகளிற் கவனஞ்செலுத்தினான். ஷாஜஹான் செவ்வனே அரசாண்டபொழுதிலும் 1657 தொடக்கம் மூன்று வருடகாலமாக நடந்த உள்நாட்டுக் கலகம் அரசியல் நிர்வாகத்தைச் சிதைவுபடச்செய்தது. இவன் நீதி வழங்கும் குணமுடையவனாகவும் இரக்கமுடையவனாகவும் காணப்பட்டான். பஞ்சத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை நீக்கினான். அவனது காலத்தில் பொருளாதார நிலையில் அநேக குறைகள் காணப்பட்டன. மாகாணத் தேசாதிபதிகளின் கொடூரச்செய்கைகளினால் விவசாயிகளும் தொழிலாளரும் சீவனஞ்செய்வதற்கும் பல இன்னல்களை அனுபவித்தனர். மார்க்க விஷயங்களில் சமய சகிப்புத்தன்மையுடையவனாகக் காணப்படவில்லை. ஸ்லாமிய சமயத்துக்குச் சனங்களை மாற்றிக்கொள்ள முயற்சிகள் செய்தான்; ஆலயங்கள் கட்டுவதைத் தடுத்தான்; யாத்திரை செய்வோரிடம் வரி அறவிட்டான். ஆனால் அவன் அன்பும், விவேகமுமுடையவனுமாவான். பிரபுத்தன்மையுடைய உத்தியோ

RangaRakes Tamilnavarasam.com

கத்தரையே நியமித்தான். மக்கள் முறையிட்ட காலத்தில் ஒழுங்கீனமற்ற தேசாதிபதிகளை வேலையினின்றும் நிறுத்தினன். இவ்வரசனே தாஜ்மஹால் என்ற சிற்பக் களஞ்சியத்தை மும்தாஸ்மஹால் என்ற அவனது மனைவியின் ஞாபகார்த்தமாக 1648-ல் கட்டுவித்தான்.

இவனது மகனான அவுரங்கசீப் ஒரு சிறந்த அரசனுவான். இவன் மொகலாய சக்கராதிபத்தியத்துக்குளமர்ந்த நாடுகளில் ஸ்லாம் சமயத்தையே பரப்ப முயற்சி செய்தான். பெரும்பான்மையோர் இந்துக்களாயிருந்த போதிலும் தன் மதத்தையே பரப்பவேண்டுமென்ற எண்ணங்கொண்டமையால் இந்துக்கள் வெறுப்புக்காட்டினர். முஸ்லீம் வர்த்தகர்கள் 2½ வீதமும் இந்து சமயத்தைச்சேர்ந்த வர்த்தகர்கள் 5 வீதமும் சுங்கவரி கொடுக்கவேண்டுமென்ற ஒரு சட்டத்தை 1665-ல் உண்டாக்கினன். இரு வருடங்களின்பின் முஸ்லிங்கள் 2½ வீத வரியையும் இறுக்கவேண்டியதில்லையென்றும் மற்றும் வர்த்தகர்கள் மாத்திரம் கொடுக்கவேண்டுமென்றும் கட்களை பிறப்பித்தான். பின்பு மாகாணத் தேசாதிபதிகள்மூலம் இந்துக் கோயில்களையும் பாடசாலைகளையும் அழிப்பித்தான். அரசசேவையில் முஸ்லிங்களையே எழுத்தாளர்களாக நியமிக்க வேண்டுமென்று தீர்மானஞ் செய்தபொழுது இந்துக்களின் உதவியில்லாது நிர்வாகம் நடத்துவது கஷ்டமாயிருந்தபடியால் நூற்றுக்கு ஐம்பது வீதமே இந்துக்கள் உத்தியோகம் வகிக்கமுடியுமென்று சட்டமுண்டாக்கினன். இவ்விதமாக முஸ்லீங்களுக்குப் பல சலுகைகளையுண்டாக்கினன். இந்துக்கள் மீது ஒரு தலைவரியை விதித்தான். இந்துக்கள் யானையிலும் குதிரையிலும் சவாரிசெய்ய முடியாது. இந்துக்களிடம் அதிக அதிருப்தி உண்டானது. இக்காரணங்களால் பல இடங்களிலும் குழப்பங்களுண்டாயின. சிவாஜி என்ற மகாராஷ்டிர வீரன் ஓர் இந்து ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்தான். ஆரம்பத்தில் மொகலாய அரசனுற் தோற்கடிக்கப்பட்டும் 1671



தொடக்கம் இரண்டு வருடங்களுக்குள் பெரும் வெற்றிகள் பெற்று மகாராஷ்டிர ஏகாதிபத்தியமொன்றை நிறுவினன். சிவாஜி ஒரு ஏதேச்சாதிகாரியாக ஆளுகை நடத்தியபொழுதிலும் தனக்கு உதவிபுரியும்பொருட்டு எட்டு மந்திரிகளைக்கொண்டுள்ள சபையை ஸ்தாபித்திருந்தான். ஒரு மந்திரி பிரதம மந்திரியாயும் ஏனையோர் சேனை, நிதி, சமயம் சம்பந்தமான பல்வகைப்பட்ட விஷயங்களுக்குப் பொறுப்பேற்றும் கடமையாற்றிவந்தனர். அவனது இராச்சியம் பல மாகாணங்களாகவும் ஒவ்வொன்றுஞ் சிறு பகுதிகளாகவும் பின்பு அவை ஒவ்வொன்றும் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. கோட்டைகள் கட்டுவதற்கும், புதிதாகக் கைப்பற்றிய இடங்களைப் பாதுகாப்பதற்கும் சேனையை வைத்திருப்பதற்கும் கடற்கொள்ளைக்காரரை அடக்குவதற்கும் ஒரு கடற்படையை நிறுவுவதற்கும் நிலவருமானத்தில் 33 விகிதத்தைப் பெற்று வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் பல சேனதிபதிகள் அரசனலேயே நியமிக்கப்பட்டனர். குதிரைப்படையும், காலாட்படையுமே அவனுடைய சேனையின் பிரதான படைகளாகும். அவன் 240 கோட்டைகள்வரையிற் கட்டியிருந்தான்.

மகாராஷ்டிரர் எல்லோரையும் ஒன்று சேர்த்து அவர்களிடையே சாதி அபிமானத்தை யுண்டுபண்ணி திறமைவாய்ந்த நிர்வாக முறையையும் ஸ்தாபித்துவிட்டது அவனுடைய சிறந்த செயலெனலாம். சிவாஜி ஒரு மதப்பற்றுள்ள இந்து சமயத்தவனயினும் மற்றும் சமயத்தினருக்கும் சகிப்புத்தன்மை காட்டிவந்தான். அவன் 1680-ல் இறக்க அவன் நிலைநாட்டிய ஸ்தாபனங்கள் 18-ம் நூற்றூண்டுவரையில் சிதைவுற்றதற்குக் காரணம் அவனின்பின் அங்கே ஏற்பட்ட நிர்வாகமென்றே கூற வேண்டும். பதினெட்டாம் நூற்றூண்டில் மகாராஷ்டிர ஏகாதிபத்தியம் பல சமஸ்தானங்களாயின. சிவாஜியின் பின் மொகலாய சக்கரவர்த்தியாகிய அவுரங்கசீப் மகாராஷ்டருடைய கோட்டைகளையும் தலைநகரையும் கைப்

RangaRakes
Tamilnavarasam.com

பற்றினான். அவுரங்கசீப் அரசாண்ட காலத்தில் மொகலாய சக்கராதிபத்தியம் காஷ்மீரம் தொடக்கம் தட்க்ஷண பூமிவரையும் பரந்தொன்றாகும். 1689-ல் அவன் உன்னத நிலையையடைந்திருந்தபோதிலும் அவனது பரந்த இராச்சியத்தைத் தனித்து ஆளுவது கஷ்டமாயிருந்தது. தட்க்ஷண பூமியில் நடந்துகொண்டிருந்த இடையறாப் போரினால் பெரும் பணநஷ்டம் நேர்ந்தது. அரசாங்கத்தின் பணநிலை குன்றியது. மகாராஷ்டிரர் நடத்திய போரும் அவனுக்குத் தோல்வியையுண்டாக்கியது. 1707ல் அவன் இறக்க அவனுடைய ஏகாதிபத்தியமும் நிலைகுலையத்தொடங்கியது.

இந்தியாவுக்கு அக்காலத்திற்சென்ற ஐரோப்பிய பிரயாணிகள் இந்தியாவின் சமூகநிலை, பொருளாதார நிலையைப்பற்றிக் கூறியது கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவிலுள்ள பரந்த சனத்தொகையில் சிறுபான்மையோர் ஐசுவரியம்படைத்த மேல்வகுப்பினராவர். சிக்கனமாகச் செலவுசெய்து மத்திய வகுப்பினர் வாழ்ந்து வந்தனர். வறுமையான வாழ்க்கையை கீழ்வகுப்பினர் நடத்திவந்தனர். அரசாங்கத்தின் வருமானத்துக்குப் பெரும்பகுதியைக் கொடுத்துவந்தோர் விவசாயிகளாகும். சிறிய அளவில் கைத்தொழிலும் சுரங்கவேலைகளும் நடைபெற்றன. மொகலாயர் காலத்தில் வர்த்தகக் கப்பல்களில்லாமையால் அந்நிய நாடுகளோடு இந்தியர் வர்த்தகஞ்செய்ய முடியாமலிருந்தது. புகையிலை, பருத்தி பட்டு முதலியன அமோகமாக விளைவுசெய்யப்பட்டன. சில காலங்களிலேற்படும் பஞ்சமே நாட்டின் பொருளாதார நிலையைக் குழப்பமடையச்செய்தது. நாட்டின் செழிப்புநிலையே உணவுப்பொருட்களை மலிவாக வாங்குவதற்குக் காரணமாயிருந்தது. 1630 தொடக்கம் இரு வருடங்களாக நிலைத்திருந்த பஞ்சம், விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றை நிலைகுலையச்செய்தது.



## வினாக்கள்

1. இந்தியாவில் மொகலாயர் ஆட்சி எப்போ தொடங்கியது?
2. அக்பருக்கு முன் ஆண்ட மொகலாய மன்னர்கள் யாவர்?
3. அக்பர் கைப்பற்றிய இடங்கள் யாவை?
4. அக்பரின் நிர்வாக முறையை விபரித்து எழுதுக.
5. அக்பர் மொகலாய ஆட்சியை எப்படி ஸ்திரப்படுத்தினார்?
6. சமய விவாதங்களை அக்பர் எவ்வாறு தீர்த்துவைத்தார்?
7. ஜெஹாங்கீரைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.
8. ஷாஜஹான் தன்னுடைய காலத்திற் செய்துமுடித்த வேலைகள் யாவை?
9. இந்துசமயத்தவர்கள் அவுரங்கசீப்பில் ஏன் வெறுப்புக்கொண்டனர்?
10. சிவாஜி என்பவன் யாவன்? அவனைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு?
11. அக்காலத்தில் இந்தியாவிலிருந்த பொருளாதார நிலையைப்பற்றி விபரி.



RangaRakes
Tamilnavarasam.com

# எட்டாம் அத்தியாயம்.

## ருஷியாவும் மகாபீற்றர் செய்த தொண்டுகளும்.

ருஷியா சனத்தொகையிலும் விஸ்தீரணத்திலும் பெரிய நாடாகவிருந்தபோதிலும், பதினேழாம் நூற்றாண்டுவரையிலும் அதனுடைய செல்வாக்கு ஐரோப்பாவின் எப்பாகத்திலாவது செறிந்திருக்கவில்லை. ஆனால் அந்நாடு ஒரு மனிதனின் விடாமுயற்சியினாலும், ஆற்றலினாலும் அக்கண்டத்தில் ஒரு பிரபலமான இடத்தைப் பெற்றது. அவனே மகாபீற்றராகும். அவன் செய்த சேவையைப்பற்றி அறியுமுன் ருஷியாவின் நிலையைப்பற்றியும் அதனுடைய பழைய சரித்திரத்தைப் பற்றியும் ஆராய்வது அவசியமாகும். சிலேவியர் சாதியினரே அந்நாட்டில் வசித்துவந்தனர். ஆனால் காலத்துக்குக்காலம் ஆசியாவிலுள்ள சில சாதியினர் அந்நாட்டுக்குப் படையெடுத்துச்சென்றனர். அச்சாதியினரின் பரம்பரையினர் அந்நாட்டின் பலபாகங்களிலும் வசிக்கின்றனர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் படையெடுத்துச்சென்ற தார்ட்டார் அல்லது மங்கோலியர் என்ற சாதியினரின் படையெடுப்பே கவனிக்கவேண்டியதொன்றாகும். அவர்கள் கிழக்கு ஐரோப்பா முழுதுஞ்சென்றமையால் நகரங்களும், மக்கள் வசித்த பல இடங்களும் மறைவுற்றன. மூன்று நூற்றாண்டுகளாக அவர்களுடைய அநாகரிக ஆளுகையினால் அந்நாட்டு மக்கள் நிலைகுலைந்திருந்தனர்.

அக்காலத்தில் ருஷியர் ஆசியாமயமாயிருந்ததேயன்றி மேற்கு ஐரோப்பிய நாகரிகம் அந்நாட்டிற் பரவவில்லை. போலாந்துச் சமவெளிகள் பால்றிக்கடல் தொடக்கம் கருங்கடல்வரையும் மேற்கு ஐரோப்பாவோடு தொடர்பில்லாமற் தடுத்துவிட்டன. வடக்கே சுவீஸ் மாகாணங்கள் பால்றிக்கடலின் தொடர்பைத் தடுத்தன. கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்குமிடையி



லுள்ளவிடங்கள் தார்ட்டார் சாதியினருக்கும் துருக்கியருக்குமுரியனவாயின. இவ்விதமான எல்லாப் பக்கங்களிலும் தடைபட்டிருந்த ருஷிய மக்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நாகரிகத்தைக் கைக்கொள்ள முடியாமற்போயிற்று. இந்நிலையில் ஆசியாவின் நாகரிகமே விளங்கியது. ஆடவர், தூங்கும் அங்கிகளை அணிந்து, நீண்ட தாடிகளையும் வளர்த்தனர். பெண்கள் தலையை வஸ்திரங்களால் மூடிக்கொண்டனர். மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தவுடன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ்செய்தனர், ஆனால் கிரேக்க வைதிகச் சமயத்தையே தழுவிக்கொண்டனர். பரிசுத்தமான கிறீஸ்த சமய வாழ்க்கையை இழந்து சமயசம்பந்தமான மூடநம்பிக்கைகளையுங் கைக்கொண்டனர்.

தற்கால ருஷிய சரித்திர ஆரம்பத்தில் இவான் ரெரிபிள் (1533—1584) என்பவனே அரசனாகவிருந்தான். அவன் மக்களை வதைப்பதிலும், கொடூரச்செயல்களைச் செய்வதிலும் மனந்தயங்கவில்லை. மத்திய வகுப்பினருக்கும், கீழ் வகுப்பினருக்கும் அதிக சலுகைகளைச்செய்து மேற்கு ஐரோப்பாவோடு வர்த்தகத் தொடர்பையுண்டாக்கி, கல்வி விஷயத்திலும் சிரத்தைகாட்டினான். மேல் வகுப்பினருக்கு இரக்கமின்றிக் கஷ்டங்களையுண்டாக்கினான். அவன் இறந்ததன்பின் ருஷியா உள்நாட்டுக் கலகங்களாலும், பஞ்சத்தினாலும் பல இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது. 1682-ல் மகாபீற்றர் சிங்காசனமேறியவுடன் ருஷியா மேனிலையடைந்தது. அவன் ரோமனேப்ஸ் என்ற ருஷிய அரசவம்சத்தைச் சேர்ந்தவன். மேற்கு ஐரோப்பாவின் நாகரிகத்தைத் தன் நாட்டிற் பரப்புவதே அவனது முதல் நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்கு அளவுகடந்த மனத்திடத்தோடும் தைரியத்தோடும் முயற்சிசெய்தான்.

அவன் ஆறடி ஆறங்குல உயரமும், பெருந்தோற்றமுமுடையவனாவான். காருண்யமற்ற பார்வையும் பயங்கரமான குணங்களும் நிறைந்தவன். கோபங்கொள்ளுஞ்

RangaRakes Tamilnavarasam.com

சுபாவத்தினால் அடிக்கடி பைத்தியக்காரன்போல் கடுமை
யாய் நடந்துகொள்வது வழக்கம். பழிவாங்கும் குணமும்,
இரக்கமின்மையும், கொடூரச்செய்கையும் காணப்பட்ட
போதிலும் சிறந்த இலட்ஷணங்களும் காணப்பட்டன.
தன் கடமைகளிற் சிரத்தையெடுத்துத் தன் நாட்டின்
மேலுள்ள பக்தியினால் அதனுடைய நலத்தையே பெரி
தாக நினைத்துச் சேவைசெய்தான். அறிவை வளர்ப்ப
திலும் பேரவாவுடையன். அவன் தன் காலத்தில் அடக்க
மற்ற முறையில் நடந்துகொள்வதற்கு இளம்பராயத்தி
லேற்பட்ட சூழலும், நிலைமையுமே காரணங்களாயிருந்
தன. இளம்வயதிலே அவன் நினைத்தபடி நடந்துகொண்
டான். தன்னிலும் பார்க்க முதிர்ந்தவர்களே அவனு
டைய தோழர்களானார்கள். பாடசாலையில் புத்தகப்படிப்
பில் அவன்மனஞ் செல்லவில்லை. கைத்தொழிலிலதிக
வூக்கத்தைக் காட்டினான். தச்சுவேலை, இரும்புவேலை
நடக்கும் தொழிற்சாலைகளில் தனது நேரம் முழுவதை
யுஞ் செலவழித்தான். பதினேழாவது வயதில் அரசாங்
கத்தை நடத்தும்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். அர
சனுடைய அதிகாரத்தைக் கூட்டுவதும், மேற்கு ஐரோப்
பிய வாழ்க்கை முறையை தன் நாட்டிற் புகுத்துவதும்,
ரூஷியாவின் ஐசுவரியத்தை வர்த்தகம், கைத்தொழில்
மூலம் பெருக்குவதும் பிரபுக்களின் செல்வாக்கைக்
குறைப்பதும் தன்னுடைய முக்கிய கடமைகளென
உணர்ந்தான். பிரபுக்களின் சலாக்கியங்கள், கைலஞ்
சம் முதலியவற்றை மிகவும் கண்டித்தான். பழைய
ரூஷிய அரசர்களுக்குப் பாதுகாப்பாளராயிருந்த போர்
வீரர்கள் தனது புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்
குத் தடையாயிருந்ததினால் அவர்களிலநேகர் அழிக்கப்
பட்டனர். ரூஷிய பிரபுக்கள் நீண்ட தாடிகளை வளர்த்
திருந்தமையால் அவைகள் ரூஷியாவின் பழைய வாழ்க்
கைச் சின்னங்களாகுமென நினைந்து அவர்கள் தாடி
களை வெட்டிக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்
டான். அநேக பிரபுக்களின் தாடிகளைத் தானே



அறுத்துவிட்டான். பழைய முறைப்படி தாடி வளர்த்
தோர்மீது ஒரு வரியும் அறவிட்டான். ஐரோப்பியரு
டைய உடையையணிய வேண்டுமென்றும், பெண்கள்
கீழ்நாட்டு வழக்கத்தின்படி ஒதுங்கி நடக்கும் வாழ்க்
கையையொழிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவனா
யிருந்தான். புரட்டாதி முதலாந்தேதியை வருட ஆரம்ப
மாக வழங்காமல் மேற்கு ஐரோப்பியரைப்போல தை
மாதம் முதலாந் திகதியையே வருட ஆரம்பமாக வழங்க
வேண்டுமென்று கட்டளை உண்டாக்கினான், விஞ்ஞானக்
கல்வியையும் கணித சாஸ்திரத்தையும் பரப்பி, அர
சாங்க நிர்வாகத்தையும் திருத்தியமைத்தான். ரூஷியா
வுக்குக் கடலுக்குச்செல்லும் மார்க்கமொன்றும், துறை
முகமும் அவசியந் தேவையெனவுணர்ந்து கடற்படை
யொன்று நிறுவப்படவேண்டுமென்று தீர்மானித்தான்.
தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஒல்லாந்து,
பிரான்சு, இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குச்சென்று
கப்பல் செய்யுந்தொழிலைத் திறமையுடன் கற்றுக்கொண்
டான். ஒரு வேலையைத் திறமையுடன் செய்துமுடிக்க
வேண்டின் தானாகவே செய்யவேண்டுமென்று பீற்றர்
கூறிக்கொள்வர். ஒரு தொழிலாளிபோலுடையணிந்து
கொண்டு அம்ஸ்டாம் துறைமுகத்திலுள்ள கப்பல்செய்
யும் தொழிற்சாலையில் வேலைசெய்து அத்தொழிலைப்
பழகிக்கொண்டான். அங்கிருந்த நான்கு மாதகாலத்தி
லும் கடதாசி செய்யுந் தொழிற்சாலை, மாவரைக்குந்
தொழிற்சாலை, அச்சியந்திரசாலைகள் இன்னும் பல
தொழிற்சாலைகளுக்குச் சென்று ஆங்காங்கேயுள்ள கைத்
தொழில்களை கெதியாகவும் நுணுக்கமாகவும் பழகிக்
கொண்டான். ஒல்லாந்திலிருந்து இங்கிலாந்துக்குச்
சென்று அரசருக்குரிய ஆடம்பர வாழ்க்கையை நீக்கி
சாமானிய தொழிலாளிபோல் கப்பல்செய்யும் தொழிற்
சாலைகளில் வேலைசெய்தான். அங்கிருந்து தன் நாட்
டுக்குச் சென்றபொழுது 700 ஆங்கிலேயத் தொழிலா
ளரை அழைத்துச்சென்று வீதிகளையும், பாலங்களையும்,

RangaRakes Tamilnavarasam.com

கப்பல்களையும், கால்வாய்களையும், பாடசாலைகளையும், வைத்தியசாலைகளையும் கட்டுவித்தான். ஒரு சிறந்த கடற்படையொன்றை நிறுவி அசோவ் என்ற துருக்கியருடைய அரணைக் கைப்பற்றினான் (1696). பின்பு ஜெர்மனியருடைய சேனையைப்போல் ஒரு சேனையையுந் திரட்டி அதற்குப் பயிற்சி அளித்துச் சிறந்ததொன்றாக ஆக்கிவைத்தான்.

இவைகள் எல்லாம் நிறைவேற்றியபின் பால்றிக் கடலுட் பிரவேசிப்பதற்கு ஒரு துறைமுகம் ருஷியாவுக்கு வேண்டுமென்று நினைந்து அவ்வெண்ணத்தையும் பூர்த்திசெய்ய ஆரம்பித்தான். பால்றிக் கடலைச் சூழ்ந்துள்ள மாகாணங்கள் யாவும் சுவீடனுக்கேயுரியன. அக்காலத்தில் சுவீடனுக்கு அரசன் பன்னிரண்டாவது சாள்ஸ். இவன் 1697-ல் சிங்காசனமேறியபொழுது பதினைந்து வயதுடைய இளைஞனாகவிருந்தான். இவன் பிடிவாதமும், மனத்திடமும், போர்த்திறமையுமுடையவன். டென்மார்க், ருஷியா, போலாந்து முதலிய வட ஐரோப்பிய இராச்சியங்கள், பால்றிக் கடலின் தென்கரைக் கணித்தாயுள்ள சுவீடனுக்குரிய மாகாணங்களைக் கைப்பற்றுவதற்காக 1700-ல் ஒன்றுசேர்ந்து படையெடுத்துச் சென்றன. சாள்ஸ் துணிவோடு எதிர்த்து நின்று போர்செய்து டென்மார்க்கரசனையும், போலாந்து அரசனையும் பல சண்டைகளிற் தோற்கடித்து ருஷியாவோடு சண்டைசெய்து ஆரம்பத்தில் வெற்றிபெற்றான். பின்பு மொஸ்கோ நகர்மீது பெருஞ்சேனையோடு படையெடுத்துச் சென்றான். புல்ரோவா என்ற இடத்தில் நாலுபங்கு கூடிய ருஷிய சேனையோடு சண்டைசெய்ய நேர்ந்தது. சாள்ஸின் போர்வீரர்கள் நடந்த களைப்பும், தாகமும், பசியும் மேலிட்டு இருந்தபோதிலும் வீரத்தோடு சண்டைசெய்தனர். எண்ணற்ற பெருஞ் சேனையோடு செய்த அச்சண்டை பயனற்றதாயிற்று. அவர்கள் தோல்வியுற்றதுமல்லாமல் முற்றாக அழிக்கப்பட்டனர் (1709). சாள்ஸ் தெற்குநோக்கித் துருக்கிக்கு ஓடினான்



பின்பு ஐரோப்பாவுக்கூடாக ஒரே ஒரு தோழனோடு சென்று தன் நாட்டையடைந்தான். நான்கு வருடங்களின்பின் நோர்வேயில் நடந்த ஒரு சண்டையிலிறந்தான்.

புல்ரோவா சண்டையின்பின், பின்லாந்துக் குடா நாட்டின் கரைக்கண்மையில் சுவீடனுக்குரிய மாகாணங்கள் யாவும் மகாபீற்றர் கையிற்சிக்கின. இப்பகுதியிலேயே பீற்றேர்ஸ்பேக் தலைநகரைக் கட்டினான். தனது இராச்சியத்துக்கு மொஸ்கோ தகுந்த தலைநகரமல்லவென்று பீற்றர் நினைத்திருந்தான். அது நாட்டின் நடுமத்தியிலிருந்தமையால் ஏனைய தலைநகரங்களிலிருந்து போக்குவரவு கஷ்டமாகக் காணப்பட்டதுமல்லாது அதனுடைய வீதிகள், கட்டடங்கள், சூழ்நிலை யாவும் ஆசியமயமாயிருந்தனவேயன்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நிலைபோற் காணப்படவில்லை. இக்காரணங்களினாலேயே அதை நீக்கி, வசதியான தலைநகரம் ஒன்றை அமைக்க வேண்டுமென மகாபீற்றர் எண்ணங்கொண்டார். நேவா ஆறு பின்லாந்துக் குடாவுக்குள் விழும் பகுதியில் தனது புதிய தலைநகரத்தை அமைக்கும் ஸ்தானமாகக்கொண்டு அவ்வேலையை முடிப்பதற்கு ஒரு இலட்ஷம் தொழிலாளிகளை இராச்சியத்தின் பல பாகங்களிலுமிருந்து தெரிந்தெடுத்து அவ்வேலையை ஆரம்பித்தான். ஒன்பது வருடகாலமாகக் கோடையிலும் மாரியிலும், உணவின்றியும், ஒதுக்கில்லாவிடங்களிலும், தகுந்த ஆயுதங்களில்லாமலும், மண்வெட்டியின்றித் தடிகளால் நிலத்தை உரோஞ்சி மண் எடுத்தும் ஏழைத் தொழிலாளர் அநேகர் தினமுமிறந்தும் ஓயாது வேலை செய்வாராயினர்.

அந்தத் தலைநகரத்தைக் கட்டிமுடித்தபின்பு நாட்டின் பலபாகத்திலுமிருந்து 30000 விவசாயிகளை அங்கே குடியேற்றினான். ருஷியாவிலுள்ள பிரபுக்கள் ஒவ்வொருவரையும் அந்நகரத்தில் மேல்வீடுகளைக் கட்டும்படி ஏற்பாடுசெய்தான். தானும் விசித்திரமான அரண்மனைகளை

RangaRakes Tamilnavarasam.com

யும், ஆலயங்களையும், பொது ஸ்தாபனங்களையும் கட்டி அலங்கரித்தான். மகாபீற்றரின் ஞாபகசின்னமாக அந்த அழகுவாய்ந்த நகரம் விளங்குகின்றது. முழு ருஷியாவுக்கும் சக்கரவர்த்தியாகவும், மகாபீற்றரெனவும், தந்தையர்நாட்டுத் தந்தையாகவும் 1721-ல் மக்களால் பாராட்டப்பட்டான். ஐம்பத்துமூன்றாவது வயதில் (1725) தன் நாட்டின் சேவையினாலும் உழைப்பினாலும் இளைப்புற்றுத் தேகவியோகமானான். கைத்தொழிலை விருத்திசெய்தும், பாடசாலைகள், நூல்நிலையங்கள், நூதனசாலைகள் ஓவியக் களஞ்சியங்கள் என்பனவற்றை ஸ்தாபித்தும், பல மாகாணங்களைக் கைப்பற்றி ருஷியாவைப் பரந்த இராச்சியமாக்கியும் இன்னும் பல்வேறு நன்முயற்சிகளைச் செய்தும் தற்கால ருஷியாவுக்கு அடிகோலி வைத்தான்.

பீற்றரின்பின் ஆண்ட அரசர்களுக்கு ஓர் வலோற்காரமான இராசதந்திரமுறையைக் கையாளத்தக்கதாக வழிகாட்டிவைத்தான். ருஷியாவைச் சூழ்ந்திருந்த நாடுகள் சுவீடனைப்போல் பலமற்றதாய் அல்லது துருக்கியைப்போல் வலிமைகுன்றியதாய் அல்லது போலாந்தைப்போல் நிலைகுலைந்ததாய் அல்லது சீரற்ற மத்திய ஆசியாவைப்போல் இருந்தன. ஆனால் ருஷியா மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளையோ அல்லது பலத்த இராச்சியமெதனையோ கைப்பற்றிப் பெருமையடையவில்லை. ஆனால் பீற்றர் செய்த நன்முயற்சியினால் ருஷியா 18-ம் நூற்றாண்டில் படிப்படியாக முன்னேற்றமடைந்து தற்போது ஒரு ஐரோப்பிய வல்லரசாக விளங்குகிறது.

### வினாக்கள்

1. பழைய காலத்தில் ருஷியாவுக்குப் படையெடுத்துச்சென்ற சாதியினர் யாவர்?
2. எந்த நாகரிகம் அந்நாட்டிற் பரவியது?
3. இவான் ரெரிபிள் என்பவனின் ஆளுகையைப்பற்றிக் கூறு.



4. மகாபீற்றரின் குணாதிசயங்கள் யாவை?
5. மகாபீற்றர் தனது முக்கிய கடமைகள் யாவையென உணர்ந்தான்?
6. மேற்கு ஐரோப்பிய நாகரிகத்தைப் புகுத்துவதற்காக மகாபீற்றர் என்ன மாற்றங்களைச் செய்தார்?
7. ருஷியாவுக்குக் கடற்படை வேண்டுமென மகாபீற்றர் எண்ணியதற்குக் காரணமென்ன?
8. மகாபீற்றர் பிறநாடுகளுக்கு ஏன் சென்றார்?
9. சுவீடன்தேசத்து அரசனோடு மகாபீற்றர் சண்டைசெய்ததற்குக் காரணமென்ன?
10. ருஷியாவுக்கு மகாபீற்றர் செய்த தொண்டுகள் யாவை?



RangaRakes Tamilnavarasam.com

# ஒன்பதாம் அத்தியாயம்

## பிரஷ்யாவின் எழுச்சி

ஜேர்மன் நாடுகள் யாவும் ஐக்கியம் பூண்டு, ஜேர்மனி ஐரோப்பாவில் ஓர் வல்லரசாகத் திகழ்வதற்கு பிரஷ்யாவின் எழுச்சியே காரணமாயிருந்தது. ஆகையால் பிரஷ்யாவின் முன்னேற்றத்திற்கும் எழுச்சிக்குமுரிய காரணங்களை ஆராய்தல் வேண்டும். பிரஷ்யாவின் வளர்ச்சிக்கு மூன்று பிரதான நியாயங்களுள. பிரான்டன்பர்க் என்ற பகுதியே அந்நாட்டின் இருதயம்போல் விளங்கியது. பிரான்டன்பர்க்கோடு சேர்ந்து பிரஷ்யாவென வழங்கிவந்த நாடுகள் இரண்டாவது காரணமெனலாம். அப்பெயரையே முழு நாடும் பின்பு பெற்றது. ஹொஹென்ஸொல்லேன் வமிசம், விவாகத் தொடர்புகளாலும், இராச தந்திரத்தினாலும், அதிர்ஷ்டத்தினாலும் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு ஸ்திரமான நாடாக்கியது. பிரான்டன்பர்க்கை ஆண்டுகொண்டிருந்தவன், பரிசுத்த ரோம சக்கராதிபதியைத் தெரிவு செய்வதற்குக்கூடிய உரிமையைப் பெற்றிருந்ததனால் அவன் "மகா தேர்தல் தலைவன்" என அழைக்கப்பட்டான். 1640-ல் பிரெடரிக் உவில்லியம், மகா தேர்தல் தலைவன் என்ற பெயருடன் அரசனானான். தற்காலப் பிரஷ்யாவின் பெருமைக்கு அத்திவாரமிட்ட பெரியார்களிற் சிறந்த ஒருவனாகும். மனத்திடமும், எடுத்த காரியத்தை முடிக்கும் வன்மையும், ஏதேச்சாதிகாரியாக ஆளுந் தன்மையும், வசீகரமற்ற இயல்புமுடையவன். நாட்டின் நன்மைக்காகச் சேவை செய்வதில் அவனும் அவனைச் சேர்ந்தோரும் ஊக்கம் குன்றாமலுழைத்தனர்.

அவன் சிங்காசனமேறிய காலத்தில் முப்பதாண்டு யுத்தத்தால் நாடு சனத்தொகையில் அரைவாசியை இழந்துவிட்டது. பணத்தையும், நிலங்களையும், ஐரோப்பாவின் பல பாகங்களிலுமுள்ள மக்களுக்கு இலவசமாக ஈந்து தன் நாட்டிற் குடியேற்றினான். பிரான்சு தேசத்திலிருந்து வெளியேறிய புரட்டஸ்தாந்து மக்களைத் தன் நாட்டிற் குடியேற வசதிகளை ஏற்படுத்தினான். இவ்விதமாக 50000 தொழிலாளிகள் பேர்லின் நகரத்திலும் அதன் அயற் பாகங்களிலும் குடியேறினர். முப்பதாண்டு யுத்தத்தின்பின் எழுதப்பட்ட **உவெஸ்ட்பேலியா** உடன்படிக்கையின் பிரகாரம் கிழக்கு போமெரேனியாவைப் பிரஷ்யா பெற்றதில் கடலுட் பிரவேசிக்கும் வழியும் திறக்கப்பட்டது. அதன்பின் நாடு முழுவதையும் ஒன்றுபடுத்துவதே மகா தேர்தற் தலைவனின் முக்கிய கடமையாயிருந்தது. வர்த்தக முன்னேற்றத்திற்கும் சேனைப்படையைத் திருத்தியமைப்பதற்கும் வேண்டிய முயற்சிகளைச் செய்தான்.



நாட்டின் பல பாகங்களிலும் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள சபைகள் யாவற்றையும் நீக்கி நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் தானே ஏற்று தன்னுடைய ஆலோசனைச் சபைமூலம் விஷயங்களை நடத்தினான். இதுவே நாடு முழுவதையும் ஒன்று சேர்ப்பதற்குச் செய்த முதல் முயற்சியாகும். கால்வாய்களையும் வெட்டி நாட்டின் கைத்தொழில்களை பாதுகாப்புத் தீர்வைச் சட்டங்கள் மூலம் ஆதரித்தான். பிரான்சு தேசத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு பேர்லின் நகரத்திற் குடியேறிய புரட்டஸ்தாந்து மக்கள் பல சலுகைகளை அனுபவித்து விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் நன்முயற்சிகள் செய்து நாட்டின் பண நிலையையும் வருவாயையும் பெருக்கினர்.

1700-ல் மகா தேர்தல் தலைவனின் மகன் முதலாம் பிரடெரிக் பிரஷ்யாவின் அரசனாகச் சிங்காசனமேறினான். அவன் அதி விவேகமும் பைத்தியத்தனமும் பொருந்திய ஒருவனாகக் காணப்பட்டான். மகா பீற்றரைப்போல் அடிக்கடி சினங்கொள்ளுங் குணமு

RangaRakes Tamilnavarasam.com

டையவனாகையால் அவனுடைய மந்திரிமாரும், அவனுக்குக் கிட்டவுள்ள மற்றையோரும் பயத்தினால் நடுங்கினர். அவன் வீதி வழியே உலாவச் செல்லும்போது வழியிற்காணும் பிரசைகள் கரடியைக்கண்டு பயந்தது போல் ஓடி ஒளிப்பார்கள். உணவு அருந்தும்போது காரணத்தோடோ அல்லது காரணமில்லாமலோ பாத்திரங்களை எடுத்து வீசிவிடுவதுண்டு. அந்நேரத்தில் தன் பிள்ளைகளை அடிப்பதும் உதைவதும் மயிரிற் பிடித்து இழுப்பதுமுண்டு. தந்தைக்கும், மகன் மகா பிரடெரிக்குக்குமிடையில் நித்திய சச்சரவு ஏற்படுவதுண்டு. தந்தைக்கு நிஷ்டூரமும், கல்வியில் விருப்பின்மையும் வெறுக்கத்தக்க குணங்களும் உடையவனும், மகன் கல்வியில் அவாவும், பரந்த நோக்கமும், குடிவகையில் வெறுப்பும், உடையவனாய் இருபேரும் ஒருவருக்கொருவர் நேர்மாறான குணங்களையுடையவரானார்கள். தந்தையிடமிருந்து தப்பி ஓடுவதற்கு எத்தனித்தபொழுது அவன் கைதிசெய்யப்பட்டு அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. சக்கரவர்த்தி தலையிட்டமையால் அவன் ஈற்றில் மன்னிக்கப்பட்டான்.

ஆனால் பிரஷ்யா, ஐரோப்பாவில் முதன்மை பெற்ற நாடாக்கப்படவேண்டுமென்ற பேரவா அவ்வரசனுக்கு உண்டு. அதை நிறைவேற்றுவதற்கு நிறைந்த பொக்கிஷமும், பெருஞ் சேனையும் தேவையென உணர்ந்தான். பொருளை ஈட்டும்பொருட்டுத் தந்தையின் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்ததோடு, பல மந்திரிமார்களை வேலையினின்று நிறுத்திவிட்டான். தானும் சிக்கனமான வாழ்க்கையை நடாத்தி குடும்பச் செலவையும் குறைத்து நடத்தினான். தனது குதிரைகளையும் விலையேறப்பெற்ற வண்டிகளையும் விற்று பொன் வெள்ளியினாற் செய்யப்பட்ட நகைகளையுமுருக்கி நாணயங்கள் செய்தான். இவ்விதமாக ஏராளமான பொருளைச் சம்பாதித்தான். தான் ஒரு ஏதேச்சாதிகாரியாக ஆளுகை நடத்திவந்தான். பழைய சரித்திரம், அந்நிய



நாடுகளின் சரித்திரம் கற்பதிலொரு பிரயோசனமில்லையென்றும் யாபேரும் பிரஷ்யாவின் சரித்திரத்தையே படிக்கவேண்டுமென்ற எண்ணமுடையவனாயிருந்தான். அவன் சண்டையிலீடுபடாமற் சமாதானம் நிலவச் செய்தபோதிலும், மாபெருஞ் சேனையொன்றை நிறுவினான். அவன் அரசனான காலத்தில் 20000 போர்வீரர்களைக் கொண்டுள்ள சேனை அவன் இராச்சிய பரிபாலனத்தைக் கைவிடும்பொழுது 80000 போர்வீரர்களைக் கொண்டுள்ள நிரந்தரப்படையாக விளங்கியது.

1740-ல் முதலாம் பிரெடரிக் உவில்லியத்தின் மகனான இரண்டாவது பிரெடரிக் சிம்மாசனமேறியபொழுது அவுஸ்திரிய சிம்மாசனப் போர் தொடங்கியது. அவுஸ்திரியாவின் அரசனும், சக்கரவர்த்தியுமான ஆறாம் சாள்ஸ் ஆண் மக்களில்லாமையால் தனது மகள் மரியா திறெஸா, தானிறந்தபின் அரசியாகவேண்டுமென்று ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகளின் சம்மதத்தைப் பெற்றான். அதுவே பிறெக்மாற்றி சாங்ஸன் அல்லது தத்துவார்த்த அனுமதி எனப்படும். 1740-ல் சாள்ஸ் இறக்க பிரான்சு, ஸ்பானியா, பவேரியா, சாக்ஸனி அவுஸ்திரியா இராச்சியத்தின் பல்வேறு பாகங்களையும் கவர்ந்து கொள்ள முன்வந்தன. அதற்கிடையில் பிரஷ்ய மன்னனாகிய பிரெடரிக் போருக்கெழாமல் அவுஸ்திரியாவுக்குரிய சிலீஸியா என்ற செழிப்பான மாகாணத்துக்குள் பெரிய சேனையுடன் புகுந்தான். பொக்கிஷம் வெறுமையாயும் சேனை ஆயத்தமுமின்றியிருந்தமையாலும் அவுஸ்திரியா எதிர்த்து போராட முடியாத நிலையிலிருந்தது. ஆனால் மரிய திறெசா தேசாபிமான உணர்ச்சியை பிரசைகளிடத்து உண்டாக்கியபடியால் பெருஞ் சேனை ஒன்று திரட்டப்பட்டது. யுத்தந் தொடங்கியவுடன் பிரான்சு, பிரஷ்யாவையும் பிரித்தானியா, அவுஸ்திரியாவையும் சேர்ந்துகொண்டன. சிலீஸியாவில் மரியா திறெசாவின் படை தோற்கடிக்கப்பட்டது. பொகீமியாவுக்குள் பிரான்சிய பவேரியப்படை

கள் புகுந்துவிட்டன. அந்நிலைபரத்தில் மரியா திரெசா ஹங்கேரியிலுள்ள பிரஜைகளுக்கு வேண்டிய சலுகைகளைக் கொடுத்து அவர்களுடைய உதவியைக் கோரினாள். உடனே ஒரு பெரிய ஹங்கேரியபடை பொஹிமியாவுட் புகுந்தவுடன் பிரான்சியப்படை தப்பி ஓடநேர்ந்தது. ஆங்கிலேயர் பணவுதவி செய்ததோடு நெதலாந்துக்கு ஒரு சேனையையுமனுப்பினர். டெற்றின்ஜன் என்ற சண்டையில் வெற்றிபெற்றனர். பின்பு பொன்ரினோய் (1745) என்ற சண்டையிற் தோல்வியுற்றதினால் பிரான்சியப்படைகள் நெதலாந்துக்குள் புகுந்தனர். 1748-ல் எச்சிலாச் சப்பேல் என்ற உடன்படிக்கை எழுதப்பட்டது. சிலீஸியா பிரெடரிக் கையிற் சிக்கியது. அதனால் பிரஷ்யாவின் இராச்சியம் கூடிய விஸ்தீரணமும் சனத்தொகையும் கூடியதொன்றானது மல்லாது ஐசுவரியமும் செழிப்புமடைந்தது. அவ்வண்ணமான ஒரு நாட்டை இழக்க மரியா திரெசாவுக்கு மனவிருப்பமில்லை. அதை எவ்விதமும் கைப்பற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் எட்டு ஆண்டுகளாக சண்டைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தாள்.

இதுவரையும் எதிரிகளாகவிருந்த பிரான்சும் அவுஸ்திரியாவும் ஒற்றுமைபூண்டு, பிரஷ்யாவின் செல்வாக்கிற் பொருமை கொண்டிருந்தருஷியா, சுவீடன், சாக்பெனி, போலாந்து என்ற நாடுகளையுந் தங்களுடைய பக்கஞ் சேர்த்துக்கொண்டனர். அவுஸ்திரியா பிரான்சோடு நட்புப்பூண்டமையால் இங்கிலாந்து பிரெடரிக்கோடுசேர்ந்து கொண்டது. 1756 ல் தொடங்கிய அவ்யுத்தமே ஏழாண்டுயுத்தமெனப்படும். அவுஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்குமிடையிலுள்ள பகைமையயும், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இந்தியாவிலும், கனடாவிலும் ஏற்பட்டவர்த்தகப்போட்டியே இவ்யுத்தத்துக்குரிய பிரதான காரணங்களாம். கனடாவிலும், இந்தியாவிலும் ஆங்கிலேயர் பெரும் வெற்றிகளைப் பெற்று பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கத்தையுங் குறைத்து கனடா




விலிருந்து அவர்களை முற்றாகத் துரத்தியும் விட்டனர். ஆரம்பத்தில் ஆங்கிலேயர் பெரும் வெற்றிகளை ஐரோப்பாவில் பெறுதிருந்தபொழுதிலும் பிற்றப் இங்கிலாந்துக்குப் பிரதமமந்திரியாகவந்தவுடன் ஏழாண்டுயுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. பிரான்சியருடைய பலத்தை ஐரோப்பாவிலேயே குறைத்து கனடாவைக் கைப்பற்றுவதகாகக் கூறினான். பிரெடரிக்கின் சேனைகள் சில வெற்றிகளைப்பெற்ற பொழுதிலும் அவுஸ்திரிய ருஷியப் படைகளாற் தோற்கடிக்கப்பட்டன. பேர்லின் நகரமே எதிரிகளின் கையிற்சிக்கின. ஆங்கிலேயப் போர்வீரர்களும் ஹனோவப் போர்வீரர்களும் கொண்டுள்ள படையின் உதவியைக்கொண்டு திறமையுடன் போர் செய்து 1757 ல் ரோஸ்பாக் என்ற இடத்தில் பிரான்சியப் படையைத் தோற்கடித்தான். பின்பு உலாதன் சண்டையிலும் வெற்றிபெற்றான். பிற் அனுப்பிய ஆங்கிலேயப்படையும் பெருந்துணை புரிந்தது ஆனால் சீக்கிரத்தில் பிரெடரிக் மன்னனுக்குத் தோல்விக்குரிய அறிகுறிகள் தோன்றின. ஆரம்பத்தில் பிரெடரிக்கிடமிருந்த சிறந்த போர்வீரர்கள் இறந்து விட்டனர். பணநிலையும் குன்றியது. மூன்றாம் ஜோர்ஜ் மன்னனேடுரிய அதிருப்தி காரணமாக பிரதம மந்திரியாகிய பிற்றும் தனது பதவியினின்று விலகிவிட்டார்.

பிரஷ்யாவின் அதிஷ்டத்துக்கு ருஷிய அரசியாகிய எலிஸபெத் இறந்துவிட மூன்றாவது பீற்றர் அரசனாக வந்ததும் அவன் பிரெடரிக்கோடு நட்புப்பூண்டான். இந்தப்பெரிய யுத்தத்திலால் ஐரோப்பா முழுவதும் கலைப்புற்றது. 1763 ல் பாரிஸ் உடன்படிக்கையின்படி யுத்தம் முடிவடைந்தது. சிலீஸியா பிரஸ்யாவின் ஒரு பகுதியாயே அமர்ந்தது. மனஉறுதியினாலும் ஊக்கத்தினாலும் வெற்றியடைந்த பிரடெரிக்கைக் கண்டு யாவரும் வியந்தனர். பாரிஸ் உடன்படிக்கையின் பின் பிரெடரிக் ஒரு சண்டையிலும் கலந்துகொள்ளவில்லை. நாட்டின் நன்மைக்காக உழைப்பதே மக்களின் முதன்

RangaRakes

Tamilnavarasam.com





நோக்கமெனக் கருதினன் பெரும் கடமைகளைத்தானே ஏற்றுக்கொண்டதன்று மற்றவர்களும் அதேபோன்ற கடமைகளைச் செய்து கொள்ளவேண்டுமென ஏற்பாடு செய்தான். யுத்தத்தினலேற்பட்ட அழிவு அதிகமாகையால் நாட்டைப் பழையபடிதிருத்தி அமைக்கவேண்டியிருந்தது. விவசாயமும் வர்த்தகமும் அரசாங்கத்தினுதவியுடன் உற்சாகப்படுத்தப்பட்டன. யௌவனப்பருவந் தொட்டு பிரான்சிய தத்துவஞானிகளின் மாணுக்கனுகையால்,சமய சகிப்புத்தன்மை யுடையவனுனன். அதோடு குற்றவாளிகளை வதைக்கும் வழக்கத்தை அறவேயொழித்தான். அவனுடைய நன்முயற்சிகள் நல்லபலனை நாட்டுக்கு அளித்தன. 1772 ல் போலாந்தில் ஏற்பட்ட குழப்பங்காரணமாக பிரஷ்யா, ரூஷியா அவுஸ்திரியா மூன்றும் ஒன்று சேர்ந்து அந்நாட்டைத் தங்களுக்குட் பங்கீடுசெய்தனர். இதுவே போலாந்தின் "பங்கீட்டுப்பிரிவினை" எனப்படும். பெரும்பகுதியை ரூஷியாபெற்றது. ஆனல் பிரஷ்யா சிறியளவாயினும், விசேஷமான பகுதியைப்பெற்றது. பிரான்டன்பேர்க்கோடு அப்பகுதி இணைக்கப்பட்டதால் பிரஷ்யா பலத்தையும் ஒற்றுமையையும் பெற்றது.

சிதறிக்கிடந்த பிரான்டன்பர்க், பிரஷ்யா, சிலீஷியா ஆகிய பகுதிகளை ஒன்றுபடுத்தி பிரஷ்யாவை ஒரு வல்லரசாக்கி வைத்த பெருமை மகா பிரெடரிக்குக்கே உரியது. பின்பு ஜேர்மன் நாடுகளை ஒன்றுசேர்த்து ஐக்கியம் பூணச்செய்த பெருமை வல்லரசாய் விளங்கிய பிரஷ்யாவுக்கே உரியது.

### வினுக்கள்

1. பிரஷ்யாவின் வளர்ச்சிக்குரிய காரணங்கள் யாவை?
2. பிரெடரிக் உவில்லியத்தைப் பிரஷ்யமக்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு நியாயமென்ன?
3. பிரெடரிக் உவில்லியத்தின் நிர்வாக முறையை விபரி.



RangaRakes
Tamilnavarasam.com

4. முதலாம் பிரெடரிக்கைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.
5. அவுஸ்திரிய சிம்மாசனப்போரின் காரணங்களை ஆராய்க.
6. அவுஸ்திரிய சிம்மாசனப் போரினால் மரிய திரெசாவுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் யாவை?
7. ஏழாண்டு யுத்தத்தின் காரணங்களை ஆராய்க.
8. ஏழாண்டு யுத்தத்தின்பின் மகா பிரெடரிக் பிரஷ்யாவில் ஏற்படுத்திய விசேஷ மாற்றங்கள் யாவை?
9. மகா பிரெடரிக் தன் நாட்டுக்குச் செய்த சேவைகள் என்ன?

# பத்தாம் அத்தியாயம்

## இங்கிலாந்தில் ஹனேவமன்னர்களின் ஆட்சி

இங்கிலாந்தில் 1688-ல் நடைபெற்ற மாபெரும் புரட்சியின் பயனாக யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட மக்கள் உரிமைச்சட்டமும், அரசுரிமைத் தீர்ப்புச்சட்டமும் வரம்புடை முடியரசை ஸ்தாபித்துவிட்டன. புரட்டஸ்தாந்து மதத்தைச்சேர்ந்த ஒருவரே இங்கிலாந்தை ஆளலாமென்று அச்சட்டங்களில் வற்புறுத்தப்பட்டமையால் ஜேர்மனியிலுள்ள ஹனேவ வமிசத்தைச்சேர்ந்த இளவரசனே முதலாம் ஜோர்ஜ் மன்னன் என்ற பெயருடன் 1714-ல் இங்கிலாந்துக்கு அரசனானன்.

நற்காலத்தில் சனநாயக ஆட்சிமுறையைத்தழுவி அரசாங்கத்தை நடத்தும் நாடுகளில் பெரும்பான்மைக் கட்சியே அரசாங்கப் பொறுப்பையேற்று நிர்வாகத்தை நடத்துவதை நாம் அறிவோம். இங்கிலாந்தில் கட்சிகள் எப்போ தோன்றினவென்றும், கட்சி ஆட்சிமுறை யாருடைய காலத்திற் தோன்றி எப்போ பலமடைந்தது என்பனவற்றைப்பற்றி ஆராயவேண்டும். இரண்டாம் சாள்ஸ் மன்னன் காலத்தில் இங்கிலாந்து மக்களில் ஒருசாரார் அரசனுடைய சகோதரன் இரண்டாம் ஜேம்சை அரசனாக்க முடியாதென்றும், இன்னொருசாரார் அவனையே அரசனாக்கவேண்டுமென்றும் வாதித்தனர். அந்த இருசாராரும் பின்பு விக், டோரி என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். மூன்றாம் உவில்லியம் ஆண்ட காலத்தில் கட்சி ஆட்சிமுறை ஆரம்பித்தது. அன்னி இராணியினுடைய காலத்தில் பிரதானமாக பிற்பகுதியில் கட்சி விவாதங்கள் அதிகரித்தன. விக் கட்சியினர் வரம்புடை முடியாட்சியை ஆதரித்தனர். டோரிக்கட்சியினர் பழைய தெய்வீக அரசுரிமைக் கொள்கையையும் சம்மதமான கீழ்ப்படிவையும் விரும்பினர். விக் கட்சியினர் சமய சகிப்புத்தன்மையையும், எதிர்க்கட்சி

RangaRakes Tamilnavarasam.com

யினர் ஆங்கிலேய ஆலய வழிபாட்டையே ஆதரிக்கும் தன்மையுடையவர்களாயும் காணப்பட்டனர். விக் கட்சியினர் ஹனோவ வமிச மன்னனையும், டோரிக்கட்சியினர் இரண்டாம் யேம்ஸின் மகனையும் ஆதரித்தனர்.

முதலாம், இரண்டாம் ஜோர்ஜ் மன்னர்களுடைய காலத்தில் விக் கட்சி அரசாங்கத்தில் பிரபல ஸ்தானத்தைப் பெற்றது. டோரிக்கட்சியினருக்கு ஸ்ருவட் வமிசத்தவர்களின் அனுதாபமிருந்தமையால் அவர்களில் நம்பிக்கை குறைந்தது. முதலாம் ஜோர்ஜ் மன்னன் காலத்தில் முதல் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில் விக் கட்சியினரே பெரும்பான்மைக் கட்சியினராகவிருந்தனர். முதலாம் ஜோர்ஜ் மன்னனுக்கு ஆங்கிலம் கொஞ்சமேனும் தெரியாது. அவன் சிங்காசனமேறிய காலத்தில் அவனுக்கு வயது ஐம்பத்துநாலாகும். ஆங்கிலப் பாஷையைப் படிக்கவோ அல்லது இங்கிலாந்தின் அரசியல் விஷயத்தைப்பற்றி அறியவோ அவன் சிரத்தை எடுக்கவில்லை. ஹனோவரிலேயே அரைவாசிக் காலத்தைச் செலவிட்டதினால் பிரித்தானியாவில் அவனது செல்வாக்கு மிகவுங் குறைவாகவேயிருந்தது.

1688-ல் ஏற்பட்ட மாபெரும் புரட்சியினால் சட்டங்களுண்டாக்கும் உரிமையையும், வரி விதிக்கும் உரிமையையும் ஆங்கிலேயப் பாராளுமன்றம் பெற்றது. மூன்றாம் உவில்லியம் மந்திரிமாரைத் தானே தெரிந்தும் உள்நாட்டு, வெளிநாட்டு விஷயங்களைத் தானாகவே நடத்திவந்தான். அன்னிராணி மந்திரிமார்களைத் தானாகவே நியமித்து கபினெட் மந்திரிசபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து நடத்திவந்தாள். ஆனால் ஹனோவ மன்னர்கள் காலத்திற் பெரும் மாற்றங்கள் உண்டாயின. "அரசுரிமைத் தீர்ப்புச் சட்டம் எங்களுக்கு ஒரு அந்நிய அரசனைத் தந்தது. அந்நிய அரசன் ஒரு பிரதம மந்திரியைத் தந்தான்" என்று ஆங்கிலேயன் ஒருவன் கூறினான். 1721-ன் பின் அரசனுடைய முதன் மந்திரியாகிய சேர் ரொபேட் வால்போல் அரசனோடு லத்தீன் பாஷையிற் பேசுவது வழக்கம். முதலாம் ஜோர்ஜ் மன்னனுக்கு ஆங்கிலம் முற்றாகத் தெரியாது. இரண்டாம் ஜோர்ஜ் மன்னனுக்கு ஓரளவுக்குத் தெரியும். இருவரில் ஒருவராகுதல் ஆங்கிலேய அரசியல் முறையை அறிவதற்குச் சிரத்தை எடாதபடியால் அதனுடைய விபரங்களையறிந்துகொள்ள முடியாமற் போயிற்று. ஆகையால் மந்திரிசபையின் கூட்டங்களுக்கு அவர்கள் தலைமை தாங்கி நடத்த முடியவில்லை. மந்திரி ஒருவனே கூட்டங்களை நடத்தவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது: மந்திரி சபையின் அதிகாரமும் அதிகரித்தது. மந்திரிமார்களை அரசன் நியமியாது பிரதான மந்திரியே நியமிக்கவேண்டியிருந்தது. ஆகையால் அவன் பிரதம மந்திரியென அழைக்கப்பட்டான். அரசன் மந்திர ஆலோசனைக் கூட்டங்களிற் கலந்து கொள்ளாமையால் நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தீர்க்கும் அதிகாரத்தை இழக்கவேண்டியதாயிற்று. அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி முதன் மந்திரி அரசனிடம் போய்க் கூறி மந்திரியின் புத்திமதி இதுவெனக் கூறினான். அரசன் அதை விளங்கிக்கொள்ளாவிட்டாலென்ன, சிரத்தை காட்டாவிட்டாலென்ன தன் சம்மதத்தைக் கொடுப்பதுண்டு. நாளடைவில் அரசனுடைய அதிகாரம் குன்றிப்போக மந்திரிசபை அதைப் பெற்றது.



படிப்படியாக கபினெட் அரசாங்க முறையின் மற்றைய அம்சங்களும் தோற்றின. மந்திரிமார்கள் எல்லோரும் ஒரே கட்சியிலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்டனர். எல்லோரும் ஒரு பொதுக்கொள்கையுடையவராகையால் கூட்டுப் பொறுப்புடன் விளங்கினர். பொதுக்கொள்கையிலபிப்பிராய பேதம் ஒரு மந்திரியாகுதல் காட்டினால் அவர் அப்பதவியினின்று நீங்கிவிடுவர். தற்காலத்திலுள்ள மந்திரி சபையினதிகாரம்

RangaRakes
Tamilnavarasam.com

வால்போல் காலத்தில் முற்றாகக் காணப்பட்டதென்று கூறுதல் தவறாகும். அக்காலத்தில் மந்திரிமார்கள் ஒவ்வொருவரும் அரசதிகாரத்துள் அடங்கி நடக்க வேண்டுமல்லாது ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவரல்லர். ஆனால் வால்போல் காலத்தில் அக்கொள்கை ஆரம்பமாகிவிட்டது. இதுவரையும் மந்திரிமார்களுடைய ஆலோசனையைப் பெற்றபொழுதிலும் அரசனே பிரதான தீர்மானங்களைச் செய்தான். ஆனால் காலஞ் செல்ல அரசனுடைய ஆலோசனையைப் பெற்றோ, பெறாமலோ மந்திரிமார் தீர்மானங்களைச் செய்தனர். பாராளுமன்றத்தின் தீர்ப்புக்கு அரசன் சம்மதங் கொடுக்கவேண்டியிருந்தது, இவ்விதமான நிலைபரத்தில் மந்திரி சபைக்குத் தலைமை வகித்த மந்திரி பிரதம மந்திரியெனக் கருதப்பட்டார். ஆகையால் வால்போலை முதற் பிரதம மந்திரியெனக் கூறலாம். 1742-வரையும் வால்போல் அரசியல் விஷயங்களைத் திறமையுடன் நடத்தியதோடு இங்கிலாந்தின் பணநிலையைத் திருத்தியும், இங்கிலாந்து யுத்தத்திலீடுபடாமலும் சமாதானம் நிலவத்தக்கதாகவும் நடத்திவந்தார். விக் கட்சிக்குத் தலைவராய் விளங்கிய வால்போல் பலமுறையும் எதிர்க்கட்சியினரால் கண்டிக்கப்பட்டார். கைலஞ்சம் வாங்கும் முறை விக் கட்சியிலுள்ள இளம் அரசியல் வாதிகளாலும் கண்டிக்கப்பட்டது. ஆனால் முதலாம், இரண்டாம் ஜோர்ஜ் மன்னர்களின் ஆதரவை வால்போல் பெற்றிருந்தமையால் அரசாங்கத்தை நடத்தக்கூடியதாகவிருந்தது. பிரித்தானியாவிலுள்ள வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஸ்பானியரோடும் பிரென்சுக்காரரோடும் வியாபாரப் போட்டியினாலேற்பட்ட யுத்தத்தை ஆரம்பித்ததினாலே சமாதானத்தை விரும்பிய வால்போல் 1742-ல் தன் பதவியினின்று நீங்கினார். இவருக்குப் பின் வந்த மந்திரிகள் இவரைப் போல் திறமை வாய்ந்தவர்களல்ல. இதுவரையும் விக் கட்சி அதிக செல்வாக்குடன் அரசாங்கத்தை நடத்



தியது. 1760-ல் மூன்றாம் ஜோர்ஜ் சிங்காசனமேறியவுடன் அதனுடைய செல்வாக்குக் குறைந்தது.

முதலாம் இரண்டாம் ஜோர்ஜ் மன்னர்கள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறவேண்டுமென்றும் மாபெரும் புரட்சியின்பின் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குப் பிரகாரம் அரசனுக்குரிய நிலையை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் எண்ணங்கொண்டான், விக் கட்சியினரின் அதிகாரத்தை வெறுத்த பிற்றும் எதிர்க்கட்சியாரும் அவ்விதமாகவே அபிப்பிராயப்பட்டனர். ஜோர்ஜ் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்தமையினால் தான் ஆங்கிலேயனென்றே நினைத்து நேர்மையும் துணிவும் தன்னம்பிக்கையுமுடையவனாகக் காணப்பட்டான். ஜோர்ஜ் சிங்காசனமேறியவுடன் தான் ஆளவேண்டுமென்றவெண்ணமுடையவனானான். அவனுடைய ஜேர்மன் தாயார் "ஜோர்ஜே அரசனாகவிரு" என்று பலமுறையும் கூறினதுண்டு. ஆகையால் ஜோர்ஜ், விக் கட்சியினர் அரசனிடம்பெற்ற ஆதரவையும், அவர்களுக்கிருந்த அதிகாரத்தையும் ஒழிக்க வேண்டியதாயிற்று. அதுவுமல்லாமல் அரசன் தான் விரும்பிய மந்திரிமார்களைக் கட்சிபேதம் கவனியாது நியமிக்கவேண்டிய அவசியமுமேற்பட்டது. அரசாங்கத்தின் முக்கிய விஷயங்களை ஆராயும்போதும், பிரச்சினைகளைத் தீர்க்கும்போதும் அரசனுடைய அபிப்பிராயம் கவனிக்கப்படவேண்டியதவசியம். ஒத்துழைக்காத மந்திரியை அப்பதவியினின்று நீக்கும் பொறுப்பு அரசனுக்கல்லாது கபினெட் சபைக்கு இல்லை. இவ்விதமான அரசியல் முறைக்குப் பிற் ஒருவரே அரசனுக்கு ஆதரவளித்தார். ஆனால் பாரிஸ் உடன்படிக்கையினால் அதிருப்திகொண்டு பிற் 1766 லேயே மீண்டும் தன் பதவியை ஏற்றுக்கொண்டார். 1761-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விக் கட்சியினர் பெரும்பான்மையான அங்கத்தவர்களைப்பெற முடியவில்லை. அடுத்த ஆண்டில் நியூகாஸிலும் தம் பதவியினின்று

RangaRakes
Tamilnavarasam.com

விலகவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. அச்செயலும், அரச ஆதரவில்லாமையாலும், ஐம்பதாண்டுகளாகச் செல்வாக்கைச் செலுத்திய விக் கட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது. அப்போதுள்ள நிலையில் அரசனுடைய ஆதரவைப்பெற்ற எந்தச் சபையோ அதே பெரும்பான்மையான அங்கத்தவர்களையுடையதாய் அரசாங்கத்தை நடத்தமுடியும். அந்நேரத்தில் டோரிக்கட்சியினரும் ஹனோவை மன்னர்களுக்கு ஆதரவளிக்கச் சித்தமாயினர். பதவிகளையும், வெகுமதிகளையும் விருப்பத்தின்படி அளித்து பாராளுமன்றப் பொதுச்சபையில் அரசன் பலருடைய வாக்குகளைப் பெறக்கூடியதாகவிருந்தது. அரசனுடைய கொள்கைகளையும், விருப்பத்தையுமனுசரித்த அரசனுடைய நட்பினரும் அச்சபையிலிருந்தனர். அவ்வண்ணமாக பாராளுமன்றத்தில் தன் செல்வாக்கைக் காட்டியுள்ளான். விக் கட்சியிலும் பிரிவு ஏற்பட்டது.

1751-ல் பிற் தன் பதவியினின்று விலகியமையால் அவ்விடத்துக்கு அரசனின் ஆசிரியராயிருந்த பியூட் என்பவர் நியமிக்கப்பட்டார், தன்னுடைய செல்வாக்கை நிலைநாட்டுவதற்காக கைலஞ்சம் கொடுக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்காளானார். அவர் தன் பதவியினின்று நீங்க ஜோர்ஜ் கிறென்வில் என்றொரு நியாயதுரந்தரரைப் பிரதம மந்திரியாக நியமித்தார். அமெரிக்க குடியேற்ற நாடுகளோடுள்ள விவாதத்தைப் புத்தியாகத் தீர்த்துக்கொள்ள முடியாமல் அதைக் கூட்டிவிட்டாரென்றே சொல்லலாம். அவரும் 1765-ல் தன் பதவியினின்று விலகினார். பின்பு றொக்கிங்காம் பிரபு பிரதமராக நியமிக்கப்பட்டார். பிற் அவரின்கீழ் வேலை செய்ய விரும்பாமையால் றொக்கிங்காம் விலக பின் அப்பதவியை ஏற்றார். அடிக்கடி சுகயீனமாயிருந்தமையால் பிற் முன்போற் திறமையுடன் அரசாங்கத்தை நடத்தமுடியவில்லை. 1770 தொடக்கம் பன்னிரண்டு வருடகாலம் நோர்த் பிரபுவே அரசாங்கப்



பொறுப்பையேற்று அரசனுடைய இஷ்டப்படி நடந்துகொண்டார்.

நீண்ட காலமாக அரசாண்ட ஜோர்ஜ் மன்னன் (1760 — 1820) காலத்தில் பெரும் விஷயங்கள் நடைபெற்றன: அரசன் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறச்செய்த முயற்சிகளைப் பற்றி இந்த அதிகாரத்திற் படித்திருக்கிறோம். இனி அமெரிக்க குடியேற்ற நாடுகளையிழந்த வரலாற்றையும், இந்தியாவிலேற்பட்ட சம்பவங்களையும், பிரான்சியப் புரட்சியையும், நெப்போலியனுடைய யுத்தத்தையும், அயலாந்திலுள்ள நிலபரத்தையும் பற்றி அடுத்த அத்தியாயங்களிற் படிப்போம்.

### வினாக்கள்

1. ஹனோவர் நாட்டு இளவரசன் இங்கிலாந்தின் அரசுரிமையை எப்படிப் பெற்றான்?
2. முதலாம் இரண்டாம் ஜோர்ஜ் மன்னர்கள் முன்னிருந்த அரசர்களின் அதிகாரங்களில் எவற்றை இழந்தனர்? அப்படி இழப்பதற்குரிய காரணங்கள் யாவை?
3. முதலாம் ஜோர்ஜ் மன்னன் காலத்தில் எந்த அரசியல் கட்சி அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்தியது?
4. விக் கட்சியின் எழுச்சிக்குக் காரணம் யாது?
5. வால்போலை முதற் பிரதம மந்திரியென்று கூறலாமா?
6. வால்போலின் நிர்வாகத்தைப்பற்றி விபரி.
7. வால்போலின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுரிய காரணங்களை ஆராய்க.
8. விக் கட்சியின் வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஆராய்க.
9. மூன்றும் ஜோர்ஜ் மன்னன் இழந்த அரச அதிகாரத்தை மீண்டும் எவ்வாறு பெற முயற்சித்தான்?
10. மூன்றும் ஜோர்ஜ் மன்னன் காலத்தில் என்ன விசேஷ சம்பவங்கள் நடைபெற்றன.



RangaRakes Tamilnavarasam.com

# பதினோராம் அத்தியாயம்

## பிரித்தானியரும் அமெரிக்க குடியேற்ற நாடுகளும்

ஏழாண்டு யுத்தத்திற்பெற்ற வெற்றியின் பலனாக கனடாவிலிருந்து பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயராற் துரத்தப்பட்டனர். ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ்ப்பட்ட அமெரிக்க குடியேற்ற நாடுகள் பதின்மூன்றும் கனடாவில் பிரெஞ்சுக்காரருக்கிருந்த ஆதிக்கமற்றுப்போனவுடன் அச்சமின்றித் தாய் நாட்டின் தொடர்பை நீக்கிச் சுயேச்சையாக வாழ எண்ணங் கொண்டனர். இனி ஸ்ருவர்ட் வமிசத்தரசர்களுக்குக் குடியேற்ற நாட்டுமக்கள் ஆதரவாயும் கீழ்ப்படிவாயுமிருந்தனர். ஆனால் ஹனோவ மன்னர்களுக்கு அவ்விதமான ஆதரவையளிக்கும் நோக்கமில்லை. அவர்கள் தாய் நாடாகிய இங்கிலாந்தின் அல்லது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நன்மையைக் கருதினரல்லர்.

அந்நேரத்தில் மூன்று பிரதானமான பிரச்சினைகள் தோன்றின. அங்கேயுள்ள அரசியல் முறையும், வர்த்தகம் நடத்திய முறையும், குடியேற்ற நாடுகளின் பாதுகாப்பும், புதிய நிலங்களை ஒழுங்கு படுத்தும் பிரச்சினையும் இருபகுதியாருக்குமிடையில் பல குறைகளையுண்டாக்கி விட்டன.

குடியேற்ற நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் முறையின்படி அரசனால் நியமிக்கப்பட்ட தேசாதிபதியிலும், நியமிக்கப்பட்டவொரு நிர்வாக சபையிலும் நிர்வாகப் பொறுப்பு விடப்பட்டிருந்தது. வரிகளை விதிக்கும் பொறுப்பும், சட்டங்களையாக்கும் அதிகாரமும் குடியேற்ற மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுள்ள சபையில் விடப்பட்டன. இது இங்கிலாந்திலுள்ள முறையைப் பின்பற்றியதொன்றாகும். ஆனால் அவ்வண்ணமாக ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் முறையின்படி தங்களுடைய விஷயங்களை நடத்தும் முழுப்பொறுப்பும் குடியேற்ற நாடுகளுக்குக்



கிடைக்கவில்லை. சுதந்திரத்தை விரும்புவது எவர்க்குமியல்பாகையால், நிர்வாக அரசியற் பொறுப்பைக் குடியேற்ற வாசிகள் விரும்பியது தடுக்கமுடியாத சம்பவமாகும். குடியேற்ற நாடுகளிலுள்ள சில சட்டசபைகள் தேசாதிபதிக்கும், நீதிவான்களுக்கும் கொடுக்கவேண்டிய சம்பளத்தைக் கொடுக்க மறுத்துத் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்தினர். அதனால் அவ்வுத்தியோகத்தர்களுக்கு அவமானமுண்டானதென்று இங்கிலாந்து அரசாங்கம் எண்ணியது. நீதிவான்களுக்கு நீதி வழங்கும் சுதந்திரத்திற்குப் பங்கமேற்பட்டதெனவுணர்ந்தனர். இதனால் இருபகுதியாருக்குமிடையில் மனஸ்தாபமுண்டானது. ஆனால் சம்பளங்கொடுக்க மறுப்புக் காட்டியதனால் பெரும் விவாதமுண்டானதென்று சொல்ல இடமில்லை. சுதந்திர உணர்ச்சியே அவர்களுடைய உள்ளத்தில் பதிந்து கிடந்ததெனலாம்.

இரண்டாவது பிரச்சனை வர்த்தகத்தினாலேற்பட்டது. 1660 தொடக்கம் வர்த்தகத் தொடர்பும், பிரித்தானிய ஏகாதிபத்தியமெங்கும் ஒரே மாதிரியாகக் கவனிக்கப்பட்ட வர்த்தக சம்பந்தமான சட்டங்களும் ஏகாதிபத்தியத்தின் ஒற்றுமைக்குக் காரணமாகவிருந்தன. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற வர்த்தகப் பொருட்கள் பிரித்தானியருடைய அல்லது குடியேற்ற நாடுகளின் கப்பல்களிற் கொண்டுசெல்லவேண்டுமென்பதும், குடியேற்ற நாடுகளிற் சில பிரதான விளைபொருட்களை இங்கிலாந்துக்கே ஏற்றுமதி செய்யவேண்டுமென்பதும், பிறநாடுகளிலிருந்து அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள் இங்கிலாந்துக்கூடாகவே செல்லவேண்டுமென்பதும், குடியேற்ற நாடுகளின் விளைப்பொருட்களைப் பிரித்தானியாவே வாங்குவதற்குத் தனி உரிமையுடையதென்பதும் அவ்வர்த்தக முறையின் விசேஷ அம்சங்களாம். தாய் நாட்டின் நன்மையைக் கருதியே இம்முறை ஸ்தாபிக்கப்பட்டதென்று பலர் கூறுவர். பிரித்தானியர் தங்களுடைய வியாபாரத்துக்குப் போட்டி இல்லாவண்ணம்

RangaRakes
Tamilnavarasam.com

குடியேற்ற நாடுகள், கம்பளம், உருக்கு, தொப்பி முதலியன செய்யாத முறையிற் சட்டங்களை உண்டாக்கினர். புகையிலை, பஞ்சு முதலிய அமெரிக்காவிலுள்ள விளைபொருட்கள் பிரித்தானியாவுக்கு மாத்திரம் அனுப்பலாம். ஆனால் தானியங்கள், மீன் முதலியன அமெரிக்க நாடுகள் விரும்பிய இடத்துக்கு அனுப்பமுடியும். ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் இங்கிலாந்து மூலம் அனுப்பப்பட்டமையால் சுங்கவரியிறுக்க வேண்டியிருந்தது. பிரித்தானியர் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புகையிலையையே பாவிக்கவேண்டும். இக்கட்டுப்பாடுகள் எல்லாம் தங்களைப் பாதிக்காவண்ணம் குடியேற்ற வாசிகள் கள்ள வியாபாரத்தை ஒழுங்காக நடத்திவந்தனர். 1763-ல் கிரேன்வில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாய் வந்தவுடன் அமெரிக்க சுங்கவரியினின்று சேர்ந்த வருமானம் வருடம் 2000 பவுண் மாத்திரமாகையால் அதைக் கூட்டுவதற்காகக் கள்ள வியாபாரத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் சட்டங்களை ஏற்படுத்தினான். இதனாற் குடியேற்ற வாசிகளுக்குக் கோபமேற்பட்டது.

இவ்வகையாய் வர்த்தக சம்பந்தமான கட்டுப்பாடுகளை, முழு ஏகாதிபத்தியத்திற்கும் பொதுவாக சட்டநிருபண அதிகாரத்தைச் செலுத்திய பிரித்தானிய பாராளுமன்றமே உண்டாக்கியது. அதனுடைய அதிகாரத்துக்கு இதுவரையும் ஒரு மறுப்பும் ஏற்படவில்லை. பிரித்தானிய பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளிலும் பார்க்க பிரித்தானியாவின் பொருளாதாரத் தேவைகளையே கவனித்தது. விக் கட்சியினரின் ஆட்சி காலத்தில் இவ்விதமான சட்டங்கள் உண்டாக்கப்பட்டன. இச்சட்டங்கள் நடைமுறையில் பெரும்பாலும் அலட்சியஞ் செய்யப்பட்டபொழுதிலும் வர்த்தகமுறை தாய்நாட்டின் நன்மைக்காகவே ஸ்தாபிக்கப்பட்டதென்று கருத இடமுண்டு. குடியேற்ற வாசிகள் கள்ள வியாபாரத்தை நடத்தியபொழுதிலும் இம்முறையை யேற்



றுக்கொண்டனர். பிரான்சிய மேற்கு இந்திய தீவுகளிலிருந்து குடியேற்ற நாடுகள் சீனியை ஏராளமாக வாங்கினர். ஆகையால் 1733-ல் வால்போல் பிரித்தானிய மேற்கிந்திய தீவுகளின் நன்மைக்காக அங்கிருந்துவந்த சீனிக்கு தீர்வைப்பணத்தை அதிகமாகக் கூட்டிவிட்டார். குடியேற்ற வாசிகள் கள்ள வியாபாரஞ் செய்து அச்சட்டத்தை அலட்சியஞ் செய்துவிட்டனர். கிரென்வில் அந்தத் தீர்வையை யறவிடும் நோக்கத்துடன் அரைவாசியாகக் குறைத்துவிட்டார். இதுவும் அவர்களுக்குக் கோபத்தை மூட்டியது.

அலக்ஹனிக்கும் மிசிசிப்பிக்குமிடையிலுள்ள பரந்த நிலப்பரப்பில் "சிவப்பு இந்தியர்" என்ற சாதியினர் வசித்துவந்தனர். வர்த்தகர்கள் நிலங்களை வாங்கும் பிரபுக்களின் அநீதியிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவேண்டியிருந்தது. சிவப்பு இந்தியர் நிலங்களை பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்மூலமல்லாது இலவசமாக வழங்காவண்ணம் சட்டம் உண்டாக்கப்பட்டது. தங்களுடைய சுதந்திரமான உரிமைக்கும், நாட்டின் பெருக்கத்துக்கும் இது பாதகமாயிருக்கென்று அவர்களுக்குக் கோபமும் பிரித்தானியர்மேற் சந்தேகமுமுண்டானது. சிவப்பு இந்தியருக்குச் சமீபத்திலுள்ள குடியேற்ற நாடுகள், அவர்களால் இடையிடையே கொள்ளையடிக்கப்பட்டன. ஆகையால் பிரெஞ்சுக்காரரிலும், சிவப்பு இந்தியரிலுமிருந்து குடியேற்றநாடுகளைப் பாதுகாப்பதற்காக ஒரு நிரந்தரமான சேனைப்படையொன்றை வைத்திருக்க வேண்டியிருந்தது. அச்சேனையை வைத்திருக்குஞ் செலவுக்கு வேண்டிய பணத்தில் ஒருபகுதியைக் குடியேற்றவாசிகள் கொடுக்கவேண்டுமென்று கிரென்வில் அபிப்பிராயங்கொண்டது ஒரு அநீதியான செய்கையென்று எண்ணுவதற்கு இடமில்லை. ஏழாண்டு யுத்தத்தினாலே இங்கிலாந்தின் கடன் இருமடங்கதிகரித்தது. இங்கிலாந்து மக்களும் பல வரிகளுமிறுத்துக் களைத்துப்போயிருந்தனர். பிரான்சும், ஸ்பானியாவும் ஒன்றுசேர்ந்து இங்கிலாந்துக்கெதிரே சண்டைசெய்ய ஆயத்தஞ்செய்துகொண்

RangaRakes
Tamilnavarasam.com

டிருந்தனர். இங்கிலையில் மூன்றிலொருபங்கு பணத்தைக் கொடுத்தாற்போதுமென்றும், சட்டத்துக்கடங்கிய ஒவ்வொரு சாதனங்களிலும் முத்திரை ஒட்டப்படவேண்டுமென்றும் அதன் வருவாயைக்கொண்டு தேவையான பணத்தை அறவிடுவதற்கு கிரென்வில் சட்டமொன்றை ஏற்படுத்த யோசித்தார். அதைப்பற்றி விவாதிக்கிறதற்கு ஒருவருடகாலங்கொடுத்து, அமெரிக்க வாசிகள் வேறேதேனும் தகுந்தவழியைக் கூறினால் அதை ஏற்றுக்கொள்வதாயுங்கூறினார். அதற்குப்பதிலாக வேறொரு வழியையும் அவர்கள் கூறத்தவறினமையால் முத்திரைச் சட்டம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (1765) குடியேற்றவாசிகளின்மீது வரியறவிடும் இச்சட்டத்தைப் புகுத்த பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு உரிமையுண்டென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் சுதந்திரத்தை விரும்பிய அம்மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளில்லாததும், மூவாயிரம் மைலுக்கப்பாலுள்ளதுமாகிய பாராளுமன்றம் உண்டாக்கிய அவ்வகையான சட்டத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. "பிரதிநிதித்துவம் இல்லாவிடத்து வரிவிதிக்க முடியாது" என்று கூச்சலிட்டனர். அது ஆங்கிலேயர் மறுக்க முடியாத எதிர்ப்பையுண்டாக்கியது. கிரென்வில் உண்டாக்கிய வர்த்தகக் கட்டுப்பாடுகளினு லேற்பட்ட கோபத்தை இது மேலுங்கூட்டியது. வர்த்தகக் கட்டுப்பாட்டின்மூலம் வரியிறுத்துவந்ததை ஒருபோதும் குடியேற்றமக்கள் விவாதிக்கவில்லை. ஆனால் நேரடியான உள்நாட்டுவரி அநீதியானதென்று கூறினர். பேச்சாளர்கள் அநீதி, அடிமைத்தனம் என்பவைகளைப்பற்றி உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். அந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டவுடன் கலகங்களேற்பட்டன. ஒரு தேசாதிபதியினுடைய வீடு கொள்ளையடிக்கப்பட்டது. ஒருவராகுதல் முத்திரைகளைப் பாவிக்கவில்லை. 13 குடியேற்ற நாடுகளில் ஒன்பது குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஒரு காலமுமில்லாத ஒற்றுமையுடன் சந்தித்து அச்சட்டத்தை



மறுத்தார்கள். இதைக்கேள்வியுற்ற பிரித்தானிய மந்திரிகளும் இராசதந்திரிகளும் வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கூறினர். கிரென்வில் பிரித்தானியாவுக்கு உரிமையுண்டென்றார். பிற், நேரடியான அந்த வரி அநீதியென்றும் அதற்கு குடியேற்றவாசிகள் எதிர்ப்புக் காட்டாமல்விட்டால் அவர்கள் அடிமைகளாவரென்றும் கூறினார். பின்பு கிரென்வில் தன் பதவியினின்று நீங்க றொக்கிங்காம் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவர் சமாதானமுறையைக் கையாளும் நோக்கத்துடன் முத்திரைச்சட்டத்தை நீக்கிவிட்டார். ஆனால் குடியேற்ற நாடுகளின்மீது வரிவிதிக்கப் பிரித்தானியாவுக்குரிமையுண்டெனவுமொரு அறிக்கையை விடுத்தார். அமெரிக்க நாட்டினர் திருப்தியடைந்தமையினால் கஷ்டம் நீங்கியது போற் காணப்பட்டது.

குடியேற்ற நாடுகளுக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலேற்பட்ட மனஸ்தாபத்தின் மூலகாரணமியாதென ஆராய்வது அவசியமாகும். செழிப்பாகவும் நன்னிலையிலுமிருந்த குடியேற்றவாசிகள் அவர்கள்மேலறவிடப்பட்ட சிறு வரிகளைச் சம்மதமாகக் கொடுத்திருக்கலாம். அப்பணம் நாடுகளின் பாதுகாப்புக்காகவே செலவிடப்பட்டன. இனி அப்போர் மூன்றும் ஜோர்ஜ் மன்னனும் அவனுடைய மந்திரிமார்களும் புத்திஈனமான முறைகளை அனுசரித்தமையிலேற்பட்டதென்று கூறுவதும் தவறாகும். உண்மையை ஆராய்ந்தால் இரண்டாம் சாள்ஸ் மன்னனுடைய காலத்தில் உண்டாக்கப்பட்ட குடியேற்ற அரசியல்முறை தற்போது சுதந்திரத்தை விரும்பிப் பெரிய ஐசுவரியமுள்ள சாதியினருக்குத் தகுதியற்றதாய்ப்போய்விட்டது என்றே சொல்ல வேண்டும். அவர்களின் சம்மதமில்லாது ஒருபோதும் நேரடியான வரிவிதிக்கப்படவில்லை. சட்டங்களை உண்டாக்கும் பொறுப்பு அவர்களிலேயேயிருந்தது. தாய் நாட்டு அரசாங்கத்துக்கு எவ்வகையான திறையும் கொடுத்திலர். அவர்களுடைய விருப்பத்தின்படியல்லாது நாடுகளின் எல்லைப்புறங்களின் பாதுகாப்புக்காக போர்

RangaRakes Tamilnavarasam.com

வீரர் திரட்டப்படவில்லை. ஆனால் தாய்நாட்டின் மக்களே அங்கே குடியேறியமையால் அவர்களுடைய இரத்தத்திலேயே சுதந்திர உணர்ச்சி செறிந்திருந்தது. அவர்களுக்கிருந்த அதிகாரம் இரு பிரதான வழிகளாற் குறைக்கப்பட்டிருந்தன. நிர்வாகமும், நீதிவழங்கும் உத்தியோகத்தர்களும் அவர்களால் நியமிக்கப்படாமல் இங்கிலாந்திலுள்ள அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்டனர். இரண்டாவது வெளிநாடுகளோடு செய்யப்பட்ட வர்த்தகத்தின் பிரமாணங்கள் அவர்களாலாக்கப்படாமல், பிரித்தானிய பாராளுமன்றத்தாலுண்டாக்கப்பட்டன. தங்களுடைய அரசாங்க நிர்வாகத்தில் முழு உரிமையையும் பெற்றாலல்லாது சுய ஆட்சியை விரும்பும் சாதியினர் அதிருப்தியடைவது இயற்கை. பொறுப்பை மறுத்தவிடத்து பொறுப்பற்றவர்கள்போல் நடந்துகொள்வர், நீதிவான்கள் அரசனால் நியமிக்கப்பட்டபடியால் அவர்களுக்குச் சம்பளங்கொடுக்க மறுத்தனர். பிரெஞ்சுக்காரருக்கும் சிவப்பு இந்தியருக்குமெதிரே நடத்திய சண்டையில் தங்களுடைய படைகளையனுப்பி உதவிசெய்ய மறுத்தனர். கள்ள வியாபாரத்தை ஊக்கப்படுத்திப் பிரமாணங்கள் பயனற்றனவாய்ப்போகச்செய்தனர். சுய நம்பிக்கையும், சுதந்திர உணர்ச்சியும், பொருளாதாரமும் ஒருங்கேயமையப்பெற்ற குடியேற்றவாசிகள் அவர்கள் மத்தியிலுள்ள நிலைமையின் காரணமாக அவ்வாறு நடந்துகொண்டனரெனலாம். முத்திரைச்சட்டத்தை உண்டாக்காமல்விட்டாலும் இரு பகுதியாருக்குமிடையிலுள்ள உறவு பாதிக்கப்பட்டிருக்கும். கிரென்வில் 1764-ல் தன் புதிய திட்டத்தைப் புகுத்தமுன்னரே குடியேற்ற அரசியல்முறை திருப்திகரமாய் நடைபெறவில்லை. குடியேற்ற அரசியல்முறை திருத்தியமைக்கப்பட்டிருந்தால் இரு பகுதியாருக்குமிடையிலுள்ள பிணக்குகள் தீர்ந்திருக்கக் கூடும்.

முத்திரைச் சட்டம் நீக்கப்பட்டவுடன் சமாதானமேற்பட்டதுபோற் தோற்றியது. ஆனால் பின்னுமொரு விவாதம் தொடங்கியது. 1767-ல் ரவுண்ஷென்ட் என்ற




பொக்கிஷாதிபதி அமெரிக்க நாடுகளிலிறக்குமதி செய்யப்பட்ட தேயிலை, கண்ணாடி கடதாசிக்குத் தீர்வை கட்டவேண்டுமென்று ஒரு சட்டம் வகுத்தார். துறைமுகங்களிலறவிட்டபடியால் அவைகள் உள்நாட்டு வரியல்லவென்றும் அவைகளுக்குக் குடியேற்ற வாசிகள் எதிர்ப்புக்காட்ட முடியாதென்றுங் கூறினர். அவ்வரிகளினால் பெறக்கூடிய தொகை வருஷம் 40000 பவுண் வரையிலிருக்குமென்றும் அப்பணத்திலிருந்து தேசாதிபதிகளும் மேலுத்தியோகத்தரும் சம்பளத்தைப் பெறலாமென்றும் கருதலானர். இது குடியேற்ற வாசிகளின் சுய ஆட்சியை வேரோடு அறுத்துவிடுமென்று அவர்கள் பெரும் எதிர்ப்புக் காட்டினர். நோர்த் பிரபு மந்திரியாய் வந்தவுடன் கண்ணாடி, கடதாசியிலுள்ள வரிகளை நிறுத்தித் தேயிலையிலுள்ள வரியை மாத்திரமறவிட்டுத் தாய் நாட்டுக்கு வரி விதிக்குமுரிமையுண்டென்று வற்புறுத்தினர். இருபகுதியாருக்குமிடையில் ஒற்றுமை குறைந்தவிடத்து அற்ப விஷயங்களும் பெரிதாகக் கவனிப்பதற்கு இடமுண்டு. போஸ்டன் நகரிலுள்ள மக்கள் பிரித்தானிய போர்வீரர்களுக்கு அவமதிப்பை உண்டாக்கினர். கள்ள வியாபாரத்தைத் தடுப்பதற்குச் சென்ற ஒரு ஆங்கிலேயக் கப்பலொன்றில் குடியேற்ற வாசிகள் சிலர் உள்ளிட்டு அதனைத் தீக்கிரையாக்கினர்.

ஆங்கிலேய கிழக்கிந்திய சங்கம் தேயிலையை இங்கிலாந்துக்கு முதல் அனுப்பாமல் அமெரிக்காவுக்கு நேரே அனுப்ப உத்தரவைப் பெற்றது. குடியேற்ற வாசிகளிற் சிலர், ஆங்கிலேய அரசாங்கம் தேயிலையின் விலையைக் குறைத்துத் தாங்கள் வரி கொடுக்கத்தக்கதாகத் தந்திரமான வழியைக் கையாண்டிருக்கென்று சந்தேகங் கொண்டனர். பின்பு போஸ்டன் துறைமுகத்தில் தேயிலையுடன் வந்து சேர்ந்த கப்பல்களுள், மாறுவேடம் பூண்டு அவர்கள் புகுந்து 300 பெட்டி தேயிலையைக் கடலுக்குள் வீசினர். உடனே பிரித்தானிய அரசாங்கம் கோபுங்கொண்டு மசாக்கு



RangaRakes
Tamilnavarasam.com






சேற்றிலுள்ள மேலுத்தியோகத்தர்களை அரசனே நியமிக்கவேண்டுமென்றும் தேசாதிபதியின் உத்தரவின்றிப் பிரசித்தமான கூட்டங்கள் நடத்த முடியாதென்றும் கட்டளை விடுத்தது. போஸ்டன் துறைமுகமும் மூடப்பட்டது. பிலாடெல்பியா என்ற இடத்தில் ஜோர்ஜியாவைத் தவிர்ந்த ஏனைய பன்னிரண்டு நாடுகளும் ஒரு மகாநாடு கூடித் தங்கள் உரிமைகளை நிலைநாட்டத் தீர்மானித்தன. உரிமைப் பிரகடன அறிக்கை ஒன்றைத் தயார்செய்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 13 சட்டங்களையும் நீக்குமாறு கேட்டனர். பிரித்தானியருடைய பொருட்களைத் தங்கள் நாடுகளிலேற்றுக்கொள்ளவும் மறுத்தனர். நோர்த் பிரபு சமாதான முறையைக் கையாள எத்தனித்தனர். லெக்சிங்டனிற் தொடங்கிய சண்டை (1775) யோடு அவரது முயற்சி பயனற்றதாய்ப்போனது. அடுத்த ஆண்டில் 13 குடியேற்ற நாடுகளும் தங்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டினர். அன்றுதொட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரம் ஆரம்பமானது.

மூவாயிரம் மையிலுக்கப்பாலுள்ள நாட்டிற் சண்டை செய்வது இங்கிலாந்துக்கு மிகவும் கஷ்டம். ஏழாண்டு யுத்தத்தில் இங்கிலாந்தும் பிரான்சும் ஐரோப்பாவிலிருந்து படைகளையனுப்பி கனடாவிற் சண்டை செய்தனர். ஆனால் இந்த யுத்தத்தில் அமெரிக்கர் தங்களுடைய நாட்டிலிருந்தே சண்டை செய்தனர். பிரென்சுக்காரர் தங்களுடைய கடற்படையைக் கொடுத்து அமெரிக்க நாடுகளுக்கு உதவிசெய்தனர். பிரித்தானியர் எதிரிகளின் பலத்தை அற்பமாகக் கருதினர். அதுவுமல்லாமல் சண்டைக்குப் போதிய ஆயத்தமுஞ் செய்யவில்லை. இனி அவர்கள் சமாதானத்தைக்கொண்டு வரும் நோக்கத்துடன் அரைமனத்துடன் சண்டை செய்தனர். பிரித்தானியர் சிறந்த சேனைத்தலைவனுமில்லாமல் சம்பளத்துக்காகப் போர் புரியவந்த ஜேர்மன் போர்வீரரைக் கொண்டுள்ள சேனையோடு சண்டை செய்தனர். ஆனால் அமெரிக்க நாட்டுவாசிகள் உவா

RangaRakes Tamilnavarasam.com

ஷிங்டன் என்ற ஒரு பெரும் வீரனைச் சேனாதிபதியாகப் பெற்றனர், அவன் களைப்புறாது மனதிடத்துடன் சண்டை செய்தான். எட்டு வருடங்களாக நடந்த அச்சண்டையின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் கடலாதிக்கத்தையிழந்தமையினால் பிரான்சும், ஸ்பானியாவும் குடியேற்ற வாசிகளுக்கு உதவியளித்தன.

புறாக்லின் (1776) என்ற சண்டையில் ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். பின்பு சரடோகா என்ற சண்டையில் 4000 போர்வீரர்களைக் கொண்டுள்ள பிரித்தானிய சேனை சரணடைந்தது. பிரான்சும், ஸ்பானியாவும் பிரித்தானியாவுக்கெதிரே போருக்கெழுந்தன. ஒல்லாந்தும் அவைகளோடு சேர்ந்தது. நடுநிலைமை நாடுகளின் கப்பல்களை ஆங்கிலேயர் பரிசோதிக்கத் தொடங்கியமையால் ருஷிய, டென்மார்க், சுவீடன் நடுநிலைத் தற்காப்பு ஐக்கியம் பூண்டு பிரித்தானியரை எதிர்த்தனர். ஸ்பானியா ஜிப்ருல்ரரைத் தாக்கியது. பின்பு யோர்க்டவுனில் நடந்த சண்டையிலும் பிரித்தானியர் தோல்வியுற்றனர். பின்பு வேர்சேயில்ஸில் சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டது. அமெரிக்க நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றன. பிரித்தானியர் மைனோக்கா, புளோரிடாவை ஸ்பானியாவுக்குக் கொடுத்தது. அமெரிக்க சுதந்திரப்போர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பலத்தைக் குறைத்தாலும், ஆங்கிலேயர் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி மீண்டும் பலமுற்றனர்.

இந்தப் போர், ஜனநாயக அரசியல் முறையை ஸ்தாபித்த பெருமையை அமெரிக்க நாட்டவர்களுக்குக் கொடுத்தது. சுய இராச்சியத்தின் மூலம் ஒற்றுமையில்லாது சிதறிக்கிடக்கும் பல நாடுகளும் ஐக்கியம்பெற முடியுமென்பதை வெளிப்படையாகக் காட்டிவிட்டது. பழைய கண்டங்களிலும், புதிய கண்டத்திலும் வெற்றிகரமாய் ஸ்தாபிக்கப்பட்ட சுயஆட்சி, ஜனநாயகக் கொள்கையைப் பலமுறச் செய்ததெனலாம். அமெரிக்



காவிற் சண்டைசெய்த பிரான்சியப் போர்வீரர் சுதந்திர உணர்ச்சியைப் பெற்றதினால் தாய் நாட்டுக்குச் சென்றதும் அவ்வகையான சுதந்திரத்தைப் பெற வேண்டுமென்று புரட்சியையுண்டாக்கினர்.

1787-ல் குடியேற்ற நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு ஆட்சியின்கீழ் ஒற்றுமைப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளென அழைக்கப்பட்டன. அதற்கு ஜோர்ஜ் வாஷிங்டன் முதல் தலைவரானார்.

### வினாக்கள்

1. அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கும் பிரித்தானியருக்குமிடையில் எத்துறைகளில் விவாதங்களேற்பட்டன?
2. பிரித்தானிய அரசாங்கம் ஏற்படுத்திய வர்த்தகக் கட்டுப்பாடுகள் குடியேற்ற நாடுகளை எவ்வாறு பாதித்துவிட்டன?
3. அமெரிக்க சுதந்திரப்போரின் காரணங்களை ஆராய்க.
4. பிரித்தானிய அரசாங்கம் அமெரிக்க குடியேற்ற நாடுகளில் ஏற்படுத்திய நிர்வாகத்திலென்ன குறைகள் காணப்பட்டன?
5. ஏழாண்டு யுத்தத்தில் வெற்றிபெற்ற ஆங்கிலேயர் அமெரிக்க சுதந்திரப்போரில் தோல்வியுற்றதற்குக் காரணமென்ன?

RangaRakes Tamilnavarasam.com

## பன்னிரண்டாம் அத்தியாயம்

# பிரான்சியப்புரட்சியும், ஐரோப்பியயுத்தமும், அதன்பயன்களும்

உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறுகாலங்களில் புரட்சிகளேற்பட்டிருக்கின்றன. ஆனால் பிரான்சியப் புரட்சியினால் மக்கள் அடைந்துள்ள பயன்களைப் போல வேறுபுரட்சியிகளினாலடையவில்லை. அதைப்பிரான்சியப் புரட்சியென்று தனித்துக்கூறாது உலகப்புரட்சியென்றே கூறவேண்டும். அதை நிலமானியமுறை நிலவியகாலத்திலுள்ள சமூதாய ஒழுங்குக்கெதிரே காட்டப்பட்ட எதிர்ப்பெனலாம்; எதேச்சாதிகாரியாக ஆளும் அரசியல் முறைக்கும் பிரேத்தியமாகச் சலுகைகளை அனுபவித்த வகுப்பினருக்குமெதிரே எழுந்த எதிர்ப்பெனலாம்; மக்களின் சுதந்திரம் சமத்துவம் என்பனவற்றை வற்புறுத்தினதெனலாம்; மக்களின் உரிமைக்கேற்றவாறு அவர்களின் சமுதாயத்தைத் திருத்தியமைப்பதற்குச் செய்துள்ள துணிவுகரமான முயற்சியெனலாம். இவ்வகையான புரட்சி பிரான்சு தேசத்திலே ஏற்பட்டதற்கும் ஏனையநாடுகளிலேற்படாததற்குமுரிய காரணங்களை ஆராய்ந்துபார்த்தால் ஐரோப்பிய நாடுகளுக்குள்ளே கல்வியறிவும் விளக்கமுமுள்ள மக்கள் அந்நாட்டில் அக்காலத்தில் வசித்தனரெனலாம். அதுவுமல்லாமல் அங்கேயுள்ள அரசியல் முறையும் பெருங் குறைகளையுடையதாகையால் மக்களுக்கு அதில் நம்பிக்கை குறைந்துவிட்டது.

பிரித்தானியாவில் வெகுகாலத்துக்கு முன்பே யற்றுப்போன நிலமானியமுறையிற் காணப்பட்ட சகிக்க முடியாச் சிலவழக்கங்கள் பிரான்சு தேசத்திற் காணப்பட்டன. அக்குறைபாடுகள் நீக்கப்படவேண்டுமென்னும் நோக்கமே புரட்சிக்கு மூலகாரணமாகும். அந்நாட்டிலுள்ள மத்தியவகுப்பினர் இங்கிலாந்தையும் ஒல்லாந்தையும் தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்க



கல்வியறிவில் மேம்பட்டவர்களாகவிருந்தனர். ஆனால் தங்களுண்டய விஷயங்களை நடத்தும் பொறுப்பில் அவர்களுக்கு ஒருபங்குமில்லை; மேல்வகுப்பினர் வரிகொடுக்காமலிருந்தமையால் மத்திய வகுப்பினர் பலவரிகளை யிறுக்கவேண்டியிருந்ததினால் சுயேச்சையான முயற்சிகளொன்றும் செய்ய முடியவில்லை. அதிருப்திகொண்ட மத்தியவகுப்பினரே புரட்சியை நடத்தினர். 170,000 வரையிலுள்ள பிரபுக்கள் பலசலுகைகளையும் பரம்பரையாக அனுபவித்துப் பிரத்தியேகமான வகுப்பினராக வாழ்ந்தனர். வரிகள் ஒன்றுங் கொடுக்கவில்லை. பிரான்சின் ஐந்திலொரு நிலத்தைப்பெற்றிருந்ததோடு ஏனைய பகுதியின் பிரயோசனத்தில் பத்திலொருபாகத்தை உரிமையாக்கிய தேவாலயம் தனிப்பட்டமுறையில் அதற்குரிய உரிமைகளைப்பாதுகாத்தது. அதிகாரிகள் உண்டாக்கும் துன்பத்தினின்று ஏழைகளைக் காப்பாற்றும் கடமைகளையுஞ் செய்யத் தேவாலயந் தவறிவிட்டது.

பிரான்சுதேசத்திலிருந்த பிரபுக்கள், சமயகுருமார்கள், மத்திய வகுப்பினர் என்றமூன்று வகுப்பினருள்ளும் முதல்வகுப்பினராகிய பிரபுக்கள் வரியிறுக்காத சலாக்கியத்தை அனுபவிக்குமளவும் நாட்டின் பணநிலையைத்திருத்தி அமைப்பதற்கு முடியாமலிருந்தது. பிரபுக்கள் கவலையற்ற குதூகலமான வாழ்க்கையை வாழ்ந்து, குறைந்த மத்திய வகுப்பினரை இழிவான முறையில் நடத்தினர். அவர்கள்மற்ற வகுப்பினருக்கில்லாத உரிமைகளையுஞ் சலாக்கியங்களையும் அனுபவித்ததன்றித் தங்களுடைய நிலங்களிற் குடியிருந்த விவசாயிகளையும் துன்புறுத்தினர். அவர்களுடைய பயிர்கள் இருக்குமிடமெல்லாம் வேட்டையாடியழித்தனர். பிரபுக்கள் வளர்த்த புறாக்கள் முதலிய பறவைகளும் பயிர்களுக்கு அழிவையுண்டாக்கின. விவசாயிகள் அரசனுக்கு ஏராளமான வரியிறுத்ததோடு, பிரபுக்களுக்குச் சரீரசேவையும் வரியுங் கொடுத்து வந்தனர். சொந்த நிலங்களையுள்ள விவசாயிகள் சுதந்திரமாகவோ சுகமாகவோ வாழமுடியவில்லை, மத்தியவகுப்பினரில் அனேகவிவேகிகளும் கல்

RangaRakes
Tamilnavarasam.com

வியறிவுள்ளவர்களும் மிருந்தபோதிலும் திருச்சபைகளிலும் அரசாங்கத்திலும் உயர்ந்த உத்தியோகப் பதவிகளைப் பிரபுக்களே கவர்ந்தனர். சமுதாயநிலை இவ்விதமாக விருந்தபோதிலும் அரசாங்கம் திறமையாய் நடைபெறும்வரையிற் சனங்கள் இக்குறைகளைச் சகித்துக்கொண்டிருந்தனர்.

சமுதாயத்திலிருந்த குறைகளைவிட அரசியலிலும் பல குறைகள் காணப்பட்டன. பதினாலாம் லூயிமன்னனுடைய காலத்தில் பிரான்சுதேசம், ஐசுவரியத்திலும், நாகரிகத்திலும் கல்வித்துறையிலும் அதிகமேம்பாடுற்றிருந்த போதிலும் அவன் திருப்தியடையாது தனது நாட்டை ஐரோப்பாவில் போட்டியில்லாத முதன்மை பெற்ற நாடாக்கவேண்டுமென அவாவுற்றான். இக்காரணத்தினாலே ஐரோப்பாவிலுள்ள ஏனையநாடுகள்யாவும் ஒருமித்து லூயி அரசனுக்கெதிரே சண்டையிட்டதினால் ஈற்றில் பிரான்சுதேசத்தின் வலிமை குன்றியது. லூயி ஒரு ஏதேச்சாதிகாரியாயிருந்தபோதிலும் அரசியலைச் செவ்வனே நடத்தும் திறமைவாய்ந்தவனாயிருந்தமையினாற் பிரசைகள் அவன்மேல் விருப்பமுடையவர்களாயிருந்தனர். அவ்வரசனுக்குப்பின் ஆண்ட இருஅரசர்களாகிய பதினைந்தாம் லூயியும் பதினாறாம் லூயியும் திறமையற்றவர்களாகையாற் பிரசைகள் அவர்கள் மேல் வெறுப்புக்கொண்டனர். அவர்கள் நாட்டின் நன்மைக்காகிய வேலைகளிற் சிரத்தை யெடுக்கவில்லை. அரசாங்கத்தில் மக்கள் பங்குபற்றவில்லை. 1614-ன் பின் பிரான்சியபாராளுமன்றமுங் கூட்டப்படவில்லை. பதினாறாம் லூயியும் பாராளுமன்றத்தைக் கூட்டாமல் தன் எண்ணப்படி அரசியலை நடத்தினான். பிரான்சிய மக்கள் அரசனுக்குக் கீழ்ப்படிவாயிருந்தனர். ஒருபெரிய அரசன் தேவையானதிருத்தங்களைச் செய்து புரட்சி ஏற்படாமற் தடுத்திருக்கலாம். ஆனால் பதினாறாம் லூயி நன்னோக்கமும் தயாளகுணமுமுடையவனாயினும் உறுதியான மனநிலையற்றவனாயும், அரசியும் அழகுவாய்ந்தவளாயினும் யுக்தியற்றவளாயும் மக்களின் நன்மதிப்பைப் பெறாதவ



ளாயும், இருவரும் அரசியலிலேற்பட்ட குறைகளை நிவிர்த்திசெய்யாது கவனயீனமாகயிருந்தனர். மேரி அன்ரோனியட் அவுஸ்திரியாவின் இளவரசியாவள் அவர் அந்நியநாட்டவளாகையால் பிரான்சு தேசத்தின் பிரச்சினைகளையோ அல்லது அதன் அரசியலையோ விளங்கிக்கொள்ளவில்லை. ஆகையால் அரசன்மேல் அவள் காட்டிய செல்வாக்கு தீமையையே விளைத்தது. அந்நிய நாட்டவள் என்று மக்களும் வெறுத்தனர்.

1774 பிரான்சுதேசத்தின் பணநிலை நெருக்கடியான நிலைபரத்திலிருந்தது. வருடம்தோறும் கடனும் அதிகரித்தது. பதினாறாம்லூயி **தேகோற்** என்ற சிறந்த வீரனை முதன்மந்திரியாக நியமித்தார். அவன் பிரபுக்களின் சலாக்கியங்களை நீக்குவதற்காகவும், அரசாங்கத்தைச் சீர்ப்படுத்துவதற்காகவும் பெருந்திட்டங்களை ஆயத்தஞ் செய்தான். ஆனால் அரசனோடு சேர்ந்த சில பிரபுக்களின் சூழ்ச்சியினால் அவன் வீழ்ச்சியுற நேர்ந்தது. பின்பு **நெக்கர்** என்பவர் நிதிமந்திரியாக நியமிக்கப்பட்டார். நெக்கர் பிரான்சுதேசத்தின் வரவையுஞ் செலவையுஞ் சமன்படுத்தி பணநிலையைத்திருத்தி முயன்றவிடத்தில் அமெரிக்க நாடுகளின் சுதந்திரப்போர் தொடங்கியதும் பிரான்சுதேசம் அமெரிக்காவுக்கு உதவி செய்ய ஆரம்பித்தது. அதனாற் பணநிலை அதிகம் குன்றியது. ஈற்றில் நெக்கர், பிரபுக்களும் வரியிறுக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட அவருக்கு மாறாக எதிர்ப்பு உண்டானது. 1784-ல் அவருந்தனது பதவியினின்று நீங்கநேரிட்டது. பின்பு அரசன் எல்லாவகுப்பினரும் வரிகொடுக்கவேண்டுமென்று அரச அதிகாரத்தைப் பாவித்துக் கட்டளையிடப் பிரசைகள் எதிர்த்தனர். லூயி பின்பு நெக்கரைப் பழையடி நியமித்து அவனுடைய புத்திமதியின் பிரகாரம் "ஸ்டேட்ஸ்ஜெனரல்" என்ற பாராளுமன்றத்தைக் கூட்டினார் இதுவரையும் கூட்டப்படாத பாராளுமன்றம், இப்போ பணக்கஷ்டமேற்பட்டதனால் கூட்டப்பட்டது.

RangaRakes Tamilnavarasam.com

இனி அமெரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகளின் சுதந்திரப்போர் நடைபெற்ற பொழுது பிரான்சியப் போர் வீரர்கள் அந்நாடுகளுக்காகச் சண்டை செய்து அவர்கள் வெற்றிபெற உதவி செய்தனர். அந்த சுதந்திரப்போரிற் பங்குபற்றினவர்கள், தாங்களும் தங்களுடைய சுதந்திரத்திற்காக வாதாடவேண்டுமென்ற எண்ணமுடையவர்களானார்கள். ஆயிவேண்டியமாற்றங்களைச் செய்து பிரசைகளுக்குத் திருப்தியுண்டாக்கவில்லை. தத்துவ ஞானிகளும் அறிவாளிகளும் அங்கிருந்த சீர்கேட்டைப்பற்றிக் கண்டித்து எழுதினார்கள். **வொல்ற்றெயிர்** அங்கே காணப்பட்ட பழைய ஸ்தாபனங்களிலுள்ள குறைகளைக் கண்டித்தார் **டிடெறெட்** என்னும் பெரியார் எவ்விதமான பிரச்சனைகளையும் மனுஷன் தனது அறிவைக்கொண்டு தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறினார். **மொன்ரெஸ்கியு,** மனுஷ சமுதாயத்திற் பெறக்கூடிய பெரிய நன்மை சுதந்திரமென்றும், பிரித்தானிய ஸ்தாபனங்களைச் சுட்டிக்காட்டி, சுதந்திரத்தை எவ்வண்ணம் அரசியல் முறைகள் மூலம்பெற்றுக் கொள்ளலாமென்று போதித்தார். திருத்தமான நிலையை நாட்டிலுண்டாக்குவதென்றால் அப்போதுள்ள ஸ்தாபனங்களெல்லாம் முற்றாக அழிக்கப்படவேண்டுமென்றும் கூறினார். அவர்களுடைய கொள்கைகள் மக்களுடைய மனதிற் பதிந்தன. அவர்கள் எல்லோரிலும் பார்க்க **றூஸோ** செய்த போதனையே வரப்போகின்ற புரட்சிக்கு பிரதான காரணமாயிருந்து மக்களுடைய மனத்தைத் தூண்டிவிட்டது. அவருடைய போதனை ஐந்து பிரதான நியாயங்களைக் கொண்டுள்ளது. அரசாங்கத்திற் காணப்படும் சீர்கேட்டினாலேயே மக்களுக்குத் துன்பமுண்டாகின்றது; ஒவ்வொரு மனுஷனுக்கும் சுதந்திரத்தை யளிக்க மறுப்பதே அச்சீர்கேடுகளுக்கு மூலகாரணமாகும்; மக்களின் பூரண ஆட்சிமுறையினாலேயே அவ்விதசுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்; மக்களினுடைய பொதுவான கொள்கை, சரியானமுறையில் நிலைநாட்டப்பட்டால், பிழைகள் ஏற்படஇடமில்லை. ஆகையால்



விரும்பத்தக்க ஒரு சமுதாயத்தை திருத்தியமைப்பதற்கு பழைய ஸ்தாபனங்கள், பழைய வழக்கங்கள் ஒருங்கே அழிக்கப்பட்டு, ஜனநாயக அரசியல் முறை ஸ்தாபிக்கப்படவேண்டுமெனக் கூறினார். சுதந்திரம் நீதி, சகோதரத்துவம், என்னும் சிறந்தகொள்கைகளை நிலைநாட்டுவதற்கு மக்கள் எல்லோரும் ஏகமனதோடு முயற்சிப்பதற்கு தத்துவஞானிகளுடைய போதனைகள் சாதகமாயிருந்தனவெனலாம். மக்களின் சம்மதத்தின் பிரகாரமே, அரசன் அதிகாரத்தைப் பெற்றுள்ளான். ஆகையால் அதிகாரம் அரசனிற் தங்கியிருக்கவில்லையென்றும், மக்களின் பொது நிர்மானத்திற் தங்கியிருக்கிறதென்றும் நாட்டின் அரசாங்கத்தில் ஒவ்வொருவருக்கும் பங்கிருக்க வேண்டுமென்றும் றூசோ கூச்சலிட்டார். இவ்வெண்ணங்கள் மத்தியவகுப்பினரைச் சிந்திக்கச் செய்தன.

1789-ல் "ஸ்டேட்ஸ் ஜெனரல்" என்ற பாராளுமன்றம் கூட்டப்பட்டவுடன், ஆரம்பத்தில் மூன்று வகுப்பினருடைய பிரதிநிதிகளும் வெவ்வேறாகக் கூடி ஆலோசித்தனர். ஆனால் எல்லா வகுப்பினரும் ஒருமித்து ஆலோசனை செய்து வேண்டியதிருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று மத்தியவகுப்பினர் அபிப்பிராயப்பட்டனர். இரண்டாம் வகுப்பைச்சேர்ந்த சமயகுருமார்களும் மத்தியவகுப்பினருடன் சேர்ந்தனர். மூன்று வகுப்பினரும் ஒருமித்துக்கூடிய படியால் அது தேசியமக்கட் சபையென அழைக்கப்பட்டது. இச்சபையைக் கூட்டி வேண்டியதிருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். இப்புதிய சபையின் ஒரு சாரார் அரசனின் ஆளுகையை இல்லாமற் செய்து மக்களின் ஆளுகையை ஸ்தாபிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டனர். "யாக் கோபின்ஸ்" என்று சொல்லப்பட்ட இப்பகுதியார் அதிகாரத்தோடு முன்னணியினின்று போராடத்தொடங்கினர். சீக்கிரத்திலொரு கிளர்ச்சியுண்டானது. அத்தீவிரவாதிகள் "பாஸ்ரையில்" என்ற பழைய கோட்டையைக் கைப்பற்றினர் இச்

RangaRakes Tamilnavarasam.com

செய்கை பழைய ஆளுகைமுறையின் வீழ்ச்சிக்கு அறிகுறியென பலர் எண்ணினர் ஆனால் பிரான்சுதேசத்தில் தீவிரவாதிகளின் ஆளுகை ஆரம்பமானது. பாரிஸ் நகரத்திலுள்ள தீவிரவாதிகள் **வேர்செவில்ஸ்** அரண்மனைக்குச் சென்று பலமற்ற லூயிமன்னனை பாரிஸ் நகரத்துக்கு அழைத்துச் சென்றனர். அவர்களுடைய செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது. **1791**-ம் ஆண்டுக்கிடையில் இருசம்பவங்கள் நடைபெற்றன. புதிய அரசியற்திட்டமொன்று வகுக்கப்பட்டதொன்றாகும். மற்றது பிரான்சுதேசத்தின் எல்லாப்பகுதிகளிலும் சீர்குலைந்த நிலை மேலும் மேலும் அதிகரித்தது. தேசியமக்கட்சபை மக்கள் உரிமைத்திட்டமொன்றைப் பிரகடனஞ் செய்தது. அது நிலமானிய முறையிற் காணப்பட்ட வழக்கங்களை அறவேயொழித்து விட்டது. கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன, புது அதிகாரிகள் அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. அவர்களால் வரியறவிட முடியவில்லை. சேனையிலும் பட்டாளத்திலும் ஒழுங்கீனம் காணப்பட்டது. தீவிரவாதிகளின் செல்வாக்கே கூடிக்கொண்டது. அரசனும் மனைவியும் ஓடித்தப்பிக்கொள்ள எத்தனித்த பொழுது அவர்கள் கைதி செய்யப்பட்டனர். கைதி செய்யப்பட்டபின்னரே புதிய அரசியல் முறைக்குச் சம்மதங் கொடுத்தார்.

புதிய அரசியற்திட்டத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட சட்டநிரூபண சபைக்கு அனுபவமற்றவர்களும் மனத்தைரியமுமற்ற அங்கத்தவர்களே தெரியப்பட்டனர். அதனால் தீவிரவாதிகள் தங்கள் செல்வாக்கை மேலும் மேலும் காட்டினர். பாரிஸ் நகரில் பயங்கரமான நிலையேற்பட்டது. அரசன் சிறைச்சாலையிலிடப்பட்டான். மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டுள்ள "கொன்வென்ஷன்" என்ற சபை உண்டாக்கப்பட்டது. அதனுடைய புதிய அரசியற்திட்டத்தின்படி பிரான்சில் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. புதிய கொள்கைகளுக்கு மாறானவர்கள் வாளுக்கிரையாகினர். பாரிஸ்நகரில் அநே



கர் கொல்லப்பட்டனர். பயங்கர ஆட்சி முறை நிலவியது. பலர் "கிலற்றீன்" என்ற பெரிய யந்திரத்தினால் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். பதினாறாம் லூயியே முதற் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். (1793) ஐரோப்பிய நாட்டு அரசர்களெல்லோரும் ஏக்கமுற்றனர். ஐரோப்பிய நாட்டு அரசர்களெல்லோரும் தற்பாதுகாப்புக்காகவும், லூயியின் மேலுள்ள அனுதாபத்தினாலும், பிரான்சுக்கெதிரே படையெடுத்துச் செல்ல பெருஞ்சேனையைத் திரட்டினர். வேகமான உணர்ச்சியினால் தாக்கப்பட்ட பிரான்சிய மக்கள், இங்கிலாந்துக்கும், ஒல்லாந்துக்கும், ஸ்பானியாவுக்கும் எதிரே போர்தொடங்குவதாக வெளிப்படுத்தினர்.

இங்கிலையில் ஐரோப்பிய வல்லரசுகளின் சேனைகள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து எல்லைப்புறங்களைத் தாண்டி உட்புகுந்தன. உள்நாட்டுக் கலகங்களுமேற்பட்டன. இந்நிலையில் புரட்சிக்காரரின் தலைவர்கள் பொது மக்களின் பாதுகாப்புச்சபையொன்றை நிறுவி மு[illegible] அதிகாரத்தையும் தமக்குரிமையாக்கினர். புரட்சிக்க[illegible] நீதிஸ்தலமூலம் தங்களுக்கு மாறான எல்லோரையும் கொலைசெய்வித்தனர். இவ்வகையாகக் கலகங்களடக்க[illegible] பட்டன. பின்பு ஏனைய பகைவர்களை துரத்துவதற்காக நாட்டில் கட்டாயப் போர்ச்சேவைமுறையை ஸ்தாபித்தனர். **காணொற்** என்ற வீரனின் தலைமையின்கீழ் பெருஞ்சேனை திரட்டப்பட்டது. நாடு முழுவதும் போர்மயமாயிருந்தது. பிரான்சிய மக்கள் புரட்சியினாலேற்பட்ட ஊக்கத்தோடும், தேசாபிமானத்தோடும் சண்டைசெய்தமையினால் **1793**-ம் ஆண்டு முடிவதற்குமுன் படையெடுத்துவந்த அந்நியநாட்டுச் சேனைகளெல்லாம் துரத்தப்பட்டன. அவுஸ்திரியா, பிரஸ்ஸியா, பிரித்தானியா ஒல்லாந்து, ஸ்பானியா, சார்டினியா முதலிய நாடுகள் ஒன்றுசேர்ந்து ஐக்கிய எதிர்ப்புக்கட்சியை ஸ்தாபித்து அனுப்பிய சேனை ஐக்கிய எதிர்ப்புக்கட்சியினர் ஒருவரோடொருவர் பொறாமை கொண்டமையாலும், ஒவ்வொருவரும் சமாதானமேற்படுங்காலத்தில் தாம் பெற்

RangaRakes Tamilnavarasam.com

றுக்கொள்ளக்கூடிய நாட்டையும்பற்றி அவாவுற்றிருந்தமையினால், ஒரு தகுந்த தளகர்த்தனில்லாமையினாலும் வெற்றிகரமாய்ப் போரை நடத்தமுடியவில்லை. ஒல்லாந்து, பெல்ஜியம் என்ற இரு நாடுகளிலிருந்தும் ஐக்கியக் கட்சியினருடைய சேனைகள் எல்லாம் துரத்தப்பட்டு றைன் ஆறு வரையிலுள்ள பகுதிகளெல்லாம் பிரான்சியருடைய அதிகாரத்துக்குட்பட்டது. ஆகையால் ஒல்லாந்தும், பிரஸ்ஸியாவும், ஸ்பானியாவும் ஐக்கிய எதிர்ப்புக்கட்சியினின்று விலகினர்.

பயங்கர ஆட்சியின் தலைவரான **ரொபிஸ்பிர் டான்ரன்** மாறற் முதலியோர் கொல்லப்பட அவ்வாட்சியும் முடிவடைய 1795-ல் சனநாயக ஆட்சிமுறை அழிக்கப்பட்டு இருசபைகள் கொண்ட ஒரு சட்டநிரூபணசபை ஸ்தாபிக்கப்பட்டது. அச்சபை ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டுள்ள "டிறெக்டறி" என்று சொல்லப்பட்ட நிர்வாகசபைக்கு அதிகாரத்தைக் கொடுத்தது. இது ஸ்தாபிக்கப்பட்டதும் (1795) புரட்சி காலம் முடிவடைந்தது என்று சொல்லலாம்.

அப்பயங்கரமான காலத்தை அனுபவித்த பிரான்சு தேசம் என்ன பயனைப்பெற்றது என்று ஆராய்ந்து பார்த்தால், நாட்டில் பழைய நிலமானிய முறையும், வகுப்பு பேதங்களும் அறவே ஒழிக்கப்பட்டு மக்கள் யாபேருக்கும் சமத்துவம் கிடைத்தது. ஆனால் சமாதான முறையைக் கையாளாமையால் அரசியற் சுதந்திரத்தை மக்கள் இழந்தனர். அதோடு நீதியும், சகோதரத்துவமும், சமாதானமுமே நோக்கமாக எழுந்த புரட்சி சிறிது காலத்துக்குள் ஐரோப்பா முழுவதும் என்றுமில்லாத பயங்கரமான போரையும் நிஷ்டூரத்தையும் உண்டாக்கிவிட்டது. அது எப்படி என்றதைப்பற்றி இனி ஆராய்வோம். பிரான்சிய வீரர் ஒல்லாந்துக்குப் படையெடுத்துச் சென்று பட்டேவியா என்ற மக்கள் ஆட்சிமுறையை ஸ்தாபித்தனர்.

பிரான்சியருடைய அதிர்ஷ்டமென்று சொல்லத்தக்கதாக நெப்போலியன் என்ற யுத்தவீரன் சேனைக்குத்



தலைமைதாங்கி 1796-ல் அவுஸ்திரியாவின் அதிகாரத்தை அழிப்பதற்கு படையெடுத்துச்சென்றான். ஆரம்பத்தில் இத்தாலி நாட்டினுட் புகுந்து சார்டீனியாவைத் தாக்கினமையால் அது அவனோடு சமாதானஞ் செய்துகொண்டது. பின்பு லொம்பாடியைக் கைப்பற்றி அவுஸ்திரியாவை இத்தாலியிலிருந்து துரத்தினான். பின்பு அவுஸ்திரியாவைப் பல சண்டைகளிலும் தோற்கடித்தபடியால் அந்நாடு சமாதானஞ்செய்ய உடன்பட்டது. இவ்விதமான குதூகலமான வெற்றிகள் ஸ்பானியாவை பிரான்சோடு சேர்ந்துகொள்ளத் தூண்டியது. பிரான்சியர் ஒல்லாந்தைக் கைப்பற்றியபடியால் ஒல்லாந்தருடைய கடற்படையையும் ஸ்பானியருடைய கடற்படையையும் தங்கள் அதிகாரத்திற்குள் வைத்திருந்தனர். அவுஸ்திரியாவின் தோல்வி பிரித்தானியாவைத் தனியேநின்று சண்டைசெய்யும் நிலையில்விட்டது. பெல்ஜியம், மேற்கு ஜேர்மனி, ஒல்லாந்து, வடக்கு இத்தாலி பிரான்சியரின் ஆதிக்கத்துக்குட்பட்டன. மத்தித்தரைக்கடலிலும் பிரான்சின் ஆதிக்கம் கூடிக்கொண்டது. ஸ்பானியாவும் சேர்ந்துவிட்டது. ஐரோப்பாவில் ஒரு வல்லரசாகுதல் பிரான்சை எதிர்க்கத் தயாராயில்லை. பிரான்சிய கடற்படையும் ஸ்பானியக் கடற்படையும் ஒன்றுசேர்வதைத் தடுப்பதற்காகப் பிரித்தானிய கடற்படைத் தலைவனாகிய யேர்விஸ் என்பவன் அனுப்பப்பட்டான். **சென்ற வின்**சென்ற் முனையில ஸ்பானியக் கடற்படையோடு செய்த சண்டையில் நெல்சன் பெற்ற வெற்றி ஆங்கிலேயருக்கு உற்சாகத்தை ஊட்டியது. பின்பு ஒல்லாந்தர் காம்படவுன் என்ற கடற்சண்டையில் **டன்கன்** என்ற பிரித்தானிய கடற்படைத் தளகர்த்தனால் தோற்கடிக்கப்பட்டனர். அவ்விரு வெற்றிகளின் பயனாக ஆங்கிலேயருடைய கடலாதிக்கம் திரும்பவும் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரித்தானியாவுக்குப் படையெடுத்துச்சென்று அந்நாட்டைக் கைப்பற்றுவதற்கு பிரான்சியக் கடற்படை பெலப்படுத்த வேண்டுமாகையால் பிரித்தானியருடைய

RangaRakes Tamilnavarasam.com

வெளிநாட்டு வர்த்தகத்தை அழிப்பதே யுக்தி எனவுணர்ந்த நெப்போலியன் 1798-ல் எகிப்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் 35000 போர்வீரர்களுடன் பிரான்சியக் கடற்படையை கொண்டுசென்றான். அவன் அலெக்சாந்திரியாவுக்குப் போய் அங்கே சண்டைசெய்து வெற்றிபெற்றபின் கெய்ரோவையுங் கைப்பற்றினான். நெப்போலியன் எகிப்துக்குச் செல்வதைக் கவனித்த நெல்சன் அவனைப் பின்தொடர்ந்தான். அபூக்கீர் முனையில் நடைபெற்ற சண்டையில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டான். இந்தச் சிறந்த வெற்றியின் காரணமாக மத்தித்தரைக்கடலில் ஆங்கிலேயருடை ஆதிக்கம் பலமடைந்தது. இதற்கிடையில் பிரித்தானியா, ருஷியா அவுஸ்திரியா, துருக்கை ஒன்றுசேர்ந்து இரண்டாம் ஐக்கிய எதிர்ப்புக்கட்சியை ஸ்தாபித்தன. சீக்கிரத்தில் பிரித்தானியர் மைனோக்காவைக் கைப்பற்றினர்.

எகிப்திற் தோல்வியடைந்த நெப்போலியன் சீரியாவுக்குச்செல்ல அங்கே சேர் சிட்னிசிமித்தினாற் தடுக்கப்பட்டுப் பிரான்சுக்குத் திரும்பினான். எகிப்துக்கு நெப்போலியன் சென்ற காலத்தில் பிரான்சின் நிர்வாகத்தை நடத்திய டிறக்டறி என்ற அரசாங்க ஸ்தாபனம் திறமையற்றதாயும் பணக்கஷ்டமுடையதாயும் இருந்தமையினால் மக்கள் அதை வெறுக்கத்தொடங்கினர். நெப்போலியனாற் கைப்பற்றப்பட்ட பெல்ஜியம், மேற்கு ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகள் அங்கே அனுப்பப்பட்ட பிரான்சிய நிர்வாகிகளின் கொடுமையினால் கஷ்டமடைந்தனர். சுவிட்ஸலாந்து, பைட்மொன்ற, நேப்பிள்ஸ் ஆகிய நாடுகளிலும் பிரென்சுக்காரர் குடியரசை ஸ்தாபித்தனர். இதனால் இரண்டாம் ஐக்கிய எதிர்ப்புக்கட்சியை ஸ்தாபிக்க வேண்டியிருந்தது. இக்கட்சியிற் சேர்ந்த ருஷியா, அவுஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் பிரான்சின் ஆதிக்கத்திலிருந்த நாடுகளைக் கைப்பற்ற எண்ணங்கொண்டு ஒல்லாந்துக்கும் இத்தாலிக்கும் படையெடுத்துச் சென்றனர். ஒல்லாந்தில் அவர்கள் பிரென்சுக்காரராற் தோற்கடிக்கப்பட்டனர்.



ருஷியா ஆரம்பத்தில் வெற்றிபெற்றபொழுதிலும் ஈற்றில் தோல்வியடைந்தமையினால் அக்கட்சியினின்றும் விலக, இங்கிலாந்தும், அவுஸ்திரியாவுமே பிரான்சை எதிர்க்கவேண்டியிருந்தது. அந்த நேரத்திலேயே நெப்போலியன் எகிப்திலிருந்து பிரான்சுக்குத் திரும்பினான். நெப்போலியன் பிரான்சு தேசத்தில் முழு அதிகாரத்தையும் பெறுவதற்காக "டிறக்டறி"யை இல்லாமற்செய்துதான் முதற் "கொன்ஸல்" என்ற பெயரோடு தலைவனானான். பின்பு பிரான்சு தேசத்திற் பல திருத்தங்களைச் செய்தான். அரசசேவையைத் திருத்தி அமைத்து எல்லோரும் ஊக்கத்துடன் உழைக்கத்தக்கதாகச் செய்தான். பிரான்சியக் கத்தோலிக்கரோடு நட்புப் பூண்டான். கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் விருத்திசெய்வதற்காக வழிவகைகளைத் தேடினான். தெருக்களைத் திருத்தி அமைத்தான். நீதிச்சட்டங்களை வகுத்து அது சிறந்ததாயிருந்தமையினாற் பெருமையடைந்தான்.

பின்பு மறங்கோ, கொகின்லின்டன் (1800) என்ற சண்டைகளில் அவுஸ்திரியாவைத் தோற்கடித்தான். இதன்பயனாக இரண்டாம் ஐக்கிய எதிர்ப்புக்கட்சியும் நிலைகுலைந்தது. ருஷியா, டென்மார்க்கு. சுவீடன், பிரஸ்ஸியா ஒற்றுமைப் பொதுக்கட்சியினராகச்சேர்ந்து நெப்போலியனோடு சினேகங்கொள்ளச் சித்தமாயினர். ஆங்கிலேயர் டென்மார்க்கைத் தாக்கும்படி சேர் ஹைட் பாக்கரை ஒரு கடற்படையுடன் அனுப்ப அவன் கொப்பனேஜன் என்ற கடற்சண்டையில் வெற்றிபெற்றான். டென்மார்க்கு ஒற்றுமைப் பொதுக்கட்சியினின்று நீங்க ருஷியாவும் சீக்கிரத்தில் அதைவிட்டு விலகியது. இதனால் நெப்போலியன் வடக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து காத்திருந்த கடற்படைத் துணையுமில்லாமற் போயிற்று. ஆங்கிலேயரும் நெப்போலியனும் சமாதானஞ் செய்துகொள்ள விரும்பி 1802-ல் ஏமியன்ஸ் உடன்படிக்கையை எழுதிக்கொண்டனர். அதன்பிரகாரம் ஆங்கிலேயர் இலங்கையையும், ரினிடாட்டையுந் தவிர தாங்கள் கைப்பற்றிய ஏனைய இடங்களைக் கொடுப்பதாகவும்



RangaRakes
Tamilnavarasam.com

பிரான்சியர் பெல்ஜியத்தையும் றைன் பகுதியையும் மாத்திரம் தங்களாட்சியில் வைத்திருப்பதாகவும் உடன்பட்டுக்கொண்டனர். 1802-ல் எழுதிய இவ்வுடன்படிக்கை பிரான்சிய புரட்சி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததெனலாம். ஏமியன்ஸ் உடன்படிக்கை ஒரு நிரந்தரமானதாகக் காணப்படவில்லை.

படிப்படியாக நெப்போலியன் முழு அதிகாரத்தையும் பெற்று ஏதேச்சாதிகாரியாக நிர்வாகத்தை நடத்த ஆரம்பித்தான். அந்நாட்டு மக்கள் அவனை சக்கராதிபதியாக ஏற்றுக்கொண்டனர். ஒரு பெருஞ்சேனையும் அவனுடைய அதிகாரத்தின் கீழமர்ந்திருந்தது. புரட்சியினாலேற்பட்ட சுதந்திரம் அற்றுப்போனதுமல்லாமல் பழைய ஏதேச்சாதிகாரிகளினும் பார்க்கக் கூடிய அதிகாரத்தை அவன் பெற்றதினால் மக்கள் அவன் எண்ணப்படியே நடந்துகொள்ள வேண்டியிருந்தது. ஒல்லாந்து, சுவிட்ஸலாந்து, வடக்கு இத்தாலி, மேற்கு ஜேர்மனி பிரான்சுக்குக் கீழ்ப்பட்ட நாடுகளாயின. ஸ்பானியாவும் நட்புப்பூண்டது. அவுஸ்திரியா தான் அடைந்துள்ள தோல்வியின் காரணமாக எதிர்க்கச் சக்தியில்லாமலிருந்தது. பிரஸ்ஸியா நடுநிலைமை நாடாகவிருக்க விரும்பியது. ருஷியாவும் அந்நேரத்தில் பிரான்சோடு சேர்ந்துகொண்டது. ஆகையால் மேற்கு ஐரோப்பாவில் நெப்போலியனுடைய ஆதிக்கம் மேலும்மேலும் கூடிவிட்டது. ஐரோப்பாவிலுள்ள ஒரு நாடாவது அவனுடன் எதிர்க்கத் தயாராயில்லை.

எகிப்து, நன்னம்பிக்கைமுனை, இந்தியா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளையுங் கைப்பற்றத் திட்டம்போட்டிருந்தான். 1802-ல் நிறைவேறிய ஏமியன்ஸ் உடன்படிக்கைக்கு மாறாகப் பிரித்தானியர் **மோல்ராவைத்** தங்கள்வசம் வைத்திருக்கிறார்களென்று நெப்போலியன் கோபங்கொண்டு 1803-ல் மீண்டும் பிரித்தானியருக்கெதிரே போர் தொடங்கினான், இதுவே நெப்போலிய யுத்தமெனப்படும். பிரித்தானிய நாட்டுமக்கள் ஒற்றுமையுடன் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக



வேண்டிய ஆயத்தங்களைச் செய்தனர். பிரித்தானிய கடற்படையும் பலப்படுத்தப்பட்டது. நெல்சன், **பாகாம்,** வின்சென்ற் முதலிய தளகர்த்தர்களும் பெரும் வெற்றிகளைப் பெற்ற வீரர்களாவர். இங்கிலாந்து மக்கள் எல்லோரும் யுத்தமுனையில் நின்று சண்டைசெய்ய சித்தமாயிருந்தனர். விக் கட்சி, டோறிக் கட்சியென்ற பேதமின்றி ஆர்வத்துடன் யுத்தத்தை நடத்த அரசாங்கத்தினரும் தயாராகியிருந்தனர்.

நெப்போலியன் ஆங்கிலேயக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்துக்குப் படையெடுத்துச் செல்ல உத்தேசித்துத் தனது கடற்படைகளை பிறெஸ்ற், ரூலன், ரொட்ஸ்போட், பெரோல் என்ற துறைமுகங்களில் நிறுத்தியிருந்தான். பிரித்தானியருடைய கடற்படை அவைகளைத் தடுத்துக்கொண்டிருந்தது. ஆகையால் நெப்போலியன் ஸ்பானியருடைய கடற்படையையும் பிரான்சியருடைய கடற்படையையும் மேற்கு இந்திய தீவுகளிற் சந்திக்கச் செய்து பின்பு இரு கடற்படைகளும் ஐரோப்பாவுக்குத் திரும்புவதாகவும் அதனால் ஆங்கிலேயக் கால்வாயின் காவலை விலக்கிவிடலாமென்றும் எண்ணத்தைப் பூர்த்தி செய்யலாமென்றுந் திட்டம் போட்டான். ஒழுங்குசெய்த பிரகாரம் பிரான்சியக் கடற்படை மேற்கு இந்திய தீவுகளுக்குச் செல்ல, அங்கேயே சென்றிருக்க வேண்டுமென்று ஐயுறவுற்ற நெல்சன் பின் தொடர்ந்து சென்றான். அதை அறிந்ததும் பிரான்சியக் கடற்படை ஐரோப்பாவுக்குத் திரும்பிச்செல்ல பின்பும் நெல்சன் அதைப் பின்தொடர்ந்து வந்து அக்கடற்படையை "றபல்கார்" என்ற கடற்சண்டையிற் தோற்கடித்தான். இந்தப் பெரிய வெற்றியின் மத்தியில் நெல்சன் காயப்பட்டு இறந்தான். இவ்வெற்றி இங்கிலாந்துக்குப் படையெடுத்துச் செல்லும் எண்ணத்தைச் சிதைத்துவிட்டது. பிரித்தானியருடைய கடலாதிக்கமும் பலமுற்றது.

பல ஐரோப்பிய நாடுகளின் ஒற்றுமையினாலேயே நெப்போலியனுடைய அவாவைத் தடுக்கலாமெனக்

RangaRakes
Tamilnavarasam.com

கருதி பிரித்தானிய பிரதம மந்திரியாகிய இளையபிற் ருஷியா சுவீடன் அவுஸ்திரியா ஆகிய நாடுகளோடு சேர்ந்து மூன்றாம் ஐக்கிய எதிர்ப்புக் கட்சியை ஸ்தாபித்தான். இதையறிந்த நெப்போலியன் மாபெருஞ் சேனையோடு சென்று அவுஸ்திரியாவை "அல்ம்" என்ற சண்டையிற் தோற்கடித்து மீண்டும் "ஒஸ்ரலிட்ஸ்" என்ற சண்டையிற் தோற்கடித்தமையினால் அவுஸ்திரியாவின் எதிர்ப்பு சிதைவுற்றது. அதனால் மூன்றாம் எதிர்ப்புக்கட்சியும் நிலைகுலைய நேரிட்டது. பின்பு நெப்போலியன் சேனையொன்றை நேப்பிள்ஸ் இராச்சியத்துக்கு அனுப்பி அதைக் கைப்பற்றி தனது சகோதரனான யோசேப்பை அந்நாட்டுக்கு அரசனாக்கினான். பின்பு ஒல்லாந்துக்கு தனது சகோதரனான லூயியை அரசனாக்கினான். ஜேர்மன் நாடுகளைச் சேர்த்து றைன் குடியரசை ஸ்தாபித்து அந்நாடுகளிலிருந்து தான் நடத்தும் யுத்தத்துக்கு 68000 போர்வீரர்களைத் திரட்டினான். பிரான்சு, ஒல்லாந்து, இத்தாலி, மேற்கு ஜேர்மனி முதலிய நாடுகளில் நெப்போலியனுடைய செல்வாக்கே பரவியது. அவுஸ்திரியா தோல்வியடைந்தொரு நாடாகும். ஸ்பானியா உதவியற்ற சிநேக நாடாகும். பிரஸ்ஸியா நடுநிலைமை பூண்ட நாடாகும். அச்சமயத்தில் நெப்போலியனின் அதிகாரம் உன்னத நிலையை அடைந்திருந்தது. ஆனால் 1806-ல் பிரஸ்ஸியாவை நெப்போலியன் நடத்திய இழிவான முறையினால் அந்நாடு அவனை எதிர்த்தது. உடனே யேனா என்ற சண்டையில் பிரஸ்ஸியாவைத் தோற்கடித்தான். அதற்கு உதவியளித்த ருஷியாவைத் "பிறைட்லண்ட்" என்ற சண்டையில் தோற்கடித்தான். பின்பு பிரான்சும் ருஷியாவும் றில்சிற் என்ற உடன்படிக்கையின்படி பிரித்தானியாவுக்கெதிரே ஒற்றுமை பூண்ட சிநேக நாடுகளாயின.

மீண்டும், நெப்போலியன் இரு அம்சங்களைக்கொண்டுள்ள திட்டமொன்றை வகுத்தான். ஒன்று பிரித்தானியருடைய கடலாதிக்கத்தை அழிக்கும் யோசனையும்



மற்றொன்று பிரித்தானியருடைய வர்த்தகத்தை அழிக்கும் யோசனையுமாகும். இதுவரையில் நடுநிலையைக் கடைப்பிடித்திருந்த டென்மார்க்கை பிரான்சோடும், ருஷியாவோடும் சேரும்படி நெப்போலியன் கேட்டுக் கொண்டான். பிரித்தானியாவோடு சேரும்படி டென்மார்க்குக் ஒரு எச்சரிக்கையை கானிங் என்ற மந்திரி கொடுத்தபொழுது அந்நாடு அதை மறுத்ததினால் சேர் ஹைட்பாக்கர் ஒரு கடற்படையுடன் சென்று கோப்பனேஹன் என்ற கடற்சண்டையில் தோற்கடித்தான். அதனால் டென்மார்க்குத் தேசத்தின் கடற்படை அவர்கள் கையிற் சிக்கின. 1807-ல் நெப்போலியன் போத்துக்கல் நாட்டை வலோற்காரமாகக் கைப்பற்றினான்.

இங்கிலாந்தைத் தோற்கடிக்க இயலாதெனக் கருதி நெப்போலியன் பிரித்தானியரின் வர்த்தகத்தை அழிப்பதற்காக பேர்லின் அதிகாரச் சட்டங்களை விடுத்தான். இதுவே "கொன்ரினென்ரல் சிஸ்ரம்" எனப்படும். இதன்படி பிரித்தானியாவிலிருந்தோ அல்லது அதன் குடியரசு நாடுகளிலிருந்தோ வரும் கப்பல்கள் பிரான்சு தேசத் துறைமுகங்களுக்கோ அல்லது அதன் சிநேக நாடுகளுக்கோ செல்லமுடியாது. இதை பிரஸ்ஸியா, அவுஸ்திரியா, ருஷியா, ஒல்லாந்து ஜேர்மனி, இத்தாலி எனும் நாடுகள் கவனிக்கவேண்டியதாயிற்று. உடனே பிரித்தானியா அதைப்போன்ற சட்டங்களைத் தாங்களும் வகுத்தனர். அதன் பிரகாரம் சண்டையிலீடுபடாத நாடுகளின் கப்பல்கள் தங்களுக்கு மாறான தேசங்களுக்குப் போகாமற் தடுக்கப்பட்டன. சீக்கிரத்தில் மோறிஷஸ் ஒல்லாந்தரின் கிழக்கிந்திய தீவுகள் பிரித்தானியராற் கைப்பற்றப்பட்டன.

"கொன்ரினென்ரல் சிஸ்ரம்" ஐரோப்பிய நாடுகளுக்குக் கஷ்டத்தை மேலும் மேலும் உண்டாக்கியது ஆகையால் கள்ள வியாபாரம் ஒல்லாந்து, ஜேர்மனி இத்தாலி முதலிய நாடுகளுக்கூடாக ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்றது. கொன்ரினென்ரல் சிஸ்ரத்தை

RangaRakes Tamilnavarasam.com

ஸ்பானிய தேசம் ஏற்றுக்கொள்ளாதபடியால் அந்நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அந்நாட்டு அரசனைத் துரத்திவிட்டுத் தனது சகோதரனை யோசேப்பை 1808-ல் அரசனாக்கினான். தேசாபிமான உணர்ச்சியுடன் அந்நாட்டு மக்கள் எதிர்த்துச் சண்டைசெய்யத் தொடங்கினர். பிரான்சியப்படை பலவிடங்களிலும் காத்திராத தோல்வியை யடைந்ததுமல்லாது பல போர்வீரர்களையுமிழந்தது. ஸ்பானிய மக்கள் அடைந்த வெற்றிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆச்சரியத்தையும் நெப்போலியனுக்குத் திகிலையுமுண்டாக்கின. ஸ்பானியரின் வேண்டுகோளின்படி பிரித்தானியா பணவுதவியையும் போர்வீரர்களையும் அனுப்பிக்கொண்டிருந்தது. ஆர்தர் உவெலெஸ்லியின் தலைமையின் கீழ்ச்சென்ற பிரித்தானிய சேனை பிரான்சியப் படைகளைப் பலமுறையும் தோற்கடித்தது. பின்பு நெப்போலியன் அந்நாட்டுக்குக் கொண்டுவந்த பெரிய சேனைத்திரளின் உதவியைக் கொண்டு முன்னேறிச் செல்ல பிரித்தானிய சேனை பின் நோக்கிச்செல்ல வேண்டியிருந்தது. இதற்கிடையில் அவுஸ்திரியா போருக்கு எழுந்தமையினால் நெப்போலியன் அங்கே செல்லவேண்டியிருந்தமையினால் தன்னுடைய முழுக்கவனத்தையும் ஸ்பானியப் போரிற் செலுத்த முடியவில்லை. 1812-ல் ருஷியாவுக்கு எதிரே படையெடுத்துச் சென்றதினால் நெப்போலியன் ஸ்பானிய யுத்தத்தை முடிவுபெறச் செய்துகொள்ள இயலாமற்போனது. நீடித்த ஸ்பானிய யுத்தமே தனக்கு ஆறாத புண்போல வேதனையையுண்டாக்கினதென்று நெப்போலியன் கூறினான். ருஷியாவுக்கெதிரே நெப்போலியன் தன் கவனத்தைச் செலுத்தியபொழுது ஆர்தர் உவெலெஸ்லியாகிய உவெலிங்டன் பிரபு பிரான்சியப் படைகளை பல விடங்களிலும் தோற்கடித்து ஸ்பானிய நாட்டிலிருந்து துரத்திவிட்டான்.

ருஷியா ‘கொன்ரினென்ரல் சிஸ்ரத்தினால்’ களைப்புற்றுத் தங்களுடைய நாட்டைச் சிறந்த முறையிற் பெரும் இராச்சியமாக்க முயற்சிசெய்தது. ஐரோப்பா



வில் பிரான்சிய இராச்சியத்தைவிட வேறு பெரும் இராச்சியமிருக்கக் கூடாதென நினைத்து 1812-ல் மாபெருஞ் சேனையோடு ருஷியாவுக்குப் படையெடுத்துச் சென்றான். 600,000 போர்வீரர்களைக் கொண்டுள்ள அவனது சேனை ருஷியாவின் தலைநகரமான மொஸ்கோ வரைக்கும் முன்னேறியவுடன் ருஷியர் பின்வாங்கி மொஸ்கோவுக்குத் தீயிட்டதினால் நெப்போலியன் தனது சேனைக்கு உணவு கொடுக்க முடியாமல் பின்வாங்கவேண்டியிருந்தது. அங்கேயுள்ள தாங்கொணாக் குளிரினாலும், உணவின்மையாலும் அநேக போர்வீரர்களிறந்தனர். எஞ்சிய போர்வீரர்களோடு திரும்பி வரும்பொழுது, பிரஸ்ஸியா, அவுஸ்திரியா, ஜேர்மனியிலுள்ள நாடுகள் போருக்கெழுந்தன. நெப்போலியன் பிரான்சு தேசத்துக்கு வந்து ஒரு படையைத் திரட்டிக் கொண்டு எதிர்த்துவந்த ஐரோப்பிய சேனைகளோடு சண்டையிட்டான். லீப்ஸிக் என்ற இடத்தில் 1813-ல் தோற்கடிக்கப்பட்டான். இதன்பின் தன் இராச்சியத்தைவிட்டு ஓட நேரிட்டது. எல்பா என்ற தீவுக்கு அனுப்பப்பட்டான்.

இந்த யுத்தத்திலீடுபட்ட ஐரோப்பிய நாடுகளெல்லாம் யுத்தத்தினாலேற்பட்ட மாறுதல்களையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காக 1815-ல் வீயென்னாவில் ஒரு மகாநாட்டைக் கூடினர். மகாநாடு கூடி மூன்று மாதத்திற்குள் நெப்போலியன் பிரான்சுக்குப் போய்ச்சேர்ந்தான். அவனைக் கண்டதும் பழைய போர்வீரர்களெல்லாம் அவனிடஞ் சென்றனர். ஆனால் அவன் திரட்டிய பெருஞ் சேனையானது பிரித்தானியா, ருஷியா, அவுஸ்திரியா, பிரஸ்ஸீயா அனுப்பிய சேனைகளுக்குத் தலைமை தாங்கிய உவெல்லிங்டனால் உவாற்றலூ என்ற சண்டையில் தோற்கடிக்கப்பட்டது. பின்பு நெப்போலியன் சென்ற்கெலினா என்ற தீவுக்கு அனுப்பப்பட்டு அங்கே ஆறு வருஷங்களின்பின் இறந்தான். இவ்யுத்தத்தின் பயனாகச் சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ உணர்ச்சிகள் மக்களிடையே ஏற்பட்டன. மேல் வகுப்பினர்

RangaRakes
Tamilnavarasam.com

தாழ்ந்த வகுப்பினர் என்ற பேதங்கள் குன்றிப்போயின. நெப்போலியனுடைய யுத்தத்தினால் வலோற்காரமாக நாடுகளைக் கைப்பற்றுந் தன்மை, நாடுமுழுவதையும் போர்முனையில் நிறுத்தும் நிலைமை முதலிய தீமைகளும் இடம் பெற்றன.

1815-ல் வியன்னாவில் ஓர் மகா நாடு கூட்டப்பட்டது. நெப்போலிய யுத்தத்தினாலேற்பட்ட மாறுதல்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளாகிய சார் அலெக்சாந்தரும், அவுஸ்திரியாவின் நிதிபொறுப்பாளனாகிய மெற்றனிச்சும், பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியாகிய காஸில்ரீயும் மகாநாட்டைக் கூட்டினர். பிரான்சின் மீது அனுதாபங்காட்டி பழைய அரச வம்சத்தவனாகிய பதினெட்டாம் லூயியை அரசனாக்கி 1791-ல் அந்நாட்டின் எல்லைகள் எவ்வாறிருந்தனவோ அவ்வாறே இருக்கவேண்டுமென்று சம்மதித்தனர். பிரான்சு நட்டஈடுங் கொடுக்கவேண்டியிருந்தது. ஒல்லாந்தோடு பெல்ஜியமுமிணைக்கப்பட்டது. ருஷியா பின்லாந்தையும், போலாந்தையும் பெற்றது. அவுஸ்திரியா இத்தாலியிற் சிலபாகங்களைப் பெற்றது. ஜேர்மனியிலுள்ள 39 நாடுகளும் ஒன்று சேர்க்கப்பட்டு அதற்கு அவுஸ்திரியா தலைமைதாங்கியது. ஜேர்மன் நாடுகள் ஐக்கியம் பூணாத வண்ணம் அவுஸ்திரியா அவைகளை நடத்தியது. பிரித்தானியா கைப்பற்றிய இடங்களை மீண்டும் கொடுத்தபோதிலும் ஆபிரிக்காவின் தெற்கு முனைப்பகுதியையும் இலங்கையையும் தம்வசம் வைத்திருந்தது.

ஜேர்மனி இத்தாலிமுதலிய நாடுகளிற் தோன்றிய தேசீய உணர்ச்சிக்கேற்றவாறு ஒழுங்குகள் செய்யத் தவறினமையால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பலயுத்தங்கள் நேரிட்டன. இந்நாடுகள் ஒவ்வொன்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எவ்விதமாக ஐக்கியம் பூண்டு மேனிலை எய்தின என்ற வரலாற்றைப் பற்றிப் பின்வரும் அத்தியாயங்களிற் படித்துக் கொள்ளலாம்,



## வினாக்கள்

1. பிரான்சியப்புரட்சியின் காரணங்களை ஆராய்க.
2. பிரான்சியப்புரட்சி நடைபெறாமல் 16-ம் லூயிமன்னன் தடுத்திருக்கலாமென்பதை நீ ஏற்றுக்கொள்ளுகிறாயா?
3. பயங்கரமான ஆட்சிக்காலத்தைப்பற்றி விபரித்து எழுதுக.
4. புரட்சியுத்தம் எப்போ தொடங்கியது? அதனுடைய விசேஷ சம்பவங்கள்யாவை?
5. நெப்போலியன் எகிப்துக்குச் சென்றவரலாற்றை எழுதுக.
6. நெப்போலியன் தலைமைதாங்கிப்போரை நடத்தாவிட்டால் பிரான்சு ஐரோப்பிய வல்லரசுகளாற் தோற்கடிக்கப்பட்டிருக்குமென நம்பலாமா?
7. மேற்கு ஐரோப்பா முழுவதிலும் எவ்வாறு நெப்போலியன் தனது செல்வாக்கைப் பரப்பினான்.
8. நெப்போலியனுடைய யுத்தத்தை விபரித்து எழுதுக.
9. நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஆராய்க?
10. வியன்னா மகா நாட்டில் என்ன தீர்மானங்கள் செய்யப்பட்டன?



RangaRakes
Tamilnavarasam.com

# பதின்மூன்றாம் அத்தியாயம்

## கைத்தொழிற் புரட்சி

உலகத்தின் பல்வேறு காலங்களிலும், பல்வேறு நாடுகளிலும் ஏற்பட்ட இயக்கங்கள் எல்லாவற்றிலும் பிரான்சியப் புரட்சியும், கைத்தொழிற் புரட்சியுமே மக்களுடைய கொள்கைகளையும், வாழ்க்கை முறைகளையும் முற்றாகமாற்றி அமைத்தனவெனலாம். இவைகள் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தோன்றினவாயினும் படிப்படியாக உலகத்தின் மற்றையபாகங்களிலும் பிரமிக்கத்தக்க மாற்றங்களை உண்டு பண்ணிவிட்டன. முன்னொரு அத்தியாயத்தில் பிரான்சியப் புரட்சியைப்பற்றிப் படித்திருக்கின்றோம். இதிற் கைத்தொழிற் புரட்சியினாலேற்பட்ட மாற்றங்களையும் அவைகளினாலுண்டாய பயன்களையும் பற்றி ஆராய்வோம்

கைத்தொழிலும் விஞ்ஞானத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் மிகவிரைவாக மக்களின் வாழ்க்கை நிலையை மாறுதலடையச் செய்தன. பதினெட்டாம் நூற்றாண்டுவரையில் மக்கள் தங்கள் கிராமங்களோடும் அயற்கிராமங்களோடுமல்லாது உலகத்தின் மற்றைய பாகங்களோடு தொடர்பு பெற்று வாழவில்லை. பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் ஒரு நாடாவது பிறநாடுகளோடு தொடர்பில்லாமலிருக்கவில்லை. கைத்தொழிலிலும் விஞ்ஞானத்திலும், போக்குவரவுவசதிகளிலும் ஏற்பட்டமாற்றங்களே அவ்வகைப்பட்ட நெருங்கிய வாழ்க்கைக்குக் காரணங்களாகும்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களின் உதவியுடன் செய்யப்பட்ட ஏராளமான வர்த்தகப் பொருட்களின் உற்பத்தியே கைத்தொழிற் புரட்சியின் முக்கிய அம்சமாகும். இயந்திரங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டவுடன் தொழிற்சாலைகள் தோன்றின. ஆகையால் மக்கள் தொழில் செய்வதற்காக நகரங்களை நாடினர். குடிசைக் கைத்தொழில்களும் கிராமக் கைத்



தொழில்களும் மறைவுற்றன. கைத்தொழிற்சாலைகள் தோன்றியவுடன் மக்கட்கூட்டம் பட்டணங்களிலும் நகரங்களிலும், அதிகரித்தமையால், அவர்களுக்கு உணவும், கைத்தொழிலுக்குவேண்டிய விளை பொருள்களும் கொண்டுபோகவேண்டியிருந்தது. அதுவுமல்லாமல் தொழிற்சாலைகளில் உற்பத்தியாக்கப்பட்ட பொருட்கள் அவ்விடங்களிலிருந்து வியாபார ஸ்தானங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பவேண்டியதுமாயிற்று. ஆகையால் தெருக்களும் புகையிரத வீதிகளும், கப்பல்களும் தேவைப்பட்டன. இவ்வண்ணமாகத் தேவைப்பட்டயாவும் ஒரேகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு ஒன்றுக்கொன்று ஆதரவாக இருந்தமையே இப்புரட்சியிற் கவனிக்கக்கூடிய விஷயமாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக, கரிச்சுரங்கங்களிலிருந்து நீரைப்பாய்ச்சுவதற்காக உபயோகிக்கப்பட்ட நீராவி இயந்திரமே முதலிற் கண்டுபிடிக்கப்பட்டது. தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களை நீராவியந்திரத்தின் உதவியைக்கொண்டு இயக்கலாமென்று யேம்ஸ் உவாட் என்பவர் கண்டுபிடித்தார். (1785) நெசவுத்தொழிலிலேயே முதன் முதலாகப் புதியமாற்றங்கள் தோன்றின. 1738-ல் யோன்கேய் என்பவர் கண்டுபிடித்த புதியமுறை நெசவுத்தொழிலை விருத்திசெய்வதற்கு உதவியாயிருந்தது. அதனால் ஏராளமான நூல் தேவைப்பட்டமையால் நூல் நூற்கும் இயந்திரங்களைக் கண்டுபிடிக்க வேண்டியதேவை ஏற்பட்டது. "ஸ்பின்னிங்யெனனி" (1764) "முயூல்" என்னும் நூல்நூற்கும் இயந்திரங்களை யேம்ஸ்காக்கிறீவ்ஸ் சாமுவேல்குறொம்ரன் முறையே கண்டுபிடித்தமையால் நெசவுத்தொழிலுக்குப் போதிய நூல் கிடைத்தது. பின்பு காட்றைட் என்பவர் நெசவு செய்யும் புதிய இயந்திரமொன்றைக் கண்டுபிடித்தமையால் ஏராளமான சீலைகள் நெசவுசெய்யப்பட்டு வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. அநேக தொழிலாளருக்கு வேலைகள் கிடைத்தன. நெசவுத்தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு அத்தொழில் விருத்தியடைந்தது.

RangaRakes Tamilnavarasam.com

இயந்திரங்களின் தேவை அதிகரித்தவுடன் இரும்பும், உருக்கும் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இரும்பை உருக்குவதற்கு நிலக்கரி உபயோகிக்கப்பட்டது. யேம்ஸ் உவாட் கண்டுபிடித்த நீராவியந்திரம் ஆரம்பத்தில் சுரங்கங்களிலிருந்து தண்ணீரை வெளியே பாய்ச்சுவதற்கே உபயோகிக்கப்பட்டதாயினும் பின்பு தரையில் ஓடக்கூடியதான வழி காணப்பட்டது. 1812-ல் புல்ரன் என்ற அமெரிக்கன் நீராவி இயந்திரத்தின் உதவியைக்கொண்டு தரைமார்க்கமாகச் செல்வதைப்போல் கடல்மார்க்கமாகவுஞ் செல்லக்கூடிய வசதியைக் காட்டிவைத்தார். சீக்கிரத்தில் நீராவிக்கப்பல்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

கைத்தொழிற் சாலைகள் நிலக்கரி இரும்பு உள்ள இடங்களுக்கு அணித்தாக ஸ்தாபிக்கப்பட்டன. பேமிங்காம், ஷெபீல்ட் முதலிய இடங்கள் கைத்தொழில் ஸ்தாபனங்களாயமர்ந்தன. இரும்புத் தொழிலைவிட ஏனைய கைத்தொழில்களும் நிலக்கரிபெறும் இடங்களிற் தோன்றின. இயந்திரங்களும் அவைகளை இயக்க நீராவியின் சக்தியும் உபயோகத்துக்குக் கொண்டுவந்தபின் கைத்தொழிற்புரட்சியேற்பட்டது. தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன; மக்கட்கூட்டம் அதிகரித்தன; புதிய நகரங்கள் தோன்றின; ஏராளமான பொருட்கள் வர்த்தகத்துக்கு ஏற்றமுறையில் விரைவாக உண்டாக்கப்பட்டன. தொழிலாளர், வீடுகளிற் செய்தசிறு கைத்தொழில்களை நீக்கி விட்டுத் தொழிற்சாலைகளிற் பெற்றவேலைகளிலமர்ந்தனர். அத்தொழிற்சாலைகளை நிறுவிய தனவந்தர்கள் முதலாளிமார்களாயமர்ந்தனர். மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் சென்றமையால் இங்கிலாந்தின் தெற்குப்பாகத்தில் சனத்தொகைகுறைய வடக்குப்பாகத்தில் அதிகரித்தது. ஆனால் பாராளுமன்றத்து மக்கள் பிரதிநிதிச்சபையில், சனத்தொகை குறைந்தவிடங்களில் கூடிய அங்கத்தவர்களும், சனத்தொகை கூடியவிடங்களில் அங்கத்தவர்கள் குறைவாகவுமிருந்தமையினால் அரசியலில் மாற்றங்கள் தேவைப்பட்டன.



இனிப்புதிதாக எழுந்தநகரங்களில் மக்களின் நிலை திருப்திகரமாகவில்லை.

ஆரம்பத்தில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் போதிய வெளிச்சமில்லாதனவுமாய், சுகாதாரமற்றனவுமாய் இருந்தமையாற் தொழிலாளர் அதிககஷ்டப்பட்டனர். தொழிற்சாலை முதலாளிமார் தொழிலாளருடைய சுகத்தையோ, நன்மையையோ கவனியாதிருந்தபோதிலும் தொழிலாளர் எல்லாவற்றையுஞ் சகித்துக்கொண்டு எதிர்ப்புக்காட்டவில்லை. வேலைப்பஞ்சத்தின் நெருக்கடியினால் தொழிலாளர் கூடின நேரத்துக்கும், குன்றந்த சம்பளத்துக்கும் பல கஷ்டங்களுக்குமிடையில் வேலைசெய்ய நேர்ந்தது. இதுவரையும் ஒரு தொழிலாளி தன் முயற்சியினாலும் சிக்கனத்தினாலும் முதலாளியாக வரக்கூடும். இப்போ ஒரு தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்கு பெருந்தொகையான பணம் தேவையாயிருந்தபடியால் ஒரு தொழிலாளி ஒரு தொழிற்சாலையை ஸ்தாபிக்கச் சக்தியற்றவனானான். அதுவுமல்லாமற் தொழிற்சாலையில் வேலைசெய்வதனால் வரும் சம்பளமோ தன்னையும் தனது குடும்பத்தையும் பாதுகாக்கப் போதாமையினால் தொழிற்சாலையை ஸ்தாபிப்பது முடியாதவொருகாரியமாயிற்று. இக்காரணங்களினால், தொழிலாளர் முதலாளிமார் என்ற இரு வகுப்பினருக்குமிடையில் சச்சரவுகளேற்பட்டன. சீக்கிரத்தில் தொழிலாளர் தங்கள் நலத்தைப் பாதுகாப்பதற்காக ஒருமித்து ஐக்கிய சங்கங்களை நிறுவி முதலாளிமார்களோடு வாதாடத் தொடங்கினர். அரசாங்கத்தார் ஆரம்பத்தில் அவர்களுடைய முயற்சிகளை அடக்க முயன்றும் சீக்கிரத்தில் அனுதாபங்காட்டத் தொடங்கினர். தொழிலாளர்களுடைய நிலையைத் திருத்துவதற்காகச் சட்டங்களையும் வகுத்தனர். ஷாவ்ஸ்பரி பிரபு தொழிற்சாலைகளின் நிலையைத் திருத்துவதற்கும் தொழில் செய்யும் சிறுபிள்ளைகளின் நிலையைக் கண்டித்து அதற்குவேண்டிய மாற்றங்களையுண்டாக்குவதற்கும் முயற்சிகள் செய்ததும் பாராட்டத்தக்க வொரு விஷயமாகும்.

RangaRakes Tamilnavarasam.com

பொருட்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுசெல்லும் வசதிகளும் கைத்தொழிற் புரட்சிக்கு ஆதரவாயிருந்தன. மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் அரசனாக வந்த காலத்தில் இங்கிலாந்தின் பல பகுதிகள் கால்வாய்களினால் இணைக்கப்பட்டிருந்தன. நிலக்கரி பலவிடங்களுக்குங் கொண்டுசெல்ல இக் கால்வாய்கள் உதவியாயிருந்தன. கால்வாய்களை வெட்டி வசதிகளையளித்த பிரபுக்களில் **பிறைன்ட்லி** என்பவர் ஒரு சிறந்தவராகும். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சு தேசத்தில் தெருக்கள் எல்லாம் திருத்தியமைக்கப் பட்டிருந்தன. அதேகாலத்தில் **றெல்போட்**, **மெற்காவ்** போன்ற அறிஞர்கள் இங்கிலாந்தில் வீதிகளையும் பாலங்களையும் சிறந்தமுறையிற் திருத்தியமைத்தனர். பின்பு **மக்கடம்** என்பவர் சிறு கற்களைப் பரவி வீதிகளை அமைக்கத்தக்க வழியைக்காட்டி வைத்ததினால் உணவுப்பொருட்கள், நிலக்கரி, விளைபொருட்கள், உற்பத்திப்பொருட்கள் முதலியவைகளைக் கொண்டுசெல்வதற்கு வசதியாகவிருந்தது. நிலக்கரிச்சுரங்கங்களிலடிக்கடி ஏற்பட்ட அபாயங்கள் **கம்பிரிடேவி**யினாற் கண்டுபிடிக்கப்பட்ட பாதுகாப்பு விளக்கினால் நீங்கின.

பழைய காலத்தில் வண்டிகளிலும், மிருகங்களிலும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் தற்போது நீராவி இயந்திரங்களின் உதவியினால் சுலபமாகவும், குறைந்த செலவோடும் கொண்டுசெல்லப்படுகின்றன. புகையிரதவீதிகள் அமைக்கப்பட்டன. 1830-ல் ஜோர்ஜ் ஸ்ரீபின்சன் கண்டுபிடித்த "றொக்கெற்" என்ற இயந்திரம் மணித்தியாலத்துக்கு 30 மைல்வரையில் ஓடி மக்களுக்கு அதிசயத்தை உண்டாக்கியது. அக்காலந்தொட்டு புகையிரதவீதிகள் உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் அமைக்கப்பட்டு போக்குவரவு வசதிகளை உண்டாக்கின. கடலில் பாய்க்கப்பல்களுக்குப் பதிலாக நீராவிக்கப்பல்கள் ஓடத்தொடங்கின. இக்கப்பல்களில் விரைவாகவும், பயங்கரமின்றியும் மக்கள் தூரதேசங்களுக்கு கடற்பிரயாணஞ்



செய்யத் தொடங்கினர். சண்டைக்கப்பல்களும் நீராவி இயந்திரத்தினாலேயே ஓட்டப்பட்டன. இனிக் கப்பல்களெல்லாம் இரும்பினாற் செய்யப்பட்டன. அமெரிக்கரும் பிரித்தானியருமே ஆரம்பத்தில் அவ்விதமான கப்பல்களைச் செய்தனர். கைத்தொழில் விருத்திக்கும், வர்த்தக விருத்திக்கும் புகையிரதமும் நீராவிக்கப்பல்களும் இன்றியமையாதனவாக இருந்தனவெனலாம். உற்பத்திப் பொருட்களும், விளைபொருட்களும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு விரைவில் கொண்டு செல்லத்தக்கதாயிருக்கிறது.

பெற்றோல் எண்ணெய் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டபின் மோட்டோர் வண்டிகள் புதிதாக அமைத்த தெருக்களில் ஓடத்தொடங்கின. **டேயிம்லர்** என்ற ஜேர்மன் தேசத்தவர் 1896-ல் கண்டுபிடித்த மோட்டோர் வண்டியும் **உவில்பரைட்** என்ற அமெரிக்க தேசத்தவர் 1903-ல் கண்டுபிடித்த ஆகாய விமானமும் அளவுகடந்த மாற்றங்களை உண்டுபண்ணிவிட்டன. தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் பிரயாணஞ் செய்வதற்கு வசதிகள் ஏற்பட்டதனால் உலகத்தின் எல்லாப்பாகங்களும் ஒன்றோடொன்று தொடர்புபெற்றன. சுருக்கமான செலவிலும், குறைந்த நேரத்திலும் தூரமான இடங்களுக்கு மக்கள் செல்லவும் ஒரு நாட்டவர்களோடு இன்னொரு நாட்டவர்கள் பழகிக்கொள்ளவும் வர்த்தகத்தை விருத்திசெய்யவும் கடிதங்கள் அனுப்பவும் சுலபமாகயிருந்தது. ஆகாய விமானங்கள் உலகத்தின் எல்லாப்பாகங்களையும் இணைத்துவிட்டதுமன்றி பிரயாணஞ்செய்யும் நேரத்தையும் தூரத்தையும் மிகவும் குறைத்துவிட்டது. யுத்த காலத்தில் ஆகாய விமானங்கள் பகைவரின் நாடுகளில் குண்டுகளை வீசி அழிவையுண்டாக்குகின்றன. இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றபொழுது ஆகாய விமானங்கள் அதிக சேதத்தை உண்டுபண்ணின.

பழைய காலத்தில் கையினால் அல்லது காற்றின் சக்தியினால் அல்லது நீரின் சக்தியினால் இயந்திரங்கள்

RangaRakes Tamilnavarasam.com

இயக்க பட்டன. தற்காலத்தில் இவ்வகையான இயற்கைச் சக்திகளை நீக்கி நீராவி, எண்ணெய், மின்சாரம் ஆகிய சிறந்த சக்திகள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. நீராவி, எண்ணெய் என்பவைகளிற் பார்க்க மின்சார சக்தியே பிரமிக்கத்தக்க மாற்றங்களை உண்டாக்கிவிட்டது. வீடுகளிலும், வீதிகளிலும் மின்சார விளக்குகளைக் காணலாம். மின்சாரக் கம்பிகள்மூலம் செய்திகள் அனுப்பப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்திலுள்ள உவீட்சன் என்பவனும் அமெரிக்காவிலுள்ள மோர்ஸ் என்பவனும் மின்சாரத்தின் உதவியைக்கொண்டு தந்தி அனுப்பக்கூடிய புதியவழியைக் காட்டிவைத்தனர். முப்பதாண்டுகளின் பின்பு அமெரிக்காவில் வசித்த பெல் என்ற ஸ்கொத்துலாந்து நாட்டவன் மின்சாரக் கம்பிமூலம் மனுஷ சத்தத்தைக் கேட்கக்கூடிய புதிய முறையைக்காட்டி மக்களைத் திகிலடையச் செய்தான். இவ்வண்ணமாக ஒரு நாட்டிலல்லாது கடலுக்கப்பாலுள்ள நாடுகளுக்கும் செய்தி அனுப்பக்கூடியதாகக் கடலூடாக மின்சாரக் கம்பிகளை அமைத்து வசதிகளை ஏற்படுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈற்றில் இத்தாலி தேசத்திலுள்ள மாக்கோனி என்பவன் மின்சாரக்கம்பிகள் இல்லாமல் செய்திகள் அனுப்பக்கூடிய புதுமுறையைக் கண்டுபிடித்தபின் ஒலியை எல்லாவிடமும் பரப்பக்கூடிய புதியவழிதோன்றியது. தற்காலத்தில் வானொலியைக் கேட்கிறதனால் அடையும் நன்மைகள் பல. ஒரு இடத்தில் நடக்கும் சங்கீதக்கச்சேரி, உபந்நியாசங்கள் இன்னும் மற்றுஞ் செய்திகள் வானொலியின்மூலம் எங்கும் பரவுகின்றன. வானொலியின்மூலம் உலகத்தின் ஒரு பாகத்தில் நடைபெறுகின்ற சம்பவங்கள் யாவும் மற்றைய எல்லாப்பாகங்களிலுமுள்ள மக்கள் அறியக்கூடியதாகவிருக்கிறது. இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்ற காலத்தில் மின்சாரத்திலும் பார்க்கத் திறமைவாய்ந்த அணுச்சக்தி கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அது அழிவையுண்டாக்கும் ஒரு ஆயுதமாக உபயோகிக்கப்



பட்டபோதிலும் விஞ்ஞானிகள் அதை மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு சக்தியாக மாற்றலாமென ஆராய்ச்சியின்மூலம் அறிந்திருக்கின்றனர்.

இனி கிருஷிகத்தொழிலிற் காணப்பட்ட மாற்றங்களைப்பற்றி ஆராய்வோம். 1688-ல் இங்கிலாந்தில் நடைபெற்ற புரட்சியின் பயனாக அரசியலில் செல்வாக்கை விரும்பியோர் நிலம்படைத்த பிரபுக்களாகவேண்டியதாயிற்று. ஆகையால் வர்த்தக வகுப்பினர் நிலங்களை வாங்கும் வேலையில் ஈடுபட்டனர். குதூகலமான வாழ்க்கையை நடத்துவதற்கு அப்பிரபுக்களுக்கு போதிய வருமானம் தேவைப்பட்டமையால் நிலங்களிலிருந்து வரும் வருவாயையே காத்திருந்தனர். சிறுநிலங்கள் பெரும் வருமானத்தைக் கொடுக்காததினால் கிருஷிகத்தொழிலைச் செய்வதற்குப் புதியமுறைகளைக் கையாளவேண்டியிருந்தது. அப்புதிய முறைகளை உபயோகிப்பதற்கு பரந்த தோட்டங்கள் தேவைப்பட்டன. அதன்பயனாக சிறிய விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்று சொந்தமாய்க் காணியில்லாத வறியவர்களாகி கூலிவேலை செய்து சம்பளத்தைப் பெறவேண்டிநேரிட்டது. பொதுநிலங்களும் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களாயின. அதனால் பொதுமக்களுக்கே கஷ்டமேற்பட்டது. 1760-ம் ஆண்டுக்கும் 1843-ம் ஆண்டுக்குமிடையில் 7000,000 ஏக்கர் நிலம் இவ்வண்ணமாக ஒதுக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டுவரையும் நிலங்கள் அடுத்து இரண்டு வருஷங்களுக்குப் பயிர்செய்யப்பட்டு ஒரு வருஷத்துக்கு ஒன்றுஞ் செய்யாமல் விடப்பட்டிருந்தன. "டெர்னிப்ஸ்" போன்ற கிழங்குவகைகளையும், ஒருசாதிப் புல்லையும் இடையிடையே உண்டாக்குவதனால் நிலத்துக்கு ஒருவருஷ ஓய்வுகொடாமல் மாறிமாறிக் கோதுமை, வாளி முதலிய தானியங்கள் செய்யலாமென்பதை ரவுன் ஸெண்ட் என்ற அறிஞர் கண்டுபிடித்தார். இதனால் நிலங்களுக்கு பசளை உண்டாவதுமல்லாமல் மாடு ஆடுகளுக்கு உணவுகொடுக்கும் வசதியுமேற்பட்டது. ரல் என்ற



RangaRakes Tamilnavarasam.com

ஒரு விவசாயி, நிலங்களை உழவுசெய்யும் முறையிலும், தானியங்களை விதைக்கும் முறையிலும் திருத்தங்களை உண்டாக்கினர். பேக்வெல் என்பவர் புதுமுறைகளின் மூலம் கால்நடைகளை விருத்திசெய்யக் காட்டிவைத்தார். நிலங்களை விஞ்ஞான சாஸ்திர முறைப்படி பண்படுத்தவும் மிருகங்களுக்கு உணவு உண்டாக்கவும் பேரறிஞர்கள் அக்காலத்திற் கண்டுபிடித்தனர்.

இம்மாற்றங்களின் பயனாக இங்கிலாந்துதேசம் கைத்தொழிலிலே ஈடுபட்ட பெருஞ்சனத்தொகைக்கு உணவு கொடுக்கக்கூடியதாக விருந்தது. பிரதானமாக நெப்போலிய யுத்தம் நடைபெற்ற காலத்தில் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யாமையால் அங்கே ஏற்பட்ட கஷ்டத்துக்கு உணவு உற்பத்தி ஒரு நிவாரணமாகவிருந்தது. 1750-ல் 6,000,000 சனத்தொகை 1820-ல் 20,000,000மாக அதிகரித்தபோதிலும் விவசாயத்தொழிலின் விருத்தியில் மக்களுக்குக் கஷ்டமேற்படவில்லை. ஆனால் அத்தொழிலின் விருத்தியினால் சில தீமைகளுமேற்பட்டதெனலாம். நாட்டிலிருந்து கூலிவேலைசெய்து சீவனம் நடத்தியோர் மிகவும் வறுமைப்பட்டனர். அநேகர் தங்கள் சீவனத்துக்கு உழைப்பதற்காக நகரங்களுக்குச் சென்றனர். நாட்டிலேயேயிருந்தோர் அரசாங்கத்திலிருந்து பணவுதவி பெற்றுக் காலத்தைக்கழித்தனர். 1834-ம் ஆண்டுவரையும் அவ்வுதவியளித்த "ஸ்பீன் காம்லாண்ட் முறை" இங்கிலாந்தில் வழங்கிவந்தது.

கைத்தொழிற்புரட்சியின் பயனாக உலகத்திலுள்ள பல்வேறு கண்டங்களும், ஆங்காங்கேயுள்ள நாடுகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும், கூட்டுறவுடையதாகவும் விளங்கின. ஓரளவில் வெவ்வேறு நாடுகளிலுள்ள மக்கள் ஒரேவிதமான வாழ்க்கைமுறைகளையும் அனுசரித்து, ஒரேவிதமான உணவையும் உண்டு ஒருவரோடு ஒருவர் பழகியும், வாழ்ந்துவருகின்றனர். இவைகளெல்லாம் மக்களின் ஒற்றுமையையும், நட்பையும் உண்டாக்கிவிட்டன, சாதி வித்தியாசம் சமய வித்தியாசம், அந்நியர் என்ற மனப்பான்மை எல்லாம் அகன்று விசாலமான மனப்போக்கையும் உணர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது. இவ்வண்ணம் பொருளாதாரப் புரட்சியினாலேற்பட்ட நன்மைகளனந்தம். ஆரம்பத்தில் பிரித்தானியர் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் மற்றைய நாட்டவர்களிலும் பார்க்க அதிக முன்னேற்றமடைந்தனர். காலஞ்செல்ல அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி முதலிய நாடுகளும் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் போட்டியிடக்கூடிய நிலையில் வந்துவிட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின்பின் இந்தியா, சீனா முதலிய வேறும் அநேக நாடுகள் கைத்தொழிலில் விருத்தியடைந்துவருவதை நாங்கள் கவனிக்கலாம். இப்புரட்சியினாலேற்பட்ட நன்மைகள் பலவுளவாயினும் தீமைகளும் சில காணப்படுகின்றன. விஞ்ஞானிகள் புதிய முறைகள், சக்திகளைக்கொண்டு மனுஷவர்க்கத்தை அழிக்கக் கூடிய ஆயுதங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். நச்சுப் புகைகளும், அணுக்குண்டுகளும் அவைகளுள் சிலவாம். மக்களுடைய வாழ்க்கைமுறை நாளாந்தம் மாறிக்கொண்டு போகிறது. கஷ்டமில்லாத சுகமான வாழ்க்கையில் மக்கள் விருப்பங்கொண்டு இருக்கின்றமையினால் சோம்பலுள்ளவர்களாக மாறிவிடவுங்கூடுமென இடமுண்டு. கைத்தொழிற்புரட்சி பல மாற்றங்களையுண்டாக்கிவிட்டது. இன்றும் மாற்றங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன.



## வினாக்கள்

1. கைத்தொழில் விருத்தியடைந்ததற்குக் காரணங்கள் யாவை?
2. நெசவுத்தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
3. தொழிலாளர் தங்களுடைய நிலையை எவ்வாறு சிறப்படுத்தினர்? அரசாங்கங்கள் எவ்வாறு உதவிபுரிந்தது?
4. கிருஷிகத்தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
5. மக்களுடைய வாழ்க்கைமுறை மாறுதலடைந்ததற்குரிய காரணங்களை ஆராய்க.
6. தற்காலத்தில் போக்குவரவு வசதிகள் சுலபமாயிருப்பதற்கு காரணங்கள் யாவை?

RangaRakes
Tamilnavarasam.com

# பதினான்காம் அத்தியாயம்

## சுதந்திர உணர்ச்சியும் தேசீய இயக்கமும் (1815-1848)

ஐரோப்பாவில், நெப்போலிய யுத்தத்தினாலேற்பட்ட ஒழுங்கீனமான நிலையைச் சீர்படுத்துவதற்காக வியன்னா மகாநாட்டிற் சந்தித்த இராசதந்திரிகள் எதிர்காலத்தில் வேறொரு புரட்சி ஏற்படாவண்ணம் விஷயங்களைத் தீர்த்துவைக்கவேண்டியது தங்களுடைய கடமையெனவுணர்ந்தனர். புரட்சியென்பது ஒரு நாட்டின் அதிகாரிக்கு மாறாக எதிர்ப்புக்காட்டுவதே என்று யோசித்தனரேயன்றி சமுதாயத்தின் திருத்தம் அத்தியாவசியமென்பதையுணர்ந்திலர். ஐரோப்பாவில் சமாதானத்தையும், ஒழுங்கையும் நிலவச்செய்வதே அவர்களுடைய நோக்கம். ஆனால் பிரான்சியப்புரட்சிக்கு முன்னிருந்த நிலையை ஏற்படுத்துவதற்கு ஒன்றுசேர்ந்த பிரபுக்களாக அவர்கள் காணப்பட்டனரேயன்றி மக்களிடையே செறிந்துகிடந்த விரிவான கொள்கைகளையும் தேசிய உணர்ச்சியையும் விளங்கி அவைக்கேற்ற தகுதியான ஒழுங்கைச் செய்துகொள்ள முயற்சிசெய்யவில்லை.

வியன்னா மகாநாட்டில் அவர்கள் செய்துகொண்ட ஒழுங்குகளை ஆராய்ந்த பின்னரே அவர்கள் கவனியாதுவிட்ட தவறுகளை விளங்கிக்கொள்ளலாம். 1792-ம் ஆண்டுக்கு முன்பாக பிரான்சு தேசத்துக்கு இருந்த எல்லை மீண்டும் அம்மகாநாட்டில் அங்கீகாரம்பெற்றது. பழைய அரசவமிசத்தினரே சிங்காசனத்துக்கு உரிமையானவர்களாகக் கொண்டுவரப்பட்டனர். ஜேர்மனியினுடைய எதிர்கால நிலையை நிச்சயிப்பது ஒரு கஷ்டமான பிரச்சினையாகத் தோன்றிற்று. நெப்போலியன் ஜேர்மன் நாடுகளைக் கைப்பற்றியபொழுது அவனுக்கெதிரே காட்டிய எதிர்ப்பினால் அங்கே எழுந்த தீவிரமான தேசிய உணர்ச்சிக்கேற்றவாறு சுதந்திரமான ஜேர்மன் இராச்சியம் வியன்னா மகாநாட்டில் ஆக்கப்



படுமெனப் பலர் காத்திருந்தனர். 350 தனிநாடுகளும் 39 நாடுகளாகக் குறைக்கப்பட்டு அவைகளனைத்தும் சமஷ்டி அரசியல் முறையை அவுஸ்திரியாவின் தலைமையின்கீழ் பெற்றன. பிரஸ்ஸியா, ஜேர்மன் நாடுகளுக்குள் செல்வாக்குள்ள பெருநாடாக விளங்கியது. அவுஸ்திரியா பெல்ஜியத்தை இழந்ததனால், அது வெனீஸ், லொம்பாடி, இலீரியாவைப் பெற்றது. இத்தாலி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் அங்கு அவுஸ்திரியாவின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது. வெனீஸ், லொம்பாடி, மொடினா, பாமா, ரஸ்கனி அவுஸ்திரியாவின் கீழமர்ந்தன. மத்திய இத்தாலி போப்பரசரின் ஆளுகைக்குட்பட்டது. நேப்பிள்ஸ், சிசிலி, ஸ்பானிய அரசனுக்கே சேர்ந்தன. சார்டினியாவின் அரசன் பைட்மொன்ற், சவோய் ஆகிய பகுதிகளுக்கு அரசனானான். பெல்ஜியம், ஒல்லாந்தோடு சேர்க்கப்பட்டது. இரு சிறு நாடுகளும், மார்க்கம், சாதிவேறுபாடுகளினால் ஒற்றுமையாயிருக்கமுடியவில்லை. நோர்வே சுவீடனோடு சேர்க்கப்பட்டது. ருஷியாவாற் கைப்பற்றப்பட்ட பின்லாந்து ருஷியாவுக்கே கொடுக்கப்பட்டது.

வியன்னா மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்ப்புகளை அனுசரணைக்கு கொண்டுவந்து நிலைநாட்டும் நோக்கத்துடன் அவுஸ்திரியா, ருஷியா பிரஸ்ஸியா, ஒன்றுசேர்ந்து பரிசுத்த ஒப்பந்த சங்கம் என்ற ஒரு சங்கத்தை நிறுவினர். வியன்னா மகாநாட்டின் தீர்ப்புகளை அனுசரணைக்குக் கொண்டுவருவதோடு ஒப்பந்தத்திற் சேர்ந்த நாடுகளனைத்தும் நான்கு வருடங்களுக்கொருமுறை கூட்டங்களைக் கூட்டி காலத்துக்குக்காலம் காணப்பட்ட கஷ்டங்களைச் சமாதானமுறையிற் தீர்த்துவைப்பதாக உடன்பட்டுக்கொண்டனர். எந்நாட்டிலும் புரட்சியையுண்டாக்கும் இயக்கங்களை அடக்கவேண்டுமென்பதும் அவர்களுடைய கொள்கையாகும். ஆனால் புரட்சிகளை அடக்க அவர்களால் முடியவில்லை. ஸ்பானிய நாட்டை அரசாண்ட பழைய அரசவமிசத்தவர்கள் எதேச்சாதிகாரிகளாக ஆண்டமையால் கலகமேற்பட்டது. 1820-ல் அங்

RangaRakes Tamilnavarasam.com

நாட்டுச்சேனை கலகத்தையுண்டுபண்ணி புதிய அரசியற் சீர்திருத்தங்களை உண்டுபண்ணவேண்டுமென்று வாதாடினது. அரசன் சம்மதிக்கவேண்டி நேர்ந்தது. விரிவான கொள்கைகள் ஸ்பானியாவிற் புகுந்ததைக்கண்டு, ஐரோப்பாவின் வடக்கு, மத்திய நாடுகள் திகிலடைந்தன. ஆனால் அந்த இயக்கம் அடக்கப்பட்டு மீண்டு எதேச்சாதிகார ஆளுகை நிலைநாட்டப்பட்டது. அந்தப்புரட்சி தென் அமெரிக்காவில் ஸ்பானியருக்குள்ள நாடுகளில் அதிக பயனையுண்டாக்கியது. அங்கேயுள்ள எட்டுக் குடியரசு நாடுகள் எதேச்சாதிகார ஆளுகையை மறுத்து சுயேச்சையான ஆட்சிமுறையை பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியாகிய கானிங் என்பவரின் ஆதரவோடு ஸ்தாபித்தன.

ஸ்பானிய நாடுகளின் தொல்லைகள் நீங்கியவுடன் கிரேக்கர் தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடத் தொடங்கினர். காலத்துக்குக்காலம் அந்நியருடைய படையெடுப்பினால் கிரேக்கநாடு அல்லலுற்றது. அவர்கள் தங்களுடைய பண்டைநாட் பெருமையை நினைந்தனர். ஒருவாறு திரிவுயடைந்த கிரேக்க பாஷையே அந்நாட்டு மக்களாற் பேசப்பட்டது. இரகசிய சங்கங்கள்மூலம், சுதந்திர உணர்ச்சியினாலுந்தப்பட்ட மக்கள் போராட ஆயத்தஞ்செய்தனர். 1821-ல் கலகமேற்பட்டது. சுதந்திரத்தை விரும்பிய மக்களுக்கு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அக்கலகம் உண்டாக்கியது. அப்போது துருக்கியரினதிக்கத்துக்குட்பட்ட அந்நாட்டுக்கு, விடுதலையடைவது கஷ்டமாயிருந்தது. தனித்திருந்து சண்டையிடின் தோற்றிருக்கக்கூடிய அந்நாடு பிரித்தானியர் ருஷியரின் உதவியோடு சண்டைசெய்து வெற்றிபெற்றது. 1827-ல் நவாரினோ என்ற கடற்சண்டையில் துருக்கியருடைய கடற்படை அழிக்கப்பட்டதினால் அந்நாட்டில் அவர்களுக்குரிய ஆதிக்கம் குன்றியது. அவ்வருடத்திலேயே அது சுதந்திரத்தைப் பெற்றது. ஆங்கிலேயப் புலவனாகிய பைரன் என்பவன் இந்நாட்டுச் சுதந்திரப்போரிற் பங்குபற்றி அந்த யுத்தத்திலேயே மாண்டான். கிரேக்க சுதந்திரப்போர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு புது உணர்ச்சியை உண்டாக்கியது. கிரேக்க சுதந்திரப்போர் அந்நியரின் ஆளுகைக்கெதிரேயெழுந்த தேசியக்கலகமாகும். அந்நூற்றாண்டின், பின் அரைவாசிக் காலத்தில் தேசியக் கொள்கை ஐரோப்பாவில் வலிமைபெற்றது.



தேசிய உணர்ச்சி ஒரேசாதி, ஒரேபாஷை, ஒரே மார்க்கம், ஒரேபண்பாடு என்பவைகளுள் ஒன்றினாலோ அல்லது பலவற்றினாலோ உண்டாவதொன்றன்று. ஆனால் இவைகள் அவ்வுணர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தபோதிலும் சரித்திரத்தில் ஒரே தொடர்புடைய மக்களிடமே அது காணப்படும். ஒரு நாட்டிலுள்ள மக்கள் யாபேரும் தங்களின் பொது நன்மைக்காகவும், பொதுவான நோக்கத்துடனும் போராடி ஒன்றுசேர்வதற்கிடமுண்டு. இவ்வண்ணமாக ஐக்கியப்பட்ட சாதியினரே தேசிய உணர்ச்சியைப் பெறுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வகையான தேசிய உணர்ச்சியைப் பெற்றவர்கள் தாங்கள் வசித்த நாட்டைத் தங்களுக்குரிய தனிநாடாக்க விரும்பினர். ஒவ்வொரு தனிச்சாதியினரும் தங்களுடைய விஷயங்களைத் தாங்கள் நடத்தவேண்டுமென்றும், அந்நியரின் ஆளுகையினின்று நீக்கப்படவேண்டுமென்றும் எண்ணத்தையுடையராயினர். ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகள் இவ்வகையான தேசீயயுணர்ச்சியினால் ஐக்கியத்தை நிலைநாட்டும் தனிநாடுகளாக விளங்கவேண்டுமென்று முயற்சி செய்தன. இதேபோன்ற கிளர்ச்சி போலாந்து, பெல்ஜியம், அயர்லாந்து, பின்லாந்து முதலிய நாடுகளிற் தோன்றியது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள்ளும் குடிகொண்டிருந்த அதிருப்தி 1830-ல் புரட்சியை உண்டாக்கியது. முதலில் பெல்ஜியத்திற் புரட்சியேற்பட்டது. வீயன்னா மகாநாட்டில் உவில்லியம் ஒல்லாந்துக்கரசனாகவும், அவன் ஆளுகையின்கீழ் பெல்ஜியமும் இருக்கவேண்டு

RangaRakes Tamilnavarasam.com

மென்று ஒழுங்குசெய்யப்பட்டது. ஒல்லாந்து மக்களிலும் பார்க்க, பெல்ஜியத்து மக்கள் சனத்தொகையிற் கூடியவர்களாயும், கத்தோலிக்க சமயத்தவர்களாயும், பிரான்சியப் பாஷைக்குத் தொடர்புடைய பாஷையைப் பேசியவர்களாயுமிருந்தமையால் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த ஒல்லாந்தரின் ஆளுகையின்கீழ் இருக்கச் சம்மதப்படவில்லை. சுதந்திரத்தை விரும்பிய அந்நாட்டவர்கள் கலகத்தையுண்டுபண்ணினர். ஒல்லாந்தரசன் கலகத்தையடக்க எத்தனித்தான். பிரித்தானியரின் உதவியோடு பிரான்சியர் பெல்ஜியத்துக்குத் துணைபுரிய அவ்வரசன் இணக்கத்துக்குச் சம்மதித்தான். பெல்ஜியம் சுதந்திரத்தைப் பெற்றது. சுதந்திர பெல்ஜியத்துக்கு லியப்போல்ட் அரசனாக நியமிக்கப்பட்டான். பின்பு இங்கிலாந்து, பிரான்சு, அவுஸ்திரியா, ருஷியா, பிரஸ்ஸியா பெல்ஜியத்தைப் பொதுநிலைமை நாடாக அங்கீகரித்தனர். முதலாம் உலகயுத்த ஆரம்பகாலம் வரைக்கும் அந்நாட்டின் பொதுநிலைமை எல்லா நாடுகளாலும் பாதுகாக்கப்பட்டது.

இதிலும்பார்க்கப் பெரிய இயக்கமொன்று பிரான்சு தேசத்திற் தொடங்கியது. நெப்போலியன் வீழ்ச்சியடைந்தபின் பதினாறாம் லூயியின் சகோதரனான பதினெட்டாம் லூயி அரசனானான். பிரான்சியப் புரட்சிகாலத்தில் பிரான்சு தேசத்தைவிட்டுப் பிறநாடுகளுக்கு ஓடிய மேல்வகுப்பைச் சேர்ந்தவர்கள் திரும்பவுந் தங்களுடைய நாட்டுக்குவந்து பழைய நிலைக்குத் தங்களுடைய நாட்டைக்கொண்டுவர முயற்சித்தனர். 1824 வரைக்கும் ஆண்ட பதினெட்டாம் லூயியும், பின் ஆண்டுகொண்டிருந்த பத்தாம் சாள்ஸ் மன்னனும் பழைய முறைப்படியே ஆளுகை நடத்தினரல்லாது சட்ட அமைப்பின் பிரகாரம் ஆள விரும்பவில்லை. சாள்ஸ் அரசனுடைய செய்கையினால் 1830-ம் ஆண்டு ஆடி மாதம் ஒரு கலகமேற்பட அவன் இராச்சியத்தைவிட்டு விலகநேரிட்டது. அவன் இங்கிலாந்துக்கோட அவனுடைய மைத்துனன் லூயிபிலிப்பி அரசனானான். இவனுக்குமுன் சிங்காசன



மேறிய பிரான்சிய அரசர்களைப்போலல்லாது இவன் விரிந்த மனப்பான்மையுடையவனாகக் காணப்பட்டான். இவன் சட்டவரம்புடைய அரசியலை நிறுவி இங்கிலாந்தோடு நட்புப்பூண்டு சமாதானத்தை நிலவச்செய்து கைத்தொழில் வர்த்தகவிருத்திக்கு வேண்டிய முயற்சிகளையுஞ் செய்தான். நாடு முழுவதும் புகையிரதவீதிகளை அமைத்ததோடு தந்தி அனுப்பும் வசதிகளையுமேற்படுத்தினான். அல்ஜீயேர்ஸ் கைப்பற்றப்பட்டமையால் வர்த்தகம் விருத்தியடைவதற்கு வசதியாகவிருந்தது. அவன் பதினெட்டு வருஷங்களாக ஆண்டுகொண்டிருந்த காலத்திற் பல நன்மைகளைச் செய்தபோதிலும் பிரான்சிய மக்களுள் ஒருசாரார் நெப்போலியனுடைய வீரத்திறமையையும், கெம்பீரத்தையும் ஞாபகத்துக்கு எடுத்துக்கொண்டனர். பிரான்சுதேசம், சுதந்திரமான கொள்கையில்லாது பிரித்தானியாவைப் பின்பற்றும் நாடாகிவிட்டதெனச் சிலர் கூறினர். அப்போதுள்ள சமுதாயத்திலும் பார்க்க சிறந்த சமுதாயத்தை ஏற்படுத்தி சந்தோஷமாக வாழலாமென மக்கள் யோசிக்கலாயினர். சமுதாய புனருத்தாரணம் ஏற்படுத்தும் வழியை லூயி பிளாங்க் என்பவர் எடுத்துக்காட்டினார். அக்காலத்தில் பிரான்சின் சமுதாயநிலை கேவலமான நிலையிலிருப்பதாகச் சுட்டிக்காட்டினான். அரசாங்கமே மக்களனைவோருக்கும் வேலைகொடுக்க வேண்டுமென வற்புறுத்தினான். “நாங்கள் வேலைசெய்து சீவிப்போம் அல்லது சண்டைசெய்து இறப்போம்” என பாரிஸ்நகர மாந்தர் கூச்சலிடச்செய்தான். இவர்களுடைய மனதிற் சமத்துவக் கொள்கை புகுந்தது. மக்களுக்கு அதிகாரம் கிடைக்கக்கூடிய அரசாங்கத்தை நிறுவ முயற்சிகள் நடைபெற்றபொழுது லூயிபிலிப்பி அவ்வியக்கத்தையடக்கி அல்லது சினேகமுறையில் நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர் 1848-ல் இராச்சியத்தினின்று நீங்கி இங்கிலாந்துக்கு ஓடினார்.

லூயிபிலிப்பி இராச்சியத்தினின்று நீங்கியபின் குடியரசு அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பம்



RangaRakes Tamilnavarasam.com

தொட்டே இவ்வரசாங்கத்துக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டன. பாரிஸ் மாநகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய தொழிற்சாலைகளில் வேலை கேட்பவர்களுக்கெல்லாம் வேலை கொடுபட்டது. அத்தொழிற்சாலையை நடத்தியவர்கள் அவ்ஸ்தாபனங்கள் அநுகூலமடையவேண்டுமென்று விரும்பினரல்லர். அத்தொழிற்சாலைகளின் செலவு மிகவும் அதிகரித்தும் அங்கே நடைபெற்றவேலை பலனற்றதாயுங் காணப்பட்டமையால் அவ்வாண்டிலேயே (1848) அவைகள் மூடப்பட்டன. அதனாலேற்பட்ட கலகம் அடக்கப்பட்டு தேசிய மக்கட்சபைக்கு கூடிய அதிகாரங் கொடுபட்டு அது சட்ட அமைப்புக்கேற்றவாறு நிர்வாகத்தை நடத்தத் தொடங்கியது. அந்நேரத்தில் பெரிய நெப்போலியனுடைய சகோதரனுடைய மகன் லூயி நெப்போலியன் தேசிய மக்கட்சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டான். பின்பு அவன் தலைவனாகத் தெரிவுசெய்யப்பட்டான். 1852-ல் அவன் தன்னைச் சக்கரவர்த்தியாக்கிக்கொண்டான். இவனே மூன்றாம் நெப்போலியனாவான். இவன் பிரான்சிய கத்தோலிக்கருடைய ஆதரவைப் பெற்றான்.

பிரான்சுதேசத்தில் ஏற்பட்ட இவ்விதமான புரட்சிகள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் தாக்கியது. மக்கள் தங்களுடைய தேசிய கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்ட அமைப்புள்ள அரசாங்கத்தை நிறுவவேண்டுமென்ற நோக்கத்தாலேயே அந்நாடுகளில் புரட்சிகளேற்பட்டன. அவுஸ்திரியாவை இவ்விதமான கொள்கைகள் பாதிக்காவண்ணம் அந்நாட்டு மந்திரியாகிய மெற்றனிட்ச் ஊக்கமாயிருந்தபோதிலும் 1848-ல் வீயன்னாவில் கலகமேற்பட்டது. அதனால் அம்மந்திரி தன் பதவியினின்று விலக நேரிட்டதுமன்றி மக்கட்சபை கூட்டப்பட்டு அது அவுஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் எல்லா நாடுகளுக்குமேற்றமுறையில் சட்டங்களை உண்டாக்கியது. வீயன்னாவில் கலகமேற்பட்டவுடன் அவுஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் மற்றைய நாடுகளிலும் கிளர்ச்சி உண்டானது. பொகீமியாவிலும், ஹங்கேரியிலும் புரட்



சிகளேற்பட்டன. தேசிய உணர்ச்சி அவைகளைத் தூண்டியது. ஹங்கேரி சுதந்திரநாடாக விளம்பரப்படுத்தியது. இவ்வியக்கத்துக்கு கொசூத் என்பவனே ஊக்கமளித்தான். தீவிரமாக எழுந்த மக்யாஸ் என்ற பொகீமியச் சாதியினர் அவுஸ்திரியச் சக்கரவர்த்தியினாலும் ருஷிய மன்னனாலும் தோற்கடிக்கப்பட்டனர். அதேசமயத்தில் அவுஸ்திரியாவின் கீழமைந்திருந்த இத்தாலியிலுள்ள பகுதிகளில் கலகமேற்பட்டது. மிலனில் கலகமுண்டாகி அவுஸ்திரியர் துரத்தப்பட்டனர். வெனீஸ், குடியரசை ஸ்தாபித்தது. இந்நாடுகளுக்கு ஆதரவளித்த சாடினியாவின் அரசனான சாள்ஸ் அல்பேட் என்பவன் கஸ்ரோசா, நோவாரா என்ற சண்டைகளில் தோற்கடிக்கப்பட்டபின் (1849) அவுஸ்திரியா இத்தாலியிலுள்ள இராச்சியங்களை மீண்டும் பெற்றது.

ஜேர்மனியிலுள்ள 39 நாடுகளும் தேசிய உணர்ச்சி பரவியதால், ஒருமித்துச் சட்ட அமைப்புள்ள சமஷ்டி அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்று விரும்பின. 1848-ல் பிரான்சுதேசத்தில் புரட்சியுண்டானவுடன், ஜேர்மன் நாடுகளிலுள்ள தேசியக் கொள்கையாளர் பிராங்போட் என்ற இடத்தில் ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டி ஜேர்மனிக்கு ஒரு புதிய சட்ட அமைப்புள்ள அரசாங்கத்தை நிறுவவேண்டுமென்று ஆலோசனை செய்தனர். அவ்விரிவான கொள்கைகள் வெற்றிபெறுமெனத் தோற்றியது. புதிய ஜேர்மன் நாட்டில் அவுஸ்திரியாவின் செல்வாக்கிருக்க வேண்டுமா, அவுஸ்திரியாவின் பிரதிநிதிகள் ஜேர்மன் பாராளுமன்றத்தில் இடம்பெற வேண்டுமா என்று ஆலோசனை செய்யப்பட்டது. ஈற்றில் அவுஸ்திரியாவை முற்றாக நீக்கிவிட வேண்டுமென்றும் அதனாலேற்படும் பகைமையை எதிர்க்கவேண்டுமென்றும் தீர்மானஞ் செய்யப்பட்டது. பின்பு ஜேர்மன் சாதியினருள்ள ஷெல்ஸ்விக், கொல்ஸ்ரீன் என்ற இரு நாடுகளையும் டென்மார்க்கரசனிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானித்து அதற்காக அனுப்பப்பட்ட சேனை அவ்வரசனாற் தோற்கடிக்கப்பட்டது. இந்

RangaRakes

Tamilnavarasam.com

தத் தோல்வி பிராங்போட் மகாநாட்டின் தோல்விக்குக் காரணமாயிற்று.

பிரான்சியப் புரட்சியினாலுண்டான பலாபலன்கள் பிரித்தானிய மக்களையும் தாக்கிவிட்டன. அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை மேல்மக்களிலே மாத்திரம்விடாது மத்திய வகுப்பினரும் கீழ் வகுப்பினரும் பங்குபெற வேண்டுமென்ற உணர்ச்சி அந்நாட்டிற் பரவியது. அக்காலத்தில் அரசாங்கத்திற் தலைமைவகித்தோர் இவ்வுணர்ச்சி, புரட்சியை உண்டுபண்ணுமோவென்று பயந்து அடக்குவதற்கு வேண்டிய சட்டங்களைப் பிரயோகித்தனர். திருத்தங்களின் தேவையை உணர்ந்தவர்கள் சாத்வீகத் தன்மையுடையவர்களாகையால் மக்களிடையே கலகங்கள் உண்டாகவில்லை. 1830-ல் "விக்" கட்சித் தலைவர்களாகிய கிரே, றசல் என்பவர்களே பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தனர். பாராளுமன்றத்திலுள்ள பிரபுக்கள்சபை அதை அங்கீகரிக்காதுவிடச் சில இடங்களிற் கலகமேற்பட்டது. பின்பு 1832-ல் அது இருசபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இதன்பிரகாரம் மத்தியவகுப்பினர் வாக்குரிமையைப் பெற்றனர். இதனால் வைத்தியர்கள், ஆசிரியர்கள், நியாயதுரந்தர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் வாக்குரிமையைப் பெற்றதல்லாமல் தொழிலாளர் பெறவில்லை. தொழிலாளரிற் காணப்பட்ட அதிருப்தி காரணமாக 1837 வரையில் தொழிலாளர் இயக்கமொன்று காணப்பட்டது. ஆறு கோரிக்கைகளையுள்ள ஒரு மனுவொன்று தயாரிக்கப்பட்டது. அதன் அம்சங்கள் (1) ஆண்மக்களின் வாக்குரிமை (2) பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குச் சம்பளங்கொடுத்தல் (3) இரகசியச் சீட்டுமூலம் வாக்குரிமையளித்தல் (4) அங்கத்தவர்களுக்கு ஆஸ்திதராதலமில்லாது செய்தல் (5) ஒரே அளவு சனத்தொகை உள்ள தொகுதிகளை ஸ்தாபித்தல் (6) ஒவ்வொரு வருஷமும் புதுப்பாராளுமன்றத்தைத் தெரிதல். முதல் நான்கு கோரிக்கைகளும் சட்டரூபமாக ஆக்கப்பட்டன. 1839-ன் மேல் இந்த இயக்கம் குன்றி



யது. ஆனால் 1840-ன் பின் ஏற்பட்ட பண நெருக்கடியினால் ஒரு பிரமாண்டமான இன்னொரு மனுவொன்று தயாரிக்கப்பட்டுப் பாராளுமன்றச் சபைக்குத் திரளாகச் சென்று அதைச்சமர்ப்பிக்க மக்கள் ஆரம்பித்தனர். அதிற் கள்ளக் கைச்சான்றுகள் அநேகம் காணப்பட்டமையால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வியன்னா மகாநாட்டின் சமாதான உடன்படிக்கை ஐரோப்பிய நாட்டுமக்களின் சுதந்திர தேசீயக்கொள்கைகளுக்கேற்றவாறு எழுதப்படாமையால் 1830, 1848-ல் புரட்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது. பிரான்சியப் புரட்சியின்பின் சிங்காசனமேறிய அரசர்களும் அக்கொள்கைகளை அலட்சியஞ் செய்தனர். மக்களை அடக்கி ஆளும் முறையையே கையாண்டனரேயன்றி விரிந்த கொள்கைகளுக்கேற்றவிதமாக நிர்வாகத்தைத் திருத்தியமைக்கவில்லை. படிப்படியாக ஒவ்வொரு நாடும் வாதாடிச் சுதந்திரத்தைப் பெற முயற்சிசெய்ய ஆரம்பித்தது. எல்லா நாடுகளிலும் பார்க்க இத்தாலி, ஜேர்மன் நாடுகளில் சுதந்திர உணர்ச்சி அரசர்களால் அடக்க முடியாத நிலையிலிருந்தது. 1848-ல் இந்நாடுகளிற்தோன்றிய புரட்சிக்கலகங்கள் அநுகூலமடையாதபோதிலும் சீக்கிரத்தில் அந்நாடுகள் ஐக்கியம் பூண்டு மக்களுடைய உணர்ச்சிக் கேற்றவாறு அரசாங்கத்தை நிறுவிக் கொண்ட வரலாற்றைப்பற்றி அடுத்த அதிகாரங்களிற் படிப்போம்.

### வினாக்கள்

1. ஐரோப்பிய நாடுகளில் எப்போது சுதந்திர உணர்ச்சி உண்டானது? அவ்வுணர்ச்சி உண்டானதற்குக் காரணம் யாது?
2. 1830-ல் எந்நாடுகளில் புரட்சிகளேற்பட்டன? ஏற்பட்டதற்குரிய காரணங்களை ஆராய்க.
3. லூயி நெப்போலியனைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.
4. பிரான்சியப் புரட்சியினாலேற்பட்ட பலாபலன்கள் பிரித்தானியாவை எவ்வாறு தாக்கிவிட்டன?
5. பிரித்தானிய பாராளுமன்றத்தின் அங்கீகாரம்பெற்ற சீர்திருத்தச் சட்டத்தை (1832) ஆராய்க.
6. 1848-ல் எந்நாடுகளிற் புரட்சியேற்பட்டது? ஒவ்வொன்றைப்பற்றியும் தெரிந்தவற்றை எழுதுக.

RangaRakes Tamilnavarasam.com

# பதினைந்தாம் அத்தியாயம்

## இத்தாலியின் தேசீய ஒற்றுமை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய அரசியல் அரங்கில் சுதந்திர, தேசிய உணர்ச்சியை அடிப்படையாகவுள்ள பரந்த கொள்கைகள் முக்கியமான இடத்தைப் பெற்றன. இவ்விதமான கொள்கைகள் எங்கும் ஒரேவிதமான மாற்றத்தை உண்டாக்கவில்லை. இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இவ்வுணர்ச்சிகள் அந்நாடுகளின் ஒற்றுமையைப் பலப்படுத்தின, துருக்கியர் சாம்ராச்சியத்தில் அச்சாம்ராச்சியம் பிளவுபடச் செய்து சிறுச்சிறு சுதந்திர நாடுகள் தோன்றச்செய்தன. அந்நூற்றாண்டின் தேசீய இயக்கங்களுள் இத்தாலியில் ஏற்பட்ட இயக்கமே வீரத்தன்மைவாய்ந்ததாகும்.

இத்தாலியின் தேசீய உணர்ச்சி, நெப்போலியன் அந்நாட்டைக் கைப்பற்றி, புதிய மாற்றங்களை உண்டாக்கியபொழுதே உண்டானது. 1796-ல் அவன் இத்தாலிக்குப் படையெடுத்துச் சென்றபொழுது அங்கே 12 சிறுச்சிறு பிரிவுகள் காணப்பட்டன. சில வருடங்களுக்குள் நேப்பிள்ஸ் அரசாங்கத்தைவிட மற்றையவெல்லாம் மறைவுற்றன. நேப்பிள்ஸ் இராச்சியத்துக்குத் தனது சகோதரனை யோசேப்பை அரசனாக்கி எஞ்சிய பாகம் முழுவதுக்கும் தானே அரசனாகவிருந்தான். இத்தாலி ஒருகாலத்தில் ஒற்றுமைபூண்ட தனி நாடாக விளங்குமெனவுணர்ந்து அவ்வண்ணம் அது பூர்த்தியாவதற்கும் சிலவழிவகைகளைத் தேடினான். அவன் பாலங்கள் தெருக்களை அமைத்தான். பலவகையான சட்டங்களுக்குப் பதிலாக ஒரேமாதிரியான சட்டத்தை வகுத்து வைத்தான். நிலமானியமுறையிற் காணப்பட்ட சலாக்கியங்கள் யாவற்றையுமொழித்து எல்லா வகுப்பினரும் வரியிறுக்கக்கூடிய ஒழுங்கைச் செய்துவைத்தான். நாட்டிற் கல்வியைப் பரப்பியதோடு மத்திய நிர்வாகமுறையை ஏற்படுத்தினான். எல்லாவற்றிலும் பார்க்க அந்நாட்டு மக்



களை இத்தாலி தேசத்தவர்களென்ற உணர்ச்சியோடு வாழச்செய்தான்.

வீயன்னா மகாநாட்டிற் (1815) கூடிய இராசதந்திரிகள் அந்நாட்டுக்கு நெப்போலியன் செய்த வேலைகள் யாவும் அற்றுப்போகக்கூடியவண்ணம் முயற்சி செய்தனர். அவர்களுடைய ஒழுங்கின்படி வெனீஸ் லொம்பாடியோடு சேர்க்கப்பட்டது. ஜெனோவா, பைட்மொன்ட் சார்டீனியா இராச்சியத்தோடு சேர்ந்தன. தேவாலயங்களுக்குரிய நாடுகள் போப்பாண்டவரின் ஆதிக்கத்தில் விடப்பட்டன. சிசிலி இராச்சியத்தோடு நேப்பிள்ஸ் சேர்க்கப்பட்டு ஸ்பானிய அரசவமிசத்தவனாகிய நாலாம் பேடினாந்து அவ்விராச்சியத்துக்கு அரசனானான். ஆனால் அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளாக மெட்டனிட்ஸின் செல்வாக்கே இத்தாலியிற்காணப்பட்டது. 1815 தொடக்கம் 1848 வரைக்கும் இடையிடையே கலகங்கள் ஏற்பட்டபோதிலும் தேசீய உணர்ச்சியடக்கப்பட்டு பழைய அரசியல்முறையே ஸ்தாபிக்கப்பட்டது. 1820-ல் நேப்பிள்ஸ் இராச்சியத்திலும் அடுத்த ஆண்டில் பைட்மொன்ட் இராச்சியத்திலும் சட்ட அமைப்புள்ள அரசாங்கத்தைப் பெறுவதற்காக மக்கள் வாதாடினர். இவ்வகையான கிளர்ச்சி **கரியெரிப்போர்** சங்கத்தின் செல்வாக்கினால் உண்டாயது. தேசாபிமானமும், விளக்கமுமுள்ள ஒரு சிறுபான்மையருடைய முயற்சியினாலே கலகங்களேற்பட்டதேயன்றி தேசீய, சுதந்திர உணர்ச்சி பெரும்பான்மையான மக்களிடம் காணப்படவில்லை. ஆனால் 1830-ல் பிரான்சு தேசத்தில் ஏற்பட்ட புரட்சி இத்தாலியிலும் சில கிளர்ச்சிகளை யுண்டாக்கின. அப்போது மத்திய இத்தாலியிலும் **மொடினா, பாமா** முதலிய பகுதிகளிலும் உண்டான கலகங்கள் அவுஸ்திரிய சேனையால் அடக்கப்பட்டன. இவ்வகையாக யிடையிடையே சம்பவித்த கலகங்களின் பயனாக **யோசேப் மஸ்ஸினி** என்னும் இளைஞன் கரியெரிப்போர் சங்கத்தின் முயற்சிகளைக் கண்டித்து **யௌவன இத்தாலி** என்னும் சங்

RangaRakes Tamilnavarasam.com

கத்தை ஸ்தாபித்தான். இத்தாலியின் சுதந்திரத்தைப் பெறுவதே அதன் பிரதான நோக்கமாகும். அறிவைப் பரப்புவதிலும் கலகத்தையுண்டுபண்ணுவதிலும் அதிகம் சிரத்தையெடுத்து உடனடியாக அவுஸ்திரியாவின் செல்வாக்கை சேனைப்படையின் உதவியினால் முற்றாக நீக்க வேண்டுமென்று, அச்சங்கத்தார் தீர்மானஞ் செய்து கொண்டனர். மஸ்ஸினி தன் நாட்டைவிட்டு விலக வேண்டி நேரிட்டபோதிலும் இங்கிலாந்திலிருந்து அச்சங்கத்தின் விஷயங்களை நடத்திக்கொண்டிருந்தான்.

1848-ல் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலும் புரட்சிகள் ஏற்பட்டபொழுது இத்தாலியிலுள்ளதேசாபிமானிகள் அங்கே கலகத்தை யுண்டாக்கினர். போப் பரசராலாளப்பட்ட பகுதிகளிலும் நேப்பிள்ஸ், சிசிலி, ரஸ்கனி, பைட்மொன்ட் முதலிய பகுதிகளிலும் சட்ட அமைப்புள்ள அரசாங்கம்ஸ்தாபிக்கப்பட்டது. வெனீஸ், சுதந்திரத்தை நிலைநாட்டியது. லொம்பாடி அவுஸ்திரியாவின் ஆளுகையிலிருந்து விலகிக்கொண்டது. பைட்மொன்டுக்கு அரசனாகிய சாள்ஸ் அல்பேட் அவுஸ்திரியாவுக்கெதிரே போருக்கெழுந்தான். போர்த்திறமை வாய்ந்த அவுஸ்திரியாவின் சேனை இவ்வரசனைக் கஸ்தோசா, நோவாரை என்ற சண்டைகளிற் தோற்கடித்தது. அதனால் சாள்ஸ் அல்பேட் தனது இராச்சியத்தினின்றும் விலக அவனது மகன் விக்ரர் இமானுவேல் சிங்காசனமேறினான். பல பிரிவுகளையுடைய இத்தாலி அவுஸ்திரியாவோடு சமர்புரிந்து வெற்றிபெறுவது ஒவ்வாததொரு விஷயமாகும். ஆனால் இத்தாலியின் எல்லாப் பாகங்களிலுள்ள மக்களிடையே சுதந்திர உணர்ச்சி ததும்பியது. இத்தாலியை ஒற்றுமைப் படுத்துதற்கு விக்ரர் இம்மானுவேல் சார்டினியாவுக்கு அரசனாகவந்தவுடன் அந்நாட்டுமக்கள் அவனைத்தலைவனாக ஏற்றுக் கொண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற் சிறந்த இராசதந்திரியாக விளங்கிய கவுண்ட் கவூரை முதன் மந்திரியாக அவன் நியமித்தான்.



பல பிரிவினைகளுள்ள இத்தாலி நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவது கஷ்டமாயிருந்தபோதிலும் மக்களிடையே காணப்பட்ட தேசீய உணர்ச்சியும், தேசாபிமானிகளாகிய மஸ்ஸினி கரிபோல்டி, விக்ரர் இம்மானுவேல், கவுன்ற் கவூர் என்பவர்களின் முயற்சியும் ஒன்றுசேர்ந்து எவ்வாறு அந்நாட்டின் ஒற்றுமை பூர்த்தியாக்கப்பட்டதென்பதைப் பற்றி இனி ஆராய்வோம். பைட்மொந்திலுள்ள பிரபுவாகிய கவூர் இங்கிலாந்திலுள்ள அரசியலைப்பற்றியும் அங்கே காணப்பட்ட சமுதாய, பொருளாதார திருத்தங்களைப்பற்றியும், பாராளுமன்ற அரசியல் முறையைப்பற்றியும் நல்லாக அறிந்திருந்தான். ஆங்கிலேய இராச தந்திரிபோல் அவன் மதிக்கப்பட்டான். அவன் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டவுடன் சமய விஷயங்களிலும், சேனை, கடற்படை இன்னுமற்றுந் துறைகளிலும் சிறந்த திருத்தங்களை ஏற்படுத்தினான். தனது சீவிய காலம் முழுவதையும் இத்தாலியின் சுதந்திரத்திற்காக அர்ப்பணஞ் செய்யச்சித்தமாகி தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தன் சுயமரியாதைக்குப் பங்கமேற்படினும் அதைச்செய்து முடிப்பதற்குத் தயாராயிருந்தான். அவன் பின்வரும் விஷயங்களை முன்னறியக்கூடிய யூகமுடைய அரசியல் நிபுணனாவன். இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதற்கு இத்தாலி மக்களிடையே காணப்பட்ட சுதந்திர உணர்ச்சியும், பைட்மொந்தின் சேனையும் அவனுக்கு ஆதரவாகவிருந்தன. ஆனால் இத்தாலியில் அவுஸ்திரியாவுக்குள்ள செல்வாக்கை யழிப்பதற்கு அவையிரண்டும் மாத்திரம்போதாமையால் அந்நிய அரசரின் உதவி தேவையென வுணர்ந்தான்.

பிரான்சுதேசத்தின் உதவியைப் பெறுவதற்காக, கிறிமியன்போரில் பிரான்சியப் போர்வீரருக்கு உதவியாகச் சார்டினியாவிலிருந்து சேனையொன்றை கவூர் அனுப்பினான். அச்சேனை திறமையுடன் போர்புரிந்தது. இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரு நாடுகளின் சிநேகம் கவூருக்குக் கிடைத்தது. பாரிஸில் நடைபெற்ற



RangaRakes
Tamilnavarasam.com

சமாதான மகாநாட்டில் கவூருக்கும் ஒரு இடங் கொடுபட்டது. அம்மகாநாட்டில் இத்தாலியின் பரிதாபநிலையை ஐரோப்பிய வல்லரசுகளுக்கு விளக்கிக்காட்டி, அந்நிலைக்கு அவுஸ்திரியாவே காரணமாயிருக்கிறதென்றும் கவூர் கூறினன். இங்கிலாந்தும் பிரான்சும் மனப்பூர்வமான அனுதாபத்தைக் காட்டின. பிரான்சுக்கரசனாகிய மூன்றாம் நெப்போலியன் கூடிய அனுதாபங் காட்டி இத்தாலி நாட்டிலிருந்து அவுஸ்திரியாவைத் துரத்துவதற்குச் சில நிபந்தனைகளுடன் உதவிபுரிவதாக கவூருக்கு வாக்களித்தான். இருவருக்குமிடையில் நடந்த இரகசிய ஒப்பந்தத்தின் பிரகாரம் விக்ரர் இமானுவேலினுடைய மகள் நெப்போலிய இளவரசனுக்கு மனைவியாக்கப்பட்டாள். (1859) அவுஸ்திரியாவுக்கும், சார்டினியா அரசனுக்குமிடையில் யுத்தந் தொடங்கியவுடன் நெப்போலியன் 200,000 போர்வீரர்களைக்கொண்டுள்ள சேனையுடன் உதவியளிப்பதும், லொம்பாடி, வெனிஸ், பாமா, மொடினா பைத்மொந்தோடு சேர்க்கப்படுவதும், சவோய், நைஸ் பிரான்சிய அரசனுக்கு வெகுமதியாகக் கொடுப்பதும் மற்றுந் நிபந்தனைகளாம்.

இனி அவுஸ்திரியாவோடு போரைத்தொடங்குவது கவூரின் கடமையாயிற்று. இத்தாலிய மக்கள் போரை நடத்துவதற்குச் செய்த ஆயத்தங்கள் அவுஸ்திரிய அரசாங்கத்தைத் திகிலடையச்செய்தது. உடனே அவ்வரசாங்கம் பைட்மொந்தின்சேனை குறைக்கப்படவேண்டுமென அந்நாட்டரசனுக்கு ஒரு ஆஞ்ஞையைவிடுத்தது. கவூர் பாராளுமன்றத்தைக் கூட்டி இதுவே பைட்மொந்தின் கடைசிப்பாராளுமன்றமென்றும் இனிவரப்போவது இத்தாலிய இராச்சியத்தின் பாராளுமன்றமாகுமெனக் கூறினன். அவுஸ்திரியாவுக் கெதிரே யுத்தந் தொடங்கியதும் நெப்போலியன் மாபெருஞ்சேனையுடன் இத்தாலிக்கு வந்தான். கடும்போரின் ஈற்றில் மாகெந்தா, சொல்பெரினோ என்ற சண்டைகளில் அவுஸ்திரியாவைத் தோற்கடித்தான். கவூர் தன்னுடைய நோக்கம் முற்றாக நிறைவேறுமென ஆவலோடு பார்த்திருக்கும்வேளை



யில் நெப்போலியன் அவுஸ்திரியாவின் அரசனான பிரான்சிஸ் யோசேப்போடு சமாதானஞ் செய்துகொண்டான். அவ்வாறு நெப்போலியன் செய்துகொண்டதின் நோக்கம் யாது என்று சரியாகக் கூறமுடியாது. பிரான்சிய வீரரின் போர்த்திறமையில் நம்பிக்கைவைக்க முடியவில்லை. இத்தாலியத் தலைவர்கள் எல்லா விஷயங்களிலும் அவனுடைய எண்ணத்துக்கு இணங்கவில்லை. எல்லாவற்றிலும் பார்க்கப் பிரஸ்ஸியா தனது சேனைப்படையைத் திரட்டியது. ஆகையால் சமாதானம் ஏற்பட்டது. ஆனால் அவ்யுத்தம் இத்தாலியரின் தேசீய இயக்கத்தில் முக்கிய ஸ்தானத்தை ஏற்படுத்தியதெனலாம். லொம்பாடியும், மத்திய இத்தாலியிலுள்ள ரஸ்கனி, மொடினா, பாமா முதலிய பகுதிகளும் பழைய அரசர்களைத் துரத்திவிட்டு பைட்மொந்தோடு சேர்ந்துகொண்டன. வடக்கு இத்தாலியும் மத்திய இத்தாலியும் ஒன்றுசேர்ந்தன. வெனீஸ் அவுஸ்திரியாவின் கையிலேயே மீண்டும் சிக்கிக்கொண்டது. நெப்போலியன் அவ்யுத்தத்திலீடுபட்டதிற்கு வெகுமதியாக சவோய், நைஸ் என்ற பகுதிகளைத் தனக்காக்கிக்கொண்டான். இத்தாலியின் மத்திய பகுதி சனங்களின் விருப்பத்தின்படியே பைட்மொந்தோடு சேர்க்கப்படுமென, கவூர் பிரான்சிய சக்கரவர்த்தியைச் சமாதானப்படுத்தி மக்களின் வாக்கை எடுக்கத்தொடங்கினன். பெரும்பான்மையோர் சேர்ந்துகொள்வதற்குவிருப்பங்காட்டியமையினால் மத்திய இத்தாலியும் வட இத்தாலியும் ஒன்றுசேர்ந்தன.

அடுத்தபடியாக இத்தாலிய தேசீய ஒற்றுமை கரிபோல்டியின் தலைமையில் ஏற்பட்டது. மஸினி, கவூர் என்பவர்களைப்போல் கரிபோல்டியும் பைட்மொந்தின் பிரசையாவான். தென் அமெரிக்காவில் வீரத்தன்மையுள்ள வாழ்க்கையை வாழ்ந்தபின்பு புரட்சிக்காலமாகிய 1848-ல் ஐரோப்பாவுக்கு வந்து புரட்சிகளில் பங்குபற்றினன். 1859-ல் நடைபெற்ற சண்டையில் தன் புகழை நாட்டி அடுத்த ஆண்டில் சிவப்பு அங்கி அணிந்த 1072 தொண்டர்களோடு ஜெனோவாவிலிருந்து புறப்பட்டு, ஸ்பானிய அரசை வெறுத்திருந்த சிசிலியுட் புகுந்து அதைத் தன்வசப்படுத்தினன். பின்பு நேப்பிள்ஸ் இராச்சியத்தைக் கைப்பற்றினன். கரிபோல்டி

RangaRakes Tamilnavarasam.com

யின் சடுதியான வெற்றிகளைக் கண்ணுற்ற கவூர் நேப்பிள்ஸ்-சிசிலி இராச்சியத்தை வடஇத்தாலியோடு சேர்க்காது, தெற்கே குடியரசு அரசை கரிபோல்டி ஸ்தாபிக்கக்கூடுமெனப் பயந்திருந்தான். போப்பாண்டவரின் நாடுகளை கரிபோல்டி கைப்பற்ற எத்தனித்தால் அந்நிய நாடுகள் தலையிடவும்நேரிடுமெனவும் பயந்திருந்தான். போப்பாண்டவரின் இராச்சியம் திறமையாக ஆளப்படாதிருந்தபோதிலும் ஐரோப்பிய வல்லரசுகள் ஆதரவளித்துக்கொண் டிருந்தனர். போப்பரசருக் கெதிரே ஒருவிதமான பகைமையுமில்லாதிருந்தபோதிலும் போப்பரசரின் 20000 போர்வீரர்களைக்கொண்டுள்ள சேனை விக்ரர் இமானுவேலுக்கு ஆறுதலின்மையைக் கொடுத்ததினால் அவன் அச்சேனையை நீக்கவேண்டுமென அவரைக்கேட்டான். அதற்குச் சம்மதப்படாமையால் இத்தாலியசேனை உட்புகுந்து போப்பரசரின் சேனையைத் தோற்கடித்தது. நேப்பிள்ஸ் மார்க்கமாகச்சென்ற விக்ரர் இமானுவேலிடம் கரிபோல்டி தான் கைப்பற்றிய நாடுகளைக் கொடுத்தான். இச்சம்பவங்கள் யாவும் இத்தாலியின் ஒற்றுமைக்குச் சாதகமாயின. ஆனால் ரோமாபுரி பிரான்சியப்படையால் காக்கப்பட்டிருந்தது. வெனீசும் அவுஸ்திரியாவசம் இருந்தது. இந்த இரு இடங்களும் அடுத்த பத்து வருடங்களுக்குள் ஒற்றுமைபெற்ற இத்தாலிவசம் கிடைத்தன. ரூறின் தலைநகரமாக்கப்பட்டு 1861-ல் முதற்பாராளுமன்றம் கூடியது. அதன் பின் அவ்வாண்டிலேயே கவூரும் இறந்தான்.

புதிய நாட்டுக்குப் பொருளாதாரம் அரசியல் சமயம் சம்பந்தமான பல கஷ்டங்கள் ஏற்பட்டன. 1866-ல் அவுஸ்திரியாவுக்கும் பிரஸ்ஸியாவுக்குமிடையில் நடந்த போரில் விக்ரர் இமானுவேல் வெனீசை இத்தாலியிடம் ஒப்படைத்தால் அவுஸ்திரியாவுக்கு உதவிபுரிவதாகக் கூறியபோது அவுஸ்திரியா அதற்கு மறுத்தது. பிரஸ்ஸியாவுக்கு அவ்வுதவியைக் கொடுத்தமையால் போர் முடிந்தவுடன் வெனீஸ் இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டது. 1867-ல் கரிபோல்டி ரோமாபுரியைக் கைப்பற்றுவதற்கு எத்தனித்தபோது பிரான்சியப்படை அவனுடைய சேனையைத் தோற்கடித்தது. 1870-ல் நடந்த போரில் பிரான்சு பிரஸ்ஸியாவாற் தோற்கடிக்கப்பட்டமையால் ரோமாபுரி விக்ரர் இமானுவேலின் வசமாகியது. பின்பு ஒற்றுமைப்பட்ட இத்தாலிக்கு அதுவே தலைநகரமாக்கப்பட்டது.



வட இத்தாலியும் தென் இத்தாலியும் அரசியல் ஒற்றுமையைப் பெற்றபொழுதிலும் இரண்டும் சமுதாய நிலையிலும், பொருளாதார நிலையிலும் வேறுபட்டன. இங்கிலாந்தைப் பின்பற்றி ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற அரசாங்கமுறையும் திருப்திகரமாகக் காணப்படவில்லை. தற்காலத்திலுள்ள ஏனைய நாடுகளைப்போல் ஸ்தாபிப்பதற்குக் கடும் வரிகளைவிதித்துப் பணத்தைச் சேர்த்தமையால் மக்களிடையே நம்பிக்கையீனமும் அதிருப்தியும் உண்டாயின. சமுதாயத்திற் காணப்பட்ட ஒழுங்கீனங்களும் புதிய நாட்டின் ஸ்திரத்தைப் பயமுறுத்தின. இத்தாலிக்கும் பிரான்சுக்குமிடையிற் காணப்பட்ட ஒற்றுமையும் இடையிடையே பங்கப்பட்டது. போப்பரசருக்கும் இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையில் ஒருவிதமான அனுதாபமுமில்லாமையால் போப்பரசரோடு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பலமுறையும் இத்தாலிய அரசாங்கம் முயற்சி செய்தது. முசோலினி 1929-ல் போப்பரசரோடு ஒருவகையான ஒற்றுமையை ஏற்படுத்தும்வரையும் இருபகுதியாருக்குமிடையில் மனஸ்தாபங் காணப்பட்டது.

### வினாக்கள்

1. இத்தாலியின் ஒற்றுமைக்குத் தொண்டாற்றியவர்கள் யாவர் ?
2. கவூரை ஒரு அரசியல் நிபுணன் என்று கூறுவதற்கு நியாயமென்ன ?
3. இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதற்குக் கரிபோல்டி செய்தசேவை யாது ?
4. இத்தாலி தேசிய ஒற்றுமையைப் பெற்றவரலாற்றை எழுதுக.
5. ஒற்றுமைப்பட்ட இத்தாலி எவ்வகைப்பட்ட கஷ்டங்களை நீக்கவேண்டியிருந்தது ?

RangaRakes Tamilnavarasam.com

# பதினாறும் அத்தியாயம்

## ஜேர்மனி ஐக்கியம்பூண்ட வரலாறு

பரிசுத்த ரோம இராச்சியம் நிலைகுலைந்த காலம் (1806) தொட்டு ஜேர்மன் சாதியினரென்று அழைக்கக் கூடிய தனி நாடொன்று இருக்கவில்லை. ஆகையால் வியன்னா மகாநாட்டில் அவ்விதமானவொரு நாட்டை ஸ்தாபிக்கவேண்டியது அங்கு கூடியிருந்த பிரமுகர்களின் கடமையாயிற்று. நெப்போலியன் படையெடுத்துச் சென்ற காலத்தில் விடுதலைப்போரை (1813—14) நடத்திய ஜேர்மன் நாடுகளிலுள்ள மக்களிடையே தேசீயவுணர்ச்சி உண்டானது; வியன்னா மகாநாட்டிற் கூடிய பிரமுகர்கள் ஜேர்மன் நாடுகளிற் தோன்றிய புத்துணர்ச்சிக்கேற்றவாறு ஒரு அரசியலை ஸ்தாபிப்பார்களோ என்றகேள்வி யாவரிடத்தும் எழுந்தது. பழைய சக்கராதிபத்தியத்தை மீண்டும் நிறுவுவதற்கு ஒருவரும் விரும்பமாட்டார்களென்பது வெளிப்படை. வடஜேர்மனி, தென்ஜேர்மனியென இரண்டாகப் பிரித்து முறையே அவுஸ்திரியா, பிரஸ்ஸியாவின் தலைமையின் கீழ்ச் சமஷ்டி அரசியலை நிறுவுவதற்காகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அவுஸ்திரியா மறுப்புக்காட்டியது. ஈற்றில் அவுஸ்திரியாவின் தலைமையின்கீழ் ஒரு சமஷ்டி அரசாங்கத்தையும் 39 நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்டுள்ள சமஷ்டி அரசாங்கப் பாராளுமன்றத்தையும் ஸ்தாபிப்பதாக அம்மகாநாட்டிற் தீர்மானஞ் செய்யப்பட்டது. அப்பாராளுமன்றம் வெளித்தோற்றத்துக்கு பெரும் அதிகாரத்தையுடையதாகத் தோற்றினும் செய்கையளவில் பலமற்றதாகக் காணப்பட்டது. சமஷ்டி நிர்வாகம் நடைபெறவில்லை. அவுஸ்திரியாவின் மந்திரியாகிய மெற்றனிட்ச் இவ்வொழுங்கு நல்லதெனத் திருப்தியடைந்தார். 1815க்கும் 1848க்குமிடையில் இடையிடையே ஏற்பட்ட கலகங்களைவிட இத்தாலியைப்போல் ஜேர்மனியிலும் பழைய அரசியல்முறைகளை ஸ்தாபிப்பதற்கு அவுஸ்திரியா பல எத்தனங்களைச் செய்தது. அரசியல், வர்த்தகம் என்பவைபற்றி ஜேர்மனி அதிகம் பிளவுபட்டிருந்தமையால் அவுஸ்திரியாவின் எத்தனங்கள் பயனற்றதாய்ப்போயின. ஜேர்மனியின் செல்வநிலையையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் எல்லா நாடுகளுஞ்சேர்ந்த சுங்கவரி ஐக்கிய சங்கமொன்றை பிரஸ்ஸியா ஸ்தாபித்தது. அதன்பிரகாரம் எல்லா நாடுகளிலும் உள்நாட்டு வர்த்தகத்தை விருத்திசெய்வதற்காகக் காணப்பட்ட தடைகள் யாவும் நீக்கப்பட்டதுமல்லாமல், வெளிநாட்டு வர்த்தகத்தைப் பாதுகாக்கும்பொருட்டு பொதுவான சுங்கவரிவிகிதமு மேற்படுத்தப்பட்டது. வீதிகள், கால்வாய்கள், புகையிரத வீதிகள் அமைக்கப்பட்டன. காகிதப் போக்குவரவு வசதிகள் அளிக்கப்பட்டன. இவ்வண்ணமாக ஜேர்மன் நாடுகளின் வர்த்தகம் மேலோங்கத்தக்கதாக ஊக்கமளிக்கப்பட்டது. வர்த்தக வளர்ச்சி அரசியல் ஒற்றுமைக்கு சாதகமாயிருந்தது. அவுஸ்திரியாவைவிட ஏனைய நாடுகள் பிரஸ்ஸியாவின் ஆதரவையே எதிர்பார்த்தன.

இறுகாறும் மெற்றனிட்ச் மந்திரியால் அடக்கப்பட்ட தேசீய உணர்ச்சி 1848-ல் ஐரோப்பிய நாடுகளில் கலகமுண்டாக, ஜேர்மன் நாடுகளிலும் கிளர்ச்சியையுண்டாக்கியது. அந்த இயக்கத்தின் ஆதரவாளர்களிடம் இரண்டு நோக்கங்களிருந்தன. ஜேர்மனியிலுள்ள ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள சட்ட அமைப்பில் சீர்திருத்தங்களேற்பட வேண்டுமென்பதும், ஜேர்மனி முழுவதிலும் ஐக்கியமேற்பட வேண்டுமென்பதும் அவர்களின் நோக்கமாகும். அவ்வாண்டில் நிர்வாகப்பொறுப்புள்ள பாராளுமன்ற அரசியல்முறை பேடின், பவேரியா, சாக்ஸனி முதலிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டது. அவுஸ்திரிய சக்கராதிபத்தியத்தை மக்கள் வெறுத்து எல்லாப் பாகங்களிலும் கலகமுண்டாக்க இரண்டாம் பிரான்சிஸ் சக்கரவர்த்தியும், மெற்றனிட்ச் மந்திரியும் நாட்டைவிட்டுவிலக நேரிட்டது. ஆனால் சுவாஸன்பேர்க் என்னும் இராசதந்திரி சேனையின் உதவியைக்கொண்டு கலகத்தை அடக்கி எல்லாப்பாகங்களிலும் சமாதானத்தை

RangaRakes
Tamilnavarasam.com

நிலைநாட்டினான். அதனால் ஏதேச்சாதிகாரம் அவுஸ்திரியாவில் நிலைநாட்டப்பட்டது.

பின்பு ஜேர்மன் நாடுகள் எல்லாவற்றிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட 576 பிரதிநிதிகளைக்கொண்டுள்ள சபையொன்று **பிராங்போட்** என்ற இடத்திற் கூட்டப்பட்டது. ஜேர்மனி முழுவதிலும் ஒரு சமஷ்டி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் அது ஒரு பரம்பரையான சக்கராதிபதியின் கீழிருக்கவேண்டுமென்றும் இரண்டு சபைகளையுடைய பாராளுமன்றமும், நிர்வாகப் பொறுப்புள்ள இன்னவொன்றும் இருக்கவேண்டுமென்று தீர்மானஞ்செய்யப்பட்டது. அதன்பின் பிரஸ்ஸியாவுக்கு அரசனான நாலாம் பிரெடிக் உவில்லியத்துக்கு முடியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டபொழுது, அவன் அவுஸ்திரியாவுக்குரிய பயத்தினிமித்தமும், மரியாதையினிமித்தமும் சனநாயகமுறையில் தனக்குரிய நம்பிக்கைக் குறைவினாலும், அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அதனால் பிராங்போட் சபையின் முயற்சிகள் வீணாய்ப்போயினமையால் மீண்டும் 1815-ல் ஏற்படுத்தப்பட்ட சமஷ்டி அரசாங்கமே ஸ்தாபிக்கப்பட்டது.

ஜேர்மன் தேசிய ஒற்றுமையைப் பூர்த்தி செய்வதற்குத் தலைவனாக இருந்தவன் **பிஸ்மார்க்** என்னும் வீரனாவான். அப்போது பிரஸ்ஸியாவில் முதலாம் உவில்லியமென்ற அரசனும், **மொல்க்** என்ற சேனாதிபதியும், **பிஸ்மார்க்** என்ற முதன்மந்திரியும் திறமைவாய்ந்த தலைவர்களாகக் காணப்பட்டனர். பிஸ்மார்க் 1815-ம் ஆண்டு பொமெரேனியாவிற் பிறந்தான். சர்வகலாசாலையிற் கற்கும்பொழுது தன்னுடைய பாடங்களிலும் பார்க்க வாள் விளையாட்டில் கூடிய சிரத்தை யெடுத்தான். சிறிது காலத்தின்பின் பிரஸ்ஸியாவின் அரசியல் விஷயங்களிற் தலையிட்டான். சுதந்திரத்தை அடிப்படையாகவுள்ள அரசியலில் நம்பிக்கையற்றவனாயும் 1848-ல் ஏற்பட்ட புரட்சிகளுக்கு எதிரான நோக்கமுடையவனாகவுங்காணப்



பட்டான். ஆனால் ஜேர்மனியின் தேசிய ஒற்றுமையின் அவசியத்தை நன்குணர்ந்தான். அவன் எவ்விதமான ஜனநாயக அரசியல் முறையை ஏற்றுக்கொள்ளவும், தனது நாடாகிய பிரஸ்ஸியா ஏனைய ஜேர்மன் நாடுகளைப்போல் கவனிக்கப்படவும் சித்தமுடையவனாயிருக்க விரும்பவில்லை. ஆகையால் ஏதேச்சாதிகாரியாகிய பிரஸ்ஸிய அரசனின்கீழ் ஜேர்மன் நாடுகளை ஐக்கியப்படுத்துவதே அவனுடைய நோக்கமாகும். தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவுஸ்திரியாவுக்கு ஜேர்மன் நாடுகளிலுள்ள செல்வாக்கையழிக்கவேண்டுமென்று அவன் உணர்ந்தான். அந்நோக்கத்தை மேற்கொண்டவனாய் உண்மை, நேர்மை என்பவைகளைக் கைக்கொள்ளாதவனாயும் பேச்சிலும் தீர்மானங்களிலும் நம்பிக்கையில்லாதவனாயும் தன் கடமையைச் செய்யத்தொடங்கினான். அவன் "இரத்தத்தினாலும் இரும்பினாலும்"தான் ஜேர்மனியை ஐக்கியப்படுத்தலாமென்று 1862-ல் பிரஸ்ஸியாவின் பாராளுமன்றத்திற் சொன்னான். சென்ற் **பீற்றேர்ஸ் பேக்கிலும்**, பாரிஸிலும் பிரஸ்ஸிய நாட்டுப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் ஐரோப்பிய இராசதந்திரமுறைகளை பிஸ்மார்க் நன்குணர்ந்திருந்தான்.

தன் அயல்நாடாகிய ருஷியாவோடு நட்புப்பூண்டான். பிரஸ்ஸிய பாராளுமன்றத்திலுள்ள அநேகர் இங்கிலாந்திலுள்ள அரசியலைப் போன்ற ஒன்றை அமைக்கவேண்டுமென்று கருதியபொழுதிலும் அவன் அதற்கு மறுப்புக்காட்டி ஏதேச்சாதிகாரமும் சேனைப்பலமுமே தேவையெனவுணர்ந்தான். பின்பு பாராளுமன்றத்தின் அங்கீகாரமில்லாது வரிகள் அறவிடப் பெருஞ்சேனையைத் திரட்டினான். **வொன் றூன், வொன் மொல்க்** என்ற வீரர்களின் உதவியுடன் பிரஸ்ஸியாவின் சேனையை ஐரோப்பாவிற் திறமைவாய்ந்த சேனையாக்கிவைத்தான். ஜேர்மனியில் அவுஸ்திரியாவின் செல்வாக்கை அறவே யொழிக்கவேண்டுமென உணர்ந்துகொண்டான். இத்தாலியோடு ஒரு உடன்படிக்கை எழுதினதுமல்லாது ருஷியாவையும் நடுநிலைமை நாடாக



RangaRakes Tamilnavarasam.com

விருக்கும்படி செய்தான், மூன்றும் நெப்போலியனுக்கு றைன் நாடுகளை அளிப்பதாகப் பொய்நம்பிக்கையுண்டாக்கி அவ்வரசன் அவுஸ்திரியாவுக்கு உதவிசெய்யா வண்ணம் ஏமாற்றிவைத்திருந்தான்.

ஜேர்மன்சாதியினர் வாழ்ந்த **ஷெல்ஸ்விக் கோல்ஸ்டீன்** என்ற இரு நாடுகளும் டென்மார்க் அரசனால் ஆளப்பட்டுவந்தன. 1863-ல் முடிக்குரிமையுள்ள ஆண்சந்ததியாரில்லாது ஏழாம் பிரடெரிக் மன்னனிறக்க அந்த இரு நாடுகளையும் கைப்பற்றுவதற்கு எண்ணங்கொண்டு பிஸ்மார்க் அவுஸ்திரியாவோடு தற்காலிகமாக நட்புப்பூண்டு டென்மார்க்குக்கெதிரே போருக்குக் கிளம்பினான். இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்ததினால் சீக்கிரத்தில் வெற்றி பெற்றனர். பிராங்போட்டிற் கூடிய பாராளுமன்றம், **ஒக்டஸ்ரின்பேர்க்** என்னும் ஜேர்மன் பிரபுவுக்கே அவ்விருநாடுகளுஞ் சேரவேண்டுமென்று விரும்பினர். பிஸ்மார்க் பிரஸ்ஸியாவுக்கே அவைகள் சேரவேண்டுமெனத் தீர்மானஞ் செய்துகொண்டான். ஆனால் அவுஸ்திரியா ஒக்கஸ்ரின்பேர்க்குக்கே சேரவேண்டுமென விரும்பி ஆதரவளித்தனர். பிரஸ்ஸியாவின் அரசன் சமாதானத்தை விரும்பியபொழுதும் பிஸ்மார்க் போர்செய்யத் தீர்மானித்தான். அவுஸ்திரியாவின் செய்கைக்கு பிரஸ்ஸியா மறுப்புக் காட்டியமையினால் இரு நாடுகளுக்குமிடையில் பகைமையேற்பட்டது. ஜேர்மன் நாடுகளின் சமஷ்டி அரசியலை, அவுஸ்திரியாவை நீக்கிச் சீர்திருத்தி அமைப்பதற்கு, பிரஸ்ஸியா எத்தனஞ் செய்தது. இக்காரணங்களால் இரு நாடுகளுக்குமிடையில் 1866-ல் போர் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளெல்லாம் பிரதானமாகப் பிரான்சுதேசம், நீடித்த போர் நடக்குமென்றும். ஈற்றில் அவுஸ்திரியா வெற்றி பெறுமென்றும் காத்திருந்தது. ஆனால் பிரஸ்ஸியாவுக்குச் சாதகமாய் அநேக காரியங்களிருந்தன. பிஸ்மார்க்குக்கு இத்தாலியின் உதவியிருந்தமையினால், பெரிய அவுஸ்திரியாச் சேனையொன்று அல்ப்ஸ் மலைகளுக்குத் தெற்கே இத்தாலியராற் தடுக்கப்பட்டிருந்தது



**வொன்மொல்க்** ஒரு சிறந்த வீரன். பிரஸ்ஸிய சேனை பாவித்த ஊசித்துவக்கு, அவுஸ்திரிய காலாட்படைகள் பாவித்த துவக்குகளிலும் பார்க்கச் சிறந்தது. வொன் றூன் சேனையை முற்றாகத் திருத்தியமைத்தான். சிறிது காலத்துக்குள் பிரஸ்ஸியாவின் சேனை, அவுஸ்திரியாவின் நாடாகிய பொகீமியாமீது படையெடுத்துச் சென்று சடோவா அல்லது **கோனிக்கிருட்ஸ்** என்ற சண்டையில் அவுஸ்திரியருடைய சேனையைத் தோற்கடித்தது. உடனே பிஸ்மார்க் அவுஸ்திரியாவோடும், சமாதான ஒழுங்கைப் பரபரப்பாகச் செய்துமுடித்தான். அதன்பிரகாரம் அவுஸ்திரியா வெனீசை இத்தாலியருக்குக் கொடுத்ததுமல்லாது ஜேர்மன் நாடுகளின் குடியரசு ஐக்கிய சங்கத்தினின்றும் விலக நேரிட்டது. பின்பு பிரஸ்ஸியாவின் தலைமையின்கீழ் வட ஜேர்மன் நாடுகள் ஒற்றுமைக்குக் கொண்டுவரப்பட்டது.

பிரஸ்ஸியாவின் வெற்றி நெப்போலியனைத் திகிலடையச் செய்தது. இந்தப் போர் தொடங்கிய காலத்தில் பிரஸ்ஸியா அவுஸ்திரியாவாற் தோற்கடிக்கப்படுமென்றும் ஈற்றில் தான் தலையிட்டு வேண்டிய நயத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் நெப்போலியன் காத்திருந்தான். ஐரோப்பாவின் முதன்மைபெற்ற நாடாகிய பிரான்சு தேசத்துக்குப் போட்டியாகப் பிரஸ்ஸியா அதிகாரம் பெற்று வருகிறதென்று நெப்போலியன் பொறாமையுற்றிருந்தான்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட வடஜேர்மன் சமஷ்டி அரசாங்கத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுள்ள சமஷ்டி அரசியல் மன்றமொன்று இருந்தது. நிர்வாகப் பொறுப்பும் சட்டங்களை உண்டாக்கும் அதிகாரமும் அச்சபைக்கே உரியதாயிற்று. **றீட்ஸ்ராக்** என்னும் பாராளுமன்றமும் அதற்கு அடுத்தபடியாக அதிகாரத்தைப் பெற்றிருந்தது. அதிலுள்ள பிரதிநிதிகள் பொதுமக்களாற் தெரியப்பட்டவர்களாவார்கள். பண விஷயங்களும் சமஷ்டி அரசியல் மன்றத்தால்

RangaRakes Tamilnavarasam.com

ஆக்கப்பட்ட சட்டங்களை அங்கீகரிக்கவோ அல்லது விலக்கிவிடவோ அதற்கு அதிகாரமுண்டு. ஆனால் மந்திரிமார்களின் செய்கைகளைக் கண்டிக்கும் அதிகாரத்தை அப்பாராளுமன்றம் பெறவில்லை. நிர்வாகப்பொறுப்பு மந்திரிமார்களிலே விடப்பட்டிருந்தது. முதன் மந்திரியே மந்திரிகளுக்குத் தலைமைதாங்கினார். இங்கிலாந்திலுள்ள பிரதம மந்திரியிலும் பார்க்கக் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்தான். மந்திரிமார்களுடைய செய்கைக்கு அவனே பொறுப்பாயிருந்தான். பிஸ்மார்க்கே முதன் மந்திரியாகவிருந்தான். கடந்த யுத்தமும் அதிற் பெற்ற விசேஷ வெற்றியும் அவனை ஒருபெரும் தலைவனாக்கியது. இவ் யுத்தம் அவுஸ்திரியாவை ஹங்கேரியோடு சிநேகமுறையில் நடந்துகொள்ளத் தூண்டியது. ஹங்கேரி வேறான பாராளுமன்றமொன்றைப் பெற்று அரசாங்கத்தை நடத்த ஆரம்பித்தது. ஆனால் அவுஸ்திரியாவின் அரசனையே தன்னாட்டு அரசனாகவும் ஏற்றுக்கொண்டது.

பிரான்சு தேசத்தில் ஏற்பட்ட முன்னேற்றங் காரணமாக மூன்றாம் நெப்போலியனுடைய செல்வாக்கு அந்நாட்டிலதிகரித்தது. கைத்தொழில் வர்த்தகத் துறைகளில் பிரான்சு முன்னேற்றமடைந்தது. பாரிஸ் நகரம் ஐரோப்பிய நாகரிகத்துக்கு முதன்மைபெற்ற நகரமாக விளங்கியது. நெப்போலியன் கத்தோலிக்க தேவாலயத்தினதும், வர்த்தக வகுப்பினரதும் ஆதரவைப் பெற்றான். நெப்போலியன் ஏதேச்சாதிகாரியாக ஆண்டபொழுதிலும் பெரும்பான்மையோர் அவனை மதித்து வந்தனர். பாராளுமன்றத்தின் அங்கத்தவர்கள் மக்களாற் தெரிவு செய்யப்பட்டவராயினும் அவர்களுக்கிருந்த அதிகாரம் மிகக்குறைவு. மேற்சபை சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட 150 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் அவனுடைய விருப்பத்திற்கிணங்க நடந்துகொண்டனர். கீழ்ச்சபையின் செய்கைமுறைகளைக் கண்டிப்பதும் மேற்பார்வையிடுவதும் இச்சபையின் முக்கிய கடமையாகும். மந்திரிமார்களைக்



கொண்டுள்ள அரசசபையே நிர்வாகப் பொறுப்பைப் பெற்றது. ஆனால் நெப்போலியனின் அதிகாரமே எல்லாவற்றிலும் மேலாகக் கவனிக்கப்பட்டது.

போர் நடத்துவதில் விருப்பங்கொண்ட மக்களுக்குத் திருப்தியளிக்கவேண்டுமென நெப்போலியன் உணர்ந்தான். அதனால் கிறிமியன் யுத்தத்திலும், இத்தாலியில் நடைபெற்ற போர்களிலும் அவர்களைப் பங்குபெறச் செய்து வெற்றியடையச் செய்தான். சவோய், நைஸ் என்னும் மாகாணங்களை அவன் தன் வசப்படுத்தியதனால், ஐரோப்பிய நாடுகள், இவனும் பெரிய நெப்போலியனைப்போல் பலாத்காரமான சண்டைகள் செய்வதில் விருப்பமுடையவனென விளங்கிக் கொண்டனர். 1860-ல் பிரான்சிய வர்த்தக வகுப்பினரின் விருப்பத்திற்குமாறாக இங்கிலாந்தோடு வர்த்தக உடன்படிக்கையொன்றை எழுதினான். மூன்று ஆண்டுகளின் பின்பு மெக்சிக்கோவைக் கைப்பற்றும் நோக்கத்தோடு அங்கு சென்றான். அதைக் கைப்பற்றி அவுஸ்திரியாவின் சக்கரவர்த்தியாகிய **மக்ஸ்மிலியனை** அரசனாக்கினான். அக்காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட புரட்சி முடிவடைந்ததும் அவ்வரசாங்கம் நெப்போலியனுடைய சூழ்ச்சியைத் தடுப்பதற்காக தனது முழுப்பலத்தையும் உபயோகிக்க ஆரம்பித்தது. ஆகையால் பிரான்சியப் போர்வீரர்கள் வெளியேறினர். இதனால் பிரான்சு நட்டமுமடைந்து அவமானமுமுற்றது. அந்நிலையில் நெப்போலியனுடைய செல்வாக்கு குன்றக்கூடிய அறிகுறிகள் தோன்றின. கத்தோலிக்க குருமாரும், வர்த்தக வகுப்பினரும் நெப்போலியனுக்கு மாறாகப் பகைமை காட்டினர். ஆகையால் நெப்போலியன் தனக்கு ஆதரவை இன்னொரு வழியிற் தேடினான். ஒரு புது அரசியற் திட்டமொன்றை வகுத்து மக்களாற் தெரிவுசெய்யப்பட்ட சபைக்கு சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை ஈந்ததோடு மந்திரிமார்களுக்கே அப்பொறுப்பையுங் கொடுத்தான். மேற்சபையின் கூட்டங்களும் பகிரங்கமாக நடைபெற்றன.

RangaRakes Tamilnavarasam.com

இப்புதிய திட்டம் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப்பெற்றது.

ஆனாற் சிறிது நாட்களுள் பிரஸ்ஸியாவோடு யுத்தம் ஆரம்பித்தது. பிரான்சுதேசமோ, பிரஸ்ஸியாவோ போரை விரும்பினவல்ல. நெப்போலியன் இழந்த செல்வாக்கை நிலைநாட்டுவதற்குசித்திகரமான யுத்தம் நல்லதென வுணர்ந்தான். அசௌக்கிய காரணமாக அவனது மனத்திடமும், விவேகமும் பழைய தைரியத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் மற்றப்பக்கத்தில் பிஸ்மார்க் மொல்க், ரூன் என்பவர்கள் போரை விரும்பி நின்றனர். தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு அந்த யுத்தம் முடிவான சித்தி அளிக்குமெனக் கருதலாயினர். அவுஸ்திரியா தோல்வியடைந்ததினால் ஜெர்மனியில் பிரஸ்ஸியா முதன்மைபெற்ற நாடாக விளங்கியது. பிரான்சும் தோல்வியடையுமெனில் பிரஸ்ஸியாவின் தலைமையில் ஜெர்மன் சக்ராதிபத்தியம் ஸ்தாபிக்கப்படுமென வுணர்ந்தனர். பிரான்சு தேசமோ, ஜெர்மனியோ கூடிய பலத்தையுடையதென்பதை விளக்கிக்காட்ட ஒரு யுத்தம் தேவையெனத் தென்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையே தொடங்கிய யுத்தத்தின் காரணம் முக்கியமானதொன்றல்ல. ஸ்பானியாவில் ஓர் புரட்சி ஏற்பட்டவுடன் அந்நாட்டுக்கு அரசியாகிய **இஸபெலா** பிரான்சு தேசத்துக்கு ஓடினாள். முடிக்குரிமை யாருக்குடையது என்பதைப்பற்றித் தீர்மானஞ் செய்ய வேண்டியிருந்தது. கத்தோலிக்க சமயத்தவனும், பிரஸ்ஸியாவின் அரசனின் உரித்தாளனுமாகிய லியப் **போல்ட்** என்பவனும் ஸ்பானிய முடிக்கு உரிமையுடையவனென முன்வந்தான். அவனுக்கு உரிய உரிமையை நெப்போலியன் ஆட்சேபித்தான். பிரஸ்ஸிய அரசனாகிய உவில்லியமும் நெப்போலியனின் எதிர்ப்பை ஏற்றுக்கொண்டு லியப்போல்ட் விலகிக்கொள்வானென அறிவித்தான், ஆனால் லியப்போல்ட் தனது உரிமையை



எப்போதாகிலும் நிலைநாட்ட முன்வந்தால் உவில்லியம் அதை எதிர்ப்பதாக வாக்களிக்கவேண்டுமென நெப்போலியன் கேட்டான். அவ்விதமாக வாக்களிக்க முடியாதென்று கூறி, பிஸ்மார்க்குக்கு அதைப்பற்றிச் செய்தி அனுப்பினான். யுத்தம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பம் நீங்கியதென பிஸ்மார்க் துக்கப்பட்டு பின்பு தனக்குக் கிடைத்த செய்தியை பிரஸ்ஸிய அரசனுக்கு அவமானமேற்பட்டதென்பதாக கருத்தை மாற்றி நாட்டில் எல்லோருமறியத்தக்கதாக பிரஸ்தாபப்படுத்தினான். ஜெர்மனி முழுவதிலும் யுத்தம் தொடங்கவேண்டுமெனக் கூச்சலிடப்பட்டது.

உடனே பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையிற் போர் தொடங்கியது. (1870) பிரான்சு வெற்றியை எதிர்பார்த்தது. ஆனால் பிரான்சியச் சேனை ஒரு சண்டையிலாகுதல் வெற்றியைப் பெறவில்லை. ஜெர்மனி யுத்தஞ் செய்வதற்கு பூரண ஆயத்தத்தோடு இருந்தது ஆனால் பிரான்சில் ஒழுங்கீனங் காணப்பட்டது. ஜெர்மன் படை எதிரியின் படையினும் பார்க்க கூடிய போர்வீரர்களைக் கொண்டுள்ளது. ஜெர்மன் படைகளுடன் **மொல்க்** என்னும் சேனைத்தலைவன் திறமையுடன் சண்டை செய்தான். பிரான்சில் அவ்விதமான சிறந்த தலைவனொருவன் கொண்டு நடத்தவில்லை. அரை இலட்சம் ஜெர்மன் போர்வீரர்கள் பிரான்சின் எல்லைப்புறத்தில் திரளாகப்போய்ச் சேர்ந்தனர். **மெற்ஸ், சீடான்** என்ற சண்டைகளில் பிரான்சியப்படை தோற்கடிக்கப்பட்டமையால் நெப்போலியன் 17000 போர்வீரர்களையிழந்து பின் 85000 போர்வீரர்களோடு சரணாகதியடைந்தான்.

இந்தச் செய்தி கிடைத்தவுடன் பாரிஸில் குடியரசு ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்பட்டது. பிரான்சிய நாட்டின் ஒரு அங்குல நிலமாகுதல் பறிகொடுக்க முடியாதென்று அவ்வரசாங்கம் கூறித் தொடர்ந்து போரை நடத்தியது, ஜெர்மனியருடைய சேனை பாரிஸ் நகரைச் சூழ்ந்து கொண்டதினால் அந்நகர மக்கள் அதிக அல்லற்பட்

RangaRakes Tamilnavarasam.com

டனர். ஐரோப்பிய நாடுகளொன்றேனும் உதவியளிக்க முன்வராமையால் பாரிஸ் சரணாகதியடைய நேர்ந்தது. பின் பிராங்போர்ட் உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ராஸ்பேர்க்கும், மெற்சும், அல்ஸேசும், லோரேயினும் ஜெர்மனியருக்கு கொடுபட்டது. அதுவுமல்லாமல் பெருந் தொகையான பணமும் நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டது. பின்பு வேர்சேயில்ஸிலுள்ள பெரிய மண்டபத்தில் பிரான்ஸிய அரசன் ஜெர்மன் சக்கரவர்த்தியாக பிரஸ்தாபப்படுத்தப்பட்டான். பிரான்சியப் பிரஸ்ஸிய யுத்தத்தின்பின் முழு ஜெர்மன் நாடுகளும் ஐக்கியப்பட்டு ஜெர்மன் நாடாக விளங்கியது.

இவ்வாறு ஐக்கியம்பூண்ட ஜெர்மன்நாடு ஒருவகையான யுத்தத்திலும் ஈடுபடாவண்ணம் பிஸ்மார்க் விஷயங்களை நடத்த ஆரம்பித்தான். படிப்படியாக ஜெர்மனியருடைய ஐக்கியம் பலமுற்று ஐரோப்பாவில் ஒரு பெரிய வல்லரசாக விளங்கியது. கைத்தொழில், வர்த்தகம் என்னும் துறைகளில் அந்நாடு முன்னேற்றமடைந்தது. மக்களிடையே தேசாபிமான உணர்ச்சி செறிந்து அவர்கள் தங்களுடைய நாட்டைப்பற்றிப் பெருமையுற்றிருந்தனர். இவ்வகையாக முன்னேற்றமடைந்த நாடு முதலாம் உலகயுத்தத்திலீடுபட்டு ஆரம்பத்தில் பெற்ற வெற்றிகள் மெச்சத்தக்கனவாம்.

### வினாக்கள்

1. நெப்போலியன் ஜெர்மனிக்குப் படையெடுத்துச் செல்வதற்கு முன்னிருந்த ஜெர்மனியைப்பற்றி விபரித்து எழுதுக.
2. வீயன்னா மகாநாட்டில் ஜெர்மனியைப்பற்றி என்ன ஒழுங்குகள் செய்யப்பட்டன?
3. ஜெர்மன் நாடுகள் ஒற்றுமைப்படாமலிருந்ததற்குக் காரணமென்ன?
4. ஜெர்மன் நாடுகளை ஒற்றுமைப்படுத்துவதற்கு பிஸ்மார்க் செய்த சேவைகள் யாவை?
5. பிஸ்மார்க் ஒரு பெரிய இராசதந்திரி என்று எண்ணப்படுவதற்குரிய காரணங்கள் யாவை?
6. ஜெர்மனி ஐக்கியம்பூண்ட வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.

# பதினேழாம் அத்தியாயம்

## இந்தியா

இந்தியா, ஐரோப்பாவிலுள்ள பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளைப்போன்ற ஒரு சிறு நாடல்ல. அது ஒரு உபகண்டமாகும். அது ஐரோப்பாவில் ருஷியாவைத் தவிர்ந்த ஏனையநாடுகளின் விஸ்தீரணமளவு கொண்டதும், சனத்தொகையிற் கூடியதுமான நாடாகும். அந்நாட்டில் 50 பாஷைகள் வரையில் வழங்கிவருவதுமல்லாது மக்களுடைய பழக்கவழக்கங்களும் வித்தியாசமானவையாகக் காணப்படுகின்றன. பல்வகைப்பட்ட சாதியினர் அங்கு காணப்பட்டாராயினும் இந்துசமயம் ஒற்றுமைக்குக் காரணமாயிருந்தது. ஆனால் சிறுபான்மையினராயினும் முகமதிய சமயத்தவர்களும் அதிக செல்வாக்குடையவர்கள். இந்துக்களிடையே 3000 சாதியினர் வரையிலுண்டு. அந்நாட்டில் வசிக்கின்ற இந்து சமயத்தவர்களின் தொகை பிரித்தானிய சாம்ராச்சியத்தின் சனத்தொகையின் அரைப்பங்களவும் உலகத்திலுள்ள சனத்தொகையின் எட்டிலொருபங்களவுமாகும்.

மொகலாயருடைய ஆளுகை நடந்தபொழுது பிரதானமாக அக்பர், அவுராங்கிசீப் முதலிய சக்கரவர்த்திகளின் காலத்தில் முழு இந்தியாவும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1707ல் அவுராங்கிசீப் இறக்க சக்கராதிபத்தியம் சீர்குலையத் தொடங்க ஆரம்பித்தது.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பகாலந்தொட்டு ஐரோப்பியர் பிரதானமாக பிரித்தானியரும் பிரான்சியரும் இந்தியாவில் வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன் வந்தபொழுது முஸ்லீங்களுடைய மொகலாய சக்கராதிபத்தியம் உன்னதநிலையையடைந்திருந்தது. கரையோரப் பகுதிகளில் வியாபாரத் தலங்களை ஸ்தாபித்த ஐரோப்பியரைப்பற்றி மொகலாயர் அதிகம் கவனமெடுக்கவில்லை. பிரித்தானியர் கல்கத்தா, சென்னை, பம்பாய்



RangaRakes Tamilnavarasam.com

ஆகிய மூன்று இடங்களிலும், பிரான்சியர், புதுச்சேரி, சந்திரநாகூர், மாகி என்ற இடங்களிலும் வியாபாரத்தலங்களை ஸ்தாபித்தனர். மொகலாய சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் குன்றுங்காலத்தில் அவர்களுடைய மேல் உத்தியோகத்தர்களான நவாப்புகளும், இந்து இராசாக்களும் சுயாதீனமான தேசாதிபதிகளாயினர். இவர்களிடையே ஒற்றுமையின்மை காரணமாகச் சச்சரவுகள் உண்டானமையினால் அந்நிய நாட்டவர்கள் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டக் கூடிய நிலைபரம் ஏற்பட்டது. பார்சியாவின் அரசன் மொகலாயருடைய தலைநகரமாகிய டில்லியை 1739-ல் கைப்பற்றினான். ஆப்கானிஸ்தர் படையெடுத்துச் சென்று பாஞ்சாலத்தைத் தம்வசப்படுத்தினர். இந்தியாவின் வடகிழக்குப் பாகத்தில் வங்காளநாடு சுதந்திரமான முறையில் ஆட்சிபுரியத் தொடங்கியது. மத்திய இந்தியாவில் மராட்டியர், வடக்கேயும் கிழக்கேயும் படையெடுத்துச் சென்றனர். தெற்கே ஹைதராபாத்தை ஆட்சிபுரிந்த நிசாம் ஒரு பெரிய அதிகாரத்தைச் செலுத்தினான். தென்மேற்கில் மைசூர் அரசன் செல்வாக்குடையவனாகக் காணப்பட்டான். இவ்வகையான போட்டிக்கிடையில் ஐரோப்பியர் இந்தியாவுக்குட் புகுந்து கொள்ள வசதியாகவிருந்தது. 1741-ல் பிரான்சியர் வசமிருந்த புதுச்சேரிக்குத் தேசாதிபதியாக டுப்பிளேக்ஸ் என்பவன் நியமிக்கப்பட்டான். அவன் மிகத் திறமை வாய்ந்தவனும், அளவுகடந்த ஆசையுமுடையவனுவான். அவனுடைய மனத்திலே இந்தியாவைக் கைப்பற்றலாமென்ற வெண்ணம் உதயமானது. அவன் ஆங்கிலேயரைத் துரத்திவிட்டு, நாட்டு அரசர்களை வென்று இந்தியாவைப் பிரான்சியரின் ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென அவாவுற்றான். ஹைதராபாத்தின் அரசுரிமையைப்பற்றி விவாதமேற்பட டுப்பிளேக்ஸும் ஆங்கிலேயரும் தங்களுக்கிசைந்த ஒவ்வொரு அபேட்சகருக்கு ஆதரவளித்தனர். பிரான்சியர் துணைபுரிந்த அபேட்சகனே வெற்றிபெற்றான்.



இவ்விதமான கஷ்டநேரத்தில் றொபேட் கிளைவ் இந்தியாவுக்கு வந்து (1751) ஆங்கிலேயரின் நிலையைப் பாதுகாத்தான். றொபேட்கிளைவ் மாணாக்கனாயிருக்குங்காலத்தில் பிடிவாதக் குணமும் அஞ்சாமையும் உள்ளவனாயுமிருந்தான். ஒருமுறை தேவாலயச் சிகரத்தின் நுனியிலிருந்து அந்நகரத்திலுள்ள மக்களைப் பயப்படச் செய்தான். அவனை என்ன செய்வதென்று தெரியாது அவனுடைய பெற்றோர் கிழக்கிந்தியசங்கத்துக்கு ஒரு எழுத்தாளனாக அனுப்பினர். அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குக் கடல்மார்க்கமாகச் செல்வதற்கு ஒருவருடகாலம் செலவழிந்தது. இந்தியாவிலுள்ள தாங்கொணா உஷ்ணத்தினால் அவனுடைய சுகம் பாதிக்கப்பட்டமையினாலும் ஒரு இடத்திலிருந்து இருந்து வேலை செய்வதற்குப் பொறுமையில்லாமையினாலும் தனது சொந்தநாட்டை நினைத்துக் கவலைப்பட்டு இருமுறை தற்கொலைபுரியவும் எத்தனித்தான். அவனது உயிருக்கு இடையூறு நிகழாமையால் தான் பெருங்காரியத்தைச் செய்துமுடிப்பதற்கு நியமனமிருக்கவேண்டுமென எண்ணினான். பின்பு டுப்பிளேக்ஸ் மதராசைக் கைப்பற்றிய பொழுது கிளைவ் தானாகப் போரில் சேவை செய்வதாக முன்வந்து ஆர்க்காட்டை முற்றுக்கையிட்டான். 500 போர்வீரர்களைக் கொண்டுள்ள சேனையுடன் ஆர்க்காட்டைக் கைப்பற்றினான். 10000 வீரர்களைக் கொண்ட சேனையோடு பிரான்சியர் அதைக் கைப்பற்ற எத்தனஞ் செய்தபொழுது 230 வீரர்களோடு கிளைவ் அவர்களுடைய சேனையைப் பின்வாங்கச் செய்தான். ஆர்க்காட்டைப் பாதுகாத்த நாளே கீழ்த்திசையில் பிரித்தானியருடைய படைத்திறன் பெருமையுறுவதற்கு ஆரம்பமானதென்று மக்காலே என்னும் சரித்திர நிபுணன் கூறினான்.

இந்த வெற்றியும் இன்னும் வேறு வீரச்செயல்களும் அவனுக்குக் கீர்த்தியைக் கொடுத்தன. வங்காளத்தை அரசாண்ட சுராஜ்டவுலா என்னும் நவாப்பு, ஆங்கிலேயர் வசமிருந்த கல்கத்தாவைக் கைப்பற்றி 146 ஆங்கிலேயப்


RangaRakes Tamilnavarasam.com

போர்வீரர்களையும் கைதுசெய்தான். பின்பு அவர்களைச் சிறிய இருட்டறை ஒன்றிலடைத்துவிட்டான். ஒரு இரவு சென்றதின்பின் 23 பேரைத்தவிர ஏனையோர் காற்றின்மையாலும் வெப்பத்தினாலும் இறந்துகிடந்தனர். சென்னையிலிருந்து 3000 போர்வீரர்களோடு கிளைவ் புறப்பட்டுச் சென்று 60000 வீரர்களைக் கொண்டுள்ள சேனையோடு எதிர்த்துச் சண்டைசெய்ய நேரிட்டது. சிறிது நேரம் யோசனைசெய்து பின்பு மனத்தைரியத்தோடு ஏற்ற தருணம்பார்த்துச் சண்டைசெய்யத்தொடங்கினான் பகைவர்கள் ஓடநேரிட்டது. ஈற்றில் அவன் பெற்ற வெற்றியின் பயனாக வங்காளம் கைப்பற்றப்பட்டது.(1757) 1760-ல் கிளைவ் இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்குச் செல்லும்பொழுது வங்காளநாட்டின் ஆட்சி பிரித்தானிய கிழக்கிந்திய சங்கத்திலேயே விடப்பட்டிருந்தது. ஆனால் அச்சங்கம் அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை நவாப்புக்கே கொடுத்தது. பழைய ஆட்சிமுறையே நடைபெற்றுவந்தது. நாட்டிலிருந்து அறவிடக்கூடிய பணத்தை அறவிடுவதே நவாப்பின் நோக்கமாயிருந்தது. கிழக்கிந்திய சங்கத்தின் உத்தியோகத்தர் சங்கத்துக்கும் தங்களுக்கும் வேண்டிய வருமானத்தை நவாப்பிடமிருந்து பெற்றனர். இவ்வகையான குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு இங்கிலாந்தில் அந்நேரத்திலிருந்த அரசியல் நிலை தடையாயிருந்தது.

பின்பு கிளைவ் பிரபு வங்காளத்துக்குத் தேசாதிபதியாக அனுப்பப்பட்டான். அவன் அங்கே காணப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு பல மாற்றங்களை உண்டாக்கினான். மொகலாய சர்க்கரவர்த்தியிடமிருந்து வங்காளம், பீகாரின் பண நிர்வாகத்தைப் பெற்றான். அதன் பின் நவாப்போடு சினேகம்பூண்டு மராட்டியரோ அல்லது ஆப்கானிஸ்தானிலுள்ளவர்களோ வலோற்காரமான சண்டை செய்யாது தடுத்தான். கிழக்கிந்திய சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்குக் கூடிய சம்பளத்தைக் கொடுத்து அவர்கள் சொந்தமானமுறையில் வர்த்தகம்



நடத்தாது திருப்தியடையும்படி செய்தான். இவ்வண்ணமாக இந்தியாவிற் பிரித்தானியருடைய ஆளுகையைச் சிறந்ததாகத் திருத்திவைத்தான். சிறந்தமுறையில் நிர்வாகம் நடத்துவதற்கு முயற்சிகள் செய்தபொழுதிலும் கிளைவ் தன்னாட்டிற்குத் திரும்பிச் சென்றபொழுது அவன்மேற் பல குற்றங்கள் கொண்டுவரப்பட்டன.




1770-ல் கிழக்கிந்திய சங்கத்தின் ஆட்சிக்குப் பங்கமுறக்கூடிய நிலையேற்பட்டது. ஒரு பயங்கரமான பஞ்சமொன்று நாட்டைத் தாக்கியதினால் மூன்றிலொருபங்கு மக்கள் பட்டினியால் இறந்தனர். இந்தக் கஷ்டமான நிலைபரத்திலும் பட்டினியால் வருந்திய விவசாயிகளிடம் வருமானம் அறவிடப்பட்டது. அதுவுமல்லாமல் அதிக லாபம் பெறும் நோக்கத்துடன் ஆங்கிலேயர் உணவுப் பொருட்களைச் சேகரித்து வைத்தனரென்ற வதந்தியும்

RangaRakes Tamilnavarasam.com

பரவியது. அதனால் ஆங்கிலேய அரசாங்கம் கோபங்கொண்டு உடனடியாக இந்தியாவின் நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்யவேண்டுமென எண்ணினர். இதற்கிடையில் தென்னிந்தியாவில் சில சம்பவங்கள் நடைபெற்றன. சென்னையிலுள்ள தேசாதிபதி, மைசூர் அரசனான ஹைடர் அலியோடு சண்டைசெய்ய நேரிட்டது. அவ்வரசன் அநேகரை வாளுக்கிரையாக்கி அதிக அழிவையுண்டாக்கினான். சண்டையை நடத்துவதற்கு அநேக போர்வீரர்களும் பெருந்தொகையான பணமும் தேவைப்பட்டமையால் கிழக்கிந்திய சங்கத்தின் பணநிலை பாதிக்கப்பட்டது. அதேநேரத்தில் மருட்டியரும் போருக்கெழுந்தனர். இவைகளைவிட வங்காளத்தின் நிர்வாகத்திற் காணப்பட்ட பல குறைபாடுகளும் கிழக்கிந்திய சங்கத்துக்கு பெரும் இழுக்கை உண்டாக்கியது. கிழக்கிந்திய சங்கம் வீழ்ச்சியுறும் நிலையிலிருந்தது. அந்த வேளையில் வங்காளத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வருமானத்தை அறவிடும் கடமையையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென சங்கம் தீர்மானித்தது. இவ்வாறு அரசியல் விஷயங்களிலும் சங்கம் ஈடுபடவேண்டியதாயிற்று.

பிரித்தானிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்தின் (1773) பிரகாரம் ஒரு மகாதேசாதிபதியும் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டுள்ள சபையொன்றும் நியமிக்கப்பட்டு சங்கத்தின் ஆட்சியிலமர்ந்த பகுதிகள் மகாதேசாதிபதியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. உவாரன் கேஸ்டிங்ஸ் முதற் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவருடைய வருகையினால் பிரித்தானியருடைய ஆளுகையில் புதியவொரு காலம் ஆரம்பமானதெனலாம்.

நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் கடமை நவாப்புக்கும் வருமானத்தை அறவிடும் கடமை சங்கத்துக்கும் கிளைவ் கொடுத்திருந்தார். இவ்வகையான இருபகுதியினரின் ஆட்சிமுறையை கேஸ்டிங்ஸ் ஒழித்துவிட்டார்.



எல்லாவிஷயங்களுக்கும் தனது மேற்பார்வையிலிருக்கக்கூடியதாக கல்கத்தாவை நிர்வாக மத்திய ஸ்தானமாக ஆக்கிவைத்தார். வங்காளத்தில் நீதிஸ்தலங்களை ஸ்தாபித்து நீதிவழங்கக்கூடிய முறையைக் கொண்டுவந்தார். பிரித்தானிய நீதிவதிகளுக்கு உதவியாக இந்துக்கள் முகமதியரின் சட்டங்களைத் திரட்டி தன்சொந்தச் செலவில் வெளியிட்டார். இந்தியரின் வழக்கங்களின்படியே வங்காளம் ஆளப்படவேண்டுமென்பதே அவரின் நோக்கமாகும். சங்கத்தின் உத்தியோகத்தர் சொந்த ஆதாயத்துக்காக நடத்திய வர்த்தகத்தை நடத்தாவண்ணம் சம்பளத்தைக் கூட்டிக்கொடுத்து அதைத் தடுத்துவைத்தார். வங்காளத்தில் நிலவருமானம் அறவிடும் முறையைத் திருத்தியமைத்தார். பண்டைக்காலந் தொட்டு நிலத்தின் வருமானத்திலொருபகுதி அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டுவந்தது. கிளைவ் காலத்திலுள்ள இருபகுதியினரின் ஆட்சிமுறைப்படி விவசாயியும் அரசாங்கமும் ஒருங்கே கஷ்டமடைந்தனர். ஆகையால் வருமானத்தை அறவிடும்முறை திருத்தியமைக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்துக்கு வரவேண்டிய வருமானத்தை அறவிடும்போது விவசாயியும் கஷ்டப்படக்கூடாதென்பதே அவருடை கொள்கையாகும்,

கேஸ்டிங்ஸ் தனது யுக்தியினாலும் தைரியத்தினாலும் ஆபத்தான நிலைபரத்தில் இந்தியாவில் ஆங்கிலேயருக்குள்ள ஆதிக்கத்தைப் பாதுகாத்து வைத்தார். அமெரிக்க சுதந்திரப்போர் நடக்கும்பொழுது பிரெஞ்சுக்காரர் இந்தியாவிலுள்ள மருட்டியருக்கு உதவியளித்து போருக்கிழுத்தனர். தென்னிந்தியாவிலும் மைசூர் அரசனாகிய ஹைடர் அலிக்கு அவர்கள் உதவிசெய்தமையால் கேஸ்டிங்ஸ் சண்டை செய்யவேண்டியிருந்தது. கேஸ்டிங்ஸ் மருட்டியரையும், மைசூர் அரசனையும் தோற்கடித்து ஈற்றில் சமாதான உடன்படிக்கை எழுதிக்கொண்டார்.

கேஸ்டிங்ஸ் இந்தியாவுக்கு வந்து இரு வருடங்களுக்குள் வங்காளத்தில் சிறந்த திருத்தங்களைச்செய்து செழிப்

RangaRakes
Tamilnavarasam.com

பான நடாகவும் ஆக்கிவைத்தார். இந்தியாவில் பிரித்தானிய சாம்ராச்சியத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்தது கிளைவ் என்றாலும் கேஸ்டிங்கே அதைப் பலப்படுத்தி வைத்தார். கேஸ்டிங்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றபொழுது அவருடைய நிர்வாகத்திற் காணப்பட்ட குறைகள் சிலவற்றின் நிமித்தம் குற்றஞ்சாட்டப்பட்டு ஏழுவருடகாலத்துக்கு நீடித்த விளக்கம் நடைபெற்றது. ஈற்றில் விடுதலையாக்கப்பட்டார்.

நோத் பிரபு 1773ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டம் இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டுவந்த அளவில் அனுகூலமாகக் காணப்படவில்லை. ஆகையால் இளைய பிற் இந்தியாவில் ஆங்கிலேயருக்குள்ள பகுதிகளின் அரசாங்கத்தைத் திருத்தியமைக்கும் பொருட்டு ஒரு திட்டத்தை (1784) கொண்டுவந்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றார். அதன்பிரகாரம் மகாதேசாதிபதியின் அதிகாரம் கூட்டப்பட்டு, லண்டனிலிருக்கும் ஒரு அதிகாரசபை இந்தியாவின் அரசியல் விஷயங்களை நடத்தியது. மகாதேசாதிபதியும் அச்சபையும் அரசனால் நியமிக்கப்பட்டமையால் இந்திய அரசாங்கத்தை நடத்துவதற்கு பிரித்தானிய அரசாங்கமே பொறுப்பாகவிருந்தது. வர்த்தகவிஷயங்களும் அரசாங்க ஏனைய உத்தியோகத்தர்களை நியமிக்கும் பொறுப்பும் கிழக்கிந்திய சங்கத்துக்குக் கொடுபட்டது.

அந்தப் புதிய ஒழுங்கின்படி நியமிக்கப்பட்ட மகாதேசாதிபதி கோர்ன்வாலிஸ் பிரபுவாகும் (1786-93), அவர் இந்தியாவிற் காணப்பட்ட நீதிவழங்கும் முறையைத் திருத்தியமைத்தார். நீதிவளங்கும் கடமைகள் நிர்வாக வேலையிலிருந்து விலக்கப்பட்டன. கிழக்கிந்திய சங்கத்



தின் சேவையும் திருப்திகரமான முறையிற் திருத்தியமைக்கப்பட்டது. இந்திய நாடுகளின் சொந்த அரசர்களின் ஆளுகையிலும்பார்க்க பிரித்தானியரின் அரசாங்கம் சிறந்ததாகவும் பலமுடையதாகவுமிருந்தது. வங்காளத்தின் நிலவருமானத்தைப்பற்றி பிரச்சினை தீர்க்கப்பட்டது. மைசூர் அரசனாகிய திப்புசாகிப்போடு நடத்திய சண்டையும் அவருடைய காலத்தில் நடந்த இருபெரும் சம்பவங்களாகும்.

வங்காளத்தில் நிலவருமானத்தைப்பற்றி ஒரு நிரந்தரமான ஒழுங்கை ஏற்படுத்தி வரியறவிடுவோராகிய ஜெமிந்தார்களை நில அதிகாரிகளாக்கி அவர்கள் அரசாங்கத்துக்கு ஒரு குறித்த பணத்தை கொடுக்கத்தக்க தானமுறையை ஸ்தாபித்தார். மைசூருக்கு அரசனான திப்புசாகிப் பிரான்சோடும், துருக்கிக்கு அரசனான சுளுத்தானோடும் நட்புக்கொண்டு பிரித்தானியருடைய ஆதிக்கத்தையும் மற்றும் அயலிலுள்ள சுதேசநாடுகளையும் பயமுறுத்தியமையால் மகாதேசாதிபதி மராட்டியர், ஹைத்திரபாத்து அரசன் ஆகியவர்களின் உதவியுடன் திப்புவைத் தோற்கடித்து அவனுடைய தலைநகரத்தையும் கைப்பற்றினர். திப்பு அரசாண்டபகுதியில் அரைவாசியை மூன்றுபகுதியினரும் பிரித்தெடுத்துக்கொண்டனர். கோர்ன்வாலிஸ் தேசாதிபதி இங்கிலாந்துக்குச் சென்ற சிறிதுகாலத்துக்குப்பின் உவெலிங்டனின் மூத்த சகோதரனான உவெலெஸ்லி என்பவன் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். 35 வயதுள்ள அவன் 1798-ல் இந்தியாவுக்கு வந்தபொழுது அங்கிருந்த நிலைமையைத் திருத்துவதற்கு தனது ஆற்றல் முழுதும் தேவையெனவுணர்ந்தான். பிரெஞ்சுக்காரர் திப்புசாகிப்போடும், ஹைத்திரபாத்து அரசனோடும் சிநேகம்பூண்டு அதிக செல்வாக்கைப் பெற்றனர். ஆரம்பத்தில் ஹைத்திரபாத்தை ஆண்ட நிஜாமை அவனது சேவையிலிருந்த பிரெஞ்சுப் போர்வீரரை விலக்கும்படி உவெலெஸ்லி தூண்டினான். பின்பு மராட்டியரின் தலைவனின் ஐக்கி



RangaRakes
Tamilnavarasam.com

யத்தையும் பெற்றதினால் திப்புசாகிப் உதவியற்றுத் தனித்துக்கொண்டான். அங்கிலேயில் திப்புசாகிப்புக் கெதிரே போருக்கெழுந்து அவனது தலைநகராகிய செரிங்கப்பட்டத்தையுங் கைப்பற்றினான். அச்சண்டையின் மத்தியில் திப்புவும் உயிர்துறந்தான். பின்னர் மைசூரின் பெரும்பகுதி கிழக்கிந்திய சங்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஒருசிறு பகுதி நிஜாமுக்குக் கொடுபட்டது. பின்பு தென்னிந்தியாவின் மற்றும் சில பாகங்களும் பிரித்தானியரின் கைவசம் கிடைத்தன.

இந்தியப் போர்வீரர்களுக்குப் போர்ப்பயிற்சி கொடுத்து அவர்களின் உதவியுடன் மருட்டியரையும் அந்நாட்டுப் பல அரசர்களையும் உவெலெஸ்லி வென்றான். மற்றும் சில அரசர்களோடு சினேகமுறையில் உடன்படிக்கை எழுதிக்கொண்டான். வேறு சில அரசர்களோடு செய்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சங்கத்தாரிடமிருந்த சேனைகளின் செலவு அவ்வரசர்களாற் கொடுபட்டது. 1825 வரையில் கங்கைப்பிரதேசம் முழுதும், ஏறக்குறைய தென்னிந்தியா முழுவதும் மத்திய இந்தியாவிலுள்ள மருட்டியர் தேசமும் கிழக்கிந்திய சங்கத்தின் ஆட்சிக்குட் கொண்டுவரப்பட்டது. சுதந்திர ஆட்சியோடிருந்த சிந்து 1843லும் பாஞ்சாலம் 1846லும் சேர்க்கப்பட்டன. அயல்நாடாகிய பர்மாவும் 1886 வரையில் கைப்பற்றப்பட்டது. உவெலெஸ்லி டில்லியிலிருந்து கல்கத்தாவரையும், கல்கத்தாவிலிருந்து கன்னியாகுமரி வரையுமுள்ள நாடுகளை ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தமையாலும் செலவு அதிகரித்தமையாலும் 1805ல் பிரித்தானிய அரசாங்கம் உவெலெஸ்லியை இங்கிலாந்துக்குத் திரும்பிப்போகும்படியாக ஆஞ்ஞையிட்டனர்.

இனிப் பிரித்தானிய கிழக்கிந்தியசங்கத்தின் ஆட்சியைப்பற்றி ஆராய்வோம். இந்திய மக்களின் பெரும்பாலோர் பயிரிடுந்தொழிலையே நடத்திவந்தனர். அவ்விவசாயிகள் தங்கள் வருமானத்திலிருந்து ஒருபகுதியில்



நிலவரியைக்கொடுத்து எஞ்சியபகுதியைத் தங்கள் குடும்பங்களின் சீவனத்துக்குச் செலவழித்தனர். அந்தவரியை அறவிடும் பொறுப்பு கீழ் உத்தியோகத்தர்களுக்குப் பழைய அரசர்களாற் கொடுபட்டது. விவசாயிகளுக்கு வரியறவிடுவோர் அதிக நஷ்டத்தை உண்டுபண்ணினர். அதுவுமல்லாமற் திருடரும் கொள்ளைக்காரரும் அவர்களுடையபொருளைச் சூறையாடினர், மழைவளங்குன்றிய காலத்தில் பயிர்கள் சேதமடைந்தன. எந்த அரசாங்கத்தாருக்கும் இதொரு பெரும் பிரச்சினையாகும். சமுதாயத்தில் சாதிக்கட்டுப்பாடுகளிருந்தன. பிராமணனென்றாலென்ன அடிமையென்றாலென்ன தீண்டாச் சாதியினரென்றாலென்ன அந்தந்தச் சாதிக்குரிய தொழிலையே நடத்திவந்தனர். ஒரு சாதியைச்சேர்ந்தவன் இன்னொரு சாதியினனாகை முடியாது. ஒவ்வொருவனுடைய சாதியும் அவன் சமயத்தையே ஆதாரமாகக்கொண்டது.

நாகரிகமான வாழ்க்கைக்குத் தேவையான நல்லொழுங்கையும் பாதுகாப்பையும் பிரித்தானியர் தாங்கள் ஆளும் நாடெல்லாம் அளிப்பது வழக்கம். ஆனால் அவர்கள் தங்களாட்சியின் சிறப்புக்களை ஸ்தாபிக்க வெகுகாலமெடுத்தும் வர்த்தக சங்கத்தாராட்சி முடிவடைந்த காலமாகிய 1858 வரையில் ஓரளவுக்கு அவைகளைச் செய்துமுடித்தனரெனலாம். விவசாயிகள் கஷ்டமின்றி உழைக்கக்கூடியதாகவிருந்தது. சனத்தொகை பெருகிக்கொண்டிருந்தமையால் வறுமை நாட்டிற் குறையவில்லை. பிரித்தானியர் இந்தியாவிலுள்ள நீதிச்சட்டங்களிலும் தேசவழக்கங்களிலும் தலையிடவில்லை. ஆனால் அடிமை, நரபலி, சதி (உடன்கட்டையேறுதல்) இன்னும் அநாகரிகமாகத் தோற்றியவைகளை நீக்கிவிட்டனர். கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தாரின் ஆட்சி முடிவடைவதற்குமுன் ஆங்கிலேயர் மேனாட்டுக்கைத்தொழில்களையும் மேனாட்டுக்கல்வியையும், கிறீஸ்த பாதிரிமார் சமயப்பிரசாரஞ் செய்யவும் திறமையான அரசியல்முறையையும் ஸ்தாபித்தனர். இவ்வண்ணமாக மக்களின் நன்மையைக்கருதிப் பல நன்மைகளைச்செய்தனர்.

RangaRakes
Tamilnavarasam.com

1848-ல் மகாதேசாதிபதியாகவந்த டல்லௌசி என்பவர் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகவும், மக்களின் நன்மைக்காகவும் பல மாற்றங்களையுண்டாக்கினார். ஆங்கிலேயர் தங்களுடைய ஆளுகை மக்களுக்கு நன்மையையே யளிக்கிறது என்ற அபிப்பிராயத்தை வைத்திருந்த அக்காலத்திலேயே டல்லௌசி தேசாதிபதியாக இந்தியாவுக்கு வந்தான். இந்தியாவிலுள்ள வழக்கப்படி ஒட்டிய உரித்தாளரில்லாவிடத்து இந்து அரசர்கள் வளர்ப்புப்பிள்ளைகளைத் தங்கள் காலத்துக்குப்பின் அரசாள்வதற்கு நியமித்தனர். ஐரோப்பாவில் அவ்வகையான வழக்கமில்லா திருந்தபோதிலும் கீழ்நாடுகளில் அந்த முறை சட்டத்துக்கு ஏற்றதும் தகுந்ததுமாகக் கருதப்பட்டது. ஆனால் டல்லௌசி அம்முறையை அங்கீகரிக்க மறுத்து, ஒரு அரசன் பிள்ளைகளில்லாமலிறந்தால் அவனுடைய இராச்சியம் முக்கிய அதிகாரத்தையுடைய அரசாங்கத்துக்கே உரிமையுடையதென்று சொன்னான். பழையகாலத்தில் மொகலாய அரசர்களுக்குரிய அவ்வுரிமை இப்போ கிழக்கிந்திய வர்த்தகசங்கத்துக்கே உரியதென்று வற்புறுத்தினான். அதன்பிரகாரம் மத்திய இந்தியாவிலுள்ள 7 நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டான். சொந்தநாடுகளை ஆண்ட அரசர்கள் யாபேரும் அது ஆபத்தான நிலையேற்பட்டதெனவுணர்ந்தனர். ஆனால் தேசாதிபதி மக்களுக்கு அதனால் நன்மையுண்டென்று எண்ணி இதுபோன்ற பல மாற்றங்களையுண்டுபண்ணினார். இவருக்குச் சிறிதுகாலத்துக்கு முன்னிருந்த பென்ரிங்பிரபு ஆகிய தேசாதிபதியும் சமுதாயத்திலநேக சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். அவர் ஒரு பரந்த கொள்கைகளையுடையவராய் இந்தியாவிற் பிரித்தானியருடைய ஆளுகையின் நோக்கம் இந்திய மக்கள் தாங்களே ஆட்சிபுரியக்கூடிய நிலையையுண்டாக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார். அக்காலத்தில் இங்கிலாந்திலும் பல மாற்றங்கள் காணப்பட்டன. கைத்தொழிலாலும், வர்த்தகத்தினாலும் இங்கிலாந்து ஐசுவரியமடைந்தாற் போதாதென்றும் மக்களுடைய நிலைமை



இங்கிலாந்தில் மாத்திரமல்லாது, சாம்ராச்சிய நாடுகளிலும் திருப்திகரமாயிருக்க வேண்டுமென்று பரந்த கொள்கையாளர்கள் அபிப்பிராயப்பட்டனர். பிரித்தானிய பாராளுமன்றத்தில் 1832-ல் நிறைவேற்றப்பட்ட அரசியற்சீர்திருத்தச் சட்டப்பிரகாரம் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் அதிகரித்ததுபோல் ஏனைய பகுதிகளிலும் திருத்தங்கள் ஆக்கவேண்டியது அவசியமாயிற்று. சதிஎன்றும் உடன்கட்டை ஏறும் வழக்கமும், அடிமைத்தனமும் ஒழிக்கப்பட்டன. அவருடைய காலத்திலே கல்வி விருத்தியுமேற்பட்டது. இந்தியர்கள் கல்வி பயிலவேண்டுமெனவுணர்ந்து அவர்களுக்கு உற்சாகமளித்தான். பாடசாலைகளும் கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

டல்லௌசியும் அதேகொள்கையை யுடையவனாய் அரசாங்க நிர்வாகத்தையும் திருத்தியமைத்துக் கல்வியையும் விருத்தியடையச்செய்தான். புகையிரதவீதி முதன்முதலாக வமைக்கப்பட்டது. தந்தி அனுப்பும்வசதியை உண்டாக்கினான். வறுமையை நாட்டினின்று ஒழிக்க வேண்டுமெனக்கருதி கால்வாய்களை வெட்டியும் நீர்ப்பாய்ச்சும் வசதிகளையும் உண்டாக்கினான். தெருக்களை அமைத்ததோடு சுலபமான தபாற்போக்குமுறையை ஸ்தாபித்தான், கல்கத்தாவில் பெண்கள்கல்லூரி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நிதியொன்றை வளங்கினான். நன்னோக்கத்தோடே அவனால் இம்மாற்றங்கள் செய்யப்பட்டன.

இவ்விதமாகத் திருத்தங்கள் உண்டாக்கப்பட்ட பொழுதிலும், பிரித்தானியருடைய ஆளுகை இந்திய மக்களிடையே அதிருப்தியையுண்டாக்கியது. மொகலாயர், மருட்டியர் ஆகிய இருபகுதியாரும் தங்கள்வசமிருந்த நாட்டை இழந்துவிட்டனர். ஆங்கிலேயருடைய ஆதிக்கம் பரவியதால் தங்கள் முன்னோராற் கைப்பற்றப்பட்ட நாட்டைத் தாங்கள் ஆளமுடியாமற்போனதே என்ற காரணத்தினால் அவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. பிரித்தானியராற் கொண்டுவரப்பட்ட புதிய மாற்றங்களும் கொள்கைகளும் மனப்பயத்தை யுண்டாக்கியது

RangaRakes Tamilnavarasam.com

இரண்டாவது காரணமாகும். அதிருப்தியடைந்த பகுதியினர், பிரித்தானியர் செய்த நன்மைகளெல்லாம் இந்திய மக்களுக்கு இடையூறாகச் செய்யப்பட்டனவென்ற தப்பபிப்பிராயத்தை பாமரமக்களிடையே புகுத்திவிட்டனர். பிரித்தானியர் தங்களுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் பலப்படுத்துவதற்காகவும், இந்து சமயத்தையழிக்கும் நோக்கத்துடனும் அந்த மாற்றங்களைச் செய்துள்ளார்களென நினைத்தனர். டல்லௌசி உண்டாக்கிய மாற்றங்களே கலகமேற்படுவதற்குக் காரணமாயிருந்தன. அக்காலத்தில் அம்மாற்றங்களின் நன்மையை அறியக்கூடிய முன்னேற்றத்தை இந்தியர் அடைந்திருக்கவில்லை. புகையிரதவண்டிகளிற் பலசாதியினரும் பிரயாணஞ் செய்தமையினால் சாதிக்கட்டுப்பாட்டுக்குப் பங்கமேற்பட்டதென எண்ணங்கொண்டனர். பிளாஸி என்ற சண்டைக்கு 100 வருடங்களின் பின்பு பிரித்தானியருடைய ஆளுகை முடிவடையுமென ஒரு சோதிடனாற் கூறப்பட்டிருந்தமையினால் அக்காலம் வந்தவுடன் அது நிறைவேறுமென்று காத்திருந்தனர். அந்நாட்டிலிருந்த நிலமானியமுறை மாற்றப்பட்டமையால் தனவந்தர்கள் பகைமைகொண்டனர்.

ஆப்கானிஸ்தன் சண்டையிலும் கிரிமியன் யுத்தத்திலும் பிரித்தானியருடைய போர்த்திறமை குன்றியமையால் அதிருப்தியடைந்த மக்கள் மனத்தைரியமுற்றனர். இவ்வகையான காரணங்களால் 1857-ல் இந்தியக்கலகம் என்று சொல்லப்படும் கலகம் உண்டானது. கிழக்கிந்திய சங்கத்தாரின் இந்தியப்படைகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு புதிய துப்பாக்கிக்கு வேண்டிய சன்னங்கள் பசுவின் அல்லது பன்றியின் கொழுப்பினாற் பூசப்பட்டது. அந்தப்படையிலுள்ள போர்வீரர்கள் இந்துக்களும் முஸ்லீங்களுமாயிருந்தபடியால் அவைகளைப்பாவிக்க மறுத்தனர். உடனே கலகந்தொடங்கி மீரத்திலுள்ள போர்வீரர்கள் தங்களுடைய மேலுத்தியோகத்தர்களைச் சுட்டனர். வடக்கிலும், மத்தியபகுதியிலும் கலகந்தொடங்கியது. 48 மணித்தியாலங்களுள் டில்லியைக்கைப்பற்றி



மொகலாய வமிசத்திலுள்ள பகதூர் ஷா என்பவனை முழு இந்தியாவுக்கும் சக்கரவர்த்தியாக நியமித்தனர். வட இந்தியா முழுவதும் பிரதானமாக, லக்னோ, கோன்பூர், டில்லி, மீராத் முதலிய இடங்களில் கலகம் பரவியது. ஆனால் அக்கலகம் ஒற்றுமையுடனும் ஒழுங்காகவும் நடக்கவில்லை. ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு தலைவர் பொறுப்பை ஏற்றதல்லாது, தனிப்பெரும் அதிகாரி ஒருவன் பொறுப்பாயிருந்து நடத்தவில்லை. முதல் நான்கு மாதங்களிலும் பிரித்தானியர் தகுந்தமுறையில் கலகத்தையடக்கவில்லை. அக்காலத்துள் கலகக்காரர் ஒரு மத்திய அதிகாரியின் உதவியோடு கலகத்தை நடத்தியிருந்தால் பிரித்தானியரைப் பின்வாங்கச் செய்திருக்கலாம். பிரித்தானியர் ஒவ்வொரு தனி பகுதியினரையும் தோற்கடித்தனர். இந்தியரில் அநேகர் பிரித்தானியருக்கு உதவியாகநின்று சண்டைசெய்தனர். ஆனால் பல நிஷ்டூரமான செயல்கள் நடந்தன. கலகம் அடக்கப்பட்டதும் பிரித்தானியருடைய ஆளுகைக்கு ஏற்படக்கூடிய அபாயமும் நீங்கியது.

இந்தியக் கலகத்தின்பயனாக கிழக்கிந்திய சங்கத்தாரின் ஆளுகை 1858-ல் ஒழிக்கப்பட்டு பிரித்தானிய அரசாங்கத்தின் நேரடியான ஆளுகையின்கீழ் இந்தியா கொண்டுவரப்பட்டது. இந்தியாவின் விஷயங்களை நடத்துவதற்கு மந்திரிமாரைக் கொண்டுள்ள ஒரு சபையின் உதவியைப்பெற்ற அரசாங்க காரியதரிசி ஒருவருக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசனின் பிரதிநிதியாக மகாதேசாதிபதியொருவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். விக்டோரியா இராணி இந்தியாவின் சக்கரவர்த்தினியாகப் பிரசித்தஞ்செய்யப்பட்டு அப்பிரசித்தப் பத்திரத்தில் இந்தியாவின் பண்டைக்கால வழக்கங்களும் உரிமைகளும் நன்கு மதிக்கப்படுமென்றும் கைத்தொழிலபிவிருத்தி ஊக்கப்படுத்தப்படு மென்றும் பிறர் இராச்சியங்கள் அபகரிக்கப்படமாட்டாதென்றும் குறிப்பிடப்பட்டன. அக்கலகத்தின்பின் இந்தியாவின் சமுதாய நிலையைத் திருத்தியமைக்க வேண்டுமென்று

RangaRakes Tamilnavarasam.com

பிரித்தானியர் உணர்ந்தனர். பேதிநோயும், பஞ்சமும் கட்டில்லாமற் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தனர். வைத்தியசாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக பேதிநோயுண்டாவதற்குரிய காரணங்களை அறிந்தபின் அக்கொள்ளைநோய் பரவாவண்ணம் தடுக்கப்பட்டது. இந்தியாவில் உணவுப்பொருள் விளைவு குன்றியகாலத்தில், அரிசி கோதுமை பஞ்சமுள்ள பகுதிகளுக்கு புகையிரதவழியாகக் கொண்டுபோகும் வசதிகள் அளிக்கப்பட்டன. நீர்ப்பாய்ச்சும் வசதிகளை உண்டாக்கி பயிரிடுந் தொழிலை விருத்திசெய்து பல்லாயிரக்கணக்கான இந்திய மக்கள் உணவைப்பெறக்கூடியதாக உதவியளித்தனர். கல்வியை நாடெங்கும் பரப்புவதற்காக பலவிடங்களிலும் பாடசாலைகளை ஸ்தாபித்தனர். 1857-ல் சென்னையிலும், கல்கத்தாவிலும், பம்பாயிலும் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளோடிணைக்கப்பட்ட கல்லூரிகள் அரசாங்கத்தாராலும், சமயபரிபாலன சபைகளாலும், நாட்டிலுள்ள தனவந்தர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆங்கிலப் பாஷையையே கல்லூரிகளிற் பயின்றனர். இந்தியமக்கள் மேனாட்டுக்கல்வியைப் பயின்று ஆங்கில இலக்கியத்தையும், ஆங்கிலேய அரசியல்முறைகளை செவ்வனே கற்றனர். அவ்விதமான கல்வியைப் பயின்றவர்கள் சிலராயினும் அவர்களின் கொள்கைகள் எல்லா மக்களிடமும் செறிந்தன. புகையிரதவீதிகளும், குறைந்த விகித கடிதப்போக்குவரவும், புதினப் பத்திரிகையும், பாடசாலைகளும், சர்வகலாசாலைகளும், பரந்த ஆங்கில அறிவும் ஒன்றுசேர்ந்து வேற்றுமையடைந்திருந்த நாட்டில் ஓர்வகை ஒற்றுமையை உண்டாக்கின. சாதி, சமயம், பாஷை முதலிய வேற்றுமைகள் சாந்தப்படாதவிடத்தும் புதிதாக மக்களிடையே செறிந்த கல்வி இந்தியாவின் வருங்காலநிலைக்குப் புத்துயிர் அளித்ததெனலாம்.

றிப்போன்பிரபு மகாதேசாதிபதியாய் (1880-84) இருந்தகாலத்தில் பரந்தகொள்கைகளை அடிப்படையா



யுள்ள மாற்றங்கள் உண்டாக்கப்பட்டன. புதினப் பத்திரிகைகளை வெளியிடும் அச்சியந்திரசாலைகளுக்கு முன்னிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இந்திய மக்களுக்குச் சுதந்திர ஆளுகையைப் பயிற்றும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட மாநகர சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. (1882) அக்காலத்திலிருந்த கல்விமுறையைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஓர் விசாரணைக் குழுவொன்றை நியமித்து அதன் அறிக்கையின் பிரகாரம் மாற்றங்கள் கல்வித்துறையிலேற்பட்டன. நான்காவதாக நீதிவழங்கும் முறையிற் காணப்பட்ட தவறுகள் நீக்கப்பட்டன. இச்சம்பவங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து கல்விபயின்ற வகுப்பினரிடையே தேசீய உணர்ச்சியை உண்டாக்கின. இவ்விதமான உணர்ச்சிகளுண்டானதன் பயனாக 1885-ல் இந்தியத் தேசீய சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதனங்கத்தவர்கள் 18-ம், 19-ம் நூற்றாண்டுகளிலுள்ள 'விக்' கட்சியாரின் அரசியல் ஞானத்தைப் பின்பற்றி, பிரதிநிதிகளையுடைய ஸ்தாபனங்கள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் சட்டநிரூபண, சட்டநிர்வாக சபைகளில் இந்திய மக்களுக்குப் பங்கு இருக்கவேண்டுமென்றும் வாதாடினர். அச்சங்கத்துக்குத் தலைவராயிருந்த தாதபாய் நவுரோஜி அரசர்கள் மக்களுக்காக ஆக்கப்பட்டனரேயன்றி மக்கள் அரசர்களுக்காக ஆக்கப்படவில்லையென்று கூறினர். ஆனால் அச்சங்கம் இந்துக்களையே கொண்டுள்ள ஸ்தாபனமாயிருந்தது. முகமதியர் ஒருவரும் சேரவில்லை.

மேனாட்டுக் கொள்கைகளை அடிப்படையாகவுள்ள தேசீய இயக்கத்தினர் மேனாட்டு அரசியல் முறையை இந்தியாவில் ஸ்தாபிக்கவேண்டுமென்ற நோக்கத்தையுடையவராயினர். ஆனால் இந்துசமய சம்பந்தமான இயக்கங்களைச் சேர்ந்தோர் இந்தியா மேனாடுகளிலும் பார்க்கச் சிறந்த நாடென்று வற்புறுத்தினர். 1902-ற் காலஞ்சென்ற சுவாமி விவேகானந்தர் இந்தியா, ஆத்ம



RangaRakes Tamilnavarasam.com

சக்தியினால் உலகத்தை வெல்லவேண்டுமெனக் கூறினார். இவ்வாறு மேல்நாட்டு மயமாக்கும் அரசியல், சமுதாய இயக்கங்களும், அக்கொள்கைகளுக்கு எதிரான இயக்கங்களும் ஒன்றுசேர்ந்து தேசிய உணர்ச்சியை உண்டாக்கின. மறாட்டியர் நாட்டிலுள்ள, திலகர் என்ற ஒரு பிராமணன் ஒருவர், இந்தியாவிலுள்ள வறுமை, நோய், ஆகியவற்றிற்குப் பிரித்தானியருடைய ஆளுகையே காரணமென மக்களுக்கு விளங்கப்படுத்தி ஒரு கிளர்ச்சியை யுண்டுபண்ணினர்.

கோக்கலேயும், ஆமட்கான் முதலியோர் பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவுக்குச் சுயராச்சியத்தை சீக்கிரத்தில் வளங்கவேண்டுமென்ற வழியில் முயற்சிகள் செய்தனர். திலகர், காந்தி முதலியோர் அரசாங்கத்தைப் பலவழியிலும் எதிர்த்தனர். 1892-ல் ஏற்படுத்தப்பட்ட அரசியற் திருத்தத்தின் பிரகாரம் இந்திய அரசாங்கத்திலுள்ள சட்டநிரூபண சபைகளிலும், 1909 ல் மோர்லிமின்றோத் திட்டத்தின் பிரகாரம் மாகாண நிர்வாகசபைகளிலும் அங்கத்தவர்கள் தொகை கூட்டப்பட்டது. முதலாம் உலகயுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்தியப் படைகள் நேசதேச கட்சியினரோடு சேர்ந்து போராடினமையாற் சுயஆட்சி சீக்கிரத்தில் கிடைக்குமென்று இந்தியருட் பலர் எதிர்பார்த்தனர்.

முதலாம் உலகயுத்தத்தில் இந்தியாவில் கைத்தொழில் விருத்தியேற்பட்டது. நெசவுத்தொழில், நிலக்கரி இரும்பு முதலிய தொழில்கள் ஆரம்பமாயின. இந்தியாவின் வர்த்தகப் பொருட்களைப் பாதுகாக்கத் தொடங்கியதால் பிரித்தானிய வர்த்தகப் பொருட்களுக்கு விருப்பம் குறைந்தது. வர்த்தக் வகுப்பினர் தனவந்தராய் விட்டனர். ஆனால் யுத்தத்தின் நிமித்தம் பொருட்களின் விலை அதிகரித்ததால் ஏழைகள் அதிகம் கஷ்டப்பட்டனர். இவ்விதமான பொருளாதார நிலை, பிரித்தானியருக்கு மாறாகத் தொடங்கிய இயக்கத்துக்குச் சாதக



மாயிருந்தது. இதுவரையில் இந்துக்களிடமிருந்த எதிர்ப்பு, இப்போ முஸ்லீங்களிடமும் காணப்பட்டது. மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் பூரண சுதந்திரத்தைப் பெறுவதற்கு இந்தியமக்கள் போராடத் தொடங்கினர். முதலாம் உலகயுத்தம் முடிவடைந்தபின் பல்வகைப்பட்ட கிளர்ச்சிகளும் உண்டாயின. காந்தியைப் பின்பற்றியோர் இந்துசமயப் பண்பாட்டையும் கொள்கைகளையும் மீண்டும் கொண்டுவருவதற்கு எத்தனஞ் செய்தனர். முஸ்லீம்கள் முஸ்லீம் ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டுமென அவாவுற்றனர். மேனாட்டுக் கல்வியைப் பயின்றவர்கள் மேனாட்டு ஜனநாயக முறையைப் பின்பற்ற விருப்பமுடையராயினர். வர்த்தகப் பொருட்களை உற்பத்தி செய்வோர்களும் வர்த்தகர்களும் மேனாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்யாமற் தடுக்கவேண்டுமென முயற்சித்தனர்: இவ்வண்ணமாகப் பலவித அபிப்பிராயமுடையோர்கள் ஒன்றுசேர்ந்து மேனாட்டு ஆதிக்கத்தை வெறுத்தனர்.

மோர்லிமின்றோ அரசியல்முறை திருப்திகரமாய்க் காணப்படவில்லை. சுதந்திரத்தை இந்தியமக்கள் விரும்பியிருந்தமையால் படிப்படியாக அவர்கள் தங்களுடைய நோக்கத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக ஏற்ற அரசாங்கம் நிறுவும் எண்ணத்தை ஆங்கிலேயர் 1917-ல் வெளிப்படுத்தினர். 1919-ல் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொன்ரேக் செல்ம்ஸ்போட் திட்டத்தின் பிரகாரம் மாகாணங்களிலுள்ள ஆட்சி மாகாணச்சபையிலுள்ள இந்திய மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டது. மாகாணச் சட்டநிரூபண சபைகளில் எழுபது வீதத்திற்குக்குறையாமற் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தினர்கள் இருந்தனர். முஸ்லீம்கள் ஐரோப்பியர், சிக்ஸ், கிறீஸ்த இந்தியர்கள் முதலியோருக்குப் பிரத்தியேகமான தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டன. நான்கு வருஷங்களின் பின்பு சபைத்தலைவரை தெரிவுசெய்யும் உரிமை சபைகளுக்குக் கொடுக்கப்பட்டன. சட்ட

RangaRakes Tamilnavarasam.com

நிர்வாக சபையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. மத்திய அரசாங்கத்தில் இந்தியா முழுவதிலும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் சபையொன்றும் ஆக்கப்பட்டது. ஆனால் பூரண சுதந்திரத்தை விரும்பி நின்றவர்களுக்கு இம்மாற்றங்கள் திருப்தியளிக்கவில்லை. புதிதான இன்னொரு கிளர்ச்சி உண்டானது. உலகம் போற்றும் உத்தம மகாத்மா காந்தியின் தலைமையில் அது ஏற்பட்டது. அவருடைய இயக்கம் அஹிம்சையே அடிப்படையாகக் கொண்டதாகும். சத்தியாக்கிரக முறையில் அமைந்த சட்டமறுப்பியக்கம் ஆரம்பமானது. 1930-ல் அரசாங்கத்துக்கு எதிர்ப்புக்காட்டும் முறையில் காந்தி உப்பை அள்ளும் இயக்கத்தை தொடங்கியதனால் அவர் சிறைச்சாலையிலிடப்பட்டார். அடுத்த மூன்று வருடங்களுக்குள் லண்டனில் 3 வட்டமேசை மகாநாடுகள் நடைபெற்றன. இந்திய மாகாணங்கள் எல்லாவற்றையும் ஒரே அரசாங்கத்தின் கீழிணைக்க வேண்டுமென்று 1935-ல் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. மாகாணங்களில் சட்டங்களை ஆக்கும் பொறுப்புள்ள மந்திரி சபைகளையுடைய மாகாண ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்பட்டது. ஆஸ்தி, கல்வித் தராதரமுடையவர்களுக்கே வாக்குரிமை யளிக்கப்பட்டது. அத்திட்டத்தின் பயனாக 1937-ல் நடைபெற்ற முதற் தேர்தலில் மகாத்மா காந்தியின் யோசனைப்படி இந்திய தேசியசங்கம் பங்குபற்றி 11 மாகாணங்களில் 7 மாகாணங்களின் ஆட்சி அச்சங்கத்தினருக்கு கிடைத்தது. அடுத்த இரு ஆண்டுகளிலும் மாகாண சுதந்திர ஆட்சி அனுகூலமாக நடைபெற்றது. ஆனால் சுதந்திர ஆட்சியே வேண்டுமென்று இந்தியத் தலைவர்கள் வாதாடினார்கள். இரண்டாம் உலகயுத்தம் நடந்துகொண்டிருந்தமையால், அக்காலத்தில் இந்தியர் விரும்பிய ஆட்சியைப் பிரித்தானியர் அளிக்கமுடியாமற் போனது. 1942-ல் தொழிலாளர் கட்சியிலுள்ள கிறிப்ஸ் பிரபு, இந்தியாவின் நிலையை ஆராய்ந்து யுத்தம் முடிவடைந்த பின், சுதந்திரத்தை வழங்குவதற்கு வேண்டிய அறிக்



கையை வெளிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டார். சாம்ராச்சியத்தின் ஏனைய நாடுகளைப்போல் ஆளுகைப்பொறுப்புள்ள சம அந்தஸ்து வழங்கவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். யுத்தம் முடிவடைந்த பின் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த கிளமெண்ட் அட்லி 1948-ம் ஆண்டு ஆனிமாதத்திற்குப் பிந்தாமல் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென பாராளுமன்றப் பிரதிநிதிச் சபையில் கூறினார். இந்தியாவில் இராசப் பிரதிநிதியாயிருந்த மவுன் பற்றன் பிரபுவும் அக்கொள்கையே வெளிப்படுத்தினார். இதற்கிடையில் இந்து முஸ்லீம்களுக்கிடையே பேதமேற்பட்டது. முஸ்லீம்களினுடைய தலைவரான ஜின்னா தனி முஸ்லீம் இராச்சியம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று வாதாடினார். ஆகையால் இந்தியா, பாக்கிஸ்தான் என்று இரு ஜனநாயக நாடுகள் ஸ்தாபிக்கப்பட்டன. இரு நாடுகளுக்குமிடையே உள்ள காஷ்மீரம் என்ற பிரதேசம் யாருக்குரியது என்ற வாக்குவாதம் தொடங்கியது. அந்தப் பிரச்னை இன்னுந் தீரவில்லை. இந்தியா, பாகிஸ்தான் என்பவைகளுக்கு முறையே நேருவும், ஜின்னாவும் முதற் பிரதம மந்திரிகளாக நியமிக்கப்பட்டனர். 1950-ல் இந்திய பாராளுமன்றம், இந்தியாவை இராச அதிகாரமுள்ள ஜனநாயக குடியரசாக்குவதாக வெளியரங்கப்படுத்தியது. அதற்கு இராசேந்திர பிரசாத் என்பவர் முதற் தலைவராக நியமிக்கப்பட்டார்.

தற்காலத்திற் சிறந்த அரசியல் நிபுணனாகக் கருதப்பட்ட பிரதம மந்திரியாகிய நேருவின் தலைமையின் கீழ் இந்தியா அதிக முன்னேற்றமடைந்திருக்கிறது. நாட்டுக்கு வேண்டிய உணவு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 1951-ல் கொண்டுவரப்பட்ட ஐந்துவருடத் திட்டத்தின் பயனாக விவசாயம் நன்னிலை அடைந்திருக்கிறது. வீதிகள் திருத்தியமைக்கப்பட்டதும் ஆகாயபோக்குவரத்து வசதிகளும் கப்பற் பிரயாண வசதிகளளிக்கப்பட்டதும் கவனிக்கக்கூடிய பிரதான வேலைகளாம்.

RangaRakes Tamilnavarasam.com

கைத்தொழிலும் அதிக விருத்தியடைந்திருக்கிறது. கிராமங்களின் பொருளாதார சமுதாய நிலைகளும் திருத்தமடைந்தன. தற்போது இந்தியா உலகத்தின் ஏனைய நாடுகளோடு நட்பான முறையில் நடந்து சமாதானத்தை விரும்பி நாட்டைச் செழிக்கச்செய்து வருகின்ற நன் முயற்சியை யாவரும் அறிவர்.

### வினுக்கள்

1. ஐரோப்பியர் இந்தியாவுக்கு ஏன் வந்தனர்? அவர்கள் தங்களுடைய செல்வாக்கை எப்படி நிலை நாட்டினர்?
2. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையில் ஏற்பட்ட போரை விபரித்து எழுதுக.
3. இந்தியாவிற் பிரித்தானியர் தங்களாதிக்கத்தை எவ்வண்ணம் நிலைநாட்டினர்.
4. கிளைவ், கேஸ்டிங் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எவ்வாறு பலமடையச் செய்தனர்.
5. பிரித்தானிய கிழக்கிந்திய சங்கத்தின் ஆட்சியைப்பற்றிக் கூறுக.
6. 1857-ல் ஏற்பட்ட இந்தியக் கலகத்தின் காரணங்களை ஆராய்க.
7. கலகத்தின்பின் காணப்பட்ட மாற்றங்கள் யாவை?
8. இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி விபரித்துக் கூறுக.
9. சுதந்திரத்தைப் பெற்றபின் இந்தியா எவ்வெவ் துறையில் முன்னேற்றமடைந்திருக்கிறது?

# பதினெட்டாம் அத்தியாயம்

## ருஷியா

ருஷியாவை ஆண்டுவந்த சார் எனப்பட்ட அரசர்கள் எதேச்சாதிகாரிகளாவர். அவர்கள் பரந்த இராச்சியமாகிய ருஷியாவையும், பின்லாந்து, போலாந்து முதலிய நாடுகளையும் ஆண்டனர். பின்லாந்தும் போலாந்தும் சாரின் ஆளுகையை வெறுத்தன. ருஷியாவிலுள்ள மக்கள் சிலாவியச் சாதியினரைச் சேர்ந்தவர்கள். மேற்கு ஐரோப்பா முழுவதும் ஜனநாயகக் கொள்கைகள் பரவியிருந்தன. ஆனல் ருஷியா மாத்திரம் அக்கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட நாடாக விளங்கியது. ஒருவேளை ருஷியாவின் சமுதாயநிலை அக்கொள்கைகள் பரவுவதற்குச் சாதகமாயிருக்கவில்லையெனலாம். நகரங்கள் மிகக் குறைவாயிருந்தமையினல் மக்கள் கிராமங்களிலேயே வசித்துவந்தனர். தற்கால உலகத்திற் தோன்றிய மாற்றங்கள் எவையேனும் அந்நாட்டைத் தாக்கவில்லை.

ருஷியா ஒரு பரந்த நாடாகையால் போக்குவரவு வசதிகள் கஷ்டமாகவிருந்தன. அதனுற் பல பகுதிகளில் அரசாங்கம் செவ்வனே நடத்தப்படவில்லை. தங்கள் நாட்டுக்கு இருந்தபற்றே அந்நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தியது. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றூண்டுகளில் ருஷியா அயல்நாடுகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் 33 போர்களவரையில் நடத்தியது. அதன் பயனுக ருஷியா துருக்கி, பாரசீகம் ஆப்கானிஸ்தன் முதலிய நாடுகளின் எல்லைவரையும் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பினர். ருஷியாவிலுள்ள மேல்வகுப்பினராகிய பிரபுக்கள் மேலுத்தியோகங்களிலமர்ந்தனர். உத்தியோகத்தரல்லாத பிரபுக்கள் தங்கள் நிலங்களிற் குடியிருந்த விவசாயிகளிடம் அதிக அதிகாரமும் செல்வாக்கும் உடையவராயிருந்தனர். விவசாயிகளிற் பெரும்பான்மையோர் அடிமைகளாகவும், கல்வியறிவில்

RangaRakes
Tamilnavarasam.com

லாதவர்களாயும், மூடத்தனமுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வகையான நிலையில் இருந்தும் பிரபுக்களுக்கு எதிர்ப்புக்காட்டாமல் எல்லாக் கஷ்டங்களையும் சகித்துவந்தனர். சாரின் அதிகாரத்துக்குட்பட்ட கிரேக்க வைதிகத் திருச்சபையிடம் பெரும் நம்பிக்கையுடையவராவர். ஐரோப்பாவின் மற்ற நாடுகளிலுள்ள மத்திய வகுப்பினரைப் போலல்லாது ருஷியாவிலுள்ள மத்திய வகுப்பினர் ஒன்றிலும் சிரத்தை எடுக்கவில்லை.

மகாபீற்றர் தனது நாடு மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது முன்னேற்றமடையாதிருந்ததைக்கண்டு அந்நாடுகளின் வாழ்க்கை முறைகளை ருஷியாவிற் புகுத்தச்செய்த நன் முயற்சிகளைப்பற்றி முன்னொரு அதிகாரத்திற் படித்திருக்கிறோம். ஆனால் அவர் பாடசாலைகள், தொழிற்சாலைகளை ஸ்தாபித்து தெருக்களையும் அமைத்து வேண்டிய திருத்தங்களைச் செய்தபோதிலும் பண்டைக்காலக் கொள்கைகளும், பழக்கவழக்கங்களுமே வேரூன்றி நின்றன. சாரினுடைய அதிகாரத்துக்குக்கீழடங்கியே மக்கள் வாழ்ந்துவந்தனர். பீற்றர், நிலங்களாற் சூழப்பட்ட நாட்டுக்குத் துறைமுகங்களும் அவசியமென உணர்ந்து பால்ரிக்கடலில் ஒரு துறைமுகத்தைக் கைப்பற்றினான். பின் ஆண்ட சார் கருங்கடலில் இன்னொரு துறைமுகத்தைப் பெற்றான்.

இரண்டாம் கதரீன் காலத்திலும் பின் ஆண்ட அரசினர் காலத்திலும் ருஷியர் தென்மேற்குப் பக்கமாகத் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்ப முயற்சி செய்தனர். கருங்கடலிலும் இன்னும் ஐரோப்பாவிற் துருக்கியருக்கிருந்த ஆதிக்கத்தைக் குறைத்துக் கொன்ஸ்தாந்து நோப்பிளையும் கைப்பற்ற எண்ணங்கொண்டனர். இவ்வகையான ஆசைக்குப் பல காரணங்களிருந்தன. கொன்ஸ்தாந்து நோப்பிளைக் கைப்பற்றினால் மத்தித்தரைக் கடலுக்குச் செல்வதற்குச் சுலபமாயிருக்கும். அதுவுமல்லாமல் கொன்ஸ்தாந்து நோப்பிள்



பழையகாலத்தில் கிரேக்க வைதீக சமயத்துக்கு மத்தியஸ்தானமாயிருந்தது. துருக்கியராட்சியிலிருந்த பால்கன் நாடுகளிற் கிரேக்க வைதிகசமயக் கோயில்களைச்சேர்ந்த சிலாவியச் சாதிமக்களிருந்தனர். அந்நாடுகள் துன்புறுத்தப்பட்டதல்லாமலும் அங்கே ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமும் திருப்திகரமானதல்ல. அம்மக்கள்மீது சார் அனுதாபமுடையவராய் அவர்களுக்குப் பாதுகாப்பை அளிக்க விரும்பினார். பல சிலாவியச் சாதியினர் அவுஸ்திரியாவின் ஆட்சியிலிருந்தபடியால் அந்நாடும் பால்கன் நாடுகள்மீது அனுதாபங்கொண்டது. ருஷியா கீழ்த்திசையிற் செல்வாக்கை நாட்டுவதற்கு எத்தனித்தபடியால் இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கத்திற்கு இடையூறு உண்டாகக்கூடுமென ஆங்கிலேயர் அச்சமுற்றிருந்தனர்.

பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகள் துருக்கியரால் கைப்பற்றி ஆளப்பட்டுவந்த சேர்பியா, பல்கேரியா, றூமேனியா, கிறீஸ் ஆகிய பால்கன் நாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுதந்திரம்பெறும் நோக்கத்துடன் வாதாடின பிரித்தானியர் கிரேக்கருச்கு அனுதாபங் காட்டினர். பொதுவாக அவர்கள் துருக்கிக்கு எதிர்ப்புக் காட்டியிருக்கக்கூடும் ஆனால் ருஷியர் மத்தித்தரைக் கடலில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணங் கொண்டமையால் பிரித்தானியர் இந்தியாவைக் கைப்பற்றும் நோக்கம் ருஷியருக்கிருக்கெனச் சந்தேகங் கொண்டனர். அதுவுமல்லாமல் துருக்கியருடைய சாம்ராச்சியம் வலிகுன்றிப் போனமையால் யார் அந்தச் சாம்ராச்சியத்தைப் பங்கீடு செய்ய வேண்டுமென்று ஆலோசனையுமெழுந்தது. அக்காலத்தில் ருஷியாவை ஆண்டுகொண்டிருந்த முதலாம் நீக்கிலாஸ் என்ற சார் பிரித்தானியா, பிரான்சு, ருஷியா என்ற மூன்று நாடுகளும் துருக்கியருடைய சாம்ராச்சியத்திலுள்ள நாடுகளைத் தங்களுக்குள் சிநேக முறையில் பிரித்தெடுத்துக் கொள்ளலாமென யோசனை கூறினார். எகிப்தையும் கிறீட் தீவையும் பிரித்தானியர் தங்கள் வசமாக்கலாமென்றும்,



RangaRakes Tamilnavarasam.com

ருஷியா, சேபியா, பல்கேரியா, ரூமேனியா, கொன்ஸ்தாந்தையின்-நோப்பிளைப் பெறலாமென்றும் கூறினார். பிரித்தானியா அவ்வகையான ஒழுங்குக்கு எதிர்ப்புக் காட்டியது.

ருஷியா, கிரேக்க வைதிக தேவாலயங்களுக்குத் தலைமை தாங்கியமையால் துருக்கியரால் ஆளப்பட்ட நாடுகளிலிருந்த அச்சமயத்தவர்களுக்குப் பாதுகாப்பளிக்க விரும்பியது. அதுவுமல்லாமல் எருசலேமிலுள்ள பரிசுத்த தேவாலயங்களின் பாதுகாக்குமுரிமையையும் நிலைநாட்டின. அந்த உரிமையை பிரான்சு எதிர்த்தது, ஆகையால் இருபகுதியாருக்குமிடையில் பகைமையேற்பட்டது. துருக்கியராண்ட நாடுகளிலிருந்த கிறீஸ்த பிரசைகள் யாபேரையும் பாதுகாக்குமுரிமை தங்களுக்குண்டென்று ருஷியா கூறியபொழுது ருஷியருடைய அடிப்படையான எண்ணமின்னதென்பது தெளிவாயிற்று. பால்கன் நாடுகளின் அரசியல் அதிகாரத்தை ருஷியா பெறுவதற்கு எண்ணங்கொண்டிருப்பதை பிரித்தானியாவும் பிரான்சும் அறிந்தன. பிரித்தானியர் போருக்கு வரமாட்டார்களென்ற நம்பிக்கையினால் மோல்டேவியா, வலாஷியா என்ற இரு மாகாணங்களையும் கைப்பற்றித் துருக்கியருடைய கடற்படையையும் சினோப் என்ற இடத்தில் 1853-ல் ருஷியர் தாக்கினர். பிரித்தானியரும் பிரான்சியரும் போருக்கெழுந்து கருங்கடலிலுள்ள செபாஸ்தப்போல் என்ற கோட்டையைக் கைப்பற்றினர். நேசதேசப் படைகள் கிறிமியாவுட் புகுந்து அல்மா என்ற சண்டையில்வெற்றிபெற்றன. (1854). பலக்கிளவா என்ற சண்டையில் ருஷியர் திறமையுடன் போர்புரிந்து வெற்றி எய்தினர். இங்கமன் என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையில் நேசதேசப் படைகளால் ருஷியர் துரத்தப்பட்டனர். பிரித்தானிய, பிரான்சியத் துருப்புகள் கிறிமியாவிலுள்ள குளிரினாலும், உணவுக்குறைவினாலும் நோயினாலும் அதிக கஷ்டப்பட்டனர். காயப்பட்ட போர்வீரர்களை



வைத்தியசாலைகளில் வைத்து வேண்டிய சிகிச்சைகளைச் செய்து உதவிபுரிய புலோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் புறப்பட்டார். அவ்வம்மையார் தொடங்கிய வேலை உலகத்துக்கு விசேஷ நன்மைகளை அளித்தன.

நேசதேச படைகள் பல இன்னல்களை அவ்யுத்தத்தில் அடைந்தபோதிலும் 1855 ல் அவைகளின் நிலை திருத்தமடைந்தன. அவ்வாண்டில் சார் நீக்கிலாஸ் இறக்க, இரண்டாம் அலெக்சாந்தர் அவருடைய இடத்தைப் பெற்றார். அவர் சமாதானத்தை விரும்பியமையால் யுத்தம் முடிவடைந்தது. பாரிஸ் உடன்படிக்கையின் பிரகாரம் துருக்கியர் சாம்ராச்சியம் பாதுகாக்கப்பட்டது. சுல்த்தான் தனது சாம்ராச்சியத்திற் திருத்தங்களைச் செய்வதாக உடன்பட்டார். மொல்டேவியா, வலாஷியா என்ற இருமாகாணங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு ரூமேனியா என்ற பெயருடன் சுதந்திர ஆட்சியைப் பெற்றன. கருங்கடல் நடுவுநிலைமைப் பகுதியாகக் கைக்கொள்ளப்பட்டது. சண்டைக் கப்பல்கள் அங்கே செல்ல முடியாதென்றும் கோட்டைகள் கட்ட முடியாதென்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டன. கிறிமியன் யுத்தத்தின் பயனாக ருஷியா துருக்கியருடைய இராச்சியத்திற் தலையிடும் எண்ணம் நீக்கப்பட்டு ஆசியாவிலுள்ள பகுதிகளிற் கவனஞ் செலுத்த வேண்டியதாயிற்று.

1870-ன் பின் ருஷியா மீண்டும் துருக்கியிற் கவனஞ் செலுத்தத் தொடங்கியது. எல்லாச் சிலாவியச் சாதியினரையும் ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் சிலாவியச் சாதியின் ஐக்கியம் என்னுமொரு இயக்கத்தை ருஷியா உண்டாக்கி உற்சாகப்படுத்தியது. அதனால் பால்கன் நாடுகளில் அமைதிக்குறைவு ஏற்பட அதைத் துருக்கியர் கொடூரமான முறையில் அடக்கினர். ருஷியா அதற்கு மறுப்புக்காட்டி 1877-ல் போருக்கெழுந்தது. துருக்கியர் மனத்திடத்துடன் சண்டை செய்தபொழுதிலும் ஈற்றில் ருஷியாவால் தோற்கடிக்கப்பட்டனர். அந்

RangaRakes Tamilnavarasam.com

நேரத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு பேர்லின் நகரத்தில் ஒரு மகாநாட்டைக் கூடி மீண்டும் வேண்டிய ஒழுங்கை ஏற்படுத்தினர். பால்கன் நாடுகளிற் சிலாவியச் சாதியினரிடம் சுதந்திர உணர்ச்சி வளரத்தக்கதாக உதவியளித்தனர். ஒவ்வொரு சிறுநாடும் சுதந்திரத்தை விரும்பினதல்லாது ரூஷியரின் ஆளுகையை விரும்பவில்லை. மத்திய ஆசியாவில் மீண்டும் ரூஷியா கவனத்தைச் செலுத்தத் தொடங்கினமையால் பிரித்தானியருடைய பகைமையைப் பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதும் ரூஷியா ஐரோப்பிய நாடுகளுக்குப் பகைமையுடைய நாடாகப் பிரித்தானியராற் கருதப்பட்டது.

ரூஷியா கிழக்கு நோக்கி இராச்சியத்தைப் பெருப்பித்துக்கொண்டு போனமையால் 1904-ல் யப்பானோடு சண்டை செய்ய நேரிட்டது. மஞ்சூரியாவை ரூஷியா கைப்பற்றியமையினால் யப்பானியர் தங்கள் நாட்டுக்கும் அபாயமேற்பட்டதென எண்ணினர். 1902-ல் யப்பான் இங்கிலாந்தோடு ஒப்பந்தம் எழுதிக்கொண்டது. 1904ல் ரூஷியாவுக்கும் யப்பானுக்கு மிடையில் போர் தொடங்கியது. மேல்நாடுகள் அதிசயப்படக்கூடியதாக யப்பான் ரூஷியாவை தரைச்சண்டைகளிலும் கடற் சண்டைகளிலும் தோற்கடித்தது. 1805-ல் சமாதான உடன்படிக்கை எழுதினதின்பின் கீழைத் தேசங்களைக் கைப்பற்றும் எண்ணம் ரூஷியாவுக்கு நீங்கியதெனலாம்.

கிறிமியன் யுத்தம் நடக்கும்பொழுது மரணமடைந்த முதலாம் நீக்கிலாஸ் என்றசார் ஒரு எதேச்சாதிகாரி. அரசியலிலும் அநேக குறைகள் காணப்பட்டன. அவருக்குப்பின் ஆண்ட இரண்டாம் அலெக்சாந்தர் என்ற சார் அக்குறைகளை நிவிர்த்தி செய்ய ஆரம்பித்தார். அடிமைத்தனத்தை ஒழித்தார். நீக்கப்பட்ட அடிமைகள் எல்லோரையும் விவசாயிகளாக்கினர். அந்த விவசாயிகள் யூத வர்த்தகர்களுக்குக் கடன்காரராகினமையால் அடிக்கடி கலகங்களேற்பட்டன. அதுவுமல்லாமல்



கைத்தொழிற் புரட்சியின் பயனாகப் புது நகரங்கள் தோன்றின. தொழிற்சாலைகளில் அமர்ந்த வேலையாட்கள் அதிக அதிருப்தியுடையவர்களாயினர். "ஜெமிஸ்ரொவ்ஸ்" என்னும் கிராமச்சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. கல்வியும் பரவியது. அதிருப்தியடைந்த கல்வி கற்றவர்களும் தொழிலாளரும் புரட்சி உண்டாக்க எத்தனித்தனர். அவ்விதமான கிளர்ச்சியை அரசாங்கம் அடக்கியது. புரட்சியை உண்டாக்கக் கூடியவர்களெனச் சந்தேகத்திற்கிடமானவர்கள்கூட நாடுகடத்தப்பட்டு சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவ்விதமான செய்கை புரட்சிக்காரரைக் கொடிய செய்கைகளைச் செய்யத் தூண்டின. கெடுதியானவை என அவர்கள் நினைத்த ஸ்தாபனங்கள் எல்லாவற்றையும் அழிக்கும் நோக்கத்துடன் "நிகிலிஸ்ம்" என்னுமியக்கத்தைத் தொடக்கினர். பல கொடூரமான செய்கைகள் செய்யப்பட்டன. உயர்தர உத்தியோகத்தர்கள் வாளுக்கிரையாயினர். இரண்டாம் அலெக்சாந்தராகிய சார் கொலை செய்யப்பட்டார் (1881). அவர் பல திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்த போதிலும் அவருக்கு அந்நிலைமை ஏற்பட்டது. ஆனால் அந்தக் கொலை நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்தது. அவருக்குப் பின் ஆண்ட மூன்றாம் அலெக்சாந்தரும் இரண்டாம் நீக்கிலாசும் (கடைசியாக ஆண்ட சக்கரவர்த்திகள்) எதேச்சாதிகாரிகளாகவே ஆண்டு வந்தனர்.

யப்பானோடு நடத்திய போரில் ரூஷியா தோற்றதின் காரணமாக நாட்டில் அதிக அதிருப்தி உண்டானது. சாரினுடைய மந்திரிமார் டூமா என்று சொல்லப்படும் பாராளுமன்றத்தை ஸ்தாபிப்பது நல்லது என யோசனை கூறினர். ஆனால் அப்பாராளுமன்றத்தால் விசேஷ வேலையொன்றும் செய்யப்படவில்லை. இவ்விதமான நிலையில் ரூஷீயா 1914 வரையுமிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்திய வகுப்பினரும் மேல்வகுப்பினரும் கல்வியறிவிலும்

RangaRakes Tamilnavarasam.com

பண்பாட்டிலும் மேம்பட்ட நிலையை எய்தினர். விவசாயிகள் வறியவர்களாயும் கல்வியறிவில்லாதவர்களாயுமிருந்தனர். கல்வியறிவு படைத்த விவேகிகளும், சில பெரும் எழுத்தாளர்களுமே அந்நாட்டிலேற்பட்ட புரட்சிக்குக் காரணமாயிருந்தனர். எழுத்தாளர்களுள் உலகப் பிரசித்திபெற்ற ரொல் ஸ்ரோயும் ஒருவராகும். கைத்தொழில் அரசாங்கத்தின் ஆதரவோடு பெரும் விருத்தியடைந்தது. ஏராளமாகக் கோதுமை செய்யப்பட்டது. புகையிரத வீதிகளும், தந்தியனுப்பும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து பசிபிக் சமுத்திரம் வரையும் சைபீரியாவுக்கூடாக புகையிரத வீதியமைக்கப்பட்டது. ருஷியாவால் ஆளப்பட்டுவந்த பின்லாந்து, போலாந்து, எஸ்தோனியா, லட்வியா, லிதுவானியா என்ற நாடுகளிலும் அதிருப்தி காணப்பட்டது. பின்வரும் அதிகாரத்தில் எவ்வாறு சாரின் ஆளுகை முதலாம் உலக யுத்தத்தினால் அற்றுப்போக மக்கள் ஆட்சி நிறுவப்பெற்றதென்பதைப்பற்றிப் படிப்போம்.

### வினாக்கள்

1. ருஷியர் பால்கன் நாட்டுவிஷயங்களிற் சிரத்தை காட்டியதற்குக் காரணமென்ன?
2. பிரித்தானியா ருஷியாவில் ஏன் சந்தேகங்கொண்டது?
3. கிறிமியன் யுத்தத்தின் காரணங்களை ஆராய்க.
4. ருஷியாவில் புரட்சியுண்டாவதற்கு ஏதுவாயிருந்த காரணங்கள் யாவை?

# பத்தொன்பதாம் அத்தியாயம்

## சுதந்திர ஆட்சிபெற்ற பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகள்

எலிசபெத் ராணி காலத்தில் இங்கிலாந்துக்கு அயலிலுள்ள அயர்லாந்துத் தீவைவிட வேறுபிற நாடுகள் ஆங்கிலேயர் ஆட்சியில் இருக்கவில்லை. ஆங்கிலேயக் கடற்படையின் வெற்றியும் கடலோடிகளின் திறமையும் வட அமெரிக்காவின் கீழ்த்திசையில் குடியரசு நாடுகளை ஸ்தாபிக்கவும், மேற்குக் கிழக்கிந்திய தீவுகளில் வர்த்தக ஸ்தலங்களை நிறுவவும் உதவியாயிருந்தன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க குடியரசு நாடுகளுக்கும் மூன்றாம் ஜோர்ச் மன்னனுக்குமிடையில் நேர்ந்த வாக்குவாதங்களின் விளைவாக அந்நாடுகள் இங்கிலாந்தின் தொடர்பை நீக்கிச் சுதந்திரத்தைப் பெற்றன. இச்சம்பவம் பிரித்தானியருடைய 'முதலாவது சாம்ராச்சிய மறைவு' எனக் கூறப்படும். ஆங்கிலேயருடைய விடாமுயற்சியும் கடற்படைத் திறமையும் ஒன்று சேர்ந்தமையினால் அவர்கள் இரண்டாவது பிரித்தானிய சாம்ராச்சியமொன்றை ஸ்தாபித்தனர். அதிற் கனடா, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா முதலியன பிரதான நாடுகளாம்.

ஆரம்பத்தில் பிரித்தானிய சாம்பிராச்சியத்திலுள்ள முடிக்குரிய குடியரசுநாடுகள் பல, இப்பொழுது சுதந்திர ஆட்சிபெற்று ஒவ்வொன்றும் மற்ற நாடுகளோடு சம அந்தஸ்து உடையனவாய் தங்கள் விஷயங்களை நடத்தி வருகின்றன. இங்கிலாந்து தேசத்தின் நன்மைக்காகவே சாம்ராச்சியத்திலுள்ள நாடுகளிற் குடியரசியல் ஸ்தாபிக்கப்பட்டதெனக் கூறலாம். தற்போது அதிலுள்ள நாடுகள் யாவும் அரசியற்பொறுப்பை ஏற்று நடத்துவதுமல்லாமல் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் ஒரு நோக்குடையனவாயுமிருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டிற் சிலவும் இருபதாம் நூற்றாண்டிற் சில

RangaRakes Tamilnavarasam.com

வும் சாம்ராச்சியத்தில் அங்கத்துவம் வகித்துக்கொண்டு சுதந்திர ஆட்சியைப் பெற்றுவிட்டன. கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை இன்னும் பல நாடுகள் சுதந்திர ஆட்சிபுரியும் அந்தஸ்தைப் பெற்றுச் சுதந்திர நாடுகளாக விளங்குகின்றன. இவைகளுள் ஏறக்குறைய எல்லாம் இங்கிலாந்து அரசியைத் தங்கள் ராணியாக ஏற்றுக்கொண்டன. இந்தியா, சாம்ராச்சியத்தில் அங்கத்துவம் வகித்தும் அவ்வண்ணம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நாடுகளில் முதலாவதாகச் சுதந்திர ஆட்சி பெற்ற நாடு கனடாவாகும். ஏழாண்டு யுத்தம் முடிவடைந்த காலந்தொடக்கம் கனடா ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழமர்ந்தது.

பாரிஸ் (1763) உடன்படிக்கையின் காரணமாக கனடா ஆங்கிலேயருடைய ஆட்சியின் கீழ் வந்தகாலத்தில் இருபகுதியான குடியேற்றங்கள் காணப்பட்டன. அதிகமாக ஆங்கிலேய மக்கள் வசித்த நியூபவுண்லாந்து, நோவாஸ்கோஷியா முதலிய கரையோரப் பிரதேசங்கள் ஒன்றாகும். குவிபெக்கைத் தலைநகரமாகவுள்ள லோறன்ஸ் நதிப்பிரதேசக் குடியேற்றப் பகுதி இன்னொன்றாகும். கனடா ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டபின் குவிபெக் மொன்ரீல் என்ற இடங்களிற் குடியேறிய சில ஆங்கில வர்த்தகர்களைவிட 60000க்கு மேற்பட்ட பிரான்சிய மக்களே அப்பிரதேசத்தில் வசித்தனர். அமெரிக்க சுதந்திரப்போர் நடைபெற்ற காலத்தில் ஆங்கிலேயருக்குப் பணிவாகவிருந்த 60000 குடியேற்றவாசிகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளைவிட்டு நீங்கி தற்போது ஒன்தாரியோ என்று வழங்கிவரும் மாகாணத்தில் வந்து குடியேறினர்.

கனடாவிலுள்ள பிரான்சிய மக்கள் கல்வியறிவில்லாத விவசாயிகளாயும், அரசியல் விஷயங்களிற் சிரத்தை எடுக்காதவர்களாயும், சுதந்திர அரசியற் கொள்கைகளைப்பற்றித் தெரியாதவர்களாயும் காணப்பட்டனர். எல்லோரும் கத்தோலிக்க சமயத்திற் பக்தியும் விசுவாசமுமுடையவர்கள். ஆங்கிலேயர் தங்களுடைய மார்க்கத்திலேயோ அல்லது நிலங்கள் சம்பந்தமான விஷயங்களிலேயோ தலையிடக்கூடுமென அச்சமுற்றிருந்தனர். பிரதிநிதிகளையுடைய சபைகளையும், ஆங்கில நீதிச் சட்டங்களையும் கனடாவில் ஏற்படுத்துவதாக ஆங்கிலேய அரசாங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்தது. பிரான்சிய மக்கள் பிரதிநிதிச் சபைகளை விரும்பவில்லை. ஆனால், பிரான்சியக் கத்தோலிக்க மக்களுக்கு இவ்வாறு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் குவிபெக்கிலுள்ள குடியேற்றவாசிகள் புரட்டஸ்தாந்து மதத்தினராகையால் எதிர்ப்புக் காட்டியிருப்பார்கள். மேலும் புரட்டஸ்தாந்து மக்கள் தங்களுக்கே பிரதிநிதிகளையுடைய அரசியற் சபைகள் அளிக்கப்பட வேண்டுமென வாதாடினர். அது அநீதியென ஆங்கிலேய அரசாங்கம் உணர்ந்தது. அப் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பத்துவருடகாலமாக நீடித்த விவாதம் நடந்து ஈற்றில் குவிபெக் சட்டம் (1774) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்பிரகாரம் கத்தோலிக்க சமயத்தவர்களுக்குச் சமயசம்பந்தமாகப் பூரண சுதந்திரமளிக்கப்பட்டு, பிரென்சுக்காரரின் சட்டங்களும், வழக்கங்களும் கவனிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசனால் நியமிக்கப்பட்ட ஒரு சிறுச் சபையும், அதற்குச் சட்டங்களை ஆக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. சமயத்தைப் பாதிக்கக் கூடியதாக அல்லது கடுந்தண்டனை விதிக்கக்கூடியதாகச் சட்டங்களை உண்டாக்க அச்சபைக்கு அதிகாரமில்லை. குவிபெக் சட்டம் கனடாவிலுள்ள மக்களைச் சாந்தப்படுத்தி ஆங்கிலேயரின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை உண்டாக்கியது. அமெரிக்க சுதந்திரப்போரின் பின் அமெரிக்க நாடுகளிலிருந்து கனடாவிற் குடியேறிய மக்களின் தொகை ஏறக்குறைய கனடாவிலுள்ள பிரான்சிய மக்களளவாகியது. கனடாவிற் குடியேறிய ஆங்கிலேயப் பிரசைகள் ஏரிப்பிரதேசங்களிலும், பிரான்சிய மக்கள் வசித்த இடங்களுக்கு மேற்குப்பக்





RangaRakes
Tamilnavarasam.com

சந்திரும் வசித்தனர். சுதந்திர அரசாங்க ஆட்சியில் நம்பிக்கையுள்ள மக்களுக்குக் குவிபெக் சட்டம் திருப்தியளிக்கவில்லை. அதனல் ஏற்பட்ட பிரச்னை 1779-ல் ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கனடாச் சட்டத்தினற் தீர்க்கப்பட்டது. அதன்பிரகாரம் ஆங்கிலம் பேசப்படும் மாகாணம் அல்லது ஒன்ராரியா எனப்படும் மேற்குக் கனடா என்றும், பிரெஞ்சு வழங்கப்படும் மாகாணம் அல்லது குவிபெக் எனப்படும் கிழக்குக் கனடா என்றும் இருமாகாணங்களாகக் கனடா பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் பிரதிநிதிச் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. சட்டங்களை ஆக்கவும், வரி விதிக்கவும் அதிகாரம் பிரதிநிதிகளையுள்ள சட்டநிருபண சபைக்குக் கொடுக்கப்பட்டது. அமெரிக்க சுதந்திரப்போர் முடிவடைந்து 10 ஆண்டுகளுக்குள் பொறுப்பாட்சியைப் பெற்ற கனடாவில் ஆறு மாகாணங்கள் பிரித்தானிய சாம்ராச்சியத்தில் இடம்பெற்றன. சுதந்திர ஆட்சியை வழங்கும் கொள்கையும், ஆளப்படும் மக்களை ஆளுபவர்கள் தங்கள் எண்ணத்திற்கிணைய வலோற்காரப்படுத்தாத தன்மையும் பிரித்தானிய அரசியல் முறையிற் கவனிக்கக்கூடிய இரு அம்சங்களாகும்.

1830 வரையில் ஒன்ராரியா, குவிபெக், நோவாஸ், கோஷியா, நியூபவுண்லாந்து நியூபிரன்சுவிக், பிறின்ஸ் எட்வேட் தீவு ஆகிய ஆறு குடியேற்ற மாகாணங்களிலும் பிரித்தானியரின் பழமையான அரசியல் ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் பிரதிநிதிகளையுடைய சட்டநிருபண சபைகளும், நிர்வாகசபைகளும், பிரித்தானிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தேசாதிபதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனல் சட்ட நிருபண சபைகளுக்கும், நிரவாகசபைகளுக்குமிடையில் சச்சரவுகள் வளர்ந்துகொண்டு வந்தன. சட்ட நிருபண சபையினர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் போதாதெனக் கோபமடைந்தனர்.



பிரெஞ்சுமாகாணமாகிய குவிபெக்கிலேயே கூடிய தொல்லைகள் காணப்பட்டன. அங்கிருந்த பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மையோர் பிரெஞ்சுக்காரராயிருந்த போதிலும் நிர்வாகசபையில் ஆங்கிலேயரே அங்கத்தவர்களாயிருந்தனர். நிர்வாகசபை தேவையெனக் கேட்ட சட்டங்களை உண்டாக்குவதற்கும் பிரதிநிதி சபை மறுத்தது. சாதிவேற்றுமை கூடிக்கொண்டு போனமையால் குவிபெக் பிரித்தானியரின் அதிகாரத்தை நீக்கி சுதந்திரத்தைப் பெறுவதற்கும் சித்தமாயிருந்தது. இருமாகாணங்களிலும் கலகமேற்பட்டது. பிரித்தானிய அரசாங்கம் டேகாம் பிரபு, சாள்ஸ் புல்லர், கிபன் உவேக் பீல்ட் என்னும் மூவரையும் விசாரணைசெய்யும்படி அனுப்பியது. 1838ல் கனடாவுக்குப் போய்ச்சேர்ந்த விசாரணைக் குழுவினர், கலகமுண்டாவதற்கு உடனடியாயிருந்த காரணமும், கனடாவில் வருங்காலத்திலேற்படுத்த வேண்டிய அரசியல் முறையும், ஆகிய இரண்டு பெரிய பிரச்னைகளை ஆராயவேண்டியிருந்தது. டேகாம்பிரபு விடுத்த அறிக்கை பிரித்தானிய சாம்ராச்சியத்தில் ஒருசிறந்த சாதனமாகக் கருதப்பட்டது. அவ்வறிக்கையில் பொறுப்பாட்சிமுறை கொடுக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. இரு மாகாணங்களும் ஒன்ருகச் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். 1840ல் பாராளுமன்றத்தில் உண்டாக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இரு மாகாணங்களும் ஒன்றுபடுத்தப்பட்டன. நிரந்தரமான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள சட்டநிருபண சபையொன்றும், இரு மாகாணங்களிலுமிருந்து ஒரேகணக்கான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள பிரதிநிதிச் சபையும் ஸ்தாபிக்கப்பட்டன. பின்பு இரு மாகாணங்களிலும் வாழ்ந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஐக்கியமடைய முயற்சி செய்தனர். எல்லா மாகாணங்களுஞ் சேர்ந்த ஒரு ஐக்கிய சமஷ்டி ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்படவேண்டுமெனப் பலர் விரும்பினர். 1867ல் பிரித்

RangaRakes
Tamilnavarasam.com

தானிய பாராளுமன்றம் பிரித்தானிய வடஅமெரிக்காச் சட்டமென்ற பெயருடன் ஒரு சட்டத்தை ஆக்கியது. அதன்பயனாக ஒன்ரேரியா, குவிபெக் நோவாஸ்கோஷியா, நியூ பிரன்ஸ்விக் என்ற நான்கு மாகாணங்களையும் கொண்டுள்ள கனடா இராச்சியம் சமஷ்டி அரசியல் முறையில் ஸ்தாபிக்கப்பட்டது. நாளடைவில் பிரித்தானிய கொலம்பியா, பிரின்ஸ் எட்வேட்தீவு, மானிடோபா, சஸ்கட்செவான், அல்பட்டா என்ற மாகாணங்களும் அவ்விராச்சியத்தோடு சேர்ந்துகொண்டன. ஒவ்வொரு மாகாணமும் தத்தமக்குரிய ஒரு நிர்வாக சபையையும் ஆட்சிமுறையையும் ஸ்தாபிப்பதோடு மேற்சபைக்குக் குறித்தளவு அங்கத்தவர்களையும் அனுப்ப வேண்டுமென அச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டது. மற்றும் விஷயங்களெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு விடப்பட்டது. கீழ்ச்சபைக்கு மக்கள் அங்கத்தவர்களைத் தெரிந்தனுப்பினர். மந்திரிமார் பெரும்பான்மைக் கட்சியாரிலிருந்து நியமிக்கப்பட்டனர். மகா தேசாதிபதியைத் தெரிவு செய்தலும் மக்களின் வேண்டுகோளின்படி அரசியற் திட்டத்தை மாற்றுமுரிமையையும், வெளிநாட்டு விஷயங்களைக் கட்டுப்பாடு செய்யும் உரிமையையும் பிரித்தானிய அரசாங்கத்தார் தங்கள் பொறுப்பில் வைத்திருந்தனர். கனடாவின் அரசியற் திட்டம் பிரித்தானிய சாம்ராச்சியத்தில் சுதந்திர ஆட்சிபெற்ற மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாகக் காணப்பட்டது. பிரித்தானிய சாம்ராச்சியத்தில் கனடாவே டொமினியன் அந்தஸ்தைப் பெற்ற முதன் நாடாகும்.

வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக 1821ல் ஸ்தாபிக்கப்பட்ட சங்கம் கனடாவின் வடபகுதியில் பெரும் நிலப்பரப்பைத் திருத்தி அவ்விராச்சியத்தோடு சேர்ப்பதற்குப் பொறுப்பாயிருந்தது. கனடாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையில் ஒற்றுமைக் குறைவேற்பட்டதால் இரு நாடுகளுக்குமிடையிலுள்ள எல்லை நாற்பத்தொன்பதாவது சமரேகையென குறிக்கப்பட்டது.



கனடா செல்வமும் சிறப்புமெய்தி உன்னத நிலையையடையக்கூடிய வசதிகளைப் பெற்றிருக்கின்றது. கனடாவின் சனத்தொகை அதிகரித்துக்கொண்டு போனாலும் நாட்டின் வளர்ச்சிக்குப் போதிய நிலப்பரப்புக் காணப்படுகிறது. புகையிரத வீதிகள் அமைக்கப்பட்டதால் நாடு வளர்ச்சியடைந்து வருகிறது. கோதுமை முதலிய தானியங்கள் ஏராளமாக விளைவிக்கப்படுகிறபடியாலும் பொன் சுரங்கங்களிருக்கிறபடியாலும் கைத்தொழில் விருத்தி செய்யத்தக்கதாயிருக்கிறபடியாலும் கனடா ஒரு சிறந்த நாடாக விளங்குகிறது. சென்ற இரு உலக யுத்தங்களிலும் கனடாவிலுள்ள போர் வீரர்கள் பிரித்தானியரோடு நின்று போர்புரிந்தனர்.

அவுஸ்திரேலியா எனும் கண்டமொன்றிருப்பதாக பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்த மாலுமிகள் அறிந்திருந்த போதிலும், பசிபிக் சமுத்திரத்தின் தென்பாகத்தை யேம்ஸ் குக் என்னும் ஆங்கிலேய மாலுமித் தலைவன் ஆராய்ந்த பின்னரே அக்கண்டத்தின் எல்லைப் புறங்களைப் பற்றிப் பூரணமாக அறியக்கூடியதாகவிருந்தது. யேம்ஸ்குக் யோக்சையரிலுள்ள ஒரு தொழிலாளியின் மகன். அவன் ஆரம்பத்தில் கப்பலில் வேலை செய்து பின்பு மாலுமிகளுடன் பலவிடங்களுக்குஞ் சென்று இராணுவப்படையிலுஞ் சேவைசெய்து தன்னுடைய திறமையினால் பதவியிலுயர்ச்சி பெற்றான். அவன் 1768க்கும் 1779க்குமிடையில் பல கடற்பிரயாணங்கள் செய்து அவைகளின் பயனாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய பகுதிகளை ஆராய்ந்ததுமன்றி, பசிபிக் சமுத்திரத்திலுள்ள ஏனைய தீவுகளையும் கண்டுபிடித்ததினால் பூமியின் தென்பாகத்தில் தொடர்ச்சியான பரந்த ஒரு கண்டமிருக்கிறதென்ற பிழையான நம்பிக்கை அற்றுப்போகத் தக்கதாகச் செய்தான். ஐரோப்பியர் வசிக்கிறதற்கு ஏற்ற சுவாத்தியமும் செழிப்பும் வளப்பமும் பொருந்திய கண்டமிருப்பதை வெளிப்படுத்தினான். சுற்றவாளியாகக் காணப்பட்ட

RangaRakes
Tamilnavarasam.com

மறியற்காரர் இதுவரையும் அமெரிக்க குடியேற்ற நாடுகள் சிலவற்றிற்கு அனுப்பப்பட்டனர். அமெரிக்க நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றபின்னர் அதேபோன்ற இன்னொரு இடம் தேவைப்பட்டது. ஆகையால் அவுஸ்திரேலியாவே வசதியான இடமாகக் காணப்பட்டது. 1788ல் அவுஸ்திரேலியாவின் கீழ்த்திசையிலுள்ள குடாவுக்கு ஆயிரக்கணக்கான மறியற்காரரைக் கொண்டுள்ள கப்பல்கள் போய்ச்சேர்ந்தன. அவர்கள் தற்போதுள்ள சிட்னி என்ற நகரப் பகுதியிற் குடியேறினர். பின்பும் அனேக குற்றவாளிகள் அனுப்பப்பட்டனர். காலஞ்செல்ல அக்கண்டத்தின் பல பகுதிகளிலும் சாதாரண சனங்களும் வந்து குடியேறினர். தங்கள் விருப்பப்படி குடியேறிய சாதாரண மக்களின் வமிசத்தவர்களே இன்று அங்கே காணப்படும் மக்களாகும்.

புதிய தென்உவேல்ஸ் என்ற குடியேற்றப் பகுதியில் வசித்த மக்கள் ஆட்டுமந்தைகளை வைத்திருந்தனர். 1821 வரையில் 250000 கால்நடைகள் அவர்களிடமிருந்தன. அவுஸ்திரேலியாவுக்குத் தென் பாகத்திலுள்ள ரஸ்மேனியா என்ற தீவில் 10000 குடிசனங்கள் வரையிலிருந்தனர். குடியேறிய மக்களின் வேண்டுகோளின்படி 1840ல் மறியற்காரரை அனுப்பும் வழக்கம் நிறுத்தப்பட்டது. 1828ல் மேற்கு அவுஸ்திரேலியா 1836-ல் தென் அவுஸ்திரேலியா, 1850ல் விக்ரோறியா 1850-ல் குவின்ஸ்லாந்து என்ற குடியேற்றநாடுகள் தோன்றின. 1841 தொடக்கம் நான்கு வருடங்களாகத் தேசாதிபதியாயிருந்த ஜோர்ஜ்கிறே என்பவரின் நன்முயற்சிகளால் தெற்கு அவுஸ்திரேலியா முன்னேற்றமடைந்தது. சுதந்திர ஆட்சிபெற்ற மற்ற நாடுகளைப்போலல்லாது அவுஸ்திரேலியாவின் வளர்ச்சி மெதுவாக மேலோங்கியது. சிறிது காலத்திற்குள் பொன், வெள்ளி கரிச்சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குடியேற்றம் பெருகியது. மந்தை வளர்க்குந் தொழிலும், சுரங்கங்களிலுள்ள



தொழிலும் முக்கிய தொழில்களாயமர்ந்தன. 1856ல் ரஸ்மேனியா புதியதென் உவேல்ஸ், விக்ரோறியா தென் அவுஸ்திரேலியா சுதந்திர ஆட்சியைப் பெற்றன. சிறிது காலத்திற்குள் மற்ற நாடுகளும் சம அந்தஸ்தைப் பெற்றன. ஈற்றில் எல்லா நாடுகளும் ஒன்றுசேர எண்ணங்கொண்டதினால் 1909ல் பிரித்தானிய பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி ஒரு சமஷ்டி அரசியற் திட்டத்தை வழங்கியது. கன்பெரா அவுஸ்திரேலியாவின் தலைநகரமாக ஸ்தாபிக்கப்பட்டது. ஆறு நாடுகளுஞ் சேர்ந்த சமஷ்டி அரசியல் செவ்வனே நடத்தப்பட்டு வருகின்றன. முதலாம் இரண்டாம் யுத்தங்கள் நடைபெற்ற காலத்தில் அவுஸ்திரேலியர் பிரித்தானிய அரசுக்காக யுத்தத்திற் பங்குபற்றித் தங்கள் உண்மையான விசுவாசத்தைக் காட்டியுள்ளார்கள்.

1769ல் குக் என்ற கப்பற்படைத் தலைவன் நியூசீலாந்தை அடைந்தபின் அது பிரித்தானியருடைய ஆளுகைக்குட்பட்ட நாடாயிற்று. அந்நாட்டு வாசிகளாகிய "மயோறிகள்" விவேகமுள்ள சாதியினராக அங்கே சென்ற ஐரோப்பியரால் மதிக்கப்பட்டனர். 1839ல் நியூசிலாந்துக் கொம்பெனியொன்று இங்கிலாந்தில் கிபன் உவேக்பீல்ட் என்பவரின் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அந்நாட்டு வாசிகளுக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் இரு யுத்தங்கள் நடைபெற்றன. 1870 வரையில் அரசாங்கத்தில் ஐரோப்பியரைப்போல் மயோறிகளுக்கும் சமஉரிமை அளிக்கப்பட்டது. 1856ல் பொறுப்பாட்சி அரசியல் ஸ்தாபிக்கப்பட்டது. மந்தைகளை வளர்ப்பதே அந்நாட்டு மக்களின் பிரதான தொழிலாகும்.

பதினேழாம் நூற்றாண்டில் நன்னம்பிக்கை முனைப் பகுதியில் ஒல்லாந்தர் ஒரு குடியரசை ஸ்தாபித்தனர். நெப்போலியனுடைய யுத்தம் நடந்தகாலத்தில் ஒல்லாந்து பிரான்சின் ஆதிக்கத்தில் அமர்ந்ததினால், தென் ஆபிரிக்காவிலுள்ள முனைப்பகுதியும் பிரென்சுக் காரராற் கைப்

RangaRakes
Tamilnavarasam.com

பற்றப்படுமென நினைத்த ஆங்கிலேயர் உடனே அதைக் கைப்பற்றினர். 1815ல் சமாதான உடன்படிக்கை எழுதியபொழுது பிரித்தானியருக்கு அது உரிமையாயிற்று.

போயர்கள் என்ற ஒல்லாந்த விவசாயிகளே அப்பிரதேசத்தில் அதிகமாகக் குடியேறியிருந்தனர். அவர்கள் சுயநம்பிக்கையும் பிடிவாதமு முடையவர்கள். அந்நாட்டிலுள்ள சுதேசிகளும் போர்செய்யும் இயல்புடையவர்கள். அங்கே குடியேறிய ஒல்லாந்தராகிய போயர்கள் குடியேறிய காலத்திலிருந்த ஒரே பண்பாட்டையும் தன்மையு முடையவர்கள் ஆனார்கள். இங்கிலாந்திலிருந்த பியூரித்தானியரைப்போல் அவர்களுக்கும் பழையஏற்பாட்டிலல்லாது புதியேற்பாட்டில் நம்பிக்கையில்லை. முரட்டுக்குணமும் பிடிவாதமுள்ள போயர்கள் புதிய விஷயங்களில் ஐயுறவும், தங்கள் உரிமைகளைக் கடைப்பிடிக்கும் தன்மையும், பரந்த கொள்கைகளும், அனுதாபமு மற்றவர்களாயிருந்தனர். தென் ஆபிரிக்காவில் நாகரிகமற்ற சுதேசிகளும் காணப்பட்டனர். அவர்களிற் பெரும்பாலோர் பாந்து சாதியினரைச் சேர்ந்த காபிர், சூலுக் கூட்டத்தினராகும். முனைக்குடியேற்றப் பகுதியில் குடியேறிய ஐரோப்பியரும் பாதிரிமாரும் அடிமையையொழிக்க வேண்டுமென்று முயற்சித்தபொழுது அடிமைகளை வைத்திருந்த போயர்கள் கோபாவேசங்கொண்டனர். அடிமைகளை வைத்திருந்தவர்களுக்கு நட்டஈடாக பணங்கொடுத்தபோதிலும் அவர்கள் திருப்தியடையவில்லை. முனைப் பிரதேசத்திலிருந்த சுதேசிகளுக்கு ஐரோப்பியரைப் போல அரசியல் உரிமை வழங்கப்பட்டபொழுது போயர்கள் பெருந் திகிலடைந்தனர். காபீர் கூட்டத்தினர் வடக்கிலிருந்து படையெடுத்துச் சென்ற பொழுது முனைப்பகுதியிலிருந்த தேசாதிபதி அவர்களைத் துரத்தி அவர்களுடைய பிரதேசத்திலொரு பகுதியையுஞ் சேர்த்துக்கொண்டான். அது அநீதியான செய்கையென உணர்ந்து பிரித்தானியர் அப்பகுதியைக் காபீர் சாதியினருக்கே கொடுத்தபொழுது போயர்



கள் காபீர்களினால் தாங்கள் பயமுறுத்தப்பட்டனரென்றும் பிரித்தானியரின் பாதுகாப்புமில்லையென்றும் கோபங்கொண்டனர். அடிமை நீக்கப்பட்டதாலும், அதனால் போயர்களின் விவசாயத்துக்கு நஷ்டம் ஏற்பட்டதாலும், பிரித்தானியர் மேன்மேலுங் குடியேறினமையாலும் அவர்கள் அவ்விடத்தை விட்டு உள்நாட்டுக்குச் சென்று நேத்தால் பிரதேசத்திற் குடியேறினர். இதுவே அவர்களுடைய "பெரும் பிரயாணம்" எனப்படும். பிரித்தானியர் அப்பிரதேசத்தையுங் கைப்பற்றியபொழுது போயர்கள் திரான்ஸ்வால், ஒரேஞ்ஸ் நாடு என்ற இடங்களிற் குடியரசை ஸ்தாபித்தனர். ஆரம்பத்தில் இவைகள் ஆங்கிலேய அரசாங்கத்தால் குடியரசாக அங்கீகரிக்கப்பட்டன. முனைக்குடியரசு நாட்டுக்கு 1853ல் பிரதிநிதி அரசியல்முறை யளிக்கப்பட்டபொழுது ஜோர்ஜ் கிறே அவ்விடம் தேசாதிபதியாக அனுப்பப்பட்டார். முனைக்குடியரசு அரசாங்கம் நன்னிலையெய்திய காலத்தில் கிம்பிளி என்ற இடத்தில் இரத்தினக்கற்கள் காணப்பட்டதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவ்விடத்துக்குப் போய்ச்சேர்ந்தனர். அவ்விடத்தைச் சுற்றியுள்ள பிரேதசம் ஒரெஞ்ஸ் நாட்டோடு சேர்க்கப்படாமையால் சுதேச மக்களுக்குள் போர்செய்யும் சுபாவமுடைய சூலுக்கள் கலகத்தை யுண்டுபண்ணினர். அவர்கள் ஒரு பெரிய சேனையைத் திரட்டி திரான்ஸ்வாலைக் கைப்பற்ற எத்தனித்தனர். போயர்களுக்கு அச்சேனையைத் துரத்தக்கூடிய வலிமையின்மையால் பிரித்தானியர் தலையிட்டுச் சூலுக்களைத் தோற்கடித்து 1877ல் திரான்ஸ்வாலையும் தங்கள் வசப்படுத்தினர்.

சூலுக்கள் தோற்கடிக்கப்பட்டபின் திரான்ஸ்வாலில் இருந்த போயர்கள் சுய ஆட்சி தங்களுக்குக் கொடுபடவேண்டுமென்று போருக்கெழுந்தனர். இது முதற் போயர் யுத்தமாகும். பிரித்தானியர் இரு யுத்தங்களிலும் தோற்கடிக்கப்பட்டனர். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த கிளாட்ஸ்ரன் போயர்களுக்குச் சுய ஆட்சி



RangaRakes Tamilnavarasam.com

வழங்கவேண்டுமென விரும்பி 1881ல் அதை வழங்கினான். அந்நிய நாடுகளோடு போயர்கள் ஒப்பந்தம் செய்யின் அதைத் தடுக்கப் பிரித்தானியாவுக்கு அதிகாரமுண்டென்றும், கட்டுப்பாடில்லாத வர்த்தகஞ் செய்யலாமென்றும், ஐரோப்பியர் எவ்விடத்திலும் வசிப்பதற்கு இடையூறுகளிருக்கக்கூடாதென்றும் சுய ஆட்சி வழங்கும்போது குறிப்பிடப்பட்டது.

இதன்பின் போல்குரூக்கர், செசில்ரோட்ஸ் என்னும் வேற்றுமைப்பட்ட இலட்சியங்களை யுடைய இருவர் ஆபிரிக்காவின் அரசியல் அரங்கிற் தோன்றினர். குரூகர் ஒருபோயர் விவசாயியின் மகனாவன். திடசாலியாகிய அவன் பதின்மூன்றாவது வயதிலேயே சூலுக்களோடு நடத்தப்பட்ட சண்டையிற் பங்குபற்றினான். தனது கூட்டத்தினரை வழி காட்டுவதற்காகக் கடவுளாற் தெரிந்தெடுக்கப்பட்ட தீர்க்கதரிசியென அவன் தனக்குள் நினைத்திருந்தான். தென் ஆபிரிக்காவில் சிறந்த ஒருவனாக விளங்கிய அவன் குடியரசு அரசாங்கத்துக்குத் தலைவனாகத் தெரியப்பட்டான் (1883). தென் ஆபிரிக்கா முழுவதையும் போயர் இராச்சியமாக்க வேண்டுமென மனத்திற் துணிவுகொண்டான்.

செசில்ரோட்ஸ் என்னும் ஆங்கிலேயன் ஆரோக்கியமின்மை காரணமாகச் சிறுவயதிலேயே ஆபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டான். அவன் பிரித்தானிய சாம்ராச்சியத்தில் நம்பிக்கையுடையவனாகையால் பிரித்தானியருடைய செல்வாக்கை நன் நம்பிக்கைமுனை தொடங்கி வடக்கே கெய்ரோ வரையும் பரப்புவதில் முயற்சிசெய்தான். தென் ஆபிரிக்கா என்ற பெரும் இராச்சியத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அதில், போயர்களும் பிரித்தானியரும் ஒன்று சேரவேண்டுமென்றும் கொள்கைகளை, உடையவனாயிருந்தான். வைரச் சுரங்கச் சொந்தக்காரனாய்ப் பெரும் பொருளை ஈட்டினான். பின்பு திரான்ஸ்வாலுக்கு வடபாகத்திலுள்ள பகுதிகளிற் குடியேற்ற நாடொன்றை ஸ்தா



பித்ததினால் அதற்கு றொடீசியா என்றபெயர் வழங்கலாயிற்று. இது திரான்ஸ்வாலிலுள்ள போயர்களுக்குத் தடையாயிருந்தது. திரான்ஸ்வால் நிலத்திற் பொன் விளை நிலங்கள் காணப்பட்டமையால் பல ஐரோப்பிய சுரங்க வேலைக்காரர்கள் வந்தனர். யோகானஸ்பர்க் என்ற பட்டணமும் விரைவிற் தோன்றியது. அந்நியருடைய வருகையை வெறுத்த போயர்கள் குரூகர் என்ற தலைவனின் கீழ் அரசியல் அந்நியருக்குப் பங்கை யளிக்க மறுத்தனர். அந்நியர்கள் கிளர்ச்சியை யுண்டுபண்ணினர். அந்நியரில் ஒரு பகுதியினர் ஆயுதபாணிகளாய்த் திரான்ஸ்வாலுக்குள் நுழைந்தமையினாற் போயர்கள் அதிக சீற்றங் கொண்டனர். செசில்ரோட்ஸ் அந்நியருக்கு உதவிசெய்வதாக வாக்களித்தமையால் டாக்டர் யேம்சன் என்ற பாதிரியின் தலைமையின் கீழ் 600 போர் வீரர்களை அனுப்பினான். திரான்ஸ்வாலின் எல்லைப்புறத்தைக் கடந்ததும் போயர்களால் அவன் தோற்கடிக்கப் பட்டதால் அவன் சரணாகதியடைய நேரிட்டது. அந்நியர்கள் ஆங்கிலேயரின் உதவியைக் கோரினர். பின் குரூகரின் தலைமையில் போயர் குடியேற்ற மக்கள் போருக்கெழுந்தனர் (1899). இதுவே இரண்டாம் போயர் யுத்தமாகும். ஜேர்மனி, ஒல்லாந்து, பிரான்சு பிரித்தானியாவைக் கண்டித்தன. ஜேர்மன் சக்கிராதிபதியான கெய்சர் உவில்லியம் முன்பு யேம்சனுக்கெதிரே போயர் பெற்ற வெற்றியைப் பற்றி பவுல் குரூகருக்குச் சந்தோஷச் செய்தி அனுப்பினான். ஆரம்பத்தில் வெற்றி பெற்ற போயர் முனை அவர்களுக்கு உதவிபுரிய முன் வரவில்லை; அவர்கள் காத்திருந்த வண்ணம் ஐரோப்பிய நாடுகளும் உதவி புரியவில்லை; ஆங்கிலேயர் பக்கத்தில் கிச்னர்பிரபுவும், றொபேட்ஸ் பிரபுவும் போரை நடத்தினர். கடும் போர் நடந்தபின் திரான்ஸ்வால், ஒரேன்ஸ் நாடு ஆகிய போயர் குடியரசுகள் கைப்பற்றப் பட்டன. 1902-ல் சமாதான உடன் படிக்கை எழுதப்பட்டது. இதன்

RangaRakes Tamilnavarasam.com

பின்னாற் போயர்களுடைய தலைவர்களாகிய போத்த சிமட்சு மற்றும் பலரும் பிரித்தானியரோடு சிநேகித முறையில் ஐக்கியமாக நடந்து கொண்டனர். ஆகையால் 1907ல் இரு குடியரசு நாடுகளுக்கும் பொறுப்பாட்சி அளிக்கப்பட்டது. நேத்தாலுக்கும் அதேவிதமான அரசியற் பொறுப்பு அளிக்கப்பட்டமையால் தென் ஆபிரிக்காவில் 4 சுதந்திர ஆட்சி பெற்ற நாடுகள் விளங்கின. அவைகள் ஒன்று சேர்ந்து 1909ல் சமஷ்டி அரசாங்கத்தை ஸ்தாபித்தனர். அந்தச் சமஷ்டி அரசாங்கத்துக்குப் போத்தாவே முதன் மந்திரியானான். முதலாம் உலக யுத்தத்தில் ஆபிரிக்காவில் ஜேர்மனியருக்கிருந்த தென்மேற்காபிரிக்கா, கிழக்காபிரிக்காவோடு சண்டை செய்து வெற்றிபெற்றது. அதேமாதிரி இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்ற பொழுது ஆபிரிக்க துருப்புகள் அபிசீனியாவிலும் வட ஆபிரிக்காவிலும் இத்தாலியருக் கெதிரே போர்புரிந்தனர். யுத்தம் முடிந்தபின் நடந்த தேர்தலில் சிமட்சினுடைய கட்சி தோல்வியுற்றது. பின்பு மாலன் பிரதம மந்திரிப் பதவியேற்றுக் குடியேற்ற வாசிகளின் முன்னேற்றத்திற்கு வேண்டிய நன்முயற்சிகள் செய்து வந்தார்.

தென் ஆபிரிக்க ஐக்கிய நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றின. ஒல்லாந்து தேசத்துக் குடியேற்ற வாசிகளுக்கும் பிரித்தானிய குடியேற்ற வாசிகளுக்கு மிடையிலுள்ள சச்சரவு ஒரு பிரச்சினையாகும். குடியேறிய இந்தியத் தொழிலாளரின் பிரச்சினை இன்னுமொன்றாகும். சுதேசவாசிகளாகிய கறுப்புச் சாதியாரின் பிரச்சினை மற்றொன்றாகும். மாலனின் அரசாங்கம் தென் ஆபிரிக்காவிலுள்ள கறுப்பு நிறத்தினரை வெள்ளைக்காரர் ஆதிக்கத்தின் கீழடக்கி, நடத்த நிற்கின்றது. இது வர்ணதுவேஷமாகும். சாதிக்கேற்ப மக்களைப் பிரித்து ஒவ்வொரு சாதியினரும் தத்தம் முன்னேற்றத்திற்காக உழைக்க விடுவதே இக் கொள்கையின் நோக்கமாகும்.

அயர்லாந்தும் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் சுதந்திர நாடுகளிலொன்றாகும். பல நூற்றாண்டுகளாக அயர்லாந்து ஆங்கிலேயரால் நியாயமற்ற வழியில் நடத்தப்பட்டது. அதனால் அயர்லாந்து மக்களுக்கு ஆங்கிலேயரில் வெறுப்புண்டானது. 1800ல் அயர்லாந்து பிரித்தானியாவுடன் சேர்க்கப்பட்டபின் அயர்லாந்து மக்கள் தங்களுக்குத் தனிப்பட்ட ஒரு பாராளுமன்றம் கொடுக்கப்படவேண்டுமென்று வாதாடினர். இவ் வெண்ணத்தைப் பூர்த்தியாக்குவதற்கு அவர்கள் பல கிளர்ச்சிகளை உண்டாக்கிய பொழுதும் பிரித்தானியா அதற்குச் சம்மதிக்கவில்லை. வறுமையினால் பீடிக்கப்பட்ட அயர்லாந்து மக்களுடைய நிலையைத் திருத்தும் நோக்கத்துடன் பல சட்டங்கள் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. முதலாம் உலகயுத்தம் தொடங்குவதற்கு முன்பாக சின்பீன என்ற கட்சி தோன்றிப் புரட்சியை யுண்டாக்க எத்தனித்தது. போர் முடிவுறுங் காலத்தில் எற்பட்ட புரட்சியைக் கடுமையான முறையினால் அடக்கினர். 1921ல் அயர்லாந்து மக்கள் விரும்பிய சுய ஆட்சியைக் கொடுக்கப் பிரித்தானியா எண்ணங் கொண்டு வடபாகத்திலுள்ள அல்ஸ்டர் என்ற பிரிவைத் தவிர ஏனைய பகுதிக்குச் சுதந்திர ஆட்சியை யளித்தனர். அப்பகுதி பிரித்தானியாவின் ஓர் பகுதியாக இருந்து வந்ததினால் பிரித்தானிய பாராளுமன்றம் "பெரிய பிரித்தானியா, அயர்லாந்து"ப் பாராளுமன்றமென அழைக்கப்படுகிறது. சுதந்திர ஆட்சியைப் பெற்றபகுதி சுதந்திர அயரிஷ் நாடென விளங்குகிறது. செல்வ விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வேண்டிய முயற்சிகளை அப்பகுதியிலுள்ள மக்கள் செய்து வந்தனர். 1932ல் டீவலரா என்பவர் அதிகாரத்துக்கு வந்தவுடன் பிரித்தானியருக்கும் அயர்லாந்துக்கு மிடையிலுள்ள ஒற்றுமை குறைந்தது. அதனால் பிரித்தானியா அயர்லாந்து நாட்டு உணவுப் பொருட்களில் அதிகமான வரியை விதித்தனர். 1938 வரையும் இந்நிலை ஏற்பட்டது. அவ்வருடத்தில் டீவலரா இங்கி



RangaRakes

Tamilnavarasam.com

லாந்துக்குச் சென்று பிரித்தானிய அரசாங்கத்துடன் கலந்துபேசி மனஸ்தாபத்தைக் குறைத்து வைத்தார். 1939ல் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியபொழுது முழு அயர்லாந்தையும் பிரிவினையில்லாது ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்று கேட்டபொழுது பிரித்தானியர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் யுத்தத்தில் அதிகம் பங்கு பற்றவில்லை. 1948ல் நடந்த பொதுத் தேர்தலில் டீவலரா பதவியை இழந்தார்.

இங்கிலாந்துக்கும் சாம்ராச்சிய நாடுகளுக்குமிடையேயுள்ள வர்த்தகத்தொடர்பே பழைய "சாம்ராச்சியக் கொள்கை"க்கு அடிப்படையான காரணமாகும். ஆனால் ஆடம்சிமித் வெளியிட்ட பொருளாதாரக் கொள்கைகள், சாம்ராச்சிய நாடுகளில் நடந்தும் வர்த்தகம் மூலம் அதிகமான வருவாயை, தாய்நாடு எதிர்பார்த்திருப்பது பிழையென உணரச் செய்தன. அந்நாடுகளிலிருந்து தாய்நாட்டுக்கு நட்டம் ஏற்படுவதல்லாது நயமில்லையென அவர் குறிப்பிட்டார். ஆகையால் குடியரசு நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமக் கேற்றவாறு வர்த்தகமோ ஏனைய விஷயங்களோ நடத்துவதற்குத் தாய்நாடு ஊக்கப் படுத்த வேண்டுமென்ற கொள்கை பரவியது. பின்பு கனடாவைப்பற்றி டேகாம்பிரபு வெளியிட்ட அறிக்கை சாம்ராச்சியக் கொள்கையைத் தாய்நாடு மாற்றியமைக்கச் செய்தது. ஒவ்வொரு குடியரசு நாட்டிலும் அதனுடைய அரசாங்கத்தில் அந்நாட்டு மக்களுக்குக் கூடிய செல்வாக்கை யளிப்பதனாலும், அந்நாட்டு விஷயங்களில் தாய்நாட்டின் அதிகாரம் குறைப்பதினாலும், அந்நாட்டிற் சமாதானம் நிலவச்செய்யலா மென்பது வலியுறுத்தப் பட்டது. இது சாம்ராச்சிய நாடுகளோடு தாய்நாடு வைத்திருக்கக் கூடிய தொடர்பை விளக்கக்கூடிய சாதனமாயமைந்தது. சாம்ராச்சிய நாடுகளின் தொடர்பையும் ஒற்றுமையையும் பலப்படுத்துவதற்கு சுய ஆட்சி முறை வழங்கவேண்டு மென்று அவ்வறிக்கையிற் குறிப்பிடப்பட்டது. அவ்வண்ணமே கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்க, வட அயர்லாந்து முதலியன "டொமினியன் அந்தஸ்தைப்"ப் பெற்று நன்னிலையெய்தி யிருக்கின்றன. காலஞ்செல்லத் தாய்நாடு அதிகாரத்தைக் குறைத்ததினால், ஒவ்வொரு சாம்ராச்சிய நாடும் அந்நிய நாடுகளோடு வியாபார உறவு, அயல் நாடுகளின் உறவு பாதுகாப்பு முதலிய விஷயங்களைப் பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பைப் பெற்றன. 1931ல் நிறைவேற்றப்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் சட்டத்தின் பிரகாரம் சாம்ராச்சிய மென்ற பெயர் மறைந்து சுய ஆட்சி பெற்ற நாடுகளைக் கொண்டுள்ள "பிரித்தானிய கொம்மன் வெல்த்" என்ற பெயர் வழங்கலாயிற்று. அதன் பயனாகச் சாம்ராச்சியத்திலுள்ள நாடுகள் தாய் நாட்டோடு சம அந்தஸ்தைப் பெற்றுவிட்டன. அதனால் சட்டங்களை யுண்டாக்கவோ அல்லது மாற்றவோ அந்தந்த நாடுகளுக்கு உரிமை யுண்டன்றித் தாய் நாட்டுக்கு அந்நாடுகள் மீது சட்டமுண்டாக்கு முரிமையில்லாமற் போனது.



வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின் பின்பு அரசியல் விஷயங்களிலும் பார்க்கப் பொருளாதார விஷயங்களிற் கவனஞ் செலுத்த வேண்டியிருந்தது. "வர்த்தகமந்தம்" இங்கிலாந்தையும் சாம்ராச்சிய சுதந்திர நாடுகளையும் அதிகமாகத் தாக்கியதால் வர்த்தகத்தை நன்னிலைப் படுத்தும் நோக்கத்துடன் 1932ல் ஒட்டாவாவில் ஒரு சாம்ராச்சிய சலுகை மகாநாடு கூடியது. அதில் சாம்ராச்சிய நாடுகளில் வியாபார உறவை வளர்ப்பதற்கு வேண்டிய வழிகள் வகுக்கப்பட்டன. ஒவ்வொரு சாம்ராச்சிய நாட்டிலும் மக்கள் அந்நியநாட்டு வர்த்தகப் பொருட்கள் தங்களுடைய நாட்டுக்கு வராவண்ணம் பாதுகாக்க வேண்டு மென்றும், ஆனால் சாம்ராச்சிய நாடுகளுக்கிடையே சாதாரணமான பாதுகாப்புச் செய்யலாமென்றும் மகாநாட்டிற் குறிப்பிடப்பட்டது. அடுத்த 5 வருடங்களில் பொருளாதார நிலையிற் திருத்தங்காணப் பட்டவுடன் லண்டனில் ஒரு சாம்ராச்சிய

RangaRakes
Tamilnavarasam.com

சலுகை மகாநாடு (1937) நடைபெற்றது. அதில், ஒவ்வொரு சாம்ராச்சிய நாடும் ஏனைய சாம்ராச்சிய நாடுகளோடு ஒற்றுமைப்பட்ட நிபந்தனைகளுக் குட்பட்ட ஒழுங்குகள் செய்து கொள்ளலாமெனத் தீர்மானஞ்செய்யப்பட்டது. 1950ல் நடைபெற்ற மகாநாட்டில் சுதந்திரம் பெற்ற நாடுகளையுடைய சாம்ராச்சியத்துக்கு ஆங்கில மன்னர் தலைவரென எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அவ்விதமான விரிந்த மனப்பான்மையோடு தாய்நாடு ஏனைய நாடுகளின் தொடர்பையும், ஒற்றுமையையும் நிலைநாட்டி வருகின்றது.

### வினாக்கள்

1. பிரித்தானிய சாம்ராச்சியத்தில் சுதந்திர ஆட்சிபெற்ற நாடுகள் எவை?
2. கனடா சுதந்திர ஆட்சிபெற்ற வரலாற்றை எழுதுக.
3. அவுஸ்திரேலியாவில் அந்நியர் குடியேற்றம் எப்போது ஏற்பட்டது? சுதந்திர ஆட்சியை எவ்வாறு பெற்றது?
4. தென் ஆபிரிக்காவில் சுதந்திர ஆட்சி பெறுவதற்கு முன்னிருந்த இடர்ப்பாடுகளென்ன?
5. அயர்லாந்தில் எப்போது சுதந்திர உணர்ச்சி உண்டானது? அது சுதந்திர ஆட்சியைப் பெறுவதற்கு என்ன கஷ்டங்கள் இருந்தன?

# இருபதாம் அத்தியாயம்

## பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளின் சாம்ராச்சியப் பெருக்கம்

1815-ம் ஆண்டுக்குப்பின் தேசீய சுதந்திரக்கொள்கைகள் நாளடைவில் ஐரோப்பாவில் வெற்றி பெற்றதும் ஐரோப்பிய நாடுகள் உலகத்தின் ஏனைய பகுதிகளில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்தன. புதிய கைத்தொழில்களை நடத்துவதற்குவேண்டிய விளைபொருட்களைப் பெறக்கூடிய நாடுகளைதங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டுவர ஒவ்வொருநாட்டினரும் அவாவுற்றனர். அதுவுமல்லாமல் அந்நாடுகளில் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்து வர்த்தகத்தை விருத்தி செய்யலாமெனவும் எண்ணினர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற் தோன்றிய புதியநாடுகள் தங்கள் செல்வாக்கைப் பரப்புவதற்கு மூன்று பெரும் சாம்ராச்சியங்கள் தடையாயிருந்தன. அவை ருஷிய, அமெரிக்க, பிரித்தானிய சாம்ராச்சியங்களாம். இம் மூன்றையும் போன்ற புதிய ஐரோப்பிய நாடுகளும் சாம்ராச்சியப் பெருக்கமடைய முயற்சித்தமையால் அவைகளினிடையே பெரும் போட்டி உண்டானது. குடியேற்றங்களை ஸ்தாபிக்கும் முயற்சி அதிவேகமாய் நடந்தமையால் ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்குள் வசதியான பகுதிகளெல்லாம் வலிமையுள்ள ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்திற் கொண்டுவரப் பட்டமையால் பூமியின் எல்லாப் பாகங்களிலும் அவைகளுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டது. ஆரம்பத்தில் பிரித்தானியர் பராமுகமாயிருந்த பொழுதிலும் தாங்கள் வர்த்தகம் நடத்திய நாடுகள் யாவும் ஏனைய ஐரோப்பிய இராச்சியங்களுடைய கையிற் சிக்கிக்கொள்கின்றனவென அறிந்தவுடன், அந்நாடுகளைப் பங்கீடு செய்யும் முயற்சியிலீடுபட்டனர். அநாகரிகமற்ற மக்கள் வசித்த உஷ்ணவலயப் பகுதிகளிலுள்ள நாடுகளே அவர்கள் கைப்பற்றிய நாடுக



RangaRakes
Tamilnavarasam.com

ளாகும். ஆபிரிக்காக் கண்டத்தில் முன்னொருபோதும் போயறியாத பகுதியிலேயே அவர்கள் கவனஞ் சென்றது.

ஆபிரிக்காவின் வடபகுதியிலுள்ள மத்தித்தரைக் கடலுக்கருகாமையிலுள்ள நிலப்பரப்பு பழைய காலந் தொட்டு ஐரோப்பாவோடு தொடர்புடையதாக இருந்து வந்தது. இப்பகுதி அக்கண்டத்தின் பெரும் பகுதியிலிருந்து சகாராவனாந்திரத்தினால் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இப் பகுதியிற் பிரான்சு அதிக கவனத்தைச் செலுத்தி 1830ன் பின் சிலவாண்டுகளுக்குள் அல்ஜீரியாவைக் கைப்பற்றியது. நெப்போலியனுடைய காலந் தொட்டு எகிப்தின் அரசியல் விஷயங்களிலும் அந்நாடு பிரதானமான விருப்பங்காட்டியது. 1870ல் ஜேர்மனியால் தோற்கடிக்கப்பட்டபின் பிரன்சு, இழந்துபோன செல்வாக்கையும், கௌரவத்தையும் மீண்டும் பெறுவதற்காக வட ஆபிரிக்காவிற் கவனஞ் செலுத்தத் தொடங்கியது 1881ல் தூனிசைக் கைப்பற்றியது. அதனால் இத்தாலி ஜேர்மனியோடு சேரநேர்ந்தது.

ஆனால் ஆபிரிக்காவின் உஷ்ண பிரதேசத்திற்றான் ஐரோப்பிய புது இராச்சியங்களின் போட்டி அதிவேகமாகக் காணப்பட்டது. பெல்ஜியத்தின் அரசனான லியப்போல்டு கொங்கோ நதிப் பிரதேசத்தைத் தன்வசமாக்கினான் (1979). கொங்கோநதிக்கு வடக்கேயுள்ள பிரதேசத்தில் பிரென்சு அரசாங்கத்தினர் தங்கள் உரிமையை நிலைநாட்டினர் (1880). இதற்கிடையில் போத்துக்கீசர் அப்பகுதிகளிற் தங்களுக்குப் பழையயுரிமையுண்டென்று ஆபிரிக்காவில் அத்திலாந்திச் சமுத்திரக்கரை தொடக்கம் இந்து சமுத்திரக்கரை வரையுமுள்ள முழுப்பகுதியும் தங்களுடையதென வாதாடினர். இவ்வண்ணமாக ஐரோப்பிய வல்லரசுக்கிடையில். சச்சரவுகள் ஏற்பட்டன.

1815-ம் ஆண்டுதொட்டு ஆபிரிக்காவின் மேற்குப் பாகத்திலுள்ள செனீகல் ஆற்றுப் பிரதேசத்தை



பிரான்சியர் கைப்பற்றியதால் அவர்களுடைய ஆதிக்கம் மேற்குச் சூடான் வரையும் பரவியது. செழிப்புள்ள அவ்வுஷ்ணப் பிரதேசம் ஒரு பெரிய இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்கு பிரான்சுக்குப் பெரிய வசதியை அளித்ததெனலாம். ஆகையால் அங்கங்கிருந்த சுதேசச் சிற்றரசர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டமையால் கரையோரப் பகுதிகளிலிருந்த பிரித்தானிய வர்த்தகர்கள் திகிலடைந்தனர். தங்களுடைய ஆதிக்கமுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்தனர். இத்தாலிய அரசாங்கத்தாரும் தங்கள் செல்வாக்கை நாட்டும் நோக்கத்துடன் செங்கடலினருகாமையிலுள்ள எரித்திரியா என்னும் பகுதியைத் தங்கள் வசப்படுத்தினர்.

உஷ்ணப்பிரதேசப் பொருட்களைப் பெறுவதற்கு ஆபிரிக்காவிலுள்ள நாடுகள் பிரதானமென்பதையுணர்ந்த ஜேர்மனிய வியாபாரிகள் தென்மேற் காபிரிக்காவில் பரந்த பிரதேசத்தை தங்களுடைய வசமாக்குவதற்காகச் சுதேச அதிகாரியுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டனர். ஆனாற் பிரித்தானிய அரசாங்கம் அவர்களுக்கு ஒரு எதிர்ப்புங் காட்டவில்லை. ஆபிரிக்காவில் தங்கள் செல்வாக்கைப் பரப்புவதற்குப் போட்டியிட்ட ஐரோப்பிய வல்லரசுக்கிடையே விவாதங்களேற்படாமற் தடுப்பதற்காக 1884ல் பேர்லின் நகரத்தில் ஒரு மகாநாடு கூடியது. வருங்காலத்தில் சாம்ராச்சிய வேட்கையுடைய ஐரோப்பிய நாடுகள் அனுசரிக்க வேண்டிய சில கொள்கைகளை விபரித்ததோடு, இதுகாறும் ஒவ்வொரு வல்லரசும் கைப்பற்றிய பகுதிகள் அவையவைக்கே யுரியன வெனவும் அம்மகாநாட்டிற் தீர்மானஞ் செய்யப்பட்டது. அதன்பின் போரில்லாது ஐரோப்பியர் ஆபிரிக்காவின் பெரும்பகுதியைப் பங்கீடு செய்யத் தொடங்கினர். இருபது வருடங்களுக்குள் அபிசீனியா, லிபீரியா, திறிப்போலி, மொறொக்கோ எனும் பகுதிகளைவிட ஆபிரிக்காவின் ஏனைய பகுதிகள்

RangaRakes
Tamilnavarasam.com

ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்துக் குட்பட்டன. 1886ன் பின் பிரித்தானியா ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளிலும் பார்க்க ஆபிரிக்காவில் கூடிய சிரத்தை எடுத்தது. பிரித்தானிய வர்த்தக கூட்டத்தினர் சிலர் கேனியாப்பகுதியிலுள்ள அதிகாரிகளோடு ஒப்பந்தஞ் செய்து பிரித்தானிய கிழக்காபிரிக்காச் சங்கத்தையுந் தாபித்தனர். ஆனால் ஜேர்மனி அந் நடவடிக்கைகளுக்கு ஒரு எதிர்ப்புங் காட்டவில்லையெனக் கூறிய பின்தான், பிரித்தானிய அரசாங்கம் அவர்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதாக அபிப்பிராயந் தெரிவித்தது. 1886ல் ஆபிரிக்காவில் பிரித்தானியாவுக்கும் ஜேர்மனிக்குமுள்ள பகுதிகளின் எல்லை வகுக்கப்பட்டது. தென்மேற்கு ஆபிரிக்கா, தொகோலாந்து, கீழ் ஆபிரிக்கா, கமறூன் முதலியன ஜேர்மனிக்குரியவையென பிரித்தானியா ஏற்றுக்கொண்டது. ஆபிரிக்காவின் எல்லாப் பகுதிகளிலும் பிரித்தானியாவின் செல்வாக்கிருந்தமையால் ஆபிரிக்காவின் குடியரசை தாபிக்கமுயன்ற ஐரோப்பிய வல்லரசுகளாகிய ஜேர்மனி, பிரான்சு, போத்துக்கல், இத்தாலியோடு சிநேகமுறையில் ஒப்பந்தஞ் செய்து கொண்டன. கீழ் ஆபிரிக்காவிலும் யுகந்தை என்னும் இரு பகுதிகளிலும் பிரித்தானியரின் செல்வாக்கு அங்கீகரிக்கப்பட்டது. பிரான்சோடு ஜேர்மனி செய்த ஒப்பந்தத்தின் பயனாக இருபகுதியாரின் செல்வாக்கிலுள்ள பகுதிகளின் எல்லை வகுக்கப்பட்டது. ஜேர்மனி 1000,000 சதுர மைல் விஸ்திரனமுள்ள நிலப்பரப்பையுடைய இராச்சியத்தைப் பெற்றது.

பிரித்தானியாவும், பிரான்சும் தத்தமக்குரிய ஆதிக்கமான பகுதிகளின் எல்லைகளை வகுப்பதில் முரண்பட்டனர். 1885ல் மடகாஸ்கர் என்னும் பெருந்தீவு தங்களுடைய பாதுகாப்புக் குட்பட்டதெனப் பிரான்சியர் கூறினர். ஆனால் பிரித்தானிய வர்த்தகர்களும், பாதிரிமார்களும் அத்தீவில் வெகுகாலமாக முயற்சி செய்து வந்தனர். ஆனால் 1865ல் அத்தீவின் சுதந்திரத்தை



ஏற்றுக் கொள்வதாக இருவல்லரசுகளும் சம்மதித்துக் கொண்டனராகையால் பிரான்சின் செய்கை இருபகுதியாருக்குமிடையிற் பிரிவினையை யுண்டாக்கியது. வடமேற்காபிரிக்காவிலும் பிரான்சியர் மத்தித் தரைக் கடல் தொடக்கம் கேனியா வரையுமுள்ள பிரதேசத்தை தங்களுக்குரியதென வாக்கிக் கொண்டமையால் பிரித்தானியருக்கு அது தடையாயிருந்தது. நைகர் நதிப் பிரதேசத்திலும் இருபகுதியாருக்கு மிடையில் முரண்பாடு ஏற்பட்டது. 1890ல் இருபகுதியாருக்கு மிடையில் ஒரு ஒப்பந்தஞ் செய்யப்பட்டது. அதன் பயனாக மடகாஸ்காரில் பிரான்சியருடைய பாதுகாப்புரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் நைசீரியாப் பகுதியில் பிரித்தானியரின் ஆதிக்கம் பெலமடைந்தது.

சூடானின் மத்திய, மேற்குப் பகுதிகளைக் கைப்பற்றியபின் பிரான்சு கிழக்குச் சூடானையும் செங்கடல் எல்லைவரையும் தம் வசமாக்க எத்தனித்தது. நைல் நதிப் பிரதேசம் பிரித்தானியரின் ஆதிக்கத்திற் கொண்டுவரப்பட்டது. ஒரே தொடர்பான 4000000 சதுரமைல் விஸ்தீரண முள்ள இராச்சியத்தைப் பிரான்சு ஸ்தாபித்தது. இத்தாலி செங்கடலுக்கருகாமையில் எரித்திரியாக் குடியேற்றத்தையும் கிழக்குக் கரைப் பகுதியிலுள்ள சோமாலிலாந்தையும் தம் வசமாக்கியது. இத்தாலியரின் செல்வாக்கிலிருந்த இருபகுதிக்குமிடையிலுள்ள பிரதேசம் ஆங்கிலேயரின் வசமானது. பின்பு அபிசீனியாவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அந்நாட்டுச் சக்கரவர்த்தியோடு இத்தாலி சண்டை செய்து அதிற் தோல்வியுற்று அதைக்கைப் பற்றும் எண்ணத்தை நீக்கியது. ஆபிரிக்காவில் அபிசீனியா ஒன்றே சுதந்திரத்தைக் காப்பாற்றியது.

ஐரோப்பிய வல்லரசுகளின் செல்வாக்குச் செறிந்ததன் பயனாக அங்கே அநேக மாற்றங்கள் தோன்றின. பல பகுதிகளிலும் ஒழுங்கு முறையும் அர

RangaRakes

Tamilnavarasam.com

சாங்க நிர்வாகமும், தாபிக்கப் பட்டன. அநாகரிகமற்ற சுதேச சாதியினரிடையே காணப்பட்ட இடையறாச் சச்சரவுகள் நீங்கின. அடிமை வியாபாரம் முற்றாக ஒழியாதிருந்த பொழுதிலும் அது வெளியரங்கமாக நடத்தப்படவில்லை. அநாகரிகமற்ற பழக்கவழக்கங்கள் நீங்கின. தற்கால போக்குவரத்து வசதிகள் காணப்பட்டன; தெருக்களும், புகையிரத வீதிகளும், அமைக்கப்பட்டன. பாடசாலைகளும், தேவாலயங்களும் தாபிக்கப்பட்டன. உஷ்ண தேசங்களிலுள்ள நோய்களுக்கு விஞ்ஞான அறிவு நிவாரண மளித்தது. ஆபிரிக்காவின் அநாகரிக மற்ற சாதியினர் சமாதானமுறையில் வேலைசெய்து சீவனஞ் செய்யும் பழக்கத்தைப் பழகிக் கொண்டனர். ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்திலுள்ள குடியேற்றப் பகுதிகளிலும் பார்க்க ஆங்கிலேயரின் குடியேற்றப் பகுதிகளிலுள்ள நிர்வாகம் சிறந்ததெனலாம். நோக்கம் எவ்வகைப் பட்டதாயினும், கையாண்ட முறைகள் எவ்வகைப் பட்டதாயினும், ஐரோப்பியர் தங்கள் ஆதிக்கத்தை ஆபிரிக்காவில் அனுகூலமாகப் பரப்பியது ஒருபெருஞ் செயலாகும்.

ஐரோப்பிய நாடுகளின் சாம்ராச்சியப் பெருக்கம் ஆபிரிக்காவோடு மாத்திரம் நில்லாது கீழ்த்திசை நாடுகளையும் தாக்கியது. மலாய்க் குடாநாடு பிரித்தானியரின் பாதுகாப்பை ஏற்றுக் கொண்டது. அதற்குக் கிழக்கேயுள்ள தொங்கிங்கு, அனம், கொச்சின் சீனா முதலிய பகுதிகள் பிரான்சின் ஆதிக்கத்திற் கொண்டு வரப்பட்டன. பின்பு சீயம் என்ற நாட்டையும் பிரான்சு கவர்ந்து கொள்ள முயற்சித்தது. ஆனால் பிரித்தானியாவும், பிரான்சும் 1896ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சீயம் ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. மலாய்க் குடாநாட்டுக் கருகாமையிலுள்ள தீவுகளில் ஒல்லாந்தரின் செல்வாக்குப் பரவியிருந்த பொழுதிலும் போனியாதீவின் வடபகுதி பிரித்தானியருடைய பாது காப்பிற் கொண்டு வரப்பட்டது.



பசிபிக் சமுத்திரத்திலிடையிடையே பரந்து கிடந்த தீவுகளும் சாம்ராச்சிய வேட்கையையுடைய ஐரோப்பிய நாட்டவர்களின் கண்களைக் கவர்ந்தன. பிரித்தானியர் அப்பகுதிகளில் தலையிட விரும்பாமலிருந்த போதிலும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் தூண்டுதலினாலும், ஜேர்மனி அப்பகுதிகளிற் சிரத்தை காட்டினதினாலும், அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. புதிய கினியாவின், வட பகுதியை ஜேர்மனி தம் வசமாக்கிய பொழுது தென் பகுதியைப் பிரித்தானியா கைப்பற்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடைதற்குமுன் பிரித்தானியர் பசிபிக் சமுத்திரத்திலுள்ள சிறுத் தீவுகள் பலவற்றைத் தம்வசமாக்கினர். 1898ல் பிலிப்பைன் தீவுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆதிக்கத்துளமர்ந்தன.

கீழ்த்திசை நாடுகளில் வர்த்தகஞ் செய்வதற்கு சிங்கபூர், பினங்கு வசதியான துறைமுகங்களாகக் காணப்பட்டன. அவைகளைவிட கொங்கோங்கும் சிறந்த துறை முகமாகும். பசிபிக் சமுத்திரத்தில் பிரித்தானியர் பெற்ற நாடுகளும், துறைமுகங்களும் அவர்களுக்குப் பெரும் பயனை அளித்தன. பிரதானமாக மலாய் நாட்டிலுள்ள தகரச் சுரங்கங்களும், பரந்த றப்பர் தோட்டங்களும் பிரித்தானியருக்கு அதிக ஊதியத்தைக் கொடுத்தன. மக்களும், செல்வமும் சீரும் பெற்று வாழ்ந்து வந்தனர். இந்து சமுத்திரத்தின் முத்துப் போன்ற இலங்கைத் தீவு ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்குட்பட்ட காலந்தொட்டு படிப்படியாக செல்வங்கொளிக்கும் நாடாக விளங்கியது. கோப்பி, தேயிலை, றப்பர் முதலிய வர்த்தகப் பொருட்கள் அத்தீவிற் செழிப்படைந்தமையால் நாட்டின் வருவாய் கூடியது. ஆயிரக்கணக்கான தென்னிந்தியர் வந்து அத் தோட்டங்களில் வேலைசெய்தனர். இலங்கை கல்வியிலும் நாகரிகத்திலும் முன்னேறிக் கொண்டிருந்தமையால் அரசாங்க பொறுப்பாட்சியைப் படிப்படியாகப் பெற்றது.

RangaRakes Tamilnavarasam.com

1869ல் பிரான்சின் முயற்சியால் வெட்டப் பட்ட சுயேஸ் கால்வாய் இந்தியாவுக்குச் செல்வதற்கு கிட்டியதும், பிரதானமானதுமான பாதையாய் இருந்தது. எகிப்தை ஆண்டுகொண்டிருந்த கேடிவ் இஸ்மேயில் ஐரோப்பிய தனவந்தர்களிடமிருந்து பெருந்தொகையான கடனை வாங்கினான். அதனால் 13 வருடங்களுக்குள் 3000,000 பவுணிலிருந்து 100,000,000 பவுண் வரையில் கடன் அதிகரித்தது. அவ்வண்ணம் பெற்ற கடனிலொரு பகுதியை தெருக்கள், புகையிரத வீதிகள் அமைப்பதிற் செலவழித்தான். மிகுதியான பணம் வீண்செலவு செய்யப்பட்டது. 1876 வரையில் தான் பெற்ற கடனைச் செலுத்த சக்தியற்றவனாயிருந்த படியால் கடன் கொடுத்த ஐரோப்பியர் ஒன்றுசேர்ந்து எகிப்தின் பிரதானமான வருவாயிலிருந்து வட்டியைப் பெறுவதற்கு ஒழுங்கு செய்தனர். அதுவுமல்லாமல் எகிப்தின் பணநிலையை திருத்தும் நோக்கத்துடன் பிரான்சும் பிரித்தானியாவும் தலையிட்டதைக் கண்ட அரசன் அவர்களுக்கு எதிர்ப்புக் காட்டினான். அதனால் அவர்கள் சுல்தானுடைய உதவியைக்கொண்டு அவனை இராச்சியத்தினின்று நீக்கி அவனது மகனும் இளவரசனுமான நியுபிக்கைக் "கேடிவ்" ஆக நியமித்தனர். அதன்பயனாக அராபிபாஷாவின் தலைமையின் கீழ் எகிப்தியபடை பெரும் குழப்பத்தை உண்டாக்கியது. பல ஐரோப்பியர் கொல்லப்பட்டதினால் பிரித்தானிய போர்க்கப்பல்கள் சில அலெக்சாந்திரியாவுக்கு அனுப்பப்பட்டன. பிரான்சு தொடக்கத்தில் ஊக்கம்காட்டி பின்பு எதுவுஞ் செய்யாது விலகிக்கொண்டது. தெல கெபீர் என்ற சண்டையில் அராபிப்பாஷா தோற்கடிக்கப்பட்டான் (1882). அராபிப்பாஷாவும் அவனுடைய தோழர்களும் கைதி செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். பின்பு சேர் எவலின் பேரிங் என்பவர் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதான தூதனாகவும், புதிய கேடிவுக்கு புத்தி கூறுவதற்காகவும் எகிப்துக்கு அனுப்பப்பட்டான். எகிப்தின் அரசாட்சி முறை முற்றாகச் சீர்திருத்தப்பட்டது.



எகிப்துக்குத் தெற்கேயுள்ள சூடானில் 'மாதி' என்னும் சமயப்பித்தனொருவன் இஸ்லாமியக் கிளர்ச்சியொன்றை உண்டாக்கினான். அங்கிருந்த பலகூட்டத்தினரைத் தோற்கடித்து வீரனாக விளங்கினான். சூடானில் இருந்த எகிப்தியரின் படையும், எகிப்துநாடும் ஆபத்தான நிலையிலிருந்தது. ஆகையால் 10000 வீரர்களைக் கொண்ட எகிப்தியப் படையுடன் பிரித்தானிய சேனைத் தலைவன் சென்று மாதி உண்டாக்கிய கிளர்ச்சியை அடக்கச்செய்த சண்டையில் அச்சேனை அழிக்கப்பட்டது. எகிப்தியப் படையுடன் வெல்லமுடியாதெனவுணர்ந்த பிரித்தானிய உத்தியோகத்தர் சூடானைக் கைப்பற்றும் நோக்கத்தை விட்டு எகிப்தையே பாதுகாப்பதாகத் தீர்மானஞ் செய்தனர். ஆனால் அங்கிருந்த எகிப்தியப்படைகள் அழைக்கப்பட வேண்டுமென ஆலோசித்து கோடன் என்னும் ஆங்கிலப் படைத் தலைவனை அனுப்பினர். அவன் அங்கு சென்றதும் மாதியின் கூட்டத்தினர் காட்டுமில் அவனைக்கொன்றனர்.

இதற்கிடையில் சேர் எவலிங் பேரிங் என்பவரும் அவருடைய தோழரும் எகிப்தை நன்னிலைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிசெய்தனர். எகிப்தின் பணநிலையையுந் திருத்தி சேனைக்கும் பயிற்சியளித்தனர்; புகையிரத வீதிகள் அமைக்கப்பட்டன; பாடசாலைகள் தாபிக்கப்பட்டன; சுகாதார முறைகள் புகுத்தப்பட்டன; வைத்தியசாலைகள் தாபிக்கப்பட்டன; நீதிவழங்கும் முறை முற்றாகமாற்றியமைக்கப்பட்டது; வரிகள் குறைக்கப்பட்டன; விவசாயம் விருத்தி செய்யப்பட்டது.

பின்பு சூடானை அதனுடைய அநாகரிக நிலையினின்று திருத்தி வைக்கவேண்டியது அவசியமெனவுணர்ந்து கிச்சினர் பிரபுவின் தலைமையில் பயிற்சி பெற்ற எகிப்தியப்படையை, அதனைக் கைப்பற்றுவதற்கு பிரித்தானியர் அனுப்பினர். சூடானிலுள்ள படைகள் தோற்



RangaRakes
Tamilnavarasam.com

கடிக்கப்பட்டு அந்நாடு கைப்பற்றப்பட்டது. பிரித்தானிய உத்தியோகத்தர் பல திருத்தங்களை அந்நாட்டிலேற்படுத்த தீர்மானித்தனர். ஆரம்பத்திலேயே அடிமை வியாபாரம் முற்றாக நீக்கப்பட்டது. சுதேசிக்கூட்டத்தினருடைய சண்டைகள் ஒழிக்கப்பட்டன. விவசாயமும் வர்த்தகமும் ஊக்கப்படுத்தப் பட்டன. மதக் கொள்கைகள் யாவும் அங்கீகரிக்கப் பட்டன. பாடசாலைகளும் நீதிஸ்தலங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. குறைந்த விகிதத்துக்கு அறவிடப்பட்ட வரிகளைக் கொண்டே அவ்வேலைகள் செய்யப்பட்டன. பத்துவருடங்களுக்குள் வருமானம் பத்து மடங்கு கூடியது. எகிப்திய அரசாங்கமும் பலமடைந்தது. பிரித்தானியருடைய ஆதரவில் வளர்ந்த எகிப்தியர் பின்பு ஐரோப்பியருடைய செல்வாக்கை முற்றாக வொழித்துத் தாங்களே தங்களுடைய விஷயங்களைச் செவ்வனே நடத்த ஆரம்பித்தனர்.

ஐரோப்பியரின் செல்வாக்கு உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவியமையால் மேனாட்டு நாகரிகமும் கல்வியும் விஞ்ஞான சாஸ்திரவறிவும் பத்தொன்பதாம் நூற்றாண்டு தொட்டுப் பரவத்தொடங்கின. ஐரோப்பியரின் முயற்சியினாலேயே நாகரிகமற்ற மக்கள் வாழ்ந்த ஆபிரிக்கா சீர்திருத்தமடைந்தது. மேனாடுகளிற் காணப்படும் அரசியல்ஸ்தாபனங்கள் உலகமெங்கும் காணப்படுகின்றன. குடியேற்றத்திற்காகவோ அல்லது வர்த்தகஞ் செய்வதற்காகவோ ஐரோப்பியர் செல்லாத நாடுகளில்லை யெனலாம். பிரதானமாகப் பிரித்தானியர் தாங்கள் சென்ற இடமெல்லாம் பெரும் நன்மைகளைச் செய்திருப்பதைக் கவனிக்கலாம்.

### வினாக்கள்

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சாம்ராச்சியப் பெருக்கத்தில் வேட்கைகொண்ட ஐரோப்பிய வல்லரசுகள் யாவை?
2. ஆபிரிக்காவில் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் எப்பகுதிகளமைந்தன?



3. பிரித்தானியருக்கும் போயர்களுக்குமிடையில் நடந்த யுத்தங்களை விபரித்தெழுது.
4. ஆசியாவில் எப்பகுதிகளில் ஐரோப்பியர் தங்களுடைய செல்வாக்கைப் பரப்பினர்.
5. எகிப்தில் ஐரோப்பியர் தலையிட்டதற்குக் காரணமென்ன?
6. எகிப்துக்கு ஆங்கிலேயர் செய்த நன்மைகளெவை?
7. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய சாம்ராச்சியத்தைப் பெருப்பிப்பதற்குச் செய்த முயற்சிகளை விபரித்து எழுது.

RangaRakes
Tamilnavarasam.com

# இருபத்தோராம் அத்தியாயம்

## ஆசிய கீழ்த்திசை நாடுகள்

சீனவுக்கு வடக்குப்பக்கத்திலுள்ள அயல் நாட்டவார்கள் ருஷியராவர். ஏனைய ஐரோப்பிய சாதியினரும் கடல்மார்க்க வர்த்தகத்தின் நிமித்தம் சீனவுக்கு வந்து சேர்ந்தனர். முதலில் போத்துக்கீசரும் அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் பின்பு ஆங்கிலேயரும் அங்கு சென்றனர்.

பண்டைக்காலத்தில் நாகரிகமடைந்த சாதியருள் சீனரும் ஒருவராவர். ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களாகச் சீனரின் நாகரிகம் அவர்களுடைய சில நம்பிக்கைகளிற் தங்கியிருந்தது. சீன சக்கராதிபத்தியமே உலகத்தில் நாகரிகமுள்ள பகுதியெனவும், அது மலைகளாலும் கடலாலும் பாதுகாக்கப்பட்டிருப்பதெனவும் அவர்கள் எண்ணிக்கொண்டனர். கொன்பூசியஸ் என்பவரின் போதனைகளை அடிப்படையாகவில்லாத நாகரிகம் தகுந்த நாகரிகமல்லவெனவும் அவைகளைப் பின்பற்றி நடவாத மக்கள் அநாகரிகமுள்ளவர்களெனவும் கருதியிருந்தனர். விவசாயமே சீனருடைய நாகரிகத்தின் அத்திவாரமெனலாம். கால்வாய்களை வெட்டி நீர்ப்பாய்ச்சும் முறைகளை கண்டுபிடித்துக் ஆதிகாலந் தொட்டு அவர்கள் பயிரிடுந்தொழிலை விருத்திசெய்தனர். கைத்தொழிலை விருத்திசெய்யவோ அல்லது பிற நாடுகளோடு வர்த்தகம் நடத்தவோ அவர்கள் விரும்பவில்லை. தங்களுடைய தேவைக்குப்போதிய கைத்தொழிலையே நடத்திவந்தனர். தங்களுடைய நாட்டுக்கப்பாலுள்ளவர்களோடு வியாபாரஞ்செய்ய அவர்கள் விரும்பவில்லை.

மேனாட்டவர் வருகையினால் சீனருடைய பழைய கொள்கைகளும் நம்பிக்கைகளும் குறையத்தொடங்கின. ஐரோப்பியர் வர்த்தகப் பொருட்களைச் சீனவுக்குக் கொண்டு சென்றவுடன் சீனாவே சீர்திருத்தமும் திற



மையுமுடைய நாடென்ற எண்ணம் அவர்களிடமிருந்து மாறியது. அந்நியநாட்டவர்கள் புதிய அரசியற் கொள்கைகளையும் புதிய சமய வழிபாடுகளையும் பரப்ப எத்தனித்தபொழுது அவர்களுடைய பழைய கொள்கைகளிலுள்ள நம்பிக்கை குறையவேண்டியதாயிற்று. சனத்தொகை மிகவும் அதிகரித்தமையினால் விவசாயத்திலேயே முற்றாகத் தங்கியிருக்க முடியாதென்று, கைத்தொழிலை விருத்திசெய்து வர்த்தகம் நடத்தவேண்டிய நிலையுமேற்பட்டது.

இரண்டு நூற்றாண்டுகளாக கான்டன், சங்காய் முதலிய துறைமுகங்களில் வர்த்தகஞ் செய்வதற்கு ஐரோப்பியர் முயற்சிசெய்தனர். ஆனால் சீனர் ஐரோப்பிய வர்த்தகர்களைத் தங்களுக்குச் சமமானவர்களாக நடத்த விரும்பவில்லை. சமமானமுறையிலிருபகுதியாரும் நடந்துகொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அனுப்பப்பட்ட தூதர்கள் அந்நாட்டு வழக்கத்தின்படி சீன சக்கரவர்த்திக்குமுன் ஒன்பதுமுறை நிலத்தில் தங்கள் தலைகளைத் தட்டிக்கொண்டுதான் பின்பு பேச ஆரம்பிக்கலாம். அவ்விதமான தாழ்மைக்குள்ளாக்கியும் ஐரோப்பிய வர்த்தகருக்கு வியாபாரஞ்செய்யும் சலாக்கியத்தை வழங்கச் சீனர் மறுத்தனர்.

இவ்வாறான நிலையிருந்தபொழுதிலும் ஐரோப்பியர் வியாபாரம் நடத்திவந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில் பிரித்தானிய கிழக்கிந்திய சங்கம் இந்தியாவிலிருந்து அபினையும், பிரித்தானிய உற்பத்திப் பொருட்களையும் சீனவில் விற்பனைசெய்து சீனரிடமிருந்து பட்டு, தேயிலை, களிமண் பாத்திரங்களை வாங்கி வியாபாரத்தை நடத்திவந்தனர். அபின் வியாபாரத்தில் மாத்திரமே வருடமொன்றுக்கு 1000000 பவுண்வரையில் ஆதாயத்தைப் பெற்றனர். 1796-ல் அபின் இறக்குமதியை சீன அரசாங்கம் தடுத்தவுடன் பிரித்தானிய வர்த்தகர் களவாக வியாபாரம் நடத்தினர். 1839-ல் சீனர் அவ்வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய வழிகளைக்கையாண்டு பிரித்தா

RangaRakes

Tamilnavarasam.com

னிய வர்த்தகரையும் துன்புறுத்தினர். அதனாற் பிரித்தானியர் சீனாவோடு சண்டைசெய்ய நேரிட்டது. சண்டையிற் பிரித்தானியர் வெற்றிபெற்று (1842) ஒரு உடன்படிக்கையையும் எழுதிக்கொண்டனர். அதன்பிரகாரம் **கொங்கொங்** தீவு பிரித்தானியருக்கு அளிக்கப்பட்டதோடு தென்சீனாவிலுள்ள துறைமுகங்களில் வியாபாரஞ் செய்யுமுரிமையையும் பெற்றனர். பின்பு பிறநாடுகளோடு தொடர்புவைக்கவும், வியாபாரிகளும், மதப் பாதிரிமாரும் நாட்டினுட் புகவும் சீனச் சக்கரவர்த்தி உத்தரவளித்தார். பிறநாட்டினரோடு தொடர்புள்ள வழக்குகளை விசாரிப்பதற்கு விசேட நீதிஸ்தலங்களை ஏற்படுத்தவும் உத்தரவு கொடுக்கப்பட்டது. அவ்யுத்தத்தின் பயனாக மேனாட்டு நாகரிகம் கீழைத்தேசங்களிற் பரவத் தொடங்கியது.

அயலிலுள்ள கோறியாத்தீவு சீர்கேடானமுறையில் ஆளப்பட்டுவந்தது. நாட்டிற் கலகம் அடிக்கடி காணப்பட்டது. 1894-ல் கோறியா நாட்டு அரசன் அங்கே காணப்பட்ட சச்சரவுகளை நிவிர்த்திசெய்வதற்காகச் சீனாவிடம் உதவிகேட்டான். சீனப்படைகள் அனுப்பப்பட்டவுடன் யப்பானியரும் தங்களுடைய படைகளை அனுப்பினர். இருபகுதியாருக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் யப்பானியர் வெற்றிபெற்றனர். யுத்தமுடிவில் எழுதப்பட்ட சமாதான உடன்படிக்கைபின்படி கோறியாவின் சுதந்திரம் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டது. யப்பானியருக்குப் பெருந்தொகையான பணமுங் கொடுபட்டது. குற்றஞ்செய்த யப்பானியரை யப்பானியரே விசாரணைசெய்யும் உரிமையும், போர்மோசா, பெஸ்கடோசு என்னும் தீவுகளும் லியோதுங்குத் தீபகற்பமும் யப்பானுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்யுத்தம் முடிவடைந்தபின் லிகுங்ஷாங் என்ற அரசியல் நிபுணன் ருஷியாவோடும் மற்ற ஐரோப்பிய நாடுகளோடும் இரகசிய ஒப்பந்தங்கள் செய்துகொண்டான். இதன்பயனாக ருஷியாவும், பிரான்சும், ஜேர்மனியும் லியோதுங்கை



யப்பானுக்குக் கொடுப்பதைப்பற்றி ஆட்சேபித்து எச்சரிக்கை செய்தனர். யப்பானியர் கோபத்தோடு இணங்கினர். பின்பு ஐரோப்பிய நாடுகள் தாங்கள் சீனர்களுடைய விஷயங்களிற் தலையிட்டதற்காகக் கைம்மாறு கேட்டனர். பிரான்சியர் இந்துச்சீனாவில் விருப்பங்கொண்டவராகையால் 1885 வரையில் சீனரின் சம்மதத்துடன் அப்பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். பின்பு தென்சீனாவில் வர்த்தக உரிமைகளையும் பெற்றனர். ருஷியர் வலடிவொஸ்ரொக்குத் துறைமுகம் உட்படக் கிழக்குக்கரையோரப் பகுதிகளைப் பெறுவதற்குச் சீனாவோடு ஒழுங்குகள் செய்தனர். மஞ்சூரியாவில் தங்களுடைய விருப்பத்தைக்காட்டி லியோதுங்குக் குடாநாட்டின் மேற்பார்வையையும் யப்பானியரிடமிருந்து பெற்றனர். 1897-ல் இரு ஜேர்மன் பாதிரிமார் கொலைசெய்யப்பட்டமையால் கியோச்சௌ என்ற துறைமுகத்தை ஜேர்மனி கைப்பற்றியது. பிரித்தானியர் **வேய்காய்வேய்** என்ற துறைமுகத்தைப் பெற்றனர்.

அந்நிய நாட்டினர் பலர் சீனாவிற் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பியதனால் "குத்துச்சண்டைக்காரர்கள் இயக்கம்" என்பதை தாபித்து அதன்மூலம் அந்நியரை நாட்டினின்று துரத்துவதற்கு முயற்சிகள் செய்தனர். 1900-ம் ஆண்டுவரையில் கிறீஸ்த பாதிரிமாரும் சீனக் கிறீஸ்தவர்களும் அதிகம் தாக்கப்பட்டனர். ஒரு ஜேர்மன் மந்திரியும், யப்பானிய உத்தியோகத்தனொருவனும் பீக்கிங்கு நகரத்தில் கொலையுண்டிறந்தனர். அந்நகரத்திலுள்ள அந்நியர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதன் காரணமாக பிரித்தானியா, ருஷியா, பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி, யப்பான், அமெரிக்க ஐக்கியநாடுகள் துருப்புகளை அனுப்பிச் சீனருடைய இயக்கத்தின் முயற்சிகளைக் குறைத்துவிட்டனர்.

1908-ல் மஞ்சூரியவம்ச சக்கரவர்த்தியிறக்க சீனப் படைத்தலைவன் தான் சக்கரவர்த்தியாவதற்கு வேண்டிய வழிவகைகளைத் தேடினான். மக்கள் அவனுக்கு எதிர்ப்புக்காட்டினர். அவனைப்போன்ற பலர் சுயேச்சை

RangaRakes

Tamilnavarasam.com

யான அரசாங்கத்தை நிறுவி மக்களிடம் அளவுகடந்த வரியையறவிட்டனர். 1911-ல் மேனுடுகளிற் கல்விபயின்ற சன்யாட்சென் என்பவன் "கோமிங்டாங்கு" என்னும் மக்கள் கட்சியொன்றை தாபித்து அதன்மூலம் குடியரசு அரசாங்கமுறையை நிறுவி நாட்டின் நிலையைத் திருத்தியமைக்க முயன்ருன். சீனருக்கு சனநாயகமுறையும் பாராளுமன்ற அரசாங்கமும் புதிதானவையாகையால் அம்முறைகளை நடைமுறையிற் கொண்டுவருவதற்கு அவனுக்குப் பல கஷ்டங்களேற்பட்டன. இதற்கிடையில் விவசாயிகளின் நிலை கேவலமாகவே காணப்பட்டது. ஆகையால் 1921-ல் சன்யாட்சென், பழைய அரசர்களை நீக்கிவிட்டு அரசாங்கத்தை நடத்தும் ருஷியாவின் உதவியைக் கோரினன். ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்க ருஷியா சீனவுக்கு அதிக அனுதாபத்தைக் காட்டியமையால் ருஷியாவிலுள்ள சில அரசியல் விற்பன்னர்கள் சீனவுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுடைய உதவியுடன் கோமிங்டாங்குக்கட்சி ருஷியாவிலுள்ள கம்யூனிஸ்கட்சிமாதிரித் திருத்தியமைக்கப்பட்டது. அதேகாலத்தில் சீனவில் கம்யூனிஸ்கட்சியொன்றும் ஸ்தாபிக்கப்பட்டு அதில் சௌ-என்-லாய் அங்கத்தவர்களுள் ஒருவனுகச் சேர்ந்தான். தென்சீனவிலேயே கோமிங்டாங்குக்கூடிய ஆதரவு இருந்தது. ஆகையால் முழுச்சீனவையும் ஒரு ஐக்கிய நாடாக்க சன்யாட்சென் முயற்சிசெய்தும் சித்தியடையவில்லை. 1925-ல் அவன் இறந்தான். கம்யூனிஸ் கொள்கைகளுக்கு மாருன ஐரோப்பிய நாட்டினர் சீனவிற் தங்களுக்குரிய சலுகைகள் இல்லாமற்போகக் கூடுமெனவுணர்ந்து சீன ஒற்றுமைப்படாவண்ணம் பல முறைகளைக் கையாண்டனர். சீனர் கோபாவேசங்கொண்டு ஐரோப்பியரைத் துரத்திவிட்டுச் சீன முழுவதையும் ஐக்கியப்படுத்துவதில் முயன்றனர். சியாங்கைசேக் என்பவனே கோமிங்டாங் சேனைக்குத் தலைவனுனன். 1927-ல் அவன் கான்டனிலிருந்து தனது சேனையுடன் வடக்குநோக்கிப் புறப்பட்டு ஷங்காய் என்ற நகரத்தைவிட ஏனைய பகுதிகளைக் கைப்



பற்றினன். ஷங்காய் ஐரோப்பியரும் பலசாதியினரும் காணப்படும் ஒரு பொது நகரமாகும். அது சீனவின் கைத்தொழிற் தானமாகும். சீனர் எல்லோரும் ஒருமித்துச் சண்டைசெய்தால் ஐரோப்பியர் துரத்தப்பட்டிருப்பார்கள். ஆனல் கம்யூனிஸ் கட்சியினருடைய உதவியுடன் சீன ஐக்கியமடைந்தால் கம்யூனிஸ் கொள்கைகள் நாட்டில் நிலைபெற்றுவிடுமென சியாங்கைசேக் என்பவரும் மற்றும் செல்வந்தரும் நிலம்படைத்த பிரபுக்களும் பயமுற்றிருந்தனர். தங்களுடைய செல்வம் பொதுவுடைமைக் கொள்கையாளரின் அரசாங்கத்துக்குப் போய்ச்சேர நேரிடுமென ஏக்கமுற்றனர். ஆகையால் பொது உடமைக்கட்சித் தலைவர்களனைவோரையும் கொன்றுவிட்டு சியாங்கைசேக் புதிய அரசாங்கமொன்றை நாங்கிங்கு என்ற புதிய தலைநகரத்தில் தாபித்தான். ருஷிய அரசியல் நிபுணர்கள் மொஸ்கோவுக்குத் திரும்பினர். பின்பு சியாங்கைசேக் ஒரு பெரிய சேனையுடன் வடசீனவுக்குப் புறப்பட்டு பீக்கிங்கு என்ற பழைய தலைநகரத்தைக் கைப்பற்றினன். இவ்வாறு புது அரசாங்கம் தாபிக்கப்பட்டும் விவசாயிகள் தாழ்ந்த நிலையிலேயே இருந்தனர். நிலம்படைத்த தனவந்தரும் வர்த்தகரும் முன்னிருந்த நிலையிலும்பார்க்கச் செல்வரானர்கள். தென்சீனவிலிருந்த பொதுவுடமைக் கொள்கையாளர்கள் கிராமங்களிற் சென்று சேவைசெய்யத் தொடங்கினர். விவசாயிகளுக்குக் கல்விபுகட்டப்பட்டது. அவர்களுக்குத் தங்களைப் பாதுகாப்பதற்குப் பயிற்சியளிக்கப்பட்டது. கோமிங்டாங் கட்சியிலும் படைகளைத் தாக்கினர். மலைகளினிடையே மறைந்திருந்து தருணங்கிடைக்கும்பொழுது எதிர்க் கட்சியினரைத் தாக்கிக்கொண்டும் இளம் வாலிபர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்தும் கிராமமக்களுக்குச் சேவை புரிந்தனர். சியாங்கைசேக் ஒரு பெருஞ் சேனையுடன் புறப்பட்டு தென்கிழக்குச் சீனவை முற்றுக்கையிட்டான். அங்கிருந்த பொதுவுடைமைக் கட்சியினர் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு 6000 மைல்களுக்கப்பாற் சென்று வடமேற்குச் சீனவில் தங்கினர்.



RangaRakes
Tamilnavarasam.com

1935ல் யப்பானியர் சீனாவைத் தாக்கியபொழுது முழுச்சீனாவும் ஒற்றுமைப்பட்டுச் சியாங்கை சேக்கின் தலைமையில் சண்டை செய்தும் பல இடங்கள் யப்பானியராற் கைப்பற்றப்பட்டன. இருந்தும் மனந்தளராது சீனர் சண்டை செய்தனர். 10 வருடங்களின்பின் யப்பான் அமெரிக்காவுக்குச் சரணாகதியடைந்த பொழுது சீனாவுக்கும் விடுதலை கிடைத்தது. பின் உள்நாட்டுக் கலகம் சியாங்கை சேக்குக்கும் பொதுவுடமைக் கட்சிகளுக்குமிடையில் நடைபெற்றது. 1949 வரையில் பொதுவுடமைக் கட்சியினரின்படைகள் தெற்கு நோக்கிச் சென்று அங்குள்ள பிரதான பட்டணங்களையுங் கைப்பற்றிப் பின்பு சீனா முழுவதுக்கும் சீன மக்களின் குடியரசு அரசாங்கத்தையும் தாபித்தன.

சீனாவுக்குக் கிழக்குப்பக்கத்திலுள்ள பல தீவுகள் சேர்ந்த நாடே யப்பானாகும். சாதிக் கட்டுப்பாடுள்ள நிலமானிய முறை நிலவிய யப்பான் தேசம் சீனாவைப்போல் மேனாட்டு நாகரிகத்தையும் வர்த்தகத்தையும் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரையும் முற்றாகப் புறக்கணித்துவிட்டது. பழைய காலந்தொட்டு யப்பான் மிக்காடோ என்றழைக்கப்பட்ட அரசரால் ஆளப்பட்டு வந்தது. காலஞ் செல்ல மிக்காடோ பெயரளவில் அரசனாக இருக்க, அதிகாரம் ஷோகன் என்ற மந்திரியிடமும் பிரபுக்களிடமுமிருந்தது. 1853 ல் பிறநாட்டவர்கள் யப்பானுக்குள் புகவிடும் வண்ணம் பெரி என்ற அமெரிக்க கடற்படைத் தலைவன் ஷோகனோடு ஒழுங்குசெய்தான். பின்பு அமெரிக்கர் வர்த்தகஞ் செய்யுமுரிமையை யப்பானியரிடமிருந்து பெற்றுக்கொள்ள பிரித்தானியரும் ஏனைய சில ஐரோப்பியரும் அங்கு சென்றனர். சென்ற மேனாட்டவர்களுக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புக்காட்டினர். பிரித்தானியர், அமெரிக்கர், பிரான்சியர், ஒல்லாந்தர் ஆகியோரின் கடற்படைகள் யப்பானிய துறைமுகங்களுக்குச் சென்று இருமுறைகளில் அவைகளைத் தாக்கின. தங்களிலும் பார்க்க மேனாட்டவர் படைப்பலத்திற் கூடியவர்கள் என்பது அவர்களுக்குப் புலப்பட்டது.



பிரபுக்களின் உதவியோடு இழந்துபோன அதிகாரத்தைப் பெற்ற முத்சுயிட்டோ என்ற மிக்காடோ சிம்மாசனமேறியவுடன் தன்னுடைய மந்திரிமாருடைய யோசனைப்படி யப்பான் தேசத்தை மேல்நாடுகளைப் போல் பலமுடையச் செய்யவேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். பின்பு இங்கிலாந்திலுள்ள சில விற்பன்னர்களை அழைப்பித்து அவர்களுடைய உதவியுடன் புகையிரதவீதிகளும் அமைக்கப்பட்டு கடற்படையும் நிறுவப்பட்டது. பிரான்சியரால் யப்பானிய போர்வீரர்கட்குப் படைப்பயிற்சி யளிக்கப்பட்டதுமல்லாது நாட்டின் சட்டங்களுந் திருத்தியமைக்கப்பட்டன. தபாற்சேவையிலும், கல்வி முறையிலும் அமெரிக்கருடைய உதவியுடன் திருத்தங்களேற்படுத்தப்பட்டன. ஜேர்மனியர் வைத்தியக் கல்வியிலும் தலதாபனங்களிலும் வேண்டிய திருத்தங்களைச் செய்துதவினர். பத்து வருடங்களுக்குள் யப்பான் மேனாட்டின் பயிற்சி பெற்றதனால் அந்நாடுகளைப் போன்ற நிலையை எய்தியது. யப்பானியரிற் சில தலைவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று அங்கே பல கலைத்துறைகளிலும் பயிற்சிபெற்றனர். மக்களனைவோரும் மிக்காடோவுக்குத் தங்கள் விசுவாசத்தைக் காட்டித் தேசப்பற்றுடையவர்களானார்கள். மிக்காடோவுக்குப் பல அரசியல் நிபுணர்கள் அதிக உதவிபுரிந்தனர். பிரதானமாக மார்க்குவிஸ் இட்டோ ஐரோப்பாவுக்குச் சென்று ஜேர்மனிய தேசத்தின் சேனையையும் அரசாங்கத்தையும் போல யப்பானில் அமைத்தான். பின்பு பிரித்தானியருடைய கடற்படையைப்போல ஒரு கடற்படையும் நிறுவப்பட்டது.

ருஷியர் தங்கள் செல்வாக்கை மஞ்சூரியாவில் பரப்பும் நோக்கமுடையவர்களாயிருந்தபடியால், கோரியாவையுங் கைப்பற்றுவர் எனக் கருதி 1902-ல் யப்பானும் பிரித்தானியாவும் தங்களிலொருவரையும் பிறநாடுகள் தாக்கினால் ஒருவர்க்கொருவர் படைத்துணை புரிவதாக உடன்படிக்கை எழுதிக்கொண்டனர். ருஷியர் மஞ்சூரியாவிலும் கோரியாவிலும் தங்கள் கவனத்தைச் செலுத்

RangaRakes
Tamilnavarasam.com

தியபடியால் 1904-ல் யப்பான் ருஷியாமீது போருக்கெழுந்தது. இந்த யுத்தத்தில் கடற்சண்டையிலும் தரைச்சண்டையிலும் யப்பானியர் ருஷியரைத் தோற்கடித்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவரான றூசெவெல்டு தலையிட்டு இருபகுதியாருக்குமிடையிற் சமாதானத்தை ஏற்படுத்தினார். ருஷியா மஞ்சூரியாவை விட்டுவிலகவும் கோரியாவில் யப்பானியருக்கு விசேஷ உரிமையுங் கொடுக்க நேரிட்டது. லியதுங்கிலும் யப்பானியர் உரிமை பெற்றனர். சிறிது காலத்திற்குள் கோரியாவை யப்பானியர் தங்கள் ஆளுகைக் குட்படுத்தினர். முதலாம் உலக யுத்தத்தில் யப்பான் செய்த சேவைக்காக, யுத்தம் முடிவடைந்தவுடன் சீனாவில் யப்பானியருக்கு விசேஷ உரிமையும் கியாச்சௌவுங் கொடுக்கப்பட்டன.

### வினாக்கள்

1. சீனர் ஐரோப்பியரோடு தொடர்புவைக்க வேண்டி நேர்ந்த சம்பவங்களை விபரித்தெழுதுக.
2. பொதுவுடமைக் கட்சி சீனாவிற் பலமடைந்ததற்குக் காரணம் என்ன?
3. சன்யாட்சென் சீனாவிற்குச் செய்த சேவைகள் யாவை?
4. யப்பானியர் மேனாட்டு முறைப்படி தங்கள் நாட்டில் என்ன மாற்றங்களைச் செய்தனர்?
5. ருஷியாவுக்கும் யப்பானுக்குமிடையில் நடந்த போரைப்பற்றி விபரித்தெழுதுக.

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

## அமெரிக்க ஐக்கிய நாடுகளும் உள்நாட்டுப் போரும்

அமெரிக்காவிலுள்ள பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் ஏழு வருடங்களாகத் தொடர்ந்து சண்டைசெய்து மூன்றாம் ஜோர்ஜ் மன்னனிடமிருந்து தங்களுடைய சுதந்திரத்தைப் பெற்றனர் என்ற வரலாற்றை முன்னொரு அத்தியாயத்திற் படித்திருக்கிறோம். ஆனால் 1783ல் அந்நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றபொழுது, யுத்தத்தை நடத்துவதற்காக கூட்டப்பெற்ற "காங்கிரஸ்" என்னும் பிரதிநிதிச் சபையைவிட அவைகளை ஒன்று சேர்க்கக்கூடிய தாபனமொன்றுமே கிடையாது. பிரதிநிதிகளைக்கொண்டுள்ள அச்சபைக்கு குடியேற்ற நாடுகள்மீது ஒருவகையான அதிகாரமுங் கிடையாது. ஒவ்வொரு தனிநாடும் அதனுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தினால் ஏனைய குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிப் பொருட்களில்கூட வரி விதித்தது. அவைகளிடையே சச்சரவுகளும் காணப்பட்டன. சுதந்திரப்போர் தொடங்கும் வரையும் ஒவ்வொரு நாடும் தமக்குரிய விஷயங்களைத் தாமே நடத்தி வந்தது. ஆனால் வருங்காலத்தில் ஒரு சாதியினராக ஐக்கியப்பட்டு அரசாங்கத்தையும் மற்றும் விஷயங்களையும் நடத்துவதற்கு வழிவகை தேடவேண்டியது அத்தியாவசியமாயிற்று.

எல்லா நாடுகளிலுமுள்ள தலைவர்களுஞ் சேர்ந்து தங்களுடைய பாதுகாப்புக்கும் நலனுக்காகவும் ஐக்கியப்பட வேண்டுமென உணர்ந்து, அவ்விதமான வழியைத் தேடிக்கொள்ளாதவிடத்து ஐரோப்பிய வல்லரசுகளைத் தங்கள் விஷயங்களிலே தலையிடும்படி தாங்களே வரவழைப்பதாகுமென அபிப்பிராயப்பட்டனர். தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தித் தீர்மானஞ் செய்வதற்காக 1787-ல் பிலடெல்பியா என்ற இடத்தில் எல்லா நாடுகளின் பிரதிநிதிகளுஞ் சந்தித்து ஒரு மகா

RangaRakes Tamilnavarasam.com

நாட்டை நடத்தினர். தனது சொந்த நாட்டின் பிரதிநிதியாக வந்த உவாஷிங்டன் அம்மகாநாட்டின் தலைவராகத் தெரியப்பட்டார். என்னென்ன செய்யவேண்டுமென்ற நிபந்தனைகளைக்கொண்டுள்ள சாதனமொன்று வரையப்பட்டது. அதுவே கீர்த்திவாய்ந்த அமெரிக்க அரசியற்திட்டமாகும். எல்லா நாடுகளுஞ்சேர்ந்த சமஷ்டி அரசாங்கம் நிறுவப்படவேண்டுமெனத் தீர்மானஞ்செய்யப்பட்டது. அதன்பிரகாரம் ஒவ்வொரு நாட்டுக்கும் தம் சொந்தவிஷயங்களை நடத்தும்பொறுப்பு விடப்பட்டது. ஆனால் பாதுகாப்பு, பணவிஷயம், தபாற்சேவை, புகையிரதசேவை, வெளிநாட்டு வர்த்தகம், அந்நியநாடுகளோடு போர்தொடுத்தல், உடன்படிக்கை எழுதல் ஆகிய முழு அமெரிக்க சாதியினரைப்பற்றிய பொறுப்பான விஷயங்களை நடத்துவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலுள்ள பிரதிநிதிகளைக்கொண்டுள்ள மத்திய அரசாங்கம் தாபிக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. அரசனொருவனை நியமிக்கும் கொள்கைக்கு முழு அமெரிக்கரும் வெறுப்புக்காட்டி, நான்கு வருடங்களுக்கொருமுறை ஒரு தலைவனைத் தெரிவுசெய்ய வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். ஜோர்ஜ் உவாஷிங்டனே முதற்தலைவனாகத் தெரிவுசெய்யப்பட்டான். மந்திரிமார்களை நியமிக்கும் அதிகாரம் இன்னும் பல அதிகாரங்களும் தலைவனுக்கு அளிக்கப்பட்டன. நீதிவழங்கும் பெரிய நீதிஸ்தலமும் இரு சபைகளைக் கொண்டுள்ள பெரும் மன்றமொன்றும் தாபிக்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது. ஒன்று மேற்சபை அல்லது செனேட் சபையென்றும் மற்றது கீழ்ச்சபை அல்லது மக்கள் பிரதிநிதிச்சபை யென்றும் அழைக்கப்பட்டது. மேற்சபைக்கு ஒவ்வொரு நாடும் இரு அங்கத்தவர்களை அனுப்பினது. சனத்தொகையின் பிரகாரமே அங்கத்தவர்கள் கீழ்ச்சபைக்குத் தெரியப்பட்டனர். அந்தச் சிறந்த சமஷ்டி அரசியல்முறை கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகள் பின்பற்றக்கூடியதாக விருந்தது, குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்துக்காக போரை நடத்தி



வெற்றியீட்டிய உவாஷிங்டனே புதிய அரசாங்கத்துக்குத் தலைவனாகத் தெரிவுசெய்யப்பட்டான். சுயநலங்கருதாத கீர்த்திபெற்ற அப்பெரியார் எட்டுவருடங்களாக தனது நண்பனும். காரியதரிசியுமான அலெக்சாந்தர் கமில்டனுடைய உதவியுடன் புதிய அரசாங்கத்தை ஸ்திரப்படுத்திவைத்தார்.

அமெரிக்க சுதந்திரப்போர் முடிந்தபின் 1783-ல் எழுதிய உடன்படிக்கையின் பிரகாரம் போர் நடக்கும்போது பிரித்தானியாவுக்கு விசுவாசங் காட்டிநின்ற குடியேற்றவாசிகளுக்கு நட்டஈடு கொடுப்பதாக வாக்குச் செய்த அமெரிக்க நாடுகள் அதை நிறைவேற்றத் தவறினமையால் அது பிரித்தானியருக்குக் கோபத்தை உண்டாக்கியது. பிரான்சிய புரட்சியேற்பட்டபொழுது இரு நாட்டவர்களுக்குமிடையிலுள்ள பிரிவினை கூடிக்கொண்டது. சுதந்திரப்போரில் தங்களுக்காகப் பங்குபற்றிய பிரான்சிய மக்களுக்காக அமெரிக்கநாடுகள் சண்டைசெய்ய வேண்டுமென விரும்பியபொழுதும் உவாஷிங்டன் நடுவுநிலைமையை விரும்பினான். அமெரிக்கருடைய வெளிநாட்டு வியாபாரத்தில் பிரித்தானிய கடற்படை தலையிட்டபொழுது அமெரிக்க மக்களுக்குப் பிரான்சுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற உணர்ச்சி கூடியது. பிரான்சின் குடியேற்ற நாடுகளிலிருந்து அங்குள்ள பொருட்கள் அமெரிக்க கப்பல்களில் பிரான்சுக்குக் கொண்டுபோகப்பட்டபொழுது பிரித்தானியர் அதைத் தடுத்தனர். மேலும் பிரித்தானிய கடற்படையிலிருந்து விலகி ஓடிய மாலுமிகள் அமெரிக்க கப்பல்களில் பாதுகாப்புக்காக போய்ச்சேர்ந்தனர். வலோற்காரமாக அமெரிக்க கப்பல்களிலிருந்த அவ்விதமானவர்களை கைதுசெய்தபொழுது அமெரிக்காவிலுள்ள மக்கள் கோபாவேசங்கொண்டனர்.

இதுவரையில் அமெரிக்காவிற் தோன்றிய சமஷ்டிக் கட்சி, குடியரசுக்கட்சி ஆகிய ஒவ்வொரு அரசியற்கட்சியும் ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி வேறுபட்ட கொள்

RangaRakes Tamilnavarasam.com

கைகளை வைத்திருந்தது. சமஷ்டிக்கட்சிக்குத் தலைவனாகிய உவாஷிங்டன் பிரித்தானியாவோடு பகைமைகாட்ட விரும்பவில்லை. ஆனால் மற்றக்கட்சியின் தலைவன் யெபேசன் பிரித்தானியாவுக்கு மாறாக பிரான்சுக்கு அனுதாபத்தைக் காட்டினான். 1801-ல் சமஷ்டிக் கட்சியினர் அதிகாரத்தையிழக்க குடியரசுக் கட்சியைச் சார்ந்த யெபேசன் அமெரிக்காவுக்குத் தலைவனானான். அக்காலத்தில் அமெரிக்காவில் பிரான்சின் கையிலிருந்த லூசியானா மாகாணத்தை, பிரித்தானியாவுக்கும் அமெரிக்க நாடுகளுக்கும் ஒற்றுமை ஏற்படாமற் தடுக்கும் நோக்கத்துடன் விற்றுவிடுவதற்குச் சம்மதித்தான். உடனே யெபேசன் அமெரிக்க நாடுகளுடன் அம்மாகாணத்தைச் சேர்த்துக்கொண்டான். நெப்போலிய யுத்தம் நடைபெற்றபொழுது பிரித்தானியாவாலும், நெப்போலியனாலும் ஏற்படுத்தப்பட்ட வர்த்தகக் கட்டுப்பாடு அமெரிக்கருடைய வர்த்தகத்தை மிகவும் பாதித்தது. அதுவுமல்லாமல் அமெரிக்காவின் கடற்பகுதியும் கட்டுப்பாட்டிலமர்ந்தது. அக்கட்டுப்பாட்டை நடத்திய கப்பல்கள் அமெரிக்கரின் கப்பல் ஒன்றைத் தாக்கியபொழுது (1807) அமெரிக்க நாட்டு மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும், பிரித்தானியரின் கடலாட்சியை நிராகரிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தனர். கனடாவைக் கைப்பற்றுமெண்ணமும் அமெரிக்கருக்கு இருந்தது. இவ்விதமான மனநிலை போரைத்தொடங்கத் தூண்டியது. கடற்சண்டைகளில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர். கனடாவைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட சேனை கனடாவிலுள்ள சேனையிலும்பார்க்கப் பன்மடங்கு பெரிதாகவிருந்தபோதிலும் அது விரைவில் சரணாகதியடைய நேரிட்டது. இப்போரின் பிற்பகுதியில் பிரித்தானிய கடற்படையும் போர்வீரரும் கனடாவுக்குச் சென்றதும் போர் சீக்கிரத்தில் முடிவடைந்தது. இப்போர் கனடாவிலுள்ள மக்களின் தேசாபிமானத்தை மேலும் கூட்டியது.



தென் அமெரிக்காவில் ஸ்பானியரா லாளப்பட்ட குடியேற்ற நாடுகளில் செவ்வனே நிர்வாகம் நடத்தப்படாமையால் அந்நாடுகள் கிளர்ச்சியை உண்டாக்கின. ஸ்பானியாவுக்கு உதவிசெய்வதற்காக பிரான்சும், ருஷியாவும் முன்வந்தன. ஆனால் அவர்களின் துருப்புகள் தென் அமெரிக்காவுக்குச் செல்லாவண்ணம் பிரித்தானியருடைய கடற்படை தடுத்தது. பின்பு பிரித்தானியா தென் அமெரிக்க குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. அதுவுமல்லாமல் பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியாகிய கானிங் பிரபு ஐக்கிய அமெரிக்காவும் பகிரங்கமாக அதேவிதமான கொள்கை வெளிப்படுத்தவேண்டுமென அந்நாட்டுத் தலைவனுக்குச் செய்தியனுப்பினான். அதன்பயனாக அமெரிக்க நாடுகளின் தலைவரான மொன்ரோ என்பவர் ஐரோப்பிய வல்லரசுகள் தென் அமெரிக்காவில் தலையிட்டால் ஐக்கிய அமெரிக்க நாடுகள் எதிர்ப்புக் காட்டுமென வெளியரங்கப்படுத்தினார். ஆரம்பத்தில் மொன்ரோக்கொள்கை பிரித்தானியருடைய கொள்கைக்கு ஆதரவாகவிருந்தபோதிலும் அது பிரித்தானியாவுக்கும் ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் ஓர் எச்சரிக்கையாகவிருந்தது.

வியன்னா மகாநாட்டின் (1815) அடுத்த 45 வருடங்களுக்குள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனத்தொகை விரைவாகக் கூடியது. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் போய்ச்சேர்ந்தனர். ஆரம்பத்தில் பிரித்தானியாவி லிருந்தும் பின் அயர்லாந்திலிருந்தும் ஏராளமான மக்கள் அமெரிக்காவிற்போய்க் குடியேறினர். 1822-ல் ஏற்பட்ட பஞ்சத்தினாலும் 1845-ல் அங்கே காணப்பட்ட கஷ்டமான நிலையினாலும் அயர்லாந்திலுள்ள மக்கள் தங்களுடைய நாட்டைவிட்டு வெளியேறினர். 1848-ல் ஏற்பட்ட புரட்சியின்பயனாக ஜேர்மனி, வட ஐரோப்பா முதலிய நாடுகளிலிருந்து அநேகர் புறப்பட்டனர். திரள் திரளாக வந்த ஐரோப்பியர் பிரதானமாக அயர்லாந்து மக்கள், மேற்கு நோக்கிச் சென்ற அமெரிக்க மக்களால் வெற்றிடமாக்கப்பட்ட



RangaRakes
Tamilnavarasam.com

கீழ்த்திசையிலுள்ள நகரங்களிற் குடியேறினர். அமெரிக்கர் மேற்குத்திசையிற் பரவி புதிய குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். பின்பு றொக்கி மலைகளையுங் கடந்து கலிபோனியாப் பகுதியையும் தம் வசமாக்கினர். அங்கு பொன், வெள்ளி ஏராளமாய்க் காணப்பட்டமையால் சனச்செறிவு அதிகரித்தது. 1815-ம் ஆண்டுக்கும் 1860-ம் ஆண்டுக்குமிடையிலுள்ள 45 வருடகாலத்திலும் 13 புதிய குடியேற்றநாடுகள் ஐக்கிய அமெரிக்காவோடு சேர்க்கப்பட்டன. 1860-ல் காணப்பட்ட 31 நாடுகளிலும் 16 நாடுகள் அலக்கனி மலைகளுக்கு மேற்கேயிருந்தன.

இவ்விதமாகச் சனத்தொகை கூடினமையாலும் புதிய குடியேற்றங்கள் தோன்றினமையாலும், வெவ்வேறான கொள்கைகளும், மனப்பான்மையுமுள்ள மக்கட்கூட்டம் செறிந்த மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் மூன்று பகுதிகள் அமெரிக்காவிற் காணப்பட்டன. மேற்குத்திசைப் பகுதியிற் பரவிய குடியேற்றக்காரர் செய்த முயற்சிகள் வியக்கத்தக்கன. ஆரம்பத்திற் சென்ற குடியேற்றவீரர் காடுகளை வெட்டியும், மிருகங்களை வேட்டையாடியும், நாகரிகமற்ற செவ்விந்தியரை துரத்தியுஞ் சென்றனர். அவர்களோடு எதிர்த்துச் சண்டைசெய்ய ஆயுதமேனும், பெருந்தொகையான மக்களேனும் செவ்விந்தியரிடமில்லை. குடியேற்றக்காரர் முரட்டுக்குணமும், சண்டைசெய்யும் இயல்பும் சகிப்புத்தன்மையும் உடையர். செவ்விந்தியர் மேற்குநோக்கிச் செல்லக் குடியேற்றக்காரரும் தொடர்ந்து சென்று நிலங்களை வயல்களாக மாற்றியும் பாதைகளையும் பட்டணங்களையும் அமைத்தும் அவ்விடங்களைத் தம் வசப்படுத்தினர். கலிபோர்ணியாவிலும், அலெஸ்காவிலும் பொன் கண்டுபிடிக்கப்பட்டபோது அநேகர் பெரும் தனவந்தராயினர். வடக்கு தெற்கு நாடுகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டபோது மேற்குப்பகுதி திருத்தப்பட்டு நன்னிலை எய்தியிருந்தது.



அமெரிக்காவின் வடபகுதியிலுள்ள நாடுகளில் கைத்தொழிற் புரட்சியின் பயனாக கைத்தொழில்கள் அதிக முன்னேற்றமடைந்திருந்தன. பெருந் தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டு அவைகளில் உற்பத்திபண்ணப்பட்ட பொருள்கள் வியாபாரப் போட்டியினின்று காக்கப்படுவதற்காகக் கூடுதலான சுங்கவரி பிறநாட்டுப் பொருட்களில் விதிக்கப்பட்டது. தென்பகுதியிலுள்ள நாடுகளின் விவசாயமே முக்கிய தொழிலாகும். உஷ்ணப்பிரதேசங்களில் விளையும் கரும்பு, கோப்பி, புகையிலை பருத்தி முதலியனவே அப்பகுதியில் உண்டாக்கப்பட்டன. இவற்றுள் விசேடமானது பருத்திச்செய்கையாம். பருத்திப் பஞ்சிலிருந்து விதைகளைப் பிரிக்குமொரு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபின் (1793) பருத்திப்பஞ்சின் ஏற்றுமதி அதிகரித்தது. பருத்தி ஏற்றுமதி கூடினமையால் தோட்டவேலை செய்வதற்கு தொழிலாளரும் அநேகர் தேவைப்பட்டனர். அவ்வேலையைச் செய்வதற்கு அடிமைகளே தேவைப்பட்டமையால் குறைந்துவந்த அடிமை வியாபாரம் மீண்டும் பிரதானமாயிற்று. ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டுவரும் வழக்கம் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்தும் களவாக அடிமை வியாபாரம் பின்பும் நடைபெற்றது. 1833-ல் பிரித்தானிய சக்கராதிபத்தியத்துள் அடங்கிய நாடுகளில் அடிமையொழிக்கப்பட்டது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பிரித்தானியாவைப் பின்பற்றின. அமெரிக்கத் தென்நாடுகளில் அடிமைகள் தோட்டங்களில் வேலைசெய்வதற்குத் தேவையாக இருந்தமையால் அடிமையொழிக்கப்படவேண்டுமென்ற சட்டத்தைக்கொண்டுவர முடியாமலிருந்தது. 1861 வரையில் நான்கு இலட்சம் அடிமைகளுக்குமேல் அமெரிக்காவிலிருந்தனர். அவ்வடிமைகளுக்கு விடுதலை அளித்தால் தங்களுடைய விவசாயத்துக்கு பெரும் நட்டமேற்படுமென தென்பகுதியிலுள்ள நாடுகள் அச்சமுற்றன. ஆனால் வடநாட்டினர் அடிமைமுறையை வெறுத்தனர். தென்நாடுகளின் பொருளாதாரமும், சமுதாயமும் அடிமை முறையிலேயே தங்கி

RangaRakes
Tamilnavarasam.com

யிருந்தது. வடநாட்டினரிடையே காணப்பட்ட அடிமைமுறை எதிர்ப்பும், வர்த்தகக் கட்டுப்பாடும் தென்னாட்டினருக்கு கோபத்தையும் வெறுப்பையும் உண்டாக்கியது. 1850 தொடக்கம் பத்து வருடங்களாக அடிமையைப்பற்றிய பிரச்சினை இருபகுதியாருக்குமிடையில் பெருஞ் சச்சரவுகளை உண்டாககியது. வடபகுதியினர் எழுதி வெளியிட்ட "ரொம் மாமனின் குடிசை" என்ற நூல் அடிமைகள் அனுபவித்த கஷ்டங்களையும் நிஷ்டூரங்களையும் படம்போன்று விஸ்திரித்துக் காட்டினமையால் மக்களனைபேரும் அடிமைகளுக்கு அனுதாபங்கொண்டிருந்தனர். ஆனால் தங்களுடைய முன்னேற்றம் அடிமைகளின் முயற்சியிலே தங்கியிருந்தமையால் தாங்கள் அடிமையை யொழித்துவிடுவதிற் பார்க்க ஐக்கிய அரசாங்கத்தினின்று நீக்கிவிடுவது நன்றெனக்கூறினர். அதுவுமல்லாமல் வடநாடுகளிற் சனத்தொகை கூடிக்கொண்டுபோனமையாலும், மேற்கே புதிய குடியேற்ற நாடுகள் அதிகரித்துக்கொண்டு போனமையினாலும் அடிமை ஒழிக்க நேரிடுமென்றும் அச்சமுற்றனர். ஆகையால் தாங்கள் ஐக்கிய அரசாங்கத்தினின்று விலகிக்கொள்ளத் தங்களுக்கு உரிமையுண்டென்றும் வாதாடத் தொடங்கினர். ஆனால் வடநாட்டினர் அவ்வுரிமையை மறுத்தனர்.

1860-ல் நடந்த தேர்தலில் மேற்குக் குடியேற்றப் பகுதியிலுள்ள ஆபிரகாம்லிங்கன் என்பவன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டான். லிங்கன் 1809ம் ஆண்டு கென்ரக்கி என்ற குடியேற்றநாட்டிற் பிறந்தான். அவனுடைய தந்தை எழுதவோ வாசிக்கவோ தெரியாத ஒரு விவசாயி. லிங்கன் பத்தொன்பதாவது வயதாயிருக்கும்பொழுது அவனுடைய தந்தை இலினோயிஸ் என்ற இடத்திற் குடியேறினான். இதுவரையில் லிங்கன் எழுதவாசிக்கப் பழகிக்கொண்டான். இவன் பருத்தித் தொழில் செய்யுமிடத்துக்குச் சென்றபொழுது அடிமைகளின் நிலையைக்கண்ணுற்று அடிமையை ஒழிப்பதற்குத் தான் சண்டையிடவேண்டுமென உணர்ந்தான்.



பின்பு அவனது சொந்த இடத்தில் நடைபெற்ற தேர்தலில் அவனுக்கு எழுத்துவேலை கொடுபட்டபொழுது அவன் தான் அரசியற்றுறையில் ஈடுபடவேண்டுமென நினைந்தான். அவன் தன்னுடைய இருபத்தேழாவது வயதில் தான் வசித்த குடியேற்றநாட்டின் நிர்வாக சபைக்கு அங்கத்தவனாகத் தெரிவுசெய்யப்பட்டான். பின்பு சட்ட கல்வி பயின்று அத்தொழிலை நடத்த ஆரம்பித்தான். பத்து வருடங்களின் பின்பு அவன் அமெரிக்காவிலுள்ள சனபிரதிநிதி சபைக்கு ஒரு அங்கத்தவனாகத் தெரிவுசெய்யப்பட்டான். அடிமைமுறை ஒழிக்கப்படவேண்டுமென்ற இயக்கத்தில் அவன் செய்த பெரும் முயற்சிகளால் அவனுக்குப் பெரும் கீர்த்தியுண்டானது. 1860-ல் அவன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட நாலு நாட்களின்பின் உள்நாட்டுப்போர் தொடங்கியது. தென்னாட்டவர்கள் ஐக்கிய அரசாங்கத்தினின்று நீங்கி சுதந்திர அரசாங்கத்தை தாபிக்கும் நோக்கத்துடன் போர்செய்யத் தொடங்கினர். ஆனால் அடிமையை ஒழிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணம் மாத்திரமல்ல லிங்கனுடைய மனத்தில் எழுந்தது. அமெரிக்க நாடுகளின் ஐக்கியம் சிதைவுபடாமலிருக்க வேண்டுமென்ற பிரதான எண்ணமே அவனைச் சண்டைசெய்யத் தூண்டியது. தெற்கிலுள்ள பத்துக் குடியேற்ற நாடுகள் ஒன்றுசேர்ந்து செய்த போரில் ஆரம்பத்திற் சில வெற்றிகளைப்பெற்றன. மேற்கு நாடுகளும் வடக்கு நாடுகளோடு சேர்ந்தன. சேனைப் பலத்தினாலும், செல்வத்தினாலும், போர்த் திறமையினாலும் தென்னாட்டவர்களின் எதிர்ப்பை அடக்கின. 1865 வரையில் தென்னாட்டினர் தோல்வியுறும் நிலையேற்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன்பே லிங்கன் அடிமையொழிக்கப்படவேண்டுமென்றும், ஐக்கிய அரசாங்கத்தினின்று பிரிந்துகொள்ள முடியாதென்றும் கூறியதற்கு அவர்கள் சம்மதத்தைக் கொடுத்தனர். யுத்தம் முடிவடைந்த ஐந்தாவது நாள் லிங்கன் கொலைசெய்யப்பட்டிறந்தான். "இந்தச் சாதியினர் ஒரு புதிய சுதந்திரத்தைப் பெற்றுக்

RangaRakes
Tamilnavarasam.com

கொள்வர். மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களினுடைய அரசாங்கம் பூமியில் ஒருபோதும் அழிவுறாது” என்பதாக லிங்கன் ஒரு பிடிவாத உணர்ச்சியோடு கூறியது மெச்சத்தக்கதொன்றாகும். போரினால் இருபகுதியாருக்கு மிடையிற் காணப்பட்ட மனவேற்றுமையைச் சாந்தப்படுத்த லிங்கனில்லாமற்போனது ஒரு துரதிர்ஷ்டமெனலாம். லிங்கனின்பின் விஷயங்களைக் கையாண்ட தலைவர்கள் தென்நாடுகளைச் சிறந்தமுறையில் நடத்தி அவைகளின் நட்பைப் பெறவில்லை. அடிமைகளும் விடுதலைபெற்றபின் பிரசாவுரிமையும் பெற்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனத்தொகையும் செல்வமும் அதிகரித்தன. மேற்குப்பகுதியில் இருந்ததிலும்பார்க்க பல குடியேற்ற நாடுகள் கூடினமையால் ஒருமித்து 48 நாடுகள் காணப்பட்டன. புகையிரதவீதிகள் அமைக்கப்பட்டதோடு விவசாயத்தை விருத்திசெய்வதற்கு வேண்டிய இயந்திரங்கள் பாவிப்புக்குக் கொண்டுவரப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து திரளான மக்கள் போய்க் குடியேறினர். சீனரும், யப்பானியரும் கலிபோர்னியாவிற் குடியேறியபொழுது ஆசியாவிலுள்ளோர் மேலும் வராமற் கட்டுப்பாடுகளுண்டாக்கப்பட்டன. பல புதிய நகரங்கள் தோன்றின. கைத்தொழிலில் நாடு முன்னேற்றமடைந்தது. சுங்கவரி வெளிநாட்டு இறக்குமதிப்பொருட்களில் விதிக்கப்பட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் போட்டியினின்று பாதுகாக்கப்பட்டன. பிற நாடுகளின் விஷயங்களிலே தலையிடாமலிருப்பது அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையாயிருந்தபோதிலும் பசிபிக்சமுத்திரத்திலுள்ள சமோவாவையும் ஹாவாய்த் தீவுகளையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தம் வசமாக்கியது. பின்பு பிலிப்பைன் தீவுகளும் ஸ்பானியாவிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அக்காலத்திலேயே மத்திய அமெரிக்காவிலுள்ள பனமாக்கால்வாயை வெட்டி கப்பல்கள் தென் அமெரிக்காவைச் சுற்



றிப் போகாமல் அக்கால்வாயைப் பாவிக்கக்கூடிய வசதி அளிக்கப்பட்டது.

முதலாம் உலகயுத்தம் நடைபெற்றபொழுது அந்நிய நாட்டு விஷயங்களிலே தலையிடாத கொள்கையினின்று வழுவாதிருக்கவேண்டுமென்று எண்ணியிருந்தபொழுதிலும் ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களுண்டாக்கிய இடையூறினாலும் ஜனநாயகமுறையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தினாலும் பிரித்தானியர் பக்கஞ்சேர்ந்து சண்டையிற் பங்குபற்றினர். ஜனாதிபதியாயிருந்த உட்ரோ உவில்சன் கரிசனையுடன் போதிய ஆதரவளித்தபடியால் யுத்தம் விரைவில் முடிவடைந்தது. சமாதான உடன்படிக்கையும் உவில்சனின் சிறந்த சில கொள்கைகளை அடிப்படையாக வைத்துத்தான் எழுதப்பட்டது. ஆனால் அமெரிக்க மக்களின் அபிப்பிராயத்தின்படி சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா சேரவில்லை.

**வினாக்கள்**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிரிவினை ஏற்பட்டதற்குக் காரணங்கள் யாவை?
2. நெப்போலியனுடைய யுத்தம் நடந்தபொழுது பிரித்தானியாவுக்கெதிரே அமெரிக்கா சண்டை செய்ததற்குரிய காரணங்களை ஆராய்க.
3. மொன்ரோ கொள்கை என்பதை விளக்குக.
4. அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் காரணங்களை ஆராய்க.
5. ஆபிரகாம்லிங்கனுடைய வாழ்க்கை வரலாற்றையும் அவன் அமெரிக்காவுக்குச் செய்த தொண்டுகளையும்பற்றி எழுதுக.
6. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதார நிலையைப்பற்றி அறிந்தவற்றைக் கூறு.

RangaRakes Tamilnavarasam.com

# இருபத்துமூன்றாம் அத்தியாயம்

## முதலாம் உலகயுத்தம் (1914—1918)

ஜெர்மனி ஐக்கியம்பூண்ட காலந்தொட்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போல ஒரு வலிமைமிகுந்த நாடாக விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் உலகத்தின் பல்வேறு இடங்களிலும் பரந்த பிரதேசங்களைப் பெற்றிருக்க, ஜெர்மனி அவ்விஷயத்தில் பிற்போக்கான நாடாயிருந்தமையால் ஜெர்மனியர் அதிகம் கவலையும், மற்ற நாடுகளிற் பொறாமையுங் கொண்டிருந்தனர். 1870-ல் பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையில் நடந்த போரின் முடிவில் பிரான்சியருக்குரிய அல்சேஸ்—லோரேன் மாகாணங்களை ஜெர்மனி அவர்களிடமிருந்து அபகரித்ததையிட்டு அவர்கள் ஜெர்மனி மீது மறக்கமுடியாத கோபமுடையவர்களாயினர். இனித் துருக்கியருடைய வன்மையும் ஐரோப்பாவில் குன்றிப் போனமையால் அங்கே ஒரு சிக்கலான நிலையுமேற்பட்டது. இவ்வாறு பல பிரச்சினைகள் தோன்றினமையால் அவைகள் அதிக சாவதானமாகத் தீர்க்கப்படவேண்டியிருந்தன. பழைய காலந்தொட்டு வழங்கிவந்த வல்லரசுச்சமநிலை ஒரு நிலையற்றதாகக் காணப்பட்டது. போர்க்கட்சியினர் அதிக அதிகாரத்துடனிருக்கும்பொழுது வல்லரசுச் சமநிலை கவனிக்கப்படமாட்டாதென்பது வெளிப்படை.

ஜெர்மனியில் புதிகாக ஏற்படுத்தப்பட்ட ஐக்கியம் பலமடையும் வரையும் பிஸ்மார்க் அயல்நாடுகளின் நட்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக்கருதி 1879-ல் அவுஸ்திரிய–ஹங்கேரியுடனும் 1881-ல் ருஷியாவுடனும் சமாதான உடன்படிக்கைகளை எழுதிக்கொண்டான். இது மூன்று சக்கரவர்த்திகளின் ஒற்றுமை எனப்படும். ஆனால் ருஷியாவும் அவுஸ்திரிய–ஹங்கேரியும் பால்கன் நாட்டு விஷயங்களில் சிநேகமுறையில் நடந்துகொள்ளாமையால் மூவர் ஒற்றுமை நீடித்திருக்கவில்லை. ருஷியா



சிலாவியச் சாதியருள்ள நாடுகளில் ஒரு பலமுடைய நாடாகும். பால்கன் நாடுகளிலுள்ள சிலாவியச் சாதியினருடைய முன்னேற்றத்தை அவுஸ்திரிய–ஹங்கேரி சிறிதேனும் விரும்பவில்லை. இருபகுதியாருடைய வேற்றுமையுள்ள மனப்பான்மையே அவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமைக்குறைவுக்குக் காரணமாகும். ஜெர்மனி ஐக்கியம்பூண்டவுடன் பிரஸ்ஸியாவின் அரசன் ஜெர்மன் சக்கரவர்த்தியாயும் பிஸ்மார்க் பிரதம சக்கராதிபத்திய மந்திரியாகவும் அமர்ந்தனர். வெளிநாட்டு விஷயங்களும் போர்ப்படைகளின்மீது அதிகாரமும் இருவர் கையிலுமிருந்தன. ஆனால் பிஸ்மார்க்கின் செல்வாக்கு இருக்குமளவும் முழு அதிகாரமும் அவன் பொறுப்பிலேயேயிருந்தது. ஆனால் கடற்படையும், குடியேற்ற நாடுகளின் விஷயங்களும் "ரீஸ்ராக்" (மக்கட் தேசீய சபை) என்ற சபையின் பொறுப்பிலிருந்தன.

பிஸ்மார்க் 1884-ம் ஆண்டுவரையும் ஜெர்மனிக்கு ஒரு கடற்படையை நிறுவுவதிலோ அல்லது குடியேற்ற நாடுகளை ஸ்தாபிப்பதிலோ கவனஞ் செலுத்தவில்லை. ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்பார்க்கிலும் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் குடியரசு ஸ்தாபனங்களை நாட்டுவதில் முற்போக்கடையாமையினால், அவ்வண்ணஞ் செய்வதற்கும், அவைகளைப் பாதுகாப்பதற்கும் ஒரு திறமை வாய்ந்த கடற்படை தேவையென வுணர்ந்தான். இனி ஜெர்மனி கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் அதிக விருத்தியடைந்தமையினால் உலகத்திலுள்ள வியாபார ஸ்தலங்களெல்லாவற்றிலும் பிரித்தானியாவோடும் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடும் போட்டியிடக் கூடியதாகவிருந்தது.

ஜெர்மனி, முன்பு மூன்று சக்கரவர்த்திகளின் ஒற்றுமையை நிலைநாட்டும் உடன்படிக்கையை எழுதியதுபோல் 1882-ல் இத்தாலி, அவுஸ்திரிய–ஹங்கேரியோடு சேர்ந்து தற்பாதுகாப்பான மூவர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. யாதேனுமிருநாடுகள் சொல்லப்பட்ட மூன்று



RangaRakes
Tamilnavarasam.com

நாடுகளிலுமொன்றுக்கெதிரே போருக்கெழுந்தால் மற்ற இருநாடுகளும் ஒப்பந்தஞ்செய்துகொண்ட நாட்டின் சார்பிற் சண்டை செய்வதாயும், தங்களிலொருவர் இன்னொரு நாட்டிற்கெதிரே போருக்கெழுந்தால் மற்ற இரு நாடுகளும் உதவிசெய்ய வேண்டியதில்லையென்றும் நியமனஞ் செய்துகொள்ளப்பட்டது. 1888-ல் இளவரசனை உவில்லியம் சிங்காசனமேறியவுடன் ஜேர்மனியின் கடற்படை, தரைப்படைகளைப் பெருப்பிக்கவேண்டுமென்று பகிரங்கமாகக் கூறினன். இரண்டு ஆண்டுகளின்பின் அவன் பிஸ்மார்க்கை நீக்கிவிட்டுத் தானே அரசாளத் தொடங்கினன். ஜேர்மன் சாதியினரிடம் தேசப்பற்றை உண்டாக்கினன். பாடசாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும் மாணவர்களுக்குப் பாடநேரங்களிற் தேசபக்தியுண்டாகக்கூடிய முறையில் கல்வி கற்பிக்கப்பட்டது. ஜேர்மனி புதிதாகப் பெற்றுள்ள பெருமையை மக்களிடம் செறியத்தக்கதாக அரசாங்கம் முயன்றது. புதிய கெய்சருக்கு (சக்கரவர்த்தி) மக்களிடம் விசுவாசம் உண்டாகத்தக்கதாகவும், தேசபக்தி உண்டாகத்தக்கதாகவும் பிரசாரஞ் செய்யப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிர்ப்புக்காட்டியவர்கள் அடக்கப்பட்டனர். ஜேர்மனியர் தங்களுடைய கடற்படையைப் பெருப்பித்துப் பலமுறச் செய்தவுடன் பிரித்தானியர் தங்களைத் தாக்கவே அக்கடற்படை நிறுவப்பட்டதெனச் சிந்திக்கலாயினர்.

மூவர் ஒப்பந்தஞ் செய்யப்பட்டபொழுது பிரான்சும் ருஷியாவும் சிநேக நாடுகளாயின. பிரித்தானியா மாத்திரம் அவசியமின்றி ஐரோப்பிய விஷயங்களிற் தலையிட விருப்பமில்லாது தனிநாடாகவிருந்தது. ஆனல் ஐரோப்பியருடைய செல்வாக்கு உலகத்தின் பலபாகங்களிலுஞ் செறிந்திருந்தமையால் ஆங்கிலேயருக்கும் ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளுக்குமிடையில் சச்சரவுகளும் மனவேற்றுமையுங் காணப்பட்டன. ஆபிரிக்காவில் ஒல்லாந்த விவசாயிகளான போயர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் போர் நடந்தபொழுது ஜேர்மனி போயர்



களுக்கு அனுதாபத்தைக் காட்டியது. ஆகையால், பிரித்தானியா விலகி ஒரு தனிநாடாக மேலும் இருத்தல் கூடாதென நினைந்து யப்பானோடு நேசநாடாகச் சேர்ந்துகொண்டது (1902). 1904-ல் இங்கிலாந்தும் பிரான்சும் மனமுவந்த நட்பு நாடுகளாக ஒற்றுமைப்பட்டுக்கொண்டன. அதோடு வடகடலிலிருக்கும் கடற்படையையும் அவர்கள் பலப்படுத்திக்கொள்ள ஜேர்மனியர் அதிக மனத்தாக்கமடைந்தனர்.

இவ்விதமான நிலையில் சமாதானத்தை நிலைநாட்ட என்ன முயற்சிகள் நடைபெற்றனவென்பதை ஆராய்வோம். ருஷிய அரசனை சார், **ஹேக்கில்** ஒரு மகாநாட்டைக் கூடி போருக்குவேண்டிய ஆயத்தங்கள் செய்வதைத் தடுப்பதற்கு வழிவகைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஐரோப்பிய வல்லரசுகளை அழைத்தார். படைப் பலத்தைக் குறைக்கும் எண்ணத்தை ஐரோப்பிய வல்லரசுகள் ஏற்றுக்கொளாவிடினும், இருநாடுகளுக்குமிடையில் எழுந்த விவாதங்களை சமாதானமுறையில் தீர்த்துவைக்கலாமென்ற வழியுணர்த்தப்பட்டது. மீண்டும் 1907ல் கூடிய அம்மகாநாடு விசேஷ தீர்மானங்கள் ஒன்றையுஞ் செய்ய முடியவில்லை. அப்போது ஐரோப்பிய நாட்டவர்களிடையே காணப்பட்ட மனநிலை ஒரு முடிவான ஒழுங்கைச் செய்வதற்கு இடங்கொடுக்கவில்லை.

குடியேற்ற நாடுகளை ஸ்தாபிக்கும் போட்டியும் பால்கன் குடாநாட்டில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஏற்பட்ட போட்டியும் ஆகிய இரண்டும் யுத்தத்தின் பிரதான இரு காரணங்களாகும். ஜேர்மனியர் தங்களுடைய நாட்டிற் பெருக்கமடைந்த சனத்தொகைக்கு இடந்தேவைப்பட்டமையால் உலகத்தின் ஏனைய பகுதிகளில் குடியரசை ஸ்தாபிக்க எண்ணங்கொண்டனர். அவர்கள் விரைவிற் பெற்ற செல்வமும் செல்வாக்கும் ஐரோப்பாவுக்கப்பாற்பட்ட வசதியுள்ள இடங்களில் அவர்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் தூண்டின. உலகத்தில் வசதியுள்ள இடங்களெல்லாம் ஐரோப்பிய

RangaRakes
Tamilnavarasam.com

வல்லரசுகளால் குடியேற்றங்களாக்கப்பட்டன. ஆகையால் ஜேர்மனி தம் ஆசையைப் பூர்த்திசெய்வதென்றால் மற்ற வல்லரசுகளிடமிருந்து குடியேற்ற நாடுகளைக் கவர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் ஆபிரிக்காவிலும் பெரும்பகுதியை தமது ஆதிக்கத்தில் முன்பே கொண்டு வந்துவிட்டது. சீனாவிலும் சில இடங்களைப்பெற்றது. இப்போது வட ஆபிரிக்காவில் கவனத்தைச்செலுத்தத் தொடங்கியது. ஆபிரிக்காவின் வடகரைப்பகுதியிலுள்ள அல்ஜெஜிருசு, மொரொக்கோ என்ற இரு நாடுகளில் முதலாவது நாடு பிரான்சியருடைய கையிலிருந்தது. அமைதியற்றிருந்த மொரொக்கோவிலும் பிரான்சியர் தங்களாதிக்கத்தைப் பரப்ப முயன்றனர். ஸ்பானியருக்கும் அவ்வெண்ணமிருந்தது. பிரான்சின் சூழ்ச்சியைக் கெடுக்க எண்ணிய ஜேர்மன் சக்கராதிபதி மொரொக்கோ ஒரு சுதந்திரமான நாடாக தாபிப்பதற்கு மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டமையால் 1906-ல் கூடிய மகாநாட்டில் ஜேர்மனியின் எண்ணம் பூர்த்தியானது. 1911-ல் மொரொக்கோவில் அமைதியின்மையுற்றபோது ஜேர்மனி ஒரு பீரங்கிப்படையையனுப்பப் பிரித்தானியரும் பிரான்சியரும் தலையிட்டவுடன் ஜேர்மனி விலகரேிட்டது.

அவுஸ்திரிய-ஹங்கேரி ஜேர்மனியின் உதவியோடு பால்கன் நாடுகளைக்கவர எண்ணங்கொண்டது. ஆனால் இருநாடுகளும் ருஷியாவுக்குப் பயந்தன. ருஷியா பால்கன் நாட்டுச் சிலாவியச் சாதியினருக்கு உதவிபுரிய ஆயத்தமாயிருந்தது. ஆகையால் ஐரோப்பா பொறாமை, பயம், கோபம், மனத்தாக்கல் எல்லாம் ஒருமித்துப் பொருந்திய பாசறைபோற் காணப்பட்டது. 1907-ல் பிரித்தானியா, பிரான்சு, ருஷியா மூன்றுஞ்சேர்ந்து நட்புப்பூண்ட நாடுகளாயின. மூவர் ஒப்பந்தத்திற் சேர்ந்த நாடுகளாற் தாக்கப்பட்டால நட்புப்பூண்ட மூன்று நாடுகளும் ஒருவர்க்கொருவர் உதவிசெய்வதாகத்தீர்மானித்தன.

ஜேர்மனி, துருக்கியரிலும் பற்றுதல் காட்டியது. கெய்சர் உவில்லியம் கொன்ஸ்தாந்தைன்கோப்பிளையும்



பலஸ்தீனாவையும் தரிசித்துத் தான் இஸ்லாம் மக்களின் விசேஷ நண்பனாக இருப்பேனென்று கூறினான். கொன்ஸ்தாந்தைன்கோப்பிளுக்கு எதிரேயுள்ள ஸ்குட்டாரியிலிருந்து பாக்தாதுக்கு ஒரு புகையிரதவீதி அமைப்பதாகவுங் கூறினான். பேர்லினிலிருந்து பாக்தாதுக்கு அமைக்கப்படும் புகையிரதவீதி பிரித்தானியருக்கும் ருஷியருக்கும் பெருந்திகிலை உண்டாக்கியது. இதற்கிடையில் பல்கேரியாவுக்கு அரசனை பேர்டினாந்து பல்கேரியாவைத் துருக்கியரின் ஆதிக்கத்தினின்று நீக்கி அதைச் சுதந்திரநாடெனப் பிரசித்தஞ்செய்தான். அதன்பின் அவுஸ்திரியா, போஸ்னியா-எர்சகொவினாவைத் தனது இராச்சியத்துடன் சேர்த்துக்கொள்ளச் சேர்பியர் அச்சமுற்றனர்.

இதற்கிடையில் இத்தாலி வட ஆபிரிக்காவிலுள்ள துருக்கியருடைய மாகாணமான திரிப்போலியின்மீது படையெடுத்துச் சென்றது. 1912-ல் பால்கன் நாடுகள் எல்லாம் ஒருமித்துத் துருக்கியரைக் கொன்ஸ்தாந்தைன்கோப்பிளைத் தவிர ஏனைய இடங்களினின்று துரத்தினர். ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு ஏற்படுத்திய நிபந்தனைகளின் காரணமாகப் பல்கேரியாவுக்கும் மற்றைய பால்கன் நாடுகளுக்குமிடையில் பகைமையுண்டானது. இதனால் சேர்பியா, ருமேனியா, கிறீஸ் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டன. பல்கேரியா, ஜேர்மனி அவுஸ்திரியாவோடு சேர்ந்துகொண்டது. வல்லரசுகளும் அவைகளைச் சேர்ந்த சிறு இராச்சியங்களையுங் கொண்டுள்ள இரு கட்சிகள் தோன்றிவிட்டதைக் கவனிக்கலாம். இரு கட்சிகளையுஞ் சேர்ந்த நாடுகள் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டன. ஒவ்வொருவரிடமும் அடக்கமுடியாத ஆத்திரமான நிலை காணப்பட்டது. ஒவ்வொருநாடும் மற்ற நாட்டின்மேல் உள்ள பயத்தினாலேயே போருக்கெழுந்தனரெனலாம்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு உடனடியான காரணம் பால்கன் நாடுகளில் நடைபெற்ற சில சம்பவங்களின

RangaRakes Tamilnavarasam.com

லேயே உண்டானது. அவுஸ்திரியா-ஹங்கேரியின் இளவரசனை பிரான்சு பேர்டினந்து தனது நாட்டுச் சிலாவியப் பிரசைகளுக்கு நிர்வாகம் நடத்தும் விஷயங்களில் ஓரளவு அதிகாரத்தை அளிக்கவிரும்பினான். அதுவரையும் அவ்விஷயங்கள் அவுஸ்திரிய-ஹங்கேரி மக்களால் நடத்தப்பட்டன. முதலில் சேர்பியாவின் பலத்தைக் குறைக்க எண்ணினான். 1914-ம் ஆண்டு ஆனிமாதம் அவனும் அவனுடைய மனைவியும் போஸ்னியாவுக்கூடாகப் பிரயாணஞ்-செய்தபொழுது சேர்பியாவுக்குச் சார்பான போஸ்னிய இளைஞன் ஒருவனால் அவர்கள் **சேராஜுவோ** என்னும் நகரத்தில் கொலைசெய்யப்பட்டனர். அவுஸ்திரியர் ஜேர்மனியின் அனுமதியுடன் போருக்குக்கிளம்ப ஆயத்தப்பட்டனர். சேர்பியாவில் அவுஸ்திரியாவுக்கு விரோதமான எல்லாப் பிரசாரமும் அவுஸ்திரிய உத்தியோகஸ்தரின் உதவியோடு அடக்கப்பட வேண்டுமென்றும் இன்னும் அவமானமுண்டாகக்கூடிய பல நிபந்தனைகளோடு 48 மணி நேரத்திற்குள் பதில் அனுப்பவேண்டுமென்றும் ஒரு கடைசி மனுவை அவுஸ்திரியா சேர்பியாவுக்கு அனுப்பியது. சேர்பிய அரசாங்கத்தார் எல்லா நிபந்தனைகளுக்கும் இணங்காவிடினும் பயத்தோடும் நிதானமாகவும் பதிலளித்தனர். ஆடி 28-ந் தேதி அவுஸ்திரிய ஹங்கேரி சேர்பியாமீது போருக்கெழுந்தது. ருஷியர் சேர்பியாவுக்கு உதவி செய்வதற்காகத் தங்கள் படையைத் திரட்டினர். ருஷியாவுக்கு எச்சரிக்கை கொடுத்துவிட்டு ஜேர்மனி ருஷியாமீது போருக்கெழுந்தது. பிரான்சு படையைத் திரட்டியபொழுது பிரித்தானியா பெல்ஜியத்தின் நடுவுநிலைமையைப் பிரான்சும் ஜேர்மனியும் காத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்க ஜேர்மனி அதற்கு இணங்காமையால் பிரித்தானியர் ஜேர்மனிக்கெதிரே போர்புரிவதாக பிரசித்தஞ்செய்தனர். யுத்தம் ஆரம்பமானவுடன் **மத்திய வல்லரசுகள்** என்றழைக்கப்பட்ட ஜேர்மனி, அவுஸ்திரிய-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள் **நேசதேச** நாடுகளாகிய பெரிய பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம், ருஷியா, சேர்



பியா, இத்தாலி, யப்பான் முதலிய நாடுகளுக்கெதிராகச் சண்டைசெய்தன.

இவ்விதமாகத் தொடங்கிய யுத்தத்தில் **50** இலட்சம் போர்வீரர்களுக்குமேல் சண்டைசெய்தனர். புதியமுறையான ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. பழையகாலத்தில் தரையிலும், கடலிலும் மாத்திரம் சண்டைகள் செய்யப்பட்டன. இந்த யுத்தத்தில் ஆகாயத்திலும், நீரின் கீழும் சண்டை நடைபெற்றது. ஆகாய மார்க்கமாகப் பறந்து எதிரிகளின் படைப்பலம், அணிவகுப்பு ஆகியவைகளைப் பார்வையிடுவதற்கும், கோட்டைகளின்மீது குண்டுகளை வீசவும் ஆகாயக்கப்பல்கள் உபயோகிக்கப்பட்டன. நீர்மூழ்கிக் கப்பல்கள் போர்க்கப்பல்களுக்கும் வர்த்தகக் கப்பல்களுக்கும் பெரும் இடையூறுகளை விளைத்தன. யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுது நச்சுப்புகை, தாங்கிகள் முதலிய புது முறைகளாற் பகைவர் தாக்கப்பட்டனர். இருபகுதியாருக்கும் களைப்பு, இளைப்பு உண்டாகக்கூடிய நிலைபரம் யுத்தம் முடிவடையும் வரையும் ஏற்பட்டது.

பிரதான போர்க்களங்கள் ஐரோப்பாவி லிருந்தபோதிலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் சில இருந்தன. ஜேர்மனி, மேற்கில் பிரித்தானிய பிரான்சியப் படைகளோடும், கிழக்கில் ருஷியப் படைகளோடும் சண்டை செய்யவேண்டியிருந்தது. பெல்ஜியத்தினூடாகப் பிரான்சை உடனடியாகக் கைப்பற்றவேண்டுமென்று ஜேர்மனிக்கு நோக்கமிருந்தது. பிரமாண்டமான ஜேர்மன் சேனை பெல்ஜியத்தைத் தோற்கடித்து பிரான்சின் எல்லையைச் சேர்ந்தது. பாரிஸ் நகரைக் கைப்பற்ற எண்ணங்கொண்ட ஜேர்மன் சேனை பிரித்தானிய பிரான்சியப் படைகளாற் சிறிது தூரம் பின்வாங்கிச்செல்ல நேரிட்டது. பின்பு அகழிகளைத்தோண்டி அவைகளிலிருந்து சண்டை செய்தனர். இதற்கிடையில் ருஷியர் ஜேர்மனிக்குட் புகுந்து தானன்பேர்க்கு என்ற சண்டையிற் தோற்கடிக்கப்பட்டதோடு ஜேர்மனியி

RangaRakes Tamilnavarasam.com

லிருந்தும் துரத்தப்பட்டனர். இந்த இரு போர்க்களங்களோடும் நில்லாது வேறு இடங்களையுந் தாக்கவேண்டுமென்றுணர்ந்து நேசதேசப் படைகள் ஜேர்மனிக்குச் சிநேகிதரான துருக்கியரை வெருட்டும் நோக்கதுடன் மொசப்பத்தோமியாவையும் கலிப்போலியையுந் தாக்கின. ஆனால் அவர்களுடைய யோசனை ஒரு பலனையும் அளிக்கவில்லை. பல்கேரியா ஜேர்மனியோடு சேர்ந்து சேர்பியைத் தோற்கடித்தது. அந்தவேளையில் இத்தாலியும் நேசதேச நாடுகளோடு சேர்ந்தது. அநேக போர்வீரர்கள் தேவைப்பட்டமையால் கட்டாய போர்ச்சேவை பிரித்தானியாவில் எல்லா மக்களுக்கும் விதிக்கப்பட்டது. கைத்தொழிற்சாலைகளில் பெண்கள் வேலைசெய்ய வேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் சண்டையில் மாண்டனர். அந்த நேரத்தில் ரூஷியா அவுஸ்திரியாவைத் தாக்கிச் சில வெற்றிகளைப் பெற்றது. இத்தாலியும் அவுஸ்திரியாவைத் தென்பாகத்திற் தாக்கியது.

அவ்வேளையில் லோயிட் ஜோர்ஜ் இங்கிலாந்தின் பிரதம மந்திரியானான். ஜேர்மனி கடற்படைப் பலத்தைக் கொண்டு வெற்றியை ஈட்டலாமென நினைந்து பிரித்தானிய கடற்படையைத் தாக்கியது. பிரித்தானியாவை எதிரியின் படையெடுப்பினின்று காப்பாற்றுவதும், போர்வீரர்களையும் ஆயுதங்களையும் போர்க்களங்களுக்குக் கொண்டுசெல்வதும், எதிரிகளினுடைய அந்நியநாட்டு வர்த்தகத்தைச் சிதைப்பதும், நேசதேசத்தினரின் வர்த்தகத்தைக் காப்பாற்றுவதும், ஜேர்மன் கடற்படையை வெளியேற விடாது தடைப்படுத்தி வைப்பதும், பிரித்தானிய கடற்படையின் முக்கிய கடமைகளாயின.

1915-ல் ஜேர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களின் உதவி மூலம் வர்த்தகத்தை அழிப்பதாகவும் பின்பு 1917-ல் பிரித்தானிய துறைமுகங்களுக்குச் செல்லும், அல்லது அத்துறைமுகங்களிலிருந்து புறப்படும் எச்சாதியினருடைய கப்பல்களும் அழிக்கப்படுமென பிரசித்தஞ்



செய்தது. அதனால் பிரித்தானியா பெரும் நஷ்டத்தைப் பெற்றது. ரூஷியா யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியினாலும் அங்குள்ள தலைவர்களின் திறமைக்குறைவினாலும் தொடர்ந்து சண்டைசெய்ய இயலாமற் போயிற்று. அங்கே புரட்சி ஏற்பட்டதால் சார் இராட்சியத்தை விட்டு விலகினர். அதனால் ரூஷியாவின் மேற்கு மாகாணங்கள் ஜேர்மனிக்குக் கொடுக்கவேண்டி நேர்ந்தது. ஜேர்மனியருடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் வர்த்தகக் கப்பல்களையோ, உணவுகொண்டு சென்ற கப்பல்களையோ எச்சரிக்கை யில்லாது தாழ்த்துவிட்டன. இவ்விதமாக அமெரிக்கரின் கப்பல்கள் தாழ்த்தப்பட்டமையால் அமெரிக்கா யுத்தத்திற் சேர நேரிட்டது. அமெரிக்க ஜனாதிபதி உவில்சன் ஜனநாயக ஆட்சி, உலகத்துக்காகக் காப்பாற்றப்படவேண்டுமெனக் கூறினர்.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் நேசதேச நாடுகளுக்கு அளவுகடந்த பண உதவியையும், பெருந்தொகையான போர்வீரர்களையும் கொடுத்துதவின. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட போர் வீரர்கள் அனுப்பப்பட்டனர். ஐரோப்பாவின் மேற்குப் போர்க்களத்தில் தீவிரமான தாக்குதல் ஏற்பட்டபடியால் ஜேர்மன் சேனை பின்வாங்க நேரிட்டது. யுத்தத்தை நீடிக்க ஜேர்மனியரால் முடியவில்லை. ஆகையால் 1918-ம் ஆண்டு கார்த்திகை 11-ந் திகதி ஜேர்மனியர் சமாதானஞ் செய்ய உடன்பட்டனர். சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் ஜனாதிபதி உவில்சன் சமர்ப்பித்த 14 அம்சத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளன. 14 அம்சங்களாவன:- (1) வெளியரங்கமான சமாதான உடன்படிக்கையும் அதன்பின் இரகசிய ஒப்பந்தங்கள் இல்லாமையும் (2) சமாதான காலத்திலும் யுத்தகாலத்திலும் கடல்களிற் போக்குவரத்துச் சுதந்திரம் (3) வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுதல் (4) படைப்பலமும் ஆயுதங்களும் குறைக்கப்படுதல் (5) சாம்ராச்சிய உரிமைகளை நீதியான வழியில் தீர்த்துவிடல் (6) ரூஷியாவிலிருந்து அந்நியர் வெளியேறு



RangaRakes
Tamilnavarasam.com

தல் (7) பெல்ஜியத்திற்குச் சுதந்திரமளித்தல் (8) கைப்பற்றப்பட்ட பிரான்சிய நாட்டின் பகுதியும் அல்சேஸ்-லோரையினும் மீண்டும் பிரான்சுக்குக் கொடுக்கப்படுதல் (9) இத்தாலியின் எல்லைகள் மீண்டும் வரையறுக்கப்படுதல் (10) அவுஸ்திரிய ஹங்கேரி சாம்ராச்சிய மக்கள் சுதந்திர ஆட்சியைப் பெற்றுக்கொள்ளுமுரிமை (11) பால்கன் நாடுகளிலிருந்து அந்நியர் வெளியேறுதல் (12) துருக்கியரின் சாம்ராச்சியத்திலுள்ள மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெறும் உரிமையும், டால்டனஸ் வழியே எல்லோருக்கும் கப்பல்களைச் செலுத்தும் உரிமை (13) போலந்து சுதந்திரநாடாதல் (14) சர்வதேசசங்கம் தாபித்தல்.

1919-ல் வேர்சேல்சில் நேசதேச நாடுகளின் பிரதிநிதிகளில் உட்ரோ உவில்சன், கிளமென் குலோயிட் ஜோர்ஜ், ஒர்லாந்தோ பிரபலமான பிரதிநிதிகளாகும். சாதியபிமானம் தேசியக் கொள்கைகள் முதலியவைகளுக்கேற்ப நாடுகளின் எல்லைகளை வகுப்பதும் பல்வேறு இடங்களிலுமுள்ள குடியரசு நாடுகளின் எதிர்கால நிலைமையைப் பற்றியும், போரிலுண்டான நட்டத்துக்கேற்றவாறு ஜேர்மனி கொடுக்கவேண்டிய பணத்தொகையைப் பற்றியும், எதிர்காலத்தில் யுத்தம் தொடங்காவண்ணம் தடுக்கும் வழிவகைகளைப்பற்றியும் தீர்மானஞ் செய்யவேண்டியது அவர்களின் முக்கிய கடமைகளாயின. சார் பள்ளத்தாக்கிலுள்ள கரிச்சுரங்கங்கள் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிரான்சுக்கு நட்டஈடாகக் கொடுக்கப்பட்டன. பெல்ஜியத்துக்கு அதன் எல்லைப்புறத்திலுள்ள மூன்று சிறு பிரிவுகளும், இத்தாலிக்குத் திரியஸ்தி துறைமுகமும், மத்திய ஷெல்ஸ்விக் ஜேர்மனிக்கும், அதன் வடபகுதி டென்மார்க்குக்கும் அளிக்கப்பட்டன. போலந்துக்கு நீண்டகாலமாகக் கொடுபடாதிருந்த சுதந்திரம் கொடுக்கப்பட்டது. போலந்தின் வடபாகத்தில், லட்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா, பின்லாந்து என்னும் குடியரசுகள் தோன்றின. முன் இவைகள் ருஷியராட்சிக்குட்பட்டிருந்தன. பொஹீமியா, கலி



சியா என்ற நாடுகள் இரண்டையுஞ் சேர்த்து செக்கோசிலோவேக்கியா என்ற புதிய நாடொன்று ஆக்கப்பட்டது. சேர்பியாவோடு அதன் அயல்நாடுகளாகிய போஸ்னியா, எசகொவினு என்ற நாடுகள் சேர்க்கப்பட்டு யூக்கோசிலாவியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது. அல்பேனியா சுதந்திரத்தைப் பெற்றது.

எகிப்து, சீரியா, மொசப்பொத்தோமியா, பலஸ்தீனு, யோர்தான்நதிக் கிழக்குப்பிரதேசங்கள் ஜேர்மன் குடியேற்ற நாடுகளைப்போல் சுயராச்சிய நிலைக்கான தகைமையைப் பெற்றிராதபடியால் அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு வெவ்வேறு நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டது. எகிப்து, பலஸ்தீனு, மொசப்பொத்தேமியா (இராக்கு) என்பவற்றைப் பரிபாலனஞ்செய்யும் பொறுப்புப் பிரித்தானியாவுக்குக் கொடுக்கப்பட்டது. சீரியாவின் பரிபாலனத்தைப் பிரான்சு பெற்றது. இந்நாடுகளைப் பரிபாலனம் நடத்துவதாக ஏற்றுக்கொண்ட இராச்சியங்கள் அந்நாடுகளுக்குப் புத்திமதியும், உதவியும் புரிவதல்லாது வேறுவிஷயங்களிற் தலையிடமுடியாது. ஆபிரிக்காவில் ஜேர்மனியருக்குரிய குடியேற்ற நாடுகளில் பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம் ஆகிய இராச்சியங்கள் நேர்முகமான அதிகாரஞ் செலுத்தலாயினர். மூன்றுவதர்க தென்மேற்காபிரிக்க ஐக்கிய அரசாங்கத்துக்கும், சமோஷா நியூசிலாந்துக்கும் பசுபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகள் யப்பான், பிரித்தானியா, அவுஸ்திரேலியாவுக்கும் கட்டளைப்பிரதேசங்களாக அளிக்கப்பட்டு அவைகள் பரிபாலனஞ் செய்யப்பட்டுவந்தன.

ஜேர்மனியின் கடற்படை, தரைப்படைகள் அதிகம் குறைக்கப்பட்டன. ஜேர்மனியுண்டாக்கிய அழிவுகளின் நட்டஈடாகப் பெருந்தொகையான பணமிறுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டது. ஏராளமான நிலக்கரி, போர்க்கப்பல்கள் இன்னும் அநேக பொருட்களை ஜேர்மனி கொடுக்கவேண்டியதாயிற்று. எதிர்காலத்தில் சமாதானமும், அமைதியும் நிலவுவதற்காக வேண்டிய வழிவகைகள் தேடப்பட்டன.

RangaRakes
Tamilnavarasam.com

ஜேர்மனி இவ்யுத்தத்திற் தோல்வியடைந்ததின் காரணங்களை ஆராய்வோம். 1914-ல் யுத்தம் தொடங்கிய காலத்தில் படைப்பலமுடைய நாடாகவிருந்தது. ஆனல் நேசதேச வல்லரசுகளின் பிரமாண்டமான பொருளாதாரப்பலத்தை ஜேர்மனி எதிர்க்கவேண்டியிருந்தது. ஆனல் ஜேர்மனி போரில் அனுகூலமடைவதற்கு போர்க்களத்தில் விரைவான வெற்றிகளைப் பெற்றிருக்கவேண்டும். நீடித்த போரை நடத்துவதற்குப் படைப்பலமும் பொருளாதாரப்பலமும் எதிரிகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது போதியளவு அவர்களிடமில்லை. சண்டைகளில் அளவுகடந்த ஜேர்மன் போர்வீரர்கள் இறந்தமையால் படைப்பலம் குன்றத்தொடங்கியது. பிரித்தானியருடைய கடலாதிக்கம் ஜேர்மனியின் பொருளாதார நிலையைக் குன்றச்செய்தது. அதோடு உணவுக்கஷ்டமும், ஜேர்மன் மக்களுக்கு மனச்சோர்வும் ஏற்படத்தொடங்கின. மனத்தைரியமும், உடல்வலியும் போர் நீடித்துக் கொண்டுபோக குறையத்தொடங்கின. யுத்தத்தின் இறுதிப்பகுதியில் ஜேர்மன் மக்களுக்கு அங்கிருந்த உணவுக்கட்டுப்பாட்டினல் அதிக துன்பமேற்பட்டது. பேர்லின் நகரத்தில் ஒரு கிழமைக்கு ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட உணவு 4 ருத்தல் ரொட்டியும், $7\frac{1}{2}$ ருத்தல் உருளைக்கிழங்கும், $\frac{1}{2}$ ருத்தல் இறைச்சியும், $\frac{1}{2}$ ருத்தல் சீனியும் ஆகும். வியன்னவில் தினசரிக்குக் கொடுக்கப்பட்ட உணவு 3 அவுன்சு ரொட்டியும், 1 அவுன்சு இறைச்சியும், $2\frac{1}{2}$ அவுன்சு உருளைக்கிழங்குமாகும். உணவுக் கஷ்டத்தினல் துன்பப்பட்ட மக்களின் வாட்டம் போர்க்களத்தில் நின்று சண்டைசெய்த வீரரின் உற்சாகத்தையும் கெடுத்தது. போரை நடத்தும் ஸ்தாபனமே களைப்புற்றமையால் சேனைத்தலைவர்கள் சமாதானத்தை விரும்பினர். அடுத்தபடியாக ருஷ்யாவிலேற்பட்ட புரட்சியும் ஜேர்மனியின் தோல்விக்குச் சாதகமாயிருந்தது. ஜேர்மனியின் கிழக்குப்பாகத்தில் இருந்த நிலையைத் தணிப்பதற்கு ருஷியாவின் புரட்சி ஆதரவளித்தது. ருஷியராற் கைப்பற்றப்பட்ட கைதிகள்



விடுதலைபெற்று மீண்டும் சேனையிற் சேர்ந்தபொழுது சேனையின் மனத்தைரியம் குறையத்தொடங்கியது. இனி ஐக்கிய அமெரிக்க நாடுகள் நேசதேசத்தினர் பக்கம் சேர்ந்தவுடன், தாங்கள் போரில் வெற்றிபெறுவது கஷ்டமென ஜேர்மன் மக்கள் யோசித்தனர். பிரான்சிய மக்களின் பொறுமையும், பிடிவாதக்குணமும் ஈற்றில் வெற்றிபெறுவதற்கு உதவியாயிருந்தன.

யுத்தத்தில் மாண்டவர் தொகை எட்டு இலட்சம் வரையிலும் காயப்பட்டோர் தொகை இருபது இலட்சம் வரையிலுமிருக்கும். செலவழிந்த பணத்தொகை கணக்கிட முடியாததாகும். பிரித்தானியா நாளொன்றுக்கு $1\frac{1}{2}$ இலட்சம் பவுண் வரையில் 1915 வரையும் பின்பு 4 இலட்சமும் பிற்பகுதியில் $6\frac{1}{2}$ இலட்சம் பவுணும் செலவழித்தது. எதிரிகளாற் கைப்பற்றப்பட்ட இடங்களிலுள்ள கைத்தொழில் விவசாயம் சிதைவுற்றன. அழிவடைந்த நகரங்களையும், கைத்தொழில்களையும் திருத்தி அமைப்பது ஒரு பிரமாண்டமான வேலையாகவிருந்தது.

### வினுக்கள்

1. மூவர் ஒப்பந்தத்திற் சேர்ந்த நாடுகள் யாவை? அது நிலைபெருததற்குக் காரணம் யாது?

2. மத்தியவல்லரசுக்கட்சி, நேசதேசக்கட்சி என இரு கட்சிகள் தோன்றினமைக்குக் காரணம் என்ன?

3. முதலாம் உலக யுத்தத்தின் காரணங்களை ஆராய்க.

4. முதலாம் உலக யுத்தத்தின் வரலாற்றை எழுதுக.

5. யுத்தம் முடிந்தபின் எழுதப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை?

6. முதலாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி தோல்வியுற்றதற்குரிய காரணங்களை ஆராய்க.

RangaRakes
Tamilnavarasam.com

# இருபத்துநான்காம் அத்தியாயம்

## சர்வதேசசங்கம்

முதலாம் உலக யுத்தத்திலேற்பட்ட நஷ்டங்களும், அழிவுகளேற்பட்ட தேசங்களிலுள்ள பொதுமக்களின் துன்பமும், அளவுகடந்த பண அழிவும், போரினாலே விவாதங்களைத் தீர்த்துக்கொள்ளுதல் இயலாத காரியமென்பதும், சமாதான முறையே தகுந்த முறையெனப் பலரைச் சிந்திக்கச்செய்தது. அவ்வெண்ணத்தைப்பூர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி வில்சனது பதினான்கு அம்சத் திட்டத்திலொன்றான சர்வதேசசங்கம் தாபிக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் சுயேச்சையாக நடந்துகொள்ளாமற் ஐக்கியமடைந்த பல நாடுகளின் யோசனைக்கிணங்க நடந்துகொள்ள எண்ணங்கொண்டமையால் வருங்காலத்தில் போர் நிகழ்வதற்கு இடமில்லையென பலர் அபிப்பிராயப்பட்டனர். போர் செய்யும் மனப்பான்மையை நீக்கிச் சமாதானத்தை விரும்பும் மனப்பான்மையையுண்டாக்குவதே அச்சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

வார்சேல்சு உடன்படிக்கையிற் கலந்துகொண்ட நாடுகளிடையே சர்வதேசசங்கத்தை தாபிக்கும் தீர்மானத்தைப் பூர்த்திசெய்வதற்குப் பிரத்தியேகமான ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளாது, அதை வார்சேல்சு உடன்படிக்கையின் அம்சமாக எடுத்துக்கொண்டனர். அதுவுமல்லாமல் அவ்வுடன்படிக்கையில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மிதமிஞ்சியவையாகக் காணப்பட்டால் அந்நாடுகள் இச்சங்கத்தின் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளத் தக்கதாகவுமிருந்தது. அந்த ஒப்பந்தத்தின் முதற் தொடக்கத்திலேயே, தேசங்களிடையே சமாதானமும் பாதுகாப்பும் நிலவவேண்டுமென்றும், போர் நடத்துவதில்லையென்றும், உடன்படிக்கைகளை அலட்சியஞ் செய்யக்கூடாதென்றும் குறிப்பிடப்பட்டது. சங்கத்தின் அங்கத்தவர்களது நாடுகளின் சுதந்திரம் ஏனைய நாடுகளின்



வலோற்காரமான செய்கைகளினின்றும் காப்பாற்றப்படுமென்றும் மேலும் கூறப்பட்டது. அங்கத்தவர்களிடையே விவாதங்கள் யாதேனும் ஏற்படின் அவைகள் சங்கத்தினால் அதற்கென நியமிக்கப்பட்ட சபையால் விசாரணைசெய்யப்பட்டு அறிக்கை அனுப்பப்படுமெனவும் குறிப்பிடப்பட்டது. அதுவுமல்லாமல் சங்கத்திலுள்ள அங்கத்தினரில் ஒருவரேனும் ஒப்பந்தத்துக்கு மாறாக போர்தொடங்க ஆரம்பித்தால் ஏனைய அங்கத்தவர்கள் அந்நாட்டோடு வர்த்தகத்தொடர்பு வைத்திருப்பதில்லையென்றும், ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும்பொருட்டு யுத்தத்துக்கு வேண்டிய படைத்துணை புரிவதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் சங்கத்தின் அங்கத்தவர்கள் நீதியும் மனுஷீகத்தன்மையுள்ள தொழில்முறையை ஆண், பெண், பிள்ளைகள் ஆகிய அனைவோருக்கும் தாபிப்பதற்கு முயற்சி செய்வதாகவும் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மனுஷ சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் சமாதான வாழ்க்கைக்கும் தொழிலாளருடைய முன்னேற்றத்துக்கும் சர்வதேசசங்கம் பொறுப்புள்ள தாபனமாகுமென சிமட்சு என்பவர் அபிப்பிராயப்பட்டார். இச்சங்கத்தை ஆதரித்தவர்களின் நம்பிக்கை, அது தாபித்தபின் இருபது வருடங்களுக்குள் பலமடைந்தது. 1920-ல் ஜெனிவாவில் முதன்முதலாக நடந்த கூட்டத்தில் 42 அங்கத்தவர்கள் சமுகமளித்தபோதிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பிரதிநிதி சமுகமளிக்கவில்லை. ஜனாதிபதி வில்சன் அச்சங்கத்தை ஸ்தாபிப்பதற்கு பொறுப்பாயிருந்தபொழுதிலும் அவர் தன்நாட்டினரின் ஆதரவைப் பெறமுடியவில்லை. அவ்வாண்டில் வெளிநாட்டு விஷயத்தை அடிப்படையாக எடுத்துக்கொண்டு ஜனாதிபதித் தெரிவில் குடியரசுக் கட்சியினர் வெற்றிபெற்றனர். வேர்சேல்சு உடன்படிக்கை மேற்சபையால் அங்கீகரிக்கப்படாமலிருந்ததினால் ஐக்கிய அமெரிக்கா சர்வதேசசங்கத்தில் அங்கத்துவத்தைப் பெறவில்லை. அதிகம் செல்வாக்குடைய நாடாகிய அமெரிக்கா சேர்ந்து கொள்ளாததினால் சங்கத்தின் முன்னேற்றம்

RangaRakes Tamilnavarasam.com

தடைப்பட்டதெனலாம். அதிகாரமும் செல்வாக்குமுள்ள வேறெந்த நாடாகுதல் சங்கத்திற் சேராதிருக்கவில்லை. 1921-ல் 51 அங்கத்தவர்களும் 1932-ல் 57 அங்கத்தவர்களும் 1934-ல் 60 அங்கத்தவர்களுமாகப் படிப்படியாகச் சங்கம் பலமுற்றது.

ஆரம்பத்தில் பல நாடுகளுக்குமிடையே காணப்பட்ட விவாதங்களை சித்திகரமாக அச்சங்கம் தீர்த்துவைத்தது. 1921-ல் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச நீதிச்சபை ஹேக் என்னும் இடத்திற் கூடியது. அதே ஆண்டில் அல்பேனியாவுட் புகுந்த சேர்பியத் துருப்புக்கள் சங்கத்தின் முயற்சியினால் மீண்டும் தங்கள் நாட்டுக்குச்செல்ல நேரிட்டது. இத்தாலிக்கும், கிரீசுக்குமிடையிலுள்ள சச்சரவைத் தீர்த்துவைத்தது. அவுஸ்திரிய-ஹங்கேரியின் பணக்கஷ்டத்தைத் தீர்த்துவைத்தது. கிரீசுக்கும் பல்கேரியாவுக்குமிடையில் எல்லைப்புறத்தைப்பற்றியுள்ள வாக்குவாதத்தை சிநேகமுறையிற் தீர்க்கப்பட்டது. 1926-ல் பிரேசிலும் ஸ்பானியாவும் சங்கத்தினின்று விலகின. மெக்சிக்கோ, ருஷியா, துருக்கை ஆகிய நாடுகளும் பின்பு விலகிக்கொண்டன. ஆனால் ஜேர்மனி அங்கத்துவத்தைப் பெற்று ஏனைய நாடுகளின் அந்தஸ்தை அடைந்தது.

சர்வதேச தாபனம் சர்வதேச நீதிச்சபையையும் சர்வதேச தொழிலாளர் சங்கத்தையுங் கொண்டுள்ளது. அது பிரதிநிதிகளின் ஆலோசனைச்சபை, பொதுச்சபை, நிரந்தர காரியாலயம் என்ற மூன்று பிரிவுகளையுமுடையது. பல்வேறு தேசங்களின் வெளிநாட்டு மந்திரிகளே ஆலோசனைச்சபை அங்கத்தவர்களானார்கள். பொதுச்சபை வருடமொருமுறை கூடியது. பல சாதியினரின் பிரதிநிதிகளாகிய 500 நிரந்தர உத்தியோகத்தர்கள் நிரந்தர காரியாலயத்திற் கடமையாற்றினர். சர்வதேச நீதிச்சபை ஒல்லாந்துதேசத்திற் கூடியது. அது சர்வதேச சங்கத்தின் பொதுச்சபையாலும் ஆலோசனைச் சபையாலும் தெரியப்பட்ட பதினொரு நீதிபதிகளையும்



நான்கு உப நீதிபதிகளையும் கொண்டுள்ளது. அவர்கள் வெவ்வேறு நாடுகளிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இனித் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தினர்கள் சர்வதேச சங்கத்தின் அங்கத்தவர்களாவர். அச்சங்கத்தின் பொதுச்சபையொன்றும் நிர்வாகசபையொன்றுமுண்டு. அதிலுள்ள இருபத்துநான்கு அங்கத்தவர்களில் அரைவாசிப்பேர் அரசாங்கங்களின் பிரதிநிதிகளாயும் 6 பேர் தொழில் முதலாளிகளின் பிரதிநிதிகளாயும் 6 பேர் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுமாவர்.

1931ன் பின்பு சர்வதேச சங்கத்தின் பலம் குன்றத்தொடங்கியது. ஐக்கிய அமெரிக்கா சங்கத்திற் சேராதது ஒரு காரணமென்று சொல்லலாம். சர்வதேச சங்கத்தினரால் பெரிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்க இயலாமலிருந்தது இன்னொரு காரணமாகும். 1932 வரையில் ஐரோப்பிய வல்லரசுகளின் படைப்பலம் குறைக்கப்பட வேண்டுமெனப் பலர் அபிப்பிராயப்பட்டு ஒரு மகாநாட்டைக் கூட்டினர். ருஷியாவும், அமெரிக்காவும் உட்பட 64-வல்லரசுகள் அம்மகாநாட்டிற் சமூகமளித்தனர். பல நாடுகளிலுமிருந்து அனுப்பப்பட்ட சேனைகளைகொண்டுள்ள சேனைப்படையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென்றும் வலோற்காரமான சண்டை நேரிடுங்காலத்தில் சர்வதேச தாபனம் அச்சேனைப்படையை உபயோகிக்க அதிகாரமளிக்க வேண்டுமென்றும் பிரென்சுக்காரர் ஆலோசனை கூறினர். ஒவ்வொரு நாட்டின் படைப்பலத்தின் மூன்றிலொரு பங்கு குறைக்கப்பட வேண்டுமென ஐக்கிய அமெரிக்கா கூறியது. பலத்த பீரங்கிகள், குண்டுவீசும் விமானப்படை, தாங்கிகள், நச்சுப்புகை ஆகிய பெரும் அழிவையுண்டாக்கும் ஆயுதங்கள் உபயோகிக்காவண்ணம் தடுக்கப்பட வேண்டுமென ஏனைய நாடுகள் கூறின. ஜேர்மனியும் படைப்பலத்தைப் பொறுத்த அளவில் சம அந்தஸ்தை ஏனைய நாடுகளைப்போல் பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானஞ்செய்யப்பட்டது. ஆனால் ஜேர்



RangaRakes Tamilnavarasam.com

மனியில் புதிதாக அதிகாரத்தைப்பெற்ற தேசீய பொதுக் கொள்கையாளர் அந்த மகாநாட்டிற் பங்குபற்றாது விலகி நின்றனர். அவர்கள் படைப்பலத்தைக் கூட்டிக்கொள்ள முயற்சிசெய்தனர். பின்பு பிரித்தானியரும் தங்களுடைய பாதுகாப்புக்காகவும் ஏனைய நாடுகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் சேனைப்படைகளைத் திருத்தியமைப்பதற்கு எண்ணங்கொண்டனர்.

சீனாவிலுள்ள மஞ்சூரியா என்ற மாகாணத்தில் ஒப்பந்தத்தினால் கொடுக்கப்பட்ட உரிமைகளின் பயனை பொருளாதார சம்பந்தமாகப் பெருந்தொகையான பணத்தை யப்பானியர் செலவழித்தனர். ஆனால் அம்மாகாணத்திலுள்ள அதிகாரிகளின் எதிர்ப்பினால் யப்பானியருக்கு நஷ்டமேற்படக்கூடியதாகவிருந்தது. பல சம்பவங்களின் காரணத்தால் சீனருக்கும் யப்பானியருக்குமிடையிலுள்ள பகை அதிகரிக்க யப்பானியருடைய சேனை அம்மாகாணத்துக்குள் புகுந்தது. மஞ்சூரியாவில் யப்பானியருக்கிருந்த ஆதிக்கம் சீனருடைய தேசீய உணர்ச்சியினால் தடைப்பட்டது. விவசாயப் பொருட்களின் விலைக்குறைவும், வேலைப்பஞ்சமும் யப்பானில் அமைதிக்குறைவை உண்டுபண்ணியது. பொருளாதார மந்தம் ஏற்பட்டதால் ஐரோப்பியரும், அமெரிக்கரும் கீழ்த்திசை நாடுகளின் விஷயங்களிற் தலையிட விரும்பவில்லை. இவ்வகைப்பட்ட நிலையில் யப்பானியர் மஞ்சூரியாவின் தலைநகராகிய முக்டினைக் கைப்பற்றினர் (1931). சீனாவில் யப்பானியருக்குக் காட்டப்படும் எதிர்ப்பு நிறுத்தப்படவேண்டுமென்றும், மஞ்சூரியாவில் தங்களுக்குரிய சலுகைகள் மீண்டும் தாபிக்கப்பட வேண்டுமென்றும் யப்பானியர் வற்புறுத்தி நின்றனர். ஆகையால் சீன அரசாங்கம் சர்வதேச சங்கத்தின் உதவியைக் கேட்டுக்கொண்டது. சங்கம் மஞ்சூரியாவிலிருந்து யப்பானை விலகும்படி கற்பித்து ஒரு விசாரணைக்குழுவை அனுப்பியது. அக்குழுவின் அறிக்கை வெளியிடப்படமுன், மஞ்சூரியா மஞ்சுக்கோ என்ற பெயருடன் சீனாவிலிருந்து பிரத்தியேகமான தனிநாடாக தாபிக்கப்பட்டதென



யப்பானியர் வெளிப்படுத்தினர். விசாரணைக் குழுவின் அறிக்கையில் மஞ்சுக்கோ ஒரு தனிநாடாகக் கைக்கொள்ள முடியாதென்றும், யப்பானியருடைய செய்கை அநீதியானதென்றும் குறிப்பிடப்பட்டது. சர்வதேச சங்கம் மஞ்சுக்கோவை ஒரு தனிநாடாகக் கைக்கொள்ளக்கூடாதென சங்கத்தின் அங்கத்தினருக்கு அறிவித்தவுடன் யப்பான் உடனே சங்கத்தினின்று விலகியது. யப்பானுடைய செய்கைக்கேற்ற நடவடிக்கையைச் சங்கம் எடுக்கத்தவறியது. அதனால் சர்வதேச சங்கத்தின் மதிப்புக் குறைந்தது.

அபிசீனியாவை இத்தாலி கைப்பற்றச் சண்டை செய்தபொழுது (1935) சங்கத்தின் திறமையை அறியும் சந்தர்ப்பமேற்பட்டது. இத்தாலி சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகித்திருந்தது. அது சமாதான மகாநாட்டிற் கலந்துகொண்ட நாடுகளிலொன்றாகும். அது ஐரோப்பிய வல்லரசுகளிலொன்றாகும். ஆகையால் சங்கத்தின் நோக்கங்களுக்கு மாறாக வலோற்காரமாக அபிசீனியாவைக் கைப்பற்ற எத்தனித்தமையால் ஐரோப்பிய நாடுகள் கோபாவேசங்கொண்டன. அபிசீனியா சர்வதேச சங்கத்துக்கு முறையிட்டது. இத்தாலிக்குச் சர்வாதிகாரியாகவிருந்த முசோலினி தன்னுடைய நாட்டு அரசாங்கமும், மக்களும் நிர்மாணித்து எடுத்துக்கொண்ட விஷயம் முடிவடையும் வரையும் தான் பின்வாங்குவதில்லையெனக் கூறினான். பின்பு பிரித்தானிய வெளிநாட்டு மந்திரி ஜெனிவாவில் கூடிய சங்க மகாநாட்டில் கூறியவை யாவும் ஏனைய அங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது. எல்லோரும் ஒருமித்து வலோற்காரமான சண்டையைத் தடுக்கும்பொருட்டு இத்தாலிக்குப் பல சலுகைகளை அளிக்கச் சித்தமாயினர். அவைகள் ஒன்றுக்கும் இணங்கிக்கொள்ளாது முசோலினி சண்டையை நடத்தினான். சங்கத்தின் அங்கத்தவர்கள் பொருளாதார வர்த்தகத்தொடர்பை இத்தாலியோடு நீக்கிவிடத் தீர்மானஞ் செய்தனர். முசோலினி அந்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிப்பொருட்களைத் தடைசெய்துவிட்டுச்

RangaRakes Tamilnavarasam.com

சீக்கிரத்தில் சண்டையை முடித்துக்கொள்ள முயற்சி செய்தான். புதிய ஆயுதங்கள், நச்சுப்புகை முதலியன வற்றை உபயோகித்து முசோலினி அபிசீனியாவில் பூரண வெற்றியைப்பெற்றான். சர்வதேச சங்கத்தின் பலக்குறைவு வெளிப்படையாகக் காணப்பட்டது.

இனிச் சங்கத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாக சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகித்த இத்தாலி ஐம்பது நாடுகளுக்கு மேற்படவுள்ள அச்சங்கத்தின் அதிகாரத்தை அலட்சியஞ் செய்தது. அதன்பின்னர் சர்வதேச சங்கம் அதனுடைய கௌரவத்தை இழந்தது. இவ்வகையாகச் சங்கம் கௌரவத்தை இழக்கவேண்டியதற்குப் பல காரணங்களுள. உலகத்திலுள்ள நாடுகள் யாவும் அதிலங்கத்துவம் பெறாமையால் அதனுடைய பலம் குறைந்ததெனலாம். அதுவுமல்லாது ஒரு கஷ்டமான நிலை ஏற்படும்வரையும் சங்கம் தலையிடவில்லை. அங்கத்துவம் வகித்த நாடுகள் தவறான வழியில் நடந்துகொண்டபின் தங்களுடைய மரியாதைக்குப் பங்கமேற்படுமென நினைந்து அச்செயல்களை நீக்கிவிட விரும்பவில்லை. கூட்டுறவுப் பாதுகாப்புக்கு படைத்துணை இன்றியமையாதது. ஆனால் சங்கத்தினர் எல்லோரும் தங்களுடைய கடமையைச் செய்வதற்கு முன்வரவில்லை. ஐக்கியமான படைத்துணையைப் புரிவதற்கு கூட்டுறவு ஒப்பந்தம் இருந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு கொள்கையை நிலைநாட்டுவதற்காக ஒரு நாடாகுதல் இத்தாலிக்கெதிரே சண்டையிட விரும்பாமையால் அதை நிறைவேற்ற முடியாமற்போனது. பிரான்சின் மனப்பான்மையும் வேறுபட்டது. இந்நாட்டின் ஆதரவு சங்கத்துக்குப் பலத்தைக்கொடுத்தது. ஆனால் கஷ்டமான நேரத்தில் அந்நாடு மனப்பூர்த்தியான முழு ஆதரவையுங் காட்டவில்லை. இத்தாலியும் பிரான்சும் தங்களுக்கிடையிலுள்ள பழைய நட்பை உண்டுபண்ணும் நோக்கத்துடன் உடன்படிக்கை ஒன்றை எழுதிக்கொண்டன. பிரான்சு ஜேர்மனியோடு முரண்பட்டுக்கொள்ளவும் விரும்பவில்லை. அதோடு பிரித்



தானியாவோடுள்ள ஒற்றுமையைக் குறைத்துக்கொள்ளவும் சிறிதளவும் விரும்பவில்லை. இனி சங்கத்துக்குரிய கடமைகளை நீக்கிவிடுவதாக வெளியரங்கமாகக் கூறவுமில்லை. பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்குமிடையில் மனப்பூர்வமான ஒற்றுமை காணப்பட்டமையால் இரு நாடுகளும் திருப்திகரமற்ற வழிவகையைக் கையாண்டனர்.

சர்வதேச சங்கத்தில் ஐக்கிய அமெரிக்கநாடு அங்கத்துவம் வகிக்கவில்லை. ஏனைய வல்லரசுகள் ஜேர்மனியும் யப்பானும் சங்கத்தினின்று நீங்கிவிட்டன. இத்தாலி வலோற்காரமான சண்டையில் ஈடுபட்டுவிட்டது. பிரித்தானியாவும் பிரான்சும் மாத்திரம் வல்லரசுகளுக்குள் எஞ்சிய அங்கத்தினராகும். சர்வதேச சங்கத்தின் பலம் குன்றியவுடன் அவுஸ்திரியாவும், செக்கோசிலேவாக்கியாவும் வலோற்காரமான முறையிற் கைப்பற்றப்பட்டன. இச்சங்கத்தின் கூட்டுறவாதரவு பயனற்றதாகிவிட்டது.

### வினாக்கள்

1. சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டதற்குக் காரணமென்ன? அதன் நோக்கங்களை ஆராய்க.
2. சர்வதேச சங்கத்தின் நிர்வாகமுறையை ஆராய்க.
3. சர்வதேச சங்கத்தினின்று சில வல்லரசுகள் விலகியதற்குக் காரணங்கள் யாவை?
4. சர்வதேச சங்கம் செய்த விசேட முயற்சிகள் யாவை?
5. சங்கத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்களை எழுதுக.

RangaRakes Tamilnavarasam.com

# இருபத்தைந்தாம் அத்தியாயம்

## ருஷியா

ருஷியாவுக்கும் யப்பானுக்குமிடையில் 1904-ல் நடந்த போரைப்பற்றி முன்னொரு அத்தியாயத்திற் படித்திருக்கிறோம். அவ்யுத்தத்திற் தோல்வியுற்ற ருஷிய அரசாங்கத்துக்கு அத்தோல்வியொரு இழுக்காக விருந்தது. அதன் காரணமாக நாட்டில் புரட்சியை உண்டாக்கிச் சாரின் ஏதேச்சாதிகார ஆளுகையை ஒழிக்க முன்வந்த ருஷிய மக்களின் முயற்சிகள் சிதைவுற்றன. அடுத்த பத்து ஆண்டுகளாக புரட்சிக்காரர் கடுமையாக அடக்கப்பட்டனர். முதலாம் உலக யுத்தம் (1914—18) நடைபெற்ற காலத்தில் பிரித்தானியாவோடும் பிரான்சோடுஞ் சேர்ந்து ஜேர்மனிக்கெதிரே சார் சண்டைசெய்தார். அக்காலத்திலேயே ருஷியாவிற் பெரும் புரட்சியேற்பட்டது.

அக்காலத்திலேற்பட்ட புரட்சி ருஷியாவின் அரசாங்கத்தையும், சமுதாய நிலையையும் முற்றாக அழித்துவிட்டது. முதலாவதாக அரசியற்புரட்சியும் இரண்டாவதாக சமுதாயப்புரட்சியும் ஏற்பட்டன. ஆனால் அவைகள் இருதுறைகளிலேற்பட்ட ஒரு புரட்சியெனவே கூற வேண்டும். 1917-ம் ஆண்டு பங்குனி மாதத்திலேற்பட்ட புரட்சி மக்களுக்கு ஏற்பட்ட உணவுக்கஷ்டத்தினாலேற்பட்டது. உணவுக்கஷ்டத்தினால் தொடங்கிய வேலைநிறுத்தம், சச்சரவுகள் யாவும் சீக்கிரத்தில் சார் நிக்கிலாஸ் என்பவருக்கும், முதலாம் உலக யுத்தத்தை நீடித்து நடத்துமெண்ணத்திற்கு மெதிரே பெருங்குழப்பத்தையுண்டுபண்ணின. ஜேர்மனிக்கெதிரே ருஷியா வெற்றிகரமாகச் சண்டைசெய்ய முடியாத நிலைமையும், பொருளாதாரக் கஷ்டத்தினால் மக்களுக்கேற்பட்ட துன்பமும் சாரின்மீது வெறுப்பையுண்டாக்கியது. பங்குனி மாதம் 8-ந் திகதி நெசவுத்தொழிலாளர்கள் உணவு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் வேலைநிறுத்தஞ் செய்தனர். மற்றநாள் ஏனைய தொழிலாளர்களுஞ் சேர்ந்து யுத்தம் வேண்டாம், ஏதேச்சாதிகாரியின் ஆளுகை



வேண்டாமெனக் கூச்சலிட்டனர். மூன்றாம்நாள் புரட்சியுண்டாவதற்குரிய அறிகுறிகள் தோன்றின. போர்வீரர்களில் ஒருபகுதியாரும் சேர்ந்துகொண்டனர். இரண்டாம் நிக்கிலாஸ் என்ற சார் குழப்பம் அதிகரித்தவுடன் சிம்மாசனத்திலிருந்து நீங்க நேரிட்டது. தொழிலாளர்கள் அதிகாரத்தைப் பெற்றபொழுதிலும் அவர்களால் அரசாங்கத்தை ஏற்று நடத்தச் சக்தியில்லாமையால் அவர்கள் மத்திய வகுப்பினரிடமே அதை ஒப்படைத்தனர். கெரென்சி என்பவனுடைய தலைமையில் மென்ஷிவிக் என்ற மிதவாதிகளின் ஆட்சி நிறுவப்பட்டது. பொருளாதார நிலையினாலேற்பட்ட இன்னல்களும், தொழிலாளர்களின் புரட்சிக்கொள்கைகளும் இவைபோன்ற பல பிரச்னைகளும் தீர்க்கப்படவேண்டியிருந்தன.

அக்காலத்தில் நிகழ்ந்த உலக யுத்தமும் புரட்சியுண்டாவதற்குச் சாதகமாகவிருந்தது. யுத்தத்திலீடுபட்ட ஏனைய வல்லரசுகளிலும் பார்க்க ருஷியாவுக்குக் கூடிய நஷ்டமேற்பட்டது. சண்டையில் அளவுகடந்த உயிர்கள் சேதமடைந்ததோடு நோய்வாய்ப்பட்டும் அநேகர் இறந்தனர். ஐரோப்பாவின் மேற்கு நாடுகளைப்போல ருஷியர் நவீன படைப்பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களும் அவர்களிடமில்லை. போருக்குவேண்டிய யாவும் யுத்தமுனைக்கு விரைவாகக் கொண்டுசெல்லக்கூடிய வசதிகள் ருஷியாவில் அந்நேரத்திலில்லாமையால் மேற்கு நாட்டினர் அவர்களுக்கு அளித்த உதவியும் பயனற்றதாய்ப்போய்விட்டது. எதிரிகளிலும் பார்க்கக் கூடிய சனத்தொகையிருந்தபோதிலும் திருப்தியற்ற பொருளாதாரநிலை நாட்டின் பலத்தைக் குறைத்துவிட்டது. ஆனால் புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் சமதர்மக்கட்சியினர் சேர்ந்து கெரென்சியை யுத்தமந்திரியாகத் தெரிந்து யுத்தத்தை ஊக்கத்தோடு நடத்த ஆரம்பித்தனர். மீண்டும் யுத்தத்திலடைந்த தோல்வி கெரென்சியின் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. யுத்தம் வேண்டாமென்ற

RangaRakes Tamilnavarasam.com

எதிர்ப்பு மீளவுந்தொடங்கியது. விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படவேண்டுமென்ற பிரச்னையும் சமாதானத்தை விரும்பிநின்ற போல்ஷிவிக் கட்சியினருக்கு உதவியாயிருந்தது. விவசாயிகளுக்கு தங்களுடைய தொழிலைத் திருப்திகரமாகச் செய்வதற்கு போதிய நிலம் கொடுக்கப்படவில்லை. விவசாயத் தொழிலிலும் புதிய முறைகள் அனுஷ்டிக்கப்படவில்லை. நிலம்படைத்த பிரபுக்களின் ஆஸ்திகள் வறுமையுற்ற விவசாயிகளின் கண்களைக் கவர்ந்தன. புரட்சியுண்டாவதற்கு முன்னரே விவசாயிகள் தங்களுக்குப் போதிய நிலம் வழங்கப்படவேண்டுமென்று வாதாடினர். 1906-ல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்பிரகாரம் கிராமங்களிலுள்ள பொதுநிலங்கள் விரும்பிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அதனால் விவசாயிகளினிடையே பொருள்படைத்த வகுப்பினர் தோன்றினர்.

புரட்சியுண்டாக்கும் இயக்கத்துக்கு பல காரணங்கள் ஆதரவாயிருந்தன. போர்வீரர் சமாதானத்தை விரும்பி நின்றனர்; நகரங்களிலுள்ள பொதுமக்கள் பணத்தைத் தம்வசப்படுத்திய முதலாளிமார்களுக்கெதிரே கிளம்பினர்; விவசாயிகள் நிலம் வழங்கப்படவேண்டுமென வாதாடினர். விவசாயிகள் தைரியமடைந்து விஷயங்களைத் தாங்களே கையாளத்தொடங்கினர். பிரபுக்களின் நிலங்களை அபகரித்ததோடு அவர்களுடைய அரண்மனைகளையும் எரித்து முதலாளிமார்களையும் கொன்றனர். விவசாயிகளின் பயங்கரமான செய்கைகள் அப்போதுள்ள அரசாங்கத்தில் நம்பிக்கைக் குறைவையுண்டாக்க போல்ஷிவிக் கட்சியினர் பிரசாரஞ்செய்ய ஆரம்பித்தனர். விவசாயிகளும், கைத்தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து மத்திய வகுப்பினருடைய அதிகாரத்தை ஒழிக்க முயன்றனர். இந்நிலையில் போரினால் களைப்புற்ற போர்வீரர்களையும், அதிருப்தியடைந்திருந்த விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒன்றுசேர்த்து தொழிலாளருடைய குடியரசு அரசாங்கத்தை நிறுவுவதற்கு போல்ஷிவிக் கட்சியினர் முன்வந்தனர்.



மென்ஷிவிக் கட்சியினருடைய கொள்கைகளை போல்ஷிவிக் கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. மென்ஷிவிக்கர் சமதர்மக் கொள்கைகளையுடையவர்கள். தொழிலாளரும், மத்திய வகுப்பினரும் ஐக்கியப்பட்டு ஜனநாயக நாடொன்றை தாபிக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஆனால் போல்ஷிவிக்கர் மத்திய வகுப்பினருடைய கொள்கைகளை மறுத்ததோடு அவர்கள் தாபிக்கமுயன்ற பொருளாதார, சமுதாயமுறைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. வறிய விவசாயிகளும், தொழிலாளரும் ஒன்றுசேர்ந்து தாபிக்கும் பொதுமக்களின் குடியரசு அரசாங்கமே தேவையென யாவருக்கும் உணர்த்தினர். பங்குனிமாதப் புரட்சி தொடங்கியபொழுது போல்ஷிவிக் கட்சியினரின் தலைவனை லெனின் என்பவன் சுவிட்சலாந்திலிருந்து ருஷியாவுக்கு வந்தான். லெனின் 1907 தொடக்கம் 1917 வரையும் தன் நாட்டைத் துறந்து வெளிநாடுகளிற் காலத்தைச் செலவழித்தார். தன் நாட்டுக்குத் திரும்பிவந்ததும் புரட்சிவீரனைத் திகழ்ந்தார். உலகசரித்திரத்திற் தோன்றிய புரட்சித் தலைவர்களுள் லெனின் சிறந்தவனாகும். லெனின் தலைமைதாங்காவிட்டால் போல்ஷிவிக் கட்சியினர் புரட்சியுண்டாக்கியிருக்க முடியாது.

லெனின் தன்னுடைய கொள்கைகளைப் பின்வருமாறு கூறினர். "பாராளுமன்றமுள்ள குடியரசு அரசாங்கம் எங்களுக்குத் தேவையில்லை; மத்திய வகுப்பினரின் ஜனநாயகமுறை தேவையில்லை. எவ்வகையான அரசாங்கமும் தேவையில்லை; தொழிலாளர்கள், போர்வீரர்கள், விவசாயிகள் ஆகியவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டுள்ள "சோவியத்" சபையே தேவை." புரட்சியின் முதற்பகுதி மத்திய வகுப்பினருக்கு அதிகாரத்தைக் கொடுத்தது. ஆனால் இரண்டாம்பகுதி பொதுமக்களுக்கு அவ்வதிகாரத்தைக் கொடுத்தது. நிலமானியமுறையைத் தழுவிய சமுதாயம் சமதர்மக் கொள்கையையுடைய சமுதாயமாக மாறவேண்டுமென்றும், எதேச்சாதிகார ஆளுகை பொதுமக்களின் ஆட்சியாக



RangaRakes Tamilnavarasam.com

மாறவேண்டுமென்றும் லெனின் வகுத்த திட்டம் தனம் படைத்த முதலாளிவர்க்கத்தையும், ஜனநாயகமுறையையும் ஒருங்கே அழித்துவிட்டது. விவசாயிகளுக்கும் உடனடியாக நிலம் வழங்கப்படவேண்டும் என்றும் யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்றும் லெனின் கூறினன். விவசாயிகளின் தொகை கூடியவொரு நாட்டில் விவசாயிகளின் மனப்பான்மையே புரட்சியின் பலத்துக்கு அடிப்படையாகவிருந்தது. நிலம் சம்பந்தமான பிரச்னையை மத்திய வகுப்பினர் திருப்திகரமாகத் தீர்த்திருந்தால் பொதுமக்கள் 1917-ல் அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியாதென்று போல்ஷிவிக் கட்சித் தலைவர் ஒருவர் சொன்னர். விவசாயிகள் மாத்திரம் தனித்து நின்று மத்திய வகுப்பினரின் எதிர்ப்பை வெல்லமுடியாது. ஆனல் விவசாயிகள், பொதுமக்கள் ஆகிய இருபாலாரின் ஆதரவையுங்கொண்டே போல்ஷிவிக்கர் அதிகாரத்தைப் பெற்றனர். அவ்வொற்றுமையினுல் கிராமவாசிகள் நிலங்களைப்பெற்றனர். நகரத்திலுள்ள தொழிலாளர்கள் அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். இதிலிருந்து ருஷியப் புரட்சிக்கும் பிரான்சியப் புரட்சிக்குமுள்ள வேறுபாட்டை அவதானிக்கலாம். விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பிரான்சிலுள்ள மத்திய வகுப்பினர் சித்தமாயிருந்தமையால் சமுதாய, அரசியல் முறைகள் அதிகம் சிதைவுபடாமலிருந்தன. ருஷியாவில் நிலம்படைத்த பிரபுக்கள் பொதுமக்களின் உரிமைகளை அலட்சியஞ் செய்ததினுல் பழைய சமுதாயமுறை முற்றுக அழிந்தது.

போல்ஷிவிக் கட்சியினரின் பொருள்நிலை குறைவாயிருந்தபோதிலும், "சமாதானம், நிலம், உணவு" என்ற தந்திரமான பிரசாரத்தால் மக்களின் ஆதரவைப் பெற்றனர். விடாமுயற்சியோடும், ஊக்கத்தோடும் தொழிற்சாலைகளிலும், பொதுமக்களின் மத்தியிலும் அல்லும்பகலும் அக்கட்சியின் தலைவர்கள் நேரத்தைச் செலவழித்தனர். போல்ஷிவிக்கர் இவ்வண்ணமாக முன்னேற அதிகாரிகளின் செல்வாக்குக்குன்றியது, மென்ஷிவிக் கட்சியினர் நாளடைவில் மக்களின் ஆதரவை இழந்தனர். இதற்கிடையில் கைத்தொழில் அபிவிருத்தியும், உணவுசம்பந்தமான நிலையும் நாட்டில் கேவலமான நிலையையடைந்தன. பொதுமக்களின் பசிப்பிணி புரட்சிக்காரரின் பிரசாரத்துக்கு இடங்கொடுத்தது. விளைபொருட்களில்லாமையால் தொழிற்சாலைகளில் கைத்தொழில் நடைபெறவில்லை. பொருட்களை அனுப்பும் முறையிலும் வசதிகள் போதியளவில்லை. இவ்வகைப்பட்ட பொருளாதார நிலையில் போல்ஷிவிக்கள் அரசாங்கத்தைத் தம்வசப்படுத்த எத்தனித்தனர். அரசாங்க அடக்குமுறையைப் பாவிக்க லெனின்போன்ற தலைவர் மறைவிடம் செல்லவும் ரொட்ஸ்கிபோன்றவர்கள் சிறைச்சாலைக்குச் செல்லவும் நேர்ந்தது. பின்பு சேனைத்தலைவர்கள் கலகமுண்டாக்கினர். அரசாங்கம் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் ரொட்ஸ்கியை விடுதலையாக்கியது. கார்த்திகை மாதம் ரொட்ஸ்கியின் தலைமையில் கலகமேற்பட பொதுசனங்கள் அவனுக்கு ஆதரவளித்தனர். லெனின் தங்களுக்கு ஏற்ற தருணம் கிடைத்துவிட்டதென நினைந்து 25000 தொழிலாளரைக்கொண்டுள்ள சேனையைத் திரட்டினன். அரசாங்கக் கந்தோர்யாவற்றுள்ளும் கலகக்காரர் புகுந்தனர். ஆரம்பத்தில் ஒழுங்கானமுறையில் புரட்சியேற்பட்டபோதிலும் சீக்கிரத்தில் இரத்தஞ் சிந்தக்கூடிய நிலையேற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். தெற்கு, கிழக்கு ருஷியா சூறையாடப்பட்டது. கைத்தொழில் முற்றுக அழிக்கப்பட்டது. பயங்கர ஆட்சி நிலவியது.

லெனின் புதிய அரசாங்கத்தைக்கூட்டி சண்டையை நீடிக்காது சமாதானத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அறிவித்தான். அதற்கு நேசதேசநாடுகள் சம்மதிக்காதபடியால் ருஷியா உலக யுத்தத்தினின்றும் விலகியது. பிரபுக்களின் நிலங்களும் தோட்டங்களும் அரசாங்கத்தால் கவரப்படுமென்னும் ஆஞ்ஞையிடப்பட்டவுடன் விவசாயிகள் மனமுவந்த ஆதரவைப் புரட்சித்தலைவர்களுக்குக் காட்டினர். பின்பு சாரின் அரசியல்முறை



RangaRakes Tamilnavarasam.com

முற்றாக நீக்கப்பட்டுத் தொழிலாளர், விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள 'சோவியத்து' சபைகள் மூலம் ஆட்சிபுரியும்முறை தாபிக்கப்பட்டது. நிலங்களை யிழந்த பிரபுக்கள் நேசதேசங்களின் ஆதரவோடு சண்டைசெய்ய ஆரம்பித்தனர். இவ்வண்ணமாக ஏற்பட்ட உள்நாட்டுக்கலகம் போல்ஷிவிக்கரால் அடக்கப்பட்டது. பின்பு போலாந்து, பின்லாந்து, லிதுவானியா, எஸ்டோனியா, லற்வியா முதலிய நாடுகளுக்கு குடியரசு அரசாங்கம் வழங்கப்பட்டது.

மேல்நாடுகளிலுள்ள தனவந்தர்களின் சமுதாயம் முதலாம் உலக யுத்தத்தின்பின் அழிந்துபோகுமென லெனின் முழு நம்பிக்கையுடனிருந்தான். ஐரோப்பா முழுவதும் சமதர்மக்கொள்கை, புரட்சியையுண்டுபண்ணி விடுமெனவும் கூறினான். உலகத்தில் பொதுவுடமைக் கொள்கை பரப்புவதற்காக 'கொம்மின்டேன்' என்ற சர்வதேச பொதுவுடமைக்கட்சி 1919-ல் உருவாக்கப்பட்டது., ஆனால் உலகப்புரட்சியை யுண்டாக்குவதற்கு போல்ஷிவிக்கரால் முடியவில்லை. அதனால் அவர்களுடைய கட்சியில் பிளவு ஏற்பட்டது. லெனின் 1924-ல் இறக்கவே அப்பிளவு அதிகரித்தது. அக்கட்சியிலுள்ள பெரும்பான்மையோரின் தலைவனாக ஸ்டாலின் விளங்கினான். மற்றக்கட்சிக்கு ரொட்ஸ்கி தலைவனானான். ரொட்ஸ்கி உலகப்புரட்சியில் நம்பிக்கை வைத்தான். அயல்நாடுகள் யாவும் தனவந்தர்களின் ஆதிக்கத்திலிருந்தமையால் ருஷியா தனித்துநின்று சமதர்மக்கொள்கை நிலைநாட்டும் நாடாகவிருக்க முடியாதென்றெண்ணினான். ருஷியாவின் பொருளாதாரநிலை அக்கொள்கைகளைப் பரப்புவதற்கு ஏற்றதாயிருக்கவில்லை யென்பது அவனுடைய இரண்டாவது நியாயமாகும். பல தேசங்களில் நடைபெறும் புரட்சிகளுக்கு ருஷியாவில் உண்டான புரட்சி ஆரம்பமாகுமென்றான். அவ்வகைப்பட்ட நிரந்தர புரட்சிக்கொள்கைக்கு மாறாக ஸ்டாலின் "ஒரே நாட்டிலுள்ள சமதர்மக்கொள்கை" என்ற முறையே தகுந்ததென வெளிப்படுத்தினான். சமதர்ம இன்னதென்பதை விளக்



கிக்காட்ட ருஷியாவே சமதர்ம ஆட்சிமுறையை முதலிற் கையாளவேண்டுமெனக் கூறினான். ருஷியாவே தன்னுடைய பொருளாதார நிலையைத் திருத்தியமைக்க வேண்டும். தனவந்தரின் செல்வாக்குள்ள நாடுகளோடும் ருஷியா சிநேகமுறையில் நடந்துகொள்ளவேண்டியதவசியமென வற்புறுத்தினான். பொதுமக்களின் அரசாங்கத்துக்கு வேண்டிய இயந்திரங்களையும், விளைபொருட்களையும், தொழிலிற் திறமைவாய்ந்தோரையும் அந்நாடுகளிலிருந்தே ருஷியா பெறவேண்டியிருந்தது. இவ்விதமாக இரு தலைவர்களுக்கு மிடையில் முரண்பாடுள்ள கொள்கைகள் தோன்றின. ஈற்றில் ஸ்டாலின் வெற்றிபெற்றான். 1929-ல் ரொட்ஸ்கி நாட்டிலிருந்து துரத்தப்பட்டான்.

புதிய அரசாங்கம் தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்கியதோடு தனிப்பட்ட முறையில் நடந்துவந்த வியாபாரத்தையும் நிறுத்திவிட்டது. வங்கிகள் மறைவுற்றன. பணத்திற்கு மதிப்பு இல்லாமற்போய்விட்டது. கலகங்கள் ஏற்பட்டதினால் மறுபடியும் பணம் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. பின்பு படிப்படியாக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நிலங்கள் தனவந்தர்களிடமிருந்து எடுக்கப்பட்டதோடு கூட்டுறவு விவசாயம் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. தனிப்பட்ட முறையில் நடைபெற்ற விவசாயம் குறைந்துவிட்டது.

ருஷிய சமதர்ம குடியரசு அரசாங்கங்களின் ஐக்கியம், விவசாயிகள், தொழிலாளர் என்பவர்களின் நாடென 1936-ல் வெளிவந்த அரசியற்திட்டத்திற் கூறப்பட்டது. நிலங்கள், சுரங்கங்கள், காடுகள், தொழிற்சாலைகள். புகையிரதவீதிகள். போக்குவரவு வசதிகள், வங்கிகள், விவசாயம், மாநகரத்தொழில்கள், வீடுகள் ஆகிய யாவும் அரசாங்கத்தின் உடமைகளென்றும் அதனால் அவைகள் எல்லா மக்களின் சொத்துக்களெனவும் வெளியரங்கப்படுத்தப்பட்டன. சோவியத் அரசாங்க ஐக்கியம் 11 சமதர்மக் குடியரசு அரசாங்கங்களைக் கொண்டுள்ள சமஷ்டி அரசாங்கமாகும். பொதுமக்களின் ஆட்சியென்

RangaRakes Tamilnavarasam.com

பது, பொதுமக்களை வழிகாட்டும் பொதுவுடமைக் கட்சியாளரின் சர்வாதிகாரமென்று ஸ்டாலின் கூறினர். அதன்பிரகாரம் ஒரு அரசியற்கட்சியே அங்கு இருக்க முடியும்.

இரண்டாம் உலகயுத்த ஆரம்ப காலத்திலே ஸ்டாலின் பெரும் ஆதரவையும், பலத்தையும் பெற்றிருந்தான். பழைய போல்ஷிவிக் கட்சியினரும் அவருடைய அதிகாரத்தைக் குறைக்கமுடியவில்லை. இரகசிய பொலீசாரின் முயற்சிகளைக் குறைத்து மக்களுக்குக் கூடிய சுதந்திரத்தைக் கொடுத்தான். இவ்வாறு ருஷியாவை ஐரோப்பாவில் சிறந்த ஒரு நாடாக்க முயற்சிகள் செய்து வந்தான். இரண்டாம் உலகப்போரில் பெற்ற வெற்றி ருஷியாவின் முன்னேற்றத்திற்கு அறிகுறியாகும்.

### வினாக்கள்

1. ருஷியாவில் 1917-ல் புரட்சியுண்டாவதற்குக் காரணங்கள் யாவை?
2. புரட்சியை உண்டாக்கும் நோக்கத்துடன் தோன்றிய கட்சிகள் யாவை? மென்ஷிவிக் கட்சியின் பலம் குன்றியதற்குக் காரணம் என்ன?
3. போல்ஷிவிக் கட்சி எவ்வாறு அதிகாரத்தைப் பெற்றது?
4. லெனின் செய்த சேவைகள் யாவை?
5. ரொட்ஸ்கியையும், ஸ்டாலினையும் ஒப்பிடுக.
6. ருஷியாவின் பொருளாதார, சமுதாய, அரசியல் முறைகள் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதை விளக்கிக்காட்டுக.

# இருபத்தாறுவது அத்தியாயம்

## இரண்டாம் உலக யுத்தம்

எந்த யுத்தம் நடைபெறுங் காலத்திலும் பல்லாயிரம் மக்கள் இறப்பதுண்டு. கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலியன குன்றிப்போகின்றன. யுத்தம் முடிவடைந்தபின் ஏற்படும் கஷ்டங்களும் பல. பொருளாதார மந்தம், வேலைப்பஞ்சம் உண்டாகி மக்களுக்குப் பல இன்னல்கள் ஏற்படுவதைக் கவனிக்கலாம். முதலாம் உலக யுத்தத்தின்பின் அங்கில ஐரோப்பாவிலும் உலகத்தின் ஏனைய நாடுகளிலும் உண்டானதைக் கவனிக்கலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகள்போன்ற செல்வப் பெருக்கமுள்ள நாடுகளிற்கூடக் கோடிக் கணக்கான சனங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். வேலையிலிருந்தவர்கள்கூட குறைந்த வேதனத்தையே பெற்றனர். வியாபாரமும் முன்பிருந்ததிலும் பார்க்க அரைவாசிக்குமேல் குறைந்துபோயிற்று. பணக்கஷ்டமேற்பட்டபடியால் பொருட்களை விற்பனவுசெய்தல் கஷ்டமாயிருந்தது.

ஜேர்மனி தேசத்தை வியாபாரப்பண மந்தம் அதிகமாகத் தாக்கியது. யுத்தத்தின் நட்டஈடாகக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கமுடியாதென ஜேர்மன் தலைவர்கள் கூறினர். அந்நாட்டிற் பணமே இல்லாமற் போய்விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் வேலையின்றித் தவித்தனர். மக்களுக்கு அரசாங்கத்தில் நம்பிக்கை குறைந்தது. "தேசீய அபேதவாதிகள்" என்ற பெயருடன் ஒரு கட்சியினர் அடோல்ப் ஹிட்லரைத் தலைவனாகக்கொண்டு தோன்றினர். அரசாங்கத் தலைவர்கள் தங்கள் செல்வாக்கையிழக்கும்படி முயற்சிகள் செய்தனர். ஹிட்லர் அவுஸ்திரியாவில் மிகத்தாழ்ந்த குடியொன்றிற் பிறந்தவன். முதலாவது உலக யுத்தத்தில் ஜேர்மனியின் சார்பாகச் சண்டைசெய்தான். 1923-ல் ஒரு புரட்சியையேற்படுத்த அவன் முயற்சிகள் செய்தும்

RangaRakes Tamilnavarasam.com

அவைகள் அநுகூலப்படவில்லை. அவன் சிறையிலிடப்பட்டான். சிறையிலிருந்த காலத்தில் "மெயின் காய்ம்பு" என்ற புத்தகத்தை எழுதினான். அதில் ஜெர்மனி எதிர்காலத்திற் செய்யவேண்டியதைப் பற்றியதொரு முழுத் திட்டமொன்றை விளக்கியுள்ளான். விடுதலைபெற்றபின் அதில் கூறப்பட்டவைகள் ஒவ்வொன்றையும் செய்கையிலே காட்டினான். தனது கட்சியினரைச் செம்புநிறச் சட்டைகள் அணியும்படிசெய்து "நாஜிகள்" (தொழிலாளர் கட்சி) என்றழைத்தான். பொருளாதார மந்தத்திற் தாக்கப்பட்ட மக்கள் அவனுடைய புத்தகத்தை ஆவலோடு படித்து, அதனுடைய கொள்கைகளை நம்பினர். ஜெர்மனியர் முதலாம் உலக யுத்தத்தில் அடைந்த தோல்வியினால் நீங்காத வசையைப்பெற்றதென உணர்ந்தனர். குடியரசு அரசாங்கம் வீழ்ச்சியடைவதை விரும்பினார்கள். 1933-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஹிட்லரும் அவனுடைய கட்சியினரும் வெற்றிபெற்று வலிமை கூடினவர்களாயினர்.

எதிர்காலத்தில் போர் உண்டாகாமல் தடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேசசங்கம் முதலாம் உலக யுத்தத்திற் தோல்வியடைந்த நாடுகளின் நம்பிக்கையைப் பெறவில்லை. ஜெர்மனியும், இத்தாலியும் அரைமனத்துடன் சேர்ந்திருந்ததும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ருஷியாவும் சேராதிருந்ததும், பிறநாடுகள் இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டதும், அச்சங்கத்தினுடைய பலம் குறைவதற்குக் காரணமாயிருந்தது. பின்பு ருஷியா சேர்ந்தபொழுதிலும் அதன் வலிமை குறைந்துகொண்டே போனது. ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சர்வதேசசங்கத்திலிருந்து விலகிப் பேர்லின்—உரோம் ரோக்கியோ "அச்சு வல்லரசு" நாடுகளாக ஒற்றுமைப்பட்டன. இந்நாடுகள் ஜனநாயகத்தை வெறுத்தன. ஐரோப்பாவிலுள்ள மற்றும் சிறு இராச்சியங்களும் ஜனநாயக ஸ்தாபனங்களை விலக்கிச் சர்வாதிகார ஆட்சியை விரும்பினர். ஐரோப்பாவில் பழைய "வல்லரசுச் சமநிலை" போன்றதொரு



நிலைமை ஏற்பட்டது. ஜெர்மனியும் இத்தாலியும் ஒரு பக்கமும், பிரிட்டனும் பிரான்சும் இன்னொருபக்கமுமாக நின்றன. சிறுநாடுகள் ஏதோவொரு பக்கத்தைச் சேர்ந்தன. சிலநாடுகள் நடுவுநிலைமை வகித்தன.

சீனாவில் ஐரோப்பியருக்கும், அமெரிக்கருக்கும் இருந்த செல்வாக்கையும், வர்த்தகத்தையும் அழிக்க வேண்டுமென யப்பானியர் முனைந்து நின்றனர். சீனாவும் மஞ்சூரியாவும் ஒற்றுமையடைந்ததும் சியாங்கைசேக் பெருஞ்செல்வாக்குடன் இருந்ததும் அவர்களுக்கு மனத்தளர்ச்சியைக் கொடுத்தது. சீனாவிலுள்ள வியாபாரத்தைக் கைப்பற்றவும் நோக்கங்கொண்டிருந்தனர். ஆகையால் தங்களாட்சிக்குள்ளிருந்த மஞ்சூரியாப் புகையிரதப்பகுதியில் சீனர்களால் ஆபத்து நேர்ந்தது என்ற சாட்டினால் 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கினர். அதைக் கைப்பற்றி "மஞ்சுக்கோ" என்ற பெயரைக் கொடுத்து அதை ஒரு தனி இராச்சியமாக அமைத்துத் தங்கள் மேற்பார்வையில் வைத்திருந்தனர். சீனாவின் அரசபரம்பரையிலுள்ள ஒருவரை அதற்கு அரசனாக்கச் சீன அரசாங்கம் சர்வதேச சங்கத்திற்கு முறையிட்டது. சங்கம் யப்பானுக்கெதிரே தீர்ப்பைக் கொடுத்தபோதிலும் யப்பானியர் அத்தீர்ப்பை அலட்சியம் செய்தனர். சீனாவுக்கும் யப்பானுக்குமிடையில் போர் தொடங்கியது. வடசீனா முழுவதையுங் கைப்பற்றினர். சர்வதேசசங்கம் இப்போரிற் தலையிடாமல்விட்டது. அது வலியிழந்துவிட்டதற்கு அறிகுறியாகும்.

முசோலினி இத்தாலிய சோமாலிலாந்தின் எல்லைப்புறத்தில் ஏற்பட்ட சச்சரவினைக் காரணமாகக்கொண்டு அபிசீனியாவைத் தாக்குவதற்கு ஆயத்தஞ் செய்தான். 1935-ல் அந்நாட்டுக்கெதிரே போருக்கெழுந்தான். ஒரு வருஷத்திற்கு அது இத்தாலிய குடியேற்ற நாட்டுச் சக்கராதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்டது. சர்வதேச சங்கம் இந்த யுத்தத்தையுந் தடுக்கமுடியாமற்போனது. பின்பு முசோலினியும் ஹிட்லரும் ஒரு மனப்பான்மை



RangaRakes
Tamilnavarasam.com

யுடையவர்களாய் இருந்தபடியால் இருவருஞ் சேர்ந்து "உரோம—பேர்லின் அச்சுவல்லரசுகள்" என ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். யப்பானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டது.

1920-ன் பின் ஸ்பானியா தேசத்தில் குழப்பங்கள் பல ஏற்பட்டன. 1931-ல் அல்பொன்சோ அரசன் துரத்தப்பட்டு அங்கே குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. அந்த அரசாங்கம் அநேக புதிய மாற்றங்களைச் செய்த போதிலும் சில ஆண்டுகளுள் அதனுடைய பலங் குன்றிப்போனது. பல வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டபொழுது அவைகள் தீவிரமான முறைகளினால் அடக்கப்பட்டன. 1936-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் குடியரசு அரசாங்கத்தினர் வெற்றிபெற்றனர். ஸ்பானிய மொராக்கோவில் பிராங்கோ என்ற தளபதியின் தலைமையில் ஒரு கலகம் உண்டாயிற்று. அநேகர் அவனுக்கு ஆதரவளித்தனர். மற்றும் சிலர் குடியரசு அரசாங்கத்துக்கு உதவியளித்தனர். உள்நாட்டுக் கலகமேற்பட்டு அநீதியான செயல்கள் நடைபெற்றன. பிராங்கோ பல வெற்றிகளைப் பெற்றான். ருஷியா குடியரசு அரசாங்கத்துக்கு, ஜேர்மனியும் இத்தாலியும் பிராங்கோவுக்கும் படைகளை அனுப்பின. பிரித்தானியா பிரான்சு அமெரிக்க ஐக்கியநாடுகள் தலையிட்டு அது ஐரோப்பிய யுத்தமாகாதவண்ணம் பொது உடன்படிக்கை ஒன்று எழுதிக்கொண்டன. ஆனால் ஜேர்மனியும் இத்தாலியும் இரகசியமாக உதவியளித்துக்கொண்டே நின்றன. சிறிது காலத்திற்குள் பிராங்கோ பூரண வெற்றியடைந்தான்.

இனி ஜேர்மனியின் பிரதம மந்திரியாயிருந்து ஹிட்லர் செய்த முயற்சிகளை ஆராய்வோம். அவன் ஜேர்மனியின் படைப்பலத்தைக் கூட்டியும், யுத்தகருவிகளைச் செய்தும் மெயின் காய்ம்பிற் கூறியிருந்த திட்டத்தைச் செய்கை முறையிற் காட்டக் கவனஞ் செலுத்தினான். ஜேர்மனியின் குடியரசு அரசாங்கத்திற்குத் தலைவராயிருந்த ஹின்டன் பார்க்குக்கும், அந் நாட்டு மக்களுக்கும் மகிழ்ச்சியை யளித்தன. பெரிய



விமானப் படையொன்றையும் கோரிங் என்ற தளபதி மூலம் ஆக்குவித்தான். பின்பு நாஜிப்படையினருடைய உதவியுடன் சமவுடமைக் கட்சியினரையும் யூதர்களையுந் தாக்கினான். அநேகர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். ஜேர்மனியரிலநேகர் அவனது செய்கைகளை அங்கீகரித்தனர். அடுத்தபடியாகக் குடியரசு ஸ்தாபனங்களை அழிக்கத் தொடங்கினான். அரசாங்க அதிகாரம் முழுவதும் தலைவனிலேயே தங்கியிருக்கத்தக்கதாக "எஸ் ஓ" என்ற நாஜிப்படையினரும் "எஸ் எஸ்" படையினரும் "கெஸ்ரபோ" என்ற இரகசியப் போலீஸ் படையினரும் உதவியளித்து வந்தனர். ஹிட்லர் ஒரு தேசிய வீரனைக் கருதப்பட்டான். பாடசாலைகளிற் பிள்ளைகளுக்கு நாஜிக்கொள்கைகள் புகுத்தப்பட்டன. 1934-ல் ஹின்டன் பேர்க் இறந்தவுடன் ஹிட்லரே அப்பதவியைப் பெற்றான். யூதர்கள் அங்கு பெற்ற தண்டனையைப் பொறுக்க முடியாமல் ஜேர்மனியிலிருந்து வெளியேறினார்கள். 1935-ல் கட்டாயப் போர்ப்பயிற்சி ஜேர்மன் மக்களுக்கு அளிக்கப்பட்டது.

இவைகளெல்லாஞ் செய்து முடிந்தபின் றைன் நதிப் பிரதேசத்தில் ஹிட்லர் தனது புதிய படைகளைக் கொண்டுசென்று நிறுத்தினான். பிரான்சும் பிரித்தானியாவும் எதிர்ப்புக்காட்டவில்லை. அப்பகுதியைத் தன் வசப்படுத்தியது அவனுக்கு ஓர் வெற்றியாக அமைந்தது. பின்பு அப்பிரதேசத்தை "சீக்பிறீட்" அரணை அமைத்துப் பலப்படுத்தினான். 1938-ல் அவுஸ்திரியாவை ஜேர்மனியோடு சேர்த்துக்கொண்டான் அடுத்தபடியாக ஜேர்மன் மக்கள் வசித்த செக்கோசிலாவாக்கியிலுள்ள சுடேற்றன் நாட்டையும் டான்சிக் எனப்பட்ட பிரதேசத்தையும் கவருவதற்கு எண்ணங் கொண்டவுடன் பிரித்தானிய பிரதம மந்திரியாகிய நெவில் சேம்பர்லேன் 1939-ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஹிட்லரைச் சந்தித்து உரையாடுவதற்காக ஜேர்மனிக்குச் சென்றார். அங்கே சென்று, ஹிட்லர்

RangaRakes
Tamilnavarasam.com

தனக்கு இனிமேல் நாடுகளைக் கைப்பற்றுமெண்ணமில்லை என்று வாக்குப்பண்ணியபடியால் சுடேற்றன் பிரதேசத்தை ஜேர்மனியோடு இணைக்க அவர் சம்மதங் கொடுத்தார். ஆனால் ஹிட்லருடைய ஆசை அவ்வளவோடு நிற்கவில்லை. அடுத்த ஆண்டில் செக்கோசிலவாக்கியில் எஞ்சியிருந்த பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். அவனைப் பின்பற்றி அச்சு வல்லரசு நண்பனாகிய முசோலினி பால்கன் நாடுகளிலொன்றாகிய அல்பேனியாவுக்குப் படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றினான்.

இச்செய்கைகளைக் கண்ணுற்ற பிரித்தானியரும், பிரெஞ்சுக்காரரும் யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்தனர். கட்டாய இராணுவச் சேவை பிரித்தானியாவில் ஏற்படுத்தப்பட்டது. துருக்கியும் பிரித்தானியாவும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. இதற்கிடையில் ஹிட்லர் டான்சிக் பகுதியிலுள்ள ஜேர்மன் மக்களுக்கு அதிக கொடுமை செய்யப்படுகிறதென்று அதைக் கைப்பற்றுவதற்குப் போலாந்துக் கூடாய் ஒரு பாதை வேண்டுமென்றும் தெரிவித்தான். 1939-ல் ருஷிய தேசத்துத் தலைவனாகிய ஸ்ராலினும் ஹிட்லரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர் பின்பு ஹிட்லர் போலாந்தின் மீது படையெடுத்துச் சென்றான். உடனே பிரித்தானியாவும் பிரான்சும் ஜேர்மனிக்கெதிரே போருக்குக் கிளம்பின.

இவ்வண்ணமாகத் தொடக்கிய போர் உலகெங்கும் பரவியது. சுவிட்சர்லாந்து, ஸ்பானியா, சுவீடின், போர்த்துக்கல் முதலிய நாடுகள் நடுநிலைமை நாடுகளாயிருந்தன. பிரித்தானிய சேனை, பிரான்சிய சேனையோடு சேர்ந்து "மஜினோட்" பாதுகாப்பு அரணின் பின் நின்றது. ஆரம்பத்தில் யப்பான், இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரிற் கலந்து கொள்ளவில்லை. ருஷியா பின்லாந்தைத் தாக்கி அதனுடைய ஒரு பகுதியைக் கைப்பற்றியது. பின் ஜேர்மனியர் நடுநிலைமை நாடுகளாகிய நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம் முதலிய நாடுகள் ஒவ்வொன்றையும் தாக்கினர். நோர்வேக்குத் துணைபுரியச் சென்ற பிரித்தானியப் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. பிரித்தானிய மக்களுக்கு இது பெரும் ஆத்திரத்தை உண்டாக்கியது. பிரதம மந்திரியாயிருந்த சேம்பர்லின் தனது பதவியினின்று விலக வின்ஸ்ரன் சேர்ச்சில் அப்பதவியையேற்றார். புதிய மந்திரிசபைக்குத் தலைவராய் இருந்த அவர் தன் திறமையினாலும், சாமர்த்தியத்தினாலும் வெற்றிகரமாகப் போரை நடத்தினார். ஆனால் ஜேர்மனியின் தாக்குதல்கள் பயங்கரத்தை யுண்டாக்கின. அவர்கள் பிரான்சிய அரண்களைத் தகர்த்து முன்னேறி, நேசதேசப் படைகளைத் தோற்கடித்துப் பிரான்சைச் சரணாகதியடையச் செய்து விட்டனர். பிரித்தானியத் துருப்புகள் தங்கள் தேசத்துக்கு ஓடிப் போக நேரிட்டது. இந்தச் சமயத்தில் இத்தாலியும் போரிற் கலந்து கொண்டது. பிரித்தானியாவில் ஜேர்மன் துருப்புகளிறங்குவதற்குப் பிரித்தானிய கால்வாயும், அவர்களின் கடற்படையுமே தடையாயிருந்தன ஆகையால் ஜேர்மனியர் தங்கள் நீர்மூழ்கிக் கப்பல்களாலும் கடற் சுரங்கங்களாலும் அவர்களுடைய கப்பல்களுக்கு அதிக சேதமுண்டாக்கினர். ஆனால் பிரித்தானியரின் கடற்படை வலிமையை இழக்கவில்லை. பின்பு "லூற்வாவ்" என்ற ஜேர்மனிய விமானப் படைகள் பிரித்தானியருடைய துறைமுகங்களையும் விமானத்தளங்களையுந் தாக்க ஆரம்பித்தன. ஆனால் பிரித்தானியருடைய துறைமுகங்களையும் விமானப்படையினர் ஆகாயத்தில் நடத்திய போரிற் பகைவரை முதுகிடச் செய்ததுமன்றி அவர்களுடைய "லூற்வாவ்" விமானங்களையும் அழித்தனர். பின்பு ஜேர்மனியர் இராக்காலங்களில் துறைமுகங்கள், தளங்கள், நகரங்கள், கிராமங்கள்மீது குண்டுகளைப் பொழிந்தனர். அவர்கள் செய்ததுபோல் பிரித்தானிய குண்டு விமானங்கள் ஜேர்மனியிலுள்ள தளங்கள் மீதும். ஆயுதச்சாலைகள் மீதும் குண்டுகளைச் சொரிந்து அழிவை உண்டாக்கின.



RangaRakes Tamilnavarasam.com

இந்தச் சந்தர்ப்பத்தில் முசோலினி எகிப்தையும், கெனியாவையுந் தாக்க ஆரம்பித்தான். பிரித்தானிய சேனைகள், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா முதலிய நாடுகளின் துருப்புக்களுடன் சேர்ந்து இத்தாலியரைத் தோற்கடித்தன. இதனால் அபிசீனியாவையும் விட்டோட வேண்டிய நிலை இத்தாலியருக்கு ஏற்பட்டது. 1941-ல் ஜேர்மனியர் பால்கன் குடாநாட்டின் பெரும்பகுதியைத் தம்வசப்படுத்தினர். கிறீட்தீவும் அவர்கள் கையிலகப்பட்டது. சுவிட்சர்லாந்து, சுவீடின், ஐபீரியன் குடாநாடு, ருஷியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளெல்லாம் அச்சு வல்லரசுகளின் ஆதிக்கத்துக்குட்பட்டன. ருஷியாவோடு செய்த உடன்படிக்கையை மீறி அந்நாட்டுக்கெதிரே படையெடுத்துச் செல்லக் ஹிட்லர் தீர்மானஞ் செய்தான். ருஷியப் படைகள் அடிக்கடி தோல்வியுற்றபோதிலும் முற்றாகத் தோல்வியுறவில்லை. ஹிட்லர் வெற்றிபெறவும் முடியவில்லை.

இதற்கிடையில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனாதிபதியான ரூஸ் வெல்ற்றும், சேர்ச்சிலும், "அத்திலாந்திச்சாதனம்" என்னும் உடன்படிக்கை ஒன்றை எழுதிக்கொண்டனர். கீழைத்தேசத்தில், யப்பானும் மற்ற நாடுகளைக்கைப்பற்றி ஐரோப்பியரின் செல்வாக்கைக் குறைக்க எண்ணங்கொண்டது. இந்தோனேசியப் படைத் தலங்களிற் புகுந்துகொண்ட யப்பான் சடுதியாக அமெரிக்காவைத் தாக்கத் தொடங்கியது. ஹாவாவிலிருந்த அமெரிக்க கப்பற்படைமீது ஜப்பானிய விமானப் படைகள் குண்டு பொழிந்து அதை அழிக்க முயன்றன. ஹொங்கொங், மலாயா, பர்மா ஆகிய பிரித்தானியருடைய இராச்சியங்களை யப்பானியர் கைப்பற்றினர். கிழக்கிந்திய தீவுகளும், பிலிப்பைன் தீவுகளும் கைப்பற்றப்பட்டன.

1942-ல் ருஷியாவுக்குப் படையெடுத்துச் சென்ற ஜேர்மன் சேனைகள் ஸ்ரான்லின்கிறாட் மாநகர தற்காப்புப் போரிலிருந்து மீளமுடியாது தோல்வியுற்றன. 1943-ல் ருஷியப்படைகள் ஜேர்மன் சைனியங்களைத் துரத்தத் தொடங்கின. கீழ்த்திசையில் ருஷியப்படைகள் ஜேர்மனியைத் தாக்கி முன்னேறிவர மேற்கிலிருந்து பிரித்தானியத் துருப்புக்களும், அமெரிக்க துருப்புக்களுஞ் சேர்ந்த சேனை ஜேர்மன் சேனையைப் பின்வாங்கச் செய்தது. இதற்கிடையில் முசோலினி தன் தேசத்தின் யாராலோ கொலைசெய்யப் பட்டான். ருஷியரும் பேர்லினை முற்றுக்கையிட்டுச் சீக்கிரத்தில் அதைக்கைப்பற்றினர். ஹிட்லர் தற்கொலைபுரிந்துகொண்டான். ஜேர்மன் படைகள் சரணாகதியடைந்தன.



ஐரோப்பியயுத்தம் நின்றவுடன் பிரித்தானியர் கீழ்த்திசையில் நடைபெற்ற சண்டைகளிற் கவனஞ் செலுத்தினர். லூயிமவுண்பற்றன் பிரபுவைத் தளபதியாக நியமித்தனர். பர்மாவைத் திருப்பிக் கைப்பற்றினர். அமெரிக்கருடைய "கோட்டை விமானங்கள்" யப்பானிற் குண்டுகளை வீசத்தொடங்கின. அதற்கும் அஞ்சாமற் சண்டைசெய்த யப்பானியரைத் தோற்கடிப்பதற்காக அமெரிக்கர் இரண்டு அணுகுண்டுகளைக் கிரோஷிமாவிலும், நாகசாகியிலும் வீசினர். இதனால் நேர்ந்த சேதம் யப்பானியரைச் சரணாகதியடையச் செய்தது.

ஜேர்மன், அவுஸ்திரியா என்ற இருநாடுகளும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அமெரிக்கரும், பிரித்தானியரும், பிரான்சியரும், ருஷியரும் ஒவ்வொரு பகுதியிலுமிருந்துகொண்டனர். யப்பானில் அமெரிக்கத் துருப்புகளேயிருந்தன. போர் முடிவடைந்து மூன்று வருடங்களுள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடமையாட்சி நாடுகளாக மாற்றியமைக்கப்பட்டன. அவை செக்கோசிலாவாக்கியா, போலாந்து, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, யூக்கோசிலாவியா என்பனவாம். ரீற்றோவின் தலைமையின் கீழுள்ள யூக்கோசிலாவியா, ருஷிய ஆதிக்கத்தினின்று விலகிக்கொண்டது.

RangaRakes

Tamilnavarasam.com

ஆறுவருடகாலமாக நடைபெற்ற இவ்யுத்தம் முடிவடைந்ததும் தலைவர்கள் பலருஞ்சேர்ந்து சர்வதேச உறவு ஸ்தாபனமொன்றை ஸ்தாபிக்க முயன்றனர். அந்த ஸ்தாபனம் நன்முயற்சிகளைச் செய்துவருகின்றதை நாம் கவனிக்கலாம். பொதுவுடமை நாடுகளும், ஜனநாயக நாடுகளும் முரண்பட்டு மீண்டும் யுத்தத்திற்குச் செல்லாமற் தடுத்தும், உலகத்தின் பல்வேறு நாடுகளுக்குமிடையிற் தோன்றும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டும் இச்சங்கம் வருகிறது. இந்த ஐக்கிய நாட்டுத் தாபனத்தில் 51 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

பண்டைக்காலத்தில் ஒரு நாட்டில் நடந்த சம்பவங்கள் மற்ற நாடுகளைத் தாக்கவில்லை. தற்காலத்தில் போக்குவரவு வசதிகள் அதிகமாக இருக்கிறபடியால் ஒருநாட்டில் ஏற்படும் யுத்தமோ அல்லது ஒரு இயக்கமோ உலகமனைத்தையும் தாக்கிவிடுன்றது. ஒருநாடு வறுமைப்பட்டிருந்தால் மற்ற நாடுகளில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களை வாங்குவதற்கு இயலாமலிருக்கிறது. ஆகையால் செல்வமுற்ற நாடுகளாகிய ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ருஷியா, வறிய நாடுகள் செழிப்படையக்கூடியதாக உதவிசெய்கின்றன. அதுவுமல்லாமல் எல்லா நாடுகளும் சந்தோஷமாகவும், சௌக்கியமாகவும் வாழவேண்டுமென்னும் நோக்கத்துடன் உதவிபுரிந்துவருகின்றன. உலகம் முழுவதற்கும் ஒரு தனி அரசாங்கமே இருந்தால் மிகவும் நல்லது. ஆனால் அந்நிலையேற்படுவதற்கு மக்கள் தங்களுடைய வேற்றுமைகளைச் சிநேகமுறையில் தீர்த்துக்கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும். அந்தப் பெரும் நோக்கத்துடனேயே 1945-ல் ஐக்கிய நாட்டுத் தாபனம் தாபிக்கப்பட்டது. 1945-ல் 50 நாடுகளின் பிரதிநிதிகளை மாத்திரம் கொண்டுள்ள அந்தத் தாபனம் 1953-ல் 60 பிரதிநிதிகளையும் 1956-ல் 80 பிரதிநிதிகளையுங் கொண்டுள்ளது. இவ்விதமாக ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்காக எழுதிய சாதனத்தில் 4 பிரதான அம்சங்கள் குறிப்பிடப்பட்டன. அவை: (1) சர்வதேசங்களிடையே பாதுகாப்பும் சமாதானமும் நிலவச்செய்



தல், (2) பல நாடுகளுக்கிடையே பரஸ்பர மனப்பான்மையையும் நட்பையும் உண்டாக்கிவிடுதல், (3) பொருளாதார, சமுதாய, பண்பாடுள்ள மனுஷீக பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கு சர்வதேசங்களின் ஐக்கியத்தைப் பெறுதல், (4) இவ்விதமான நன்னோக்கங்களைப் பெறுவதற்கு இத்தாபனத்தை மத்திய தானமாகக் கொள்ளுதல் என்பனவாம்.

இப்பெரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இத்தாபனத்துக்கு (1) பொதுச்சபை, (2) பாதுகாப்புச் சபை, (3) காரியாலயம், (4) சர்வதேச நீதிமன்றம் என்னும் நாலு அங்கங்களுண்டு. அங்கத்துவம் வகிக்கின்ற நாடுகளின் அங்கத்தினரைக்கொண்டுள்ள பொதுச்சபை வருடமொருமுறை கூட்டப்படும். பாதுகாப்புச்சபையில் 11 அங்கத்தவர்களுண்டு. அவர்களில் அமெரிக்கா, பிரித்தானியா, ருஷியா, சீனா, பிரான்சு முதலிய 5 வல்லரசுகளின் பிரதிநிதிகளிடம்பெறுவர். எஞ்சிய 6 பேர்களும் இரண்டு வருடங்களுக்கொருமுறை பொதுச்சபையாற் தெரிவுசெய்யப்படுவர். பாதுகாப்புச் சபை பொதுச்சபையின் நிர்வாகசபையாகும். சர்வதேச நீதிச்சபையில் பாதுகாப்புச்சபையால் தெரிவுசெய்யப்பட்ட 15 நீதிபதிகளிடம்பெறுவர். இந்த ஐக்கியநாடுகளின் தாபனத்தின் எஞ்சிய அங்கங்கள் நம்பிக்கையாளரின் சபை, பொருளாதார, சமுதாயச் சபைகளாகும். இவைகளுள் முதலாவது சுதந்திரம் பெற்றுக்கொள்ளாத நாடுகளுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள உதவிபுரியும். இரண்டாவது (1) ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞானம், பண்பாடு சம்பந்தமான தாபனம்; (2) உணவு விவசாய தாபனம்; (3) சர்வதேசத் தொழிலாளர் தாபனம்; (4) உலக சுகாதார தாபனம் என்னும் அங்கங்களைக்கொண்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றிலும் பல நாடுகளிலுள்ள திறமையுள்ள நிபுணர்களிருந்து பல பிரச்னைகளையுந் தீர்த்துவைப்பதற்கு முயற்சிசெய்கின்றனர். உலகத்தின் பலபாகங்களிலும் மலேரியா, கொள்ளைநோய் முதலியவைகள் அற்றுப்போகச் செய்ததோடு

RangaRakes Tamilnavarasam.com

பாடசாலைகளில்லாதவிடங்களில் அவைகளை தாபித்தும் இவைபோன்ற நன்முயற்சிகளை இத்தாபனங்கள் செய்து வருவதை நாங்கள் கவனிக்கலாம்.

கோறியாவில் நடைபெற்ற யுத்தத்தை இத்தாபனம் நிறுத்திவைத்தது. பலஸ்தீனவில் யூதருக்கும், அரேபியருக்குமிடையிலுள்ள பகைமையை தீர்த்துவிட முயற்சிக்கிறது; இந்தியாவுக்கும், பாக்கிஸ்தானுக்கும் காஷ்மீரத்தினலேற்பட்ட விவாதத்தைத் தீர்ப்பதற்கு நன்முயற்சிகள் செய்துவருகின்றது. 1956-ல் சுவேஸ்கால்வாய் சம்பந்தமாய் எழுந்த சச்சரவுகளை இத்தாபனமே தீர்த்துவைத்தது. உலகத்திலுள்ள பல பிரச்னைகளையும் ஐக்கிய நாட்டுத் தாபனத்தின்முன் கொண்டுவரப்பட்டால் பல நாடுகளின் அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து அவைகளைத் தீர்த்துவைக்க முடியும் என்பது துணிபு. ஆகையால் அழிவையுண்டாக்கக்கூடிய புதிய ஆயுதங்களுள்ள இக்காலத்தில் யுத்தம் ஏற்படாவண்ணம் வேலை செய்துவருகின்ற தாபனத்தின் நன்முயற்சிகள் பாராட்டத்தக்கன.

## வினாக்கள்

1. முதலாம் உலகயுத்தம் முடிவடைந்தபின் உலகத்தில் என்ன கஷ்டங்கள் ஏற்பட்டன?
2. அடோல்ப் ஹிட்லர் எப்படி ஜேர்மனிக்குத் தலைவனாக வந்தான்?
3. இரண்டாம் உலகயுத்தத்தின் காரணங்களை ஆராய்க.
4. சர்வதேச சங்கம் வலிகுன்றியதற்குக் காரணம் என்ன?
5. ஹிட்லர் ஐரோப்பாவிற் கைப்பற்றிய இடங்கள் யாவை? ஐரோப்பாப் படமொன்று வரைந்து அதில் அவ்விடங்களைக் குறிப்பிடுக.
6. அமெரிக்கா இரண்டாம் உலகயுத்தத்திற் சேர்ந்துகொண்டதற்கு நியாயமென்ன?
7. ஐக்கிய நாடுகளின் தாபனம் உலகத்துக்கு என்ன சேவைகளைச் செய்துவருகின்றது?

யாழ்ப்பாணம், ஸ்ரீ லங்கா அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது

RangaRakes Tamilnavarasam.com